D
V211,31'N74
31N74.55
61662

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## TENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION

9th, 10th, 11th and 15th April 1974.
Volume LV—(Nos. 1 to 4.)

Table of Contents.

*Tuesday, 9th April* 1974.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu .. | i—vi |
| Principal Officers of the Tamil Naud Legislative Assembly ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies ... ... | ix—xvi |
| 1. Questions and Answers ... ... ... .. | 1—31 |
| 2. Adjournment Motions— | |
| (*a*) Failure to arrest the spread of Cholera in City ... ... ... ... ... | 32—35 |
| (*b*) Non-availability of 100 count yarn and consequent suffering of weavers in Coimbatore ... | 35—36 |
| 3. Calling Attention— | |
| (*a*) Damage to "Kullacor" in Sirkali taluk due to water scarcity ... ... ... ... | 36—38 |
| (*b*) Non-availability of electricity to pumpsets, making ryots unable to raise crops and the necessity to postpone loan collections ... | 38—40 |
| 4. Announcements— | |
| (*a*) Nomination of members to Business Advisory Committee ... ... ... ... ... | 40—41 |
| (*b*) General Sales Tax (Amendment) Bill, 1974 | 47 |

PAGES

*Tuesday, 9th April* 1974—cont.

5. Points of Order—
   (*a*) Propriety of consideration of the Tamil Nadu Handloom Textiles (Production, Distribution and Sale) Bill, 1974 ... ... ... ... 41—46
   (*b*) Constitutional propriety of bringing the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill, 1974 and bringing three Amendments to the Bill together ... ... 48—52
   (*c*) Propriety of including in the Appropriation (No. 2) Bill, 1974, the amounts already voted by the House ... ... ... ... ... 53—54
6. Government Bills—
   (*a*) The Tamil Nadu Handloom Textiles (Production, Distribution and Sale) Bill, 1974 ... 46—47
   (*b*) The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1974 ... ... ... ... 47
   (*c*) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill, 1974 ... ... ... ... ... 48, 52
   (*d*) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Third Amendment) Bill, 1974 ... ... ... ... ... 52—53
   (*e*) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Fourth Amendment) Bill, 1974 ... ... ... ... ... ... 53
   (*f*) The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1974 ... ... ... ... ... 53—144
7. Papers laid on the Table ... ... ... ... 145

*Wednesday, 10th April* 1974

1. Questions and Answers ... ... ... ... 165—198
2. Adjournment Motions—
   (*a*) Death of workers engaged in excavation of gypsum due to land slide ... ... ... 198—203



PAGES

*Wednesday, 10th April* 1974—cont.

2. Adjournment Motions—*cont.*
   (*b*) Communal clash in Denkanikotta ... ... 203—209
3. Calling Attention—
   (*a*) Scarcity of drinking water in Madras city 209—213
   (*b*) Strike notice given by six Labour Unions of Neyveli Lignite Corporation ... ... 213—216
4. Announcements—
   (*a*) Nomination of Members to Rules Committee 216
   (*b*) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1974 (L.A. Bill No. 14 of 1974) ... ... ... 245—246
5. Government Bills—
   (*a*) The Registration (Tamil Nadu Amendment) Bill, 1974 (L.A. Bill No. 7 of 1974) ... 217—224
   (*b*) The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Ownership), Second Amendment Bill, 1974 (L.A. Bill No. of 13 of 1974) ... 224—230
   (*c*) The Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1974 (L.A. Bill No. 11 of 1974) ... 230—246
   (*d*) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land), Second Amendment Bill, 1974 (L.A. Bill No. 14 of 1974) ... ... ... 246—276
   (*e*) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land), Third Amendment Bill, 1974 (L.A. Bill No. 17 of 1974) ... ... ... 276—296
6. Papers laid on the Table ... ... ... ... 296

*Thursday, 11th April* 1974

1. Questions and Answers ... ... ... ... 229—332

PAGES

2. Points of Order—
   - (*a*) Questions addressed to one department and replies furnished by another department and discrepancy between a Minister's and a Member's statement ... ... ... ... ... 332
   - (*b*) Non supply of copies of Bills to Members in advance ... ... ... ... ... 348—350
3. Adjournment Motions—
   - (*a*) Workers being rendered jobless in Salem Steel Plant ... ... ... ... ... 333—336
   - (*b*) Lockout in Ceramic and Refractories Factory at Vadalur ... ... ... ... ... 336—339
4. Calling Attention—
   - (*a*) Drinking water scarcity in Uthankarai, Dharmapuri district ... ... ... ... ... 339—341
   - (b) Strike in Lakshmi Mills, Palladam ... 341—344
5. Announcement—
   - Nomination of members to Committee on Government Assurances ... ... ... ... 345
6. Government Bills—
   - (*a*) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land), Third Amendment Bill, 1974—continued ... ... ... ... ... 345—347, 350—361
   - (*b*) The Tamil Nadu Additional Sales Tax (Amendment) Bill, 1974—L.A. Bill No. 16 of 1974 ... 361—373
   - (*c*) The Tamil Nadu District Municipalities (Amendment) Bill, 1974—L.A. Bill No. 8 of 1974 ... ... ... ... ... 374—384
7. Government Resolution—
   - Ratification of Constitution (Thirty-second Amendment) Bill, 1973 ... ... ... ... 384—417
8. Papers laid on the Table ... ... ... ... 417—418



PAGES

*Monday, 15th April 1974*

1. Questions and Answers ... ... .. ... 421—449
2. Point of Order—
   - Seeking clarification from the Ministry ... 449—450
3. Calling Attention—
   - (a) Drinking water scarcity in Sankari town and the need to take action to provide drinking water 451—452
   - the need to postpone collection of kist, loans, etc.
the need to postpone collection of kist, loans etc.
452—456
4. Government Resolution—
   - Amendment of Constitution to enable appointment of archakas, pujaries and other Ulthurai servants in Hindu Religious Institutions from among qualified persons professing Hindu religion irrespective of caste, creed or race ... ... ... ... 456—529
5. Government Motion—
   - Recommendation for administration by State Government of taken-over sick textiles mills ... 529—548
6. Government Bills—
   - (a) The Tamil Nadu Handloom Textiles (Production, Distribution and Sale) Bill, 1974—L.A. Bill No. 19 of 1974 ... ... ... ... 549—550
   - (b) The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1974—L.A. Bill No. 20 of 1974 550—561
   - (c) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1974—L.A. Bill No. 15 of 1974 ... ... ... 561—563
   - (d) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill, 1974—L.A. Bill No. 21 of 1974 ... ... 563—564
   - (e) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Third Amendment) Bill 1974—L.A. Bill No. 22 of 1974 ... ... ... 565—574

6. Government Bills—*cont.* PAGES

(f) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Fourth Amendment) Bill, 1974—L.A. Bill No. 23 of 1974 ... ... 574—575

7. Announcement—

The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Third Amendment) Bill, 1974 ... 565

8. Papers laid on the Table ... ... ... 575—576

## *How to use the Index*

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the Main Heading ' Bill(s) '.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidate under the said Main Headings, i.e., ' Committee(s) '. ' Council(s) ', ' Corporation(s) ', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading " Papers Laid on the Table ".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading " Chair ".

A list of abbreviations used in the index is given below :—

| | |
|---|---|
| A.M./Ad. Motion | ... Adjournment Motion. |
| Ann. | ... Announcement. |
| B.O.H. | ... Business of the House. |
| C.A. | ... Calling Attention to a matter of urgent public importance. |
| C.A. (St.) | ... Calling Attention Statement. |
| Consid. | ... Consideration stage of a Bill. |
| | ... This stage includes— (i) Motion to refer to Select/ Joint Select Committee. |

(ii) Amendment to refer to Select/Joint Select Committee.

(iii) Amendment to circulate.

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit **to Select/Joint Select Committee**, etc.

| | | |
|---|---|---|
| Consid. Cl. | ... | Consideration of clauses of a Bill. |
| **D.E.E.** | ... | **Demands for Excess Expenditure.** |
| Dis. S.D. or D.S.D. | ... | Discussion for Short Duration on an urgent matter of administration. |
| D.S.G. | ... | Demands for Supplementary Grants. |
| G.A. | ... | Governor's Address. |
| G.D. | ... | General Discussion. |
| H.A.H.Dis/H.H.D. | ... | Half-hour Discussion. |
| Int., | ... | Introduction stage of a Bill. |
| L.A. | ... | Legislative Assembly. |
| L.C. | ... | Legislative Council. |
| M. | ... | Motion. |
| P.M. | ... | Privilege Motion. |
| R/Res | ... | Resolution. |
| **St.** | ... | Statement. |

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

---

### தமிழ் நாடு ஆளுநர்.

### மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (முதலமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், படச்சுருள் தொழில் நுட்பவியல்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். (கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ்நாடு கழிவு நீர்—குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின்தங்கிய வகுப்பினர் நலன், செய்தி-விளம்பரம், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சேரணி, இளைஞர் அணி, பூதான—கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அரிசன நலத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன்: (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கனிப் பொருள்கள், சுரங்கங்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத் துறை வருவாய், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம்: (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள் அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், குடிசை மாற்று வாரியம்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மின்சாரம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனு, திரைப்படச் சட்டம்.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: இராமக் அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், இராமக் தொழில்கள் திட்டம், பால் வழங்கு துறை, பால்வள முனைப்புத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU KODARDAS KALIDAS SHAH.

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (Chief Minister) in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Tourism), in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Minister for Health), in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town-Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes) in-charge of Backward Classes, Information and Publicity, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRUMATHI SATHYAVANIMUTHU (Minister for Harijan Welfare), in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indian Overseas and Refugees and Evacuees, Newsprint Control and Passports.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (Minister for Public Works), in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries), in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Revenue), in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenue and Waqfs.

9. THE HON. THIRU Si. Pa. ADITANAR (Minister for Agriculture), in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing and Animal Husbandry.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM (Minister for Local Administration), in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

11. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY (Minister for Food and Co-operation), in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

12. THE HON. THIRU K. RAJARAM (Minister for Labour) in-charge of Labour, Housing and Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

13. THE HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity), in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests, Cinchona and Cinematograph Act.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. துரைமுருகன்.
2. திரு. வை. பாலசுந்தரம்.
3. திருமதி ஜோதி வெங்கடாசலம்.
4. திரு. குழ. செல்லையா.
5. திரு. கே. எ. வகாப்.
6. திரு. கோ. இளங்கோவன்.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி)

திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ. ,

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, திரு. சி.வி. எம். | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். எ. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. | எழும்பூர். |
| 5 அரங்கநாயகம், திரு. செ. | கோயம்பத்தூர்–மேற்கு. |
| 6 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 7 அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி. |
| 8 அழகுத் தேவர், திரு. எஸ். | சாத்தூர். |
| 9 அனந்தநாயகி, திருமதி த. ந. | மயிலாப்பூர். |
| 10 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 அன்புச்செழியன், திரு. நீ. | பெரியகுளம். |
| 12 ஆண்டி அம்பலம், திரு. எம். | மேலூர் வடக்கு. |
| 13 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.) |
| 14 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 ஆலடி அருணா, திரு. வி. | ஆலங்குளம். |
| 16 ஆல்டா எம். பௌலர், திருமதி | நியமன உறுப்பினர் |
| 17 ஆறுமுகம், திரு. அ. | எடப்பாடி. |
| 18 ஆறுமுகம், திரு. எஸ். | வீரபாண்டி. |
| 19 ஆறுமுகம், திரு. சி. | மதுராந்தகம். |
| 20 இரத்தினசபாபதி, திரு. மு. | விளாத்திக்குளம். |
| 21 இராசகோபால், திரு. க. மு. | உத்திரமேரூர். |
| 22 இராசகோபால், திரு. வீ. | வந்தவாசி. |
| 23 இராசமாணிக்கம், திரு. அ. | நாகப்பட்டினம். |
| 24 இராசமாணிக்கம், திரு. கு. | ஆடுதுறை. |
| 25 இராசரத்தினம், திரு. டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 26 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-2. |
| 27 இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ. வ.) |
| 28 இராதாகிருட்டிணன், திரு. எம். | தண்டராம்பட்டு. |
| 29 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | பரங்கிமலை. |
| 30 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 31 இராமநாதன், திரு. சி. | அறந்தாங்கி. |
| 32 இராமலிங்கம், திரு. இரா. | தூத்துக்குடி. |
| 33 இராமலிங்கம், திரு. செ. | கடலாடி (செ.வ.). |
| 34 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 35 இராமன், திரு. மூ. | |
| 36 இராஜாங்கம், திரு. என். | கண்டமங்கலம் (செ.வ.). |
| 37 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 38 இளங்கோவன், திரு. கோ. | கன்னியாகுமரி. |
| 39 இளஞ்செழியன், திரு. வீ. சா. | திருவையாறு. |
| 40 எட்டியப்பன், திரு. பூ. | விராலிமலை. |
| 41 எட்மண்ட், திரு. க. உரொ. | பெரணமல்லூர். |
| 42 கணபதி, திரு. என். | திருச்செந்தூர். |
| 43 கணபதி, திரு. டி. | பாபநாசம். |
| 44 கணேசன், திரு. எல். | நாங்குனேரி. |
| 45 கணேசன், திரு. சி. | ஒரத்தநாடு |
| 46 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | குற்றாலம். |
| | இணைத்துக்கடவு. |
| 47 கண்ணன், திரு. எம். ஆர். | |
| 48 கதிரவன், திரு. கா. மு. | பேஸின் பிரிட்ஜ். |
| 49 கந்தசாமி, திரு. கே. | தென்காசி. |
| 50 கந்தசாமி, திரு. கே. பி. | உசிலம்பட்டி. |
| 51 கந்தசாமி, திரு. எம். | சாத்தான்குளம் |
| 52 கந்தப்பன், திரு. செ. | குளித்தலை. |
| 53 கரிவேங்கடம், திரு. மா. வெ. | திருச்செங்கோடு. |
| 54 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | பாலக்கோடு. |
| | சைதாப்பேட்டை. |
| 55 கருணாநிதி, திரு. தாழை மு. | |
| 56 கருணாநாதன், திரு. சோ. | திருவாரூர் (செ.வ.) |
| 57 கருப்பையா, திரு. ஆ. | கூனூர். |
| 58 காசிராமன், திரு. நா. | கங்கைகொண்டான் (செ.வ. |
| 59 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி | கும்பகோணம். |
| 60 காமாட்சி, திரு. கு. | முதுகளத்தூர். |
| 61 கார்த்திகேசன், திரு. வீ. | திருவரம்பூர். |
| 62 காவேரிமணியம், திரு. சொ. | இராதாபுரம். |
| | திருப்பரங்குன்றம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 63 காளிமுத்து, திரு. கா. | சிவகாசி. |
| 64 கிட்டப்பா, திரு. என். | மாயூரம். |
| 65 கிருட்டிணன், திரு. நா. | பேரணம்பட்டு (செ. வ.) |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 68 கிருஷ்ணன், திரு. கே. ஆர். | ஊத்தங்கரை. |
| 69 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 70 குமாரசாமி, திரு. அ. சே. | திருக்கோயிலூர். |
| 71 குமாரசாமி, திரு. கே. என். | பல்லடம். |
| 72 குருசாமி, திரு. நா. வெ. | ஆண்டிப்பட்டி. |
| 73 கேசவலு, திரு. தே. | கள்ளக்குறிச்சி. |
| 74 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். | உதனப்பள்ளி. |
| 75 கோபால், திரு. எம். | குன்னத்தூர் (செ. வ.). |
| 76 கோபால், திரு. கே. பி. | கம்பம். |
| 77 கோவிந்தசாமி, திரு. வி. செ. | காவேரிப்பட்டினம். |
| 78 கோவிந்தராசன், திரு. ஆர். | கடலூர். |
| 79 கோவிந்தராசன் துரை, திரு. | கந்தர்வகோட்டை. |
| 80 கோவிந்தன், புலவர் கா. (மாண்புமிகு பேரவைத் தலைவர்). | செய்யாறு |
| 81 கோவை செழியன், திரு. | காங்கேயம் |
| 82 சகாதேவன், திரு. எஸ். | செஞ்சி. |
| 83 சங்குமுத்து தேவர், திரு. ச. | அம்பாசமுத்திரம். |
| 84 சதாசிவம், திரு. செ. | ஆண்டிமடம். |
| 85 சண்முகசுந்தரம், திரு. அ. ப. | பொள்ளாச்சி. |
| 86 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 87 சண்முகம், திரு. பெரி. | திருவாடானை. |
| 88 சண்முகம், திரு. மு. | விழுப்புரம். |
| 89 சத்தியமூர்த்தி, திரு. மு. | புதுக்கோட்டை. |
| 90 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.). |
| 91 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. | இராமநாதபுரம். |
| 92 சம்பத், திரு. டி. வி. | செம்பனார் கோவில். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 158 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 159 நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 160 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 161 பத்மாவதி, திருமதி. ஏ. கோ. | முகையூர். |
| 162 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 163 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 164 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 165 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 166 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 167 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 168 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 169 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 170 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 171 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 172 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 173 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர் |
| 174 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 175 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 176 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 177 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 178 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 179 பாலையா, திரு. ஏ. | கொளச்சல். |
| 180 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 181 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவிநாசி. |
| 182 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 183 பெருமாள், திரு. ஏ. ஆர். | காரியப்பட்டி. |
| 184 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 185 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 186 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 187 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 188 பொன்னுரங்கம், திரு. ஏ. எம். | சோளிங்கபுரம். |
| 189 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 190 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 191 மதியழகன், திரு. கே.ஏ. | ஆயிரம் விளக்கு. |
| 192 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 193 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 194 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்) |
| 198 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 201 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 204 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 207 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். | ஓட்டப்பிடாரம் (செ. வ.) |
| 209 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 211 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 214 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 215 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 218 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 219 ராஜா, திரு. ஏ. எம். | பவானி. |
| 220 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 222 லத்தீப், திரு. எம். வ. | |
| 223 வகாப், திரு. கே. எ. | வாணியம்பாடி. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. | ராணிப்பேட்டை. |
| 225 வடிவேல், திரு. எஸ். | தொட்டியம். |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. | சீர்காழி (செ. வ.) |
| 227 வீராசாமி, திரு. நா. | செங்கல்பட்டு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. | ஆற்காடு. |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. | ஹோசூர். |
| 230 வேதாசலம், திரு. மு. | வாசுதேவநல்லூர். |
| | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 235 ஹாண்டே, டாக்டர், எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.
3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1974 ஏப்ரல் 9

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### பள்ளப்பட்டியில் பெண்கள் பள்ளி

*782. வினா—**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளப்பட்டி பேரூராட்சியில் (அரவக்குறிச்சி தொகுதி) அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்று ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவர் அவர்களே, சற்றேறக் குறைய 12,000 மக்கள் உள்ள அந்த ஊரிலே பெரும்பாலும் முஸ்லிம் மக்கள் வாழ்கின்றார்கள். முஸ்லிம் பெண்கள் கல்வியிலே மிகவும் பின்தங்கியவர்கள். சமீபத்தில்தான் தனியார்கள் ஆங்கிலோ அராபிக் உயர்நிலைப் பள்ளி ஒன்றை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்கின்றார்கள். முஸ்லிம் மக்கள், அதிலும், குறிப்பாக பெண்களுக்கு நல்ல ஒரு கல்வியைத் தரவேண்டும் என்று அரசு கடமை கொண்டுள்ளது. அந்தக் கடமையை நிறைவேற்றும் முகத்தான் இந்த முயற்சிக்கு ஆதரவு தந்து அந்த ஊரில் எப்படியும் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஏற்படுவதற்கு தக்க ஏற்பாடுகளை செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, பள்ளிக் குழுவினரோ அல்லது நிர்வாகத்தினரோ விண்ணப்பங்களை முதலில் மாவட்ட கல்வி ஆய்வாளர், பள்ளி ஆய்வாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும். அந்த

விண்ணப்பத்தை கல்வி ஆண்டில் டிசம்பர் 31-ம் தேதிக்குள் அவர்கள் சமர்ப்பிக்கவேண்டும். அதை ஆய்வாளர் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 31-ம் தேதிக்குள் அனுப்பிவைக்கவேண்டும். பள்ளிக் கல்வி இயக்குனர் தன்னுடைய பரிந்துரையை அரசுக்கு எப்ரல் திங்களுக்குள் அனுப்பிவைக்கவேண்டும்.

அது மட்டுமல்லாமல் அதற்குப் பிறகு, அவர்கள் ஆய்ந்ததற்குப் பிறகு அங்கே ஒரு பெண் பள்ளி ஏற்படுத்துவது அவசியம்தானா என்பதும், அதற்கேற்ற அளவுக்கு மகளிர் இருக்கின்றார்களா என்பதும், புதிய பள்ளிக்கு ஏற்றத்தக்க அளவுக்கு 5 ஏக்கர் நிலம், 10,000 ரூபாய் வைப்பு நிதி கட்டுகின்ற வாய்ப்பு, புதிய கட்டத்திற்கு ரூ. 12,500 வழங்குகின்ற வாய்ப்பு இதெல்லாம் சரியாக இருக்கிறதா என்று ஆய்ந்ததற்குப் பிறகு, அரசு அளவில் முடிவு எடுக்க வேண்டி வரும். இந்தக் கட்டங்களெல்லாம் முடிந்து அரசுக்கு வரவேண்டும். அதற்குப் பிறகு அரசின் தன்மை என்ன என்பதையும், முடிவு என்ன என்பதையும் சொல்ல இயலும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல ரூ. 10,000-க்குப் பதிலாக ரூ. 5,000 கட்டி அவர்கள் விண்ணப்பம் செய்துள்ளார்கள். கொஞ்சம் காலம் தாழ்ந்துவிட்டுப் போனாலும் கூட, அமைச்சர் அவர்கள் தனியாக சலுகை காட்டி, அந்த மாதிரி அங்கே ஒரு உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் சொன்ன நிபந்தனைகளெல்லாம் நிறைவேற்றப்பட்ட வகையிலே அரசு அதைப் பரிசீலிக்க வேண்டி வரும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உறுப்பினர் ஜப்பார் அவர்கள் தன்னுடைய தொகுதிக்கு எந்தக் காரியமும் செய்யவில்லை என்று கொஞ்சம் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதைக் கொஞ்சம் அனுதாபத்தோடு கவனித்து, அது பின்தங்கியபகுதியாக இருக்கிற காரணத்தினால் அங்கே பெண்கள் உயர் நிலைப் பள்ளியை துவக்க அரசே முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இது கேள்வியாக ஆகாது. சிபார்சு தான். நான் முதலிலே சொல்லியபடி நிபந்தனைகளெல்லாம் நிறைவேற்றப்பட்டுவருகிற சூழ்நிலையில் அரசு கட்டத்தில் அது ஆய்வு செய்யப்படும்.



## *Holidays for schools*

* 783. *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that there is a difference in the number of holidays for Elementary schools and High schools in the State; and

(*b*) if so, the reasons therefor?

**மாண்புமிகு. டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) தற்போதுள்ள விதிமுறைகளின்படி உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஓராண்டில் 200 நாட்களும், ஆரம்பப் பள்ளிகளுக்கு 220 நாட்களும் வேலை நாட்கள் ஆகும். தங்கும் வசதிகளுடன் கூடிய பள்ளிகள் மற்றும் ஆதரவற்றோர் விடுதிகளோடு இணைக்கப் பெற்ற ஆரம்பப் பள்ளிகள் பள்ளி ஆண்டில் 200 நாட்கள் வேலை செய்தால் போதுமானது. உயர்நிலைப் பள்ளிகளுக்கும், ஆரம்பப் பள்ளிகளுக்குமான குறைந்தபட்ச வேலை நாட்களில் மாறுபாடு இருப்பதால் இவ்விரு வகையான பள்ளிகளின் விடுமுறை நாட்களும் மாறுபடுகின்றன.

**திரு. என். கே. பழனிசாமி :** மற்ற நாட்களைப் போல விடுமுறை நாட்களிலும் சிறிய கிளாஸ்களில் இருக்கக்கூடியவர்களுக்கு தமிழ் நாட்டிலுள்ள பல ஊர்களைச் சுற்றிப்பார்ப்பது, அதிகப்படியான விளையாட்டுகளில் பங்கு கொள்ளச் செய்வது போன்ற முறைகளை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** உயர்நிலைப் பள்ளி போன்றவைகளில் எக்ஸ்கர்ஷன், சுற்றுலாக்கள் போவதற்கு தனியாக ஏற்பாடுகள் இருக்கின்றன. பல்வேறு பள்ளிகளில் சுற்றுலாக்களுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். துவக்க பள்ளி, உயர் துவக்கப் பள்ளி ஆகியவைகளிலும் ஊரைச் சுற்றியுள்ள முக்கியமான குறிப்பிட்ட இடங்களுக்கு அழைத்துச் சென்று வருவதற்கும் இப்பொழுதே வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** உயர்நிலைப் பள்ளி, ஆரம்பப் பள்ளி ஆகியவைகளில் உள்ள மாணவர்களை சில நேரங்களில் சுற்றுலா கூட்டிக்கொண்டு செல்கிறார்கள். வசதி படைத்தவர்கள்தான் போக முடிகிறது. வசதி இல்லாத மாணவர்களுக்கு அரசு ஏதாவது உதவி செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாணவர்களை அழைத்துக் [1974 ஏப்ரல் 9
கொண்டு போகும்பொழுது கன்செஷனில் தான் அழைத்துக்கொண்டு போகிறார்
கள். இதிலே வசதியற்ற மாணவர்கள், வசதி உள்ள மாணவர்கள் என்று பிரிக்க
இயலாது. அப்படியென்றால் ஆயிரத்துச் சில்லரை மாணவர்களும் வரவேண்டி
யிருக்கும். இப்படிப்பட்ட சுற்றுலாக்களுக்கு குறிப்பிட்ட எண்ணிக்கை
மாணவர்களைத் தான் ஆசிரியர்கள் அழைத்துச் செல்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது விடுமுறை நாட்களின் எண்ணிக்கை
...யைப் பற்றிய கேள்வி.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** துவக்கப் பள்ளி, உயர் நிலைப்பள்ளி ஆகிய இரண்டும்
சேர்ந்து செயல் படுகின்ற பாடசாலைகளில் உயர்நிலைப் பள்ளிக்கு அனுமதிக்கப்
பட்டுள்ள 200 நாட்கள் மட்டும் தொடக்கப் பள்ளி வேலை செய்தால் போதுமா.
அல்லது பள்ளி நாட்களை கூடுதலாக நடத்தவேண்டும் என்ற ஏற்பாடு
இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** உயர்நிலைப் பள்ளி 200 நாட்
களுக்கு வேலை செய்யவேண்டி வரும். ஆரம்பப் பள்ளி தனித்து இயங்கும்
பொழுது 220 நாட்கள் வேலை செய்யவேண்டி வரும். இரண்டும் இணைந்த அள
வில் எப்படி இருக்கிறது என்பதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் விபரம்
அறிந்து சொல்லக்கூடும்.

**திரு. நா. வீராசாமி :** உயர் நிலைப் பள்ளி 200 நாட்களும், தொடக்கப்
பள்ளி 220 நாட்களும் வேலை செய்யவேண்டுமென்று சொன்னார்கள். இது
அரசின் கொள்கையாக வைத்திருக்கிற நாட்கள். அது இல்லாமல் வேலை
நிறுத்தம் ஏற்படும்பொழுது 30 நாட்கள், 40 நாட்கள் அல்லது வேறு காரணங்
களுக்காக கழிந்துபோய்விடுகிறது. ஆக சராசரி பார்த்தால் 160 நாட்கள்,
170 நாட்களுக்குத் தான் மொத்தத்தில் ஆண்டுதோறும் பள்ளிக்கூடங்கள்
திறக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இதைத் தவிர்ப்பதற்கு குறைந்தது ஒரு
ஆண்டில் உயர்நிலைப்பள்ளி 250 நாட்களுக்கும், தொடக்கப் பள்ளி 280 நாட்
களுக்கும் வேலை செய்தால் மாணவர்களுடைய திறமை வளரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** யோசனை வேண்டாம். கேள்வி
போடுங்கள்.

**திரு. நா. வீராசாமி :** ஆகவே, குறைந்தபட்சம் 250 நாட்களுக்கு
உயர்நிலைப் பள்ளிகள் வேலை செய்யவேண்டும் என்று அரசு ஏதாவது வழி
வகுக்குமா?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இடையிலே பல்வேறு
காரணங்களுக்காக பள்ளிகள் மூடப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆனால்
ஒரு ஆண்டில் எப்படியாது 200 நாட்கள் வேலை செய்கின்ற அளவுக்கு அது
பணியாற்றவேண்டும் என்ற முயற்சிதான் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.
இடையிலே சிலபல நாட்கள் விடுமுறை விடவேண்டிய அவசியம் வந்தால்,
தேர்வுக்கு முன்னால் இருக்கிற நாட்களை ஈடு கட்ட வேண்டும். இல்லாவிட்டால்,
சனிக் கிழமைகளில் பள்ளியை வைத்து ஈடு கட்டவேண்டும் என்று இருக்கிறது.
எப்படியும் 200 நாட்களுக்கு வேலை செய்யவேண்டும் என்ற அளவுக்குத் தான்
இருக்கிறது. இப்பொழுதே 200 நாட்கள் என்பது தேர்வுக்கு ஒதுக்கப்பட்ட
நாட்களையும் சேர்த்து. நாங்கள் கேட்டுக்கொண்டோம், தேர்வு நாட்களை நீக்கி
200 நாட்கள் பள்ளிகளை நடத்தவேண்டும் என்று. ஆனால் அதற்கே ஆசிரியர்
பெருமக்கள் அதற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்தாத காரணத்தினால் அது
நிறுத்தப்பட்டிருக்கிறது.

## *Private Appearance for S.S.L.C. Examination*

* 784 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether men students with a pass in VIII standard, are allowed to write the S.S.L.C. examinations privately; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) 18 வயது நிரம்பியவர் அனைவரும், ஏற்பு அளிக்கப்பட்ட இம்மா
நிலப் பள்ளிகளில் 8-வது வகுப்புத் தேர்வில் அல்லது அதற்குச் சமமான தேர்
வில் தேர்ச்சி பெற்றிருந்தால், தனிப்பட்ட முறையில் எஸ். எஸ். எல். சி. தேர்வு
எழுத அனுமதிக்கப்படுகின்றனர்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இப்பொழுது 'எய்ட்த் ஸ்டாண்டர்டு' படித்த
பையன்கள் பிரைவேட்டாக மெட்ரிகுலேஷன் பரீட்சை எழுதுவதற்கு அனு
மதிக்கப்படுகிறார்களே? அதே மாதிரி எஸ.எஸ்.எல்.சி. பரீட்சை எழுது
வதற்கும் அந்த அளவுக்கு அனுமதிக்கப்படுவார்களா என்று அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அவர்கள் 8-வது வகுப்பு
தேறியிருக்கவேண்டும். அல்லது 8-வது வகுப்புக்கு ஈடான அளவுக்கு
. எஸ். எல். சி. பரீட்சை எழுதி அதில் தேர்வு பெற்றிருக்கவேண்டும். ஸீனியர்
பேசிக் எஜுகேஷன் சர்டிபிகேட் அவர்கள் பெற்றிருக்கவேண்டும். அதாவது

[1974 ஏப்ரல் 9

9-வது வகுப்பிலே சேர்வதற்குத் தகுதி பெற்று இருப்பவர்களும், அவர்களுடைய வயது 18-க்கு மேல் ஆகிறவர்களும் எஸ்.எஸ்.எல்.சி தேர்வு எழுதலாம் என்று இப்பொழுது அனுமதிக்கப்படுகிறது.

**திரு. சி. ஆறுமுகம் :** தமிழ் நாட்டில் 8-வது வகுப்பு படித்தவர்கள் எத்தனை லட்சம் பேர்கள் இருக்கிறார்கள் ? அவர்களை தொழில் நுட்பப் பள்ளிகளில் சேர்த்துக்கொள்வதற்கு அரசு வழி வகைகள் செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்தக் கணக்கு எடுக்க இயலாது. ஆனால் 8-வது வகுப்பு படித்தவர்கள் ஐ.டி.ஐ இண்டஸ்டிரியல் டிரைனிங் இன்ஸ்டிட்யூட்களில் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கு வழிவகை இருக்கிறது

**திரு. பெ. சீனிவாசன் :** இப்பொழுது வேறு மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகத்தில், மாணவர்கள் தனியாக பரீட்சை எழுதுவதற்கு உற்சாகப்படுத்துகிறார்கள். நம்முடைய மாநிலத்தில் சர்வகலாசாலையும் சரி, அரசாங்கமும் சரி, இப்படிப்பட்ட விதியை அதாவது உயர்நிலைப் பள்ளியில் படித்தால்தான் எஸ்.எஸ்.எல்.சி பரீட்சை எழுதலாம் என்று கண்டிப்பான விதியை தளர்த்தி யார் வேண்டுமானாலும் குறிப்பிட்ட வயதுக்கு மேல் எஸ்.எஸ்.எல்.சி மெட்ரிக், பி.ஏ. பரீட்சைகள் எப்பொழுது வேண்டுமானாலும் பிரைவேட்டாகப் படித்து எழுதலாம் என்பதாக, எஸ்.எஸ்.எல்.சி பரீட்சை பிரைவேட்டாக படித்து எழுதுவதை அரசாங்கம் உற்சாகப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர்களே, பல்கலைக் கழகங்கள் தான் அதற்கு விதிமுறைகள் தந்து இருக்கின்றன. ஏற்கனவே பெண்கள் 18 வயதை அடைந்து இருந்தால் எழுதலாம் என்று இருந்தது. சென்ற ஆண்டு தான் ஆண்களாக இருந்தாலும் 18 வயதாகி இருந்து, 8-வது தேறியிருந்தால் எஸ்.எஸ்.எல்.சி-க்கு தனியாக எழுதலாம் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. அது போல் மதுரைப் பல்கலைக்கழகத்திலும் அஞ்சல் வழிப் பாடப்பயிற்சி என்ற முறையில் பட்டப்படிப்பு படிக்கும் வாய்ப்பை வழங்கியிருக்கிறார்கள்.

**புலவர் சி. பழனிச்சாமி :** தலைவர்களே, 8-வது வகுப்பு வரை படித்திருந்தவர்களுக்கு முன்பு ஹையர் கிரேடு டிரெயினிங் கொடுத்து ஆசிரியர்களாக வந்தார்கள். இப்போது ஹையர் கிரேடு டிரெயினிங் நிறுத்தப்பட்டு விட்டதால், 8-வது வகுப்பு வரை படித்துள்ளோருக்கு இருந்த வேலை வாய்ப்பு குறைந்து விட்டது. எனவே, 8-வது வகுப்பு வரை படித்துள்ளவர்களுக்குத் தனியாக வேலை வாய்ப்பு ஏற்படுத்த அரசு முன்வருமா ?



1974 ஏப்ரல் 9]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர்களே, 8-வது வகுப்பு படித்தவர்களுக்கு என்று தனியாக வேலைவாய்ப்பு இல்லை. இப்போதே பல்வேறு வகையில், அட்டெண்டர் போன்ற பதவிகளுக்கு, ஐ.டி.ஐ. பயிற்சிக்கு 8-வது வகுப்பு வரையில் படிப்பு இருந்தால் போதுமானது என்று கூறப்பட்டிருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், இப்போது எல்லாம் தொழிற்சாலையில் சேருவதற்குக்கூட எஸ்.எஸ்.எல்.சி. படிப்பு வேண்டுமென்று கேட்கிறார்கள் போலீஸ்காரர்கள் வார்டன் போன்றவைகளுக்குக் கூட எஸ்.எஸ்.எல்.சி. படிப்பு வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்போது 8-வது வரை படித்துவிட்டு இருப்பவர்களுக்கு வேலை கிடைக்காமல், அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அவர்களை எஸ்.எஸ்.எல்.சி. வரை படிக்க உற்சாகப்படுத்தி, எளிதான முறையில் அவர்கள் படித்து தேர்ச்சி பெறுவதற்கு வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதிலே ஒன்றும் கஷ்டம் இல்லை. 10-வது வகுப்பு வரை படிப்பதற்கு இலவச கல்வி வசதி அளித்து இருக்கிறோம். 8-வது வரை படித்தவர்கள் பத்தாவது வரை படிப்பதற்கு எந்த விதப் பணச்செலவும் இல்லை. அவரவர்கள் குடியிருக்கிற இடங்களுக்குப் பக்கத்திலேயே உயர்நிலைப்பள்ளிகள் இருக்கக்கூடும். அப்படி அவர்கள் படிக்காமல் நின்றுவிட்டு, 5-6 ஆண்டுகளுக்குப் பின் படிக்கவேண்டுமென்ற ஆர்வத்தால் படிக்க வேண்டும், எஸ்.எஸ்.எல்.சி தேறவேண்டுமென்று விரும்பினால், அவர்கள் 18-வது வயதை எய்தியிருந்தால் அவர்கள் தனியாகப் படித்து தேர்வு எழுதலாம். சென்ற ஆண்டில் இருந்து அவர்கள் தனியாகப் படித்து எழுதும் வாய்ப்பை கொடுத்து இருக்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், சென்ற ஆண்டிலிருந்து ஆண்களுக்கும் அந்த வாய்ப்பு கொடுக்கப்பட்டது நல்ல ஏற்பாடு தான். இரண்டு இலட்சம் பேர் வரை எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதுகிறார்களே, அவர்களிலே எத்தனை சதமானம் பிரைவேட்டாக எழுதுகிறார்கள் என்ற விவரம் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அது பற்றி விவரக்குறிப்பு இல்லை. சென்ற ஆண்டுக்கு முதல் ஆண்டு 10 ஆயிரத்துச் சொச்சம் பேர் எழுதி இருக்கிறார்கள்.

### பள்ளிகள் தொகுதித் திட்டம்

* 785 வினு—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் ஸ்கூல் காம்ளெக்ஸ் (School Complex) திட்டம் அமுல் நடத்தப்படுகிறதா ?

(இ) ஆம் எனில் எந்தெந்த உயர்நிலைப்பள்ளிகளுடன் எந்தெந்த ஆரம்பப் பள்ளிகள் இணைக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தால் என்னென்ன பலன்கள் ஏற்பட்டு இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஓர் உயர்நிலைப் பள்ளியும் அதன் அருகே உள்ள 3-4 நடுநிலைப்பள்ளிகளும், 10 அன்றி 20 துவக்கப் பள்ளிகளும் ஒரே குழுவாக இணைந்து செயல்படுகிறது. இக்குழுக்களின் தலைவராக உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியாற்றுகிறார். பள்ளி இணைப்புத் திட்டக்குழு பணியாளர்களின் ஓராண்டு வேலை திட்டம் மற்றும் பணியாளர்களின் முன்னேற்றத்திற்குரிய திட்டங்களை வகுக்கிறது. அவர்கள் செய்யும் முக்கியப் பணி, கல்வி பயணங்களையும், கண்காட்சிகளையும் அமைத்தல், கலை நிகழ்ச்சி, விளையாட்டு விழா ஏற்படுத்துதல், பொது சோதனைகள் வைத்து திருத்த இணைப்பிலுள்ள பள்ளிகளிடையே கல்வி வளர்ச்சிக்குரிய போட்டிகள் நடத்துதல், அன்றாட வகுப்பறை சிக்கலை விவாதித்தல், சிக்கல் தீர்வதற்குரிய செயல்முறைகளை ஏற்படுத்துதல், கல்விப் படக்காட்சிகளையும் அறிவியல் பரிசோதனைகளையும் நடத்துதல், நிதி வசதியற்ற பள்ளிகளுக்கு வசதியுள்ள பள்ளிகள் சேர்ந்து இணைந்தால் அவர்கள் தங்களால் இயன்ற உதவியைச் செய்வதற்கு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்தத் திட்டமானது திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டுமல்லாது வேறு மாவட்டங்களிலும் இருக்கின்றதா ? அப்படியில்லையென்றால், இந்த நல்ல திட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா ?

@ 146-154-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் கிட்டத்தட்ட 114 உயர்நிலைப் பள்ளிகளைச் சுற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு மாவட்டங்களில் ஏற்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு கல்வி நிறுவனம் பள்ளி இடைப்பயிற்சி நடத்தி அந்தந்த உயர்நிலைப்பள்ளிகளுக்கு ஊக்கம் கொடுத்து வருகிறது. இதுவரையில் 114 உயர்நிலைப்பள்ளிகளை ஒட்டி இது செய்யப்பட்டு வருகிறது.

### *State Dental Council.*

* 786 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have received representation from the Tamil Nadu Dental Council for grants and allotment of place for their offices, during 1970–71; and

(*b*) the action taken thereon.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) (1) ஆம்

(2) : இல்லை.

(இ) தமிழ்நாடு பல் மருத்துவ குழுவிற்கு மான்யம் வழங்குவதில் மேல் நடவடிக்கை எடுக்க அதன் வரவு செலவு கணக்குகள் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இதற்கு மானியக்கோரிக்கை எவ்வளவாக இருக்கும்? எப்போது வழங்கப்படும். பல் வைத்தியர்களிடம் இருந்து ஏதாவது கம்யூனிகேஷன் கிடைத்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அவர்களுக்கு முதலில் வரவுசெலவு கணக்கு எந்த அளவுக்கு அனுமதிக்கப்பட்டு இருந்ததோ அதை விட அதிகமாக கௌரவப் பதிவாளருக்கு ஊதியம் வழங்கியது காரணமாக அரசாங்கம் மறுப்புத் தெரிவித்தும், தொடர்ந்து ஊதியம் வழங்கிவிட்டதால் இழப்பு ஏற்பட்டு இருக்கிறது. பல் மருத்துவர் சட்டத்தின் 53-வது பிரிவின் கீழ் பல் மருத்துவர் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய பங்குத் தொகையையும் 68-69-ம் ஆண்டு முதல் செலுத்தவில்லை. அப்படிப்பட்ட நிலையில் அரசாங்கம் முன்தொகை வழங்குவதற்குக்கூட அவர்கள் அவர்களைச் சீர்செய்துகொள்ளவேண்டுமென்று கேட்டார்கள். இப்போது ரூ. 50 ஊதியம் கொடுத்து கௌரவப் பதிவாளர் நியமித்து இருப்பதாகத் தெரிகிறது. அதற்கு மேற்கொண்டு அவர்களுக்கு மானியம் வழங்குவதாக இருந்தால் அவர்களது வரவு-செலவுக்கணக்குப்படி எந்த ஆண்டிலிருந்து வழங்கப்படவேண்டுமென்று இயக்குனர் மூலமாகக் கேட்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இடம் ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டார்களே, அது பற்றி அரசாங்கம் முடிவு எடுத்து இருக்கிறதா, காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம்?



மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே. கொடுக்கவில்லை என்ற காரணத்தால் தான், விடையளிக்கும்போதே அ (2) இல்லை என்று சொன்னேன். அவ்வாறு இடம் ஒதுக்கவேண்டுமென்று அவர்கள் கேட்க வில்லை.

### *Kidney Bank.*

* 787 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Health be pleased to state whether it is a fact that there is a 'Kidney Bank' in the Government General Hospital, Madras?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

### *Saidapet Dispensary.*

* 788 *Q.*—THIRU K. M. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal to expand the Government Hospital (Dispensary) in Saidapet and to increase the number of beds; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சைதாப்பேட்டையிலுள்ள அரசினர் மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் ஒன்று பரிசீலனையில் உள்ளது. அதிகப்படியான படுக்கையின் எண்ணிக்கையைப் பற்றிய முடிவு இனிமேல் தான் எடுக்கவேண்டும்.

### *Drinking Water Supply Schemes in Trivellore Area.*

* 789 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to provide drinking water supply to Perambakkam village and Vengathur village in Trivellore taluk through the Water Supply and Drainage Board; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.



(இ) கிராமப்புற குடிநீர் வழங்கு விரைவுத்திட்டம் வாயிலாக பேரம்பாக்கம் கிராமத்திற்கு குடிநீர் வழங்க வகை செய்யும் திட்டம் ஒன்றை தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் வாரியத் தலைமைப் பொறியாளர் தயாரித்து வருகிறார். வெங்கத்தூர் கிராமத்திற்கு குடிநீர் வழங்குவதற்கான ஆய்வு மதிப்பீட்டை தயாரிப்பதற்கும் அவர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் இந்தத் திட்டத்திற்கு ஆகக்கூடிய செலவின் முழு அளவையும் கடனாக வழங்கப்படுகிறதா அல்லது அதிலே ஒரு பகுதி மானியமாகக் கொடுக்கப்படுகிறதா? அப்படிக் கடனாக இருந்தால் அந்தக் கடனைச் செலுத்தும் அளவுக்கு அந்த கிராமங்களுக்கு வருமானம் இப்போது இல்லை. மாற்று ஏற்பாடு என்ன செய்ய அரசாங்கம் உத்தேசித்து இருக்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கிராமங்களுக்கு குடிநீர் விரைவுத் திட்டம் (அக்சலரேடட் ப்ரோகிராம்) மத்திய அரசின் ஆலோசனையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு நிதி செலவானாலும் இன்றியமையாத தேவையுள்ள கிராமங்களுக்கு, நோய்கள் மிகுதியாக பரவக்கூடிய கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்குவதற்கு மத்திய அரசு ஆலோசனை வழங்கி அந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. தொடங்கி விரைவில் பணியாற்றவேண்டுமென்று சொல்லிய மத்திய அரசு நாம் செல்கிற வேகத்திற்கு உதவி செய்ய முன் வரவில்லை. நாம் 3 கோடி 30 லட்சம் அளவுக்குக் காரியம் ஆற்றியிருக்கும்போது அவர்கள் 1 கோடியே 70 லட்சம் அளவுக்குத் தான் உதவி செய்து இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தையும் மத்திய அரசு செயல்படுத்த முடியாத நிலை இன்று ஏற்பட்டு இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் மினிமம் நீட்ஸ் ப்ரோக்கிராம் என்று சொல்லி மருத்துவம், சுகாதாரம், குடிநீர் ஆகியவற்றை எல்லாம் இணைத்து ஒரு திட்டத்தை மத்திய அரசு இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் சொன்னார்கள். சொல்கிற அளவுக்கு அந்தத் திட்டம் பெரும் அளவில் வரப்போகிறதா என்று கவனிக்கிற நேரத்தில் ஏமாற்றம் அளிக்கிற அளவுக்கு மிகச் சுருக்கமாக செய்ய வேண்டுமென்று இருக்கிறது. இப்படிப்பட்ட இடர்பாடான நிலை இருக்கிறது. இயன்ற வரை செயல்படுத்துவோம்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, இந்தக் கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தை பரிசீலனை செய்வதற்கு முன்னால் ஆய்வுக் கட்டணமாக ஒரு தொகையை அரசாங்கத்திற்கு கட்டவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். பல ஊர்களில் இந்த முன்பணம் கட்ட வழியில்லாததால் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. முன்பணம் கட்டிய பின்னால், தண்ணீர்

இருந்தும் சில இடங்களில் அது பயன்படுத்தமுடியாமல் இருக்கிறது. அதனுல் ஆய்வு செய்யப்பட்டு, குடிநீருக்கு ஏற்ற தண்ணீர் இருக்கிறது என்று தெரிந்த பின்னுல் அதற்குரிய கட்டணத்தை வசூல் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சிறிய கிராமங்களுக்கு அப்படி கட்டணத் தொகையை வசூல் செய்யவேண்டுமென்ற அவசியம் இல்லை. அந்த விதிவிலக்கு உண்டு. இந்த ஆக்சிலரேட்டெட் புரோகிராமாக இருந்தால் அதற்கு பணம் வசூலிப்பதில்லை. கடன் வாங்கி திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லும்போது, சிரமப்பட்டு ஆய்வு கட்டணத்தைச் செலுத்தினுல்தான் பின்னுல் 15 அல்லது 20 ஆண்டு காலத்தில் கடனைத் திருப்பிக் கட்ட வல்லமை உள்ளவர்களாக இருப்பார்கள். இந்தத் திட்டத்தின் கீழ் வருவது ஒருமிகச் சிறிய கிராமமாக இருக்குமானுல், பணம் கட்ட வசதி இல்லாத ஒரு கிராமமாக இருக்குமானுல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதி அனுப்பினுல் அது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவரவர்களே, சென்னையிலிருந்து மரக்காணம் வரை கடலோரப் பகுதியாக இருப்பதால் கிராமப்புற குடிநீர் வழங்குத் திட்டத்தின் கீழ் இந்த கடலோரப் பகுதியை சேர்த்து குடிநீர் வழங்கும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா? இப்போது ஆங்காங்கே இருக்கின்ற கிராமங்களில் மணலை தோண்டி தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்கிருர்கள். அது சுகாதாரமற்றதாக இருக்கிறது. அதனுல் அவர்கள் நோய்களுக்கு ஆளாகிருர்கள். எனவே, அந்த கிராமங்களுக்கு குடிநீர் வழங்குத் திட்டத்தின் கீழ் தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியிலிருந்து எல்லாக் கிராமங்களிலும் நீர் ஊற்று இருப்பது தெரிகிறது. அதுவும் கடற்கரை ஓரத்தில் நல்ல தண்ணீர் கிடைக்குமானுல் அதைவிட சிறந்த பாதுகாக்கப்பட்ட தண்ணீர் இல்லை. பாதுகாக்கப்பட்ட தண்ணீர் ஒரு இடத்தில் இருந்து இறைத்துக் கொண்டுவரப்படும் போது, எல்லா இடங்களிலும் குளோரினேட் செய்யப்படும் வாய்ப்பு இல்லை. அதனுல் பாதுகாக்கப்பட்ட தண்ணீரை விட ஊற்று நீர் சிறந்தது; சுகாதாரமானது. அவரவர் தொகுதியைப்பற்றி அவரவர்களுக்குத் தெரியும் என்பது எனக்கு நன்ருகத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது கவனிக்கப்படும்.



**திரு. பெ. சீனிவாசன் :** தலைவரவர்களே, நம்முடைய 'வாட்டர் போர்டு' நிறைவேற்றிவரும் திட்டங்களில் இருக்கின்ற ஒரு பெரிய பிரச்சனை குடிநீர் சுவை—டேஸ்ட்—இல்லாமல் இருக்கிறது. பல இடங்களில் கிடைக்கின்ற தண்ணீரை குடிக்க முடியவில்லை. ஆகவே, இந்தத் திட்டங்களை நிறைவேற்றும் போது ஒரு அடிப்படை முறையை பின்பற்றினுல் நல்லது. கூடுமானவரையில் ரிவர் பெட்—ஆற்றுப்படுகைகளின் பக்கத்தில் இருக்கிற ஊர்களுக்கு, ஆற்றங் கரையிலிருந்து 10 மைல், 15 மைல் தூரம் இருந்தால் கூட அந்த ஊர்களுக்கு எல்லாம் ஆற்றுப்படுகையிலுள்ள ஊற்று நீரை சப்ளை செய்யவேண்டும். அப்படிச் செய்தால் இந்தப் பிரச்சனை தீரும் என்று நினைக்கிறேன். அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, ஆற்று நீர் அல்லது ஆற்று நிலத்தடி நீர் எல்லாத் திட்டங்களுக்கும் ஏற்புடையதல்ல. ஆற்றங் கரையிலிருந்து 15 மைல், 20 மைல் தூரத்தில் இருக்கின்ற கிராமங்களுக்கு இங்கிருந்து தண்ணீர் கொண்டுசெல்ல பெரும் தொகை செலவாகும். அந்த நிதியை பெறுவதற்கு வழியில்லை. ஆகவே, ஆங்காங்கே இருக்கின்ற நிலைமை களுக்கு ஏற்ப இந்தத் திட்டங்கள் அமைக்கப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, இந்தத் திட்டத்தில் சின்ன சின்ன கிராமங்களுக்கு விதிவிலக்கு உண்டு என்று அமைச்சரவர்கள் சொன் ஞர்கள். அவர்களிடம் பணம் கேட்பதில்லை என்று சொன்னுர்கள். கோவில்பட்டி வாட்டர் சப்ளை திட்டத்தில், வழியில் பல சின்னஞ்சிறிய கிராமங்கள் சேர்ந்திருக்கின்றன. அந்தக் கிராமங்களிடம் 4,000 ரூபாய், 5,000 ரூபாய் என்று கேட்டால் அவர்களால் கொடுக்க முடியாது; அந்தத் தொகை ஐந்தாண்டு செலவை விட அதிகமானதாக அவர்களுக்கு இருக்கிறது. அந்தக் கிராமங்களில் கிடைக்கின்ற தண்ணீரும் உப்பு நீராக இருக்கிறது. முன்பணம் கட்ட முடியாததால் கிராமப்புற குடிநீர் திட்டத்தின் கீழ் தண்ணீர் வழங்கவும் வழி இல்லை. ஆகவே, அந்தக் கிராமங்களுக்கு மானியம் கொடுத்து, குடி தண்ணீர் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, ஒரு பெரிய திட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கிற கிராமங்களுக்கு, எந்தெந்த கிராமங்களுக்கு எவ்வளவு பங்குத்தொகை வருமென்று எதிர்பார்க்கப்படுகிறதோ, அது கிடைத் தால் தான் குடிநீர் வழங்குவதற்கும், திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் வாய்ப்பு ஏற்படும். எல்லாக் கிராமங்களுக்கும் அதிலிருந்து விதிவிலக்கு அளித்தால் திட்டத்தை நிறைவேற்றுவதில் கஷ்டம் ஏற்படும். ஏதாவது பிரச்சனைகள் இருந்தால், அதைப்பற்றி தனியாகப் பரிசீலனை செய்யலாம்.

திரு. நா. வீராசாமி: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, நம்முடைய சட்டமன்ற விதி 35 (2)

'If on a question being called, a member in whose name it stands is absent, the Speaker at the request of any member direct that the answer to it be given'

என்று இருக்கிறது. ஒரு முக்கியமான கேள்வி—787 கிட்னி பாங்க் பற்றியது. அதைப்பற்றி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் கேள்வியைக் கொடுத்திருந்த திரு. பரந்தாமன் அவர்கள் அவையில் இல்லை. ஆகவே, துணைக்கேள்வி யாரும் கேட்கவில்லை என்று கருதி, வேறு கேள்விக்கு சென்றுவிட்டோம். அது முடிந்து, வெகுநேரமாகிவிட்டது. இப்போது அதைப்பற்றிக் கேட்க வாய்ப்பில்லை. இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

### செங்கசமுத்திரி அணை

*790 வினு.—திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கந்தர்வக்கோட்டை பகுதி மக்களுக்கு பயனளிக்கக் கூடிய செங்க சமுத்திரி ஏரி அணைக்கட்டுத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த செங்கசமுத்திரி ஏரித் திட்டம் ஏற்கனவே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. அது இப்போது பரிசீலனையில் இல்லை என்றால் பரிசீலனையே கைவிடப் பட்டதா? கைவிடப்பட்டதற்கு என்ன காரணம் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, செங்கசமுத்திரி ஏரித் திட்டத்தின் கீழ் இப்போது 92 ஏக்கர் ஆயக்கட்டு இருக்கிறது. அதற்கு போதுமான அளவு தண்ணீர் இல்லை. ஆகவே, மேற்கொண்டு விஸ்தரிப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று கருதி கைவிடப்பட்டது.



### பெண்ணையாற்றின் குறுக்கே பாலம்

*791 வினு—திரு. ந. தருமலிங்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள பெண்ணையாற்றில் திருவாங்கத் திற்கும், மணலூர்பேட்டைக்கும் இடையில் பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) திருவாங்கத்திற்கும் மணலூர்பேட்டைக்கும் இடையே பெண்ணை யாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

### *Harbour Development Project.*

*792 Q.—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that the Government of Tamil Nadu have written to the Central Government to the effect that any further extension of Madras Harbour would affect the beauty of Marina beach; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Assignment of lands in Tiruttani taluk.*

*793 Q.—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that the pattas (D. Forms) given to the Landless during the visit of the Hon. Chief Minister to Tiruttani taluk in 1970 and in January 1973 have not been carried to the village accounts; and

(b) ifso, the reasons therefor?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை

வடகரை கிராமத்திலுள்ள மரங்கள்

* 794 வினா—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் திருவாடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இனாம் வடகரை கிராமத்திலுள்ள 10 ஆயிரம் பனை மரங்களை வெட்டி எடுத்துக்கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளதா ?

(இ) அதனைத் தடுத்து நிறுத்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் இந்த திருவாவடுதுறை ஆதீனத்திற்கு சொந்தமான இனாம் கிராமங்கள்—வடகரை, அரசப்பட்டி என்ற இரண்டு கிராமங்கள் 63 இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் மேஜர் இனாம் கிராமங்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளன. அதை எதிர்த்து அவர்கள் கேஸ்போட்டு, ஒரு கிராமம் மைனர் இனாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அந்த கிராமத்திலுள்ள சுமார் 3,000 பனை மரங்களை போலீஸ் உதவியுடன் வெட்டியிருக்கிறார்கள். இன்னொரு ஊரிலுள்ள பனை மரங்களையும் வெட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் 300 பனை மரத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இனிமேல் வெட்டாமல் இருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? இப்பொழுது வெட்டப்பட்ட 3,000 பனை மரங்களுக்கும் நஷ்டயீடு வசூலிக்கப்படுமா ? அவர்கள் செய்த சட்ட விரோதமான செயலுக்கு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம் இனாம் வடகரை கிராமத்தில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான சுமார் 1,500 பனை மரங்களை மரம் ஒன்றுக்கு 13 ரூபாய் வீதம் விற்பனை செய்திருக்கிறார்கள் என்பது உண்மை. அதற்குக் காரணம் அந்த மரங்கள் பலன் தரவில்லை, பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 1936-ம் ஆண்டு கும்பகோணம் துணை நீதிமன்றத்தில் இந்த ஆதீனத்திற்கு ஒரு நிர்வாகத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.



அடிப்படையில் அசையா சொத்துக்களை குத்தகை, விற்பனை முதலிய வில்லங்கங்களை பொது ஏலம் அல்லது டெண்டர் மூலம் செய்வதற்கு உரிமை இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைச் செயல்படுத்துவதற்கு முன்னால் அறநிலையத் துறையின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். அனுமதியைப் பெறாமலேயே இந்தக் காரியத்தில் அவர்கள் இறங்கியிருக்கிறார்கள். இது ஆணையரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, துணை ஆணையர் மூலமாக விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது. விளக்கம் வந்தவுடன் சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : இனாம் ஒழிப்புச் சட்டத்தின்படி அவர்கள் பட்டா பெறவேண்டும். ஆனால் பட்டா இன்னும் பெறவில்லை. அந்த விஷயம் கோர்ட்டில் இருக்கிறது. அதற்கு முன்னாலேயே பலன் தரக்கூடிய மரங்களை பட்டுவிட்டன என்று தவறாகச் சொல்லி, மரங்களை வெட்டியிருக்கிறார்கள். இதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் ஒரு மரம் 50 ரூபாய்க்கு பெறுமானமுள்ளது. அதை குறைந்த ரேட்டுக்கு விற்றிருக்கிறார்கள். அதைக் கவனத்தில் கொண்டு, இந்த மோசடி எல்லாம் இனிமேல் நடக்காமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே, இதற்கான கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, வெட்டப்பட்ட மரங்களுக்கான நஷ்டயீட்டுத் தொகையையும் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அனுமதி இல்லாமல் செய்திருக்கிறார்கள் என்று ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். மேற்கொண்டு அவர்கள் இப்படிச் செய்யாமல் இருப்பதற்கு அறநிலையத் துறை மூலம் அறிவுரைகள் வழங்கப்படும். ஏற்கெனவே செய்த தவறுக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9-30)

திரு. கு. காமாட்சி : ஆதீனத்திற்குச் சொந்தமான அசையா சொத்துக்களை டெண்டர் மூலமாக, ஏலம் மூலமாக விற்பதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு என்றால் இதில் நஞ்சை நிலங்களும் அடங்குமா ? நஞ்சை நிலங்கள் அடங்குமானால் அது நம் சட்டத்திற்குப் புறம்பாக இருக்குமே, அதுபற்றி என்ன நிலைமை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இது எல்லா ஆதீனங்களுக்கும் பொருந்தாது. திருவாவடுதுறை ஆதீனத்தைப் பொறுத்தவரையில்தான். 936-ஆம் வருடம் கும்பகோணம் துணை நீதி மன்றத்தில் வகுக்கப்பட்ட

நிர்வாகத் திட்டத்தின் கீழ், அவர்களுக்கு இந்த உரிமை இருக்கிறது. என்றாலும் அவர்களும் அறநிலையத்துறையின் அனுமதிபெற்றுத்தான் இந்தக் காரியத்தைச் செய்ய முடியும். அப்படி அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அனுமதி பெறவில்லை. ஆகவேதான் தக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறேன்.

முருகமங்கலம்-திருமங்கலம் சாலை.

* 795 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள முருகமங்கலத்தையும், திருமங்கலத்தையும் இணைக்கின்ற மண் சாலையை கப்பி சாலையாக மாற்றியமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கேள்வியிற் குறிப்பிட்ட மண் சாலை கப்பிச் சாலையாக வெள்ளப் பாதிப்பு நிவாரணத் திட்டத்தின் கீழ் எடுத்து முடிக்கப்பட்டது.

மாயூரம்-மறையூர் சாலை.

* 796 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம்-மறையூர் சாலையினை செப்பனிட தற்போது மேற்கொள்ளப் பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மாயூரம்-மறையூர் சாலைக்கு கப்பி போடும் வேலை ஏற்கனவே முடிக்கப்பட்டுவிட்டது.

*Procurement of groundnuts*

* 797 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Government have sought the permission of the Central Government to adopt the levy system to procurement groundnuts in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.



(இ) வேர்க்கடலையின் பேரில் லெவி விதித்தால் நாடெங்கும் கடலை எண்ணெய் விலை உயர்வாகிவிடும் என்று காரணம் சொல்லி வேர்க்கடலைக்கு லெவி விதிப்பது கூடாது என்று 28—3—1974-இல் மத்திய அரசு தமிழ்நாடு அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. லெவி விதிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி, 9—4—1974-இல் மீண்டும் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : வேர்க்கடலை கொள்முதல் செய்வது நல்ல பயனுள்ள திட்டமாக இருக்கிறதே, மத்திய அரசு என்ன காரணம் சொல்லி இதற்கு அனுமதி அளிக்க மறுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நான் பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். மற்ற மாநிலங்களில் தட்டுப்பாடு இருக்கிற காரணத்தினால் இங்கே கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டால் அங்கெல்லாம் விலை உயர்ந்துவிடும் என்கிற காரணத்தைச் சொல்லி நமக்கு அனுமதி அளிக்க மறுத்திருக்கிறார்கள்.

திரு. கு. காமாட்சி : வேர்க்கடலை புஞ்சை தானியம்—அதை மற்ற மாநிலங்களுக்குக் கொண்டு செல்வதில் கட்டுப்பாடு இல்லை என்று அனுமதி அளித்துவிட்டால் நம் நாட்டில் அதன் விலை ஏறிவிடுமே, இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதுதான் கேள்வியே. வேர்க்கடலை வாணிபத்தைக் கட்டுப்படுத்தவும், லெவி விதிக்கவும் வழிவகை செய்யும் கட்டுப்பாடு உத்தரவை அனுப்பி அதை அனுமதிக்க வேண்டுமென்று 12—4—1973-இல் கேட்டோம். அந்த உத்தரவுக்கு 27—9—1973-இல் அனுமதி கொடுத்தபோதிலும், லெவி விதிக்கும் முன் மத்திய அரசின் அங்கீகாரம் பெற வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். 10—10—1973-இல் 25 சதவிகிதம் லெவியும், குவிண்டால் ரூ. 300 விலையில் வேர்க்கடலைப் பருப்புக் கொள்முதல் செய்ய அங்கீகாரம் கேட்டோம். 25—11—1973-இல் அங்கீகாரத்தை மறுத்தார்கள். திரும்ப நாம் 19—1—1974-இல் லெவி விதிப்பதன் அவசியத்தை கடலை எண்ணெய் விலை அதிகமாகி வருவதைச் சுட்டிக்காட்டி வற்புறுத்தினோம். 28—3—1974-இல் மத்திய அரசு மீண்டும் மறுத்துவிட்டது. திரும்ப நாம் 9—4—1974-இல் கடுமையாக வலியுறுத்தி மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூ. 300-க்கு லெவியில் வாங்க அனுமதி அளிக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டதாகச் சொன்னார்கள். எந்த அளவுக்கு ரூ. 300 ? இன்றைக்கு ரூ. 250-க்கு விற்கப்படுகிறதே, இந்த விலையில் அரசு ஓப்பன் மார்க்கெட்டில் கொள்முதல் செய்யக் கூடாதா ?

கொடுக்கிறார்கள், இங்கு கொண்டுவந்து விற்கும்போது அதிகவிலை வைக்கிறார்கள் இன்றைக்கு நெல் உற்பத்தியாளர்களைத் தவிர மற்றவர்கள் இப்படித்தான் பாதிக்கப்படுகிறார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, ரூ. 300 இன்றைக்கு ரூ. 260 ஆக வந்துவிட்டது. அதிகப்படியான பருப்பு இனிமேல்தான் வரவேண்டியிருக்கிறது. இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே, வியாபாரிகள் இன்னும் குறைந்த விலையில் வாங்க முயற்சித்தாலும் முயற்சிக்கலாம். அப்படி முயற்சித்தால், நியாயமான விலையை சர்க்கார் கொடுத்து வாங்க—குறைந்த விலை யில்லாமல், வாங்க—மார்க்கெட்டிலே கொள்முதல் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, தேவைப்பட்டால், அரசாங்கம் கொள்முதல் செய்ய முயற்சிக்கும்.

### தெப்பக்காட்டுப் பகுதியில் அலுவலர் குடியிருப்பு.

*798 வினா—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூடலூர் தெப்பக்காடு யானைகள் முகாம்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு குடியிருப்பு மனைகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நீலகிரி வடக்கு, வனக்கோட்டத்திலுள்ள கூடலூரில் யானை முகாம் இல்லை. ஆனால், அதற்கருகில் உள்ள தெப்பக்காட்டில் யானை முகாமிருக்கிறது. அங்கு பணியாற்றுகின்ற 23 பணியாளர்களுக்கு வீட்டு வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. எஞ்சி இருக்கிற 18 பேர்களுக்கு படிப்படியே கொடுக்க திட்டமிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இது போன்ற மலைப்பாங்கான பகுதிகளிலும், காட்டுப் பகுதிகளிலும் வீடுகள் கிடைப்பது கஷ்டம். ஆகவே, ஒரு முனைப்புத் திட்டம் வகுத்து, எல்லா மலைப்பாங்கான இடங்களிலும் வீடு கட்டித் தருவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இது யானை முகாமிலே பணியாற்றுகின்றவர்களுக்கு வீட்டு வசதி கொடுப்பது பற்றிய கேள்வியாகும். ஏற்கனவே, 28 பணியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எஞ்சியிருக்கிற 18 பணியாளர்களுக்கு பாக்கி இருக்கிறது. அவர்களுக்கு வீடு கட்டக் கூடிய திட்டமிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இதேபோன்று முதுமலையிலேயிருக்கிற சரணலயத்திலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கெல்லாம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா ? இல்லையென்றால், அதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் உடனே செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : முதுமலையிலே 10 பேர்களுக்கு இப்பொழுது வீடு கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கேயும் எஞ்சியிருக்கின்றவர்களுக்கு வீடு கட்டத் திட்டமிருக்கிறது. ஆனை மலைப் பகுதியிலே 26 பேர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க திட்டமிருக்கிறது. இம்மூன்று பகுதிகளிலே தான் யானை முகாம்கள் இருக்கின்றன. வீடு பெறுமலுள்ள எஞ்சியவர்களுக்குக் கட்டிக் கொடுக்கத் திட்டமிருக்கிறது.

### மதுரை-திருப்புவனம் பேருந்து வழித்தடம்.

*799 வினா—திரு. த. சோலையா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் இருந்து திருப்புவனம் செல்லும் 32-எண் பேருந்தினை திருப்புவனம் பேருந்து நிலையம் வரை சென்று வரச் செய்வதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. க. நாகராசன் : தலைவரவர்களே, மதுரை மாநகரத்திலே பெரும்பாலான வழித்தடங்கள் இன்றைக்கு பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தினாலே ஓட்டப்படுகின்றன. எல்லா வழித்தடங்களையும் அரசு மேற்கொண்டு நடத்த முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அத்தகைய திட்டத்தை அரசாங்கம் ஏற்கனவே ஒப்புக்கொண்டு, அதற்கான உத்தரவுகளை விரைவிலே பிறப்பிக்க இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்தக் குறிப்பிட்ட ரூட்டைப்பற்றிக் கேட்டதன் நோக்கமே, அது திருப்புவனம் வரையிலும் போவதென்றாலும், ஊருக்குக் கிட்டத்தட்ட 1/2 மைலுக்கு அப்பால் இருக்கிறது. ஆகவே, அந்த இடத்திலிருந்து வரக்கூடியவர்கள் வரவேண்டுமென்றுதான் இதைக் கேட்கிறோம். இதே மாதிரிதான் திருமங்கலம் பஸ் ஸடாண்டில் 1/2 மைலிலிருந்து பஸ் வருகிறது. ஆகவே, அந்த ஊர் எல்லைவரையிலும் போகுமா என்பதற்காகக் கேட்டிருக்கிறார்கள். அந்தமாதிரி ஏற்பாடுகள் டவுன் பஸ்ஸைப் பொறுத்தவரையில் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** திருப்புவனம் வரை செல்கின்ற இந்தப் பேருந்து திருப்புவனம் பஸ் ஸ்டாண்டுக்குப் போனால் 24 கிலோமீட்டருக்கு அதிகமான நீளத்தைப் பெற்றுவிடுகிறது. ஆகவே, நகர வழித்தடம் என்ற இலக்கிணத்திற்குள்ளாக வருவதில்லை. மாவட்ட வழித்தடம் என்ற இலக்கணத்திற்குள்ளாக வரும். அப்படி வருமானால், கட்டண உயர்வு ஏற்படும். அதனால் மக்களுக்குப் பாதகம் ஏற்படும். ஆகவே, நகர வழித்தடம் என்ற இலக்கணத்திற்குட்பட்டு, 24 கிலோமீட்டர் தூரத்திற்குட்பட்ட, திருப்புவனத்திலேயே இந்தப் பேருந்து நின்றுவிடுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அப்படிப்பட்ட வழித்தடங்களை அரசாங்கம் எடுத்துக்கொள்ள கொஞ்சம் காலதாமதம் ஆகும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதனால் பர்மிட்டை மாதாமாதம் ரின்யூ செய்து கொடுக்கிறார்கள். ஆகவே, அரசே எடுக்கும்வரை, பர்மிட்டை ரின்யூ செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, காலதாமதம் ஆகாது. 30—1—1974 அன்றே இதற்கான நோட்டிபிகேஷன் விடப்பட்டிருக்கிறது. அதிலே யார் யார் அதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள் என்ற விவரத்தையும் அரசாங்கம் ஏற்கனவே பெற்றுவிட்டது. ஆகவே, மதுரை மாநகரத்தில் ஓடுகிற அத்தனை வழித்தடங்களையும் இன்னும் ஒன்றிரண்டு மாதத்திற்குள் அரசு மேற்கொள்ள வழியிருக்கிறது.

**திரு. நா. வெ. குருசாமி :** தலைவரவர்களே, நகரப் பேருந்துக்கு இலக்கணம் 24 கிலோமீட்டர் என்று குறிப்பிட்டார்கள். அதை 40 கிலோமீட்டராக அதிகப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நகரப் பேருந்தாக அது இருக்காது. ஆகவேதான் 15 மைல், 24 கிலோமீட்டர் என்ற வரையறைக்குள்ளே அது வைக்கப்பட்டிருக்கிறது.



**திரு. ஏ. ஆர். சுப்பையா :** 24 கிலோமீட்டர் என்பது பெயரளவில்தான் இருக்கிறது. திருநெல்வேலி ஜங்ஷனிலிருந்து, ஆலங்குளம் வரை பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன. ரெக்கார்டில் டவுனிலிருந்து, ஆலங்குளத்திற்கு விடப்பட்டிருப்பதாக இருக்கிறது. இந்தச் சம்பிரதாயத்தைக் கவனிப்பதைவிட, சர்க்கார் தலையிட்டு, முக்கியமான இடங்களுக்குப் பஸ் விட வழி வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன். ஸ்பெசிஃபிக்காகக் கேட்கும்போது, எங்களுடைய ரெக்கார்டில் டவுனிலிருந்து விடப்படுவதாகத்தான் இருக்கிறது. ஆனால் ஜங்ஷனிலிருந்து போகிறது, நாங்கள் என்ன செய்ய முடியும் என்று கேட்கிறார்கள். ஆகவே, டவுன் பஸ்ஸைப் பொறுத்தவரையில், விதிமுறையைக் கொஞ்சம் தளர்த்தி, சர்க்கார் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இது ஒரு பிரச்னை. நகரத்திலிருந்து தூரத்தைக் கணக்கெடுத்தால் அது ஓரிடத்திலே முடியும். நகர பஸ் ஸ்டாண்டிலிருந்து தூரத்தைக் கணக்கெடுத்தால் அது ஓரிடத்திலே முடியும். ஆனால், பொதுவாக, வழித்தடங்கள் என்று சொல்லும்போது, பேருந்து நிலையங்களுக்கு இடையே உள்ள தூரத்தை எடுப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று அரசு கருதுகிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** நகரங்களிலுள்ள நெரிசலைத் தவிர்ப்பதற்கு நகரத்திற்கு வெளியே பரவலாகச் செல்ல வேண்டுமென்ற கொள்கையை அரசு ஏற்றிருக்கிறது. 24 கிலோமீட்டர் என்று வைத்திருப்பது அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்த இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே, மீண்டும் பரிசீலனை செய்து, 24 கிலோமீட்டரை, 40 கிலோமீட்டராக உயர்த்தவாவது அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அத்தகைய உத்தேசம் எதுவுமில்லை.

## திருவண்ணாமலை-சேலம் பேருந்து வழித்தடம்

* 800. **வினா—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலையிலிருந்து தண்டராம்பட்டு, தானிப்பாடி, நரிப்பள்ளி, அரூர் வழியாக சேலம் செல்ல அரசு பஸ் ஒன்று விடும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** திருவண்ணாமலையிலிருந்து தண்டராம்பட்டு தனிப்பாடி அரூர் வழியாக புதிதாக ஒரு பேருந்து விடும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**திரு. கு. காமாட்சி :** தலைவரவர்களே, இந்த மாதிரி வழித்தடங்கள் தமிழ் நாட்டிலே எவ்வளவு இருக்கின்றன? அது ஏதாவது சர்வே செய்யப்பட்டிருக்கிறதா? அவைகளுக்கெல்லாம் பஸ் விடுவதற்கு என்ன தடங்கலிருக்கிறது என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, கிட்டத்தட்ட 250 வழித்தடங்களில் 300 பேருந்துகளைக்கொண்டு நாம் இயக்கிவருகின்றோம். நீண்ட தூரப் பேருந்துகள் நிறைய வேண்டுமென்று கோரிக்கை இருக்கிறது. ஆனால், பேருந்துகள் கிடைப்பதில் இருக்கிற கஷ்டங்கள் காரணமாக அவைகளை அதிகப்படுத்த இயலாத நிலையிலிருந்து கொண்டிருக்கின்றோம்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, சேலம் ஒரு மாவட்டத்தின் தலை நகராக இருக்கிற காரணத்தாலே, திருவண்ணாமலையிலிருந்து பல இடங்களுக்குப் பேருந்து வசதிகள் இருந்தாலும், சேலம் போகவேண்டுமென்றால், இரண்டு மூன்று வழித்தடங்கல் வழியாகப் போக வேண்டியிருக்கிறது, சுற்றிச் சுற்றிப் போக வேண்டியிருக்கிறது, 3, 4 பஸ்கள் ஏறவேண்டியிருக்கிறது. ஆகவே, திருவண்ணாமலையிலிருந்து சேலம் போவதற்கு நிறைய மக்கள் போக வேண்டியிருக்கிற காரணத்தாலே—இப்பொழுதில்லாவிட்டாலும் கொஞ்சம் நாள் கழித்தாகிலும் நமது அரசாங்கம் பஸ் விடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** காலம் கனியும்வரை காத்திருக்கத்தான்வேண்டும்.

*Transport Ministers' Conference.*

* 801 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether any conference of Southern States Transport Ministers took place recently in Coimbatore; and

(*b*) if so, the decisions arrived at?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.





(இ) கோயம்புத்தூரில், 1972, டிசம்பர் 11,12 தேதிகளில் நடைபெற்ற தென் மாநிலங்களின் போக்குவரத்து அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளைக் காட்டும் விவர அறிக்கை * ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, கோயம்புத்தூரிலே நடைபெற்ற இந்த மாநாட்டில் ஒவ்வொரு மாநிலத்திற்குமிடையே ஓடுகின்ற பஸ்களைத் தேசியமயமாக்குகின்ற நேரத்தில், இந்திய அரசின் இசைவைப் பெறவேண்டியிருக்கிறது. ஆகவே, எல்லா மாநில அரசுகளும் ஒன்றுகூடி, 1939-ம் ஆண்டு மோட்டார் வெகிக்கில்ஸ் ஆக்டிலிருந்து 68-டி பிரிவை நீக்கிவிடவேண்டுமென்று மத்ய அரசை வலியுறுத்த வேண்டுமென்று முடிவுகள் எடுக்கப்பட்டனவே, அவை குறித்து மாநில அரசுகள் மத்திய அரசோடு தொடர்பு கொண்டனவா, குறிப்பாக நமது அரசு தொடர்பு கொண்டதா? அதற்கு மத்திய அரசு என்ன பதிலை அளித்திருக்கிறது என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இரண்டு மாநிலங்களுக்கிடையே ஓடுகின்ற வழித்தடங்களைத் தனியார் ஓட்டினால், இப்பொழுது இது அப்படியே நடைபெறலாம் என்றிருக்கிறது. தனியார்கள் ஓட்டுகின்ற இரண்டு மாநிலங்களுக்கிடையே ஓடுகின்ற வழித்தடங்களை அப்படியே தேசியமயமாக்க வேண்டுமானால், மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெற வேண்டியிருக்கிறது. அது தேவையில்லை, ஏனென்றால், தனியார் நடத்துகின்ற வழித்தடங்களைத்தானே, அரசே அவற்றை மேற்கொள்வதிலே, மத்திய அரசு அநாவசியமாகக் கால தாமதம் செய்யவேண்டியதில்லை என்று தென் மாநிலப் போக்குவரத்துத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவு, டெல்லியில் நடைபெற்ற மாநாட்டில் மத்திய அரசிடம் வற்புறுத்தப்பட்டது. மத்திய சர்க்காரிடத்திலேயும் அதுபற்றிப் பரிசீலித்துத் திருத்தம் கொண்டுவருவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, தென் மாநிலங்களைச் சேர்ந்த போக்குவரத்துத்துறை அமைச்சர்கள் கூடிய அந்த மாநாட்டில் எந்தெந்த மாநிலங்களில் நாம் பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. குறிப்பாக மைசூர், ஆந்திரா, கேரளா இவைகளிலாவது மாநில பஸ்களை விடுவதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

* 155-164 பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இதுவரையிலும் ஒவ்வொரு மாநில அரசும் தனித்தனியாக ஒவ்வொரு வழித்தடத்திற்கும் அனுமதி பெறக்கூடிய சூழ்நிலை இருந்தது. இதை மாற்ற வேண்டுமென்று சொல்லி, தென் மாநிலங்கள் என்றால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும், திராவிட மாநிலங்கள், ஆந்திரம், கேரளம், கர்நாடகம், தமிழகம் ஆகிய இந்த நான்கு மாநிலங்கள். அந்த மாநிலங்கள் சேர்ந்து, அரசாங்கங்கள் ஒன்று சேர்ந்து அவர்கள் தங்களுக்குள்ளேயே விடுகின்ற வழித்தடங்களை ஒன்றுபட்ட உணர்வோடு ஏற்படுத்த வேண்டுமென்று கருதி நம் அரசாங்கத்தின் சார்பில் வலியுறுத்தினோம். இதர கட்சிகள் மற்ற மாநிலங்களில் ஆட்சிசெய்தாலும்கூட அவர்களும் இந்தக் கருத்தை வரவேற்று இந்த மாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதற்கு உதவிபுரிந்தார்கள். ஆகவே, அண்டை மாநிலங்களோடு பஸ் போக்குவரத்தாலும், லாரி போக்குவரத்தாலும் நல்லமுறையில் இன்றைய தினம் இயங்கி வருகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்த விவர அறிக்கையிலே மத்திய சர்க்கார் ரயில்வே செஸ் நிதியிலிருந்து மகாராஷ்டிர மாநிலத்திற்கு அந்த டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனுக்கு நிதி கொடுக்கிறார்களே, அது எவ்வளவு கொடுக்கிறார்கள் ? இம்மாதிரி கொடுக்கும்பொழுது விந்திய மலைக்குத் தெற்கே இருக்கின்ற—மஹாராஷ்டிரமும் விந்தியமலைக்கும் தெற்கேதான் இருக்கிறது—மற்ற நான்கு மாநிலங்களுக்கும் இதேமாதிரி கேட்கலாமல்லவா ? கேட்டால் எவ்வளவு ரூபாய் கிடைக்கும் ? மகாராஷ்டிரத்திற்கு மத்திய சர்க்கார் எவ்வளவு கொடுக்கிறது என்ற விவரத்தைச் சொன்னால் நமக்கு உதவியாக இருக்கும் என்பதால் அதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, 'ரோட் டிரான்ஸ் போர்ட் கார்ப்பரேஷன் ஆக்ட்', போக்குவரத்துக் கழகத்திற்கு என்று சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின் அடிப்படையில் போக்குவரத்துக் கழகங்களை இதர மூன்று மாநிலங்களும் நிறுவி இருக்கிறார்கள். ஆந்திரம், கேரளம், கர்நாடக மாநிலங்களில் நிறுவியிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் நாம் இந்த வம்பில் மாட்டிக்கொள்ளவில்லை. சட்டதிட்டம் என்ன இருக்கிறது என்றால் மாநில சர்க்காரும் முதல் போடும், மத்திய சர்க்கார் இரயில்வே இலாக்கா மூன்றில் ஒரு பங்கு என்று கருதுகிறேன், முதலீடு போடுகிறார்கள். ஆனால் அந்த மூன்றில் ஒரு பங்கை எல்லா மாநிலங்களுக்கும் ஒழுங்காகத் தருவதில்லை. அதைத்தான் இந்த மாநாட்டில், குறிப்பாக கேரள மாநில போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் இந்தத் தீர்மானம் போட வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். எல்லா மாநிலங்களுக்கும் ஒரே சீராக மத்திய சர்க்கார் முதலீட்டில் நிதி ஒதுக்கம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. மகாராஷ்டிரத்திற்குக் கிடைத்த அளவு கேரளத்திற்குக் கிடைக்கவில்லை. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் இந்தத் தயவை எதிர் பார்க்கவில்லை.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகையிருக்கும் பெரு நகரங்களுக்கு மத்திய சர்க்கார் அந்தச் சாலைப் போக்குவரத்தில் ஏற்படும் நஷ்டத்தைப் போக்குவதற்காக நிதி உதவ வேண்டுமென்று தீர்மானம் போடப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானத்தின்படி மத்திய சர்க்கார் தெற்கே இருக்கின்ற திராவிட நாட்டில் இருக்கின்ற மாநிலங்களுக்கு ஏதாவது ஒரு மாநிலத்திற்காவது கொடுத்திருக்கிறார்களா ? வட மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். மேற்கு வங்கம், டெல்லி போன்ற மாநிலங்களுக்குக் கொடுத்திருப்பதாகக் கேள்விப் படுகிறேன். அவர்களுக்கு எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் ? நமக்கும் கொடுத்திருக்கிறார்களா ? இல்லையென்றால் எப்படியாவது அதைப் பெறுவதற்கு எந்த முயற்சியையாவது இந்த அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, பத்து இலட்சம் ஜனத்தொகை கொண்ட நகரங்களுக்கெல்லாம் போக்குவரத்து வசதிக்கு உதவி செய்ய வேண்டுமென்று மத்திய அரசை இந்தத் தென்னகப் போக்குவரத்துத் துறை அமைச்சர்களின் மாநாட்டில் வற்புறுத்துவது என்று தீர்மானித்தது. அதே கருத்தை அகில இந்திய போக்குவரத்துத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் தென்னகப் போக்குவரத்துத்துறை அமைச்சர்கள் வற்புறுத்தினார்கள். அதைத் தீர்மானமாகக்கூட நிறைவேற்றினார்கள். ஆனால் நிறைவேற்றப்பட்டது தீர்மானமே தவிர நிதி உதவி அல்ல.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** சார், அமைச்சரவர்களுடைய பதிலில் 3-வது அயிட்டத்தில்,

" All the States should move the Central Government to delete the proviso to section 68-D of the Motor Vehicles Act. "

என்று அதற்காக 'டெலிட்' செய்ய வேண்டுமென்று கேட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையின்படி 'டெலிட்' செய்தால் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு ரூட் வைப்பதற்கு வசதியிருக்கிறதா ? டெலிட் செய்யவில்லை என்றால் மத்திய சர்க்காரின் அங்கீகாரம் பெறவேண்டும். இதனால் ஏதாவது ஒரு மாநிலத்திற்கோ, அல்லது நம் மாநிலத்திற்கும் பக்கத்து மாநிலத்திற்கும் போக்குவரத்திற்குத் தடைப்பட்டிருக்கிறதா ?

Have we suffered on account of the non-delection of the clause? அதனால் நமக்குத் துன்பம் ஏற்பட்டிருக்கிறதா? எத்தனை ரூட்டுகள் இந்தப் பிரிவினால் கொடுக்கப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இரண்டு மாநிலங்களுக்கு இடையே இருக்கின்ற வழித்தடங்கள் இரண்டு வகையிலே நிர்வகிக்கப்படுகின்றன. ஒன்று, தனியார் பஸ்களை விடுகிறார்கள். இன்னொன்று, அரசாங்கமே விடுகிறது. தனியார் பஸ்களை விடும் ரூட்டை தேசியமயமாக்கத்தான் அந்த அனுமதி தேவை. அந்த அனுமதியைப் பெற்ற பிறகுதான் தேசியமயமாக்க முடியும். அதனால் எந்தவிதமான பாதகமும் இல்லை. ஆனால் அதேநேரத்தில் புதிதாக விடும் வழித்தடங்களுக்கு அரசாங்கப் போக்குவரத்துக் கழகங்களே இரண்டு மாநிலங்களுக்கிடையே வழித்தடங்களை இயக்க வேண்டுமென்று அந்த மாநாட்டில் முடிவெடுத்து இருக்கிறோம். அந்த செக்ஷன் இருப்பதால் பாதகமில்லை, ஆனால் காலதாமதம் ஆகின்றது.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசிலே அங்கம் வகிக்கின்ற அமைச்சர் மாண்புமிகு திரு. இராமச்சந்திரன் அவர்கள் தென் மாநிலங்கள், அதாவது திராவிட நாடு, இந்த மாநிலங்களெல்லாம் சேர்ந்து மாநாடு கூடியது என்று சொன்னார்கள். இது பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தத்துவத்திலே ஒன்றுதான். ஆகவே, திராவிட நாடு என்றால் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் இந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஒரே இனம், நம்முடைய சகோதரர்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்வியில் இது வராது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தென்னக மாநிலங்கள், அதாவது திராவிட மாநிலங்கள் என்று சொன்னேனே தவிர, நாடு என்ற இலக்கணத்திற்கு நாம் இன்னும் வந்தடையவில்லை.

THIRU A. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, this conference was held as early as December 1972 and so many decisions had been taken at the conference. May I know what follow-up action has been taken in regard to the decisions of the conference, particularly with regard to decision No. 4 relating to Omnibuses and decision No. 10 relating to measures for the prevention of accidents. Also, may I know whether all the decisions have been implemented?





THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, the Standing Committee of the Transport Commissioners of the four Southern States has been constituted. Unfortunately, after the conference was over, we could not have a popular Government in Andhra Pradesh to have concerted and complete action in respect of the various decisions we had taken. But anyhow all the four Southern States are very earnest in implementing the decisions. Recently when the Transport Minister of Kerala also met me, he informed me that he would be convening once again a conference of Transport Ministers of the Southern States probably in the Kerala State so that the decisions could be reviewed and action pursued.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, இந்தப் போக்குவரத்துத்துறை பொதுமக்களின் நன்மைக்காக இருப்பதை நாம் அறிவோம். பொதுவாகவே எந்த மாநிலமாக இருந்தாலும் நஷ்டம் ஏற்படுகிறது என்று கூறப்படுகிறது. எனவே, பொதுமக்களினுடைய நன்மையைக் கருதி, ஏற்படுகின்ற நஷ்டங்களை மத்திய சர்க்காரே ஏற்க வேண்டுமென்று இந்த மாநாட்டில் ஏதாவது வலியுறுத்தப்பட்டதா, விவாதிக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, பல காரியங்கள் இந்த மாநாட்டிலே விவாதிக்கப்பட்டன, எல்லாவற்றையும் மத்திய சர்க்கார் செய்ய வேண்டுமென்று நாம் எவ்வளவுதான் வற்புறுத்தினாலும்கூட அங்கிருந்து ஒன்றும் பதில் வருவதோ அல்லது பரிகாரம் வரும் என்றோ எதிர் பார்த்துக் கொண்டிருப்பதில் பலனில்லை. தென் மாநிலங்களைப் பொறுத்த வரையில் என்ன முடிவு எடுத்தோம் என்றால், அரசியல் ரீதியாக மாநில அரசுகள் பிரிந்திருந்தாலும், பொருளாதார ரீதியாக ஒரே பிராந்தியமாக இருப்பதால் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் ஒழுங்கான, சீரான போக்குவரத்து முறையைத் தென் பிராந்தியத்தில் உருவாக்குவது பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றது என்ற கொள்கையின் அடிப்படையில் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மத்திய சர்க்காரிடத்தில் சில உதவிகள் கேட்கப்பட்டாலும், அந்த உதவிகளைக் கேட்பதற்காகவே இந்த மாநாடு கூடியதாகப் பொருள் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1974 ஏப்ரல் 9]

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) சென்னைமாநகரில் காலரா நோயை பரவாமல் தடுக்கக் தவறியது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. பழனிச்சாமி அவர்கள்.

' failure of the Government to arrest the spreading of Cholera which is largely prevalent in and around Madras City '.

என்ற பொருள் குறித்து பேரவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள்

' the incidence of more than 600 Cholera cases during the few days in the City of Madras '. என்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது பற்றி இந்த பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய முக்கியமான விஷயம் என்பதைக் குறித்து சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

திரு. என். கே. பழனிசாமி : சபாநாயகர் அவர்களே, இப்பொழுது சமீபத்தில் என்றுமில்லாத அளவுக்கு இந்த நகரத்திலேயும், நகரத்தைச் சுற்றிலும் காலரா அதிகமாக பரவியிருப்பதானது இந்த சென்னை சரித்திரத்தில் சமீபத்தில் சர்க்கார் நடவடிக்கையின் காரணமாக இந்த மாநிலம் பூராவும் ஓரளவு காலரா, பிளேக் கட்டுப்படுத்தியிருந்தும் கூட, திடீரென்று இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் அதிகப்படியான பேருக்கு காலரா மட்டும் 600 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டும், இன்னும் பல பேர் இந்த நோயால் பீடித்திருப்பதற்கு என்ன காரணம் என்று மக்களுக்கு விளங்கவில்லை. ஆகவே இது பற்றி சபையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, I have given notice that the House stands adjourned to discuss a matter of urgent public importance, i.e., incidence of more than 600 cholera cases during the past few days in the City of Madras. I would like to stress in this connection that the purpose of my asking to adjourn the business of the House is to stress the fact that the matter is very urgent, so emergent, that it cannot wait and cannot be delayed.



1974 ஏப்ரல் 9] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

Many cholera cases are there and they have been admitted in the Infectious Diseases Hospital. The rush of patients is a great strain on the part of hospital authorities who treat the cases. The positive factor is that the authorities have failed in their duty to locate the causative factors for the outbreak of the epidemic, in which areas it is endemic and the exact cause for the outbreak of this disease. They have failed to locate these things and take prompt remedial measures. Especially in this month of April, not only cholera, but many other diseases break out and it is absolutely necessary that at least half an hour is allotted by adjourning the business of the House, to discuss the following things, viz., (i) location of areas where the infection has started, (ii) to find out how best to institute remedial measures. If these two things are done, it will be useful for the Public Health Minister to solve the problem

From the metrepolitan city, one or two persons afflicted with this disease may go to mofussil and they may spread the infection to other centres also. So, it is abolutely necessary that there should be mass inoculation. We must know whether that has been done and how many were inoculated—all these statistics we will be able to get from the Hon. Minister and we would be able to know the preventive measures taken and the question discussed threadbare, only if the House is adjourned to discuss the subject. This is why I have given notice of this adjournment motion.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த ஒத்தி வைப்பு தீர்மானத்தினுடைய அடிப்படையான கருத்து சென்னை நகரத்திலே ஏற்பட்ட காலரா நோய் சரியாக கண்காணிக்கப்படவில்லை என்பதாகத் தெரிகிறது. ஆனால், சென்னை நகரத்தில் காலரா நோய் பரவுவதை தடுக்க சரியாக கவனிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இடம் பெறாது என்பது மிகத் தெளிவாகும்.

வட சென்னையிலுள்ள பழைய வண்ணாரப்பேட்டை, மண்ணடி, வியாசர்பாடி, புளியந்தோப்பு ஆகிய பகுதிகளில் காலரா நோய் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அப்பகுதிகளைத் தவிர்த்து சென்னை மாநகரின் மற்ற பகுதிகளில் இந்நோய் எங்கும் ஏற்படவில்லை. சென்னை மாநகரில் மாநகராட்சி நல்வாழ்வு அலுவலர்களால் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

[திரு. க. அன்பழகன்] [1974 ஏப்ரல் 9

சென்னை மாநகரிலும் அதை மிகவும் ஒட்டியுள்ள பகுதிகளிலும் பாதிக்கப்பட்ட மக்கள் தொண்டையார்பேட்டையிலுள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகின்றன.

சென்னை மாநகரை மிகவும் ஒட்டியுள்ள பகுதிகளில் ஏற்பட்டுள்ள காலரா நோயைக் கட்டுப்படுத்த, செங்கற்பட்டு மாவட்ட உடல்நல அலுவலரும் தொடக்க நல்வாழ்வு நிலையங்களைச் சேர்ந்த பணியாளர்களும் தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

மேலும், மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத்துறை இயக்கத்தைச் சேர்ந்த மூலதன உடல்நல ஆய்வாளர்கள் (Reserve Health Inspectors) தடுப்பு நடவடிக்கைகளில் உள்ளூர் பணியாளர்களுக்கு உதவும்பொருட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நோயைப் பரவாமல் தடுக்க சென்னை மாநகரில் குடிநீரில் குளோரின் மருந்து மிகுதியாகக் கலக்கப்படுகிறது. குப்பைகளை அகற்றல் போன்ற பொதுத் துப்புரவு வேலைகளும் ஈக்களை ஒழிக்கும் வேலையும் முடுக்கிவிடப் பட்டுள்ளன.

அங்காடிகளில் உடல் நலத்துக்கு ஊறுபயக்கும் உணவுப் பொருள்களை விற்பதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

மாநகராட்சியைச் சேர்ந்த பணியாளர்கள் மக்களைப் பாதுகாக்க காலராத் தடுப்பு ஊசிகளைப் போடுகின்றனர்.

சென்னை மாநகரத்தில் 1—1—1974 முதல் 7—4—1974 வரை காலரா கண்டவர்களாக அறியப்பட்டவர்கள் 834 பேர். அதிலே உயிர் இழக்க நேரிட்டவர்கள் 15 பேர்கள்தான்; ஊசி குத்திக் கொண்டவர்கள் 1, 10, 915 பேர். இது ஏறத்தாழ 100 நாட்களுக்காக நடைபெற்றதே தவிர 1 மாதத்திற்குள்ளாக நடைபெற்றதில்லை. ஜனவரி 74-ல் 498 பேர் காலராவென ஐயுறப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட 498 பேரில் 299 பேருக்கு காலரா அடையாளம் இருந்தது. அதில் இறக்க நேரிட்டவர்கள் 5 பேர். பிப்ரவரி 74-ல் 375 பேர் ஐயுறப்பட்டு கொண்டு வரப்பட்டவர்களில், அதில் 167 பேருக்கு காலரா காணப்பட்டிருந்தது. ஒருவர் இறக்க நேரிட்டது. மார்ச்சு 74-ல் 411 பேர் கொண்டு வரப்பட்டதில் 250 பேருக்கு காலரா காணப்பட்டது. அதில் 7 பேர் இறக்க நேரிட்டது. ஏப்ரல் 74, 7-ந் தேதியோடு 355 பேர் ஐயுறப்பட்டு கொண்டு வரப்பட்டார்கள். 110 பேருக்கு காலரா இருந்தது. மற்றவர்களுக்கு வேறு



1974 ஏப்ரல் 9] [திரு. க. அன்பழகன்]

விதமாக வயிற்றுலை இருந்தது. இதில் 2 பேர் இறக்க நேரிட்டது. இதில் இன்றைய தினம் 40 பேர்கள் கவனிக்கப்படத் தக்க நிலையில் இருக்கின்றனர். அவர்களில் எவ்வளவு பேருக்கு காலரா இருக்கிறது என்பது தெரியவில்லை.

ஆனால் அந்த வட்டாரம் முழுவதும் 1, 10, 915 பேருக்கு ஊசி போடப் பட்டு தொடர்ந்து போடப்பட்டு வருகிற காரணத்தாலும், குடிநீர் மேலும் பாதுகாப்பாக இருக்க கவனம் செலுத்துவது காரணமாகவும் எளிதாக காலரா பரவக் கூடிய வழி முறைகளில்லை. அதிகம் கவனம் செலுத்தப்பட்டு விரைவில் தடுக்கப்படும், நிறுத்தப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன். இந்த அடிப்படையில் விவரங்கள் இருக்கிற காரணத்தால் ஒத்திவைப்பு தீர்மானத்திற்கு அவசியமில்லை என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இப்பொருள் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்ற காரணத்தால். இத்தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

## (ஆ) கோவை மாவட்டத்தில் 100-ம் நெம்பர் நூல் கிடைக்காமையால் கைத்தறி நெசவாளர்களின் அல்லல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். கே. பழனிசாமி அவர்கள் கைத்தறி நெசவாளர்கள் பிரச்னை பற்றி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். சபையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அளவுக்கு இது எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி விளக்குவார் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: கோயம்புத்தூர் ஜில்லாவில் 100 நெம்பர் யார்ன் இன்றைய தினம் கிடைக்காமல் மிகவும் கைத்தறி நெசவாளர்கள் கஷ்டப் படுகிறார்கள். குறிப்பாக கோயம்புத்தூர் ஜில்லா என்று சொன்னால் சூலூர், கோயம்புத்தூர், ஈரோடு தாலுக்காக்களில் பெருவாரியான நெசவாளர்கள் இதை நம்பித்தான் இருக்கிறார்கள். 20 ஆயிரம் கைத்தறி நெசவாளர்களுக்கு வேலையில்லை என்றால் 1 லட்சம் குடும்பங்களுக்கு ரொம்பவும் கஷ்டமான நிலைமை. நூல் கிடைக்கவில்லை. மில் முதலாளிகளின் கூட 2 கோடி ரூபாய்க்கு பெறுமான நூல் தேக்கமிருக்கிறது. சர்க்கார் நடவடிக்கை எடுக்கத் தவறிய காரணத்தால் தான் இந்த நூலை எடுத்து அவர்களுக்கு கொடுக்காத காரணமாக தேக்கமிருக்கிறது என்றும், எங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்றும் கூறுகிறார்கள், ஆகவே, சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்க

வேண்டுமென்று சொல்லியும் கூட சர்க்கார் இது வரையில் எடுத்து அவர்களுக்கு சரியான வினியோகம் செய்யாதிருப்பதை இந்த சபையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே ஆலைகளிலே ஏராளமான நூல்கள் இருந்தும், அதை விற்கக் கூடிய அதிகாரம் மத்திய அரசினுடைய டெக்ஸ்டைல் கமிஷனரால் தரப்பட வேண்டுமென்றும், அதைப் போல அதனுடைய விலையை நிர்ணயிக்கக் கூடிய அதிகாரம் அவரால் தரப்பட வேண்டுமென்று சட்டப்படி உண்மையாகும். அது மாறி மாறி வருகிறது. 12—2—1974-ந் தேதி அன்று விலைக் கட்டுப்பாடு நீக்கப்பட்டது என்ற உத்திரவை டெக்ஸ்டைல் கமிஷனர் அறிவித்தார்கள். பிப்ரவரி மாதம் அறிவிக்கப்பட்ட பின்னால் விலை கட்டுப்பாடு இல்லாமல் நூலை மட்டும் நாம் வினியோகிக்க வாய்ப்பிருக்கிறது என்று தெரிவித்தார்கள். இப்பொழுது அதையும் சென்ற மாதம் எடுத்துவிட்டார்கள். ஆகவே டெக்ஸ்டைல் கமிஷனரின் உத்திரவு விலை கட்டுப்பாடு இல்லாமல் நாம் நூலை வாங்கலாம் என்றும் அது வந்து சில நாட்களுக்காக அந்தக் கட்டுப்பாடும் இல்லை என்று வந்துவிட்டது. நம்மைப் பொறுத்த வரையில் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம். இதுபற்றி ஏற்கனவே இந்த மாமன்றத்தில் பல முறை விவாதிக்கப்பட்டிருக்கிறது.

இருந்தாலும், நம்மால் இயன்ற அளவுக்கு மாநில அரசு ஆலை உரிமையாளர்களையெல்லாம் அழைத்து எந்த அளவுக்கு நூல் வினியோகத்தைச் சீர்படுத்தலாம் என்பதை பரிசீலித்து வருகிறோம். நம்முடைய அரசாங்க ஆலைகள், கூட்டுறவு ஆலைகளைப் பொறுத்த வரையில் எப்பொழுதும் கூட்டுறவுத் துறையிலே தேவையான நூலை நமக்கு கிடைக்க முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகிறோம். தனியார் துறையைப் பற்றிய அந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கூறி அனுமதி மறுக்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு

### (அ) சீர்காழி தாலுக்காவில் தண்ணீர் இன்மையால் குள்ளக்கார் பயிர் சாகுபடி பாதிப்பு குறித்து.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் சீர்காழி தாலுக்காவில் கடந்த சில நாட்களாக தண்ணீர் இல்லாத காரணத்தால் சுமார் 60,000 ஏக்கராவில் பயிரிடப்பட்டுள்ள குள்ளக்கார் என்ற பயிர்



மிகுந்த அளவில் பாதிக்கப்பட்டுள்ளது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இவ்வாண்டு மேட்டூர் நீர்த்தேக்கம் 12—2—1974 அன்று பாசனத்திற்கு மூடப்பட்டது. அதன்பிறகு கோடை காலப் பயிர்களுக்காக விநாடிக்கு சுமார் 600 முதல் 1,000 கன அடி வரை தண்ணீர் விடப்படுகிறது. இந்த நீரால் சேலம்-திருச்சி மாவட்டங்களில் உள்ள காவிரி கால்வாய்களின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள கோடைக்காலப் பயிர்களும், கீழணையின்கீழ் உள்ள குள்ளக்கார் பயிர்களும் பயனடைகின்றன.

குள்ளக்கார் சாகுபடி, தென்னாற்காடு மாவட்டத்தில் சேத்தியாத் தோப்பு அணையின் கீழும், தென்னாற்காடு மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களிலுள்ள கீழணைக் கால்வாய்களிலும் அனுமதிக்கப்படுகிறது. இவ்வாண்டு அனுமதிக்கப்பட்ட பரப்பு வருமாறு.

| | | |
|---|---|---|
| தென்னாற்காடு : சேத்தியாத்தோப்பு அணை | 4,000 | ஏக்கர். |
| கீழணைக் கால்வாய்கள் | 6,000 | ஏக்கர். |
| | 10,000 | ஏக்கர். |
| தஞ்சாவூர் கீழணைக் கால்வாய்கள் | 3,500 | ஏக்கர். |

தஞ்சாவூர் மாவட்டம், சீர்காழி தாலுக்காவில் கல்லணைன்கீழ் உள்ள மொத்தப் பாசனப் பரப்பு சுமார் 31,000 ஏக்கர்தான். அதில் 3,500 ஏக்கரில் மட்டும்தான் குள்ளக்கார் சாகுபடி அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆண்டு, விவசாயிகள் தங்கள் சொந்தப் பொறுப்பிலேயே சுமார் 8,000 ஏக்கரில் குள்ளக்கார் பயிர் செய்திருக்கிறார்கள். இருந்த போதிலும் இந்தப் பரப்பு முழுவதற்கும் பாசன வசதி அளிக்கப்படுகிறது. பொதுப்பணித் துறையின் உதவிப் பொறியாளர் 21—3—1974 அன்று இந்தப் பகுதிகளைப் பார்வையிட்டு, போதிய தண்ணீர் வசதி அளித்திருப்பதாகக் கூறியுள்ளார்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3,500 ஏக்கர் மாத்திரந்தான் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் வடிவேல் அவர்களுக்கு அங்கிருந்து தந்தி அனுப்பியிருக்கிறார்கள். எனக்கும் அங்கிருக்கின்ற நமது கட்சியின் சார்பாகக் கடிதங்கள் வந்திருக்கின்றன. 60,000 ஏக்கர் என்று அங்கே

சொன்னார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் தருகிற தகவலை ஏற்றுக்கொள்கிறேன். சீர்காழி தாலுகாவில் சரியான முறையில் தண்ணீர் கிடைக்காமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கிணறுகளுக்கு மின்சார சப்ளையும் கிடைக்கவில்லை. மின்சார இலாகா இந்த அமைச்சருடைய துறையில் 'வர வில்லை என்று சொன்னாலும் முழுமையாக அந்தப் பகுதி பாதிக்கப்படாத அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நான் விவரமாகப் படித்தேன். அங்கு பயிரிடுவதற்காக இருக்கக்கூடிய மொத்தப் பரப்பே 31,000 ஏக்கர்தான். 60,000 ஏக்கர் அல்ல. 3,500 ஏக்கர் பாதிக்கப்பட்டதாகச் சொல்லவில்லை. 3,500 ஏக்கரில் மட்டுந்தான் குள்ளக்கார் சாகுபடி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது என்று கூறினேன். ஆனால் சாகுபடியாளர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பில் 8,000 ஏக்கரில் குள்ளக்கார் சாகுபடி செய்திருக்கிறார்கள். அப்படி இருந்தும் அந்த 8,000 ஏக்கருக்கும் சாகுபடிக்குப் போதிய தண்ணீர் கொடுக்கப்பட்டிருப்பதாகத்தான் அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. மேற்கொண்டு அங்கத்தினர் அவர்கள் சொன்னதைப்பற்றி விசாரிக்கிறேன்.

(ஆ) விசையேற்றங்களுக்கு மின்சாரம் கிடைக்காத விவசாயிகள் சாகுபடி செய்ய இயலாமையும் அவர்களிடமிருந்து கடன் வசூலை நிறுத்தி வைக்க வேண்டியதன் அவசியமும் குறித்து.

**திரு. சோ. அழகர்சாமி :** செங்கற்பட்டு மாவட்டத்தில் உலக பாங்க் கடன் வசதித் திட்டத்தின்கீழ் கடன் பெற்று கிணறு வெட்டி பம்ப் செட் பொருத்திய ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு மின்சப்ளை கிடைக்காததால் சாகுபடி செய்து பலன் பெறாத விவசாயிகளிடம் கடன் வசூலுக்காக அரசு ஜப்தி நடவடிக்கை எடுப்பதால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைப் போக்கி பலன் பெறும் வரை கடன் வசூலை நிறுத்திவைக்க வேண்டிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** தலைவரவர்களே, கடன் வாங்கியவர்களிடமிருந்து (விசையேற்றங்களுக்கு மின் இணைப்புப் பெறாதவர்களிடமிருந்து) நிலுவைகளை வசூலிப்பது குறித்து செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள தொடக்க நிலவள வங்கிகள் வலுக்கட்டாய நடவடிக்கைகள் ஏதும் மேற்கொண்டுள்ளதாக இதுவரை கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை என்று செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். மேலும் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாத நேர்வுகளில், கடன்



நிலுவைகளை வசூலிப்பது ஒத்திப் போடப்பட வேண்டுமென்றும், கீழ்க்காணும் நேர்வுகளில் மேற்கொண்டும் ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரையில் வலுக்கட்டாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக்கூடாதென்றும் சென்னை, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் வங்கிகளுக்கு ஏற்கனவே கட்டளையிட்டுள்ளார் :—

(அ) மேற்சொன்ன கட்டளைகளை முன்னிட்டு மேற்கொண்டும் கடன்கள் வழங்கப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் ;

(ஆ) கடன்கள் வழங்கப்பட்டு, ஆனால் நிறுவப்பட்ட மின்சார மோட்டார்களுக்கு, மின் இணைப்புக் கொடுக்கப்படாமலிருந்தால்;

ஆயினும், கடன் வாங்கியவர்கள் கடன் செலுத்தும் நிலையில் இருந்தால், மேற்சொன்ன வகைகளின் நேர்வில் வலுக்கட்டாய நடவடிக்கை எடுக்காமலேயே வசூல் செய்வதற்கு ஆட்சேபணை ஏதுமில்லை என்றும் பதிவாளர் கட்டளையிட்டுள்ளார்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் அனைத்து நாட்டு வளர்ச்சிச் சங்கத் திட்டத்தையும் வேளாண்மை மறு நிதியுதவிக் கழகத் திட்டங்களையும் செயல்படுத்தும் தொடக்க நிலவள வங்கிகள் யாவும் மேற்சொன்ன கட்டளைகளைப் பின்பற்றுமாறு ஏற்கெனவே அவற்றிக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜப்தி நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள். செங்கை மாவட்ட விவசாயிகளிடத்திலிருந்து எனக்கு இரண்டு கடிதங்கள் வந்திருக்கின்றன. ஜப்தி நடவடிக்கை காரியங்களில் இறங்கியிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. மின்சாரம் ஒருசில இடங்களில் விட்டு விட்டுக் கொடுக்கப்படுகிறது. பொதுவாக மின்சாரம் தொடர்ச்சியாகக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்கள் பலன் பெற்று கடனைத் திருப்பிக் கொடுக்க முடியும். வசதியுள்ளவர்களிடமிருந்து வசூலிப்பதைப் பற்றிக் கவலையில்லை. மற்ற விவசாயிகளிடமிருந்து வசூலிப்பதை அவர்கள் பலன் பெறும் வரையில் பொறுத்திருந்து அதற்குப் பிறகு வசூலித்துக்கொள்ள வேண்டும். ஆகவே, ஜப்தி நடவடிக்கை இப்போது எடுக்கக்கூடாது என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரங்களைத் தந்தால் விசாரித்து நடவடிக்கை எடுக்கிறேன். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதை அடிப்படையாக வைத்து வசதி

படைத்தவர்கள் கூட கொடுக்க முன்வரவில்லை. கோவை மாவட்டத்தில் ஒரு விவசாயி கட்ட முன்வரவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அதைப்பற்றி விசாரித்தபோது அவர் பெரிய மிராசுதாரராக இருக்கிறார் என்பது தெரிய வந்தது. அப்பேர்பட்டவர்களும் கொடுக்க முன்வர மாட்டேன் என்கிறார்கள். கோவை மாவட்டத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் பெரிய மிராசுதாரர்களாக இருப்பவர்கள்கூட கொடுக்க முன்வரவில்லை. ஆகவே, நியாயமான குறைகளைச் சொன்னால் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். வசதி உடையவர்கள் கட்டாமல் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் அவர்கள் கட்ட வேண்டுமென்று கட்டாயப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## (4) அறிவிப்புகள்.

### (அ) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டப் பேரவை 193 (1)-வது விதியின்யிகீழ் பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை 1974-75-ம் ஆண்டின் அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன் :—

1. மாண்புமிகு முதலமைச்சர்.
2. மாண்புமிகு பேரவை முன்னவர்.
3. மாண்புமிகு திரு. க. அன்பழகன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.
4. மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து, அரிசன நலத் துறை அமைச்சர்.
5. மாண்புமிகு திரு. செ. மாதவன், தொழிற் துறை அமைச்சர்.
6. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.
7. திரு. து. ப. அழகமுத்து, தலைமை அரசுக் கொறடா.
8. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.
9. திரு. க. உரொ. எட்மண்ட்.
10. திரு. ஏ. ஆர். பெருமாள்.
11. திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்.
12. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.





13. திரு. பி. வெங்கடசாமி.
14. திரு. கே. டி. கே. தங்கமணி.
15. திரு. மணலி சி. கந்தசாமி.
16. திரு. இ. எஸ். தியாகராஜன்.

பேரவையின் 193 (1)-வது விதியின் கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அலுவல் சாரா முறையாக, இக்குழுவின் தலைவர் ஆவார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு கைத்தறித் துணிகள் (உற்பத்தி பகிர்ந்து அளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்கள் . .

## 5. நடைமுறைக் கேள்விகள்.

**(அ) தமிழ் நாடு 1974-ம் ஆண்டு கைத்தறித் துணிகள் (உறபத்தி பகிர்ந்து அளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு மத்திய சட்டத்திற்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் முரணாக இருப்பதாகவும் அதனால் அதை சட்டப் பேரவை விவாதிப்பது முறைதானா என்பது குறித்து.**

DR. H. V. HANDE : Sir, on a point of order. Before the Bill is introduced, I want to raise a point of order. Sir, with your permission, I want to raise the point of order, because members are allowed to raise points of order, if the Bill sought to be introduced contravenes any Article of the Constitution; and it is this way. Article 251 clearly mentions that any Bill of the State should not be repugnant to the Central Act. In this particular Bill, in the Statement of Objects and Reasons, it has been mentioned that this Billalmost replaces the Cotton Textiles (Control) Order in force under the Essential Commodities Act of 1955 which is a Central Act. This replaces one of the orders passed in 1948, the provisions of which are under the 1955 Act. This order is a child of the original Central Act 10 of 1955. Now the Hon. Minister is coming here to have a State Act, which directly contravenes the Central Act. It is clearly said that ' nothing in articles 249 and 250 shall restrict the power of the Legislature of a State to make any law which under this Constitution it has power to make ', but where there is inconsistency between the Parliament law and State law,

if any provision of the law made by the State is repugnant to the law made by Parliament, then the law of Parliament shall prevail and the law made by the State shall to the extent of the repugnancy, but so long only as the law made by Parliament continues to have effect, be inoperative.

Then Article 254 further explains it and strengthens Article 251. Therefore, in my opinion, this might contravene Articles 251 and 254 of the Constitution. If the Hon. Minister explains to the House that it does not contravene these two Articles and that an amendment has been made in the Central Act to see that there is no repugnancy between the Central and State Acts, the House is perfectly at liberty to bring it before the House. I have brought this matter to the notice of the Hon. Speaker and Members so that they can consider whether it is in order for this House to discuss it. This is my point of order.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ்நாட்டில் உள்ள இருபது லட்சம் நெசவாளர்களின் நன்மைக்காக கைத்தறி உற்பத்தி, அவர்களுக்குத் தேவையான நூலை கொள்முதல் செய்து கொடுப்பது, கைத்தறிக்கு என்று சில ரகங்களை ஒதுக்குவது என்ற நல்ல நோக்கத்தில்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் இதை எதிர்க்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

அரசியல் சட்டப் பிரச்னைகளை எழுப்பினார்கள். ஒரு பகுதியை அவர்கள் படித்தார்கள். கீழே சென்று பின் பகுதியை அவர்கள் படித்திருந்தால் விளக்கம் அதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கன்கரன்ட் ஜூரிஸ்டிக்ஷன்-ல் வருகிற பொருள்கள் பற்றி மத்திய அரசு சட்டங்கள் இயற்றினால், அந்தச் சட்டங்கள் நம்மைக் கட்டுப்படுத்தும். அந்தச் சட்டத்திற்குப் பின்னால் மாநில அரசுகள் சட்டம் இயற்றுமானால் அந்தச் சட்டங்கள்—குடியரசுத் என்பது அரசியல் அமைப்புச் சட்டத்திலுள்ள விதி. ஆகவே இதை ஜாயின்ட் மத்திய அரசின் சட்டத்தை மீறி செல்லும் அந்த மாநில எல்லைக்குள்ளாக தலைவரின் அனுமதி பெறுமானால்—அந்தச் சட்டம்தான், மாநிலச் சட்டம்தான்,



செலக்ட் கமிட்டிக்கு விடலாம் என்று கருதி இருக்கிறோம். குடியரசுத் தலைவரின் அனுமதியைப் பெறுவோமானால் நம் கொள்கை, தமிழ்நாட்டு மக்கள் ஏற்கும் கொள்கை, எல்லாக் கட்சிகளும் ஏற்கும் கொள்கை, இது குடியரசுத் தலைவர் ஒப்புதலைப் பெறுமானால் அவர்கள் சொல்கிற ஆட்சேபம் வராது, இந்தச் சட்டம்தான் செல்லும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** முன்கூட்டியே ஜனாதிபதி அவர்களின் கன்கரன்ஸை எடுத்துக்கொண்டால் இந்தச் சிக்கல் இருக்காது என்பதற்காகத்தான் சொன்னேன். கன்கரன்ஸ் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று அவர்கள் சொல்லவில்லை. இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் நான் அதை வரவேற்கிறேன். கோர்ட்டுக்கு சென்று, கான்ஸ்டிட்யூஷனல் ப்ரொவிஷன்களை வைத்து ஸ்ட்ராக் டவுன் செய்யக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். நெசவாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டியதுதான். இதை ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு விடுவது வரவேற்கத்தக்கது. சிக்கல் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். கன்கரன்ஸ் வாங்கிக் கொள்ளவில்லை என்று சொன்னார்கள். இது கன்கரன்ட் லிஸ்டில் வருவதால் ஜனாதிபதியின் அனுமதியை முன்கூட்டியே பெறவேண்டிய நிலை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்தச் சட்டத்தை முதலாவதாக ஆட்சேபித்தாலும் இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தை எதிர்க்கவில்லை. நெசவாளர்களுக்காகத்தான் நாங்களும் இருக்கிறோம் என்று உறுதிப்படுத்தினார்கள். அதில் மகிழ்ச்சி.

அவர்கள் புதிய ஒரு பிரச்னையை எழுப்பினார்கள். இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டுவரும்போது மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத்தான் நாம் சட்டம் கொண்டுவரவேண்டுமா என்பது ஒரு புதிய பிரச்னை. இங்கேயே இந்த மன்றத்தில் நான் பலமுறை விளக்கியிருக்கிறேன். அரசியலமைப்புச் சட்டப்படி மத்திய அரசினுடைய அனுமதி பெற்றுத்தான் கொண்டுவரவேண்டும் என்பது விதி அல்ல. இருந்தாலும் நாம் ரூல் ஆப் கன்வீனியன்ஸ்-படி முதலில் அனுமதி பெறலாம் என்று முடிவு எடுத்திருக்கிறோம். இருந்தாலும் இதுபோன்ற சட்டங்கள் ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்குப் போவதால் நீண்ட நாட்களுக்குப் பிறகுதான் மன்றத்தின் பரிசீலனைக்கு கொண்டுவரப் போகிறோம். ஆகவே முன்கூட்டியே அனுமதி பெறாமலேயே சட்டத்தைப் பரிசீலிப்பது தவறு அல்ல என்ற கொள்கைப்படி முடிவு எடுத்திருக்கிறோம்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் ஒரு கொள்கையை மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகிறோம். ஏ.ஆர்.வி. போர்சின் அடிப்படையில் கூட ஒரு கொள்கையை வலியுறுத்திக் கொண்டுவருகிறோம். கொள்கை அடிப்படையில் ஒரு மாநிலம் கன்கரன்ட் ஜூரிஸ்டிக்ஷனுக்கு அதிகாரம் இருந்து அந்தக் கொள்கையை நிறைவேற்ற ஒரு சட்டம் கொண்டு வந்தால் மத்திய அரசு அனுமதி கட்டாயம் கொடுத்தாக வேண்டும், அவர்கள் அனுமதி கொடுத்தால் தான் சட்டம் நிறைவேறும் என்ற நிலை இருக்கக் கூடாது என்ற கருத்தை நாம் சொல்லி வருகிறோம்.

கைத்தறி நெசவாளர்கள் பொறுத்து எந்தக் கொள்கை வேண்டும் என்று நிர்ணயிக்கிற பொறுப்பு இந்த மன்றத்திற்குத்தான், மத்திய அரசுக்குக் கிடையாது என்ற ஒரு நிலையை எடுத்து வந்திருக்கிறோம். ஆகவே இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், கொள்கை அளவில், மத்திய அரசினுடைய அனுமதி இல்லாமல் கொண்டுவரலாம், இதை நிறைவேற்றித் தருவது இந்த மன்றத்தின் பொறுப்பு. அரசியல் சட்டப்படி குடியரசுத் தலைவர் அவர்கள் இதற்கு அனுமதி தருவார்கள் என்ற நம்பிக்கை, தாவேண்டுமென்ற ஒரு முடிவை இந்த அரசு தெரிவிக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பாயிண்ட் ஆப் ஆர்டர். தொழில் அமைச்சர் அவர்கள் பேசுவதைப் பார்த்தால் It seems to be a confrontation with the Centre. மத்திய அரசு என்ன செய்கிறது என்று பார்க்கலாம் என்று சவால் விடுவதுமாதிரி இருக்கிறதே தவிர உண்மை நோக்கம் கொள்கை அடிப்படையில் நெசவாளர்களுக்கு இப்படி எல்லாம் செய்யப்போகிறோம் என்ற எண்ணத்தை முதலில் மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்து . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல. இதைக் கொண்டுவரலாமா கூடாதா என்பதுபற்றித்தான் பாயிண்ட் ஆப் ஆர்டரை அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். உறுப்பினர்கள் நோக்கத்தைப்பற்றிச் சொல்லக்கூடாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நாங்கள் இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டோம். ஆனால் நாங்கள் என்ன செய்வது, மத்திய அரசாங்கம் கன்கரன்ஸ் தரவில்லை என்று சொல்லி இவர்களாகவே காலதாமதம் செய்து இதை நிறைவேற்ற முடியாமல் மத்திய அரசாங்கம் எங்கள் கைகளைக் கட்டிப்



போட்டு விட்டது என்று சொல்லி தவறை அவர்கள் மீது தூக்கிப் போட இருக்கிறார்கள். முன்னரே விவாதித்து இதைக் கொண்டுவருவதில் என்ன கஷ்டம் ?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பொதுவாக கன்கரன்ட் ஜூரிஸ்டிக்ஷன் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். இதற்கு முன்னதாகவே கன்கரன்ஸை வாங்கியிருக்கலாம் அல்லது பின்னால் அவர்கள் அதை ஏற்றுக்கொள்வது என்ற நிலை ஏற்படலாம். ஏற்கனவே ஒரு மசோதாவை ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு விட்டு கடைசியில் பிரசிடென்ட் அவர்கள் ஏற்றுக்கொண்டு சில திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று கூடச் சொன்னார்கள். ஆகவே அந்த முறையில் ஏற்கனவே ஒரு ப்ரிஸிடென்ட் இருக்கிறது. ஆகவே இப்படிக் கொண்டுவருவதில் அவ்வளவு தவறு இல்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் என் உரையில் யாருக்கும் சவால் விடவில்லை. மத்திய அரசு என்று சொன்னவுடனே சவால் நினைவிற்கு வருகிறது. அவர்கள் வாதாடுவதைப் பார்த்தால் மத்திய அரசு இந்தச் சட்டத்திற்கு அனுமதி கொடுக்காது, கொடுக்க வேண்டாம் என்று அவர்கள் ஆலோசனை ஏதாவதும் சொல்வார்களோ, அப்போது கன்கரன்ஸ் வராதோ என்று சந்தேகப்படுகிறோம்.

நிச்சயமாக நான் நம்புகிறேன், எல்லாக் கட்சிகளும், நிச்சயம் அவர்கள் சார்ந்த கட்சியும் இந்தச் சட்டத்தை ஆதரிக்கும் என்று.

முன்கூட்டியே கலந்தேனா என்று கேட்டார்கள். சட்டோபாத்தியாயா என்று ஒரு அமைச்சர் இருக்கிறார்கள். அவர்களுடன் மணிக்கணக்காக இதுபற்றி விவாதித்தோம். இது சம்பந்தமாக ஒரு குழு கூட மத்திய அரசு அமைத்திருக்கிறது. அந்தக் குழு எங்களிடம் விவாதித்தது. அவர்களிடம் கொள்கையைப்பற்றிச் சொல்லியிருக்கிறோம். அகில இந்தியாவில் இந்த மாநிலத்தில் தான் நெசவாளர்களுக்காக ஒரு திட்டவட்டமான தெளிவான ஒரு கொள்கையைச் சொல்லி சட்டரீதியாகக் கொண்டுவர ஆசைப்படுவது. அதை எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள். மற்ற மாநிலங்களில் உள்ள மற்றக் கட்சிக்காரர்களும் ஏற்றுக்கொண்டார்கள்.

[திரு. செ. மாதவன்] [1974 ஏப்ரல் 9

மத்திய அரசுக்கு கொஞ்சம் தைரியம் வரவேண்டும், துணிவு வரவேண்டும். ஆலை முதலாளிகள் இருப்பார்கள். எதிர்ப்பார்பார்கள். 206 ஆலை முதலாளிகள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். நெசவாளர்கள் 20 லட்சம் பேர்கள். அந்த நெசவாளர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பது நம் ஆசை. மத்திய அரசு நிச்சயம் நம்மோடு ஒத்துழைக்கும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அரசியலமைப்புச் சட்டப்படி இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டுவரலாமா என்பதைப் பற்றி பேரவைத் தலைவர் எந்தவிதமான தீர்ப்பும் அளிப்பதில்லை என்று முடிவு எடுத்துக்கொண்டோம்.

'It is the accepted practice in Lok Sabha that the Speaker does not give any ruling on a point of order which raises the question whether a Bill is constitutionally within the legislative competence of the House. It is for the House itself to decide such matters not on a separate motion to that effect but indirectly on the motion that is then before the House in regard to a Bill.'

என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். நமது அவையில் 1956-ல் இப்படிப்பட்ட ஒரு கேள்வி எழுப்பப்பட்டு அப்போது பேரவைத் தலைவராக இருந்த திரு. சிவ ஷண்முகம் பிள்ளை அவர்கள் If it has been reserved for the consideration of the President..............

என்று தலைவர் அனுமதி பெற்று கொண்டுவரக்கூடாதா என்ற கேள்வி எழுப்பப்பட்டு அவர்கள் சொல்கிறார்கள். It did not prevent the state legislative from passing such a legislation.

என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். ஆகவே, இதில் எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

### (6) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு கைத்தறித் துணிகள் (உற்பத்தி, பகிர்ந்து அளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு கைத்தறித் துணிகள் (உற்பத்தி, பகிர்ந்து அளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.



1974 ஏப்ரல் 9]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

### (4) அறிவிப்புகள்-தொடர்ச்சி.

### (ஆ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ் நாடு 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(முற்பகல் 10-30)

### (6) அரசினர் சட்ட முன்வடிவுகள்-தொடர்ச்சி.

### (ஆ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(இ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1974-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

5. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (இரண்டாம்) திருத்த சட்ட முன்வடிவு அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாக இருப்பதாகக் கூறப்பட்டது குறித்தும் மூன்று திருத்தங்கள் ஒன்றாகக் கொண்டு வரப்பட்டிருப்பது குறித்தும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** பாயிண்ட் ஆப் ஆர்டர். ஒரு முக்கியமான விஷயம் இந்த மன்றத்தின் கவனத்திற்குக்கொண்டு வர விரும்புகிறேன். இதிலே மூன்று திருத்தங்கள் கொடுத்து இருக்கிறார்கள். முதலாவது, செகண்ட் அமெண்ட்மெண்ட், இரண்டாவது தேர்ட் அமெண்ட்மெண்ட், மூன்றாவது போர்த் அமெண்ட்மெண்ட் என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஒரே தொடரில் ஒரு சபையில் 3 திருத்தங்கள் கொண்டு வந்தது இது வரையில் கிடையாது. ஒரே தொடரில் ஒரே கூட்டத்தில் 3 திருத்தங்கள் கொண்டு வந்தது இதுவரையில் பிரிசிடென்ட் கிடையாது. நேற்று கூட துருவித் துருவிப் பார்த்தேன். ஒரு காம்பிரஹென்சிவ் சட்டமாகத்தான் கொண்டு வருவார்கள். இங்கே இதிலே கூட கான்ஸ்டிட்யூஷனல் ப்ரொவிஷனுக்கு 'அல்ட்ரா வயர்ஸாக' . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத்தான் தீர்ப்பு ஏற்கனவே கொடுத்தாகிவிட்டது. அது இதற்கும் பொருந்தும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கும், இந்த மன்ற உறுப்பினர்களுக்கும் சொல்கிறேன். கான்ஸ்டிட்யூஷனில் 290 (ஏ) பிரிவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்—

A sum of forty-six lakhs and fifty thousand rupees shall be charged on and paid out of the Consolidated Fund of the State of Kerala every year to the Travancore Devaswom Fund; and a sum of thirteen lakhs and fifty thousand rupees shall be charged on, and paid out of the Consolidated Fund of the State of Tamil Nadu every year to the Devaswom Fund established in that State,





for the maintenance of Hindu temples and shrines in the territories transferred to that State on the 1st day of November 1956, from the State of Travancore-Cochin.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கான்ஸ்டிட்யூஷன்படி அந்தச் சட்டம் கொண்டுவரலாமா கூடாதா என்பதைப்பற்றி ஒரு தீர்ப்பு ஏற்கனவே கொடுத்து விட்டோம். அதுவே இதற்கும் பொருந்தும். முன்னே எழுப்பினீர்களே 3 திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று அதைப் பற்றி மட்டும் சொல்லுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** 290 (ஏ) வில் 7-வது திருத்தமாகக் கொண்டு வந்து தெளிவாகக் கொடுத்து இருக்கிறார்கள். தேவஸ்வம் போர்ட்டுக்கு எந்த அளவுக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குக் கூட இந்தமாதிரி சென்டிரல் ஆக்ட்ஸ் கொண்டு வரவேண்டுமென்ற நிலை இருக்கிறது. நீங்கள் என்ன சொன்னாலும் நான் ஏற்றுக்கொள்கிறேன். இருப்பினும் உள்ள நிலைமை மன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும், தலைவரின் கவனத்திற்கும் கொண்டு வரவேண்டியது என்னுடைய கடமையாகும். எனக்குத் தெரிந்த வரையில் இது கான்ஸ்டிட்யூஷனலாக சரியல்ல.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அரசியல் அமைப்புச் சட்ட ஷரத்து 290 (ஏ) பற்றி மாண்புமிகு உறுப்பினர் விளக்கம் கூறியிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கத்தின் முன் அனுமதி பெற்றுத்தான் இந்தச் சட்டம் வரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லி இருக்கிறார்கள். ரூ. 13½ லட்சம் கன்னியாகுமரி தேவஸ்வம் போர்ட்டுக்குக் கொடுக்கப்பட்டது இனி ஒரு குழுவிற்கு கொடுக்க வேண்டுமென்று சட்டத் திருத்தம் செய்து இருக்கிறார்கள். இதிலே சட்டச்சிக்கல் ஏற்படாது என்று கருதுகிறேன். ஒரு வேளை கோர்ட்டிலே பின்னால் என்ன சொல்வார்களோ தெரியாது. எனக்குத் தெரிந்த வரையில், என்னுடைய சட்ட அறிவுக்கு உட்பட்ட வரையில் இதிலே எந்தவிதமான சட்டச் சிக்கலும் இல்லை என்ற கருத்தை தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், டாக்டர் ஹாண்டே எழுப்பிய பிரச்னை மீது நீங்கள் ஒரு டைரக்ஷன் கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறேன். காரணம் ஒரு குறிப்பிட்ட சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வருகிறோம். அந்தத் திருத்தங்கள் 3 திருத்தங்கள் ஒரே நாளில்

கொண்டு வருவது என்றால், 3 திருத்தங்களில் 3 விதமான கருத்துக்கள் இருந்தாலும், அதனுடைய ஆப்ஜக்ட் அண்டு ரீசன்ஸ் இன்னின்ன என்று சொல்லி ஒரேமாதிரியாகத் திருத்தம் கொண்டு வரலாம். ஆனால் ஏதாவது ஒரு மசோதாவில் மத்திய சர்க்காரின் கன்கரன்ஸ் தேவை என்று சொன்னால் அதை பின்னடி கொண்டு வரலாம். இதிலே பார்க்கிறபோது குறிப்பாக 2 திருத்தங்களுக்கு மத்திய சர்க்காரின் கன்கரன்ஸ் தேவை இல்லை. ஆகவே,

I think there is defective drafting in the Law Department. என்ற அளவுக்கு தாங்கள் சொல்ல வேண்டும். நீங்கள் கொஞ்சம் டைரக்ஷன் கொடுக்க வேண்டும். இந்தமாதிரி மசோதாக்கள் வருகிறபோது திருத்தங்கள். வருகிறபோது ஒவ்வொரு செக்ஷனுக்கும் ஒரு திருத்தம் கொண்டு வரவேண்டுமென்றால், தனித் தனி தீரமானமாகக் கொண்டு வராமல் ஒரே தீர்மானமாக, திருத்தமாகக் கொண்டு வருவது பொருத்தமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரக்கூடாது என்பதற்கு ஏதாவது விதி முறை இருக்கிறதா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நீங்கள் டைரக்ஷன் கொடுக்கலாம். இன்று ஒரு திருத்தம், நாளைக்கு ஒரு திருத்தம் என்று கொண்டு வந்தால் ஒரே தொடரில் இரண்டு மூன்று திருத்தங்கள் ஒரு சட்டத்திற்குக் கொண்டு வந்தால் அது நம் நடவடிக்கைகளைப் பாதிப்பதாக இருக்கும். ஒரே சட்டத்திற்கு மூன்று திருத்தங்கள், தனித் தனியாக வருவது என்பது புதுமையாக இருக்கிறது என்று நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் நானும் சொல்ல விரும்புகிறேன். ஒரே சட்டத்தில் 3 திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படி ஏதாகிலும் பெரிய மாறுதல் அவற்றிலே இருக்கிறதா என்றால் இல்லை. சின்னச் சின்ன திருத்தங்களுக்குக் கூட சட்டத்துறை இப்படிப்பட்ட முறையில் தனித்தனியே திருத்தங்களைக் கொண்டு வருகிறபோது சட்டமன்றத்தின் நேரம் வீணாகிறது.

ஆகவே, இப்படிப்பட்ட திருத்தங்களைக் கொண்டு ஒட்டுமொத்தமாக ஒரு 'காம்பிரஹென்சிவ் லெஜிஸ்லேஷன்' கொண்டு வந்தால் சிறந்தது, முழுமையான ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வந்தால் நல்லது என்று சொல்லிக்கொள்



கிறேன். குடியிருப்புச் சட்டமாகட்டும், இந்து அறநிலையச் சட்டமாக இருக்கட்டும், எல்லாவற்றிற்கும் முழுமையான முறையில் சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டும். இப்படி பீஸ்மீலாகக் கொண்டு வரக்கூடாது. லாண்ட் ரிபார்ம்ஸிலே ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ஒரு காம்பிரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டு வாருங்கள். இப்படி சின்னச் சின்ன திருத்தங்கள் கொண்டு வருவதன் காரணமாக சட்டத்திலுள்ள சந்துபொந்துகளை அடைக்கும் திறமை குறைந்து விடுகிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF: Sir, you have given your ruling on the constitutional question raised by Dr. H. V. Hande.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஏற்கனவே அதற்கு ரூலிங் கொடுத்துவிட்டேன்.

THIRU M. A. LATHEEF: Dr. Hande raised the question of constitutional validity and you have given your ruling. But here I am on a different point. Here it is a question of legislative cohesion, legislative practice and legislative convenience. In so far as bringing in different amendments are concerned, for legislative cohesion and convenience, you can bring the amendments in the same session. But three different amendments on three different Bills will affect legislative convenience. Therefore, the Chair may give its ruling on that. The other ruling given will not be applicable to this point.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, இப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டுவரலாமா என்பதைப்பற்றி அவர்களே விரிவாக ஒருவருக்கொருவர் பதில் சொல்லியிருக்கிறார்கள். வழக்கறிஞர்களின் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். இதிலே சட்டப்படி எந்தவிதமான குற்றமும் கிடையாது. திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னது போல், ஒரே சட்டத்திற்கு நடவடிக்கை எடுக்கிறபோது, திருத்தம் கொண்டு வருகிறபோது, ஒரே சட்டமாக வந்தால் பரவாயில்லை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். இதிலே உள்ள பிரச்னை எல்லாம் கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டு நீண்டநாளையப் பிரச்னை. இன்று சட்டம் கொண்டு வருகிறோம். ஆகவே, தனியாகக் கொண்டு வருகிறோம். சின்னச் சின்ன திருத்தங்களுக்கு எல்லாம் அவ்வப்போது முடிவு எடுக்கிறோம். இது போன்று சில சமயங்களில்

[திரு. செ. மாதவன்] [1974 ஏப்ரல் 9

இரண்டு மூன்று திருத்தங்கள் ஒன்றாக வந்து விடுகின்றன. முடிவு எடுக்கிற போது தனித்தனியாகக் கொண்டு வருகிறோம். எதிர் காலத்தில் சேர்த்து திருத்தங்களை ஒன்றாகக் கொண்டுவரும் முயற்சி எடுக்கப்படும். கன்னியா குமரி தேவஸ்வம் போர்டு பற்றி தனியாக இருந்தாலும் பொருத்தமாக இருக்கும். மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெற்று, மத்திய சட்டமாக இருப்பதால் தனியாகக் கொண்டுவந்து இருக்கிறோம். இதிலே எந்தவிதமான தவறும் இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் எதிர்காலத்தில் ஒன்றாகக் கொண்டுவரப்படும் என்று சொன்ன விளக்கத்திற்குப் பிறகு, இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

**(இ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, 1974-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறது.

**(ஈ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.



1974 ஏப்ரல் 9]

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறது.

**(உ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறது.

**(ஊ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/74).**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, . . .

### (5) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

**(இ) ஏற்கனவே அனுமதியளிக்கப்பட்ட தொகைக்கும் சேர்த்து 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவில் இரண்டாவது முறையாக ஒட்டு மொத்தமாக அனுமதி கோரியது முறைதானா என்பது குறித்து.**

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்த நிதி ஒதுக்க மசோதாவைக் கொண்டுவருவதற்கு முன்பாக இடைக்கால ஏற்பாடாக 192 கோடி ரூபாய்க்கு இந்தச் சபை அனுமதி அளித்திருக்கிறது. அப்படி ஏற்கனவே அனுமதி அளித்த பிறகு அந்தத் தொகையையும் சேர்த்து, இரண்டாம் தடவையாக ஒட்டுமொத்தமாக இந்த மசோதா

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 ஏப்ரல் 9

வரப்பட்டிருக்கிறது. ஒரு தொகைக்கு இரண்டு தடவைகள் இந்தச் சபையினுடைய அனுமதியைப் பெறுவது, அப்படி ஒரு மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றுவது முறையானதுதானா? அம்மாதிரி செய்யலாமா? முதலிலே 192 கோடி ரூபாய் அனுமதி கொடுத்து ஒரு நிதி ஒதுக்கல் மசோதா இங்கே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்த 192 கோடி ரூபாயையும் கழித்து பாக்கியுள்ள தொகைக்குத்தானே இங்கே அப்ரோப்ரியேஷன் பில் கொண்டு வந்தாக வேண்டும். முதலில் நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டத்திற்கு உள்பட்ட அந்தத் தொகையையும் சேர்த்து இப்பொழுது இங்கே இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது. இது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே அப்படித்தான் இருக்கிறது. அந்தத் தொகையும் உள்ளடக்கித்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இதிலே எந்தவிதமான முறைகேடும் இல்லை.

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்-தொடர்ச்சி.

**(ஊ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1974.)**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஹாண்டே ....

**திரு. என். கே. பழனிசாமி:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இம்மாதிரி அப்ரோப்ரியேஷன் பில்லில் தலைவர்கள்தான் பேசவேண்டும் என்று அசெம்பளி ரூல்ஸில் கிடையாது. முக்கியமான பல பிரச்னைகளைப்பற்றி பேச வேண்டியிருக்கிறது.

ஸ்டாண்டர்டு கிளாத் விலை ஏறியிருக்கிறது. கோதுமை மொத்த வியாபாரத்தைப்பற்றி எல்லாம் பேசவேண்டியிருக்கிறது. எல்லாப் பொருள்களுடைய விலையும் ஏறியிருக்கிறது. இதைப்பற்றி அசெம்பளியில் கிளப்புவதற்கு எங்களுக்கு எந்தவிதமான சந்தர்ப்பமும் கிடையாது. இருக்கக்கூடிய தலைவர்கள் பூராவும் எல்லாவற்றையும்பற்றி அவர்களே பேசிவிட்டு, நாட்களையும் குறைத்து வைத்துக்கொண்டால், எங்களைப் போன்றவர்களுக்கு பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆகவே, இதுபற்றி தங்களுடைய ரூலிங் தேவை.



974 ஏப்ரல் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கட்சியிலுள்ள தலைவர்களுக்கும் உறுப் னர்களுக்கும் இடையே உள்ள விவகாரத்தை இந்த மன்றத்தில் இருப்பவர்கள் ர்க்க முடியாது.

விவாதத்தைத் துவக்குபவருக்கு 15 நிமிஷம், முடித்துவைப்பவருக்கு 15 மிஷம், மற்ற உறுப்பினர்களுக்கு 10 நிமிஷம் என்று இப்படி நேரத்தை டுத்துக்கொள்ள வேண்டும். இந்த நேரத்திற்குள் முடிக்கவேண்டும் என்பதை ல்லா உறுப்பினர்களும் கடைப்பிடிக்க வேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்:** தலைவர் அவர்களே, இங்கே பல பர்களால் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கிளப்பப்படுகிறது. அவர்கள் திலே பேசிவிடுகிறார்கள். கடைசியில் நீங்கள் அது பாயின்ட் ஆப் ஆர்டர் ல்ல என்று தீர்ப்பு சொல்லிவிடுகிறீர்கள். அது மட்டும்தான் இருக்கிறதா ன்று பார்த்தால் அவர்கள் பேசியதும் ரிகார்டில் இருக்கிறது. நான் ங்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், தாங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் ல்ல என்று சொன்னால், அவர்கள் பேசிய பேச்சுக்களும் ரிக்கார்டிலிருந்து டுக்கப்படவேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ன்றையதினம் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக் டிய இந்த மசோதாவை நான் கடுமையாக எதிர்த்து சில வார்த்தைகளைக் ற விரும்புகிறேன்.

நான் இந்த நேரத்தில் நம்முடைய அவையினுடைய கவனத்திற்குக் ாண்டு வரவேண்டிய முக்கியமான ஒரு அம்சம், நிதி ஒதுக்கல் மசோதாவைக் ாண்டு வந்திருக்கிற நேரத்தில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ர்னுடைய பல்வேறு இலாகாக்கள் எந்தமாதிரியாக இயங்குகின்றன என்று று சிந்தித்துப் பார்க்கவேண்டும். பொதுவாக அவர்கள் கீழே இருக்கக் டிய, அவர்கள் தலைமையிலே இயங்குகின்ற அமைச்சர் அவையாக இருந் லும் சரி, பல்வேறு இலாகாக்களாக இருந்தாலும் சரி, இன்றையதினம் ஒரு ப்பமான நிலைமையில் இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. ன் ஏற்கனவே சுட்டிக்காட்டியது போல அமைச்சர் அவைக்குள் கருத்து றுபாடு. அதே நேரத்தில் இந்த இலாகாக்களுடைய தலைவர்கள், ஐ.ஏ.எஸ். திகாரிகள் திடீர் திடீர் என்று மாற்றப்படக்கூடிய ஒரு பயங்கரமான நிலைமை வி வருகிறது.

நம்முடைய நாட்டில் எந்தப் பகுதியிலும், எந்த மாகாணத்திலும்கூட, மத்திய அரசிலும் கூட ஏற்படாத ஒரு நிலைமை பட்ஜெட் செஷன் நடக்கின்ற நேரத்தில் இப்படி ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எந்த இடத்திலும் மாற்றப்படுவது இல்லை. இங்கே மாற்றப்படுவதற்குக் காரணம் என்னவென்றால், நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கு தன்னுடைய இலாகாக்களின்மீது ஒரு பயங்கரமான நம்பிக்கையை இழந்துவிடக்கூடிய ஒரு தன்மை ஏற்பட்டிருக்கிறது என்று நான் திட்டவட்டமாக எடுத்துச் சொல்கிறேன்.

உதாரணமாக இங்கே பட்ஜெட் செஷன் நடக்கின்றபொழுது, மான்யக் கோரிக்கைகள் விவாதிக்கப்படும்பொழுது வெட்டுத் தீர்மானங்களை நாம் கொடுக்கிறோம். அந்த வெட்டுத் தீர்மானங்களுக்கு பதில் தயாரிக்க வேண்டியது இலாகாவினுடைய தலைவர்கள், செயலாளர்களுடைய பொறுப்பு. அது டைரக்டர்கள், செகரடரீஸ் செய்ய வேண்டிய காரியம். அப்படி அவர்கள் தயாரித்துக்கொண்டிருக்கக்கூடிய அந்தக் கட்டத்தில் இப்படி திடீரென்று அவர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன?

அதேமாதிரிதான் எலக்ட்ரிஸிடி போர்டில் கோளாறு. திடீரென்று தலைவர் மாற்றப்பட்டிருக்கிறார். நாங்கள் வேறு வகையில் தகவல்களைச் சேகரித்த நேரத்தில் எங்களுக்குத் தகவல்கள் வருகின்றன. எம். ஜி. ராஜாராம் அவர்கள் எலக்ட்ரிஸிடி போர்டுக்கு புதிய தலைவராக ஆக்கப்பட்டிருக்கிறார்.

Mr. M. G. Raja Ram, I.A.S., in addition to his being First Member, Board of Revenue is appointed Chairman, Tamil Nadu Electricity Board *vice* Mr. A. Padmanabhan, I.A.S.

Mr. A. Padmanabhan is posted to act as Secretary to Government, Health and Family Planning Department *vice* Mr. H. M. Singh, I.A.S. transferred.

The same thing in the Public Works Department also.

இப்படியெல்லாம் அறிவிப்புகள் வந்திருக்கின்றன. ஒரு இலாகாவிற்கும் இன்னொரு இலாகாவிற்கும் சம்பந்தம் கிடையாது. அப்படி சம்பந்தம் இல்லாமல் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. நான் நேரம் இல்லாத காரணத்தினால் எல்லாவற்றையும் சொல்ல முடியவில்லை. ஒரு இலாகாவிலிருந்து இன்னொரு இலாகாவிற்கு சம்பந்தம் இல்லாத வகையில் மாற்றப்படக்கூடிய பயங்கரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.





There is total failure of administration on the part of the Hon. distinguished Chief Minister.

என்று நான் சொல்லவேண்டிய கட்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன். அது ஒரு விஷயம்.

இரண்டாவது இன்னொரு விஷயம். இங்கே பினான்ஸ் கமிஷன் வருகிறது. நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அதை எப்படி அணுகுகிறார்கள்? பினான்ஸ் செகரடரி அவர்கள் அவருக்கு உடந்தையாக இருக்கிறார்கள். அவருடைய உதவியை எடுத்துக்கொள்கிறார்கள். இப்படி எத்தனையோ இலாக்காக்கள் இருக்கின்றன. இப்படி இருந்தாலும் கூட பினான்ஸ் கமிஷனிடம் கோரிக்கைகளை வைப்பதில் நம்முடைய அமைச்சர் அவை பல தவறுகளைச் செய்திருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லப்போனால் 21-6-1973-ல்

It indicated to the Finance Commission its decision to reintroduce prohibition and its plans to make up for the loss through enhancement of taxes on motor spirit, entertainments, etc. It estimated that the loss through prohibition for the five year period would be Rs. 165.44 crores.

ரூ. 166 கோடிக்கு ஏறத்தாழ நஷ்டம் ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

The Commission has argued that according to its terms of reference it had to estimate the revenues of the State Government at the levels of taxation at the end of 1973–74.

அந்த லெவலுக்கு நாமும் எஸ்டிமேட் பண்ண வேண்டும் என்று சொல்கிறார்கள்.

As the Tamil Nadu Government closed only toddy shops for the year 1973–74, it allowed for the reduction of revenue of only 18.16 crores. If the State Government had taken courage and introduced total prohibition, there was a good chance of its getting credit for the entire loss and a substantial portion of it would have been obtained through grants.

இதைச் செய்ய தவறி விட்டார்கள். அதுமட்டுமல்லாமல் இப்பொழுது ப்ரொஹிபிஷன் கொள்கையில் திட்டவட்டமாக இல்லை. அதன் காரணமாக நமக்குக் கிடைக்க வேண்டிய பணத்தையும் இழந்துவிட்டார்கள். இந்தத் தவறான நிலைமை ஏற்படுவதற்குக் காரணம் என்ன? திறமையின்மை என்று நான் சொன்னால் அமைச்சர்களுக்குக் கோபம் வரும்.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1974 ஏப்ரல் 9

There is total failure on the part of the Government.

வரவேண்டிய பணம் வரவில்லை என்று அதற்குப் பிறகு போர்க்கொடி உயர்த்துவதில் என்ன பிரயோசனம்? வாசகங்களை அள்ளி வீசுவதில் என்ன பிரயோசனம்? பல இலாக்காக்களிலும் இப்படிப்பட்ட கோளாறுகள் இருக்கின்றன.

கல்வி இலாகாவை எடுத்துக்கொண்டாலும் கோளாறுதான்.

பிளானிங் கமிஷனை எடுத்துக்கொண்டாலும் கோளாறுதான். நமக்கு பிளானிங்குக்கு எவ்வளவு பணம் வாங்கப்போகிறோம் என்பதில் கோளாறு. ரூபாய் 41.15 கோடி பெறப்போகிறோம் என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு இன்னொரு தொகையைச் சொல்கிறார்கள். ஒரு நாளைக்கு ஒரு அறிவிப்பு. இன்னொரு நாளைக்கு வேறு ஒரு அறிவிப்பு.

நம்முடைய பிளானிங் எப்படி இருக்கிறது என்பதில் திட்டவட்டமான கொள்கை வேண்டும். அங்கேயும், அதாவது மத்திய அரசிலும் பிளானிங்கில் கோளாறு இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். அங்கேயும் பயங்கரமான கோளாறு, மத்திய அரசினிடத்திலும் இருக்கிறது. பார்லிமெண்டில் ஒரு தகவல் கொடுக்கிறார்கள். பிளானிங் கமிஷன் ஒரு தகவல் கொடுக்கிறார்கள். அங்கேயும் கோளாறு இருக்கிறது. நாமும் அந்த அளவு கோளாறுக்குப் பின்வாங்கவில்லை. நான் முதல் அமைச்சர் அவர்களையும், அமைச்சர்களையும் சொல்கிறேன், அந்தக் கோளாறுக்கு சற்றுக் கூட குறையாமல் இங்கேயும் கோளாறு நடந்துகொண்டிருக்கிறது.

திட்டவட்டமான எந்த அறிவிப்பும் கிடையாது. நம்முடைய பிளானிங்குக்கு எவ்வளவு தொகை என்று திட்டவட்டமாகத் தெரிந்தாகவேண்டும்.

மான்யக் கோரிக்கைகளைப்பற்றிய விவாதங்கள் முடிந்து, நிதி ஒதுக்கல் மசோதா வந்திருக்கிறது. நாளைய தினம் இதைப்பற்றி பேச முடியாது. வேறு மசோதாக்கள் இருக்கின்றன. இன்னும் 3, 4 மாதங்களுக்கு சட்ட சபையில் பேசுவதற்கு நமக்கு வாய்ப்பு கிடையாது. அப்பேர்ப்பட்ட நேரத்தில் ஒரு தெளிவான அறிக்கையை வைக்க வேண்டும். பிளானிங் இப்படி இருக்கிறது என்று ஒரு வைட் பேப்பர் ஆன் பிளானிங் கிடையாது. முதல் அமைச்சர் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. எனக்கு வேதனையாக இருக்கிறது. கல்வி இலாகாவிலும் இதே போல கோளாறுகள்தான். கல்வி கற்பதற்கு 15 ஆண்டுகள் எந்தெந்த கட்டத்தில்



1974 ஏப்ரல் 9] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

எவ்வளவு ஆண்டுகள் என்பதற்கு திட்டவட்டமான தெளிவான கொள்கை அங்கே கிடையாது. பத்து ஆண்டுகள், இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகளா அல்லது 11 ஆண்டுகள், ஓராண்டு, மூன்று ஆண்டுகளா, என்ன நிலைமை என்பதைப்பற்றி திட்டவட்டமான அறிவிப்பு கிடையாது.

இங்கே மேல் சபையில் ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள்; ஆனால் இந்தச் சபையிலே அறிவிக்கவில்லை. இன்றைக்கு மாணவர்கள் ஒரு 'கன்ஃபியூஷனில்' இருக்கிறார்கள்.

There is total confusion—there is tinkering with education by political parties.

என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஒரு பயங்கரமான நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த விஷயத்திலும் ஒரு தெளிவற்ற தன்மைதான் இருக்கிறது என்ற குற்றச்சாட்டை சுமத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆயிரம் கல்லூரி மாணவர்களுக்கு கல்லூரிகளில் இடமில்லை; ஆயிரம் கல்லூரி மாணவர்களுக்கு அட்மிஷன் கிடைக்கவில்லை. சேர்த்துக்கொள்ள மறுக்கப்பட்டிருக்கிறார்கள். பலவிதமான காரணங்களினால் 135 நாட்கள்தான் கல்லூரிகள் நடைபெற்றிருக்கின்றன. அவர்களுடைய பாடங்களில் போதிய அக்கறை செலுத்த முடியவில்லை. அவர்கள்மீது எந்தவிதமான அனுதாபமும் காட்டப்படவில்லை. நாங்கள் சொல்லும்போது அனுதாபத்தோடு கவனிக்கிறோம் என்று சொல்லுகிறார்களே தவிர, உண்மையிலே அனுதாபம் காட்டவில்லை. ஒரு மாணவன் மூட்டைப்பூச்சி மருந்தைச் சாப்பிட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்று நான் கேள்விப்படுகிறேன். அந்த அளவுக்கு அவர்கள் குழப்பமடைந்திருக்கிறார்கள்.

உங்களைக் கண்டாலே இன்றைக்கு மாணவர் சமுதாயத்திற்கு ஒரு அலர்ஜி ஏற்படுகிறது. நம்மை பொறுப்போடு கவனிக்கவில்லை என்று மாணவர்கள் எண்ணுகிறார்கள். மாணவர்கள் பிரச்னைகளைப்பற்றி அமைச்சர்களிடம் பேசும்போது, மாணவர்கள் கல்லூரிகளுக்குச் செல்லட்டும்; அவர்கள் மீது பழி வாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள மாட்டோம் என்று முதலமைச்சரவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால் அதை நிறைவேற்றினார்களா என்றால் இல்லை.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1974 ஏப்ரல் 9

இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் 1,700 பேர் இருக்கிறார்கள். அவர்களை முதல்தரமாக்க வேண்டுமென்று மனு கொடுத்தார்கள். அதுபற்றி இன்னும் எந்தவிதமான அறிவிப்பும் செய்யவில்லை.

போலீஸ் நடவடிக்கைகளைப்பற்றி ஏற்கெனவே பல இடங்களில் சொல்லியிருக்கிறோம். போலீஸ் மானியத்தில் விரிவாகப் பேசியிருக்கிறோம். அவர்களுடைய நடவடிக்கைகளைப்பற்றி ஏராளமான தபால்கள் எனக்கு வருகின்றன; ஏராளமான டெலிகிராம்ஸ் வந்திருக்கின்றன. அவைகளை எல்லாம் படிப்பதற்கு எனக்கு நேரம் போதாது. ஆகவே, எல்லாவற்றையும் முதலமைச்சரிடம் தந்துவிடுகிறேன். அவைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நாட்டிலே ஒருவரை ஒருவர் கடத்திக்கொண்டு போகக்கூடிய நிலைமை இருக்கிறது. திடீர் திடீரென்று காணாமல் போகிறார்கள். அதைப்பற்றி எல்லாம் டெலிகிராம்ஸ் ஏராளம் வந்திருக்கின்றன. இப்போதே பொதுமக்கள் பீதியடைந்திருக்கிறார்கள். இவைகளை எல்லாம் நான் படித்தால் மேலும் தாய்மார்கள் பீதியடைவார்கள். ஆகவே, அவைகளைப் படிக்காமல் நடவடிக்கை எடுப்பதற்காக முதலமைச்சரிடம் கொடுத்துவிடுகிறேன். மக்கள் பீதியடையாமல் இருக்க வேண்டும். தாய்மார்களுக்கு பாதுகாப்பு இருக்க வேண்டும். பயங்கரமான நிலைமை இருக்கக் கூடாது. இப்போது குழப்பமான நிலைமை நாட்டிலே இருக்கிறது. There is total failure of law and order. எனக்கு வந்திருக்கிற கடிதங்கள், டெலிகிராம்கள் எல்லாவற்றையும் கொடுத்து விடுகிறேன். அதற்கு ஏதாவது ஒரு பதில் கொடுங்கள். பதில் கொடுங்கள் என்றால், உங்களுடைய பதிலைக் கொடுங்கள். அது அல்லாமல் கடிதங்களை ஐ.ஜி.-க்கு அனுப்பி, அவர் எஸ்.பி.யைக் கேட்டு, அவர் அங்கே இருக்கின்ற இன்ஸ்பெக்டர் சப்-இன்ஸ்பெக்டர்களைக் கேட்டு பதில் கொடுப்பதாக இருந்தால் அவர்கள் ஏற்கெனவே செய்த தவறைத்தான் சரியானது என்று தகவல் கொடுப்பார்கள். அதனால் பிரயோஜனம் இல்லை. நான் தூண்டிவிடுவதற்காக இவைகளைச் சொல்லவில்லை; இருக்கின்ற நிலைமைகளை எடுத்துச் சொல்கிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வேண்டுமென்றே சொல்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்படக் கூடாது. நான் மனசாட்சியோடு சொல்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் கசப்பான மனப்பான்மை கிடையாது. சட்ட மன்றத்தில் எல்லோரும் ஒரேமாதிரியாகத்தான் பழகிக் கொண்டிருக்கிறோம்.



1974 ஏப்ரல் 9] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

முதலமைச்சர் என்னைப் பார்த்துச் சிரிக்கிறார். நான் முதலமைச்சரைப் பார்த்துச் சிரிக்கிறேன். ஆனால் வெளியிலே இருக்கின்ற நிலைமை அப்படி இல்லை. ஒவ்வொருவரும் போராடக்கூடிய நிலைமை இருக்கிறது.

அரசியலில் நான் ஒரு கட்சி, நீங்கள் ஒரு கட்சி, ஸ்தாபன காங்கிரஸ் ஒரு கட்சி—இப்படி கட்சி மனப்பான்மை வந்துவிடுகிறது. கட்சித் தொண்டர்கள் அடிபடுகிறார்கள். இதைப்பற்றி எல்லாம் நான் முதலமைச்சரிடம் தெரிவித்திருக்கிறேன். இதை யோசனை செய்து பாருங்கள். கசப்பான மனப்பான்மையை வளர்த்துக் கொண்டு, தொண்டர்கள் மனதிலே பயங்கரமான செயல் ஏற்பட வழிவகுப்பது நல்லதா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். There is total failure of law and order and there is no security for the members of the opposition parties. என்ற என்னுடைய குற்றச்சாட்டுக்கு சரியான வகையிலே பதில் அளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு மின்சார வாரியத்திலும் கோளாறுகள் இருக்கின்றன. இங்கே ஒரு தீர்மானத்தைப் போட்டோம். அமைச்சர் இராசாராம் அவர்கள் விமானத்தில் பறந்துபோய் அந்தத் தீர்மானத்தைக் கொடுத்தார்கள். நிலைமை என்ன ஆச்சு? ஒரு 35 கோடி ரூபாய் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். கிடைக்குமோ, கிடைக்காதோ தெரியவில்லை. அல்லது கிடைத்துவிட்டதா என்றும் தெரியவில்லை. இரண்டாவது சுரங்கத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டோம். அதற்கு வழி செய்யவில்லை. இருப்பதை விஸ்தரிப்பதற்காக ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இரண்டாவது சுரங்கம் அமைப்பதற்கு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? ஒன்றுமே தெரியவில்லை. நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் எதிலும் ஒரு திட்டவட்டமான பதில் கிடையாது. இந்த மின்சார வாரியத்திலும் ஒரு திட்டவட்டமான நிலைமை இல்லை என்று இந்த நேரத்திலே குற்றஞ்சாட்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இரண்டாவது நெய்வேலி சுரங்கத்திற்கு இந்த மாமன்றத்திலே தீர்மானத்தைப் போட்டோம் என்பதைப்பற்றி ஹாண்டே அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அந்தத் தீர்மானத்தைப்

புறக்கணித்து விட்டார்கள் என்பதை வருத்தத்தோடு குறிப்பிட்டார்கள். இப்போது நெய்வேலியில் இருப்பதை விஸ்தரிப்பதற்காக 30 அல்லது 35 கோடி ரூபாய் கொடுப்பதாக அறிவித்ததையும் சொன்னார்கள். தமிழ்நாட்டில் இது ஒரு பெரிய விஷயம் என்பதால் ஆளும் கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகம் மற்ற எல்லாக் கட்சிகளோடு இணைந்து, ஒரு எழுச்சி நாள் கொண்டாட இருக்கிறது. அதற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒத்துழைப்பு இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நிச்சயமாக இருக்கும். இந்த விஷயத்தைக் கிளப்பினவனே நான் தானே. அதனால் நான்தான் ஆளும் கட்சியின் ஒத்துழைப்பு இருக்குமா என்று கேட்கவேண்டும். இந்த விஷயத்தில் எங்களுக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. போராட்டம் நடத்துவதாக இருந்தாலும் அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். காலையிலே இந்த மசோதா வருகிறபோது அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். மத்திய அரசாங்கத்தோடு சண்டை போடவும் நாங்கள் தயாராக இருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்கள் நெசவாளர்களுக்காக சண்டை போடுவதாக இருந்தால் நாங்களும் அதற்குத் தயாராக இருக்கிறோம். இதிலே எங்களுக்கு தயவு தாட்சண்யம் கிடையாது. இந்தமாதிரியான முக்கியமான பிரச்னைகளுக்கு முடிவு காண்பதில் காலதாமதம் ஏற்படக்கூடாது. There is postponement without taking any decision. தள்ளிப்போடுவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை நகராட்சியில் மின்சார ஊழியர்கள் 20,000 பேர் போராட்டம் நடத்துவதாகக் கேள்விப் படுகிறோம். அந்த போராட்டம் நடக்காமல் இருப்பதற்கு என்ன செய்தீர்கள்? இது மிக முக்கியமான பிரச்சனை. மின்சார ஊழியர்கள் சம்பளம் வாங்க முடியாத போராட்டம் இது. இந்தப் பிரச்சனையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று பலமுறை முயற்சி செய்தேன்; முடியவில்லை. கடைசியாக இப்போது கொண்டுவருகிறேன். மின்சார இலாகாவில் ஏற்படக்கூடிய தகராறுகளுக்கு எப்படித் தீர்வு காணப் போகிறீர்கள்? (மணியடிக்கப்பட்டது). சீக்கிரம் முடித்துவிடுகிறேன். நான் பாயின்ட் பாயின்டாக 'டச்' பண்ணித்தான் போகிறேன். எதிலுமே ஒரு திட்டவட்டமான பதில் வேண்டும்; திட்டவட்டமான முடிவு இருக்க வேண்டும். தொண்ணூற்றி எட்டு டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள் பிரச்சனை இன்னும் தீரவில்லை. அதே மாதிரி சிம்சன் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில்



நிலைமை என்ன? அதற்கும் பதில் இல்லை. இன்றையதினம் சொல்கிறேன். எந்த காரியத்தையும் புறக்கணிக்காதீர்கள்.

I wish to utter a note of warning

நாங்கள் என்ன சொன்னாலும் புறக்கணித்துக்கொண்டே வருகிறீர்கள். அங்கே இன்னும் ஒன்று அல்லது இரண்டு மாதத்தில் ஒரு பயங்கர நிலைமை உருவாகப் போகிறது. உடனடியாக சிம்சன் பிரச்சனைக்கு ஒரு முடிவு எடுக்கப்படா விட்டால் பின்னால் அங்குமிங்கும் நீங்கள் ஓடிக்கொண்டிருக்கின்ற நிலைமைதான் வரும். ஏற்கெனவே அதைப்பற்றிப் பேசியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஞாபகம் இருக்குமென்று கருதுகிறேன். அவர்களுடைய அறையில் உட்கார்ந்து 1½ மணி நேரம் விவாதித்தோம். அனுதாபத்தோடு கவனிக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் நிலைமை என்ன? எந்தவித பதிலும் வரவில்லை.

அடுத்தபடியாக, இங்கே இருக்கின்ற நம்முடைய அரசாங்க ஊழியர்களுக்கு வாரி வழங்கினோம் என்று சொல்கிறீர்கள். வாரி வழங்குவதில் எங்களுக்கு ரொம்ப சந்தோஷம். நான் கிண்டல் பேசிப் பழக்கமில்லை. உண்மையாகத் தான் சொல்கிறேன். வாரி வழங்கினோம் என்று சொல்கிறீர்கள். அப்படி வாரி வழங்கியிருக்கிறீர்களா என்று பார்த்தால் இல்லையே. கேரளத்திலே நாங்கள் பார்க்கிறோம். பட்ஜெட் மொத்த வருமானத்தில் 66 சத விகிதம் அரசாங்க சிப்பந்திகளுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு இங்கே ஒதுக்கியிருக்கிறீர்களா என்றால் இல்லை. அந்த அளவுக்கு ஒதுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. வாரி வழங்கினோம் என்று சொல்கிறீர்களே அதற்காகச் சொல்கிறேன். பட்ஜெட் உரையில் 32-வது சாப்டரில் சொல்லியிருக்கிறீர்கள். 'ஒன் மான் கமிஷன்' வைத்து, அவர்கள் சொன்னதை எல்லாம் செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஜி.ஓ. எல்லாம் போட்டிருக்கிறீர்கள். ஆனால் அந்த அளவுக்கு நம்முடைய அரசாங்க சிப்பந்திகளுக்குச் செய்யப்படவில்லை. மத்திய அரசு அளவுக்குக் கொடுக்கப்படவில்லை. நீங்கள் சொல்வதுமாதிரி வாரி வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1960-61 ஆம் ஆண்டு நம்முடைய மொத்த வருமானம் 91.03 கோடி. அதில் 25.56 கோடி என்.ஜி.ஓ.க்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது வருமானத்தில் 28 சத விகிதம். 1966-67-ஆம் ஆண்டில் எவ்வளவு என்று பார்த்தால் 28.4 சத விகிதம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கு முன்னால் 1961-62 ஆம் ஆண்டில் 28.3 சத விகிதம் ஒதுக்கியிருக்கிறார்கள். இப்போது 1973-74-ஆம் ஆண்டு ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் 26.7 சத விகிதம் ஒதுக்கியிருக்கிறார்கள். அப்போது மொத்த வருமானம் 472 கோடி ரூபாய். அதில் 126 கோடி ரூபாய்

அதாவது 26.7 சத விகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 1974-75-ஆம் ஆண்டில் 26.62 சத விகிதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அரசாங்க சிப்பந்திகளும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் திருப்தியாக இல்லை. இங்கே இருக்கக்கூடிய சிப்பந்திகள் கவலையோடு இருக்கிறார்கள். இதையெல்லாம் நீங்கள் கவனிக்க வேண்டுமென்பதற்காகத்தான் ஒரு 'வார்னிங்காக'ச் சொல்கிறேன். இங்கு இருக்கக்கூடிய சிப்பந்திகள் கவலையோடு இருக்கிறார்கள். உடனடியாக அது கவனிக்கப்படவேண்டும் என்பதற்காகவே சொல்கிறேன்.

(முற்பகல் 11-00)

இன்னும் ஊழல்களைப்பற்றி மானியக் கோரிக்கையில் பேசப்பட்டது. நாங்கள் பல ஊழல்களைச் சொல்கிறோம். குற்றச்சாட்டுகளைச் சொல்கிறோம். நேரிடையாக பதிலளிக்காது ஏதோ சொல்லி தப்பித்துக்கொள்கிறார்களே தவிர அது பற்றிக் கவனித்து நடவடிக்கை எடுப்பதில்லை.

மாண்புமிகு கண்ணப்பன் அவர்களுடைய இலாக்கா—அதிலே ஒரு சிப் எக்சிக்யூடிவ் ஆபீசர்—ஐ.ஏ.எஸ்.—அவர் இப்போது அங்கே இல்லை. சிவில் சப்ளைசுக்கு மாற்றப்பட்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். சில்க் சூப்பிரண்டெண்ட்—நான் கெஜடெட்—அந்த அதிகாரிக்காக அது கெஜடெட் ஆக மாற்றப்பட்டிருக்கிறது—சில்க் சூப்பிரண்டெண்ட் அங்கே [illegible] ரூபாய்க்கு அன்சேலபிள் சில்க் ஐடெம் வாங்கி வைக்கப்பட்டிருக்கிறது. எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை.

It involves Rs. 7 crores worth of unsaleable silk items.

அதற்குப் பிறகு கதர் இலாக்கா புனிதமான இலாக்கா—அண்ணல் காந்தி யடிகளுடைய விருப்பத்திற்கு உட்பட்ட இலாக்கா. என்ன ஆயிற்று?

It relates to one per cent brokerage and the amount involved is Rs. 15 lakhs. In this case, orders were passed on the letter of request of the private party without verifying whether the party belongs to a reputed firm or not.

ஒரு சத விகிதம் ப்ரோக்கரேஜ் கொடுத்திருக்கிறார்கள். ஒரு இலட்சத்திற்கு ஹைதராபாத்தில் இருந்து ரெட் காட்டன்—அது இங்கே எந்தவகையிலும் பயன்படாதது—அதை முறையாகக் கூட இல்லை—ஒரு சின்ன லெட்டர் முறையிலேயே வாங்கப்பட்டது—இங்கே தேங்கிக்கொண்டிருக்கிறது. இப்படிப்





பட்ட ஒரு பயங்கரமான நிலைமை இருக்கிறது. அந்த பைலையே எங்களுக்கும் காட்ட வேண்டும். அதிலேயே அப்ஜெக்‌ஷன் பண்ணியிருக்கிறார்கள். இன்னும் பெங்களூர் எக்ஸிபிஷனிலே ஏற்பட்ட ஊழல். சேல்ஸ் கணக்கே கிடையாது. பயங்கரமான மோசடி நடந்திருக்கிறது. இதற்குப் பொறுப்பு யார்? திரு. கண்ணப்பன்தான் பொறுப்பு. திரு. கண்ணப்பன்தான் பொறுப்பு என்கிறபோது மாண்புமிகு முதலமைச்சருக்குத்தான் இந்தப் பொறுப்பு. உங்களுக்கு யார் சொல்ல முடியும்? நாங்கள் சொன்னால் கோபம் வரும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எங்களுக்குக் கோபம் வராமல் இருக்கும்போதே, சொன்னால் கோபம் வரும் என்று எங்களை இழுத்து இழுத்துப் பேச வேண்டிய அவசியம் இல்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: கோபம் வரக்கூடாது என்பதற்காகத்தான் நான் அப்படி இழுத்து இழுத்துப் பேசுகிறேன். அவர்களுக்குக் கோபம் வரவில்லை என்பதால் நான் வெற்றி பெற்றிருக்கிறேன்.

இதுபோன்று எத்தனையோ குற்றச்சாட்டுகள்—இதே மன்றத்தில் 1971-இல் முதலமைச்சர் அவர்கள் மிகவும் பலம் வாய்ந்த அளவில் இருந்தபோது—இப்போதுள்ள இந்த அளவுக்குப் பலவீனமாக இல்லை—அப்போது எவ்வளவு கோபமாகப் பதில் அளித்தார்கள். நாங்கள் சொல்வதைப் புறக்கணித்தார்கள். மதுவிலக்கை ஒத்தி வைக்க முன்வந்தபோதே சுட்டிக்காட்டினேன். அதை ஒத்திவைப்பதன் மூலம் அண்ணாவைப்பற்றிப் பேசுவதற்கே உரிமை இழந்து விட்டீர்கள் என்று சொன்னேன். நான் ஆர்டினரி பர்சன் தான்—ஆனால் நான் கொடுத்த நல்ல அட்வைசுகளை எல்லாம் புறக்கணித்தீர்கள். இப்போது இந்தக் கட்டத்தில் வந்து நிற்கிறீர்கள்.

எதற்காகச் சொல்கிறேன் என்றால்—உங்களிடம் இருப்பவர்கள் உங்களை தவறான திசைக்குத்தான் இழுத்துப் போகிறார்கள். அந்த அளவிலேயே ரொம்பப் போய்விட்டீர்கள். இறுதியாகச் சொல்கிறேன். இனிமேலும் இந்த நிலையில் நீடித்துக்கொண்டு செல்ல முடியாது. அப்போது நான் சொன்னதை எல்லாம் இப்போது நீங்களே உண்மை என்று ஒப்புக்கொள்கிற நிலைக்கு வந்துவிட்டீர்கள். ஆகவே இனி நல்லவகையில் ஓய்வு எடுத்துக் கொள்வதுதான் நல்லது என்கிற எனது யோசனையைச் சொல்லிவிட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1974 ஏப்ரல் 9

*திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு விவாதத்தில் எனது கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன். முதலில் எனது தொகுதியைப்பற்றியும், மாவட்டத்தைப் பற்றியும் சொல்லிவிட்டு, மற்றக் கருத்துக்களைப் பின்னர் சொல்ல விரும்புகிறேன்.

எனது பகுதியில் 1972 ஆம் ஆண்டு ஒரு பெரிய வெள்ளம் வந்தது. அந்த வெள்ளத்தால் எனது பகுதி பாதிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் அந்தப் பகுதிக்கு வந்து மக்களுக்கு நல்ல ஆறுதலைக் கொடுத்து, அரசாங்கத் தரப்பில் நல்ல ஆதரவு கொடுத்ததற்காக முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன்காரணமாக முதலமைச்சர் அவர்கள் ஒரு பள்ளிக்கூடம் 7 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட வகை செய்ததற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்றை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். வெள்ளத் தடுப்புச் சுவர் கட்ட முதல்வர் அவர்கள் அங்கே அடிக்கல் கூட நாட்டினார்கள். பவானியில் இருந்து ஜம்பை வரையில் ஒரு திட்டம் தீட்டப்பட்டது. அந்தத் திட்டம் என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை. அதை விரைவாக அமல் படுத்தி, தடுப்புச் சுவரைக் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். பத்தாண்டு களுக்கு ஒரு முறை வெள்ளம் தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கிறது. அதன் காரணமாக பவானியும், அதை ஒட்டியுள்ள கிராம மக்களும் பாதிக் கப்படுகிறார்கள்.

(திரு. வை. பாலசுந்தரம்---தலைமை)

அடுத்து, புதிதாக தடப்பள்ளி. அரக்கன்கோட்டை வாய்க்கால்களைப் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பழுது பார்க்க ஏற்பாடு செய்து இருப்பதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்தில் மற்றொன்றையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். தடப்பள்ளி, அரக்கன் கோட்டை, காளிங்கராயன் வாய்க்கால்கள் 300 ஆண்டுகளுக்கு முன்னால் வெட்டப்பட்டவை. அந்த வாய்க்கால்களின் மூலம் இன்றைக்கு 30 ஆயிரம் ஏக்கரா பாசன வசதி பெறுகிறது. அதை ரிமாடல் பண்ணினால் மேலும் ஒரு 15 ஆயிரம் ஏக்கரா பாசனம்பெற வாய்ப்பு இருக்கிறது. இந்தத் திட்டத்தை சீப் என்ஜினியர் லெவலிலேயே 25 லட்சத்திற்குக் குறைத்து—ஸ்ப்ளிட் பண்ணி நிறைவேற்ற வேண்டும். டெல்லிக்கு அனுப்பினால் இந்தத் தலைமுறையில் கூட வராது. ஆகவே டெல்லிக்கு அனுப்பாமலேயே இங்கேயே நம் அளவில் அதனை நிறைவேற்றித்தர வழிவகை செய்யவேண்டும்.



1974 ஏப்ரல் 9] [திரு. ஏ. எம். இராஜா]

அடுத்து, பர்கூர், வேலம்பட்டி காடுகள் இருக்கின்றன. அது பற்றி முதல் அமைச்சர் அவர்களிடத்தில் பலமுறை விண்ணப்பம் கொடுத்திருக்கிறோம். வேலம்பட்டியில் உள்ள அந்தக் காடுகள் 1910-க்கு முன்னால் ரெவின்யூ இலாக்காவிடம் இருந்தது. பிறகு அதை வன இலாக்காவிடம் கொடுத்து விட்டார்கள். அங்கே சந்தன மரங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கடந்த 60 ஆண்டுகளில் வளர்ந்த மரங்கள் எதுவும் இல்லை. செடிகளும், புதர் களும் தான் இருக்கின்றன. அங்கே பாலாறு என்ற ஓடை இருக்கிறது. அந்த ஓடைக்கு மறுபுறம் உள்ள இடங்கள் கர்நாடக அரசுக்குச் சொந்தமாக இருக் கின்றன. அங்கே அவர்கள் நல்லமுறையில் சாகுபடி செய்கிறார்கள். இந்த நிலங்களும் நல்லமுறையில் சாகுபடி செய்வதற்கு ஏற்றவையான நிலங்கள். ஒரு சிலர் அன் ஆதரைஸ்டு ஆகப் பயிரிட்டு வருகிறார்கள். இந்த நிலைமையை மாற்றி—வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் நிலமற்ற ஏழை விவசாயி களுக்குச் சாகுபடி செய்வதற்கு இந்த நிலங்களைத் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, என்னுடைய பகுதியிலே, ஈரோடு தாலுகாவிலே, ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையை ஏற்படுத்த வேண்டுமென்று தொழில் துறை அமைச்சரை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். காளிங்கராயன் பகுதியிலே 15,000 ஏக்கர் நிலங்கள், 11 மாதம் பாசனம் பெற்று வருகின்றன. லோயர் பவானியிலும் ஏறக்குறைய 50,000 ஏக்கர்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. இப்படி, கரும்புக்குத் தேவையான சூழ்நிலை அங்கே நிலவுகிறது. நல்ல ரெக்கவரி இருக்கிறது. அங்கே இரண்டு சர்க்கரை ஆலைகள் தனியாருடையவை, உள்ளன.

ஒரு பக்கம் சக்தி நிறுவனம். மற்றொரு பக்கம் டெக்கான் ஷுகர்ஸ். இந்த இரு நிறுவனத்தாரும் கரும்பைப் பயிரிடச் சரியாக ஊக்கம் அளிப்பதில்லை. கரும்பை எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதில்லை. ஆகவே, இந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் பயன்பெற, புதிதாகக் கூட்டுறவு சர்க்கரை ஆலையை ஏற்படுத்த முயற்சித்தால், எல்லாவிதமான ஒத்துழைப்பையும் அப்பகுதியிலுள்ள விவசாயிகள் தருவதாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, ஈரோடுக்கும் கொடுமுடிக்கும் இடையிலே, 2,000 டன் அரவைத் திறன் கப்பாசிட்டி இருக்கக்கூடிய, கூட்டுறவு சர்க்கரை ஆலையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எ. எம். இராஜா] [1974 ஏப்ரல்

மற்றொன்று, சேலத்திலிருந்து கோயம்புத்தூர் போகும்போது நேஷன ஹைவேஸ், என்ற தேசிய நெடுஞ்சாலை இருக்கிறது. 'ரீ மாடல் செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டு அநாவசியமாக வெட்டிக் கொண்டிருக்கிறார்கள் நமக்கோ, தேவையான திட்டத்திற்கே பணமில்லை. இது என் செய்ய படுகிறது? இதை மத்திய அரசு செய்கிறதா? அல்லது மாநில அரசு செய்கிறதா? மத்திய அரசு செய்கிறது என்றால், உருப்படாத திட்டங்களுக்குத் தான் அவர்கள் பணம் கொடுப்பார்கள் என்று தெரிகிறது. உருப்படியான திட்டங்களுக்கு அவர்கள் பணம் கொடுக்கமாட்டார்கள், என்று அறிய முடிகிறது. நமக்கு அடிப்படை வளர்ச்சித் திட்டங்கள் நிறைய இருக்கின்றன. அவற்றிற்கு நிதியில்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த மாதிரித் திட்டங்களை, மிக முன்னேறிய பிறகு, நமக்கு வேறு வளர்ச்சிப் பணியே இல்லையென்ற நேரத்தில், எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, என்னுடைய மாவட்டம் மிகப் பெரிதாக இருக்கிறது. அதன் காரணமாக, கலெக்டர் அவர்களால் திறம்பட செயலாற்ற முடியவில்லை. திட்டங்கள் நிறைய இருக்கின்றன, மாவட்டம் மிகப் பெரிதாக இருக்கிறது. அவர் ஒருவரால் நிச்சயமாக அவற்றைக் கவனிக்க முடியவில்லை. அதை இரண்டாகப் பிரித்துக் கொடுத்தால், வளர்ச்சிப் பணிகள் துரிதமாகவும் நல்ல முறையிலும் நடைபெற வாய்ப்பு ஏற்படும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் துறையை எடுத்துக் கொண்டால், பேக்வார்ட் ஏரியாஸ், அண்ட் சப்ஸிடைஸ்ட் ஏரியாஸ் என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. அதிலே, கோவை சேலம், திருநெல்வேலி போன்ற மாவட்டங்கள் பேக்வார்ட் ஏரியாவிலே வரவில்லை. சப்சிடைஸ்ட் ஏரியாவிலும் வரவில்லை. ஆனால் இராமநாதபுரத்திலே இருக்கிற விருதுநகர், சிவகாசி போன்ற பெரும் தொழில் நகரங்கள் பேக்வார்ட் அண்ட் சப்சிடைஸ்ட் ஏரியாவில் வருகின்றன என்று சொல்கிறார்கள்.

ஆனால், கோயம்புத்தூரில் உள்ள தாராபுரம், பல்லடம் போன்ற வரண்ட பகுதிகள் பேக்வார்ட் ஏரியாவில் வரவில்லை. இண்டஸ்ட்ரியலி டெவலப் ஏரியாஸ் என்று வைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு ஏன் அப்படி வைத்திருக்கிறது என்று தெரியவில்லை. குறைந்தது ஒவ்வொரு மாவட்டத் திற்கும் 2 தாலுக்காக்களை பேக்வார்ட் ஏரியாஸ், சப்ஸிடைஸ்ட் ஏரியாஸ் என்று வைத்தால்தான் தொழில் வினைஞர்கள் தொழில்களைத் துவங்க முன்வருவார்கள். அதன்மூலம் வேலை வாய்ப்பு ஏற்படும். கோவையில்



1974 ஏப்ரல் 9] [திரு. எ. எம். இராஜா]

இருந்து இராமநாதபுரம் போய் தொழில் ஆரம்பிப்பதைவிட, கோயம்புத்தூர் மாவட்டத்திலேயுள்ள பல்லடம், தாராபுரத்திலே தொழில் ஆரம்பிப்பது எளிதாக இருக்கும்.

ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு தாலுக்காக்களை பேக்வார்ட் அண்ட் சப்சிடைஸ்ட் ஏரியாஸ் என்று மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிட்கோவிலே கடன் கேட்கச் சென்றால், மிக அதிக நாட்கள் ஆகின்றன. மூன்று மாதங்களுக்குள் பணம் கொடுக்கிறோமா இல்லையா என்பதை முடிவு செய்யவேண்டும். ஒவ்வொரு மெஷின் விலையும், இன்றைக்கு இருக்கிற விலை அடுத்த மாதம் இல்லை. அதற்கு மேலே போய்விடுகிறது. இப்படி ஒவ்வொரு நாளும் விலை ஏறிக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலே, அதிகமான கட்டு திட்டங்கள் இல்லாமல், விதிகளைத் தளர்த்தி, மூன்று மாதங்களுக்குள் அப்ளிகேஷன்ஸை எல்லாம் டிஸ்போஸ் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிப்காட் அவர்கள் நியூ டிவைஸஸுக்குப் பணம் தரமாட்டோம், கன்வென்ஷனல் டிவைஸஸுக்குத்தான் பணம் தருவோம் என்று சொல்கிறார்கள். அங்கே நேஷனல் டெவலப்மென்ட் ரிசர்ச் கவுன்சில் நாங்கள் புதுமுறைகளைக் கண்டு பிடித்திருக்கிறோம். அந்த முறைகளைக் கையாளுங்கள் என்று, மத்திய அரசிலே இருக்கிற நிறுவனம் சொல்லிக்கொண்டு, செய்து கொண்டு வருகிறது. ஆனால், நம்முடைய மாநிலத்திலே இருக்கிற சிப்காட் போன்ற நிறுவனங்கள், புதிய டிவைஸஸுக்குப் பணம் கேட்காதீர்கள், ரொம்ப ரிஸ்காக இருக்கும். ஆகவே, பழைய கன்வென்ஷனல் பிராஸஸ் செய்யுங்கள் என்று சொல்கிறது. இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். புதிய டிவைஸஸ் மூலம் உற்பத்தியாகும் பொருள்களின் விலை குறைகின்றது. நம்முடைய நாட்டிலே இருக்கிற ரா மெட்டீரியல்ஸைக் கொண்டு, நம்முடைய நாட்டு மெஷினரிகளைக் கொண்டு, உற்பத்திச் செய்யமுடிகிறது. ஆகவே, இதை ஊக்குவிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வருவாய்த்துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்வது, பாசனம் பெருகிற பரம்பிக்குளம்-ஆளியாறு பகுதிகளை நில உச்சவரம்புத் திட்டத்திலே 4 : 1 என்று வைத்திருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில், லோயர் பவானி பகுதிகள் 1 : 7 : 1 என்றிருக்கிறது. பரம்பிக்குளம்-ஆளியாறு பகுதிக்கு

அஷுரர்டு வாட்டர் சப்ளை இருக்கிறது. ஆனால், லோயர் பவானி பகுதியி லுள்ள பகுதிகளுக்கு அஷுரர்டு வாட்டர் சப்ளை கிடையாது. ஆண்டுக்கொரு முறை தான் தண்ணீர் கிடைக்கிறது. அதற்கு 2 பெய்தால், ஓராண்டிற்கு ஒருமுறைதான் தண்ணீர் கிடைக்கிறது. மழை நன்றாகப் அதையும் கொஞ்சம் கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, இந்த உரத்தட்டுப்பாடு. நேற்றைக்குக்கூட, இந்துவிலே உரத்தட்டுப்பாடு பற்றி ஒரு தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது. உலகத்திலே உரத்தட்டுப்பாடு, அமெரிக்காவிலிருந்து வெளி நாடுகளுக்கு உரம் ஏற்றுமதி செய்யப்போவதில்லை என்று எழுதியிருக்கிறார்கள். பயங்கரமான நெருக்கடி நம்முடைய நாட்டை நோக்கிக் கொண்டிருக்கிறது.

மத்திய அரசு, மில்லட்ஸ், கம்பு, ராகி, சோளம் போன்றவைகளை, புட் கன்ட்ரோல் ஆர்டரிலிருந்து ரிமூவ் செய்திருக்கிறது. இவற்றை ஒரு மாநிலத் திலிருந்து வேறு எந்த மாநிலத்திற்கு வேண்டுமானாலும் ஏற்றுமதி செய்ய லாம். இதன் காரணமாக, இப்பொழுது என்னுடைய மாவட்டத்திலே சோளத்தின் விலை குவிண்டாலுக்கு ரூ. 40-க்கு மேல் ஏறி இருக்கிறது.

ஆகவே, எப்படியாவது மில்லட்டுகளை மறுபடியும் புட் கன்ட்ரோல் ஆர்ட ரின் கீழ் கொண்டு வரவேண்டும்.

நம்முடைய அரசு உணவைப் பொறுத்தவரையில், மத்திய சர்க்காரை எதிர்த்தாவது, அந்தக் கொள்கையிலே வெற்றி கண்டாகவேண்டும். இல்லா விட்டால், உரத்தட்டுப்பாட்டின் காரணமாக உற்பத்தி குறையப்போகிறது; கம்பு, ராகி போன்றவைகள் வெளி மாநிலங்களுக்குச் சென்றுவிடுகின்றன. ஆகவே, உணவுப் பிரச்சினை பெரும் பிரச்னையாக வந்துவிடும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொஞ்சம் சீரிய முறையிலே அக்கறையோடு கவனித்து, மத்திய அரசோடு போராட்டம் நடத்தியாவது இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மத்திய அரசோடு மோதுவதற்கு எப்பொழுதும் நாங்கள் தயார் என்று. அது அவருடைய கொள்கையா அல்லது அவருடைய கட்சியின் கொள்கையா என்று எனக்குத் தெரியவில்லை. அவருடைய கட்சித்





தலைவர்கள் அன்று மாநில சுயாட்சி பற்றி கேட்டபொழுது வழவழா என்று மதில்போல் பூனைபோல் கூறினார்கள். ஆனால், ஹாண்டே அவர்கள் மத்திய அரசைப் பயங்கரமாக எதிர்க்கிறோம் என்று சொன்னார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** வழவழா, கொழ கொழா என்றெல்லாம் கிடையாது. திட்டவட்டமாகத்தான் இருக்கிறோம். மாநில சுயாட்சியிலே தி. மு. கழகம் ஒரு கருத்து வைத்திருக்கலாம். அதற்கு மாறுபட்ட கருத்தை நாங்கள் வைத்திருக்கலாம். அதையே ஒரு கொள்கையாக நாங்கள் வைத் திருக்கவில்லை. தேவைப்பட்டால், Primary interest of tha State என்கிற பிரச்சினை வருகிற நேரத்திலே நாங்கள் மோதத் தயாராக இருக்கிறோம். மோதுகிற கட்டத்திலே தப்பித்துக்கொள்ளவில்லை. அதற்குத் தயாராக இருக்கிறோம். அதைக் கொள்கையாக வைத்திருக்கவில்லை.

மாநில சுயாட்சி கொள்கையிலும் எங்களுக்கும் உங்களுக்கும் கருத்து வேறுபாடு இருக்கலாம். அது வேறு விஷயம். எப்பொழுதும் மத்திய அரசோடு மோத வேண்டுமென்ற கொள்கை வைத்திருக்கவில்லை. நம்முடைய மாநிலத்திற்கு எந்த அளவு துரிதமாக வேலை செய்ய வேண்டுமோ, அதில் ஒத்துழைப்பு கொடுப்போம், அதிலே எல்லோரும் ஒற்றுமையாக இருப்போம்.

**திரு. ஏ. எம். இராஜா:** மத்திய அரசோடு தேவையானவற்றிற்கு மோது வதற்குத் தயார் என்று சொல்கிறார்கள். முன்புகூடச் சொன்னார்கள், நெய் வேலியில் இரண்டாவது மைன் கட்டவேண்டுமென்று கேட்டோம். அதை மத்திய அரசு புறக்கணித்துவிட்டது, ஆகவே, போராட வேண்டுமென்று கூறி னார்கள்.

இன்றைய நிலை என்ன அரசியல் சட்டத்திலே? நம்முடைய சட்டமன்றம் ஒரு பேராட்சி மன்றம், அவ்வளவுதான். இங்கே என்ன திட்டங்களைத் தீட்டி அனுப்பினாலும், சட்டங்களை நிறைவேற்றி அனுப்பினாலும், என்ன தீர்மானங் களை நிறைவேற்றி அனுப்பினாலும், மத்தியிலே இருக்கிறவர்கள் குப்பைக் கூடையிலே போடுகிறார்கள்.

இந்த நாட்டிற்கு இரண்டு ஆட்சி தேவைதானா என்று கொஞ்சம் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க வேண்டும். மாநில சுயாட்சி என்று பேசப்பட்டு வருகிறது. இந்த மாநில சுயாட்சிக்கு சொந்தக்காரர்கள் காங்கிரஸ்காரர்கள். அவர்கள் ஆட்சி அன்று அந்த மாநில சுயாட்சியை ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் பாகிஸ்தான் பிரிந்தது. அதே போல பாகிஸ்தானை எடுத்துக்

கொண்டால் முஜிபுர் ரகிமானின் 6 அம்சத் திட்டத்தில் மாநில சுயாட்சியை ஒன்றாக வைத்தார்கள். அதை யாகியாகான் ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் வங்க தேசம் உருவாயிற்று. இது வரலாறு. இந்த வரலாறு, இந்த நாட்டில் மீண்டும் நடக்காது என்று உறுதி இருக்கிறதா?

டாக்டர் எச். வி. ஹாண்டே: நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நம்மை கோடிட்டு காட்டி இதை எதிர்க்கிறோம் என்று தெளிவாகச் சொன்னதினால் எங்களுக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. நான் இண்டர் டிபெண்டண்ட் என்றுதான் சொன்னேன். இண்டிபெண்டெண்ட் என்று சொல்லவில்லை. பாகிஸ்தான் பிரிந்ததைப் பற்றிச் சொன்னார்கள். அதை எதிர்க்கிறோம். பிரிவினை வாடை வீசாமல் அதே நேரத்தில் எல்லோரும் ஒன்றாகப் போராட வேண்டும். அந்த மாதிரி விஷயத்தில் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: பாகிஸ்தான் பிரிந்தபோது மாநில சுயாட்சி என்ற பேச்சே கிடையாது. அவர்கள் பிரிந்து போக வேண்டுமென்று விரும்பினார்கள். பிரிந்து போனார்கள். பிரிந்து போனது மாநில சுயாட்சி கொடுக்காததினால் என்று திரு. இராஜா அவர்கள் சரித்திரத்தை மாற்றிச் சொல்லுகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: வங்க தேசப் பிரிவினையை ஒப்பிட்டுப் பேசினால் பிரிவினை எண்ணத்தை தான் காட்டுகிறது. வங்க தேச நிலைமை வேறு. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை ஆட்சி அமைக்க மறுத்து விட்டார்கள். ஆனால் இங்கு நீங்கள் ஆட்சியை நடத்துகிறீர்கள். அதையும் இதையும் ஒப்பிட்டு பேசுகிறீர்கள். ஆகவே பிரிவினை எண்ணத்தை தான் காட்டுகிறீர்கள் என்று சொல்லுகிறோம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திரு. மாரிமுத்து அவர்கள் இந்திய காங்கிரஸ் சர்க்கார் சரித்திரத்தை திரு. இராஜா மாற்றி விட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். இதைத் திரும்பிப் பார்த்தால் நன்றாக இருக்கும். காரணம் மாநில சுயாட்சிக் கொள்கை காங்கிரஸ் கட்சிக் கொள்கை என்று சொன்னவுடன் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் மிக்க மகிழ்ச்சியோடு காணப்பட்டார். நான் பார்த்தேன். காங்கிரஸ் கட்சியினுடைய சரித்திரத்தைப் பார்த்தால் 1946-ம் ஆண்டு பிரிந்து போகும் உரிமையோடு சுயாட்சி உரிமையுள்ள மாநிலங்களைக் கொண்ட இந்திய அரசு என்பது நேருவின் பேச்சு. அதற்குப் பிறகு கேபினெட் மிஷன் அறிக்கை வந்தது. அந்த





அறிக்கையில் மூன்று அதிகாரங்கள் மட்டும் மத்திய அரசுக்கு. மற்ற அதிகாரங்கள் மாநிலத்திற்கு என்று காங்கிரஸ் கட்சி தீர்மானம் நிறைவேற்றிற்று. அதற்குப் பின்னால் எதிர்ப்பு ஏற்பட்டது. இதற்குப் பின்னால் பாகிஸ்தான் உருவானது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மூன்று நாட்கள் இதற்காக ஒதுக்கப் பட்டிருக்கிறது. அப்போது டிஸ்கஸ் பண்ணலாம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அதே தலைவர்கள் தான் பின்னால் அரசியல் நிர்ணய சபையில் இந்த அரசியல் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாறி விட்டார்கள் என்பது தான் எங்களுடைய . . . (குறுக்கீடு) அந்த அரசியல் நிர்ணயச்சபைக் கூட்டத்தில் பண்டித நேரு அவர்கள் 1946-ம் ஆண்டு அருமையான பேச்சை பேசியிருக்கிறார். அதில் மாநிலங்களுக்கு எவ்வளவு பெரிய உரிமைகள் கொடுக்கப்பட வேண்டுமென்று பேசியிருக்கிறார். அதைப் படித்துத் தான் நாங்கள் பேசினோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நியாயமான உரிமைகள் கேட்டால் அது தரப்படும். அநியாயமான உரிமைகள் கேட்டால் தடுக்கப்படும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தருகின்ற இடத்தில் அம்மையார் இல்லை என்பது தான் எங்கள் கவலை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு. ஏ. எம். இராஜா: ஆளும் காங்கிரஸ் கட்சித் தலைவரவர்கள் பேசும் போது குறிப்பிட்டார்கள். அப்படி வரலாறு இல்லை என்று, அபுல் கலாம் ஆசாத் அவர்கள் காங்கிரஸ் ஒன்றாக இருந்த நேரத்தில் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டவர். இதை மறுக்கப்பட்டார்கள் என்று நம்புகிறேன். India wins freedom என்று அவர் எழுதிய புத்தகத்தில் எப்படி காங்கிரஸ் தலைவர்கள் அதிகார வெறியின் காரணமாக இந்த மாநில சுயாட்சி கொள்கையைக் கொலை செய்தார்கள் என்று அவர் திட்ட வட்டமாகக் கூறியிருக்கிறார்கள் என்பதைப் படித்துப் பார்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: பேரவைத் தலைவரவர்களே, அவையில் இருக்கின்ற நிதி ஒதுக்கல் மசோதா மீது சில கருத்துக்களை சொல்லலாம் என்று கருதுகிறேன்.

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி] [1974 ஏப்ரல் 9]

எனக்கு முன்பு பேசியவர் உரத்திற்கு உலகத்தில் எவ்வாறு தட்டுப்பாடு இருக்கிறது என்பது பற்றியும், அது நம் மாநிலத்தை எவ்வகையில் பாதிக்கும் என்றும் குறிப்பிட்டார்கள். பொதுவாக உரத் தட்டுப்பாடு என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயமாகயிருப்பினும் கூட அது நம் மாநிலத்தினுடைய உற்பத்தியை உபரி மாநிலமாக இருக்கக்கூடிய தன்மையை அது பாதிக்கக்கூடிய நிலையில் இருக்கிறதா என்பதைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்ப்போமானால் நிச்சயம் அந்த அளவுக்கு அஞ்ச வேண்டியதில்லை என்று நான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.

இதிலே நாம் ஒரு விஷயத்தைச் சற்று கூர்ந்து பார்க்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். பொதுவாக நம்முடைய மாநிலத்திலே இந்த துறையை எடுத்துக் கொண்டால், இந்த விவசாயக் துறையில் நாம் முக்கிய விவசாயத் துறையை எடுத்துக்கொண்டால், இந்த விவசாயத் துறையில் முக்கியமான பொறுப்புக்களை நாம் ஒப்படைத்திருக்கிறோம். நம் மாநிலம் உணவுத் தேவையை பூர்த்திசெய்து நிறைவேற்றக்கூடிய காரணத்திற்காக முக்கியமான காரியங்களை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆராய்ச்சி அவர்கள் கையில் இருக்கிறது.

அது போல விளம்பரம் அதாவது தாங்கள் செய்யக்கூடிய ஆராய்ச்சியின் பலன் நம்முடைய விவசாயிகளுக்குப் போய் சேருவதற்கு நல்ல முறையில் பயன்படுமாறு அந்த விளம்பரத் துறையை அவர்கள் கையில் கொடுத்திருக்கிறோம்.

அதைப் போல பூச்சிக் கொல்லி மருந்து அதை வினியோகிக்கக் கூடியது எந்தெந்த நோத்தில் எந்த பூச்சிக் கொல்லி மருந்தால் நோயை தடுக்க வேண்டும் என்பது பற்றி அவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டியது, அந்த பொறுப்பும் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறோம். ஆனல் இந்த உரத் தட்டுப்பாடு தமிழ் நாட்டை பாதிக்கக் கூடிய நிலைமையில் இருக்கும் நேரத்தில் உர வினியோகத்தை அந்தத் துறையில் நாம் கொடுத்திருக்கிறோமா என்று கேட்டால் நிச்சயமாக இல்லை.

இதிலே என்னுடைய கருத்து என்னவென்று கேட்டால் நம்முடைய மாநிலத்தின் உணவு உற்பத்தியை நிறைவேற்றுவதற்கு இருக்கக் கூடிய முக்கியமான முழுப் பொறுப்பையும் நமது விவசாயத் துறையிடம் கொடுத்திருக்கும்போது, இந்த உர வினியோகத்தைக் கூட நாம் ஏன் அந்தத் துறையிடம் கொடுத்து விடக் கூடாது? உரம் பற்றுக்குறை இருக்கக் கூடிய



1974 ஏப்ரல் 9] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

நேரத்தில், எந்தெந்த இடத்தில் எந்த அளவு உரம் போடலாம் என்று ஆலோசனை செய்து அந்தத் துறையினர் செய்யும். அதற்குப் பதில் ரெவின்யூ துறை, கூட்டுறவுத் துறை இருக்குமென்றால் நிச்சயமாகச் செய்ய முடியாது. எனவே, இந்த நேரத்தில் நாம் இந்த வினியோகிக்கும் உரிமையை, நமக்கு இருக்கக் கூடிய உரப் பற்றுக்குறை இருக்கிறதே, அந்தப் பற்றுக்குறையை சமாளிப்பதற்கு, நாம் நம்முடைய உணவுத் துறையிடமே இந்த உர வினியோகத்தை ஏன் விட்டுவிடக் கூடாது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாம் அப்படி ஒப்படைப்பது மூலமாக உரத்தில் நாம் நிச்சயமாக வேஸ்டேஜ் ஏதாவது ஏற்படாமல் தடுக்கலாம். எந்த இடத்திற்கு அந்த உரங்கள் கொடுக்க வேண்டுமோ அந்த இடத்திற்குக் கொடுப்பது, மற்றும் தேவையான இடத்திற்கு எடுத்துச் செல்ல முடியும். இதைச் சொல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறதே அந்த வாய்ப்பெல்லாம் நம்முடைய உணவு இலாக்காவுக்கு, உணவுத் துறையிடம் இருக்கிறது. அந்த முறையில் இதைக் கொடுத்தால் இந்த உரப் பற்றுக்குறை நிலைமையைச் சமாளித்து, நம்முடைய மாநிலம் உணவுத் தன்மையில் உபரி மாநிலமாக இருக்கக் கூடிய நிலைமை ஏற்பட முடியுமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அவர்களிடம் ஒப்படைத்தால் பிளாக் லெவலில் ஏ.ஈ.ஓ-க்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பி.டி.ஓ. கண்ட்ரோலாக இருந்தாலும் நமக்கு ஒரு பயம் ஏற்படலாம். அங்கே சேர்மென் இருக்கிறார்கள். பஞ்சாயத்து பிரசிடெண்ட் இவர்களெல்லாம் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் சொல்லி அதில் ஏதாவது தவறு நடந்து விடுமோ என்று அச்சப்படலாம். அப்படி இருந்தால் இந்த வினியோக முறையை பஞ்சாயத்து யூனியன் இருக்கிறதே அவர்களுடைய கட்டுப்பாட்டுக்கு இல்லாமல் தனியாக இயங்கக் கூடிய ஏ.ஈ.ஓ-க்கள் நேரடியாக உணவு இலாக்காவின் கண்காணிப்பில் இயங்கக்கூடிய இந்த ஏ.ஈ.ஓ.-க்கள் மூலம் நாம் இந்த வினியோகத்தைக் கொடுப்பது மூலம் உரப் பற்றுக் குறையைச் சமாளிக்க வாய்ப்பிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் ஆலோசித்துப் பார்க்க வேண்டும். அந்த ஒரு நல்ல முடிவுதான் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய உற்பத்தியைத் தூண்டுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக ஏற்படும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

[திரு. சௌடி எஸ் சுந்தரபாரதி] [1974 ஏப்ரல் 9

அதைப் போல மதுரை ஜில்லாவில் அக்ரிகல்சுரல் டெவலப்மெண்ட்
பிராஞ்ச் என்று ஸ்டேட் பாங்க் பிராஞ்ச அங்கே வைத்திருக்கிறார்கள்.
விவசாயிகளுக்கு வேண்டிய எல்லாவிதமான கடன் வசதிகளை அங்கே கொடுத்து
நல்ல முறையில் அது செயல்பட்டிருக்கிறது. 2 வருஷத்திற்கு முன்பு 73
என்று நினைக்கிறேன் அது ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது அங்கே நல்ல
முறையில் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்குப் பயன்பட்டு
வருகிறது. அந்த முறையை இன்னும் எல்லா இடங்களுக்கும் விஸ்தரிப்பதற்கு
ஒரு ஏற்பாட்டை செய்யக் கூடிய நிலையிருந்தால் அது நலமாக இருக்கும் என்ற
முறையில், குறிப்பாக இராமநாதபுரம் ஜில்லா பிற்பட்ட பகுதிக்கு இந்த
பிராஞ்ச் ஏற்படுத்தினால் அங்குள்ள விவசாயிகள் நல்ல முறையில் பயன்
படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம் மெடிகல் இலாக்காவைப் பொறுத்த வரையில்
சென்னையில் மன நோய் மருத்துவ விடுதி இருக்கிறது. அங்கே வெளியூரி
லிருந்து மன நோய்—மெண்டல்—பேஷண்டுகள் வருகிறார்கள். வந்தவுடனே
10 பேர், 20 பேர் வந்தால் அவர்களுக்கு உடனடியாக அட்மிஷன் கிடைப்ப
தில்லை. ஒன்றிரண்டு பேருக்குத் தான் அட்மிஷன் கிடைக்கிறது. மற்றவர்கள்
அவுட் பேஷண்டுகளாக இருந்து ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொள்ளக் கூடிய
நிலையிருக்கிறது. பத்து பேர் வந்தால் அவர்கள் வெளியே போய் லாட்ஜில்
இருந்து ஆஸ்பத்திரிக்கு வந்து ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொள்ள வேண்டிய
நிலையும், அந்த வார்டுகளில் அட்மிஷன் கிடைப்பதற்கு வழியில்லாமல்
இருக்கிறது.

(முற்பகல் 11-30)

எனவே, அவர்களுக்கென்று தனியாக ஒரு பிளாக்கை ஏற்படுத்தி, அவுட்
பேஷன்ட்ஸ் வெளியிலே உள்ள லாட்ஜ்களிலே தங்கியிருந்து ட்ரீட்மெண்ட்
எடுப்பதற்குப் பதிலாக, 'அவுட் பேஷன்ட் ப்ளாக்' என்று சர்க்காரே கட்டிக்
கொடுத்து ஒருநாளைக்கு 8 அணா அல்லது 1 ரூபாய் என்று குறைந்த
வாடகையில் ஏற்பாடு செய்தால் நன்மையாக இருக்கும். அங்கேயிருக்கிற
லாஸ்ட் க்ரேட் சர்வெண்ட்ஸ்க்கு குவார்ட்டர்ஸ் வேண்டுமென்று நெடுநாளைய
கோரிக்கை இருக்கிறது. அரசாங்கத்தில்கூட அதற்காக 40 இலட்சம் ரூபாயில்
திட்டம் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அந்த 40 இலட்சம் ரூபாயையும்
உடனடியாக இந்த குவார்ட்டர்ஸ்க்குச் செலவழிக்க முடியாவிட்டாலும்
வருஷத்திற்கு 5 இலட்சம் ரூபாய் என்ற அளவிலாவது கொஞ்சம் கொஞ்சமாக
நிறைவேற்றிக் கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறதா என்பதை ஆலோசித்து
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 9] [திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி]

நம்முடைய மாநிலத்திலே சைனிக் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியிலே ஒரு வருஷத்திற்கு 100 அல்லது 80 பேர்கள் புதிதாக எடுக்கப்படுகிறார்கள். நம்முடைய மாநிலத்திலிருந்து 50 அல்லது 55 பேர்களுக்குத் தான் ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம். மீதியுள்ள இடங்களுக்கு வேறு மாநிலத்து மாணவர்களுக்கு அந்தந்த அரசாங்கங்கள் ஸ்காலர்ஷிப் கொடுத்து வருகிறார்கள். நம்முடைய மாநிலத்திலே இப்படிப்பட்ட பள்ளியிருந்தும்கூட, நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு அதிகமாக வாய்ப்பிருந்தும்கூட அதிகப்படியான மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்காத நிலையிருப்பதால், சுமார் 50 இடங்கள்தான் கிடைப்பதால் வேறு மாநில மாணவர்களுக்குப் போய்விடுகிறது. 90 பேர் எடுக்க வேண்டியிருந்தால் அந்த 90 பேருக்குமே நம்முடைய அரசாங்கம் ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்குத் தேவையான பணம் இல்லை என்ற நிலை இருந்தாலும்கூட எப்படியாவது இந்த வாய்ப்பை இழந்துவிடக்கூடாது என்று அதற்கு வேண்டிய பணத்தை எந்த முறையிலாவது ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய கைத்தறியாளர்களைப்பற்றி ஒருசில வார்த்தைகள் கூறி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். கைத்தறியாளர்களுடைய கஷ்டத்தைப் போக்குவதற்காக புதிய சட்டத்தைக் கொண்டு வருவதாக இருக்கிறது. அரசு பல காரியங்களைச் செய்துகொண்டு வருகிறது. இருந்தாலும்கூட கூட்டுறவுத் துறைக்கு அப்பால் உள்ள கைத்தறியாளர்களுடைய மனதில் ஒரு எண்ணம் இருக்கிறது, தமிழகத்தில் தாங்கள் அனாதை போல் இருக்கிறோம் என்ற எண்ணம் அவர்கள் மத்தியில் இருக்கிறது. பென்சிலின் ஊசி வருகிறது வருகிறது என்று சொல்லிக்கொண்டேயிருந்து உயிர் போய்விட்டால் எப்படியோ அம்மாதிரி இல்லாமல், இந்தச் சட்டம் வருவதற்குள் இடைக்காலத்தில் அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்க சட்ட முன்வடிவினையொட்டி நான் ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்பது இந்த அரசின் கொள்கை என்று சொல்லப்படுகிறது. நானும் மூன்றாண்டுக்காலமாக, கை வலிக்கத் தட்டிப் பார்த்துவிட்டேன், ஆனால் கதவுகள் திறக்கப்படவில்லை.

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1974 ஏப்ரல் 9

சங்கடம் ஏற்படுகின்ற அளவிற்கும், வாய் வலிக்கவும் நான் கேட்டும் விட்டேன். ஆனால் கொடுக்கப்பட்டதோ ஒரு பெரிய வட்டம்தான். ஆகவே இன்றைக்கும் இறுதி நிதி ஒதுக்கம் செய்யப்படும் இந்த நேரத்திலேயும் என்னுடைய கருத்துக்களை, அவலக் கோரிக்கைகளை மீண்டும் எழுப்புவதற்கு முன் வந்துள்ளேன்.

கேவலம் ஒரு பஸ் ரூட் சென்னையையும் பள்ளப்பட்டியையும் இணைக்கின்ற விதத்தில் வேண்டுமென்று மூன்றாண்டுக் காலமாக, இன்று நேற்று அல்ல, 10 முறைகளுக்கும் அதிகமாக சம்பந்தப்பட்ட அமைச்சரவர்களிடத்திலே மிகவும் கெஞ்சுவதோடு, பணிவோடு கேட்டு விட்டேன். இதோ சில மாதங்களில் தரப்படும் என்ற வாக்குறுதியைத்தான் தந்தார்கள். இப்படி வாக்குறுதி களிலேயே என்னுடைய காலம் கழிகிறது. என்னுடைய தொகுதி இருப்புப் பாதை இல்லாத தொகுதி, எந்த மூலையிலும் இருப்புப் பாதை கிடையாது. எனவே குறைந்தபட்சம் போக்குவரத்திற்காக பஸ்ஸாவது ஒழுங்காக அமைக்கப்பட்டால்தான் அங்கே பல வசதிகள் ஏற்பட முடியும். அதற்காகக் கேட்டும் எந்த ஒரு ரூட்டும் கிடைக்கவில்லை என்றால் எவ்வளவு மன வேதனை அளிக்கும் என்பதை என்னுடைய நிலையிலிருந்து மற்றவர்கள் உணர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு கோரிக்கை என்னவென்றால் அரசின் கொள்கையாக ஏற்க வேண்டுமென்பதைப் பொறுத்தது. இந்த நாட்டிலேயுள்ள பகுதிகளை முன் போக்கு அடைந்த பகுதிகள், அதாவது வளர்ச்சி பெற்ற பகுதிகள் என்றும் பின்தங்கிய பகுதிகள் என்றும் இரண்டு கூறுகளாகப் பிரித்து, பின்தங்கிய பகுதிகளை வளர்ச்சி பெற்ற பகுதிகளுக்கு இணையாக வளர்ச்சியுறச் செய்கின்ற சிறப்புத் திட்டங்களைக் கொண்டு வர வேண்டும். அதற்காகத் தனிக் குழுவை அமைச்சரவை ஏற்படுத்தி என்னென்ன திட்டங்களைப் பிற்பட்ட பகுதிகளுக்குச் செய்தால் அங்கே வளர்ச்சியுறச் செய்ய முடியும் என்று பார்ப்பதற்காக குழுவை அமையுங்கள் என்று நீண்ட நெடுங்காலமாகக் கேட்டு வருகிறேன். அப்படிப் பட்ட குழுவும் இதுவரையில் அமைக்கப்படவில்லை. ஆலிவர் கோல்ட் ஸ்மித், தண்ணீரில் முழுகுகின்ற பொருள் மிகமிக, அதன்மீது கன சக்தி ஏற்பட ஏற்பட மூழ்கிக்கொண்டே போகும் என்று சொன்னமாதிரி, என்னுடைய தொகுதி மக்கள் வறுமையிலே வாடிக்கொண்டிருக்கின்ற நேரத்திலே, இன்னும் விலைவாசியேற்றம், பொருளாதாரச் சிக்கல்கள் ஆகியவைகளின் காரணமாக அவர்களின் தரம் தாழ்கிறதே தவிர அவர்களுக்கு மீட்பு நிலை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, என்னுடைய தொகுதி மக்களின் உதவிக்கு வருமாறு மீண்டும் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 9] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், நமது தொழி லமைச்சர் அவர்கள் இருக்கிறார்களே, ஒரு சல்லிக்காசுகூட—என்னுடைய பகுதியிலே சல்லிக் காசு என்று சொல்வார்கள்—ஒரு சல்லிக்காசுக்குக் கூட என்னுடைய தொகுதியில் நிறைவேற்றப்படவில்லை. அப்படியில்லை என்றால் சொல்லட்டும், நான் ஒத்துக் கொள்கிறேன். எத்தனையோ கோடி ரூபாய்கள் இந்த மூன்றாண்டுக் காலத்தில் அல்லது ஏழாண்டுக் காலத்தில் செலவழிக்கப்பட் டிருக்கிறது, பல தொகுதிகளில் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள தொழிற்சாலைகள் வந்திருக்கின்றன. ஆனால் என்னுடைய தொகுதியிலே ஒரு ஒத்தைச் சல்லிக்காசுக்குக்கூட தொழிற்சாலை வளம் எதுவும் பெருக்கப் படவில்லை என்றால் இது நியாயந்தானா. என் இம்மாதிரியாகப் புறக்கணிப்பு செய்கிறது என்ற வேதனைக் குரலை எழுப்ப ஆசைப்படுகிறேன்.

அடுத்து, சின்னதாராபுரம் அருகில் ஒரு காகிதத் தொழிற்சாலை ஏற்பட வேண்டுமென்று விரும்புகிறேன். புகலூர் போன்ற இடங்களில் கிடைக்கிற கச்சாப் பொருட்களைக் கொண்டும், கரும்புச் சக்கை போன்றவைகளை உப யோகப்படுத்தியும் அங்கே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு கண்ணாடித் தொழிற்சாலையையும் ஆரம்பிக்க வேண்டும். அதற்குக் கச்சாப் பொருள் வேண்டுமென்று கேட்பார்கள். என்னுடைய தொகுதியில் கிடைக்கின்ற கல்லையும், மண்ணையும் உபயோகப்படுத்தி, கச்சாப் பொருட்களாக உபயோகப்படுத்தி ஏற்படுத்தக் கூடிய தொழிற்சாலை என்று இருந்தால் அது கண்ணாடித் தொழிற்சாலையாகத்தான் இருக்கும். எனவே அதிலே சற்றுக் கவனம் செலுத்தி அங்கே கண்ணாடித் தொழிற்சாலை ஏற்படுத்த அமைச்சரவை முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால் அங்கே வெங்கற்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. அதைப் பயன்படுத்துவதற்கு அங்கே தொழிற்சாலை அமைக்கலாம். 'செமி ப்ரெஷஸ் ஸ்டோன்ஸ்' அதிக மாக அங்கே கிடைக்கிறது. அதை அரசாங்கம் இதுவரையில் கவனித்ததாகத் தெரியவில்லை. ஆனால் தனியார் நல்ல பலனை அடைகிறார்கள். தனிப்பட்ட வியாபாரிகள் விவசாயிகளை ஏமாற்றி குறைந்த விலைக்கு வாங்கி அதிக லாபத்தை அடைகிறார்கள். அதை பாலிஷ் செய்வதற்கு ராஜஸ்தான் மாநிலத்தில் இருப்பதைப்போன்று ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த கருணை யோடு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நொய்யல் ஆற்றுத் திட்டத்தைப்பற்றி நான் பேசாத நாளே இல்லை. கேட்பவர்களுக்குக்கூட சலிப்புத் தட்டும் இதைத் தவிர வேறு இல்லையா என்று. ஆனால் இது ஜீவாதாரமான பிரச்சினை, என்னுடைய

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1974 ஏப்ரல் 9

சங்கடம் ஏற்படுகின்ற அளவிற்கும், வாய் வலிக்கவும் நான் கேட்டும் விட்டேன். ஆனால் கொடுக்கப்பட்டதோ ஒரு பெரிய வட்டம்தான். ஆகவே இன்றைக்கும் இறுதி நிதி ஒதுக்கம் செய்யப்படும் இந்த நேரத்திலேயும் என்னுடைய கருத்துக்களை, அவலக் கோரிக்கைகளை மீண்டும் எழுப்புவதற்கு முன் வந்துள்ளேன்.

கேவலம் ஒரு பஸ் ரூட் சென்னையையும் பள்ளப்பட்டியையும் இணைக்கின்ற விதத்தில் வேண்டுமென்று மூன்றாண்டுக் காலமாக, இன்று நேற்று அல்ல, 10 முறைகளுக்கும் அதிகமாக சம்பந்தப்பட்ட அமைச்சரவர்களிடத்திலே மிகவும் கெஞ்சுவதோடு, பணிவோடு கேட்டு விட்டேன். இதோ சில மாதங்களில் தாப்படும் என்ற வாக்குறுதியைத்தான் தந்தார்கள். இப்படி வாக்குறுதி களிலேயே என்னுடைய காலம் கழிகிறது. என்னுடைய தொகுதி இருப்புப் பாதை இல்லாத தொகுதி, எந்த மூலையிலும் இருப்புப் பாதை கிடையாது. எனவே குறைந்தபட்சம் போக்குவரத்திற்காக பஸ்ஸாவது ஒழுங்காக அமைக்கப்பட்டால்தான் அங்கே பல வசதிகள் ஏற்பட முடியும். அதற்காகக் கேட்டும் எந்த ஒரு ரூட்டும் கிடைக்கவில்லை என்றால் எவ்வளவு மன வேதனை அளிக்கும் என்பதை என்னுடைய நிலையிலிருந்து மற்றவர்கள் உணர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு கோரிக்கை என்னவென்றால் அரசின் கொள்கையாக ஏற்க வேண்டுமென்பதைப் பொறுத்தது. இந்த நாட்டிலேயுள்ள பகுதிகளை முற் போக்கு அடைந்த பகுதிகள், அதாவது வளர்ச்சி பெற்ற பகுதிகள் என்றும், பின்தங்கிய பகுதிகள் என்றும் இரண்டு கூறுகளாகப் பிரித்து, பின்தங்கிய பகுதிகளை வளர்ச்சி பெற்ற பகுதிகளுக்கு இணையாக வளர்ச்சியுறச் செய்கின்ற சிறப்புத் திட்டங்களைக் கொண்டு வர வேண்டும். அதற்காகத் தனிக் குழுவை அமைச்சரவை ஏற்படுத்தி என்னென்ன திட்டங்களைப் பிற்பட்ட பகுதிகளுக்குச் செய்தால் அங்கே வளர்ச்சியுறச் செய்ய முடியும் என்று பார்ப்பதற்காக குழுவை அமையுங்கள் என்று நீண்ட நெடுங்காலமாகக் கேட்டு வருகிறேன். அப்படிப் பட்ட குழுவும் இதுவரையில் அமைக்கப்படவில்லை. ஆலிவர் கோல்ட் ஸ்மித், தண்ணீரில் முழுகுகின்ற பொருள் மிகமிக, அதன்மீது கன சக்தி ஏற்பட ஏற்பட மூழ்கிக்கொண்டே போகும் என்று சொன்னமாதிரி, என்னுடைய தொகுதி மக்கள் வறுமையிலே வாடிக்கொண்டிருக்கின்ற நேரத்திலே, இன்னும் விலைவாசியேற்றம், பொருளாதாரச் சிக்கல்கள் ஆகியவைகளின் காரணமாக அவர்களின் தரம் தாழ்கிறதே தவிர அவர்களுக்கு மீட்பு நிலை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, என்னுடைய தொகுதி மக்களின் உதவிக்கு வருமாறு மீண்டும் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 9] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், நமது தொழி லமைச்சர் அவர்கள் இருக்கிறார்களே, ஒரு சல்லிக்காசுகூட—என்னுடைய பகுதியிலே சல்லிக் காசு என்று சொல்வார்கள்—ஒரு சல்லிக்காசுக்குக் கூட என்னுடைய தொகுதியில் நிறைவேற்றப்படவில்லை. அப்படியில்லை என்றால் சொல்லட்டும், நான் ஒத்துக் கொள்கிறேன் எத்தனையோ கோடி ரூபாய்கள் இந்த மூன்றாண்டுக் காலத்தில் அல்லது ஏழாண்டுக் காலத்தில் செலவழிக்கப்பட் டிருக்கிறது, பல தொகுதிகளில் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள தொழிற்சாலைகள் வந்திருக்கின்றன. ஆனால் என்னுடைய தொகுதியிலே ஒரு ஒத்தைச் சல்லிக்காசுக்குக்கூட தொழிற்சாலை வளம் எதுவும் பெருக்கப் படவில்லை என்றால் இது நியாயந்தானா, என் இம்மாதிரியாகப் புறக்கணிப்பு செய்கிறது என்ற வேதனைக் குரலை எழுப்ப ஆசைப்படுகிறேன்.

அடுத்து, சின்னதாராபுரம் அருகில் ஒரு காகிதத் தொழிற்சாலை ஏற்பட வேண்டுமென்று விரும்புகிறேன். புகலூர் போன்ற இடங்களில் கிடைக்கிற கச்சாப் பொருட்களைக் கொண்டும், கரும்புச் சக்கை போன்றவைகளை உப யோகப்படுத்தியும் அங்கே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு கண்ணாடித் தொழிற்சாலையையும் ஆரம்பிக்க வேண்டும். அதற்குக் கச்சாப் பொருள் வேண்டுமென்று கேட்பார்கள். என்னுடைய தொகுதியில் கிடைக்கின்ற கல்லையும், மண்ணையும் உபயோகப்படுத்தி, கச்சாப் பொருட்களாக உபயோகப்படுத்தி ஏற்படுத்தக் கூடிய தொழிற்சாலை என்று இருந்தால் அது கண்ணாடித் தொழிற்சாலையாகத்தான் இருக்கும். எனவே அதிலே சற்றுக் கவனம் செலுத்தி அங்கே கண்ணாடித் தொழிற்சாலை ஏற்படுத்த அமைச்சரவை முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால் அங்கே வெங்கற்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. அதைப் பயன்படுத்துவதற்கு அங்கே தொழிற்சாலை அமைக்கலாம். 'செமி ப்ரெஷஸ் ஸ்டோன்ஸ்' அதிக மாக அங்கே கிடைக்கிறது. அதை அரசாங்கம் இதுவரையில் கவனித்ததாகத் தெரியவில்லை. அதனால் தனியார் நல்ல பலனை அடைகிறார்கள். தனிப்பட்ட வியாபாரிகள் விவசாயிகளை ஏமாற்றி குறைந்த விலைக்கு வாங்கி அதிக லாபத்தை அடைகிறார்கள். அதை பாலிஷ் செய்வதற்கு ராஜஸ்தான் மாநிலத்தில் இருப்பதைப்போன்று ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த கருணை யோடு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நொய்யல் ஆற்றுத் திட்டத்தைப்பற்றி நான் பேசாத நாளே இல்லை. கேட்பவர்களுக்குக்கூட சலிப்புத் தட்டும் இதைத் தவிர வேறு இல்லையா என்று. ஆனால் இது ஜீவாதாரமான பிரச்சினை, என்னுடைய

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1974 ஏப்ரல் 9

சங்கடம் ஏற்படுகின்ற அளவிற்கும், வாய் வலிக்கவும் நான் கேட்டும் விட்டேன். ஆனால் கொடுக்கப்பட்டதோ ஒரு பெரிய வட்டம்தான். ஆகவே இன்றைக்கும் இறுதி நிதி ஒதுக்கம் செய்யப்படும் இந்த நேரத்திலேயும் என்னுடைய கருத்துக்களை, அவலக் கோரிக்கைகளை மீண்டும் எழுப்புவதற்கு முன் வந்துள்ளேன்.

கேவலம் ஒரு பஸ் ரூட் சென்னையையும் பள்ளப்பட்டியையும் இணைக்கின்ற விதத்தில் வேண்டுமென்று மூன்றாண்டுக் காலமாக, இன்று நேற்று அல்ல, 10 முறைகளுக்கும் அதிகமாக சம்பந்தப்பட்ட அமைச்சரவர்களிடத்திலே மிகவும் கெஞ்சுவதோடு, பணிவோடு கேட்டு விட்டேன். இதோ சில மாதங்களில் தரப்படும் என்ற வாக்குறுதியைத்தான் தந்தார்கள். இப்படி வாக்குறுதி களிலேயே என்னுடைய காலம் கழிகிறது. என்னுடைய தொகுதி இருப்புப் பாதை இல்லாத தொகுதி, எந்த மூலையிலும் இருப்புப் பாதை கிடையாது. எனவே குறைந்தபட்சம் போக்குவரத்திற்காக பஸ்ஸாவது ஒழுங்காக அமைக்கப்பட்டால்தான் அங்கே பல வசதிகள் ஏற்பட முடியும். அதற்காகக் கேட்டும் எந்த ஒரு ரூட்டும் கிடைக்கவில்லை என்றால் எவ்வளவு மன வேதனை அளிக்கும் என்பதை என்னுடைய நிலையிலிருந்து மற்றவர்கள் உணர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு கோரிக்கை என்னவென்றால் அரசின் கொள்கையாக ஏற்க வேண்டுமென்பதைப் பொறுத்தது. இந்த நாட்டிலேயுள்ள பகுதிகளை முற் போக்கு அடைந்த பகுதிகள், அதாவது வளர்ச்சி பெற்ற பகுதிகள் என்றும், பின்தங்கிய பகுதிகள் என்றும் இரண்டு கூறுகளாகப் பிரித்து, பின்தங்கிய பகுதிகளை வளர்ச்சி பெற்ற பகுதிகளுக்கு இணையாக வளர்ச்சியுறச் செய்கின்ற சிறப்புத் திட்டங்களைக் கொண்டு வர வேண்டும். அதற்காகத் தனிக் குழுவை அமைச்சரவை ஏற்படுத்தி என்னென்ன திட்டங்களைப் பிற்பட்ட பகுதிகளுக்குச் செய்தால் அங்கே வளர்ச்சியுறச் செய்ய முடியும் என்று பார்ப்பதற்காக குழுவை அமையுங்கள் என்று நீண்ட நெடுங்காலமாகக் கேட்டு வருகிறேன். அப்படிப் பட்ட குழுவும் இதுவரையில் அமைக்கப்படவில்லை. ஆலிவர் கோல்ட் ஸ்மித், தண்ணீரில் முழுகுகின்ற பொருள் மிகமிக, அதன்மீது கன சக்தி ஏற்பட ஏற்பட மூழ்கிக்கொண்டே போகும் என்று சொன்னமாதிரி, என்னுடைய தொகுதி மக்கள் வறுமையிலே வாடிக்கொண்டிருக்கின்ற நேரத்திலே, இன்னும் விலைவாசியேற்றம், பொருளாதாரச் சிக்கல்கள் ஆகியவைகளின் காரணமாக அவர்களின் தரம் தாழ்கிறதே தவிர அவர்களுக்கு மீட்பு நிலை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, என்னுடைய தொகுதி மக்களின் உதவிக்கு வருமாறு மீண்டும் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 9] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், நமது தொழி லமைச்சர் அவர்கள் இருக்கிறார்களே, ஒரு சல்லிக்காசுகூட—என்னுடைய பகுதியிலே சல்லிக் காசு என்று சொல்வார்கள்—ஒரு சல்லிக்காசுக்குக் கூட என்னுடைய தொகுதியில் நிறைவேற்றப்படவில்லை. அப்படியில்லை என்றால் சொல்லட்டும், நான் ஒத்துக் கொள்கிறேன். எத்தனையோ கோடி ரூபாய்கள் இந்த மூன்றாண்டுக் காலத்தில் அல்லது ஏழாண்டுக் காலத்தில் செலவழிக்கப்பட் டிருக்கிறது, பல தொகுதிகளில் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள தொழிற்சாலைகள் வந்திருக்கின்றன. ஆனால் என்னுடைய தொகுதியிலே ஒரு ஒத்தைச் சல்லிக்காசுக்குக்கூட தொழிற்சாலை வளம் எதுவும் பெருக்கப் படவில்லை என்றால் இது நியாயந்தானா. ஏன் இம்மாதிரியாகப் புறக்கணிப்பு செய்கிறது என்ற வேதனைக் குரலை எழுப்ப ஆசைப்படுகிறேன்.

அடுத்து, சின்னதாராபுரம் அருகில் ஒரு காகிதத் தொழிற்சாலை ஏற்பட வேண்டுமென்று விரும்புகிறேன். புகளூர் போன்ற இடங்களில் கிடைக்கிற கச்சாப் பொருட்களைக் கொண்டும், கரும்புச் சக்கை போன்றவைகளை உப யோகப்படுத்தியும் அங்கே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு கண்ணாடித் தொழிற்சாலையையும் ஆரம்பிக்க வேண்டும். அதற்குக் கச்சாப் பொருள் வேண்டுமென்று கேட்பார்கள். என்னுடைய தொகுதியில் கிடைக்கின்ற கல்லையும், மண்ணையும் உபயோகப்படுத்தி, கச்சாப் பொருட்களாக உபயோகப்படுத்தி ஏற்படுத்தக் கூடிய தொழிற்சாலை என்று இருந்தால் அது கண்ணாடித் தொழிற்சாலையாகத்தான் இருக்கும். எனவே அதிலே சற்றுக் கவனம் செலுத்தி அங்கே கண்ணாடித் தொழிற்சாலை ஏற்படுத்த அமைச்சரவை முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால் அங்கே வெங்கற்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. அதைப் பயன்படுத்துவதற்கு அங்கே தொழிற்சாலை அமைக்கலாம். 'செமி ப்ரெஷஸ் ஸ்டோன்ஸ்' அதிக மாக அங்கே கிடைக்கிறது. அதை அரசாங்கம் இதுவரையில் கவனித்ததாகத் தெரியவில்லை. அதனால் தனியார் நல்ல பலனை அடைகிறார்கள். தனிப்பட்ட வியாபாரிகள் விவசாயிகளை ஏமாற்றி குறைந்த விலைக்கு வாங்கி அதிக லாபத்தை அடைகிறார்கள். அதை பாலிஷ் செய்வதற்கு ராஜஸ்தான் மாநிலத்தில் இருப்பதைப்போன்று ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த கருணை யோடு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நொய்யல் ஆற்றுத் திட்டத்தைப்பற்றி நான் பேசாத நாளே இல்லை. கேட்பவர்களுக்குக்கூட சலிப்புத் தட்டும் இதைத் தவிர வேறு இல்லையா என்று. ஆனால் இது ஜீவாதாரமான பிரச்சினை, என்னுடைய

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1974 ஏப்ரல் 9

தொகுதி மக்கள் வாழ வேண்டுமென்பதற்காக இப்படிப்பட்ட ஒருசில திட்டங்களையாவது ஏற்படுத்தினால்தான் அவர்கள் வாழ முடியும். ஆகவே, இந்த நேரத்திலேயும் இந்த நிதி ஒதுக்கம் செய்கின்ற இந்த நேரத்திலேயும் நான் அந்த வேண்டுகோளை விடுக்கிறேன். நொய்யல் ஆற்றுத் திட்டத்தைப் பற்றியும் பல ஆண்டுக்காலமாக வலியுறுத்துகிறோம். ஒரு திட்டம் என்றால் அதில் ஆய்வுக் கட்டம் என்று ஒன்று, சீஃப் என்ஜினியர் பரிசீலிப்பது என்று ஒன்று, பிறகு வருவாய்த் துறை பரிசீலிப்பது ஒன்று, பிறகு நிதித் துறை பரிசீலிப்பது ஒன்று, அதற்குப் பிறகு அமைச்சரவை பரிசீலிப்பது என்று ஒன்று, பிறகு மத்திய சர்க்கார் பரிசீலிப்பது என்று ஒன்று. ஆகவே, இப்படியெல்லாம் காலங் கடத்த முடியும். என்னுடைய பலஹீனம் என்னவென்றால் 'பர்ஸ்யூட் ஆஃப் தி பேப்பர்' இந்த பேப்பரைத் துரத்துகின்ற வேலை எனக்குத் தெரியாது. அந்தப் பழக்கம் இன்னும் எனக்கு ஏற்படவில்லை. ஆகவே, அமைச்சரவை இதில் அக்கரை கொண்டு அந்த நொய்யலாற்றுத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் என்னுடைய பகுதி முன்னேற்றமடைவதற்கு இன்னொரு யோசனையையும் கூற விரும்புகிறேன். இந்த மாவட்டங்கள் பரவலாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. திண்டுக்கல்லைத் தலைநகரமாகக் கொண்டு மாவட்டம் ஏற்படுத்தினால் அதிலே பள்ளப்பட்டியைச் சேர்த்து, திண்டுக்கல் மாவட்டத்தைப் பின்தங்கிய மாவட்டம் என்று சொல்லி அங்கே சில வறட்சி நிவாரணத் திட்டங்களை என்னுடைய பகுதிக்கு ஏற்படுத்தித் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆர்ட்ஸ் காலேஜை எடுத்துக்கொண்டால், எளியவன் படித்த காலேஜ் அது. ஒவ்வொருவருக்கும் தான்படித்த கல்லூரி என்றால் அதிலே உள்ள ஒவ்வொரு செங்கல்லும் புனிதமானது என்று கருதுவார்கள். ஆனால் இந்தச் சபையிலே அறிவிக்கப்பட்டது, ஏதேனும் மாற்றங்கள் செய்யப்படுவதாகயிருந்தால், என்னுடைய கட்சியைச் சேர்ந்த பெருந்தலைவர்களோடு கலந்து எல்லோருடைய சம்மதத்தின் பேரில்தான் மாற்றம் செய்யப்படும் என்று இந்தச் சபையில் அறிவிக்கப்பட்டதாக நான் அறிகிறேன்.

ஆனால் துரதுஷ்டவசமாக அது பெண்கள் கல்லூரியாக மாற்றப்படும் என்று திடீரென்று மேலவையில் கல்வியமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. எங்கள் மீது உண்மையான அன்பும், பற்றும், பாசமும், சகோதர பாசமும் கொண்டு எங்களுடைய உண்மையான, நியாயமான கோரிக்கைகளை அனுசரித்து நடக்கக்கூடிய ஆட்சி கடந்த 25 ஆண்டு காலத்திலே ஏதேனும் இருக்கிறது என்றால் அது இந்தத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். இந்த ஆட்சியைத்தான் எங்களுடைய ஆட்சி என்று பெருமையுடன் பேசிக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட இந்த ஆட்சியிலேயே எங்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை என்றால், எங்களுடைய உரிமைகள் பறிக்கப்படும் என்று சொன்னால் பிறகு . . .



1974 ஏப்ரல் 9] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி. தலைவர் அவர்களே, ஆர்ட்ஸ் காலேஜை மகளிர் கல்லூரியாக மாற்றுவது எப்படி உரிமைகளைப் பறிப்பதாகும்?

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மகளிருக்கு ஏற்கனவே வசதிகள் இருந்தன. அரபிக், பர்ஷியன், உருது போன்ற பாடங்களை கற்பதற்கு ஏற்கனவே அங்கு போதுமான வசதிகள் இருந்தன. அந்த வசதிகள் ஒவ்வொன்றாகக் குறைக்கப்பட்டு வந்தது. இன்று கூடதான் இருக்கிறது. மதராஸே பள்ளிக்கூடம் இருக்கிறது. இன்றைக்கு அரசிலிருந்து நிறைய வாக்குறுதிகள் சொல்லலாம். ஆனால் அரசாங்க நிர்வாகச் சூழ்நிலைகள் காரணமாக மறந்து விடுவது இயல்பு. ஏதோ சீட்டி அடித்தான், கல்லைப் போட்டான் என்று ஏதோ காரணங்களைச் சொல்லி அந்த பள்ளி தூக்கி எறியப்பட்டால், நாங்கள் ஆச்சரியப்படப் போவதில்லை. அதை எதிர்பார்த்துத்தான் இருக்கிறோம். மீண்டும் இதுபற்றிப் புனராலோசனை செய்யவேண்டுமென்று முஸ்லீம் சமுதாய மக்களின் சார்பாகவும், பழைய மாணவர்கள் சார்பாகவும் இதயபூர்வமான வேண்டுகோளாக விடுகிறேன்.

தென்னார்காடு மாவட்டத்திலுள்ள லால்பேட்டையில் மருத்துவ மனை ஏற்படுத்த வேண்டுமென்று ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் அது குறித்து அருள்கூர்ந்து பரிசீலிக்க வேண்டும். லால்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. அபுசாலி சார்பாக இந்தக் கோரிக்கையை விடுத்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஏற்படக்கூடிய பெண்கள் கல்லூரிக்குச் சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். நமது நன்மைக்காக ஏற்படுவது சட்டங்கள். இந்தச் சட்டங்கள் அபிவிருத்திக்குத் தடையாக இருக்குமானால் அதைச் சற்றுத் தளர்த்தி அதற்கு அனுமதி தரவேண்டுமென்ற கோரிக்கையை விடுத்துக்கொள்கிறேன்.

தஞ்சைத் தரணியில் பச்சைக் கம்பளங்கள் விரித்தது போன்ற வயல்களைக் கண்டு களித்த முதல்வர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வர இருக்கிறார்கள். அங்கு அவர்கள் பார்ப்பார்கள்—கல்லும் கரடும் மண்ணும் முட்புதரும் கொண்ட காட்சியை அவர்களுடைய கருணை உள்ளத்தில் இரக்கம் சுரக்கும்—என்னுடைய தொகுதி மக்களும் வாழ உரிமை பெற்றவர்கள்தான், அவர்களும் இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்ற முறையில் நல்ல பல திட்டங்களை அறிவிப்பார்கள் என்று நம்புகிறேன். நாங்கள் நம்பிக்கையை இழந்துவிடவில்லை. எதிர்பார்ப்புக்கு ஏற்ப அந்த நம்பிக்கைக்குரிய சில திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பதற்கு முன்வரவேண்டுமென்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். நன்றி.

* திரு. கா. மு. கதிரவன்: தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

இந்த அரசாங்கம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வேண்டுமென்று எவ்வளவோ முயற்சிகளை எடுத்திருக்கிறது. இளைஞர் அணி மூலமாகவும், கோழிப் பண்ணை வளர்ச்சிக் கழகத்தின் மூலமாகவும், பால் உற்பத்தித் திட்டத்தின் மூலமாகவும், மீனளத் துறை இயக்குநரால் அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், போக்குவரத்துக் கழகங்களின்கீழ் அமைக்கப்பட்டிருக்கும் பொறியியல் கழகத்தின் மூலமாகவும், இன்னும் பல்வேறு தொழிற்சாலைகளை இந்தத் தமிழகத்தில் அமைத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க வேண்டுமென்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளை நம்மால பாராட்டாமல் இருக்க முடியாது என்றாலும்கூட. எனது தென்காசி தொகுதியைப் பொறுத்தவரை தென்காசி தாலுகாவில் ஒரு தொழிற்சாலைகூட இன்றையதினம் வரை இல்லையென்பது வருந்தத்தக்க செய்தியாகும். ஆனால், இந்த அரசாங்கம் எனது தொகுதியில் உட்பட்ட செங்கோட்டை வட்டத்திலிருந்த பாலராமவர்மா டெக்ஸ்டைல் மில்ஸ் மூடிக் கிடந்த காலத்தில் அதைத் திறப்பதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு அந்தப் பகுதி மக்கள் சார்பாக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருந்தாலும் கூட தென்காசி வட்டத்திலே அரசின் சார்பாக ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமீபத்தில்கூட இந்தச் சட்டமன்றத்தில் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் போட்டி போட்டுக் கொண்டார்கள். சந்தன மரத்தைப் பயன்படுத்தி ஒரு தொழிற்சாலையை எனது தொகுதியில் அமைக்க வேண்டுமென்று ஒரு உறுப்





பினர் கூற, மற்றொரு உறுப்பினர் எனது தொகுதியில்தான் அமைக்க வேண்டுமென்று கூற—அவர்கள் இரண்டு பேரும் ஒரு பகுதியைச் சார்ந்தவர்களாக இருப்பதால், எந்த இடத்தில் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்தாலும் வீண் தகராறு ஏற்படுமென்று தோன்றுகிறது. ஆகவே, அந்தத் தொழிற்சாலையை சந்தன மரக் காடுகளாக இருக்கும் அம்பாசமுத்திரம், தென்காசி பகுதியில் அமைத்துவிட்டால் அந்த இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கிடையே தகராறு ஏற்படாது. ஆகவே, இதுபோன்ற தொழிற்சாலைகளை எங்கள் பகுதியில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செங்கோட்டை பாலராமவர்மா மில்லில் 1,786 கதிர்கள் இருக்கின்றன. 600 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அதை அரசாங்கம் எடுத்த பிறகு மிகத் திறமையாக அந்த மில் நடந்து கொண்டு வருகிறது. பல லட்சக்கணக்கான ரூபாய் லாபகரமாகக் காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த மில்லை இன்னும் விஸ்தரித்து அதிகமான பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கத் தகுதி பெற்ற மில்லாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதியில் இருக்கும் விவசாயிகள் சார்பாகவும் அந்த விவசாயிக் குடும்பத்தின் சார்பாகவும் எத்தனை முறை நன்றி செலுத்தினாலும் தகும் என்று நினைக்கிறேன். கடந்த இருபதாண்டுக் காலமாக செங்கோட்டை அருகில் குண்டாற்றில் ஒரு அணை கட்ட வேண்டுமென்று கூக்குரல் எழுப்பிக் கொண்டிருந்தோம். இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழக அரசு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையேற்று நடத்தும் இந்த அரசு அந்தத் திட்டத்திற்கு உறுதியளித்து விட்டது என்று கூறியவுடனேயே அந்தப் பகுதி மக்கள் எல்லாம் என்னை அரவணைத்து என்னைப் பாராட்டியதெல்லாம் முதலமைச்சரைச் சாரும், அதற்காக முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

தென்காசி வட்டத்தில் அடவி நயினார்க் கோயில் அணைக்கட்டுத் திட்டத்தையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்ற கடந்த 20 ஆண்டுக் காலமாக வலியுறுத்தி வந்திருக்கிறோம். இன்றையதினம் அதற்கும் அடையாள நிதி ஒதுக்கம் வந்திருப்பது குறித்து உண்மையில் மகிழ்ச்சியடைகிறேன், நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வருஷத்தில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த அரசைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தென்காசியில் ஒரு சப் கோர்ட்டை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தென்காசி பகுதியில் ஒரு கல்லூரி இருந்தது. சமீப காலத்தில் அது மூடப்பட்டு விட்டது. அரசு அந்தப் பகுதியில் ஓர் கல்லூரியை ஏற்படுத்திக் கொடுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செங்கோட்டை ஆயுர்வேத மருத்துவ மனை ஒன்று கோனா அரசு காலத்தில் ஏற்பட்டது இருக்கிறது. அந்த மருத்துவ மனையை சித்த மருத்துவ மனையாக மாற்றிவிடலாமா என்று மருத்துவத் துறையில் ஆலோசித்துக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். தென்காசிப் பகுதியில் திருமலைக் கோயில் என்று இருக்கிறது. அந்தத் தேவஸ்தானத்தின் மூலமாக சித்த வைத்திய மருத்துவ மனையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். தென்காசி அரசு மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பகுதி ஏற்பட்டு இருக்கிறது.

குற்றாலத்திலுள்ள கோயிலைச் சார்ந்து சித்த மருத்துவ மனையை ஏற்படுத்த வேண்டுமென்று முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். தனியார் பல பேர் சித்த மருத்துவ மனையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதற்கு வித்தியாசமான முறையில் செங்கோட்டையிலுள்ள மருத்துவ மனையை ஆயுர்வேத மருத்துவ மனையாகவே தொடர்ந்து வைத்திட வேண்டுமென்று பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்.

செங்கோட்டை தாலுகாவில் இருக்கும் பள்ளிகள் அனைத்தும், ஆரம்பப் பள்ளிகளாக இருந்தாலும் சரி, நடுநிலைப் பள்ளிகளாக இருந்தாலும் சரி, உயர்நிலைப் பள்ளிகளாக இருந்தாலும் சரி, அரசுப் பள்ளிகளாக இருக்கும் காரணத்தால் கட்டடங்களைக் கட்டும்போது பொறி இயல் வல்லுநர்கள் வந்து சேர்ந்து திட்டங்களைத் தீட்டுவதற்கும் அதற்குரிய செயல்களைச் செய்வதற்கும் காலதாமதம் ஆகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் திட்ட வேலைகளுக்காக இரண்டு பேர் இருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தின் இணைந்த பகுதியாக இருக்கும் செங்கோட்டையில் பொறியியல் வல்லுநர்களை நியமித்தால், பள்ளிக்கூடக் கட்டடங்களைச் சீர்திருத்தம் செய்வதோ, புதிய கட்டடங்களைக் கட்டுவதோ விரைவில் நடக்கும்.

அடுத்து, ரோடுரோலர்கள் பற்றி ஒரு வார்த்தை. தென்காசியில் இரண்டு ரோட் ரோலர்கள் இருக்கும் என்று நினைக்கிறேன். ஒன்று எப்போதும் பழுதடைந்து கொண்டிருக்கும். மற்றொன்றுதான் இருக்கிறது. மூன்று பெரிய நகராட்சிகள் அங்கு இருக்கின்றன. கடையநல்லூர் நகராட்சி, செங்கோட்டை நகராட்சி, தென்காசி நகராட்சி. நாலைந்து பஞ்சாயத்து ...





இருக்கின்றன. இவைகளில் ரோடுகள் போடவேண்டுமென்று ரோடு ரோலர்களைக் கேட்டால், அந்த நேரங்களில் ரோடு ரோலர்கள் இருப்பதில்லை. ஆகவே, திட்டங்கள் தீட்டப்பட்டும், பணம் தயாராக இருந்தும், அதற்குரிய இயந்திரங்கள் இல்லாத காரணத்தினால், அந்த ரோடுகள் புதுப்பிக்கப்படாமல் இருந்து வருகின்றன. ஆகவே அதிகப்படியான ரோடு ரோலர்களை அங்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அல்லது சில நகராட்சிகள் எங்களுக்கு தனியாக ரோடு ரோலர்கள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்காவது இந்த அரசு துரிதமான முறையில் அனுமதி அளித்திட்டால் இதுபோன்று ரோடுகளை செப்பனிடும் வேலைகளைத் துரிதமாக செய்து முடிக்க முடியும்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: நிதிவசதியுள்ள ஊராட்சி ஒன்றியங்கள், நிதி வசதி உள்ள நகராட்சிகள் ரோடு ரோலர்களை வாங்கிக் கொள்ளலாம் என்பதற்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.

திரு. கா. மு. கதிரவன்: அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தென்காசி நகராட்சியில் இருந்து ஒரு ரோடு ரோலர் வேண்டுமென்று அரசாங்கத்திற்கு சமீபத்தில் அனுப்பியிருக்கிறார்கள் என்று அங்குள்ள நகராட்சியைச் சேர்ந்தவர்கள் கூறினார்கள். அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

உரத்தைப் பொறுத்தவரையில் சில தவறுகள் ஆங்காங்கு ஏற்படத்தான் செய்கின்றன. ஆகவே அரசாங்கம் மூலம் அனுப்பப்படுகிற உரத்திற்கு ஏதாவது ஒரு கலரிங் செய்யவேண்டும். தனியார் கொடுக்கிற உரத்திற்கும் அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்படுகிற உரத்திற்கும் ஒரு வித்தியாசம் இருக்கவேண்டும். அந்த வித்தியாசத்தை உரம் உற்பத்தி செய்கிற இடத்திலேயே செய்துவிட்டால், தவறுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள முடியுமென்று கூறி எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. எ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கல் மசோதாவின் மீது என் கருத்துக்களைச் சொல்ல முன்வந்திருக்கிறேன்.

சென்ற ஆண்டு 517 கோடி ரூபாய் ரெவன்யூ தரப்பிலும் மூலதன முதலீட்டிலும் நாம் செலவழித்திருக்கிறோம், இந்த ஆண்டு அந்த இரண்டு இனங்களிலும் மொத்தமாக ரூ. 540 கோடி செலவழிக்க இருக்கிறோம் என்று நிதிநிலை ...

அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. ஒட்டு மொத்தமாக அதிகப்படியாக 22 கோடி ரூபாய் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு நாம் செலவழிக்க முன்வந்திருக்கிறோம். மூலதனச் செலவைப் பொறுத்தவரையில் 11½ கோடி ரூபாய் அதிகமாகச் செல்வழிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கிற விலைவாசி அதிகரிப்போடு இவைகளை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால் 26 சதவிகிதத்திற்கு மேல் விலைவாசி உயர்ந்து போயிருக்கிறது, நாட்டிலே ஆண்டுக்கு ஆண்டு நமது தேவையின் அதிகரிப்பு குறைந்தபட்சம் 10 சதவீதமாவது அதிகரித்துக்கொண்டே போகிறது.

இவைகளை எல்லாம் ஒப்பிட்டுப்பார்க்கும்போது சென்ற ஆண்டு நம்முடைய நிதிநிலை அறிக்கை மூலம் கிடைத்த பலன் நாட்டுக்கு என்னவோ அதைவிடக் குறைவான பலன்தான் இந்த ஆண்டு திட்டத்தில் இருந்து நமக்குக் கிடைக்கும் என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. இது நாட்டில் ஏற்பட்டிருக்கிற ஒட்டு மொத்தமான விளைவு. இம்மாநிலத்தில் மட்டுமல்ல, மத்திய பட்ஜட்டை எடுத்துக்கொண்டாலும் இதே கணக்கைத்தான் கூற முடியும். தேவை அதிகரித்து தேவையை ஈடுகட்டக்கூடிய செயல் குறைந்து வருகிற நிலையைப் பார்க்கிறபோது நாட்டிலே பொதுவாக மக்களிடையே ஒரு அதிருப்தி நிலவும் நிலையைத்தான் பார்க்கிறோம்.

இந்த அதிருப்தி நிலையைப் போக்க, மக்களின் குறைகளைப் போக்குவதற்கான முயற்சிகளை நாம் வேகமாகச் செய்ய வேண்டும். அப்படி வேகமாகச் செய்யவேண்டுமென்று சொல்கிறபோது நாம் எடுக்கிற தீவிரமான நடவடிக்கைகளை எப்படியாவது முறியடித்துவிடவேண்டுமென்ற எண்ணத்தில் நாட்டில் இருக்கிற பிற்போக்குச் சக்திகள் எல்லாம் பெரும் முயற்சிகள் செய்து கொண்டிருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே, நாம் திட்டங்கள் தீட்டுகிறபோது நாட்டின் தேவைகளைக் கருத்தில் கொண்டு எடுக்கக் கூடிய நடவடிக்கைகளை வேகமாக எடுக்க முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வேகமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று சொல்கிற போது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக்கொண்டால், இன்னும் நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய திட்டங்கள் என்ன என்பதைப் பற்றி திட்டவட்டமான முடிவிற்கு வரவில்லை. மாநில அரசு மத்திய அரசோடு பேசி நம்முடைய திட்டம் பற்றி மொத்த முதலீடு என்ன என்ற ஒரு முடிவுக்கு வந்துவிடவேண்டும். காலதாமதம் கூடாது.

இந்த பட்ஜெட் கொடுப்பது இருக்கிறதே இந்த ஆண்டு கொஞ்சம் பிந்திப் போய் விட்டது. இந்த நிதிநிலை அறிக்கை கொடுப்பதை இன்னும் இரண்டு மாதங்களுக்கு முன்னால் கொடுக்கப்பட வேண்டும். அப்படிக் கொடுக்கப்



பட்டால் ஒதுக்கப்படுகிற தொகைகள் ஒழுங்கான முறையில் செலவழிப்பதற்கான வாய்ப்பு ஏற்படும். மூன்று மாதங்களுக்கு பின்னால் கொடுப்பதனால், மூன்று மாதங்கள் தள்ளி அந்தந்த துறைகளுக்கு அனுப்பப்பட்டு அவர்கள் வேலைகளை ஆரம்பிக்க காலதாமதம் ஏற்படுகிறது. அப்படி தாமதம் ஏற்பட்டு வருடக் கடைசியில் ஒதுக்கப்பட்ட தொகையை செலவழிக்க வேண்டுமென்று அதிகாரிகள் கீழ் மட்டத்திலுள்ள அதிகாரிகளை விரட்டுவதன் மூலம் அந்தப் பணம் விரயம் செய்யப்படுவதற்கான நிலைகள் ஏற்படுகின்றன.

இது சம்பந்தமாக நிதித் துறை செயலாளர் அவர்கள் ஒரு கருத்தரங்கில் கூறியதாக நான் பத்திரிகையில் படித்தேன். இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்து டிஸம்பர் மாதத்தில் கொடுத்துவிட்டால் என்ன, அப்படி கொடுத்து ஜனவரியில் பாஸ் செய்துவிட்டால், ஏப்ரல் மாதத்திலேயே வேலைகளைத் துவங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முதல் ஆண்டில் அது சிரமமான ஒன்று. அதிகப்படியான ஊழியர்கள் அவர்களுக்கு தேவையாகயிருக்கும். ஆகவே டிஸம்பரில் அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைக் கொடுப்பதற்கு அரசு முயற்சிக்குமானால் இந்த நாட்டிலேயே முதன்முதலாக அப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டை நாம் செய்தவர்கள் ஆவோம். நாம் அதில் முன்மாதிரியாக இருக்கலாம். அது பயன் உள்ளதாகவும் இருக்கும். அதனால் பணம் விரயமாவதும் தவிர்க்கப்படும். ஆகவே இதை அரசு கவனித்து வேண்டியதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விலைவாசியேற்றத்தைப் பயன்படுத்தி நாட்டில் எந்த நிலை ஏற்படுத்தப்படுகிறது என்பதை கூர்ந்து கவனிக்கவேண்டும். இன்று இதர மாநிலங்களை எடுத்துக்கொண்டால், குஜராத்தில் பெரிய ஒரு கலவரம் நடந்து அங்கு சட்டமன்றமே கலைக்கப்பட்டிருக்கிறது. அடுத்து பீகாரில் இன்று ஆரம்பித்திருக்கிறார்கள். அடுத்து ஒவ்வொரு மாநிலமாக இம்மாதிரி ஒரு பெரும் கிளர்ச்சி செய்வதற்கான திட்டவட்டமான நடவடிக்கைகள் நாட்டில் ஒட்டுமொத்தமாக எடுக்கப்பட்டு நடந்து வருகின்றன என்பதைத்தான் இதிலிருந்து நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

இன்று உணவு தானியத்தை எடுத்துக் கொண்டால், அதுதான் பெரிய பிரச்னை. மனிதனுக்கு சோறு வேண்டும். சோற்றுப் பிரச்னை தீர்ந்தால் தவிர மனிதன் வேறு எந்தப் பிரச்னையையும் கவனிக்க முடியாது. இன்று நாட்டில்— நாடு பூராவிலும் எடுத்துக்கொண்டால்—10 சதவிகிதம்தான் விளைச்சல்

குறைவாக இருக்கிறது என்ற புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. பத்து சதவிகிதம் குறையை வைத்துக்கொண்டு இவ்வளவு பெரிய மோசமான நிலை நாட்டில் ஏன் ஏற்படவேண்டும், ஏன் இவ்வளவு பெரிய கிளர்ச்சிகள் ஏற்படவேண்டும்? சமுதாயத்தில் இருக்கிற தீய சக்திகள் சமுதாயத்தில் இருக்கிற குறைபாடுகளைப் பயன்படுத்திக்கொண்டு தாங்கள் எப்படியாவது முன்னுக்கு வரவேண்டும், பெரிய பணக்காரர்களாக ஆகவேண்டும் என்ற எண்ணத்தில் நாட்டில் பற்றாக்குறை ஏற்படுகின்ற நிலையை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

சுதந்திரம் அடைந்த பிறகு கடந்த பல ஆண்டுகளாக தனியார் துறைக்கு நாம் எல்லாவிதமான வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறோம். தனியார்கள், எந்தத் தொழில்களை எல்லாம் எடுத்து நடத்த முடியவில்லையோ அவற்றை மட்டும் அரசாங்கம் எடுத்து நடத்துகிறது என்றளவில் பெரும் முதலீடு செய்யும் தொழில்களை அரசாங்கம் எடுத்து நடத்திக்கொண்டு சிறு தொழில்கள், வியாபாரங்களை தனியார்களிடம் விட்டு வைத்திருக்கிறார்கள். அவர்கள் சமுதாயத்தின் நலன்களை கருத்தில்கொண்டு மக்களுக்கு இடர்ப்பாடு இல்லாமல் பொருள்கள் கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் நடந்துகொள்கிறார்களா என்றால் இல்லை. இருக்கிற நிலையைப் பயன்படுத்திக்கொண்டு தாங்கள் எப்படி வளர்வது என்ற நோக்கத்தில்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். விலைவாசியைக் குறைக்க தனியார் முயற்சித்ததாக நாம் கூற முடியாது. இன்று கலப்படத்தை எடுத்துக்கொண்டால், கலப்படம் இல்லாத பொருளே இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

(நண்பகல் 12-00)

அது மட்டுமல்லாமல் இன்றைக்குக் கலப்படம் சமுதாயத்தில் இருக்கிறது. இதையெல்லாம் வைத்துப் பார்க்கிறபோது அரசுத் துறையில் நியாயமான முறையில் கலப்படம் இல்லாத பொருள்களைக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசு சொல்லியது. தமிழக முதலமைச்சர் அவர்கள் கொள்கை ரீதியாக ஒப்புக்கொள்கிறோம் என்று கூறினார்கள். அதை நடைமுறையில் கொண்டு வருவதற்கு என்ன செய்தார்கள்? நடைமுறையில் கொண்டு வருவதற்கு முயற்சிக்கவில்லை.

குஜராத் மாநிலத்தில் உணவு பொருள் மொத்த வியாபாரத்தை அரசாங்கம் எடுத்துக்கொண்டது. அப்படி எடுத்துக்கொண்டதன் விளைவாக, சில தனிப்பட்டவர்கள் தங்களுடைய பிடியில் இருக்கவேண்டும், பொருளாதார லாபம் தாங்களே அடையவேண்டும் என்று கருதி சிலர் அரசாங்கத்திற்கு



எதிராகச் சூழ்ச்சி செய்தார்கள். குஜராத் மாநிலத்தில் உணவு நிலைமையைப் பார்த்தால் 88 லட்சம் டன் உற்பத்தியாகிறது. இவ்வளவு உற்பத்தியாகியிருந்தாலும் பக்கத்தில் இருக்கும் பற்றாக்குறை மாநிலத்திற்குக் கடத்தியதன் காரணமாக பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆனால் பதவிவிலகிய முதலமைச்சரின் வாக்குமூலம் வேறாக இருக்கிறது. மத்திய சர்க்கார் தான் இப்படிப் பட்ட நிலைமையை ஏற்படுத்தி அவர்களை கவிழ்த்து இருக்கிறார்கள் என்று பதவி விலகிய முதலமைச்சர் அறிக்கை விட்டு இருக்கிறார், தங்களுடைய கருத்து என்ன?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அவருடைய கருத்து தவறானது. என்னுடைய கருத்து மத்திய அரசு அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்யத் தயாராக இருந்தாலும், அங்கே உற்பத்தியாகும் 88 லட்சம் டன்னை நல்ல முறையில் விநியோகம் செய்ய என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் அரசாங்கம் எடுத்துக்கொண்டார்கள் என்று சொன்னார்கள். இப்போது என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று சொல்கிறார்கள். இது முரணாக இருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அரசாங்கம் நடவடிக்கை சரியான முறையில் எடுப்பதற்கு முயலவில்லை. ஒட்டு மொத்தமாக நாட்டிலே முற்போக்கான காரியம் நடைபெறவேண்டும், நாம் சோசலிச சமுதாயம் அமைக்கவேண்டும், இருக்கும் உற்பத்திச் சாதனங்களை எடுக்கப்போகிறோம் என்று சொல்லி வருகிறோம். முற்போக்குக் கட்சிகளிடையே நாட்டிலே இருக்கும் நிலைமைகளைப் பார்க்கிறபோது இன்றுள்ள பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு அரசு எடுக்கிற முற்போக்கான திட்டங்களை தகர்க்கிற வகையில் சிலபேர் காரியங்களைச் செய்து கொண்டு வருகிறார்கள். ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்குப் போகவேண்டுமென்றால் அந்த டிரான்ஸிஷன் பீரியடில் இந்த சங்கடங்கள் இருக்கத்தான் செய்யும். அந்தச் சங்கடங்களைப் பயன்படுத்தி பிற்போக்குச் சக்திகள் வளர்ந்து விட நாம் வைத்துக்கொள்ளக்கூடாது.

இதற்குக் காரணம் மாநில அரசுகள் மத்திய அரசு என்று கூறினார்கள். நான் கேட்கிறேன், மாநில அரசு இம்மாதிரி பிற்போக்குச் சக்திகளை ஒழிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? நீங்கள் மத்திய அரசோடு எந்த

அளவுக்கு ஒத்துப்போகிறீர்கள். நாம் சபையில் பேசும்போது பார்க்கிறோம்.
சில பேர் பேசினார்கள். அமைச்சரவையில் இந்தக் கருத்து இருக்கும் என்று
நான் கருதவில்லை. இங்கே என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். குஜ
ராத்தில் சரியாக நடக்கவில்லையென்றால், அதேமாதிரி எல்லாயிடங்களிலும்
நடந்து விடுமா ? நம்முடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி நாம் எடுக்கிற
முயற்சி நல்ல முயற்சியாக இருக்கவேண்டும். இங்கே அப்படிப்பட்ட முயற்சி
எடுக்காததற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அந்த முயற்சி எடுத்தால் இங்கேயும்
பிற்போக்குச் சக்திகள் எதிர்க்கும். அதே நேரத்தில் ஆளும் காங்கிரஸ்
பிற்போக்குச் சக்திகளின் பக்கம்தான் இருக்கும். இதற்கு ஆயிரம் கணக்கு
உண்டு. உதாரணம், விவசாயப் போராட்டம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** இருக்கின்ற நிலைமையை வைத்துக்கொண்டு
சொல்வது சரி. நீங்கள் நடவடிக்கை எடுத்து இருந்தால் அவற்றைத் தடுத்து
இருக்க முடியும். ஆகவே, கேட்டுக்கொள்கிறேன், இந்த மாதிரி நிலைமையில்
இந்த அரசாங்கம் விழிப்போடு இருந்து முற்போக்குச் சக்திகளுக்குப்
பக்கபலமாக இருந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

தமிழகத்தில் இன்று பார்க்கிறோம். பற்றாக்குறை இல்லை. இருந்தாலும்
நம் மாநிலத்தை அடுத்துள்ள இன்னொரு மாநிலம் பற்றாக்குறையாக
இருக்குமானால் அங்குள்ள பற்றாக்குறையின் காரணமாக இங்கே பொருள்களின்
விலையேறுகிறது. இன்றைக்குத் தமிழ் நாட்டில் விலையேறியிருக்கிறது.
மாவட்டத்திற்கு மாவட்டம் விலையில் அதிக வித்தியாசம் இருக்கிறது. தஞ்சை
மாவட்டத்தில் 7 லட்சம் டன் குறுவை வந்தது. அரசு ஒரு லட்சம் டன்
கொள்முதல் செய்தது. ஐந்து லட்சம் டன் மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துச்
சென்று இருக்கலாம். அரசு அந்த உற்பத்தி அத்தனையையும் கொள்முதல்
செய்து இருக்கலாம். உங்களுக்கு இருக்கும் அந்த இயந்திரம் வேறு அதிகமான
அளவில் கொள்முதல் செய்ய முடியவில்லை. எனவே, வெளி மாநிலங்களுக்கு
அதை எடுத்துச் சென்று விட்டார்கள். அதன் காரணமாக இங்கே விலைவாசி
ஏறுவதைத் தவிர, வேறு வழியில்லை .

இதிலிருந்து என்ன உணரமுடிகிறது என்றால் பக்கத்தில் இருக்கும் மாநிலத்
தில் நெல் போய்விட்டால் எவ்வளவு உற்பத்தி செய்தாலும் பற்றாக்குறையும்,
விலையேற்றமும் நடைபெறுவதைப் பார்க்கிறோம். இதையெல்லாம் வைத்துப்





பார்க்கிறபோது தமிழக அரசின் கொள்கை சுயாட்சி, இரண்டு கேரளம்
என்று முதலமைச்சர் அடிக்கடி கூறுவது எல்லாம் நாம் எண்ணி இருக்கும் சம
தர்ம சமுதாயத்திற்கு எப்படி உதவியாக இருக்கும் என்று தயவு செய்து சிந்
திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை ஒரே நாடு என்று சொல்
லிக்கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கும்போது கேரளம், தமிழன் என்று
சொல்வதெல்லாம் எப்படிப் பொருந்தும் என்று சிந்திக்கவேண்டும்.

மாராட்டியத்தில் சிவசேனை வைத்து இருக்கிறார்கள். அதை நான் வன்மை
யாகக் கண்டிக்கிறேன். இந்த நாட்டிலே குமரி முனையிலிருந்து காஷ்மீர் வரை
ஒரே நாடு என்று அரசியல் சட்ட பூர்வமாக நாம் எல்லோரும் எங்கே வேண்டு
மானாலும் இருக்கலாம், என்ன தொழில் வேண்டுமானாலும் செய்யலாம் என்று
அனுமதி வழங்கியிருக்கிறபோது, அதற்கு மாறாக மொழி பேதம் வைத்துக்
கொண்டு மலையாளி, தமிழன் என்று பாகுபாடு செய்வது சரியல்ல . . .

**திரு. கா. மு. இராசகோபால் :** எல்லா மாநிலத்திலும் அந்தந்த மாநிலத்
துக்காரர்கள்தான் ஆண்டுகொண்டு இருக்கிறார்கள். வேறு மாநிலத்துக்காரர்
எந்த மாநிலத்திலும் ஆளவில்லை. தமிழ் நாட்டில் தமிழ் நாட்டைச் சேர்ந்த
வர்களும், கேரளாவில் கேரளத்தைச் சேர்ந்தவர்களும் ஆளுகிறார்கள். இதற்கு
காங்கிரஸ் கட்சித் தலைவர் என்ன சொல்கிறார் என்று அறியவிரும்புகிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** அரசியல் சட்டப்படி ஒருவர் எங்கே வேண்டு
மானாலும் செல்லலாம், எங்கேயும் அவர் அமைச்சராக வருவதற்கு வாய்ப்பு
இருந்தால் வரலாம். சுசேதா கிருபளானி அவர்கள் வங்காளி, அவர் உ.பி. யில்
முதலமைச்சராக இருந்தார், பந்த் வங்காளி, அவர்கள் உ.பி யில் முதலமைச்ச
ராக இருந்தார்.

அம்மாதிரி இருப்பதற்கான வாய்ப்பு கிடைக்குமானால் அதை எப்படி தடை
செய்ய முடியும்? அரசியல் சட்டப்படி உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது.
இந்த நாட்டில் ஒரு இடத்தில் 6 மாத காலம் இருந்தால் அவர் வாக்களிக்க
உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஒட்டுமொத்தமாக பார்த்தால் நாட்டினுடைய
முன்னேற்றத்திற்கு, முற்போக்குத் திட்டத்திற்கு அது இடைஞ்சலாக
இருக்கும். ஆகவே, அந்தக் கருத்தைக் கைவிடவேண்டும் என்று கேட்டுக்
கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[1974 ஏப்ரல் 9

திரு. பெ. சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கல் மசோதாவின் மீது நம்முடைய ஆளுகின்ற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள், அவர்கள் இங்கே எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து பேசுகின்ற நேரத்தில் கூட அவர்களுடைய ஆளும் கட்சியை அந்த நிலையிலே காப்பாற்றிக் கொள்வதிலே பெரு முயற்சி எடுத்து இங்கே சில விளக்கங்களைத் தந்தார்கள்.

நான் இங்கே ஒன்றை பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 1971 தேர்தலுக்கு முன்னால் தமிழகத்திற்கு வந்திருந்த நம்முடைய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கடற்கரையிலே பல லட்சக்கணக்கான மக்கள் கூட்டத்தில் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். மிக பலத்த குரலில், உரத்த கரவொலிக்கு இடையே அவர் அந்தக் கூட்டத்தில் ஒரு கருத்தை வெளியிட்டது எனக்கு நினைவு இருக்கிறது. Changes are inevitable என்பதை பழைய தலைவர்களுக்கும் பழைய தலைமுறையைச் சார்ந்த தலைவர்களுக்கும் அவர் எடுத்துச் சொன்னார். மாறுதல் வரலாற்றிலே இயற்கையாக வரும், அதைத் தடுக்க முடியாது என்று அவர்கள் சொன்னார்கள். பரம்பரையாக மாறுதல் வரும் என்ற நம்பிக்கையிலே தான் 1971, 1967 தேர்தல்களில் நாட்டு மக்கள் மகத்தான ஒரு தீர்ப்பை தந்து, ஒரு பெரிய மாறுதலை மேலிடத்து நிர்வாகத்திலே உருவாக்கினார்கள்.

குஜராத்திலும், மற்ற மாநிலங்களிலும் நடக்கின்ற போராட்டங்கள் பேரவையின் விவாத எல்லைக்கு அப்பாற்பட்டாலும் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவற்றைப்பற்றி எடுத்துக்கூறிய காரணத்தினால், நான் கூறுகிறேன், அவர்கள் அந்தப் போராட்டத்தைப் பார்க்கின்ற கோணம் முற்றிலும் தவறானது என்று நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஏதோ பிற்போக்கு சக்தி கிளர்ச்சி செய்கின்றார்கள் விரோத சக்திகள் போராட்டங்களை ஊக்குவிக்கிறார்கள் என்பது அதிகாரத்தில் இருப்பவர்கள் வழக்கமாகச் சொல்கின்ற பல்லவி என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. குஜராத்தில் மக்கள் குமுறி எழுகிறார்கள் என்றால் வயிற்றுப் பசி. அதனால் தான் அங்கே போராட்டம் வெடிக்கிறது. ஆந்திராவில் இரண்டு மாநிலப் பிரச்னை, அதனால் தான் இன்றைக்கு அங்கே போராட்டம் வெடிக்கிறது. இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வருகிற நேரத்தில்கூட கிளர்ச்சியில் ஈடுபடுகிறார்கள். இப்படிப்பட்ட போராட்டங்கள் வெடிக்கும்பொழுது பிற்போக்கு சக்திகள் தூண்டிவிடுகின்ற போராட்டம் என்று கூறி மக்களுடைய கவனத்தை வேறு பக்கம் திருப்புவது அதிகாரத்தில் இருப்பவர்கள் வழக்கமாக பரம்பரையாக கையாண்டு வரும் ஒரு



1974 ஏப்ரல் 9] [திரு. பெ. சீனிவாசன்]

ராஜதந்திரமாகும். இது நாமெல்லாம் அறிந்த ஒன்றுதான். அதிருப்தி அடைந்த மக்கள் ஒரு மாறுதலை கேட்கிறார்கள், தங்களுடைய உள்ளத்தில் பிரதிபலிக்கின்ற எண்ணத்தை வெளிப்படுத்த நியாயமான போராட்டங்களை மக்கள் நடத்தும்பொழுது அதைப் பிற்போக்கு சக்தி என்று கூறுவது பொருத்தமற்றது.

தமிழக மக்கள் இன்றைக்கு ஒரு மாறுதலைக் கேட்கிறார்கள். அந்த மாறுதலைக் கேட்கின்ற நேரத்தில்தான், அந்த மாறுதல் போராட்டத்திற்கு ஒரு தலைமையை ஏற்றுக்கொண்டு இருக்கும் நேரத்தில், அந்தத் தலைமையை மறைமுகமாக தாக்குகின்ற முறையில், அந்தத் தலைமையினுடைய வெற்றியை தடுக்கின்ற முறையில் நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தின் மீது நடந்த விவாதத்திற்குப் பதில் சொல்கின்ற நேரத்தில், அதற்கு சம்பந்தம் இல்லாத ஒரு வாக்யத்தை இங்கே சொன்னார்கள்.

இரண்டு கேரளாக்களை தென் நாட்டில் உருவாக்குவதற்கு விடமாட்டோம் என்று கூறினார்கள். இரண்டு கேரளம் உருவாகவேண்டுமென்று யாரும் கேட்கவும் இல்லை. இரண்டு கேரளம் தேவை என்று யாரும் கூறவுமில்லை. ஆந்திராவை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதைப்போல சில மாநிலங்களில் இரண்டு மாநிலங்களாகப் பிரிக்கவேண்டும் என்று பேசினார்கள். ஒரு மொழி பேசுபவர்கள் கேட்டார்கள்.

ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு புதிய மாறுதலை நான் அனுமதிக்கமாட்டேன் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும், அவர்கள் சார்புள்ள பத்திரிகை எழுத்தாளர்கள் மலையாளி, தமிழர் என்ற ஒரு பிரச்னையை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே மிக வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் சிறந்த ராஜ தந்திரி, தமிழ் மொழியை மிக ஆழமாகப் படித்தவர்கள். எங்களைப்போன்ற இளைஞர்களுக்கு, இன்னும் சொல்லப்போனால் காளிமுத்து அவர்கள் பேசியதுபோல், தமிழ் கற்றுத் தந்தவர்கள், தமிழ் வரலாற்றைக் கற்றுத் தந்தவர்கள். அவர்கள் வாயில் அப்படிப்பட்ட வார்த்தைகள் வருவது குறித்து நான் மெத்த வருத்தப்படுகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கால்ட்வெல் ஒப்பிலக்கணம் என்ற நூலை மொழி பெயர்த்து, அந்த நூலின் மூலம் தமிழ் வரலாற்றிற்கு நாமெல்லாம் ஒரு அடையாளம், தமிழர்கள், மலையாளிகள், கன்னடியர்கள் என்பதெல்லாம் திராவிட மக்கள் வரலாற்றுக்கு அடையாளம் என்று அந்த ஆராய்ச்சி நூல் வந்ததற்குப் பின்னாலே தான் நாமெல்லாம் அறிவோம். கார்ட்வெல் தமிழ் நாட்டில் பிறக்கவில்லை, ஐரோப்பிய நாட்டிலிருந்து இங்கே வந்து கிறிஸ்துவ மதத்தைப் பரப்புவதற்காக தமிழ் கற்று, தமிழ் மொழியின் பெருமையை, தமிழ் மொழியின் வரலாற்றை, திராவிட மக்களின் வரலாற்றை நல்லமுறையில் பரப்பினார்.

தமிழன், மலையாளி என்ற வேறுபாட்டை நெருக்கிக்கொண்டு போனால், நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும், ஆளும் கட்சியைச் சேர்ந்த பத்திரிகை எழுத்தாளர்களும் எழுதுகின்ற இலக்கணப்படி பார்த்தால் தமிழ் நாட்டில் இருக்கிற பிராமணர்கள் தமிழர்கள் அல்ல. அந்தக் கணக்கில் பார்த்தால், தமிழ் நாட்டு இலக்கியங்கள் சிலப்பதிகாரம், புறநானூறு போன்ற பழைய இலக்கியங்கள் அத்தனையும் எங்கெங்கோ இருந்து அலசி ஆராய்ந்து தேடிக் கண்டுபிடித்து தமிழகத்திற்குக் கொண்டு வந்த திராவிட கலாநிதி, மாநில கல்லூரிக்கு முன்னால் சிலையாக நிற்கின்ற திரு. உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் தமிழர் அல்ல, முதல் அமைச்சர் கணக்குப்படி தமிழர்கள் பட்டியலில் சேர்க்க முடியாது.

அதே நோக்கத்தில் தமிழ் இலக்கியங்களை, திரு. உ. வே. சாமிநாதய்யர் கொடுத்த அவற்றையெல்லாம் நாம் தூக்கி எறிந்துவிடுவோமா என்ற சந்தேகம் தான் எனக்கு ஏற்படுகிறது. தமிழர் மறுமலர்ச்சிக்குக் காரணமாக இருந்த, திராவிடர் எழுச்சிக்குக் காரணமாக இருந்த பெரியார் அவர்களைக்கூட நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இலக்கணத்தின் கீழ் தமிழர் என்று சொல்ல முடியாது. முதல் அமைச்சர் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். ஒரு வேளை 1971-ம் ஆண்டு தேர்தலில் பெரியார் கொள்கையை கொஞ்சம் விட்டுக்கொடுத்து, தேர்தலில் போட்டியிட்டு தாம் முதல் அமைச்சராக வரவேண்டும் என்று பெரியார் அவர்கள் விரும்பியிருந்தால் நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இன்றைக்கு சொல்கிற அந்த வாதத்தை அன்றைக்கு எடுத்துச் சொல்லி, தமிழ் நாட்டை தமிழர் தான் ஆள வேண்டும், நீங்கள் கன்னடியர், தமிழ் நாட்டை ஆளக்கூடாது என்று சொல்வார்களா என்றுதான் கேட்கிறேன்.





அந்தக் கணக்கை இன்னும் கொஞ்சம் நெருக்கிப் பார்த்தால் இந்த அமைச்சர் அவையிலுள்ள இரண்டு பேர்கள் மலேஷியா, சிங்கப்பூரிலிருந்து வந்தவர்கள், தமிழ் நாட்டுக்கு அவர்களுடைய உழைப்பெல்லாம் பயன்பட வேண்டிய நேரத்தில் தமிழ் நாட்டில் இல்லாதவர்கள், ஆதலால் அவர்கள் தமிழர்கள் இல்லை என்று அந்தக் கணக்குப்படி தமிழர்கள் பட்டியலில் அவர்களை சேர்க்க முடியாது.

இன்னும் இந்த விளக்கத்தை கொஞ்சம் நெருக்கிக்கொண்டு போனால், தமிழ் நாட்டை தமிழர்கள் தான் ஆளவேண்டும், சென்னை நகரத்தில் ஆட்சி நடத்துபவர்கள் சென்னை நகரத்து வாசிகளாகத்தான் இருக்கலாம் என்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்டுவிடும். முதல் அமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு திறமை இருந்தாலும், திருவாரூர் வரை தான் வர முடியும், சென்னைக்கு வர முடியாது என்று குறுகிய நோக்கத்தோடு குறும்பாக சில பேர்கள் சொல்லக்கூடும்.

மாறுதல் தேவை என்று கேட்கின்ற மக்களிடையே நிச்சயம் இத்தகைய ஒரு வாதத்தைக் கிளப்புவதன் மூலம் அத்தகைய போராட்டத்தைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. தமிழகத்திலும் மட்டுமல்ல, ஆந்திராவில் மட்டுமல்ல, குஜராத்திலும் மட்டுமல்ல, அகில இந்தியாவிலும் இந்த நிலை இருக்கிறது. இத்தகைய படை தேவை என்பதை மக்கள் உணர்கிறார்கள். இந்தப் படையை மக்கள் ஆதரிக்கவேண்டிய காரணம் என்ன? அதற்கான மூல காரணத்தை மறந்துவிட்டு, மூல காரணத்தை சமாளிக்கத் துணிவு இல்லாமல் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை, சாதாரண குற்றச்சாட்டுகளை எளிய மக்களின் பலஹீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு சொல்லிவிட்டு, பால் தாக்கரே, வட்டல் நாகராஜ் போன்றவர்களை ஊக்குவிக்கக்கூடிய விதத்தில் தயவுசெய்து விவாதங்களை எழுப்பக்கூடாது என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் மாறுதலை விரும்புகிறார்கள். அந்த மாறுதலை தலைவர்கள், ஆட்சியில் இருப்பவர்கள் விரும்பாவிட்டாலும், நிச்சயம் அந்த மாறுதல் நிகழ்ந்துதான் தீரும். 1967-ல் நடந்ததைப்போல, 1971-ல் நடந்ததைப்போல, முக்கியமான மாறுதல் நிச்சயம் 1976-ல் உருவாகித்தான் தீரும். மக்கள் விரும்புகிற மாறுதலை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும் என்று உலக அரங்கில் உள்ள நாடுகள் எடுத்துக்காட்டியிருக்கின்றன. ஒரு மைனாரிட்டி அரசைக் கவிழ்த்துவிடலாம். ஆனால், அப்படிக் கவிழ்த்துவிடுவதினால் அந்த சக்தியை தற்காலிகமாக தடுத்து நிறுத்தி வைக்கலாமே தவிர, நிரந்தரமான தடுப்பு வேலை நடக்காது என்பதை தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: கவிழ்த்தார்கள் என்று சொன்னார்கள். அவர்களாகவேதான் கவிழ்ந்துவிட்டார்கள். யாரும் கவிழ்க்கவில்லை. ஆனால், கவிழ்ந்துவிட்டவர்களை யாரும் தூக்கி நிறுத்தவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம்.

திரு. பெ. சீனிவாசன்: இந்திரா காங்கிரஸ தலைவர் அந்த அளவுக்கு தமிழ் நாட்டுச் சூழ்நிலையை கவிழ்க்கிறார்களா என்பது எனக்குப் புரியவில்லை. மெஜாரிட்டியாக இருப்பவர்களை கவிழ்ப்பதற்கு சாமர்த்தியம் இல்லை. மெஜாரிட்டி இல்லாமல் இருப்பவர்களை ஏன் முதலிலேயே அமைச்சர் அவை அமைப்பதற்கு அனுமதித்திருக்கவேண்டும்? சபாநாயகர் தேர்தலிலேயே உங்கள் வேலையைக் காட்டியிருக்கவேண்டும். சபாநாயகர் தேர்தலை ஏன் போட்டியின்றி அனுமதித்தீர்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, பாண்டிச்சேரியில் பரூக் தலைமையில் அமைச்சரவை இருந்தபோது 17 பேர்கள் இருந்தார்கள். 3 பேர் அமைச்சரவையிலிருந்தும் கட்சியிலிருந்தும் விலகிய பின்னால் 14 பேர் ஆனார்கள். அப்போது இந்த முன்னாள் முதலமைச்சர் இராமசாமி அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சியினரும் சேர்ந்து கவர்னரை சந்தித்து, 14 பேர் அமைச்சரவை நீடிக்கக்கூடாது என்று அறிவித்தார்கள். அப்போது 14 பேர் இருந்த அமைச்சரவையை கவிழ்த்துவிட்டார்கள் என்பதும், இப்போது 14 பேர் இருந்த அமைச்சரவையை கவிழ்த்துவிட்டார்கள் என்பதும் முரண்பாடாகாது

திரு. பெ. சீனிவாசன்: நாங்கள் அமைச்சரவை அமைப்பதற்கு முன்னால் சொல்லியிருக்கலாமே என்று சொல்கிறேன். (சிரிப்பு). ஏன் சொல்லக் கூடாது? யார் யார் இன்றைக்கு ஒன்றாக சேர்ந்திருக்கிறார்கள் என்பதை தம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட்டணி நாட்டுக்கு அடையாளம் காட்டிவிட்டதற்கு நன்றி. நான் சொல்வது . . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அரசியலிலே முதிர்ந்த தலைவர் அல்லது அரசியல் அறிவு படைத்தவர்களாக இருந்தால் நிச்சயமாக அவர்களுக்கு மெஜாரிட்டி இல்லை என்று தெரிந்தும், 14 பேர்களாக இருப்பது 16 பேர்களாக இருக்க முடியாது என்று தெரிந்தும்கூட அமைச்சரவையை அமைத்துவிட்டு, கவிழ்ந்த பிறகு குற்றம் சொல்வது என்ன நியாயம் என்பதை சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



திரு. பெ. சீனிவாசன்: இந்த மன்றத்திலே அரசியலில் முதிர்ந்த பொன்னப்ப நாடார் அவர்கள் இங்கிலாந்து பாராளுமன்றத்தின் நடைமுறையைத் தெரிந்திருப்பார்கள். அங்கே மைனாரிட்டி கட்சிதான் ஆட்சியில் இருக்கிறது. எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் அரசியல் அறிவில் முதிர்ந்து இருப்பதனால் அங்கே அப்படி நடைபெறுகிறது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இங்கிலாந்து. இது தமிழ்நாடு சட்டமன்றம். இங்குள்ளதை மட்டும் பேசினால் போதும்.

* திரு. ஏ. சி. நரசிம்மன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்க மசோதாவை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

என்னுடைய ஆரணி தொகுதியில் ஒரு தீ அணைப்பு நிலையத்தை இந்த நிதிநிலை ஆண்டிலேயே அமைத்துத் தருகிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் தச்சூர் என்ற இடத்தில் விஷ உணவு சாப்பிட்டதன் காரணமாக 40 பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் 5 பேர் இறந்துவிட்டார்கள். அந்த 5 பேர்கள் குடும்பத்திற்கும் நிதி உதவி செய்வதாக முதலமைச்சரவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும் உறுதி கூறியிருந்தார்கள். ஆனால், இதுவரையிலும் எந்தவிதமான நிதி உதவியும் செய்யப்படவில்லை. அதேநேரத்தில் அந்த விபத்தினால் ஒரு 7 வயது குழந்தை அனாதையாக விடப்பட்டிருக்கிறது. அந்தக் குழந்தைக்கு பாதுகாப்பு இல்லத்தில் இடம் கொடுப்போம், பண உதவி செய்வோம் என்று அறிவித்து இருந்தார்கள். அது இதுவரையிலும் செய்யப்படவில்லை. ஆகவே, தயவுசெய்து அந்தச் சிறு குழந்தைக்கு வேண்டிய பாதுகாப்பும் பண உதவியும், உயிரிழந்தவர்கள் குடும்பங்களுக்கு உதவியும் உடனடியாகச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணியில் இப்போது ஒரு தாலூகா போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. இன்னும் சில போலீஸ் ஸ்டேஷன்களை அமைக்கவேண்டுமென்று பல ஆண்டுகளாக கேட்டுக்கொண்டிருக்கிறேன். இப்போது இந்த ஒரே ஒரு போலீஸ் ஸ்டேஷன்தான் இருக்கிறது. அதை அடுத்த கிராமங்களில் பல வழக்குகள் வருகின்றன. அடி தடி தகராறுகள், திருட்டுகள் நடைபெறுகின்றன. ஆகவே, எஸ். வி. நகரம், குண்ணத்தூர், தச்சூர் ஆகிய மூன்று இடங்களில் போலீஸ்

அவுட் போஸ்ட் ஆவது ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதை உடனடியாக ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், முதலமைச்சரவர்கள் பி.டபிள்யூ.டி. அமைச்சராக இருந்தபோது செய்யாற்றின் குறுக்கே விண்ணமங்கலத்தில் ஒரு மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று மனு கொடுத்திருக்கிறோம். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். சென்ட்ரல் ரோடு பண்டிலிருந்து செய்யப்படும் என்று அறிவித்து இருந்தார்கள். ஒரு பட்ஜெட்டில் கூட அறிவித்திருந்தார்கள். இருந்தாலும், இதுவரையில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதை விரைவிலே அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1,500 பேர்களுக்கு மேல் உள்ள கிராமத்திற்கு சாலை வசதி செய்யவேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதுவரையிலே என்னுடைய தொகுதியில் அந்த மாதிரி பல கிராமங்களுக்குப் போடவேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டும், செய்யப்படவில்லை. அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணியில் தண்ணீர் பற்றாக்குறை நிறைய இருக்கிறது. அதற்கு ஒரு திட்டத்தைத் தீட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு 57 லட்சம் ரூபாய் மதிப்பிடப்பட்டிருக்கிறது. 57 லட்சம் ரூபாயில் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதே தவிர அது செயல்படவில்லை. அதைச் செயல்படுத்துவதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணிக்கு அடுத்துள்ள பூசிமலைக்குப்பம் பகுதியில் புறம்போக்கு நிலம் ஏராளமாக இருக்கிறது. பட்டுப்பூச்சி வளர்ப்பதற்கு அந்த நிலத்தை கேட்டு மனு கொடுத்திருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற முதலாளிகள் சங்கம் அந்த நிலங்களை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற தொழிலாளர்கள் அந்த நிலங்களைக் கொடுத்தால் பட்டுப்பூச்சி வளர்க்க வசதியாக இருக்கும் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. முதலாளிகளுக்காகத்தான் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கிறார்களே தவிர, தொழிலாளர்களுக்காக எடுக்கவில்லை.



முதலாளிகளுக்குச் சாதகமாக எடுத்திருக்கிற நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்திவிட்டு, தொழிலாளர்களுக்கு அந்த நிலத்தைப் பட்டா செய்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணியில் ஏற்கெனவே ஒரு பட்டு நெசவாளர் சங்கம் இருக்கிறது அந்தச் சங்கத்தில் குறிப்பிட்ட ஒரு சிலர்தான் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். மேலும் அங்கே இரண்டு சங்கங்களை அமைக்கக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. அமைக்கவேண்டுமென்று பலர் மனு கொடுத்திருக்கிறார்கள் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இப்போது இருக்கின்ற சங்கம் நல்ல லாபகரமாக நடைபெறுகிறது. இன்னும் இரண்டு சங்கங்கள் வந்தாலும் லாபகரமாகவே நடைபெறும். ஆனால் இப்போது இருக்கின்ற முதலளிகள் லாபம் இல்லை, லாபம் இல்லை என்று சொல்லி புது சங்கங்களை ஏற்படுத்துவதற்கு தடையாக இருக்கிறார்கள். அதனால் அவர்கள் நல்ல லாபம் சம்பாதிக்கிறார்கள்; ஆனால், தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, மேலும் இரண்டு சங்கங்களை அங்கே அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே சம்பள அறிவிப்புகளை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொடுத்தார்கள். நிறைய சம்பளம் கொடுத்திருக்கிறார்கள். சென்ட்ரல் கவர்ன்மெண்டிலும் கொடுக்கிறார்கள்; இங்கும் கொடுக்கிறார்கள். இப்படி சம்பளத்தை உயர்த்திக் கொடுத்துக்கொண்டிருந்தால் விலைவாசி உயர்ந்துகொண்டே போகும். விலைவாசி கூடிக்கொண்டே போனால் உழைத்து ஒரு நிரந்தர வருமானத்தைப் பெறுகின்றவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமானால், விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்காமல், இப்போது என்ன விலையில் பொருட்கள் விற்கப்படுகின்றனவோ அதே விலையில் கிடைக்க ஏற்பாடு செய்தல் வேண்டும். அப்போது விலை உயராது, ஏழை மக்களும் பாதிக்கப்படமாட்டார்கள். அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்:** பேரவைத் தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவை ஆதரித்தவனாக இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

[திருப்பூர் ஏ. எம். மொய்தீன்] [1974 ஏப்ரல் 9

இந்த மன்றத்தில் பேசப்படும் பேச்சுகள் மிக இனிப்பானவை. கேட்பதற்கு கற்கண்டு போன்று கருத்துக்கள்; மிக உயர்ந்தவை. ஆனால், இன்று இருக்கும் இந்த நாட்டினுடைய—பொதுவாக இந்தியாவின் சூழ்நிலையில் நடைமுறைக்கு ஒவ்வாதவை. இந்த நாட்டினுடைய நடைமுறைக்கு ஒவ்வாதவைகளை ஒவ்வொருவரும் மிக அழகுபட வெளியிடுவதை நாம் காண்கிறோம்.

எனக்கு முன்பு பேசிய ஆளும் காங்கிரஸ் தலைவரவர்கள் பேசும்போது ஒரு சோசலிச சமுதாயத்தை நாம் உருவாக்க வேண்டுமென்று அழகாகச் சொன்னார்கள். முதலாவதாக மக்கள் சோசலிச சமுதாய பண்பாட்டை புரிந்து இருக்க வேண்டும். புரிந்தால்தான் நாம் அதை அமுல்படுத்த வேண்டும்.

நம்முடைய பழைய உப சபாநாயகர் அவர்கள் தன்னுடைய பேச்சிலே குறிப்பிட்டபோது, முதலமைச்சரவர்களை அழகாக உயர்த்தி, அவர்களுடைய கருத்துக்களுக்கு விளக்கம் கூறும்போது நாம் மொழிவாரியாக பிரிதல் கூடாது என்று சொன்னார்கள். உண்மையிலேயே அந்த எண்ணம் நல்லதுதான்.

ஆனால் அதேநேரத்தில் அந்த எண்ணத்தை ஏதாவது ஒரு ஆயுதத்தைக் கொண்டு கீழ்மட்டத்தில் இருந்து உருவாக்கி, ஒரு சமாதான சூழ்நிலைக்கு மாறும்போது அதை எடுத்துச்சொல்லவேண்டிய கட்டம் உருவாகத்தான் செய்யும் என்பதை மறுப்பதற்கில்லை. நாம் என்னென்னமோ சொல்லி, இங்கே இருந்துகொண்டு இன்னின்ன மாதிரி காரியங்களைச் செய்ய வேண்டுமென்று அரசுக்கு ஆலோசனை கூறுகிறோம் அல்லது உத்தரவிடுகிறோம். ஆனால் மக்கள் அந்த நிலையில் இல்லை. நமது காங்கிரஸ் தலைவர் குறிப்பிடும்போது சொன்னார்கள். இருக்கக்கூடிய எல்லாப் பொருட்களையும் அமுக்கிவிடுகிறார்கள் என்று சொன்னார்கள். அது வெளியே வருவதில்லை என்று சொன்னார்கள். யார் செய்கிறார்கள்?

(பிற்பகல் 12-30)

அவருடைய தொகுதியிலும் அது நடக்கத்தான் செய்கிறது. இல்லையென்று மறுக்க முடியாது. வியாபாரத் தொகுதியான என் தொகுதியிலும் அது நடக்கத்தான் செய்கிறது. அது எப்படியோ நடந்துகொண்டிருக்கிறது. அதை இல்லாமல் ஆக்குவதற்கு மக்களுடைய மனது மாற வேண்டும். வெறும் அரசியல் விவாதத்திலே உள்ளே புகுந்திருக்கும் உணர்ச்சி வசத்திலே பேசுகின்ற பேச்சுக்களாலே இவை மாற முடியாது. மக்கள் மனம் மாற வேண்டும்.



V2(1,3)'N74 ; N74-55

1974 ஏப்ரல் 9] [திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்]

எல்லா மக்களும் ஒன்று என்று சொல்கிறோம். யாராகிலும் மறுக்கிறார்களா, இங்கே? அரிசன் நமது உடன் பிறந்த சகோதரன் என்று சொன்னால் இங்கே யாராவது மறுப்பது உண்டா ஆனால் கிராமத்திலே—அங்கே இருக்கிறவர்கள்—காரில் போகிறபோது அவன் [illegible]ட்டால் [illegible]வ்வளவு செருப்படிக்கு ஆளாகிறார்கள்—பார்க்கிறோம். [illegible] இங்குள்ள பேச்[illegible] அங்குள்ள நடைமுறைக்கும் ஒத்துவரவில்லை. [illegible]ந்த நாம் புரிந்துகொ[illegible] வேண்டும். பக்குவம் இல்லை—சொல்லோடு நிற்[illegible]—ஒன்றும் செயல்வடிவி[illegible]ரவில்லை.

61662

ஒரு மாநிலத்தின் அதிகாரம் ஒ[illegible]மாநிலத்தோடு இருக்கவேண்[illegible]மென்று சொன்னது எந்த வகையிலும் த[illegible]னது அல்ல. அப்பநாயக்க[illegible] பட்டி பஞ்சாயத்து நிர்வாகத்தில் சொக்கநா[illegible]ன்பட்டி பஞ்சாயத்து[illegible]யிடாமல் நடக்க வேண்டுமென்று சொல்வது குற[illegible]த்தியும் அல்ல. [illegible]நாயக்கன் பட்டி பஞ்சாயத்துக்குக் குறையும் இல்லை. [illegible] பஞ்சாயத்து வயலிலே ஒரு மாடு மேய்ந்து விட்டது என்றால், [illegible] அப்பநாயக்கன்பட்டி பவுண்டில் கொண்டு போய்த்தான் அடைப்பார்களே தவிர, சொக்கநாயக்கன் பட்டி பஞ்சாயத்து பவுண்டுக்குக் கொண்டு போவதில்லை. இந்த இரண்டு ஊர்களிலும் இருப்பவர்கள் நாயக்கர்கள் தான். ஆனாலும் ஒருவர் உரிமையில் ஒருவர் குறுக்கிடுவதை யாரும் விரும்பமாட்டார்கள், குறுக்கிடுகிறபோதுதான் குறுகிய புத்தி வருகிறது. ஆக விரிய வேண்டிய இடத்தில் விரிவுபடுத்திக் கொள்ளும் சந்தர்ப்பத்தை அதிகப்படுத்திக் குறுக வேண்டிய இடத்தில் குறுகி இருப்பதுதான் சோஷலிச அடிப்படையே அடங்கிக் கிடக்கிறது.

அங்கே அப்படி நடக்கிறது, இங்கே அப்படி நடக்கிறது என்கிற ஒரே பேச்சில் இரண்டுவிதமான கருத்துக்கள்—அது எனக்கு அபூர்வமாக இருந்ததே தவிர, குறை சொல்லவில்லை. முதலில் கவிழ்க்கப்பட்டது சரி என்று சொல்லப்படுகிறது—இரண்டாவது செயல் வஞ்சகம்—துரோகம் என்று சொல்லப்படுகிறது. இரண்டும் ஒரு தன்மையினாலேயே செய்யப்பட்டது. 3 பேர் வெளியில் வந்து மந்திரி சபையைக் கவிழ்த்தார்கள். பிறகு மூன்று பேர் சேர்ந்து இவர்களைக் கவிழ்த்தார்கள். இதுதானே தவிர—அவர்கள் செய்தார்கள்—அவர்கள் செய்ததை இவர்கள் செய்தார்கள்—இவர்கள் செய்ததை இன்னொருவர் செய்யப் போகிறார்—இதில் ஒன்றை மட்டும் குறை சொல்வது சரியல்ல என்பது என் கட்சி.

மனிதன் மனிதனாக இருக்கவேண்டும் என்பது சிறப்பான பண்பு—அந்தச் சொல் அழகானது—அது செயல்பட்டு வளரவேண்டும்—மிக அழகாக பாரதி தாசன் அன்றைக்குச் சொன்னது இன்றைக்கும் பசுமையாக இருக்கிறது—பிச்சையெனஏந்தி நிற்கும் குரலும்—பிடி இந்தா என்று சொல்லும் குரலும்—இல்லையென்று சொல்லும் நாளே இன்ப நாள் என்று சொன்னார். அந்த நாளை உருவாக்குகிற நாள் இருக்கிறதே—அது தேசிய பண்பாடு—மொழிவாரி தேசீயப் பண்பாடு—நாட்டு பண்பாடு வெற்றிபெறுகிற நாளாக இருக்கலாம். (மணி அடிக்கப்பட்டது) பேரவைத் தலைவர் அவர்களே,. எனக்கு இன்னும் எத்தனை நிமிடங்கள் இருக்கின்றன ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் நான்கு பேர்கள் பேசி, முதலமைச்சர் பதிலளித்தாகவேண்டும்.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** என் தொகுதியைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லி முடிக்கிறேன்.

முதலாவதாக, தொகுதியைப் பற்றி நான் குறிப்பிடுவது பர்மா அகதிகள் பற்றி. குறிப்பாக மாண்புமிகு முதல்வரை உங்கள் சார்பில் நான் கேட்டுக் கொள்வது—பர்மா அகதிகள் இன்றைக்குப் பரிகாரம் எதுவும் பெறாமல் தவிக்கிறார்கள். கார்ப்பரேஷன் தொல்லை ஒருபக்கம்—வேறுசில தொல்லைகள் மறு பக்கம்—இடையே அகப்பட்டு அவர்கள் தவிக்கிறார்கள். பர்மா அகதிகளுக்கு நாம் வாக்குக் கொடுத்திருக்கிறோம். பர்மாவில் இருந்து அவர்கள் விரட்டப் பட்டு இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நிரந்தரம் உண்டாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நிரந்தரம் என்பது என்ன வென்றால்—தானே இதுபற்றி முதலமைச்சரிடத்தில் கலந்து பேசும் போது குறிப்பிட்டிருக்கிறேன். கீழே நடைபாதை அப்படியே இருக்கட்டும். மேலே நீண்ட மாடமாக கட்டி—நான்கு இடங்களில் மேலே ஏறுவதற்கு வழி வைத்து—கீழே நடைபாதை—மேலே கடைகள் இருக்க வசதி—கார்ப்பரேஷனைக் கொண்டே கட்டிடத்தைக் கட்டி வாடகைக்கு அவர்களிடத்திலே கொடுக்க வேண்டும். இதுபற்றி பல பொதுக்கூட்டத்திலும்—மெமோரண்டங்கள் மூல மாகவும் எடுத்துச் சொல்லி இருக்கிறோம். கார்ப்பரேஷனைக் கலந்து உடனடி யாக இதுபற்றி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்ததாக, ஒரு முக்கிய பிரச்சினை—இது பொதுவானது—தயவு செய்து சிந்திக்க வேண்டும். சென்னையில் ஒரு பிரச்சினை இருக்கிறது. சட்டத்தில் தடங்கல் இருக்கிறது. முப்பது வருடம், நாற்பது வருடமாக கடைகள் வைத்திருக்கிறவர்கள் இருக்கிறார்கள்.

வீட்டுக்காரர்கள்—இடித்துக்கட்டப்போவதாக—ஒரு ப்ளானைப் போட்டு கார்ப்பரேஷன் சாங்ஷனையும் பெற்று—அங்கிருப்பவர்களை வெளியேற்று கிறார்கள். இடித்துக்கட்டட்டும்—கட்டின பிற்பாடு அந்த இடத்தை இன்றுள்ள வாடகைப்படி—நான் பழைய வாடகைக்கே விடவேண்டுமென்று கூடச் சொல்லவில்லை—இன்றுள்ள வாடகைக்கு இவர்களுக்கே கொடுக்க வேண்டும். இப்போது அப்படிச் செய்வதில்லை. காலி பண்ணச் செய்கிறார்கள்—கட்டிய பிறகு வேறு ஒருவருக்கு வாடகைக்குக் கொடுத்து விடுகிறார்கள்—பகடி கூட வாங்குகிறார்கள் என்று நினைக்கிறேன். சட்ட பூர்வமாக இதற்கு ஒரு தடை ஏற்படுத்த வேண்டும்—முன்பு முப்பது நாற்பது ஆண்டுகளாக இருந்தவர்களுக்கே அந்த இடம் கொடுக்கப்படுவதற்கு வழி காணவேண்டு மென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பெயர் கொடுக்கிற நேரத்தில் காலையி லேயே பேச பெயர் கொடுத்துவிடுவது நல்லது. இன்றைக்குக் காலையிலே முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் பேசுவதாகச் சொல்லவில்லை. அதைப்போல சுதந்திராக் கட்சித் தலைவர் காலை 11 மணி வரையில் இந்த அவைக்கே வரவில்லை. நான் இங்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் உட்கார்ந்திருக்கிற வரிசைப்படி—பேச அழைக்க எழுதி வைத்திருந்தேன். இவர்கள் இரண்டு பேர்களும் பிறகு பேசுவதற்குப் பெயர் கொடுத்த காரணத்தினால் திரு. தங்கமணி அவர்களுக்கு முன்னதாக அவர்கள் பெயர்கள் சேர்க்கப் பட்டன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, பர்சனல் க்ளாரிபிகேஷன். திரு. சீனிவாசன் பேசிய பிறகு என்னைப் பேச அழைப்ப தாகச் சொல்லப்பட்டது. அவருக்குப் பின்னர் திரு. நரசிம்மனை பேச அழைத்தீர்கள். நீங்கள் இதுதான் முறை என்று வைத்துக்கொண்டால், அதை நாங்களும் தெரிந்து பின்பற்ற முடியும்.

[1974 ஏப்ரல் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் சொன்னேன். காலையிலேயே
இந்த இரண்டு பெயர்களும் கொடுக்கப்பட்டிருந்தால் இந்த நிலை வராது. நான்
வரிசையாகத்தான் எழுதி வைக்கிறேன். பதினொறு மணிக்கு மேல் இடையில்
பெயர் புகுத்தப்படுவதால், இந்த நிலை. இப்போது திரு. தங்கமணி
பேசுவார்கள்.

திரு. கே. டி. கே தங்கமணி: தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்
பேரில் ரூ. 557 கோடி வரையிலும் இந்த மன்றத்திலே நாம் அங்கீகரிக்க
வேண்டிய ஒரு முக்கியமான மசோதாவாக இருப்பதால், இதன்பேரில் பேசக்
கூடிய நிலைமைகளைப் பொறுத்தவரையில், நான் அறிந்தவரையில் நமது
விதிகளை எடுத்தாலும் சரி, அல்லது நாடாளுமன்றத்தினுடைய விதிகளை
எடுத்தாலும் சரி, அவைகளிலே இம்மாதிரி ஒதுக்கப்படுகிற பணம் முறையாக
செலவழிக்கப்படவேண்டுமென்பது பற்றியும், மிக முக்கியமான நிர்வாக
அமைப்புகளைப் பற்றியும் பேசவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அந்த
வகையிலே, இரண்டு பகுதிகளாகப் பிரித்து நான் உங்கள் மத்தியிலே சொல்ல
லாம் என்று நினைக்கிறேன்.

எல்லாவற்றையும் கூருமல், சில சாம்பிள்கள் கொடுத்து, எப்படி நீங்கள்
ஒழுங்காக, சரியாக செலவழிக்க மாட்டீர்கள் என்பது பற்றிச் சொல்ல
விரும்புகிறேன்.

பால் பண்ணைத் திட்டத்தை எடுத்துக் கொள்வோம். மதுரை பால்
பண்ணைத் திட்டத்திலே, 1973-74-ம் ஆண்டிலே, ரூ. 5,97,000 நமக்கு லாபம்
கிடைக்கும் என்று சொல்லி, கடைசியிலே ரிவைஸ்ட் எஸ்டிமேட்டிலே, லாபம்
காட்டுவதற்குப் பதிலாக ரூ. 22 இலட்சத்து சொச்சத்திற்கு நஷ்டம் காண்பித்
திருக்கிருர்கள். அதே மாதிரி, இந்த வருஷம் ரூ. 5 இலட்சம் என்று
நினைக்கிறேன்—லாபம் கிடைக்கப் போகிறது என்று சொல்கிருர்கள். அடுத்தாற்
போல் நஷ்டத்தைத்தான் காணப்போகிருர்கள். இதை வைத்தே நாம்
பார்த்துக் கொள்ளலாம்.

ஏதோ சில கோளாறுகள் இருக்கக்கூடிய நிலைமையிலே சொல்
கிருர்கள். லாபம் என்பது கடைசியிலே நஷ்டமாக இருக்கிற நிலைமை
இதனுலிருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இம்மாதிரி
செலவழிப்பதைக் கண்காணிக்கத்தான் இங்கு ஒரு கமிட்டி போடப்பட்டிருக்
கிறது—பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி என்று. அதனுடைய கடைசி



1974 ஏப்ரல் 9] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ரிப்போர்ட்டிலே, 5-வது அசெம்பிளியினுடைய 10-வது ரிப்போர்ட் சென்ற
மாதத்திலே இங்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்த ரிப்போர்ட்டைப் பார்த்தோ
மானுல், ஆளுங்கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், அந்த நிலையிலே இருப்பவர்
களும் கொஞ்சம் ஆழ்ந்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே எடுத்த முடிவுகள் 40-க்கு அதிகமானவை அமுல் நடத்தப்படவே
யில்லை. பதில் வேண்டுமென்ருல், 5, 6 வருஷம் ஆகிறது என்று சொல்லப்பட்டு,
பினுன்ஸ் டிபார்ட்மெண்ட் சர்க்குலரே, அமுலாகவில்லையென்ற அளவுக்குத்
தந்திருக்கிருர்கள்.

'The Committee had reiterated its earlier recommendation
that the controlling officers should be instructed to surrender in
time the amounts not required. The Department had stated that
necessary instructions have been issued to the Heads of Depart-
ments and the departments of the Secretariat in May 1969. The
Committee, however, finds that the position has not improved
much; the surrenders are made only in March every year and on
the last day of that month in most of the cases. The Committee
also observes that cases of excessive, unnecessary and inadequate
supplementary grants continued to occur . . .'

என்று சொல்லியிருக்கிருர்கள். ஒரு பகுதிதான் நான் சொன்னேன். இதை
நாம் பார்த்தால், எப்படி இன்றைக்கு நாம் முடிவு செய்யப் போனுலும்,
ஒதுக்கக் கூடியதைச் செலவழிப்பதிலே இருக்கக்கூடிய கோளாறை இதற்காக
நியமித்திருக்கக்கூடிய கமிட்டியே சொல்லி இருக்கிறது. அதற்கு மேல்
நான் சொல்வதற்கில்லை.

அடுத்தாற்போல், இந்தக் கொள்கை விஷயமாக, ஒரு குறிப்பிட்ட
விஷயத்தை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்குப் பல
முறை முயற்சி செய்தேன். ஆனுல், அது அன்ருட நிர்வாகத்திலே வருகிறது
என்று சொன்னுர்கள்.

இந்த மாதம் 3-ந் தேதி பல செயலாளர்கள் மாற்றப்பட்டார்கள் என்ற
விஷயம் வந்தது. அதற்குக் கொஞ்ச நாள் முன்பாக, கலெக்டர்கள் மாற்றப்
பட்டார்கள். நிர்வாகத் தேவைகளுக்குட்பட்டு, யார், எங்கே இருக்க வேண்டு
மென்று முடிவு செய்யவேண்டியது அரசுதான். ஆனுல், முடிவு செய்யும்
போது, யார், எங்கு என்பது பற்றி, ஒரு நியாயமான கொள்கை வேண்டுமென்று
நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 ஏப்ரல் 9

இப்போது லோக்கல் போர்ட்ஸ் பற்றி விவாதம் வருகின்ற அன்றுதான் செயலாளர் மாற்றப்பட்டிருக்கிறார். 3 ஆண்டான செயலாளரை மாற்றுவார்கள் என்று நினைத்தோம். டெபுடி செகரட்டரியாக இருந்தார். அடுத்து, புதிதாக வரக்கூடிய எலெக்டிரிசிட்டி ஜெனரேஷன் கார்ப்பரேஷனுக்கு வேலை செய்து கொண்டிருந்தார். அங்கு வேலை செய்து முடித்தாரோ, இல்லையோ, பி.டபிள்யூ.டி. செயலாளராகிவிட்டார். இந்தப் பிரச்சினைப் பார்த்தால்— கடுமையான வார்த்தையை நான் உபயோகிக்க விரும்பவில்லை—ஏதோ கோளாறு இருக்கிறது.

மதுரை மாவட்டத்திலே கலெக்டராக இருந்தவரை, ஏதோ தமிழ்நாடு வாட்டர் சப்ளை அண்ட் டிரெயினேஜ் போர்டுக்குத் தலைவராகப் போட்டிருக்கிறார்கள் (குறுக்கீடு). இவர் அபிஷியல் தலைவர். அபிஷியல் தலைவரும் இருக்கிறார், நான்-அபிஷியல் தலைவரும் இருக்கிறார். But the spiril is there

அவரைப் போட்டு, கான்சல் ஆகிவிட்டது. பிறகு டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் ஆகப் போட்டிருக்கிறார்கள்.

இதைப் பொறுத்து எடுத்துப் பரிசிலனை செய்தால், கோளாறாகவும் முறைகேடான முறையிலேயும் நடைபெறுவதாகத் தெரிகிறது. சில பேர் 3 வருஷம், 2 வருஷம் இருக்கிறார்கள். அதைப்பற்றிச் சொல்லவில்லை. திடீரென்று ஒரு குறிப்பிட்ட பதவிக்குப் போடுவது என்றால், என்ன பொருள்? செக்கரட்டரியாக இருந்தவரை ஓரிடத்திற்குப் போட்டு, இன்னொரு இடத்திற்குப் போடுவது என்றால் என்ன பொருள்? தொழிலாளர் சம்பந்தமாக விவாதித்து, ஓரளவு நல்ல நிலைமையிலே இருந்தார், எல்லாவற்றையும் தெரிந்துவைத்து அவர் போய்விட்டார். அதற்குப் பதிலாக, இன்னொரு செயலாளர் வந்திருக்கிறார். எப்படி சிரமங்கள் வருகின்றன என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

பல அரசியல் பிரச்சினைகள் வந்தன. பஞ்சாயத்து யூனியனையும் ரெவினியூவையும் பிரிக்க வேண்டுமா என்பதுபற்றி சர்ச்சை வந்தது. எ.ஆர்.சி. ரிப்போர்ட்டிலே பிரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர், அதில் உறுப்பினராக இருக்கிறார். அவர் பிரிக்கக் கூடாது என்பதற்கு அருமையான காரணங்களைச் சொல்லியிருக்கிறார் (குறுக்கீடு). பிரிக்க வேண்டுமென்பதற்காகக் காரணங்களைச் சொல்லியிருக்கிறார். பலரும் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, பிரித்து விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டும் ஒன்றாக இருந்து சேவை செய்ய முடியாது. ஆகவே பிரித்து விடுவதுதான் உசிதமானது. ஏற்கனவே பாதி அளவிலே பிரித்துதான் இருக்கிறது. முழு அளவிலே பிரித்துவிடுவது நல்லது.



1974 ஏப்ரல் 9] [திரு. கே. டி. கே. தங்கமணி]

சென்னை நகரம் எப்படி இருக்கிறது என்பதைப்பற்றி, சில சாம்பிள்கள் கூற விரும்புகிறேன்.

சென்னை கார்ப்பரேஷன் தேர்தல் ஒத்தி வைப்பு;

சென்னை நகரத்திலே காலரா;

குளோரின் சிலிண்டர் திடீரென்று வெடித்து 200 பேர் ஆஸ்பத்திரியில்;

ஓட்டேரியில் 30 வயது பெண் கொலை செய்யப்பட்டிருக்கிறாள்;

சென்னை நகரத்திலே இங்கிருக்கக் கூடிய பஸ் ஏறி, 4 பேர் செத்தார்கள்.

இவ்வளவும், நகருக்குள், சட்டமன்றம் நடக்கிற இந்தக் காலத்திற்குள் நீங்கள் உங்களுக்குப் பக்கத்திலே இருப்பதைக் கூட சரியாகக் கவனிக்கவில்லை என்பதற்காகத்தான் நான் இவ்வளவையும் சொல்கிறேன்.

என்.ஜி.ஓக்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள், மத்திய சர்க்கார் கொடுக்கிற பஞ்சப்படியை கொடுக்க வேண்டுமென்று. எந்த அளவு அவர்களுக்கு வெற்றி கிடைக்கிறதோ அது வேறு. ஏற்கனவே கொடுத்தது, ஒப்பந்தம் செய்ததற்கு மாறாக இருக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். அது ஒன்று.

இன்னொன்று, எக்ஸாமினேஷன் நடக்கிறது, மாணவர்கள் பி.ஏ., பி.எஸ்ஸி. எழுதுகிறார்கள் சென்னை நகரத்திலேயிருக்கிற கல்லூரிகளிலே டேர்ம் டேஸ் இல்லையென்று சொல்லி, ஆயிரம் பேருக்கு ஹால் டிக்கட் கிடைக்கவில்லை. இது மாணவர்களைத் தூண்டிவிடக் கூடிய நிலைக்குத்தான் வரும். இதுபற்றி மேற்கொண்டு சொல்ல விரும்பவில்லை.

குறிப்பிட்ட ஒரு விஷயத்தைப்பற்றி, அரசியல்பற்றி, இங்கே வந்ததால் சொல்ல விரும்புகிறேன். புதுவைத் தேர்தல். நிர்ப்பந்தப்பட்ட இடைத் தேர்தல். உரிய நாளில் தான் தேர்தல் நடந்தது. அதற்கு முன்னால் ஏற்பட்ட ஒரு சம்பவம் 14 பேர் இருந்தால், மெஜாரிட்டி இல்லாமல் போய்விட்டது என்று கவர்னர் கருதுகிறார். ஆகவே, 2, 3 மாதத்திற்குச் சட்டசபை கலைந்து, கவர்னர் ஆட்சி நடந்து, தேர்தல் நடந்தது. சட்டமன்றத்திற்கும் தேர்தல், நாடாளு மன்றத்திற்கும் தேர்தல். நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு மகத்தான வெற்றியை தேடிக் கொடுத்திருக்கிறார்கள்,

If it is to be called 'plebiscite', the plebescite is more in favour of this combination. என்று தெளிவாக்கியிருக்கிறார்கள்.

ஆனால் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் சில சிக்கல்கள் வருகின்றன. காங்கிரஸ் இரண்டும் சேர்ந்தால் 12; கம்யூனிஸ்ட் கட்சியும், அண்ணா திராவிட முன்னேற்றக்கழகமும் சேர்ந்தால் 14; 14 தான் பெரிய கட்சி; ஆகவே, 14 பேர் கொண்ட பெரிய கட்சியைக் கூப்பிட்டு, நீங்கள் அரசு அமைக்க முடியுமா என்று கேட்டார்கள். காங்கிரஸ் 5,7—12 ஆவது என்பது அவர்களுக்கே குழப்பம். 12-ஆக இருந்ததால், 14-ஐக் கூப்பிடுகிறார்கள். கவர்னர் நினைக்கிறார், இது எப்படியாவது நிரந்தரமாக இருக்கும் என்று. இன்னொருவர் பொதுக்கூட்டத்திலே பாண்டிச்சேரியைச் சேர்ந்தவர். கட்சி மாறுதல் என்பது சாதாரணமாக இருந்து வந்திருக்கிறது, இப்பொழுது கட்சி மாறுகிற நிலைமை இந்தியாவிலே ஏற்படுவதற்கு முன்னாலேயே பாண்டிச்சேரியிலே ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஏற்படாத அளவுக்கு நாங்கள் பார்த்துக்கொள்வோம், யாரும் போய் வாருங்கள், என்று சொல்லமாட்டோம், என்று இரண்டு பேர் எங்களிடத்திலே வந்து, நாங்கள் ஸ்பீக்கர் ஆகிறோம், உங்களிடத்திலே வந்து சேருகிறோம் என்று; ஸ்பீக்கருக்கு வேண்டாம் என்றோம். (குறுக்கீடு) No reflection on you. ஒருவர் ஸ்பீக்கர் ஆய்விட்டால் எங்களுக்கு 14. மார்க்ஸிஸம் கம்யூனிஸ்ட் கட்சி எந்தவித நிபந்தனை இல்லாமல் ஆதரிக்கிறது. பதினைந்து உறுதியாக இருக்கும். நாங்கள் எப்படியாவது மெஜாரிட்டியை என்ஹான்ஸ் பண்ணிக் கொண்டிருக்க வேண்டுமானால், குறிப்பிட்ட நபர் ஒருவரை நாங்கள் ஸ்பீக்கராக்கி இருக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயிண்ட் ஆப் ஆர்டர். பாண்டிச்சேரி அது ஒரு தனி பிரதேசம், அதைப் பற்றி நம் சட்ட மன்றத்தில் விவாதிப்பது ஒழுங்கா என்பதை சபாநாயகர் அவர்கள் தீர்ப்புக்கு விடுகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலிலேயே கேட்டிருக்க வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பல பேர் பேசும்போது இடையில் தலையிடக் கூடாது என்று இருந்தேன் மிக முக்கியமான பிரச்னை. இதைப் பற்றி பேசியிருக்கும்போது இதைப் பற்றி கம்யூனிஸ்ட் கட்சி பதில் சொல்லாமல் போனார்கள் என்றில்லாமல் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலையை



எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்றைக்கு அவர்கள் இதை யோசித்துப்பார்க்க வேண்டும். அவர்கள் முக்கியமான அரசியல் தலைவர்கள் சொல்லுகிறார்கள். நாங்கள் அந்த அரசு நடத்துவதைப் பார்ப்போம் என்று அவர்களைப் பொறுத்த வரையில் எப்படியாவது நாங்கள் சேர்ந்து இந்த ஆட்சியை நீடிக்க விடக் கூடாது என்று விரும்பினார்கள். விரும்பட்டும். மக்கள் அந்த நிலைமையை பார்க்கிறார்கள். அந்த நிலைமை வரும்.

நான் சொன்னேன். செயல்படுத்தும் முறை வரும்போது இந்த சிப் இன்ஜினியர்கள் இருக்கிறார்கள். எத்தனை சிப் இன்ஜினியர்கள் இருப்பது? கணக்கு போட்டால் 20 சிப் இன்ஜினியர்கள் இருக்கிறார்கள். உதாரணமாக ஒரு இடத்தில் பார்க்கிறேன். 2 சிப் இன்ஜினியர்கள் இருக்கிறார்கள். பி.டபிள்யூ.டி. என்று நினைக்கிறேன்.

மதுரையில் ஒரு பிரச்னை வந்திருக்கிறது. அங்கிருக்கக் கூடிய அந்த கோர்ட்டுக்குப் பக்கம் பஸ் ஸ்டாண்டு கட்டுவதற்கு முடிவாயிற்று. பலரும் பணம் கொடுத்து ஏற்பாடு செய்யப் போகிறார்கள் என்றால் அங்கே இருக்கக் கூடிய சிப் இன்ஜினியர் அவர் பி.டபிள்யூ.டி-யில் இருக்கிறார். அவருக்கு கன்ஸ்டிரக்ஷனைப் பற்றி தெரியாது போல இருக்கிறது. எனக்கு அதிகாரமில்லை என்று சொல்கிறார். வேறு எந்த இடத்திற்குப் போவது என்று தெரியவில்லை. இந்தமாதிரி நிலைமைகள் இருக்கிறது. சிப்புக்கு சிப் என்று வையுங்கள். இருபது சிப் இன்ஜினியர்களைப் போடுவதால் வேலை முறையாக உகந்ததாக இல்லை என்று சொல்லி இந்தப் பணத்திற்குப் பொறுப்பை அரசின் பொறுப்பில் வைத்திருக்கிறோம். அவர்களால் செலவிடப்படும். அப்படி செலவழிக்கப்படுகின்றபொழுது ஏற்கனவே நாம் நியமித்த கமிட்டிகளின் விமர்சனங்களையும், இந்த மன்றத்தில் நாங்கள் சொல்லக் கூடிய விமர்சனங்களையும் கருத்தில் ஏற்று அது செலவிடப்பட வேண்டுமென்று சொல்லி இந்த மசோதாவின் பேரில் என் வார்த்தையை சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பல்வேறு மான்யங்கள் மீது நடந்திருக்கக்கூடிய விவாதங்களை மாண்புமிகு அமைச்சர்கள் கவனித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். மிக அழுத்தம் திருத்தமாக பெரும்பாலான அங்கத்தினர்களின் கருத்துக்களைக் கொண்டிருக்கக் கூடிய திருத்தங்களையும் அவைகளை

அவர்கள் ஆலோசனைகளையும் மிகவும் கவனத்தில் எடுத்துக் கொண்டு இந்த வருடம் இந்தப் பணம் செலவழிக்கப்பட வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

அப்படி வருகின்ற சந்தர்ப்பத்தில் சில கருத்துக்களை அழுத்தம் திருத்தமாக கூறிவிட்டு போகலாம் என்று நினைக்கிறேன். கல்வியைப் பொறுத்த வரையில் பெரிய மாற்றம். இன்றைக்குக் கல்வியின் தரம் குறைவாக இருக்கிறது. மாணவர்கள் மத்தியில் அமைதியின்மைத் தன்மை இருக்கிறது என்பதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு நாவலர் அவர்கள் மிகச் சிறந்த முறையில் இந்த நாட்டில் எல்லோரும் சமமான வகையில் சம நீதியாக கல்விக் கொள்கையை வகுத்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறி விட்டு அதே சமயத்தில் தமிழில் கல்வி என்று சொல்லக்கூடிய நிலை சமீப காலத்தில் கொஞ்சம் தொளதொளப்பு ஏற்பட்டிருக்கிறது. இது அழுத்தம் திருத்தமாக இன்றைக்குச் சொல்ல வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக எடுத்துக் கொண்டீர்களானால் வைத்தியம் சம்பந்தப்பட்ட வரையில் நாட்டு வைத்திய முறையை நிச்சயமாக நமது பேராசிரியர் அவர்கள் வருகிற வருடத்தில் மிகவும் ஊக்குவிப்பார் என்ற கருத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் பணிவோடு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

உணவுப் பிரச்னை சம்பந்தப்பட்ட சமீபத்தில் 15 தினங்களுக்குக்கூட ஒரு மூட்டை அரிசி 15 ரூபாய் ஏறியிருக்கிறது என்று கூறுகிறார்கள். இதையெல்லாம் கவனத்தில் கொண்டு வருகிற மீன் மாதங்களில் இன்னும் விலை ஏறிக் கொண்டு போகக் கூடிய நிலை இருக்கும். ஏனென்றால் பூரணமாக நாம் வியாபாரத்தை எடுத்துக் கொள்ள முடியவில்லை. இப்படி அவசரப்பட்டு எடுத்துக் கொண்டு நடவடிக்கையில் இறங்கி அகப்பட்டுக் கொள்ளவும் விரும்பவில்லை. இதைப் பார்க்கும்போது உஷார்படுத்தக் கூடிய நிலை இன்றைக்கு ஓரளவு வந்திருக்கிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உணவுத்துறை அமைச்சர் அவர்கள் மிக ஜாக்கிரதையாக வரப்போகிற சில மாதங்களில் மிகவும் நெருக்கடி ஏற்படப் போகிறது. கொள்முதலை துரிதப்படுத்தி, சேமித்து வைத்திருப்பது, விலை ஏறாமல் பார்த்துக் கொள்வது, நியாயமான முறையில் விநியோகிப்பது என்பது போன்ற கொள்கையெல்லாம் நியாயமாக வகுத்து. அழுத்தம் திருத்தமாக ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டு செயல்படுவாரானால், தமிழகத்தைக் காப்பாற்ற முடியும்.





ஏனென்றால் எனக்கு முன்பாக பேசிய காங்கிரஸ் தலைவர்கள் சொன்னார்கள். குஜராத்தைப்பற்றி சொன்னார்கள். பிற்போக்கு சக்தியைப் பற்றிச் சொன்னார்கள். எந்த முற்போக்கு நடவடிக்கையும் எடுக்கப் பட்டாலும் பிற்போக்கு சக்திகள் இருக்கிறார்கள் எதிர்ப்பார்கள் என்ற உஷார் தன்மையுடன் நடவடிக்கை எடுத்திருந்தால் குஜராத்தில் இந்த நிலைமை வந்திருக்காது. குஜராத் நிலைமை என்னவென்றால் அந்த ஆட்சிக்குள்ளேயே, அந்த அரசுக்குள்ளேயே பிற்போக்கு சக்திகள் அடங்கி இருந்தார்கள், அவர்கள் செல்வாக்கு அந்த அரசின்மீது இருந்தது. அந்த நிலையில் தான் பல கலவரங்கள் நடைபெற்று விடுகிறது. அந்த கலவரங்களை அடக்க முடியாத நிலைமை அந்த அரசுக்கு ஏற்பட்ட காரணத்தால் அந்த அரசுக்குள்ளேயே அந்த பிற்போக்கு சக்திகளுடைய ஏஜெண்டுகள் இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். சும்மா பிற்போக்கு சக்தி என்று பேசிக் கொண்டு இருப்பதில் பிரயோசனமில்லை. பிற்போக்கு சக்திகள் ஒரு தீவிரமான சோஷலிச நடவடிக்கையை எடுத்தால் எதிர்ப்பார்கள் என்பதை எதிர்பார்த்து ஒரு அரசு அதற்கு தக்க பாதுகாப்பு நடவடிக்கையோடு இந்த அரசு இறங்க வேண்டும் என்பதை அந்தக் குஜராத் படிப்பினை எடுத்துக் காட்டுகிறது. பல கலவரங்கள் நடக்கத்தான் போகிறது. அது நம்மைப் பொறுத்த வரையில் ஓரளவு அந்த முறையில்லை என்று ஆத்ம திருப்தி பட்டுக் கொள்ள வேண்டும். இங்கு எடுத்திருக்கக் கூடிய நடவடிக்கைகள் நிச்சயமாக . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் கலவரங்களை தூண்டி விடுகிறாரா, ரகசியமான தகவல் உண்டா என்ன என்பதை தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** அம்மையார் போன்றவர்கள் அங்கு இருக்கிற வரையில் பல இடங்களில் நடக்கத்தான் செய்யும். பிற்போக்குச் சக்திக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு பேசினால் இது நடக்கத்தான் செய்யும். அதை தவிர்க்க முடியாது. ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் நாடு பூராவும் நெருக்கடி. இந்திய அரசியல் சட்டத்திற்கே சவாலாக இருக்கிறது. இந்திய அரசியல் சட்டத்தை நேரு என்ன எண்ணத்துடன் நிறைவேற்றினாரோ, இன்றைக்கு அது மாற்றப்பட வேண்டிய கால கட்டம் வந்து விட்டது என்பதை இன்று குஜராத் நெருக்கடி, பல இடங்களில் ஏற்பட்ட கலவரங்கள் எல்லாம் எடுத்து காட்டுகின்றன என்பதைக் கூற விரும்புகிறேன். இன்னொரு விஷயம்.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1974 ஏப்ரல் 9

ஸ்தல ஸ்தாபனம் இரண்டு டிபார்ட்மெண்டாக பிரிப்பது இருக்கிறதே, அதைப்பற்றி மௌனமாக இருந்து விட்டார்கள். சொல்லவில்லை. ரெவின்யூ இலாக்காவா, உள்ளாட்சித் துறை இலாக்காவா என்று பல பேர் வலியுறுத்திப் பேசியும் மௌனமாகயிருந்து விட்டார்கள். அது பற்றி சீக்கிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே அந்த ஹோம் டிபார்ட்மெண்ட் செகரட்டரி இன்ஸ்பெக்ஷன் ரிப்போர்ட்டில் இது பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த இலாக்காவிலிருந்து எடுக்கப்பட வேண்டுமென்று எல்லாம் அன்றைக்கு மாநாட்டில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதை யெல்லாம் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

உணவுத் துறை பொறுத்த வரையில் இன்றைக்கு நாம் எடுத்து கொண்ட உஷார் நடவடிக்கை இருந்தபோதிலும், வரப் போகிற காலத்தில் இன்னும் உஷாராக, கள்ள மார்க்கெட்டுக்கு விடாமல், விலையேற்ற விடாமல் தடுக்கும் அளவுக்கு இருக்க வேண்டுமென்று வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக ஒரு பிரச்னை. திரு. சீனிவாசன் அவர்கள் உணர்ச்சி வசப் பட்டு பேசினார்கள். இரண்டு கோளா இருக்க முடியாது என்பதைப்பற்றி பெரிய விஷயமாகச் சொல்லி விட்டார். அது பெரிய தவறானது என்று கூறினார். 2 கோளா இருக்க முடியாது என்று சொல்வதில் என்ன தப்பு இருக்க முடியும்? ஒரு கோளா தான் இருக்க முடியும். ஒரு தமிழ் நாடுதான் இருக்க சேர்ந்தவர்கள் இந்தியாவின் பிரதம மந்திரியாக வர முடிந்திருக்கிறது சரித்திரத்தில் 25 வருட காலமாக என்று கேட்கிறேன். அது ஒரு பினாமினன் அப்படி இருக்கிறது. உத்திரப் பிரதேசத்தில் 25 வருட காலமாக பண்டித நேருவிலிருந்து ஆரம்பித்து இன்றைக்கு இந்திரா காந்தி பிரதமராக இருக்கிறார். வேறு யாரும் வர முடியவில்லை. அதற்குக் காரணம் என்ன?

இந்த நாடு சோஷலிசத்திற்குப் போய் விட்டதாக நாம் கனவு கண்டால் கூட ஒத்துக்கொள்ள முடியாது. இன்றைக்கு நாம் பூஷ்வா அரசியல் அமைப்பில் இருக்கிறோம். இன்றைக்கு நாட்டில் இனப்பற்று, ஜாதிப் பற்று, இப்படிப் பட்ட பற்றுகள் ஆட்சி போய் விட்டது என்று சொல்லக் கூடிய ஒவ்வொரு வரும், அந்த அமைப்பு மாறுகிற காலத்தில்தான் இந்திய அரசியல் சட்டம் [illegible] அமைப்பில்.



1974 ஏப்ரல் 9] [திரு. மணலி சி. கந்தசாமி]

இன்றைக்கு ஒரு கேரளாவைச் சேர்ந்தவர் தமிழ்நாட்டில் முதலமைச்சராக வர முடியாது. சட்டப்படி அல்ல. அதை மீறி வந்து விட்டால் நம் கலைஞர் என்ன செய்ய முடியும்? வருகிற வெள்ளம் இவர்களை அடித்துக் கொண்டு போய் விட்டால் என்ன செய்ய முடியும்? வெள்ளம் வராமல் தடுக்கக் கடமை உண்டு. தடுத்து நிறுத்தி, பாதுகாப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்குக் கடமையுண்டு. அது அரசியல். காழ்ப்பு உணர்ச்சி இல்லாமல் செய்வது நலம்.

(பிற்பகல் 1-00)

கடைசியில் டாக்டர் ஹண்டே அவர்கள் பேசினார்கள். அவர் பேசினது பூராவும் எனக்குப் புரியவில்லை. ஊழல் என்ற இலாக்கா என்று சொன்னார். சர்க்கரே ஊழல் என்று ஒரு இலக்காவை வைத்திருப்பதை அவர்கள் பேசுவதாக நான் நினைக்கின்றேன்.

உள்ளபடியே ஊழல் இருந்தால் அதைச் சொல்வோம், அதைத் திருத்துவதற்கு முயற்சிப்போம். ஆகவே, எல்லாவற்றையுமே ஊழல் என்று கூறுவது சரியல்ல. ஜீவாதாரமான பிரச்னைகளை வைத்துக்கொண்டு, ஜனங்கள் பற்றிய பிரச்னைகளை வைத்துக்கொண்டு இந்தச் சர்க்காரோடு போராட முடியும். அதற்கு அவர்கள் பதில் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சும்மா பேசுவதால் பயனில்லை. ஊழலையும் தைரியத்தோடு சொல்ல வேண்டும். நிச்சயமாகச் செய்ய வேண்டுமென்று குறிப்பிடும் விதத்தில் இந்த மசோதாவைப்பற்றிச் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். ஆத்திரப்பட வேண்டாம்.

1976-ஆம் வருஷத்திலே தேர்தல் வரும்பொழுது இவர்களை அகற்றுங்கள், வருகின்ற வெள்ளம் அடித்துக்கொண்டு போகட்டும். ஆனால் அந்த இரண்டு வருஷ காலத்திற்கு ஆக்கபூர்வமாக எதிர்க்கட்டும் அல்லது ஆதரிக்கும் நிலையை எடுத்தால் நல்ல அரசியல் சூழ்நிலைகள் உருவாகும். பெருமாள் போய் பெத்த பெருமாள் வர வேண்டாம், பிசாசு போய் காட்டேரி வர வேண்டாம் என்று நான் விரும்புகிறேன்.

இந்தச் சர்க்காரின் பலஹீனங்களைச் சொல்லி, அதற்கு மாற்றுக் கொள்கை என்ன என்பதை மக்கள் மத்தியிலே உருவாக்கி அதன் மூலமாக நல்லாட்சி ஏற்பட்டால் நல்லது, இல்லாவிட்டால் இந்தக் கதிதான் திரும்பத்திரும்ப ஏற்படும். என்னைப் பொறுத்தவரையில் கருதுகிறேன், இந்தச் சர்க்கார் சிலர் விரும்பப்படுகின்ற பலஹீனமான சர்க்கார் அல்ல. அந்த அளவிற்குச்

மாதிரி ஊதிவிட்டால் பறக்கின்ற அளவில் இல்லை. அவர்களே தவறுகளைத் திருத்திக்கொள்வார்கள், நல்ல விஷயங்களைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. ஆனால் எந்தக் கட்சியாவது மாறுபட்ட முறையில், குறுக்கு பாதையில் செய்யலாம் என்று நினைத்தால் நாட்டில் அராஜகம்தான் ஏற்படும்.

அடுத்தபடியாக, நிலச்சீர்திருத்தம் சம்பந்தமாக ஏதோ சட்டம் கொண்டு வரப்போவதாக அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தத் திருத்த சட்டத்தில் உருப்படியான சட்டமாக தமிழ்நாட்டில் நிலைமைகளை மாற்றக் கூடிய சட்டமாக, கிராம மக்களின் உணர்வுகளை மதிக்கின்ற அளவில் தயவு செய்து ஆலோசித்து இதுவரையில் ஏற்பட்ட அனுபவத்தை வைத்துக்கொண்டு உழவர்களுக்கு நிலம் கொடுக்கும் அடிப்படையில் சட்டத்தைக் கொண்டுவந்து மகத்தான சாதனையை இந்த வருஷத்தில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்லா மானியங்களின்பொழுதும் நடந்த விவாதங்களில் எக்ஸ்ட்ராக்ட்களை, நல்ல விஷயங்களைப் பரிசீலனை செய்து இந்த வருஷத்தில் நிர்வாகத்தை வெற்றிகரமாக நடத்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டு இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவரவர்களே, நான் பேசியதை 'ட்விஸ்ட்' செய்து பேசுவதால் சொல்கிறேன். திரு. மணலி அவர்கள் பேச்சில் குறுக்கிடுவதற்கு அருகதை இல்லை, இருந்தாலும் நான் சொன்னதை திசை திருப்பிச் சொல்கிறார்கள். தமிழ்நாட்டில், தென்னாட்டில் இரண்டு கோளாக்கள் இருக்கக்கூடாது என்று சொன்ன நோக்கத்தைப் பற்றி நான் விளக்கினேன். வெள்ளம் வெளியே இருந்து வருகிறது என்று சொன்னார். உள்ளேயிருந்துதான் வெள்ளம் வருகிறது. தமிழகத்தில் எம்.ஜி.ஆர். தமிழ்நாட்டு முதலமைச்சராக வரக்கூடாதா ? அதைத் தெளிவாகச் சொல்லுங்கள்.

**மணலி திரு. சி. கந்தசாமி :** சட்டப்படி வரலாம். ஆனால் இன்றுள்ள நாட்டு நிலைமையிலே, வளர்ச்சி மட்டத்திலே பூர்ஷ்வா ஜனநாயகத்தில் நிச்சயமாக வர முடியாது.

THIRU B. VENKATASAMI : Sir, I want to offer a few remarks on the Appropriation Bill.





Regarding soaring prices, Government is not in a position to control it. It is because they have no proper food procurement policy. We must give subsidy to the producer; then only we can bring down prices. Government should think of giving subsidy to the producer. You must give fertiliser subsidy, pesticide subsidy, like that. Then you can bring down production cost. Only then we can have constructive economy. If you give subsidy to the consumer, there will be no end. The producer must be given incentive. If you concentrate on production, you can bring down prices.

Prices are soaring up. For that decontrol is the only solution. Government of India had realised it of late and they have decontrolled wheat and the prices have come down immediately. I am glad this Government has not embarked on foodgrains trade. They have not controlled rice. I received a telegram from Hosur saying that because of delay of three days in issuing permits the price of rice has soared up to Rs. 4.50 a measure. I met the Collector. He told me the permit holder has been delayed by three days. I shall pass on the telegram to the Hon. Minister for doing the needful. How can people remain without food for one day? Once they starve, they get angry and that is how the clash started in Gujarat. Because of officers' negligence in issuing permits, because of their delay for three days in issuing permits, the price of rice has soared up and people are suffering. The concerned officials should be punished.

There is need for bifurcation of big panchayat. Unions Otherwise they will be unwieldy.

You have now stopped giving subsidy for mulberry cutting. Sericulture is important and by stopping subsidy, you are stopping the yellow revolution. Government has lost earning enough foreign exchange. In 25,000 acres, mulberry is to be cultivated. Please give subsidy for mulberry cutting and encourage 'yellow revolution'.

[Thiru B. Venkatasami] *[1974 ஏப்ரல் 9*

In Dharmapuri district, in Marudheri village, Kaveripattinam, 21 houses have been burnt. Anti-social elements entered and burnt the houses. They have stopped the bus because they wanted the detenus to be released. With such things happening, how can justice be rendered to the people?

In Barugur, electricity workers have written bad slogans against 'janupa community'. They have no fear. If departmental people do such things, stringent action should be taken against them. They should not forment communal trouble. They have disconnected some pumpsets.

Today you might have read in the papers that in my constituency of Denkanikota, there had been communal riot. They set fire to 40 houses and 50 people had been hurt. One man had been murdered. I do not know whether Government have clear-cut information. Hand-guns had been used against poor people. Government should take prompt action in the matter.

In another case, I know personally. In Thalai Station, a man was beaten when he went there to give a complaint. I understand that the police themselves are withdrawing the case, because of political interference. If the police take action and if there is political interference, how can there be proper justice. I do not know who has interfered. Any man who interferes spoils the morale of the police. The Inspector of Police and Sub-Inspector there have been transferred because they registered a case against a particular man. I request the Hon. Chief Minister to take into consideration these things. The communal riot in Denkanikota is a serious thing. The Hon. Minister should take immediate action. It is learnt that hand bombs and guns were used; I have not raceived correct information. But the position is that there is no fear for the people that Government would take action, if they committed crimes. Whether it is Hindus or Muslims or anybody, Government should see that they render justice.



*1974 ஏப்ரல் 9]* [Thiru B. Venkatasami]

Then there is the Naxalite activity in Dharmapuri. In the last six months two people have been murdered. What is the action taken by Government? What is the security for people? The Hon. Chief Minister should take stringent action according to law without bothering about who interferes. There is no security for the people and those who are honest. I request the Hon. Chief Minister to take stringent action against erring persons whoever it may be. Thank you Sir.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இங்கு நல்ல சூடான விவாதங்கள் எல்லாம் நடந்து முடிந்து மற்ற மாநிலங்களில் இருக்கும் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் எடுத்துப் பேசினார்கள். குறிப்பாக பாண்டிச்சேரி மாநிலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அதைப் பற்றி நான் அரசியல் ரீதியாக விமரிசனம் செய்வது பொருத்தமல்ல. இன்னொரு ராஜ்யத்தின் பிரச்சினை என்ற காரணத்தால், அதைப் பற்றி நான் இங்கு ஒன்றும் கூறுவதற்கில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வளவு பெரிய பட்ஜட்டைத் தாக்கல் செய்து கடைசியாக நிதி ஒதுக்கல் மசோதாவை அனுமதிக்கும் நேரத்தில் நமது அரசாங்கத்தில் இருக்கிற முக்கியமான பிரச்னைகளின் மீது அரசாங்கம் அதிகத் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று இருக்கும் உணவு நிலைமையை அரசாங்கம் சரியான முறையில் பராமரிக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வருகிற மாதங்களில் உணவு தானியத் தட்டுப்பாடு ஏற்படுமோ என்ற நிலை இருக்கிறது. எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும் வறட்சி நிலவுகிற தன்மையைப் பார்க்கிறோம். வட ஆற்காடு மாவட்டத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் பல கிராமங்களிலே குடிதண்ணீர் இல்லை, நவரை விவசாயத்திற்குத் தண்ணீர் இல்லை என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இருக்கிற பம்ப் செட்டுகளுக்கு எலக்ட்ரிசிடி இல்லாத காரணத்தால், விவசாயம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. நமது மாநிலத்திலே உணவு அதிகமாக இருக்கிறது என்ற கணக்குகள் எல்லாம் சொன்னாலும் இருக்கிற நிலைமை மோசமாகக் கூடாது என்பதற்காக வேண்டி முன்னெச்சரிக்கையாக வருமுன் கட்டுப் படுத்துகிற முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்துத் தலைவராக இருந்தவர்கள். அவர்களுக்கு அந்தக் கஷ்டங்கள் எல்லாம் தெரியும். ரெவின்யூ இலாகாவில் இருப்பவர்கள் மேல் மட்டமாக வந்து விட்டுப் போய்விடுவார்கள், ஆர்.டி.ஓ. வந்தால் என்ன காரியங்களைச் செய்வார்கள்? இந்த இரண்டையும் பிரித்துத்தான் ஆக வேண்டும். நிபுணர் குழுவினர் அந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏற்றுக் கொள்ளா விட்டால் மோசமாகப் போகும் என்று எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசாங்கத்தின் கீழ் பல கார்ப்பரேஷன்கள் இருக்கின்றன. பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டியில் அதைப் பற்றி எல்லாம் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டபொம்மன் கார்ப்பரேஷனைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அங்கு பொதுமக்கள் அந்தக் கார்ப்பரேஷன் ஒழுங்காக நடக்கவில்லை என்று குற்றம் சாட்டிக் கொண்டிருக்கிறார்கள். முன்பு இருந்த பஸ்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருக்கிறது. தனியாரானால் ஆர்.டி.ஏ. அவர்கள் 'கர்டைல்மென்ட் ஆப் எக்ஸிஸ்டிங் ஃபெசிலிடிஸ்' என்று சொல்லி பர்மிட் அத்தனையையும் ரத்து செய்வார்கள். ஆனால் இப்போது கார்ப்பரேஷன் கையில் இருக்கிறது. மோனாப்பலியாக அவர்கள் கையில் ஏகபோக உரிமை இருப்பதால் அவர்கள் பல வழித்தடங்களில் பஸ்களை விடுவதில்லை. அந்த நிர்வாகம் சீரழிந்திருக்கிறது என்று தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லாம் தந்தி அனுப்பியிருக்கிறார்கள். கழிந்த வாரம் 45 தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திரு. டி. எஸ். இராமசாமி பிள்ளை அவர்கள் தந்தி மூலம் அனுப்பியிருக்கிறார்கள். நிர்வாகத்தில் நடக்கிற கோளாறுகள் எல்லாம் கொஞ்சநஞ்சமல்ல என்று அவர்கள் புகார் கூறியிருக்கிறார்கள். இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அந்த நிர்வாகத்தை சீர் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அந்தக் கார்ப்பரேஷனை கலைத்துவிடுவது பொருத்தமாக இருக்கும் என்றுதான் நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தைப்பற்றிப் பேசுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். நல்ல வேளையாக அவர்கள் அதைப் பற்றி பேசினார்கள். கிட்டத்தட்ட 40, 45 பேர்கள் தாற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற





தகவலைச் சொன்னார்கள். அது சம்பந்தமாக எனக்குக் கூட ஒரு தந்தி வந்தது. உண்மை நிலை என்னவென்றால் இப்போது செக்கிங்கை தீவிரமாக ஆக்கியிருக்கிறோம். தினசரி வசூல் பண்ணிய பணத்தை சிலர் கட்டாது அத்தகைய நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அதை அனுமதிப்பது விரும்பத்தக்கதா என்று கேட்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** பணத்தை கையாடல் செய்திருந்தால் நிச்சயம் அவர்களை வீட்டுக்கு அனுப்பவேண்டியதுதான். என்னைப் போன்றவர்கள் அவர்களுக்காக வேண்டி வாதாட மாட்டோம். அங்குள்ள நிலையை சற்று உணரவேண்டும். ஏன் பஸ்கள் எல்லாம் குறைந்திருக்கின்றன என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறுவார்கள் என்று எதிர்பார்த்தேன். பஸ்களின் எண்ணிக்கை எல்லாம் குறைக்கப்பட்டிருக்கிறது. பல வழித்தடங்களில் இன்று பஸ்கள் இல்லாமல் மாணவர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். வேறு பயணிகள் எல்லாம் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய் அவர்களுக்கு கடன் கொடுக்கிறீர்கள். அப்படியிருக்க ஏன் அதற்கு ஒரு வழி பிறக்கவில்லை? தை பிறந்தால் வழி பிறக்கும் என்று சொல்வார்கள். ஆனால் ஒன்றுமே பிறக்கவில்லை. நாங்கள் எல்லோரும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறோம். ஒருவேளை சித்திரை பிறந்தால் வருமோ என்னவோ தெரியவில்லை.

மக்கள் பிரச்னை என்ற முறையில் இதைப்பற்றிக் கூறுவதற்கு நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அதேமாதிரி இந்த மன்றத்தில் அமைச்சர் அவர்கள் வேறு பல கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறினார்கள். தண்டையார்பேட்டையில் உள்ள 98 தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அவர்களுக்கு அப்படி இதுவரையில் கொடுக்கப்படவில்லை. அதேமாதிரி நாகர்கோவிலில் உள்ள 420 தொழிலாளர்கள் மீது கேஸ் தாக்கல் செய்யப்பட்டது. அந்தக் கேஸ்களை எல்லாம் வாபஸ் வாங்கப் போகிறோம், அதற்காக உடனடியாக நடவடிக்கை எடுப்போம் என்று கூறினார்கள். ஆனால் இதுவரையில் அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. இன்னும் எவ்வளவு மாதங்கள் காத்துக்கொண்டிருக்க வேண்டுமோ தெரியவில்லை. அவர்கள் இலவு காத்த கிளி மாதிரி இருந்து கொண்டிருக்கிறார்கள், பழுக்கும் பழுக்கும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக இந்த இலாகாவிற்கு பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் அவர்கள் அவற்றிற்கு ஒரு பரிகாரம் காணவேண்டும்.

அடுத்தபடியாக, அண்மையில் நடந்த ஒரு நிகழ்ச்சி. கோவை ஜில்லாவில் நடந்தது. ரூ. 26,000-க்கு அர்ச்சனை டிக்கட்டுகளை போலித்தனமாக அச்சடித்து விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது என்ற புகாரை அண்மையில் பார்த்தோம். அது சம்பந்தமாக இந்த இலாகாவிலிருந்து என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். அறநிலையப் பாதுகாப்பில், அதிலும் அறங்காவலர்களாக இருக்கிறவர்கள் . . .

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தற்போது அறங்காவலர்கள் பதவிக் காலம் முடிந்து புதிதாக அறங்காவலர்களை நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கேட்கப்பட்டுள்ளன. அங்கிருந்த நிர்வாக அதிகாரியும் கோவில் பணியாளர்களும் இந்தத் தவறைச் செய்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு பிடித்ததற்குப் பிறகு உடனடியாக அந்த நிர்வாக அதிகாரி தாற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டு அறநிலையத் துறை ஆணையாளர் அவர்களே இந்த விசாரணையை நேரடியாக செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்த அறங்காவலர்களின் பதவிக் காலம் எப்போது முடிந்தது? எவ்வளவு காலத்தில் யாரைப் போடுவது என்பதுபற்றி ஆராய்ந்துகொண்டிருக்கிறீர்களா? காலதாமதம் ஏன்?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இதில் ஆராய்வதற்கு ஒன்றுமில்லை. விண்ணப்பங்கள் கேட்கப்பட்டுள்ளன. சீக்கிரமே நியமிக்கப்படுவார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு மகிழ்ச்சி.

அடுத்தபடியாக, நம் நாட்டில் இருக்கிற மிகப் பெரிய பிரச்னை மின்சாரப் பற்றாக்குறையாகும். மின்சாரப் பற்றாக்குறையை நாம் எப்படி இப்போது சமாளிக்கப்போகிறோம் என்பதைப் பற்றிச் சிந்திப்பது பொருத்தமாக இருக்கும். இப்போது தொழில்களுக்கு 50 சதவிகிதம் மின்சாரம் தேவைப் படுகிறது. அதேபோல் விவசாயத்திற்காக 25 சதவிகிதம் மின்சாரம் தேவைப் படுகிறது. இந்த மின்வெட்டு ஏற்பட்டதன் காரணத்தால் பல விவசாயிகளும் இன்று அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

விவசாயிகள் வைத்திருக்கக்கூடிய பம்ப் செட்களுக்கு இன்று ஒழுங்காக கரண்ட் கிடைக்கவில்லை. அதுகுறித்து எங்களுக்குத் தந்திகள் எல்லாம் தந்து கொண்டிருக்கிறார்கள். இதில் நிச்சயமாக உணவு உற்பத்தி பாதிக்கிற நிலை



இருக்கிற காரணத்தினால்—அவர்களுக்கு இந்தக் கட்டுப்பாடு இல்லை என்று சொன்னாலும்—அவர்களுக்கு காலாகாலத்தில் கிடைக்கவில்லை என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, அதற்கு அரசாங்கம் என்ன வழிவகை செய்யப்போகிறார்கள் என்று பார்க்கவேண்டும்.

நெய்வேலியில் இருந்து நமக்கு அதிகமான மின்சாரம் கிடைக்கும் என்று அமைச்சர் அவர்கள்—அங்கு ஆயில் பைரிங் (Oil Firing) ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள்—விளக்கம் கூறினார்கள். ஆனால் நமக்கு எவ்வளவு அதிகப்படியான மின்சாரம் கிடைக்கும் என்பதைப்பற்றி திட்டவட்டமாக விவரங்கள் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சுமார் 6½ லட்சம் பம்ப் செட்கள் இருக்கின்றன. இவற்றிற்கு மின்சாரம் எப்போது கிடைக்கும் என்பதுபற்றி அந்தந்தப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு தெரியக் கூடிய அளவில் அதற்கு வேண்டிய தண்டோராவானாலும் சரி அல்லது விளம்பரம் ஆனாலும் சரி கொடுப்பது பொருத்தமாக இருக்கும்.

அடுத்தபடியாக, நம் ஸ்டேட் ப்ளானிங் கமிட்டியில் இருந்து அறிக்கை தந்திருப்பதாகக் கூறினார்கள். அதை அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருப்பதாகக் கூட மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த அறிக்கையின் நகலை அரசாங்கம் பரிசீலித்ததற்குப் பிற்பாடு எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தரவேண்டும். எல்லாப் பகுதிகளிலிருந்தும் என்னென்ன வேலைகளை அந்தக் குழு பரிந்துரை செய்திருக்கிறது, அது சம்பந்தமாக அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறது என்ற விவரங்களையும் அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த பட்ஜட்டுக்கு பணம் ஒதுக்கல் செய்கிறோம். எங்கள் பகுதியில் மைனர் இரிகேஷனுக்காக என்று சொல்லி ஆறு லட்சம் ரூபாய் எப்படியோ அரசாங்கம் ஒதுக்கினார்கள். அதை எப்போது ஒதுக்கினார்கள் என்றால் மார்ச் மாதக் கடைசியில். போன பட்ஜட்டில் ஒதுக்கிய பணத்திற்கு கடைசியில் சாங்க்ஷன் வந்தது மார்ச் மாத இறுதியில். ஒதுக்கிய ரூபாய் ஆறு லட்சத்து சில்லறையில் இன்று இரண்டரை லட்சம் ரூபாய் சரண்டர் செய்யவேண்டிய துர்ப்பாக்கியமான நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் மார்ச் மாதக் கடைசியில் இப்படி சாங்க்ஷன் கொடுத்துவிட்டால் என்ன வேலை செய்யமுடியும் மைனர் இரிகேஷனில்? எவ்வளவு குளங்களில் தூர் வாரமுடியும், எவ்வளவு குளங்களைச் செப்பனிட முடியும் என்பதை சற்று

அருள்கூர்ந்து இந்த இலாகாவில் இருக்கிற மேன்மைதங்கிய அதிகாரிகள் சற்று கவனிக்கவேண்டும். மனிதாபிமானப் பிரச்னையாக இதை அணுக வேண்டும்.

அந்தப் பகுதியில் இன்று பலயிடங்களில் தீய்ந்து போயிருக்கிறது. ஆனால் அரசாங்கக் கணக்குப்படி ஐயாயிரம் ஏக்கர்கள்தான் தீய்ந்திருக்கிறது என்று சொல்வார்கள். ஆனால் 20,000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலங்கள் இன்று தீய்ந்து போய் இருக்கின்றன. இந்த மைனர் இரிகேஷனுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பணத்தை செலவு செய்திருந்தால் பல ஏக்கர் பயிர்களைப் பாதுகாத்திருக்க முடியும். ஆனால் அதற்காக ஒதுக்கப்பட்ட பணம் சரிவர காலாகாலத்தில் செலவிடப்படாமல் சரண்டர் செய்யக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக வெளிவரு இலாகாவிலிருந்து கலெக்டர் அவர்கள் ஏதோ கணக்கு சொல்லியிருக்கிறார்கள், எங்கெங்கு தீய்ந்து இருக்கிறது என்று. அவர்களுக்கு வரி வஜா செய்து கொடுப்பதற்கான வழிவகைகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

இரசாயன உரங்களை விநியோகிக்க விவசாய இலாகா அதிகாரிகள் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்கு எந்த விவசாயிக்கும் உரம் கிடைக்கவில்லை. அவர்கள் எவ்வளவு முறை சென்றாலும் எங்கள் ஜில்லாவில் கிடைக்கவில்லை. அங்கு பலயிடங்களுக்கும் விவசாய அதிகாரிகள் போகாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். நாகர்கோவிலிலும் இப்படித்தான் இருக்கிறார்கள்.

கிராமப்புறங்களிலிருந்து உரம் கிடைக்கவில்லை என்ற புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதிகாரிகள் விநியோகிக்கிற ஆள்களுக்கு சாதகமாக இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டும் வந்திருக்கிறது. ஆகவே அதை சற்று கவனிக்கவேண்டும்.

கடைசியாக, என்ஜினியரிங் இலாகாவைப் பொறுத்தவரையில் ஒரு சில கருத்துக்களைக் கூறிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்று பல போர்ட்கள், வாரியங்கள் எல்லாம் இருக்கின்றன. அங்கு பல என்ஜினியர்கள் இருக்கிறார்கள். துணை என்ஜினியர்கள் இருக்கிறார்கள். சீப் என்ஜினியர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்த வாரியங்களுக்குப் போனவர்களுக்கு அடிக்கடி ப்ரமோஷன் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பிருக்கிறது. ஆனால் பி.டபிள்யூ.டி.யில் இருப்பவர்களுக்கு இப்படிப்பட்ட



ப்ரமோஷனல் ஆப்பர்சூனிட்டி குறைவாக இருக்கிறது. அவர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நான் ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன். இந்த இன்ஜினியரிங் இலாக்காவைப் பொறுத்த வரையில் ஒரு காமண் பூல் ஸிஸ்டம் வைத்து அவர்களுக்கு ப்ரமோஷனல் ஆப்பர்சூனிட்டி கொடுத்தால் பொருத்தமாக இருக்கும். அப்போது யாருக்கும் மனக்குமுறல் ஏற்படாது என்ற கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-30)

பொதுவாக இந்த பட்ஜெட்டிலே பார்க்கின்ற நேரத்திலே பொதுக் கணக்காய்வுக் குழுவிலே பல கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அண்டர் எஸ்டிமேடிங், அண்டர் பட்ஜெட்டிங் என்று பல குற்றச்சாட்டுக்களைக் கூறியிருக்கிறார்கள். கடைசியில் எல்லாம் நிதியைச் சரண்டர் செய்கிறார்கள். எவ்வளவு நிதி வேண்டுமென்று கடைசியில் தெரிவதற்கு முன்னாலேயே அதிகமாக நிதி கேட்கிற நேரத்தில் அதையெல்லாம் முழு விவரம் தெரியாததற்கு முன்னாலே கொடுத்து விடுகிறார்கள் என்று சொன்னார்கள். அதையும் அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கிறேன்.

பீடித் தொழிலுக்கு அவர்களுக்கு இருக்கும் சட்டப்படி அவர்களுக்கு கொடுக்கும் கூலி குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆயிரம் பீடி உற்பத்தி செய்கிறவர்களுக்கு 6 ரூ. கூலி நிர்ணயிக்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சுருட்டுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவ வசதி அளிக்கவேண்டும்.

தொழிலாளர் பிரச்னையில் மனிதாபிமானத்தோடு அணுகி வேண்டிய காரியங்களைச் செய்யவேண்டுமென்று கூறி என்னுடைய வார்த்தையை இத்தோடு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நிதி ஒதுக்கீடு மசோதாவில் மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்களும், கட்சியின் தலைவர்களும் எடுத்துக் கூறிய கருத்துக்களுக்கு என்னுடைய நன்றியை அவர்களுக்கெல்லாம் தெரிவித்துக்கொள்கிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஏப்ரல் 9

கடந்த பல நாட்களாக நடைபெற்று வருகின்ற நிதிநிலை அறிக்கை பொது விவாதம், அதைத் தொடர்ந்து இந்த மன்றத்தில் நடைபெற்று வந்த மானிய ஒதுக்கீடுகளின் மீதான விவாதம் ஆகியவைகள் அனைத்தும் முடிந்து மொத்தமான நிதி ஒதுக்கீடு செய்வதற்காக இந்த மன்றத்தின் அனுமதியைப் பெறுகின்ற சூழ்நிலையில் பேரவை முன் வைக்கப்பட்ட மசோதாவின் மீது பல கருத்துக்கள் சொல்லப்பட்டன.

நம்முடைய அண்ணா தி.மு.க.-வைச் சேர்ந்த உறுப்பினர்கள் பெரும்பாலும் நிதி ஒதுக்கீடு மசோதாவிலே பேசுவதை விடுத்து, நிதி ஒதுக்கீடு என்றாலே கருணாநிதி ஒதுக்கீடுதான் என்கிற அந்த ஒரே குறிக்கோளோடு அவர்களுடைய கருத்துக்களை இங்கே வேகமாக எடுத்து வைத்து இருக்கிறார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவிலே உரையாற்றியபோது மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாறுதல், பல துறைகளின் செயலாளர்கள் மாறுதல், இவைகளெல்லாம் ஏதோ கோளாறு இருக்கிற காரணத்தால் செய்யப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். இதிலே எந்தக் கோளாறும் இல்லை என்பதையும் அதுபற்றி எண்ணுவதிலேதான் சிறிது கோளாறு இருக்கிறதே அல்லாமல் செய்யப்பட்ட காரியத்தில் எந்தக் கோளாறும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இன்று மாற்றப்பட்டு வேறு அலுவல்களிலே அமர்த்தப்பட்டு இருக்கிறவர்கள் 3 ஆண்டு காலம், 4 ஆண்டு காலம், 5 ஆண்டு காலம் என்று மாவட்டங்களில் பணிபுரிந்து இருக்கின்றார்கள். அவர்களை அவை நடந்து கொண்டு இருக்கிறபோது என் மாற்றினீர்கள் என்று கேட்கப்படுமானால், அதுபோன்ற மாறுதல்களை—ஆட்சித் தலைவரைப் பொறுத்தவரையில் மாவட்டங்களிலே மாறுதல் செய்கிறபோது சில நேரங்களில் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் ஆண்டின் இடைக்காலத்தில் கூட அந்த மாறுதலைச் செய்கிறோம் என்றாலும் கல்வி ஆண்டு நேரம் பார்த்துத்தான் அப்படிப்பட்ட மாறுதலை நாம் செய்யவேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் அந்த அதிகாரிகளின் வீட்டுப் பிள்ளைகளின் படிப்பு போன்றவைகள் பாதிக்க நேரிடும் என்ற முறையீடு வரக்கூடும்.

இப்படிப்பட்ட சாதாரண மாறுதல்களின் காரணமாக மறுநாளே அந்தந்தப் பணிகளுக்கு வந்து விடவேண்டுமென்று இல்லாமல், அவர்களுக்கு ஒரு மாதகாலம் அவகாசம் அளிக்கப்பட்டு இடைவெளியில் அவர்கள்



1974 ஏப்ரல் 9] [டாக்டர் திரு. மு. கருணாநிதி]

அவர்களின் புதிய பணிப்பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்றும் அவர்களுக்குக் கூறப்பட்டிருக்கிறது. ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்து தலைமைச் செயலகத்திற்கு வருகிற நேரத்தில் அவர்களுக்கு இடம் அளிப்பதற்கு வழிவகை செய்யும்போது அந்த இடங்களில் ஏற்கனவே இருக்கின்றவர்களை வேறு இடங்களுக்கு மாற்றப்படவேண்டிய சூழ்நிலையும் உருவாகிறது. இது பெரும்பாலும் நிர்வாக அடிப்படையிலே செய்யப் படுகின்ற மாறுதலே அல்லாமல் ஏதோ கோளாறின் காரணமாகச் செய்யப் படும் மாறுதல் என்ற கருத்தினைக் கொள்வதற்குத் தேவையில்லை என்று நான் தெரிவித்துக்கொள்வேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நாங்கள் மாற்றுவதைப் பற்றியோ, உங்களுக்கு இருக்கிற அதிகாரத்தைப் பற்றியோ கேட்கவில்லை. நீங்கள் பள்ளியாண்டு இறுதியில் மாற்றம் செய்கிறீர்கள் என்று சொன்னால், மே மாதத்தில் மாற்றியிருக்கலாம் என்று சொல்கிறோம். சட்டசபை நடந்து கொண்டிருக்கும்போது மாற்றினால், நாங்கள் இங்கே சிலபல கேள்விகளைப் போடுகிறோம், அதற்கு அங்கேயிருக்கும் செக்ரடரியிடம் கேட்டு பதில் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படியிருக்கும்போது, சட்டசபை நடந்து கொண்டிருக்கும்போது இந்த மாறுதல் செய்தால் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கவேண்டிய முழுவிவரம் கிடைக்காமல் போய்விடும் என்ற காரணத்தால்தான் சொல்கிறோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதை கூர்ந்து கவனித்து இருந்தால், அந்த அலுவலர்கள் மாறுதல் கூட எல்லா மானியங்களும் முடிவுற்ற பின்னால்தான் அந்தந்த அலுவலர்கள் மாற்றப்பட்டிருக்கின்றனர். ஆகவே, எந்த அமைச்சர்களும் மானியக் கோரிக்கையில் பேசுகிற நேரத்தில் விவாதத்திற்குப் பெற வேண்டிய விளக்கங்களைப் பெறமுடியாமல் தவித்த சூழ்நிலை யாருக்கும் ஏற்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது கூட நிதிச் செயலாளர் மாற்றப்படவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவர் உலக வங்கிக்குச் செல்ல இருக்கிறார். அங்கே பணிபுரியச் செல்ல இருக்கிறார். நிதி ஒதுக்கீடு வரையில் அவர்களை மாற்றக்கூடாது என்று வைத்து இருக்கிறோம். ஆகவே, நாங்கள் ஒவ்வொரு மானியமும் இங்கே நிறைவேற்றுகிற வரையில் அதற்குரிய செயலாளர், அலுவலர்கள் அந்தப் பணியில் இருக்கவேண்டுமென்ற அந்தச் சூழ்நிலையைக் கவனித்து இந்த

மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது. எந்தச் செயலாளரும் மாற்றப்பட்ட காரணத்தால் அந்த மானிய விவாதம் பாதிக்கப்படவில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்வேன்.

நண்பர் ஹாண்டே பேசும்போது ஏற்கனவே அந்தக் கருத்தைச் சொன்னார்கள். ஆளுநர் உரை விவாதத்தின் போதும் அந்தக் கருத்தைச் சொன்னார்கள். நிதிக் குழுவின்பால் இந்த அரசு தன்னுடைய உரிமையைக் காட்டி, நமக்குத் தேவையான நிதியைப் பெறவில்லை என்பதை எடுத்துச் சொன்னார்கள். பூரண மதுவிலக்கு என்று சொல்லப்பட்டு இருக்குமானால் அதிகத் தொகை கிடைத்து இருக்கும் என்று சொன்னார்கள். ஆனால் நம்முடைய முதற்கட்டமாக கள்ளுக்கடைகளை நாம் மூடி, அடுத்து தொடர்ந்து சாராயக்கடைகளையும் மூடியிருக்கிறோம் என்று அறிவித்து இருக்கிறோம். அப்புறமும் அவர்கள் நிதிக்குழுவின் சார்பில் சொல்லப்பட்ட கருத்து ஒரு சமாளிப்பான கருத்தே தவிர முழுவதையும் நாம் மதுவிலக்கு கொண்டு வந்திருந்தாலும் அந்தப் பதில்தான் நிதிக் குழுவிலிருந்து வந்திருக்கும் என்பதற்கான விளக்கங்களை ஆளுநர் உரை விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போதே நிறைய புள்ளிவிவரத்தோடு அவையில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, நிதிக் குழுவின் அணுகுமுறையே வேறாக இருப்பதால் நாம் எடுத்துச்சொல்கிற அந்தக் காரியங்களை அவர்கள் காதிலே போட்டுக்கொள்வதில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு தவறான கருத்து, முன்னேறி விட்ட மாநிலங்கள் என்ற பட்டியலில் நம்முடைய மாநிலத்தைச் சேர்த்து இருக்கிறார்கள். முன்னேறி விட்ட மாநிலங்கள் பட்டியலில் இருந்தாலும், ஆங்காங்கே பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன, பின்தங்கிய பிரச்னைகள் பல்வேறு சூழ்நிலையில் இருக்கின்றன என்று நாம் வலியுறுத்தி வலியுறுத்தி எடுத்துச் சொன்னாலும் அதனைக் கவனிக்காத பாணியில் நடந்துகொள்வதுதான் நிதிக் குழுவின் செயலாக இருக்கிறது. இதை இந்த அவையில் நான் பல முறை எடுத்து விளக்கியிருக்கிறேன்.

ஐந்தாண்டுத் திட்டம் கூட இன்னும் ஒழுங்காக எடுத்து வைக்கவில்லை என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர்களே குறிப்பிட்டது போல் இதில் நம்முடைய குற்றம் இல்லை, குறை இல்லை. ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் வரைவு பெறாத சூழ்நிலையில் இருக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் 25 கோடி ரூபாய் திட்டம் என்று இருந்தது.





ஐம்பது கோடித் திட்டம் என்று கம்பீரமான கோஷத்தை, பிரகடனத்தை மத்திய திட்டக்குழு இன்றைக்கு வெளியிட்டு இருக்கிறது என்றாலும் ஆண்டு திட்டத்திற்குக் கூட, நம் திட்டத்தின் வளர்ச்சி வேகத்தைப் பொறுத்து ஆண்டு திட்டத்திற்கான ஒதுக்கீடு செய்யுங்கள், மத்திய சர்க்காரின் உதவி தாருங்கள் என்று கேட்டும் கூட அவர்கள் அலட்சியப்படுத்துகிறார்கள் என்றால் அவர்களே திட்டத்தில் திட்டவட்டமான ஒரு முடிவை இன்னும் எடுக்காமல் இருக்கிறார்கள் என்பதை நான் மீண்டும் மீண்டும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்வேன்.

நம்முடைய ஐந்தாண்டுத் திட்டம் என்ன என்று கேட்கப்பட்டது. அதுவும் ஏற்கனவே தெளிவாக்கப்பட்டிருக்கிறது. 1,500 கோடி ரூபாய்க்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு வரைவை நாம் மத்திய திட்டக் குழுவிற்கு அனுப்பி வைத்து இருக்கிறோம். இந்த ஆண்டுத் திட்டமாக, முதல் ஆண்டுத் திட்டமாக 150 கோடி ரூபாய்க்கு நாம் திட்டம் வகுத்து இருக்கிறோம். அது நம்முடைய வரவு-செலவுத் திட்டத்தின்போதே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. சென்ற ஆண்டு 46 கோடி ரூபாய் மத்திய உதவி கிடைக்கும் என்று எதிர் பார்த்ததற்கு மாறாக 41 கோடிதான் தரப்பட்டது.

தேசிய வளர்ச்சிக் குழுவில்—எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது, மேற்கு வங்கத்தின் முதல்வரும், தமிழ்நாட்டைச் சேர்ந்த நானும், மைசூர் முதல்வரும், ஒரு பிரச்னையை எழுப்பினோம். நான், எங்களுக்கெல்லாம் தந்து இருக்கின்ற ஒரு தந்தியில் சென்ற ஆண்டைப்போல் இந்த ஆண்டும் நிதி ஒதுக்கப்படும் என்பது போல அதிலே ஜாடை காணப்படுகிறது அது சரிதானா என்று கேட்டபோது, திட்டக்குழு அமைச்சர் அவர்கள் உடனடியாக பதில் சொன்னார்கள், அதை நாங்கள் திரும்பப்பெற்றுக் கொள்கிறோம், வளர்ச்சி வேகத்தின் அடிப்படையில் இந்த ஆண்டு அதிகத் தொகை அளிக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார்கள்.

ஆனால் நிலைமை என்ன? டாக்டர் ஹாண்டே அவர்கள் பத்திரிகையில் வந்திருக்கிற செய்தியைச் சொன்னார்கள். சென்ற ஆண்டு 46 கோடி ரூபாய் என்று சொல்லி, 41 கோடி ரூபாய் உதவி வழங்கிய மத்திய அரசு திட்டக் குழு, இந்த ஆண்டுக்கும் 41 கோடி ரூபாய்தான் என்று சொல்வதிலிருந்து நாம் ஒன்றைக் கணக்கிட்டுப் பார்க்கவேண்டும். இருபத்தைந்து ஆயிரம் கோடி ரூபாய் திட்டம் 50 ஆயிரம் கோடி ரூபாயாக இரட்டிப்பாக ஆகியும், முதல்

ஆண்டுத் திட்டத்திற்கு 41 கோடி ரூபாய்தான், சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் அதே 41 கோடி ரூபாய்தான் முதல் ஆண்டுக்குத் தரப்படுகிறது என்றால், இந்தத் திட்டம் எந்த அளவில் போய் முடியும், எங்கே போய் நிற்கும் என்பதையெல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்கள் ஒரு நிலையான முடிவை திட்டம் பற்றி, குறிப்பாக முதல் ஆண்டைப் பற்றியே எடுக்காமல் இருக்கிற காரணத்தினால் நாம் எதையும் இங்கே தெளிவாக எடுத்துக் கூற முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*டாக்டர் எச். வி. ஹாண்டே:* 41 கோடி ரூபாய்தான் என்று இப்பொழுது சொன்னார்கள். சேலம் திட்டத்திற்குக் கூட மிகவும் குறைத்திருக்கிறார்கள். 10, 12 கோடி ரூபாய் குறைத்ததாகக் கேள்விப்படுகிறேன். அதையும் கணக்கில் வைத்துச் சொல்கிறார்களா, அல்லது அதை வேறாகச் சொல்கிறார்களா ? திட்டவட்டமாகச் சொல்லாத காரணத்தினால், நாம் திட்டவட்டமாக அடுத்தாற்போல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்போகிறோம், What is the remedial action? அவர்கள் இப்படிச் செய்கிறார்கள். தவறு என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறோம். அதற்குமேல் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்பதைக் கொஞ்சம் விளக்குங்கள்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* சேலம் போன்ற திட்டங்கள் மத்திய அரசினுடைய நேரிடைத் திட்டங்களாகும். ஆகவே, இதுவும் அதுவும் சேராது. என்றாலும் 41 கோடி ரூபாய் என்று அவர்கள் சொன்னாலும் கூட—பத்திரிகையில் வந்திருக்கிறது—நாம் தொடர்ந்து வாதாடத்தான் போகிறோம், வாதாடிக்கொண்டுதான் இருப்போம். ஆனால் என்ன முடிவுகளை எடுக்கவேண்டும் ஜனநாயக ரீதியிலே இயங்குகின்ற ஒரு அரசு, இந்த மாமன்றம், அல்லது இந்த மாமன்றத்தில் வீற்றிருக்கிற கட்சிகள், நம்முடைய உரிமைகளைப் பெறுவதற்காக எந்த வகையிலே வாதாடவேண்டும், போராடவேண்டும் என்பதையெல்லாம் நிதானித்துத்தான் நாம் சிந்தித்து செயல்படவேண்டுமே அல்லாமல், என்ன செய்யப்போகிறீர்கள் என்று திரு. ஹாண்டே அவர்கள் திடீரென்று கேட்டுவிடுவதும், நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்கு நீங்கள் வாதாட வருகிறீர்களா என்று கேட்டதும், அவர்கள் அவர்களுடைய தலைவரைக் கூட கலந்துகொள்ளாமல் நான் தயார் என்று கூறிவிடுவதும், ஆக, இப்படிப்பட்ட அவசரப்பட்டு எடுக்கப்படுகின்ற முடிவுகள், உறுதிமொழிகள் எல்லாம் கடைசி வரையில் நிற்குமா என்று யோசித்துப் பார்த்துத்தான் முடிவுகளை எடுக்கவேண்டும்.



"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

என்ற வாய்மொழிக்கு ஏற்ப நடந்துகொள்ளவேண்டும்.

ஆகவே, இப்பொழுது திடீர் திடீரென்று என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்டால், திடீரென்று எதுவும் சொல்லிவிட முடியாது. பொறுத்திருந்து பாருங்கள் என்று தான் சொல்ல முடியும்.

பொறுத்திருந்து பாருங்கள் என்று கேட்கிற நேரத்தில், நான் நற்காரியங்களில் ஈடுபட்டால் நம்முடைய மாநிலத்திற்கு, அப்பொழுது இங்கே வாருங்கள் அந்த ஒரு காரியத்திற்கு மாத்திரமாவது என்பதை மாத்திரம் நான் இங்கே இந்த அவையில் எடுத்துக்காட்ட முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதி நிலை அறிக்கை இவைகளைச் சமர்ப்பிப்பது போன்ற காலத்தைக் கூட மாற்றவேண்டும் என்கின்ற ஒரு கருத்தை நம்முடைய ஆளும் காங்கிரஸ் சார்பாக நண்பர் மாரிமுத்து அவர்கள் இங்கே வெளியிட்டார்கள். அது பற்றி நிதித்துறைச் செயலாளர் தன்னுடைய தனிப்பட்ட கருத்தாக ஒரு கருத்தரங்கில் எடுத்துச் சொன்ன வார்த்தைகளையும் இங்கே குறிப்பிட்டார்கள். அவர்களுடைய கருத்தும், திரு. மாரிமுத்து அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்தும் உள்ளபடியே வரவேற்கத்தக்க கருத்துதான்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் மார்ச், ஏப்ரல் மாதங்கள் நாம் நிதி ஒதுக்கீட்டுக்கான அனுமதியைப் பெற்று, அவைகளைச் செலவழிப்பதற்கு மிக பரபரப்பான காரியங்கள் நடைபெறக்கூடிய மாதங்கள். நம்முடைய கால நிலை இவைகளையெல்லாம் அடிப்படையாக வைத்துப் பார்த்தால் ஏப்ரல், மே மாதங்களில் அந்த வேலைகளின் டெம்போ என்று கூறப்படுகின்ற அந்த வேகம் நல்ல முறையில் இருக்கும். ஆனால் அப்பொழுது தான் சாங்ஷன் ஆகி அடுத்த அடுத்த கட்டத்திற்குச் சென்று வேலைகள் தொடங்கி நாம் அடுத்த பட்ஜெட் சமர்ப்பிக்கின்ற நேரத்தில் வேலைகள் துவக்கமாகின்றன என்ற அந்த உண்மையை நாம் மறுத்து விட இயலாது. பட்ஜெட் முறையில் பெரிய மாற்றத்தை நாம் செய்தாகவேண்டும். அதை மாநில அளவில் செய்ய முடியுமா, அகில இந்திய அடிப்படையில் அந்த மாற்றம் இருந்திடவேண்டுமா என்பதைப்பற்றி சிந்தித்துப் பார்த்துத்தான் ஒரு முடிவு எடுக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஏப்ரல் 9

நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களும், நண்பர் மாரிமுத்து அவர்களும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், பெரியவர் மணலி அவர்களும், மற்றவர்களும் பேசும்பொழுது இன்றைக்கு இருக்கிற உணவுப் பிரச்சினையில் அரசு போதிய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

பார்வேர்டு பிளாக் கட்சியின் சார்பில் பேசிய பாரதி அவர்கள் உரம் கிடைக்காத காரணத்தினால் உணவுப் பிரச்சினையில் ஏற்படக்கூடிய தட்டுப் பாட்டை எடுத்துரைத்தார்கள்.

உலகத்திலேயே உரத்தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்று ஒரு பத்திரிகை தலையங்கம் எழுதியிருப்பதை நண்பர் ராஜா அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

அப்படியிருக்கும் உலக நிலையில் இன்றைக்கு இந்தியாவும் அந்த உரப் பற்றாக்குறையில் சிக்கிக்கொண்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் உணவில் தன்னிறைவு பெற்றிருக்கிறோம் என்றாலும் கூட, எதிர் காலம் அச்சமூட்டத் தக்கவகையில் ஆகிவிடக் கூடாது என்று எச்சரிக்கையோடு நல்ல பல முடிவுகளை உடனுக்குடன் நம்முடைய உணவு அமைச்சர் அவர்களும், அந்தத் துறை அதிகாரிகளும் கலந்து ஆலோசித்து எடுத்து வருகிறார்கள்.

நேற்றையதினம் கூட நானும், உணவு அமைச்சரும், அந்தத் துறையினுடைய அதிகாரிகளும் கலந்து ஆலோசித்து தொடர்ந்து இந்த விலைவாசி அரிசியைப் பொறுத்தமட்டிலாவது ஏறாமல் தடுப்பதற்கு என்ன வழிவகை களைச் செய்யலாம் என்பதைப் பற்றியெல்லாம் யோசித்திருக்கிறோம். இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களையெல்லாம் மனதில் பதிய வைத்துக் கொண்டு மேலும் அந்த மாநாடுகளில் எடுக்கப்பட வேண்டிய முடிவுகளை நாம் நிச்சயமாக சிந்தித்து எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய பட்ஜெட் பற்றி கணக்கு ஆய்வுக் குழு எப்படி எல்லாம் விமர்சிக்கிறது என்ற கருத்தை திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் எடுத்துச் சொன்னார்கள்.



1974 ஏப்ரல் 9] [டாக்டர் மு. கருணாநிதி]

இப்பொழுது இருக்கிற பட்ஜெட் அமைப்பில் ஒரு பெரிய மாறுதலைச் செய்யாமல் இருக்கிற வரையில் ஒதுக்கப்படுகின்ற பணம் வேறு பல காரணங் களுக்காகச் செலவழிக்கப்படாமல் சரெண்டர் செய்யப்படுகின்ற சூழ்நிலை ஏற்படலாம், சில நேரங்களில் சில குறைபாடுகள் இருக்கலாம்.

ஏதோ இன்றைக்குத் தான் கணக்குக் குழுவில் அப்படிப்பட்ட ஒரு விமர்சனம் எழுதப்பட்டிருக்கிறது என்பது அல்ல. இந்த பட்ஜெட் தொடங்கிய காலத்திலிருந்து கணக்குக் குழு இது போன்ற பல்வேறு அபிப் பிராயங்களை எடுத்துச் சொல்லி வருகிறது.

அந்த அபிப்பிராயங்களைப் பெற்று கூடுமானவரையில் அவ்வப்பொழுது பட்ஜெட் தயாரிக்கின்ற நிதித் துறைச் செயலாளர், நிதித் துறையினர், அரசினர் அவைகளுக்கான திருத்தங்களைச் செய்துகொண்டு வருவதோடு அல்லாமல், ஏதோ இதைப் பெரிதுபடுத்தி, பட்ஜெட் தவறானது என்று வாதிப்பது சரியானது ஆகாது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

பலரும் தங்களுடைய தொகுதி நிலவரங்களைப்பற்றியெல்லாம் எடுத்துக் கூறினார்கள். முஸ்லிம் லீக்கினுடைய தலைவர் திரு. மொய்தீன் அவர்கள் அவர்களுடைய தொகுதியைப்பற்றிய பிரச்சினையை எடுத்துச்சொல்லி, பர்மா அகதிகளுக்காக இந்த அரசு, மாநகராட்சி இவைகளெல்லாம் செய்யவேண்டிய பணிகளைக் குறித்துச் சொன்னார்.

சுதந்திராக் கட்சித் தலைவர் வெங்கடசாமி அவர்களும் தேன்கனிக்கோட்டை யில் நடைபெறுவது வகுப்புக் கலவரமாக ஆகிவிடக்கூடாது, அந்த ஒரு நிலை யைத் தவிர்க்கவேண்டும் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இன்று காலையில் நண்பர் லத்தீப் அவர்கள் கூட என்னிடம் அதைப்பற்றிப் பேசி னார்கள். உடனே அங்குள்ள போலீஸ் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, அங்கு இதற்கு மேல் எந்தக் கிளர்ச்சியும் எழாத அளவுக்கு அமைதி காப் பதற்கு ஏற்பாடு செய்வதற்கு மாவட்ட அதிகாரிகள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடந்த மானிய விவாதங்களில், வரவு-செலவு திட்டப் பொதுவிவாதத்திலும் கட்சியினுடைய தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் பல கோரிக்கை களை எடுத்து வைத்திருக்கிறார்கள். வரவு செலவுத் திட்டத்தைப் பொறுத்த அளவில் பல திட்டங்களை நாம் அறிவித்திருக்கிறோம். சமூகப் பாது

காப்புத் திட்டம், ஓய்வு ஊதியத் திட்டம், பரிசுச் சீட்டுத் திட்டம் மூலம் நாம் உருவாக்குகின்ற புதிய நிலை, அரிசனங்களுக்கு வீட்டு வசதி வாரியம், ஏழை எளியவர்களுக்கு ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் அமையவேண்டும் என்ற அடிப்படையில் செய்யப்பட்டுள்ள காரியங்கள் இவைகளையெல்லாம் நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

இந்த அரசு அடித்தளத்து மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், அரிசன மக்கள் அவர்களுடைய நல்வாழ்வை மையமாக வைத்து, தொடர்ந்து செயலாற்றி வருகிறது, சாதனைகளைப் புரிந்து வருகிறது என்பதை இந்த அவையும், நாடும் நன்கு அறியும். அந்த வகையிலே நம்முடைய தமிழகத்தில் அரிசன குடியிருப்புகள் 24,583 இருக்கின்றன. அந்தக் குடியிருப்புகளில் இன்றைக்கு 23,832 குடியிருப்புகளுக்கு, காலனிகளுக்கு மின் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஆயிரத்திற்குக் குறைவான குடியிருப்புக்களுக்குத்தான் மின்வசதி செய்யப்பட வேண்டியிருக்கிறது.

இதனைப் பாராட்டி, Report of the Commissioner or Scheduled Castes and Scheduled Tribes என்கிற மத்திய அரசு வெளியிட்டிருக்கிற பெரிய நூலிலே கூட மிகச் சிறப்பாக எழுதியிருக்கிறார்கள் The electrification schemes undertaken by the Government of Tamil Nadu in Harijan Colonies is really commandable என்ற அளவுக்கு எழுதியிருக்கிறார்கள். தொடர்ந்து அந்தக் காலனிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் 24,583 அரிசனக் குடியிருப்புக்களில் இதுவரையில் 21,268 குடியிருப்புக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியை நாம் செய்துகொடுத்திருக்கிறோம். இன்னும் குடிநீர்வசதி செய்து தரப்படவேண்டிய அரிசன குடியிருப்புக்கள் 3,315 இருக்கின்றன. நான் இந்த அவையிலே புதிதாக அறிவிக்கிறேன். 1975-ம் ஆண்டுக்குள் இந்த 3,315 அரிசன குடியிருப்புக்களுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுத்து, தமிழ்நாட்டிலுள்ள எல்லா அரிசனக் காலனிகளுக்கும் குடிநீர் அளிக்கும் திட்டம் பூர்த்தியாகும் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன் (கரவொலி).

அடுத்து, 1966-67-ம் நிதியாண்டு வரை அரிசன நலத் துறையும், பிற்பட்டோர் நலத் துறையும் இரண்டும் ஒன்றாக இருந்தபோது அரிசன நலத் துறை, பிற்பட்டோர் நலத் துறை—இந்த இரண்டு துறைக்கும் சேர்த்து செலவழிக்கப்பட்ட தொகை 6 கோடியே 17 லட்சம் ரூபாய். 1969-70-ம் நிதி





யாண்டில் இதை நாம் பிரித்துவிட்டோம். பிரித்த பிறகு இன்றைக்கு 1974-75-ம் ஆண்டில் அரிசன நலத் துறைக்கு மாத்திரம் 10 கோடியே 16 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். 1966-67 நிதியாண்டில் பிற்பட்டோர் நலத்துறை, அரிசன நலத் துறை இரண்டும் இணைந்து இருந்தபோது மொத்தம் 6 கோடியே 17 லட்சம் ரூபாய். இப்போது 1974-75-ம் நிதியாண்டில் இந்த இரண்டு துறைகளும் தனித்தனியாகப் பிரிந்த பிறகு அரிசன நலத் துறைக்கு 10 கோடியே 16 இலட்சம் ரூபாயும், பிற்பட்டோர் நலத் துறைக்கு சுமார் 6 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட நல அதிகாரி பணி புரிந்து வருகிறார். இவர் அரிசன நலத் துறைத் திட்டங்களையும், பிற்பட்டோர் நலத் துறைத் திட்டங்களையும் மாவட்ட அளவில் நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றிருக்கிறார். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நல அதிகாரி அரிசன நலம், பிற்பட்டோர் நலம் இரண்டையும் கவனித்துப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இவர் மாவட்ட அளவில் செய்ய வேண்டிய பணி அதிகமாக இருப்பதால் தாழ்த்தப்பட்ட மக்கள் தொகை எங்கெங்கே அதிகமாக உள்ளதோ அந்த மாவட்டங்களில், வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு, தஞ்சை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய ஏழு மாவட்டங்களில் முதல் கட்டமாக மேலும் ஒரு மாவட்ட நல அதிகாரியை நியமித்து இந்தப் பணிகளை விரைவில் செயலாற்றும்படி இன்று அரசு உத்தரவிடுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன் (கரவொலி).

பள்ளியில் படிக்கும் அரிசன மாணவர்கள், 75 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும் 20 சதவிகிதம் பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும் 5 சதவிகிதம் மற்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள் தாழ்த்தப்பட்ட பள்ளி மாணவர்கள் விடுதிகளில் ஒன்றாகச் சேர்ந்து படிக்கிறார்கள்.

திரு. கோவை செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரிசன நல இலாகாவுக்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்ன நல்ல கருத்து மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால் அந்தத் துறையிலே இருக்கின்ற அமைச்சரவர்கள் அதிகாரிகள் ஒழுங்காகச் செயல்படவில்லை என்று இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் சொன்னார்களே. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்தக் கூற்று எந்த அளவுக்கு உண்மை என்று சொன்னால் நன்றாக இருக்கும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(டாக்டர் எச். வி. ஹாண்டே எழுந்தார்.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் என்னுடைய அறிவிப்புகளை முடித்த பிறகு—அரிசன நலத்திற்கான திட்டங்களை அறிவிக்கும்போதும் குறுக்கிடாமல்—விளக்கங்களைக் கேளுங்கள்; பதில் சொல்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பாக்வர்டு கிளாசுக்கு தனி அதிகாரிகளைப் போடவேண்டுமென்று, நாங்கள் சொன்னோம். அதேமாதிரி அரிசன நலத் துறைக்குத் தனி அதிகாரிகளைப் போடவேண்டுமென்று சொன்னோம். ஆனால் நீங்கள் ஒரு சில மாவட்டங்களுக்கு அடிஷனல் அதிகாரிகளைத்தான் போட்டிருக்கிறீர்கள். தனித் தனி அதிகாரிகளைப் போடவில்லையே.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது அதிகமாக அரிசனங்கள் இருக்கிற ஏழு மாவட்டங்களில் கூடுதலாக ஒரு அதிகாரியைப் போட்டிருக்கிறோம். அது செயல்படுவதைப் பார்த்து, அதற்குப் பிறகு எல்லா மாவட்டங்களிலும் தனித்தனியாக பிற்பட்டோர் நலத்திற்கு ஒரு அதிகாரியும், அரிசனங்களுக்கு ஒரு அதிகாரியும் போடலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட பள்ளி மாணவர்களுக்கென்று உள்ள விடுதிகளில் தங்கிப் படிக்கும் அரிசன பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 20,000. இவர்களில் 4-வது, 5-வது வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் ஆண்டு ஒன்றுக்கு ஒரு செட் உடை இதுவரை வழங்கப்பட்டு வருகிறது. மற்ற வகுப்பு மாணவர்களுக்குத் தற்பொழுதுள்ள நடைமுறையின்படி ஆடை எதுவும் வழங்கப்படவில்லை. இந்தப் பிரச்சினையை அரசு பரிசீலித்து அரிசன பள்ளி மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு இரண்டு செட் வீதம் ஆடை வழங்குவது என்று அரசு உத்தரவிடுகிறது. இதனால் 20,000 அரிசன மாணவர்கள் பயனடைவார்கள் (கரவொலி).

அரிசன மாணவர்களுக்கு என்று 100 விடுதிகளைக் கட்டவேண்டுமென்று அமைச்சரவையிலுள்ள நிதி ஆலோசனைக் குழுவிலே முடிவு எடுக்கப்பட்ட போது நிதிநிலைக்கேற்ப 4 அல்லது 5 இடங்களில்தான் புதிய அரிசன மாணவர் விடுதிகளைக் கட்டமுடியும் என்று அதிகாரிகள் யோசனை தெரிவித்தார்கள். நான் அப்போதே சொன்னேன்; வங்கிகளிடம் கடன் பெற்று இந்த 100 விடுதிகளைக் கட்ட முடியுமா என்று கேட்டேன். அப்படி அதிகாரிகள் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக கனரா பாங்கும், இந்தியன் பாங்கும் அவர்களுக்குச் சாதகமான பதிலை 4—4—1974-லிலும், 2—4—1974-லிலும்





யிலும் அரிசன விடுதி பற்றி வாரியத்துறைத் தலைவருக்கு எழுதி அனுப்பியிருக்கிறார்கள். நாங்கள் உதவி செய்யத் தயாராக இருக்கிறோம் என்று கனரா பாங்கும் இந்தியன் பாங்கும் எழுதியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களிடம் உதவி பெற்று அரிசன மாணவர்களுக்கு 100 விடுதிகளை—அவைகளை கட்ட முடிவு செய்திருக்கிறோம். இதனால் 10,000 மாணவர்களுக்கு வசதி செய்து கொடுக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தி எதிர்ப்புப் போரில் 1965-ம் ஆண்டு உயிரிழந்த 53 பேர்களுடைய குடும்பங்களுக்கு சென்ற ஆண்டு இந்த அரசு குடும்பம் ஒன்றுக்கு உதவித் தொகையாக ரூபாய் 2,000 வழங்கியுள்ளது. அத்துடன் தீக்குளித்த 9 மொழிப்போர் வீரர்களின் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100 சென்ற ஆண்டு முதல் உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இது போலவே, கன்னியாகுமரிப் பகுதிகள் தாய்த் தமிழகத்தோடு சேரவேண்டுமென்று போராடி, உயிரிழந்த 12 பேருடைய குடும்பங்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபாய் 2,000 வீதம் உதவித் தொகை அளிக்கப்படும் என்பதை இன்று தெரிவித்துக்கொள்கிறேன் (கரவொலி).

அந்தப் போராட்டத்தில் தடியடிப்பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் ஆகியவைகளால் உடல் ஊனமுற்றவர்கள் ஏறத்தாழ 37 பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கிருக்கிறது. அவர்களுக்கு உதவித்தொகையாக ரூபாய் 500 வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன் (கரவொலி).

இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 75 ரூபாய் வீதம் உதவித்தொகை வழங்குகின்ற தகுதிகள் அடிப்படையில் இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்களுக்கும், கன்னியாகுமரி தாய்த் தமிழகத்தோடு சேரவேண்டுமென்று போராடிய வீரர்களுக்கும், திருத்தணி எல்லை மீட்பு போராட்ட வீரர்களுக்கும் உதவி மானியம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கான விரிவான ஆணையை அரசு உடனடியாகப் பிறப்பிக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் சத்திரத்தில் பணிபுரிந்து ஓய்வுற்ற அலுவலர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கப்பட வேண்டுமென்று மணலி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில்தான் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று, அவர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கப்படும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் (கரவொலி).

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஏப்ரல் 9

ஏற்கனவே அறிவித்திருப்பது போல கை, கால் ஊனமுற்றோர், கண்கள் குருடானோர், ஊமையர்களாக இருப்போர் ஆகிய அங்கவீனர்களின் தொகையை தமிழகத்தில் கணக்கெடுத்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் ஒரு திட்டத்தைத் தயாரிப்பதற்காக இத்தகைய அங்கவீனர்களின் தொகையை உடனடியாக கணக்கிடும்படி அரசு இரண்டு மாதங்களுக்கு முன் ஆணையிட்டது. அதன்படி கணக்கு எடுக்கப்பட்டு, விவரங்கள் அரசுக்கு வந்துள்ளன. அதில் ஆண்கள் 1,35,000 பேர்கள், பெண்கள் கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர்கள் என்று கணக்கு வந்திருக்கிறது. அவர்களில் படிக்காதவர்கள் 1,62,000 பேர்கள் இருக்கிறார்கள் என்றும் கணக்கு வந்திருக்கிறது. மொத்தம் 2,35,000 அங்கவீனர்கள் இருக்கிறார்கள். இந்த மொத்தக் கணக்கு வந்திருக்கிறது. இவர்களில் யார் யார் வசதி உற்றவர்கள், யார் யார் தொழில் இல்லாதவர்கள் என்று ஆராய்ந்து, எப்படி உதவி செய்வது என்று பரிசீலிக்குமாறு—முதல் கட்ட வேலை முடிந்திருக்கிறது, அடுத்த கட்ட வேலை ஆரம்பமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துத் துறையிலே பணியாற்றுகிறவர்கள்—அவர்களுடைய கோரிக்கையை—நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் உள்ளாட்சித் துறை பொறுப்பை வைத்துக் கொண்டிருந்தபோது—நானும், அவரும் கலந்துகொண்ட ஒரு மகாநாட்டில்—வருவாய்த்துறையில் இருந்து

(பிற்பகல் 2-00)

எங்களைப் பிரித்துவிடவேண்டுமென்று—ஒரு கோரிக்கையாக முன்வைத்த நேரத்தில்—நாங்கள் அது பரிசீலிக்கப்படும் என்று சொன்னோம். பரிசீலிக்கப்படும் என்று சொன்னாலே அது அஷ்யூரன்ஸ் ஆகிவிடும் என்பதை அஷ்யூரன்ஸ் கமிட்டி உறுப்பினர்கள் அறிவார்கள். அதுவே ஒரு உறுதிமொழியாகிவிட்டது—உள்ளாட்சித்துறைப் பொறுப்பை அமைச்சர்—அன்பில் தர்மலிங்கம் அவர்கள் ஏற்றுக்கொண்டவுடன்—நாங்களே சொல்லிவிட்டதை வைத்து அவர்களும் அழுத்தத்திருத்தமாக அவர்களுடைய மாநாடுகளில் அந்த உறுதிமொழியை வழங்கியிருக்கிறார்கள்.

முதலில் நாங்கள் யோசித்தோம்—வருவாய்துறை—வளர்ச்சித்துறை ஆகிய இரண்டையும் தனித்தனியாக பிரிக்கவேண்டுமென்ற நோக்கமே—வளர்ச்சித் துறையின் மூலமாக நிறையப் பணிகளைச் செய்ய வேண்டும் என்பதுதானே. அதுதான் உண்மையான நோக்கம் என்கின்றபோது—இரண்டையும் ஒன்றாக்கி வளர்ச்சித்துறை என்றே பெயரிட்டு—இதனை இன்னும் நல்ல



1974 ஏப்ரல் 9] [டாக்டர் மு. கருணாநிதி]

முறையில் விரிவுபடுத்தக்கூடாதா என்கிற ஒரு சிந்தனையை நாங்கள் செய்து—ஐந்தாறு நாட்கள்—இங்கே விவாதம் நடந்துகொண்டிருக்கும்போதே அதிகாரிகளுடன் கலந்து பேசினோம். அதிலே வருவாய்த் துறை அலுவலர்கள் அதை முழு மனதோடு ஏற்றுக்கொள்ளத் தயாராய் இல்லை. அதற்குப் பிறகுதான் இப்போது நாங்கள் எடுத்திருக்கிற முடிவினை உங்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

தற்போது மாவட்ட அளவிலே வருவாய்த் துறையையும் வளர்ச்சித் துறையையும் ( Revenue and Development ) மாவட்ட ஆட்சியாளர் கவனித்து வருகிறார்.

ரெவின்யூ டிவிஷன் அளவிலே டிவிஷனல் அதிகாரிகளாக (ஆர்.டி.ஓ.வாக) இருப்பவர்கள் வருவாய்த் துறை வேலைகளையும் பஞ்சாயத்து அபிவிருத்தி வேலைகளையும் கவனித்து வருகின்றனர்.

பஞ்சாயத்து அபிவிருத்தி வேலைகளுக்கு உதவி செய்வதற்காக ஒவ்வொரு டிவிஷனிலும் ஒரு டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரி (D.P.O. ) பணிபுரிந்து வருகிறார்.

இந்த டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிகள் வருவாய்த்துறையிலிருந்து பிரிந்து தனியாக பஞ்சாயத்து வேலைகளைக் கவனிக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாகவே பஞ்சாயத்துத் துறையைச் சேர்ந்தவர்கள் கோரி வருகின்றனர். இந்தக் கோரிக்கையை அரசு பரிசீலனை செய்து டிவிஷன் அளவிலே ஆர்.டி.ஓ. வுக்கு (R.D.O ) கீழ் இயங்கிவரும் இந்த டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிகள் பஞ்சாயத்து அபிவிருத்தித் திட்ட வேலைகளைக் கவனிப்பதற்கென்று தனியாகப் பிரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் கொண்டு வருவது என்ற முடிவை அரசு கொள்கை அளவிலே ஏற்றுக் கொள்கிறது.

இந்தத் திட்டத்தை இந்த நடப்பாண்டிலேயே நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசு மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்தகைய பல அறிவிப்புகள் இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தரும் என்று நான் கருதுகிறேன். நீண்ட நெடுநாட்களாக எங்கள் நெஞ்சத்தில் ஆழப் பதிந்துகிடக்கிற—தாழ்த்தப்பட்

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஏப்ரல் 9

பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பணியாற்ற வேண்டுமென்ற எங்கள் கருத்தை—அந்தக் கருத்துக்கள் மேலும் செயல்படுகிற வகையில்—இந்த அறிவிப்புகளை நிதி ஒதுக்கீடு மசோதாவில்—இந்த மன்றத்தில் எடுத்து வைத்திருக்கிறேன்.

இதில் பங்குகொண்ட பல கட்சித் தலைவர்களும் இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவில் என்னென்ன பேசவேண்டுமென்று ஆய்ந்து எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு சில இடங்களில் இருக்கிற குறைபாடுகளை வைத்தே இது எல்லாமே இப்படித்தான் இருக்கும் என்ற கருத்தை திரு. கே. டி. கே. சொன்னார்கள். அது ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்தல்ல.

ஒன்றிரண்டு இடங்களில் தவறு ஏற்பட்டிருக்கிறது என்றால்—தவறுகள் சுட்டிக் காட்டப்படுகிற நேரத்தில் நிச்சயமாக அந்தத் தவறுகள் கண்டுபிடிக்கப்படவும், திருத்தப்படவும்—அதன் பொறுப்பாளிகள் தண்டிக்கப்படவும் ஏற்ற நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதில் என்றைக்கும் நாங்கள் தயக்கம் காட்டுவது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர் ஹாண்டே அவர்கள் கதர் இலாக்காவில் பஞ்சு வாங்கியதில் ஊழல் என்று குறிப்பிட்டார்கள்.

1973-74 ஆம் ஆண்டு ஆந்திரா மாநிலத்தில் 1—4—1973 முதல் 25—6—1973 வரை ரூ. 15.5 லட்சம் மதிப்புள்ள பஞ்சு கொள்முதல் செய்யப்பட்டது. வாங்கின அளவு சுமார் 2.75 லட்சம் கிலோ ஆகும். குவிண்டால் ரூ. 464 முதல் ரூ. 541 வரை வாங்கப்பட்டது.

நமது மாநிலத்தில் கருங்கண்ணி பஞ்சு மாத்திரம் கிடைக்கும். அவைகளுக்கும் ஏற்பட்ட கிராக்கி இருந்ததாலும் இந்த கருங்கண்ணி பஞ்சைக் கொண்டு பெட்ஷீட் நெய்ய இயலாததாலும் ஆந்திர மாநிலத்திலிருந்து சிவப்பு பஞ்சு (ரெட் காட்டன்) வாங்க வேண்டியிருந்தது. உயர்ரக நூலுக்குத் தேவையான பஞ்சு வகைகளும் ஆந்திர மாநிலத்தில் வாங்கப்பட்டது. இதனால் எந்தவிதமான நஷ்டமும் இந்த இலாக்காவுக்கு ஏற்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். தேவையான பஞ்சுதான் வாங்கப்பட்டிருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** டெண்டர்கள் முறையாக போடப்படவில்லை என்றும், ஆதரைஸ்டு லெட்டர் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றும் சாதாரண கடிதத்தில் கொடுத்து வாங்கப்பட்டதாக தகவல் வந்திருக்கிற



1974 ஏப்ரல் 9] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

அந்தப் பஞ்சும் இங்கே பயன்படவில்லை என்று கேள்விப்பட்டேன். எனக்குக் கிடைத்ததும் ஆதாரபூர்வமான தகவல்—மேலும் இதைப்பற்றி நன்கு பரிசீலித்து நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தனியார் யாரும் வாங்கவில்லை. பஞ்சு கொள்முதல் குழு மூலம்தான் இந்தப் பஞ்சு நேரிடையாக வாங்கப்பட்டிருப்பதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது. திரு. ஹாண்டே சொல்வதைப் போல தவறு இருக்குமானால் அதை மேலும் ஆராய்வதற்கும், தவறு கண்டுபிடிக்கப்பட்டால் நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கும் இந்த அரசு தயங்காது.

இன்னும் பெங்களூர் பொருட்காட்சியைப் பற்றிச் சொன்னார்கள். கதர் கமிஷன் விடுத்த அழைப்பின் பேரில்தான் நமது கதர் வாரியம் இந்தப் பொருட்காட்சியில் பங்குகொண்டிருக்கிறார்கள். பங்கு பெற்றதால் இந்த வாரியத்தில் பல திறப்பட்ட உற்பத்திப் பொருள்களுக்கு ஒரு நல்ல விளம்பரமும், அவைகளை இன்னும் விற்பனை செய்வதற்கு ஏற்ற வாய்ப்பும் கிடைத்திருக்கிறது. சுமார் 1.16 லட்சத்திற்கு பொருள்களை விற்பனை செய்திருக்கிறார்கள். நமக்குச் செலவு ரூ. 25 ஆயிரம்தான். அகில இந்திய கதர் கமிஷன் இந்தச் செலவிற்காக ரூ. 20 ஆயிரம் மானியமாக தற்போது நமக்கு அளித்திருக்கிறார்கள் என்கிற விவரத்தையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அங்கே சேல்ஸ் ஆனதற்காக கணக்கை நீண்ட நாட்களாக அவர்கள் கொடுக்கவில்லை என்றும், இலாக்கா கேட்டதற்குப் பிறகே சில தினங்களுக்கு முன்புதான் கொடுத்தார்கள் என்றும் கேள்விப்பட்டேன். ஹைலெவல் கமிட்டி வைத்து இதை விசாரித்தால் நன்றாக இருக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அரிசன நலத்துறை சம்பந்தமாக நல்ல பல சலுகைகளைச் சொல்லி வருகிறீர்கள், ஆனால் அவையில் இரண்டு அரிசன சமூகத்தைச் சேர்ந்த அமைச்சர்களும் இல்லையே?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இதோ நான் பின்னால் உட்கார்ந்திருக்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அரிசன நலத்துறை அமைச்சருக்கு உடல் நலம் சரியாக இல்லை. ஆகவே வரவில்லை.

ஆக, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவில் எடுத்துச் சொன்ன அறிவிப்புகளை இந்த மாமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

வழக்கமாகப் பேசுகின்ற முறைப்படி—முத்தாய்ப்பு வைத்தாற்போல அந்தக் கருத்தை எடுத்துச் சொல்லாவிட்டால் பொருத்தமாக இருக்காது என்ற உணர்வோடு நண்பர் ஹாண்டே அவர்கள் ஒரு அரிய ஆலோசனையை வழங்கினார்கள்.

அண்ணாவுக்கு உரிமை படைத்தவர்கள் யார் என்பதை உலகம் புரிந்து கொண்டுவிட்டது, இங்கே உட்கார்ந்திருக்கிற நாங்கள் அல்ல என்று சொன்னார்கள். உலகத்திற்குத் தெரியும்—அண்ணாவுக்கு சொந்தமும், பந்தமும் உள்ளவர்கள்—கருணாநிதியா, ஹாண்டேயா என்பது உலகத்திற்குத் தெரியும். புதிய வாதத்திற்குச் செல்ல விரும்பவில்லை. ஏனென்றால் உலகத்திற்குத் தெரிந்த விஷயத்தில் நான் நேரத்தை வீணாகக் கழிக்க வேண்டாம் என்பது தான் என்னுடைய எண்ணம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அண்ணா அவர்கள் எல்லோருக்கும்தான் சொந்தம். திரு. கருணாநிதிக்குச் சொந்தம்—எனக்குச் சொந்தம்—திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கும் சொந்தம்—அவர் உலகத்திற்கே சொந்தம். தனிப்பட்ட முறையில் மாண்புமிகு கருணாநிதி சொந்தம் கொண்டாடத் தேவையில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னார்கள். உரிமை இருக்கிறதா இல்லையா என்பதை உலகம் தீர்மானிக்க வேண்டும்.

இன்னொன்றும் சொன்னார்கள். முதலமைச்சர் கருணாநிதி, ஓய்வுபெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். நல்ல அறிவுரை—என் மனைவி கூட அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறாள்—வீட்டில் கூட பல பேர்கள் ஓய்வு பெறுங்கள், ஓய்வு பெறுங்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நல்ல அறிவுரைதான்—ஆனால் ஓய்வு பெறுங்கள் என்று அவர் சுட்டிக்காட்டுவது முதலமைச்சர் பதவியில் இருந்து ஓய்வு—அரசுப் பொறுப்பில் இருந்து ஓய்வு என்று சொல்கிறார்கள்.

இந்த அரசுப் பொறுப்பு என்பது—நண்பர் ஹாண்டே போன்றவர்கள் எல்லாம் அரசியலுக்கு வராத காலத்தில் இருந்து—திராவிடக் கழகம்—சுயமரியாதை இயக்கம்—இவைகள் நாட்டில் வேரூன்றிய அந்தக் காலத்தில் இருந்தே நாங்கள் எல்லாம் இந்த இயக்கத்திலே எங்களை ஒப்படைத்துக் கொண்டவர்கள்—ஆகவே இந்த அரசுப் பொறுப்புக்காக இந்த இயக்கத்திற்கு



வந்தோம் என்று இன்றைக்கு அந்தப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற—திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து பிரிந்து வந்திருக்கிற அவர்களது தோழர்களே கூட நிச்சயமாகச் சொல்லமாட்டார்கள். ஹாண்டே அவர்களுக்கு வேண்டுமானால் அவர்கள் புதியதாக வந்து இருக்கலாம்—தெரியாமல் இருக்கலாம்—ஆனால் இங்கிருந்து சென்றிருக்கிற அவரது தோழர்களுக்கு எங்களைப்பற்றித் தெரியும். அந்த உள் உணர்வுகளை அவர்கள் அடியோடு கிள்ளி எறிந்து விட்டார்கள் என்று நான் எண்ணமாட்டேன்.

பதவிப் பொறுப்பில் இருந்து போவதுதான் ஓய்வு என்றால் நான் அதை ஓய்வாகக் கருதவில்லை—நாங்கள் உழைக்கவே பிறந்தவர்கள்—உழைத்துக் கொண்டே இருப்போம். அமைச்சரவை இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாட்டு மக்களுக்காக உழைத்துக்கொண்டிருப்போம்.

என்றைக்காவது நான் மறைந்துபோய்—யாராவது எனக்கு ஒரு சிறிய கல்லறையை எழுப்பினால், "உழைத்தவன் இங்கே ஓய்வு கொள்கிறான்" என்று எழுதுவார்களே தவிர—அப்போதுதான் ஓய்வு என்கின்ற வார்த்தை—என் உடல் மீது அல்ல—என் கல்லறை மீது தான் ஏறுமே தவிர—அதுவரை நான் இந்த நாட்டிலே நியாயகாரியங்களுக்காக தீய காரியங்களை எதிர்த்து—துரோகத்தை எதிர்த்து, நிச்சயமாக உழைத்துக்கொண்டிருப்பேன் என்பதைத் தெரிவித்து—அதுவரை எனக்கு ஓய்வு கிடையாது என்பதை உறுதியாகக் கூறி இந்த அளவில் முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தங்களுடைய அனுமதியின் பேரிலே, எங்கள் எல்லைப் போராட்டத்திலே சிறை சென்ற வீரர்களுக்கும், உயிரிழந்தவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல அறிவிப்பினை தந்திருக்கிறார்கள். அதற்காக, எங்கள் கட்சியின் சார்பாக மனப்பூர்வமாக நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, செங்கோட்டை பகுதியிலேயும், இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் மறந்துவிடலாகாது என்பதையும் ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

நானூற்று இருபத்தைந்து டிரான்ஸ்போர்ட் ஒர்க்கர்ஸ் வேலை இழந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் வேலை தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். கணபதி:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதைப் பற்றி இங்கே அறிவித்தார்கள். அதற்காக, அவருக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் 1937-38-லேயும் நடைபெற்றது. அந்தப் பெரியவர்கள் இப்பொழுது இருக்கிறார்கள். அவர்களுக்கும் நம்முடைய அரசு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, போராட்டத்தில் ஈடுபட்டு, நான் ஏற்கனவே சொன்னதைப்போல, இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு எந்தத் தகுதி அடிப்படையிலே மானியம் வழங்கப்படுகிறதோ, அந்த அடிப்படையிலே இவர்களுக்கும் மானியம் வழங்கப்படும். வசதி படைத்தவர்களாக இருக்கிற மற்ற தலைவர்கள்—வசதி பெற்ற அவர்களுக்கு இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு வீர விருது, பட்டயங்கள் எந்த அடிப்படையில் வழங்கப்பட்டதோ, அதே அடிப்படையில் இங்கே அறிவிக்கப்பட்ட எல்லா போராட்ட வீரர்களுக்கும் மானியங்களுக்குப் பதிலாக, வசதி படைத்தவர்களுக்குத் தமிழக அரசின் சார்பாக, வீர விருதுகள், பட்டயங்கள் வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1974) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இரண்டாம் பிரிவு, அட்டவணை, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சி இந்த அளவில் முடிவுற்று நாளைக் காலை 9-00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-12 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.



## (7) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders.*

232. Notification issued with G.O. Ps. No. 698, Revenue, dated the 15th February 1974 in regard to amendment relating to reduction on the rate of sales tax from three and half per cent multi-point to two per cent muti-point by any dealer on the sales of all handmade soaps. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959.]

233. Notification issued with G.O. Ms. No. 7537, Revenue, dated the 24th December 1973 in regard to deletion of Vadapillali and Keelakattalai villages from the Nannilam taluk, Thanjavur district under the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963. [Laid on the table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

234. Appropriation Accounts of the Government or Tamil Nadu for the year 1971–72. [Laid on the table of the House under Article 151 (2) of the Constitution of India).]

235. Report of the Comptroller and Auditor General of India for the year 1971–72. [Laid on the table of the House under Article 151 (2) of the Constitution of India).]

236. Finance Accounts of the Government of Tamil Nadu for the year 1971-72. Laid on the table of the House under Article 151 (2) of the Constitution of India).]

### B. *Reports, Notifications, and other Papers.*

@ 174. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1974 (L.A. Bill No. 14 of 1974) with Annexure.

---

@ Despatched to Members on **5th April 1974.**

# இணைப்பு I.

[ 8 ஆம் பக்கத்தில் 785-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(இ) திருநெல்வேலி மாவட்டத்தில் பள்ளிகளின் இணைப்புத் திட்டம் செயல்பட்டு வரும் 8 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் அவைகளுடன் இணைக்கப்பட்டுள்ள தொடக்க, நடுநிலைப் பள்ளிகளின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| வரிசை எண்ணும், பள்ளி இணைப்புத் திட்டத்தின் பெயர்/சரகம். | பள்ளியின் பெயர். | இணைக்கப்பட்ட பள்ளிகளின் பெயர்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 செங்கோட்டை— செங்கோட்டை .. | அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி செங்கோட்டை. | 1 அரசினர் நடுநிலைப் பள்ளி, செங்கோட்டை. |
| | | 2 அரசினர் நடுநிலைப் பள்ளி, மேல செங்கோடடை. |
| | | 3 அரசினர் ஆரம்பப் பள்ளி, அரியாநல்லூர். |
| | | 4 அரசினர் ஆரம்பப் பள்ளி, கச்சேரி காம் பவுண்டு. |
| | | 5 அரசினர் ஆரம்பப் பள்ளி, கட்டளை குடியிருப்பு. |
| | | 6 அரசினர் ஆரம்பப் பள்ளி, பூலாங் குடியிருப்பு. |
| | | 7 அரசினர் ஆரம்பப் பள்ளி, தவாணை. |
| | | 8 அரசினர் ஆரம்பப் பள்ளி, கார்குடி. |
| | | 9 ஆதித்தனூர் ஆரம்பப் பள்ளி, லாலா குடியிருப்பு. |
| | | *10 ஏ. ஜி. ஆரம்பப் பள்ளி, செங்கோட்டை. |
| | | 11 ஏ. ஜி. ஆரம்பப் பள்ளி, கன்னுப் புலிமேடு. |
| | | 12 எம். எம். நடுநிலைப் பள்ளி, விஸ்வநாதபுரம். |
| | | 13 ஆர். சி. நடுநிலைப் பள்ளி, வல்லம். |
| | | 14 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, வேடம் புதூர். |
| | | 15 ஏ. ஜி. நடுநிலைப் பள்ளி, கனகப் பிள்ளை வலசை. |
| | | 16 அரிசன ஆரம்பப் பள்ளி, உலங்காத்தகண்டி. |
| | | 17 ரயில்வே ஆரம்பப் பள்ளி, செங்கோட்டை. |
| | | 18 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கனகப் பிள்ளை வலசை. |
| | | 19 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, அலகப்ப புரம். |
| | | 20 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஐயாபுரம். |
| | | 21 ஆ. சி. ஆரம்பப் பள்ளி, குதிக்கால் வலசை. |
| | | 22 கே. வி. எம். ஆரம்பப் பள்ளி, விஸ்வநாதபுரம். |
| | | 23 இந்து ஆரம்பப் பள்ளி, பெரியபிள்ளை வலசை. |
| | | 24 ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி, வல்லம். |
| | | 25 டி. டி. டி. ஏ. ஆரம்பப் பள்ளி, வல்லம். |
| | | 26 ஏ. ஜி. ஆரம்பப் பள்ளி, பீரனூர். |
| | | * வரிசை எண் 12 முதல் 26 வரை உள்ள பள்ளிகள் தென்காசி ஓரங்கத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. |
| 2 பாளையங்கோட்டை— திருநெல்வேலி தெற்கு. | புனித ஜான் உயர்நிலைப் பள்ளி, பாளையங்கோட்டை. | 1 சி. எம். எஸ். மேரி ஆர்டன் நடுநிலைப் பள்ளி, பாளையங்கோட்டை. |
| 3 வடகாங்குளம்— வடகாங்குளம் .. | கன்கார்டியா உயர்நிலைப் பள்ளி, வடகாங்குளம். | 1 புனித குடும்ப நடுநிலைப் பள்ளி, காவல்கிணர். |
| | | 2 புனித பால் ஆரம்பப் பள்ளி, காவகிணர். |

| வரிசை எண்ணும், பள்ளி இணைப்புத் திட்டத்தின் பெயர்/சரகம். | பள்ளியின் பெயர். | இணைக்கப்பட்ட பள்ளிகளின் பெயர்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 3 வடகாங்குளம்-தொடர்ச்சி | கனகார்டியா உயர்நிலைப்பள்ளி, வடகாங்குளம்-தொடர்ச்சி | 3 டி. டி. டி. எ. ஆரம்பப் பள்ளி, புத்தூர். |
| | | 4 டி. டி. டி. எ. ஆரம்பப் பள்ளி, லட்லை குடியிருப்பு. |
| | | 5 டி. டி. டி. எ. ஆரம்பப் பள்ளி, குமிலம்பாடு. |
| | | 6 டி. டி. டி. எ. ஆரம்பப் பள்ளி, நாசரத் |
| | | 7 டி. டி. டி. எ. ஆரம்பப் பள்ளி, வடக்கு வேப்பிலாங்குளம். |
| | | 8 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கோலியாங்குளம். |
| | | 9 எஸ். எ. ஆரம்பப் பள்ளி, மாணிக்கம்புத்தூர். |
| | | 10 எம். இ. எல்.ஐ. எம். ஆரம்பப் பள்ளி, தணகார் குளம். |
| | | 11 திலகர் ஆரம்பப் பள்ளி, பெத்தவங்கபுரம். |
| | | 12 நேரு தேசிய நடுநிலைப் பள்ளி, வடகாங்குளம். |
| | | 13 புனித தெரஸா ஆரம்பப் பள்ளி, வடகாங்குளம். |
| | | 14 எம். இ. எல். ஐ. எம். ஆரம்பப் பள்ளி, வடகாங்குளம். |
| | | 15 புனித அந்தோணி ஆரம்பப் பள்ளி, வடகாங்குளம். |
| | | 16 எம். இ. எல். ஐ. எம். ஆரம்பப் பள்ளி, கல்கரை. |
| | | 17 எம். இ. எல். ஐ. எம். ஆரம்பப் பள்ளி, தெற்கு வேப்பிலாங்குளம். |



| | | |
|---|---|---|
| | | 18 எம். இ. எல். ஐ. எம். ஆரம்பப் பள்ளி, பெருங்குடி. |
| | | 19 டி. டி. டி. எ. ஆரம்பப் பள்ளி, மருதப்பபுரம். |
| | | 20 புனித குடும்ப நடுநிலைப் பள்ளி, வடகாங்குளம். |
| | | 21 மார்த்தாண்டம் நடுநிலைப் பள்ளி, கவரைகுளம். |
| | | 22 புனித சேவியர் ஆரம்பப் பள்ளி, அவரைகுளம். |
| | | 23 டி. டி. டி. எ. ஆரம்பப் பள்ளி, அவரைகுளம். |
| | | 24 எம். இ. எல் ஐ. எம். ஆரம்பப் பள்ளி, அம்பலவாணபுரம். |
| | | 25 டி. டி. டி. எ. ஆரம்பப் பள்ளி, புதியாம்புத்தூர். |
| 4 களக்காடு— | | களக்காடு வட்டம்— |
| வள்ளியூர் .. .. | அரசினர் உயர்நிலைப் பள்ளி, களக்காடு. | 1 கோமதி அருள்நெறி உயர்துவக்கப் பள்ளி, களக்காடு. |
| | | 2 கே. எ. எம். பி. மீரானியா துவக்கப் பள்ளி, களக்காடு. |
| | | 3 நெல்லகண்டா உயர் தொடக்கப் பள்ளி, பதை. |
| | | 4 இந்து தொடக்கப் பள்ளி, பண்டிதம்குறிச்சி. |
| | | 5 சி. எம். எஸ். தொடக்கப் பள்ளி, கீழப்பாதை. |
| | | 6 ஆர். சி. தொடக்கப் பள்ளி, சேவியர்புரம். |
| | | 7 டி. டி. டி. எ. ஆரம்பப் பள்ளி, மஞ்சளிலே. |
| | | 8 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, கோயிலம்மாள்புரம். |
| | | 9 சி. எம். எஸ். தொடக்கப் பள்ளி, மூங்கிலடி. |

| வரிசை எண்ணும், பள்ளி இணைப்புத் திட்டத்தின் பெயர்/சரகம். (1) | பள்ளியின் பெயர். (2) | இணைக்கப்பட்ட பள்ளிகளின் பெயர்கள். (3) |
|---|---|---|
| 4 களக்காடு-தொடர்ச்சி | அரசினர் உயர்நிலைப்பள்ளி, களக்காடு-தொடர்ச்சி | 10 அரசினர் ஆரம்பப் பள்ளி, களக்காடு. |
| வள்ளியூர்-தொடர்ச்சி | | 11 ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி, வடகரை, |
| | | கோவில்பட்டி வட்டம்— |
| | | 1 முத்தையா நடுநிலைப் பள்ளி, கோயில்பத்து, களக்காடு. |
| | | 2 இந்து தொடக்கப் பள்ளி, கோவிலம்மாள்புரம். |
| | | 3 டி. டி. டி. ஏ. தொடக்கப் பள்ளி, கீழக்கரு வேலங்குளம். |
| | | 4 இந்து தொடக்கப் பள்ளி, ஒச்சிகுளம். |
| | | 5 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, படையார்குளம். |
| | | 6 டி. டி. டி. ஏ. தொடக்கப் பள்ளி, தோப்பூர். |
| | | 7 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, கீழக் கருவேலங்குளம். |
| | | 8 ஊராட்சி ஒன்றிய உயர்தொடக்கப் பள்ளி, பதமனேரி. |
| | | 9 டி. டி. டி. ஏ. தொடக்கப் பள்ளி, சிதம்பரபுரம். |
| | | 10 டி. டி டி. ஏ. தொடக்கப் பள்ளி, களக்காடு. |
| | | 11 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, கதம்போடுவளு. |
| | | 12 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி கதம்போடுவளு நாடார் குடியிருப்பு. |



| வரிசை எண்ணும், பள்ளி இணைப்புத் திட்டத்தின் பெயர்/சரகம். (1) | பள்ளியின் பெயர். (2) | இணைக்கப்பட்ட பள்ளிகளின் பெயர்கள். (3) |
|---|---|---|
| 5 ஸ்ரீ வைகுண்டம்— | | |
| ஸ்ரீவைகுண்டம் .. | கே. ஜி. எஸ். ஆண்கள் உயர் நிலைப் பள்ளி, ஸ்ரீவைகுண்டம். | 1 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஸ்ரீவைகுண்டம். |
| | | 2 உலகம்மாள் அண்ணி நடுநிலைப் பள்ளி, ஸ்ரீவைகுண்டம். |
| | | 3 எம். ஏ. சி. நடுநிலைப் பள்ளி. ஸ்ரீவைகுண்டம். |
| 6 தூத்துக்குடி— | | |
| தூத்துக்குடி .. | எஸ். வி. ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, தூத்துக்குடி. | 1 சுப்பையா வித்யாலயம் நடுநிலைப் பள்ளி தூத்துக்குடி. |
| | | 2 எக்ஸ்டன்ஷன் நடுநிலைப் பள்ளி, தூத்துக்குடி. |
| | | 3 புனித சார்லஸ் நடுநிலைப் பள்ளி தூத்துக்குடி. |
| | | 4 டி. டி. டி. ஏ. நடுநிலைப் பள்ளி, தூத்துக்குடி. |
| | | 5 சிதம்பரநகர் நடுநிலைப் பள்ளி, தூத்துக்குடி. |
| | | 6 டி. டி. டி. ஏ. தொடக்கப் பள்ளி, தூத்துக்குடி. |
| | | 7 மீளுட்சிபுரம் தொடக்கப் பள்ளி, தூத்துச்குடி. |
| 7 கோயில்பட்டி— | | |
| கோயில்பட்டி .. | வ. உ. சி. அரசினர் உயர்நிலைப் பள்ளி, கோயில்பட்டி. | 1 லெக்ஷ்மி மில்ஸ் ஆரம்பப் பள்ளி, (மேற்கு) கோயில்பட்டி. |
| | | 2 லெக்ஷ்மி மில்ஸ் ஆரம்பப் பள்ளி, (கிழக்கு) கோயில்பட்டி. |
| | | 3 கோபாலகிருஷ்ண ஆரம்பப் பள்ளி, கோயில் பட்டி. |
| | | 4 பூவலிங்கம் செட்டியார் ஆரம்பப் பள்ளி, கோயில் பட்டி. |

| வரிசை எண்ணும், பள்ளி இணைப்புத் திட்டத்தின் பெயர்/சரகம். | பள்ளியின் பெயர். | இணைக்கப்பட்ட பள்ளிகளின் பெயர்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 7 கோயில்பட்டி-தொடர்ச்சி | வ.உ.சி. அரசினர் உயர்நிலைப்பள்ளி, | 5 ஏ. வி. ஆரம்பப் பள்ளி, கோயில்பட்டி. |
| கோயில்பட்டி-தொடர்ச்சி | கோயில்பட்டி-தொடர்ச்சி | 6 டி. டி. டி. ஏ. ஆரம்பப் பள்ளி, கோயில்பட்டி. |
| | | 7 லாயல் மில்ஸ் ஆரம்பப் பள்ளி, கோயில்பட்டி. |
| | | 8 இல்லத்துார் ஆரம்பப் பள்ளி, கோயில்பட்டி. |
| | | 9 சங்கரகுமார் ஆரம்பப் பள்ளி, கோயில்பட்டி. |
| | | 10 நகராட்சி ஆரம்பப் பள்ளி, கோயில்பட்டி. |
| | | 11 நகராட்சி ஆரம்பப் பள்ளி, செக்கடித்தெரு, கோயில்பட்டி. |
| | | 12 நகராட்சி ஆரம்பப் பள்ளி, காந்தி நகர், கோயில்பட்டி. |
| | | 13 நகராட்சி ஆரம்பப் பள்ளி, அருந்ததியார் காலனி, கோயில்பட்டி. |
| | | 14 நகராட்சி ஆரம்பப் பள்ளி, பாவதி நகர், கோயில்பட்டி. |
| | | 15 நகராட்சி ஆரம்பப் பள்ளி, கோயில்பட்டி. |
| | | 16 இ. வி. ஏ. வள்ளிமுத்து நடுநிலைப் பள்ளி, கோயில்பட்டி. |
| | | 17 ஆர். சி. நடுநிலைப் பள்ளி, கோயில்பட்டி. |
| | | 18 வாணிய வைசிய நடுநிலைப் பள்ளி, கோயில்பட்டி. |



| | | |
|---|---|---|
| 7 கோயில்பட்டி—தொடர்ச்சி | வ. உ. சி. அரசினர் உயர்நிலைப் பள்ளி, | |
| | | 19 நாடார் நடுநிலைப் பள்ளி, கோயில்பட்டி. |
| கோயில்பட்டி— தொடர்ச்சி | கோயில்பட்டி—தொடர்ச்சி | 20 விஸ்வகர்மா நடுநிலைப் பள்ளி, கோயில்பட்டி. |
| | | 21 கனகசபாபதி நடுநிலைப் பள்ளி, கோயில்பட்டி. |
| 8 சங்கரன்கோவில்— | | |
| சங்கரன்கோவில் .. | அரசினர் உயர்நிலைப் பள்ளி, சங்கரன்கோவில். | 1 அமராவதி நாடார் தொடக்கப் பள்ளி, சங்கரன்கோவில். |
| | | 2 இராமச்சந்திர வித்தியாலயம் உயர்தொடக்கப் பள்ளி, சங்கரன்கோவில். |
| | | 3 கோமதி தொடக்கப் பள்ளி, சங்கரன்கோவில். |
| | | 4 ஆர். சி. தொடக்கப் பள்ளி, 8-வது வார்டு, சங்கரன்கோவில். |
| | | 5 வடக்கு மாட வீதி தொடக்கப் பள்ளி, சங்கரன்கோவில். |
| | | 6 வடக்கு மாட வீதி மேற்கு நகராட்சி உயர் தொடக்கப் பள்ளி, சங்கரன்கோவில். |
| | | 7 நகராட்சி உயர்தொடக்கப் பள்ளி, முதலியார் முதல் தெரு, சங்கரன்கோவில். |
| | | 8 நகராட்சி உயர்தொடக்கப் பள்ளி, புதுமன்னைத் தெரு, சங்கரன்கோவில். |
| | | 9 நகராட்சி உயர்தொடக்கப் பள்ளி, கழுகுமலை சாலை, சங்கரன்கோவில். |
| | | 10 நகராட்சி தொடக்கப் பள்ளி, அரிசனத் தெரு, சங்கரன்கோவில். |

| வரிசை எண்ணும், பள்ளி இணைப்புத் திட்டத்தின் பெயர்/சரகம். (1) | பள்ளியின் பெயர். (2) | இணைக்கப்பட்ட பள்ளிகளின் பெயர்கள். (3) |
| --- | --- | --- |
| | | 11 பு. பு. பு. ஊ. தொடக்கப் பள்ளி, சங்கரன் கோவில். |
| | | 12 சி. ஜி. ஜெட். எம். தொடக்கப் பள்ளி, சங்கரன் கோவில். |
| | | 13 அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில் தொடக்கப் பள்ளி, சங்கரன்கோவில். |
| | | 14 நகராட்சி தொடக்கப் பள்ளி, பட்டதூர். |
| | | 15 அருள்ஜோதி தொடக்கப் பள்ளி, சங்கரன் கோவில். |



## இணைப்பு II

(27-ம் பக்கத்தில் 801 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

கோயம்புத்தூரில் 1972, டிசம்பர் 11, 12 தேதிகளில் நடைபெற்ற தமிழ்நாடு, கேரளம், கருநாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய தென் மாநிலங்களின் போக்குவரத்து அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் :—

**1. தென் மாநிலங்கள் போக்குவரத்து ஆணையாளர்கள் நிலைக்குழு.—** அவ்வப்போது கூடி நடைமுறை, நிர்வாகப் பிரச்சினைகளை ஆய்வு செய்து, அவற்றிற்குத் தீர்வு காணவும், அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கத் தொடங்கவும், தென் மாநிலங்களிடையே போக்குவரத்து குறித்த தகவலை அறிவிக்கும் நிலையமாகப் பணியாற்றவும் வேண்டி, தென் மாநிலங்கள் போக்குவரத்து ஆணையாளர் கொண்ட நிலைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

**2. (a) மாநிலங்களுக்கிடையேயான வழித்தடங்களை நாட்டுடைமையாக்குதல்—மாநிலங்கள் அனைத்திலும் தனியார் பேருந்துகள் ஒரே சீராக நீக்கப்படுதல்.—**மாநிலங்களுக்கிடையேயான புதிய வழித்தடங்களைப் பொறுத்த வரையில், கூடுமானவரை அந்தந்த மாநிலத்தின் அரசுப் போக்குவரத்து நிறுவனத்திற்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

**(b) பயணிப் பேருந்துகள் விடுவதற்கு மாநிலங்களிடையே ஒப்பந்தங்கள் பேருந்துகள் எண்ணிக்கையையும் பயணத் தடவைகளின் எண்ணிக்கையையும் அதிகரிப்பதன் மூலம் கூடுதல் வசதி அளித்தல் குறைந்த அளவு உயர்ந்த அளவு பயணத் தடவைகள் எண்ணிக்கை குறித்து ஒப்பந்தத்தில் வகை செய்தல்.—**மாநிலங்களுக்கிடையேயான வழித்தடங்களை ஒதுக்கும் போது, அந்தந்த மாநிலப் பேருந்துகள் குறிப்பிட்ட கிலோ மீட்டர் தொலைவு வரை ஓட வேண்டுமென்ற கோட்பாடு ஒப்புக்கொள்ளப்பட்டது. சரிசம அடிப்படையில், ஒவ்வொரு வழித்தடத்திலும் குறைந்த அளவு, உயர்ந்த அளவு பயணத் தடவைகளின் எண்ணிக்கைக்கு மாநிலங்களுக்கிடையேயான ஒப்பந்தம் வகை செய்யலாம்.

**3. மாநிலங்களுக்கிடையேயான வழித் தடங்கள்—நாட்டுடைமையாக்குதல்—இந்திய அரசின் இசைவைப் பெறுவதைத் தவிர்த்தல்.—** மாநிலங்களுக்கிடையேயான வழித்தடங்களை நாட்டுடைமையாக்குவது குறித்து மாநிலங்களுக்கிடையே ஒப்பந்தங்கள் செய்துகொண்ட பின்னர்தான்

அந்த வழித்தடங்கள் நாட்டுடைமையாக்கப்படுவதால் அவ்வாறு நாட்டுடைமையாக்குவது குறித்து ஏற்பளிக்கப்பட திட்டங்களை வெளியிட மத்திய அரசின் முன் ஒப்புதல் பெற வேண்டுமென்று கூறுகிற 1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தைச் சேர்ந்த 68-D பிரிவின் வரம்பு நிபந்தனையை நீக்கிவிடுமாறு மத்திய அரசை மாநிலங்கள் அனைத்தும் கேட்டுக் கொள்ள வேண்டும்.

4. **மோட்டார் வண்டிகள்—ஒப்பந்த ஊர்திகள்—ஒப்பந்த ஊர்திகளைப் பயணிப் பேருந்துகளாகத் தவறான முறையில் பயன்படுத்துதல்—அனுமதி வழங்குவதைக் கட்டுப்படுத்தலும் ஒரே சீரான வரிவீதங்களைப் பின்பற்றுதலும்.**—பல்வேறு மாநிலங்களில் வழங்கப்பட்ட ஒப்பந்த ஊர்தி அனுமதிகள் அனைத்தையும் பற்றி ஆய்வு செய்த பின்னர், இதுபற்றி தென் மாநிலங்கள் போக்குவரத்து ஆணையாளர்கள் அடங்கிய நிலைக்குழு விரிவாக ஆய்வு செய்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைத் தெரிவிக்கும்.

5. **சுற்றுலா வாடகை மோட்டார் வண்டிகள்—வண்டிகளின் ஒதுக்கீட்டு எண்ணிக்கையை உயர்த்துதல், மேலொப்பம் இடும் முறையை நீக்குதல்.**—தென் மாநிலங்கள் அனைத்திலும் ஓடுகிற சுற்றுலா வாடகை மோட்டார் வண்டிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாநிலத்திற்கும் 20-லிருந்து 100-ஆக உயர்த்தப்பட வேண்டும். ஒப்பந்த மாநிலம் மேலொப்பமிட வேண்டும் என்ற முறை நீக்கப்பட வேண்டும்.

6. **அனைத்திந்திய அடிப்படையில் ஓட்டுவதற்கான சுற்றுலா மோட்டார் வண்டிகள்.**—அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள் மட்டுமே அனைத்திந்திய அடிப்படையில், ஒரு முனை வரியுடன், சுற்றுலா மோட்டார் வண்டிகளை இயக்க வேண்டும்.

7. (i) **சரக்கு வண்டிகள்—சரக்கு வண்டிப் போக்குவரத்துப் பணிகளுக்கு ஆதரவாக இருக்கிற வகையில், ஒப்பந்தம் செய்து கொண்ட பரஸ்பர மாநிலத்தில் சரக்குகளை எடுத்துக் கொள்ளவோ அல்லது இறக்குவதற்கோ தடை விதிக்கும் நிபந்தனை தளர்த்துதல்.**—தற்போதுள்ள முறையே நீடிக்கும்.

(ii) **சரக்கு வண்டிகள்—அனுமதிகளுக்கு மேலொப்பம் இடும் முறையை நீக்கிவிடுதல்.**—சரக்கு வண்டிகளுக்கான அனுமதிகளில், ஒப்பந்தம் செய்து கொண்ட பரஸ்பர மாநிலம் மேலொப்பமிடு முறை நீக்கப்பட வேண்டும். வரி கட்டியதற்கான அடையாள வில்லைகள் (Tokens) கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.



(iii) **குறுகிய கால உரிம ஒப்பந்தத்தின்கீழ் தற்காலிக அனுமதிச் சீட்டுகளை வழங்குதல்.**—குறுக்கிய கால உரிம ஒப்பந்தத்தின்கீழ் சரக்கு வண்டிகளுக்கு வழங்கப்படும் அனுமதிச் சீட்டுகளின் எண்ணிக்கை குறித்து வரையறை எதும் விதிப்பது அவசியமில்லை.

(iv) **வண்டிகளில் ஏற்றப்படும் சுமை—ஒரு சீராக இருக்க வேண்டும்.**—உள்ளூர் சாலைக் கட்டுப்பாடுகளுக்குட்பட்டு, மாநிலங்கள் அனைத்திலும் வண்டிகளில் ஏற்றப்படும் சுமை 15 டன் என ஒரே சீராக இருக்கலாம். சாலைகளை மேம்படுத்தவும், அத்தகைய கட்டுப்பாடுகள் தற்போது இருக்கக் கூடிய இடங்களிலெல்லாம் நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து அனுமதி பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

8. **மோட்டார் வண்டிகள்—தென் மாநிலங்களில் ஒரே சீரான வரி அமைப்பு.**—ஆந்திர மாநிலத்தில் உள்ளது போல, மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் விதிக்கப்படும் வரியும், பயணிகள்—சரக்குகள் வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் விதிக்கப்படும் வரியும் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும். இந்த வரி வீதம் கூடுமானவரை ஆந்திர மாநிலத்தில் நிலவும் வரிவீத அளவிற்கு உயர்த்தப்பட வேண்டும்.

9. **மோட்டார் வண்டிகள்—ஒரு சீரான கட்டண அமைப்பு.**—வெவ்வேறு மாநிலங்களில் அறிவிக்கப்பட்ட கட்டண வீதங்கள் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் விதிக்கப்படும் கட்டணம் மிகவும் குறைவு என்று தெரிய வந்தது.

10. **மோட்டார் வண்டிகள்—விபத்துக்களைத் தவிர்க்க நடவடிக்கைகள்.**—மோட்டார் வண்டிப் போக்குவரத்தை முறைப்படுத்துவது தொடர்பான சட்டங்கள், தற்போதைய, வருங்காலத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் தகுந்தவாறு திருத்தியமைக்கப்பட வேண்டும். மோட்டார் போக்குவரத்து ஆணையாளர்கள் நிலைக்குழு இதுபற்றி ஆழ்ந்து பரிசிலனை செய்து, எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியாகப் பின்பற்றக்கூடிய பொருத்தமானதொரு மோட்டார் வண்டிகள் விதி முறை ஒன்றை எடுத்துக் கூறலாம்.

11. **மோட்டார் வண்டிகள் வரி—மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பந்தங்கள்—ஒரு முனை வரி—வாய்ப்பும், தடை செய்தலும்.**—மாநிலங்களுக்கு இடையேயான பயணிப் பேருந்துகள், சரக்கு வண்டிகள் ஆகியவற்றிற்கு ஒரு முனை வரி விதிக்கும் கோட்பாடு ஒப்புக்கொள்ளப்பட்டது. ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள பரஸ்பர மாநிலத்தில் வரி ஏதும் வசூலிக்க வேண்டிய அவசிய

மில்லை. மாநிலங்களுக்கு இடையேயான பேருந்துப் பணியைப் பொறுத்த வரையில், வருவாய் இழப்பு ஏதும் ஏற்படின், அதனைச் சரிக்கட்ட அந்தந்த மாநிலங்கள் ஒரு சீரான மேல்வரி ஒன்றை விதிக்கலாம். பயணிகளுக்கும் சரக்குகளுக்கும் வரி விதித்தல் சட்டத்தின்கீழ் பரஸ்பர மாநிலத்திற்குச் செலுத்தப்படாமல் உள்ள வரி நிலுவைகள், அனுமதிகள் புதுப்பிக்கப்படு வதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட மாநிலத்தில் வசூலிக்கப்பட வேண்டும்.

12. ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குச் செல்வதற்கான இடைவழியைப் பயன்படுத்திக் கொள்ள சரக்கு வண்டிகளுக்கு மோட்டார் வரி விதித்தல்.—ஒரு மாநிலம் வழியாக ஒரு வண்டி செல்லும்போது அந்த மாநிலத்தில் சரக்குகளை ஏற்றிக்கொள்ளாமல் அல்லது இறக்காமல் இருந்தால், அந்த வண்டிக்கு அந்த மாநிலம் வரி ஏதும் விதிக்கக் கூடாது என்று பொதுவான கருத்துத் தெரிவிக்கப்பட்டது. ஆந்திரம், கருநாடக மாநிலங்களில் மட்டுமே இச்சிக்கல் எழுந்துள்ளது என்றும், இச்சிக்கலை அந்தந்த மாநிலத்துடன் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளலாம் என்றும் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

13. மாநிலங்களுக்கிடையே பயணிப் பேருந்துகளை இயக்குதல்—வழித் தடங்களை மாநிலங்களுக்கிடையே ஒதுக்குதல்.—சரிசமமான கிலோ மீட்டர் தொலைவு அடிப்படையில் வழித்தடங்களைப் பகிர்ந்து கொள்ளும்போது, பேருந்துகளைப் பயண இறுதி முனையில் நிறுத்துவதற்கு உள்ள வசதிகள், பேருந்துகளை இயக்குவதற்கான வசதி ஆகியவை கருதிப் பார்க்கப்பட வேண்டும்.

14. மாநிலங்களுக்கிடையேயான பேருந்துப் பணிப் பதிவேடுகளை வைத்து வருதல்.—மாநிலங்களுக்கிடையேயான பேருந்துப் பணிப் பதிவேடு ஒன்றை நிலைக்குழு வரையறுக்கும் படிவத்தில் ஒவ்வொரு மாநில அரசுப் போக்குவரத்து அதிகார மன்றமும் வைத்துவர வேண்டும். அப்பணிப் பதிவேட்டின் முழு நகல் பகுதிகள் ஆறு திங்களுக்கொரு முறை சம்பந்தப் பட்ட போக்குவரத்து ஆணையாளர்களுக்கிடையே பரிமாற்றம் செய்து கொள்வதன்மூலம் ஆய்வு செய்யப்பட்டு, உரிய முறையில் சம்மதம் கிடைத்த பிறகு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

15. குறுகிய கால உரிம ஒப்பந்தங்களின்கீழ் தற்காலிக அனுமதிச் சீட்டுகளை வழங்குதல்.—குறுகிய கால உரிம ஒப்பந்தத்தில் சரக்கு வண்டி களுக்கு வழங்கப்படும் தற்காலிக அனுமதிச் சீட்டின் கால அளவு 7 நாட்கள் முதல் 30 நாட்கள் வரை இருக்க வகை செய்யப்பட்டுள்ளது. இக்கால அளவு மூன்று திங்களாக உயர்த்தப்படலாம்.



16. நாட்டுடைமையாக்குவதற்காக ஏற்பளிக்கப்பட்ட திட்டங்களை ரத்து செய்தல் அல்லது அவற்றில் மாற்றம் செய்தல்.—ஒரு வழித்தடத்தில் அல்லது பகுதியில் மாநில அரசு ஏற்கெனவே ஏற்பளித்துள்ள ஒரு திட்டத்தின்கீழ், வண்டிகளின் எண்ணிக்கையை உயர்த்துதல், வண்டிகளின் வகையில் மாற்றம், வழித்தடத்தை நீட்டித்தல் அல்லது கால அட்டவணையைத் திருத்துதல் ஆகியவற்றை மேற்கொள்வதனுல், அரசுப் போக்குவரத்து நிறுவனம் ஒன்று மாநில அரசிடமிருந்து முன் ஒப்புதல் பெற வேண்டுமென்று மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 68-E பிரிவைச் சேர்ந்த வரம்பு நிபந்தனை குறிப்பிடுகிறது. ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள திட்டத்தில் வகை செய்துள்ள வரம்பிற்குள் அந்த மாற்றம் செய்யப்படும்போது, அரசிடம் முன் ஒப்புதல் பெறப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. இந்த வரம்பு நிபந்தனை தகுந்தவாறு மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப் பட்டது. நிலைக்குழு இது பற்றி பரிசீலித்து தகுந்த திருத்தங்களைத் தெரிவிக்க வேண்டும்.

17. பெருநகர்ப் போக்குவரத்து ஏற்பாடு.—பத்து லட்சமும், அதற்கு மேற்பட்டும் மக்கள் தொகையுடைய நகரங்களைப் பொறுத்தவரையில், உலகம் முழுவதிலும் இத்தகைய நகரங்களில் பேருந்துப் பணிகளைச் சிக்கனமாக நடத்த முடியாது என்று அனுபவ வாயிலாகத் தெரிய வந்துள்ளதால், நகர்ப் போக்குவரத்துப் பணிகளுக்குத் தகுந்த முறையில் உதவியளிக்க இந்திய அரசை அணுக வேண்டும்.

18. சாலைப் போக்குவரத்து நிதி.—பேருந்து அடிச்சட்டங்கள் வாங்க அரசுப் போக்குவரத்து நிறுவனங்களுக்குக் குறைந்த வட்டி வீதங்களில் கடன்கள் வழங்குவதற்கென சாலைப் போக்குவரத்து நிதியொன்றை ஏற்படுத்த இந்திய அரசினை அணுக வேண்டும். இந்த நிதியினைக் கப்பல் போக்குவரத்து நிதி அமைந்துள்ள முறையிலேயே அமைக்க வேண்டும்.

19. ரயில்வே செஸ் நிதியிலிருந்து பங்குத் தொகை அளித்தல்—மகாராஷ்டிர மாநிலத்தில் சாலைப் போக்குவரத்துக் கழகத்திற்கு ரயில்வே செஸ் நிதியிலிருந்து எந்த அளவு பங்குத் தொகை அளிக்கப்படுகிறதோ அதே அளவுள்ள பங்குத் தொகையை தென் மாநிலங்களிலுள்ள சாலைப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் வழங்க இந்திய அரசை அணுக வேண்டும்.

20. சாலைப் போக்குவரத்துப் பயிற்சி, ஆராய்ச்சி, வளர்ச்சி நிறுவனம்.—அண்மையில் பூனாவில் அமைக்கப்பட்டுள்ள பயிற்சி நிறுவனம் அளிக்கும் வசதிகளுக்கு உறுதுணையாக இருக்கும் வகையிலும், தென் மாநிலங்களில்

உள்ள அரசுப் போக்குவரத்து நிறுவனங்களின் சிறப்புத் தேவைகளை நிறைவு செய்யவும் வேண்டி தென் மண்டலத்தில் பயிற்சி, ஆராய்ச்சி, வளர்ச்சி நிறுவனம் ஒன்றை அமைக்கும் வாய்ப்பினைப் போக்குவரத்து ஆணையாளர்கள் நிலைக்குழு ஆராய வேண்டும்.

Decisions taken at the Conference of the Transport Ministers of Southern States of Tamil Nadu, Kerala, Karnataka and Andhra Pradesh held at Coimbatore on the 11th and 12th December 1972—

(1) *Standing Committee of Transport Commission of Southern States.*—A Standing Committee of the Transport Commissioners of the Southern States should be constituted to meet at periodical intervals to assess the procedural and administrative problems, find solutions for them, inctiate action to implement the decisions taken at the Ministers Conference and also serve as clearing house for information relating to transport matters amongst the Southern States.

(2) (*a*) *Nationalisation of Inter-State Routes—Exclusion of private operators uniformly by all States.*—So far as new inter-State routes are concerned, the first preference should be given, as far as possible, to the State Transport Undertakings of the Home State.

(*b*) *Inter-State agreement for plying of Stage Carriage—Provision of additional facilities increasing the number of buses and trips—Provision for minimum and maximum number of trips in the agreement.*—The principle of service kilometerage for allocation of inter-State routes between States was agreed upon. The inter-State agreements might provide for maximum and minimum number of trips in each route on the basis of parity.

(3) *Inter-State routes—Nationalisation—Dispensation of concurrence of the Government of India.*—All the States should move the Central Government to delete the proviso to section 68-D of the Motor Vehicles Act, 1939, which requires the previous approval of the Central Government for publishing schemes approved for



nationalisation in the case of Inter-State routes as nationalisation is only after Inter-State agreements are entered into in respect of these routes.

(4) *Motor Vehicles—Contract Carriages (Omni buses)—Misuse of omni buses as Stage Carriages—Restriction in the grant of permits and adoption of uniform rate of tax.*—The Standing Committee of Transport Commissioners of Southern States will go into this question in depth after a review of all the Contract Carriage permits issued in the various States and will suggest suitable measures for the purpose.

(5) *Tourit Taxis—Increase of quota and waiver of counter-signature.*—The number of tourist taxis for plying in all the Southern States should be increased from 20 to 100 for each State. The counter-signature by the reciprocating State should be waived.

(6) *Tourist Vehicles for operation on All-India basis.*—The State Transport Undertakings alone should operate the tourist vehicles on All-India basis on single point tax.

(7) (i) *Goods Vehicles—Condition banning picking up or setting down of goods in the reciprocating State in favour of parcel services.*—Relaxation of status quo will continue.

(ii) *Goods Vehicles—Waiver of counter-signature of permits.*—The countar-signature of permits for goods vehicles by the reciprocating State should be waived and arrangements should be made for the issue of tax tokens.

(iii) *Issue of temporary permits under short-term licence agreement.*—No restriction in the number of permits for goods vehicles under short-term licence agreement is necessary.

(iv) *Load of vehicles—Uniformity.*—The load of vehicles could be uniformly 15 tonnes in all the States subject to local road restrictions, and steps should be taken to improve the roads and obtain clearance from the Highways Department wherever such restrictions exist now.

(8) *Motor Vehicles—Uniform tax structure in the Southern States.*—The tax under the Motor Vehicles Taxation Act and the tax under Taxation of Passengers and Goods Act should be merged as in the case of Andhra Pradesh and the rate of tax should be raised, as far as possible, to the level prevailling in Andhra Pradesh.

(9) *Motor Vehicles—Uniform fare structure.*—The fares notified in the different States were reviewed. It was seen that the fare in Tamil Nadu was the lowest.

(10) *Motor Vehicles—Measures for the prevention of accident.*—The statutes relating to the regulation of Motor Transport should be suitably revised in order to satisfy the present and the future requirements. The Standing Committee of Transport Commissioners might go into the subject in depth and suggest a suitable Motor Vehicles Code for uniform adoption in all States.

(11) *Motor Vehicles Tax—Inter-State agreements single point tax—Scope and banning of.*—The principle of single point tax for the inter-State stage carriages and goods vehicle was agread to. There is no need for the collection of any tax in the reciprocating State. To meet the loss of revenue, if any, a uniform surcharge could be levied by the Home State in the case of inter-State operation. The arrears of tax under Taxation of Passengers and Goods Act to the reciprocating State should be collected in the Home State before renewal of permits.

(12) *Levy of Motor Vehicles Tax on goods carriages for use of corridors.*—The general view was that no tax should be levied by any State through which a vehicle passes provided there is no setting down or picking up of goods in that State. The Conference felt that this problem, has arisen only in the case of Andhra Pradesh and Karnataka States, and that this question could be settled by negotiation.

(13) *Operation of Inter-State Stage Carriages—Allocation of routes between States.*—The available terminal facilities and the operational convenience should be taken into consideration in sharing of routes on parity of service kilometerage.



(14) *Maintenance of Inter-State Service Registers.*—A register of inter-State service should be maintained by the State Transport Authority of each State in a form to be prescribed by the Standing Committee. This register should be reviewed half-yearly by exchanging full extracts of the registar between Transport Commissioner concerned and accepted after due recociliation.

(15) *Grant of temporary permits under short-term licence agreements.*—The period of 7 to 30 days provided in the short term licence agreement for good carriages may be increased to three months.

(16) *Cancellation or modification of approved schemes for nationalisation.*—The proviso to Section 68-E of the Motor Vehicle Acts lays down that a State Transport Undertaking should obtain the previous approval of the State Government for modifying a scheme relating to any route or area already approved by Government in respect of increase in the number of vehicles, change in the type of vehicles, extension of the route or alteration of the time table. It was pointed out that where variation is within the limit provided in the scheme already published, such previous approval of Government is insisted upon and that this proviso should be suitably modified. The Standing Committee should consider and propose suitable amendments.

(17) *Metropolitan Transport System.*—The Govarnment of India should be moved to come forward and subsidise the City Transport operations in a suitable manner in respect of cities with a population of 10 lakhs and above as it has been found by experience all over the world that such City Services could not be run economically.

(18) *Road Transport Fund.*—The Government of India should be moved for setting up a Road Transport Fund on the same lines as the Shipping Fund for the grant of loans on low interest rates to State Transport Undertakings for the purchase of bus chassis.

(19) *Contributions from the Railway Cess Fund.*—The Government of India should be moved for granting the Road Transport Corporations in the Southern States, the same contribution from the Railway Cess Fund as is being given to the Road Transport Corporation in Maharashtra.

(20) *Road Transport Training, Research and Development Institute.*—The Standing Committee of Transport Commissioner's should explore, the possibility of setting up a Training, Research and Development Institute for the Southern Region, which would complement the facilities offered by the Institute at Poona, set up recently and also to serve the special needs of the State Transport Undertakings in the Southern States

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

## புதன்கிழமை, 1974 ஏப்ரல் 10.

---

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Bookmakers in Race Course.*

*862 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether bookmakers have been permitted to function at the Race Course in Madras City; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) & (இ) 1973–74-ஆம் ஆண்டு குதிரைப் பந்தயத்தின்போது சென்னைக் குதிரைப் பந்தய மைதானத்தில் 19 பேர் பணய ஒப்புநர்களாகச் (Bookmakers) செயல்படுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** தலைவரவர்களே, இந்தக் குதிரைப் பந்தயத்திற்கு புக்மேக்கர்களை அனுமதித்திருக்கிறார்கள். ஆனால் புக்மேக்கர்களிடத்தில் ஆடுபவர்கள் ஆயிரம் ரூபாய் ஆடுவதாக இருந்தால் 100 ரூபாய் என்று ஆடுகிறார்கள். இலட்சம் ரூபாய்க்குக் கூட ஆடுகிறார்கள். ஆனால் இலட்சம் என்று ஆடுவதில்லை, ஆயிரம் ரூபாய் என்று ஆடுகிறார்கள். இதனால் அரசாங்கத்திற்கு வரக் கூடிய வருமானம் பாதிக்கப்படுகிறது. இதற்குக் காரணம் என்ன சொல்கிறார்கள் என்றால் 21 சதவிகிதம் வரியிருப்பதைத்தான் காரணமாகக் காட்டுகிறார்கள். பெங்களூரில் 10 சதவிகிதம் வரியிருப்பதால் இங்கு ஆடுபவர்களில் பலபேர் அங்கே சென்று

[1974 ஏப்ரல் 10

ஆடுகிறார்கள். பங்களாதேஷ் சண்டையின்போது 5 சதவிகிதம் சர்சார்ஜை ஏற்றியதால் இந்த 21 சதவிகிதம் என்று ஆகிவிட்டது. எனவே அந்த சர்சார்ஜை நீக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா? அதிகத் தொகைக்குக் குறைந்த தொகையாக வைத்து ஆடுபவர்களை பிடிப்பதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, குதிரைப் பந்தய மைதானத்தில் உலவுகின்ற யானைகளைப் பிடிப்பதற்கு நிச்சயமாக வழி செய்யப்படும்.

**திரு. கோவை செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குதிரைப் பந்தயத்தில் பணம் கொடுக்கின்ற இடங்களில் பல பெரிய பண முதலைகள் கருப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றுவதற்கு அந்த இடத்தைப் பயன்படுத்திக் கொள்வதாகச் சொல்கிறார்கள். அத்தகைய முறைகளைத் தவிர்ப்பதற்காக பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது மாதிரி குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கு அரசு முன்வருமா? மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சிரிப்பதிலேயிருந்தே அண்டை மாநிலங்களுக்குப் பணம் போகும் என்று சொல்வார்கள் என்பது எனக்குத் தெரியும். அப்படிப்பட்ட பிரச்சனையில் தென் மாநிலங்களில் இருக்கும் முதலமைச்சர்களுடைய கவுன்சிலை, Chief Ministers' Council of Southern Zone என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி இம்மாதிரி பொதுப்பிரச்சனைகளைப்பற்றி விவாதிப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அண்ணா அவர்களுடைய கருத்தைப்பற்றி நண்பர் செழியன் அவர்கள் சொன்னார்கள். குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்று இதே மன்றத்தில் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு அளித்திருக்கின்ற பதிலை செழியன் அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்றே கருதுகிறேன். அதே கருத்துத்தான் நம்முடைய கருத்தும். தென் மாநிலங்களின் முதல்வர்களோடு பேசக்கூடாதா என்று கேட்டார்கள். சில முதல்வர்களோடு, மாநாடு என்ற அளவில் இல்லா



1974 ஏப்ரல் 10]

விட்டாலும் தனித்தனியே பேசுகின்ற சந்தர்ப்பத்தில் பேசியிருக்கிறேன். அவர்கள் யாரும் அவர்களுடைய மாநிலத்தில் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்குத் தயாராக இல்லை. அந்த நேரத்தில் நாம் ஒழித்துவிட்டால் அதனால் ஏற்படுகின்ற நல்ல வெற்றியை நாம் நிச்சயமாகப் பெற முடியாது.

**திரு கே. டி. கே. தங்கமணி:** சார், 19 புக்கீஸ்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். சமீபத்தில் சிந்தாதிரிப்பேட்டையில் ஒரு கலகம் நடந்தது என்றும், புக்கீஸ்களிடம் கொடுத்த பணத்திற்கு எந்த அளவிற்குத் திருப்பிப் பணம் கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுக்கவில்லை என்று புகார் சொல்லப்பட்டதே? குதிரைப் பந்தயத்தில் புக்கீஸ்களிடத்தில் பணம் கட்டி, ஆனால் கிடைக்க வேண்டிய நிலையில் பணம் கிடைக்கவில்லை என்று சண்டை நடந்தது சிந்தாதிரிப்பேட்டையில். அங்கேயிருக்கும் புக்கீஸ் மற்ற இடங்களில் இருக்கும் ரேஸ்களுக்கும் பணம் வாங்குவதாகச் சொல்லப்பட்டதே, அந்த முறையைத் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அங்கீகரிக்கப்பட்ட புக்கீஸ் முறை குதிரைப் பந்தய மைதானத்தில் அனுமதிக்கப்படுகிறது. வெளியிலே சிலர் தனியாக இந்த புக்கீஸ் முறையை வைத்துப் பணம் பெறுகின்ற நிலைமை இருக்கிறது. ஆனால் அவைகள் சென்னை மாநகர காவல் சட்டத்தின் 49-A பிரிவின்படி குற்றமாகும். அப்படி யாராவது இந்த புக்கீஸ் முறையை தனியார் செய்தால் கடுந்தண்டனைக்கு ஆளாவார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொல்லுகின்ற விவரங்களைப் பற்றி எதுவும் தெரியவில்லை. அந்த விவரங்களைத் தனியாகத் தந்தால் விசாரிக்க இயலும்.

**திரு ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்த வரியானது குறைந்துகொண்டு வருகிறது என்று சொல்கிறார்கள். இதிலே வரி ஏய்ப்பு நடப்பதாகவும் சொல்கிறார்கள். ஆகவே, அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, 'புக் மேக்கர்ஸ்' பகுதியில் கட்டப்படும் தொகைமீது கிடைத்த பெட்டிங் டாக்ஸ், 1970–71-ல் 67,47,644 ரூபாய் கிடைத்தது. 1971–72-ல்

[1974 ஏப்ரல் 10

71,57,592 ரூபாய் கிடைத்தது, பிறகு 1972-ல் நாம் இந்த புக்மேக்கர்ஸ் தேவையில்லை என்று அதை எடுத்துவிட்டோம். பிறகு 1972–73-ல் ஏற்கனவே கிடைத்த 71 இலட்சத்திற்கு மாறாக 3,46,018 ரூபாய் தான் கிடைத்தது. இந்த புக்மேக்கர்ஸெல்லாம் சென்னையைவிட்டு பெங்களூர் போன்ற குதிரைப் பந்தய இடங்களுக்குச் செல்லத் தொடங்கிவிட்டார்கள். இதன்தொடர்பாக நமக்கு 1971–72-ல் 1,18,82,822 ரூபாய் நமக்கு, இந்த அரசுக்கு வருமானமாக கிண்டியிலிருந்து கிடைத்தது. 1972–73-ல் ஏறக்குறைய 99 இலட்சம் ரூபாய் கிடைத்திருக்கிறது. இதைக் கருத்திற்கொண்டு மறுபடியும் புக்மேக்கர்ஸ்க்கு அனுமதித்திருக்கிறது. 21 சதவிகிதம் என்பது, மற்ற மாநிலங்களைவிட அதிகமாக புக்மேக்கர்ஸ்க்கு என்று வரி போட்டிருக்கிறோம் என்றாலும் அது நியாயம் என்றுதான் கருதுகிறோம்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, பொதுமக்கள் பொதுவாக குதிரைப் பந்தயத்தில் பணம் கட்டுவது குறைவதற்குக் காரணமே மொத்தத்தில் 45 சதவிகிதத்தை வரியாக எடுத்துக் கொள்கிறார்கள். மீதமுள்ள 55 சதவிகிதத்தைத்தான் திருப்பிக் கொடுக்கிறார்கள். ஆகவே, இந்திய உபகண்டத்திலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு கிண்டி ரேஸ் கிளப்பில் தான் 22½ சதவிகிதம் கமிஷன் எடுத்துக்கொள்கிறார்கள். மகாராஷ்டிரத்திலேகூட 15 சதவிகிதம்தான். பெங்களூரிலேயும் 15 சதவிகிதம் தான். எனவே அந்த அளவில் நம்முடைய மாநிலத்திலேயும் அவர்களுக்குள்ள கமிஷனை 22½ சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதமாகக் குறைப்பதற்கு நமது அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, அந்த கமிஷன் விவகாரத்தை ரேஸ் கோர்ஸைப் பார்த்துத்தான் செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் அதுபற்றி நிர்வாகிகளிடத்தில் பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து வினா எண் 803 . . .

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** தலைவரவர்களே, நான் இவ்வளவுநேரம் கையைத் தூக்கிக்கொண்டிருக்கிறேன்; கேள்வியைக் கேட்க வாய்ப்புக் கொடுக்க மாட்டேன் என்றால் என்ன செய்வது ? முக்கியமான கேள்வி. இந்தப் பக்கமே திரும்ப மாட்டேன் என்கிறீர்களே, சான்ஸ் கொடுக்கவில்லையே.



1974 ஏப்ரல் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சான்ஸ் என்றால் 20 பேர் கையைத் தூக்குகிறார்கள் என்றால் அந்த 20 பேர்களுக்கும் கொடுக்க வேண்டியிருக்கும்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** காமாட்சி, ஆறுமுகம் எல்லோரும் கையைத் தூக்கினார்கள். பார்க்க மாட்டேன் என்கிறீர்களே.

**திரு. சி. ஆறுமுகம் :** நாங்கள் எதற்காக 8½ மணிக்கே வருகிறோம். இல்லையென்றால் 12 மணிக்கு வருகிறோம்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தால் எங்களால் பேச முடியாது. டெய்லி நாங்கள் 8½ மணிக்கு எதற்காக வருகிறோம் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நிறையப் பேர்கள் கையைத் தூக்கி இருக்கிறார்கள். கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** என்னுடைய பழக்கமே சண்டைபோட்டால்தான் எதுவும் வரும்போல் இருக்கிறது.

கனம் சபாநாயகரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் குதிரைப் பந்தயத்தை மூடுவதைப்பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன பதிலைத் திருப்பிச் சொன்னார்கள். நாம் மதுவிலக்குக் கொள்கையில் ஏற்கனவே ஒரு முடிவை எடுத்தோம். அந்த முடிவு மக்களுக்குப் பாதகமாக இருக்கிறது, மக்கள் தீமையான வழிகளில் சென்று அவர்களுடைய வாழ்க்கை பாதிக்கின்றது என்று தெரிந்தவுடன் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மதுவிலக்கை மீண்டும் கொண்டு வந்து கடைகளையெல்லாம் மூடுவதற்கு முடிவு செய்திருக்கிறார்கள். 3 கோடி, 4 கோடி ரூபாய் வருவதைப்பற்றிப் பிரச்னை இல்லை. ஆனால் இந்த மாநிலத்திலுள்ள பல ஆயிரக்கணக்கான குடிமக்கள் தங்களுடைய வாழ்க்கையை அழித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா ? இதை ஏன் மூடக்கூடாது என்பதற்கு முதலமைச்சரவர்கள் பதில் சொல்வார்களா ?

[1974 ஏப்ரல் 10

இந்திய ரீதியில் சிந்திப்பது நலம் என்று கருத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு தடவை இந்த மன்றத்தில் கூறியிருக்கிறார்கள்.

**திரு. ஆ. பரந்தாமன்:** சென்னையில் குதிரைப் பந்தயம் நடக்கிற நாட்களில் தான் புக்கீஸ் இருந்து கொண்டிருக்கிறது. பந்தயம் இல்லாத நாட்களில் புக்கீஸ் எல்லாம் பெங்களூர், பம்பாய் போன்ற நகரங்களுக்கு சென்றுவிடுகிறார்கள். எனவே குதிரைப் பந்தயம் நடைபெறாத நாட்களிலும் புக்கீஸை வைத்தால் தமிழ் நாட்டிலுள்ள பணம் வேறு மாநிலங்களுக்குப் போகாமல் இருக்கும் அல்லவா? ஆகவே குதிரைப் பந்தயம் இல்லாத நாட்களிலும் சென்னை கிண்டியில் உள்ள ரேஸ் மைதானத்தில் புக்கீஸை வைத்துக்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** குதிரை நடக்கும் போது யார்மீது புக்கீஸ் இடம் பந்தயம் கட்டுவது என்று தெரியவில்லை.

**திரு. என். கே. பழனிசாமி:** இந்தக் குதிரைப் பந்தயத்தை ஆதரிப்பதற்கு முக்கிய காரணம் நல்ல குதிரைகள் இருக்க வேண்டும் என்பதற்காகவா? அப்படியானால் நடக்கக்கூடிய ஊழல்களைப் போக்க சரியானபடி ஆடிட் செய்யவும் மற்றபடி கண்ட்ரோல் செய்யவும் என்ன நடவடிக்கைகள் எடுக்கக்கூடாது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நல்ல குதிரைகளை வளர்க்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் குதிரைப் பந்தயத்தை ஊக்குவிப்பதாக ஒருமுறை அமைச்சராக இருந்த திரு. வெங்கட்ராமன் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். அதுவும் ஒரு காரணம். ஆனால் அதுவே காரணம் அல்ல.

THIRU K. M. SUBRAMANIAM: Is the Government aware that huge private betting amounting to several lakhs is going on outside and the Government is losing a lot of taxes? May I know what steps the Government is going to take to prevent this?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதைப் பற்றி திரு. கே. டி. கே. அவர்களும் எடுத்துச்சொன்னார்கள். அதுபோன்ற தகவல் ஏதாவது இருந்தால், அந்தத் தகவலை அளித்தால் ஏற்கனவே தடுப்பதற்கு சட்டம் இருக்கிறது, தடுக்க இயலும்.



1974 ஏப்ரல் 10]

**திரு. கே. பாலசுந்தரம்:** குதிரைப் பந்தயத்தைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆகவே தெரிந்துகொள்ள கேட்கிறேன். ஒரு குதிரை வாங்குவதற்கு அதன் சொந்தக்காரர்களுக்கு ஒரு லட்சம், இரண்டு லட்சம், மூன்று லட்சம் ரூபாய் என்று தரப்படுகிறதே. குதிரையை வைத்து ஓட்டுகிறவர்கள் கோடீஸ்வரர்களாக இருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கு குதிரை வாங்குவதற்கு ஒரு லட்சம், இரண்டு லட்சம் ரூபாய் என்று தருவது முறைதானா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** குதிரைப் பந்தயத்தைப் பற்றி உறுப்பினர் பாலசுந்தரம் அவர்களுக்கு எவ்வளவு அனுபவம் இருக்கிறதோ அவ்வளவு அனுபவம்தான் எனக்கும். கோப்பைகள் வழங்க அழைப்பார்கள், அப்போது செல்வதுதான். அதைத் தவிர வேறு அனுபவம் இல்லை. அந்தக் குதிரை வாங்க அரசு கடன் தருவதில்லை, ரேஸ் க்ளப் தருவதாக தகவல்.

**திரு. எம். சுரேந்திரன்:** குதிரைப் பந்தயத்தை ரத்து செய்ய முடியாததற்கு அமைச்சர் அவர்கள் இரண்டு காரணங்களைக் கூறினார்கள். ஒன்று, நம் மாநிலத்திலிருந்து பணம் வேறு மாநிலங்களுக்குப் போவதைத் தடுப்பது. இன்னொன்று, மதுவிலக்கையும் இதையும் ஒப்பிட்டுக் கூறக் கூடாது என்பது. ஆகவே தீமைகளை பக்கி வைத்துக்கொண்டு கணக்கிடுவது, பணம் வெளியே போகாமல் தடுப்பதற்காக என்ன தீமை வேண்டுமானாலும் இந்த மாநிலத்தில் நடப்பது சரியானதுதான் என்று முதல் அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இது நீண்ட நெடுங் காலமாக நம்முடைய மாநிலத்தில் மாத்திரமல்லாமல் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும் நடைபெற்றுவருகிற காரியம். கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். ஆகவே அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் மூலம் ஒரு தீர்மானத்தை அங்கு அளித்து அகில இந்திய ரீதியில் நாடாளுமன்றத்தில் இந்தத் தீமையை ஒழிப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றுவார்களேயானால் அதை முதன் முதலாக தலைவணங்கி வரவேற்கக்கூடிய முதல் மாநிலமாக நம் தமிழ் மாநிலம் இருக்கும் என்பதை மாத்திரம் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1974 ஏப்ரல் 10

**திரு. கு. காமாட்சி:** பெரும் பணக்காரர்கள் கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்க குதிரைப் பந்தயத்திற்குப் போவதாக அனுபவம் மிக்க செழியன் போன்றவர்கள் எல்லாம் சொன்னார்கள். ஆகவே அங்கு போகிறவர்களைக் கண்காணிக்க ஏதாவது விஜிலன்ஸ் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? அதல்லாமல் என்னைப் போன்று, பாலசுந்தரம் அவர்களைப் போன்றவர்கள் குதிரைப் பந்தயத்தைப் பார்த்ததில்லை. முதல் அமைச்சர் அவர்கள்கூட பார்க்கவில்லை. எனவே முதல் அமைச்சர் அவர்கள் தலைமையில் எங்களைக் கூட்டிக்கொண்டு போய் ஒரு தடவை அந்தப் பந்தயத்தைக் காண்பிக்க முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** வருகிற 14-ம் தேதி அன்று அங்கு ஒரு பரிசு அளிக்கப்பட இருக்கிறது, முதல் அமைச்சர் கோப்பை என்ற தலைப்பில் ஒரு பரிசு அளிக்கிற விழா நடக்க இருக்கிறது. அதற்கு எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் நிச்சயமாக வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், டிக்கட் வாங்கிக் கொண்டு.

**திரு. கோவை செழியன்:** அனுபவம் இருக்கிறது என்று சொன்னார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை.

*Assistance to persons affected by fire at Port Blair.*

* 803 Q.—Thiru G. R. EDMUND: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any amount has been offered to the Port Blair Fire Victims from the Chief Minister's Relief Fund in January and February 1974; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(ஆ) தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிப்பதற்காக, அந்தமான்—நிக்கோபார் தீவுகள் தலைமை ஆணையாளருக்கு 1 இலட்சம் ரூபாய் (ஒரு இலட்சம் ரூபாய் மட்டும்) 1—2—1974-ல் அனுப்பிவைக்கப்பட்டது.



1974 ஏப்ரல் 10]

**திரு. க. உரொ. எட்மண்ட்:** இதற்கு தமிழக அரசு எவ்வளவு அனுப்பியிருக்கிறது என்று சொல்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஒரு லட்சம் ரூபாய்.

**திரு. கு. பெரியசாமி:** போர்ட்ப்ளேயரில் ஏற்பட்ட தீ விபத்திற்கு தமிழக அரசு ஒரு லட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறது. அண்மையில் வட ஆர்காடு மாவட்டத்தில் நடந்த தீ விபத்திற்கு அண்டை மாநிலங்களிலிருந்தோ அல்லது வெளி நாடுகளிலிருந்தோ நமக்கு ஏதாவது உதவி வந்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அண்டை மாநிலங்களிலிருந்து வரவில்லை. அண்டை மாநிலங்களில் நடைபெறுகிற வெள்ள விபத்துக்களுக்குக்கூட தமிழக அரசு சார்பாக முதல் அமைச்சர் நிதியிலிருந்து நாம் பண உதவி அளித்திருக்கிறோம். ஆனால் பிரதமர் அவர்களிடமிருந்து ஒரு லட்சம் ரூபாய் தமிழக அரசு வேண்டுகோளுக்கிணங்க அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். முருகையன்:** அந்தமான்—நிக்கோபர் தீவிலிருந்து இந்தமாதிரி ஏதாவது உதவி அளிக்கும்படி கோரிக்கை ஏதாவது வந்ததா? அப்படி கோரிக்கை வந்திருந்தால் யாரிடமிருந்து அந்தக் கோரிக்கை வந்தது என்று அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அந்தத் தீ விபத்து ஏற்பட்டதையொட்டி அந்தமான் தீவு திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் திரு. மருதவாணன் அவர்கள் ஒரு கடிதம் எழுதினார்கள், தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஓரளவு நிவாரணம் அளிக்கவேண்டுமென்று. அந்தக் கடிதத்தையொட்டியும் அந்தமான் தீவில் ஏற்பட்ட பயங்கரமான தீ விபத்தைப்பற்றி பத்திரிகைகளில் வந்த செய்திகளையொட்டியும் முதல் அமைச்சர் நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் உடனடியாக வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், அந்தமானில் ஏற்பட்ட அந்த தீ விபத்து குறித்து வேறு மாநிலத்திலிருந்து ஏதாவது உதவி செய்யப்பட்டு இருக்கிறதா? அந்தமான் தீவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பவர் ஒருவர் மத்திய அரசில் அமைச்சராக இருக்கிறாரே, மத்திய சர்க்கார் ஏதாவது நிவாரணம் கொடுத்து இருக்கிறார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அது பற்றிய விவரங்கள் எனக்கு எதுவும் இல்லை. ஆனாலும் அந்தமானிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர் அவர்கள் உடனடியாக அங்கே சென்று அந்த மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பணியில் ஈடுபட்டார் என்ற செய்தியை நான் பத்திரிகையில் பார்த்ததுதான்.

திருப்பூர் ஒன்றியத்தின் கீழுள்ள மருந்தகங்கள்

* 804-வினா—திரு. க. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அருள்கூர்ந்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட எந்தெந்த மருந்தகங்களை 1974–75 ஆம் ஆண்டில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** நடப்பு ஆண்டில் ஒன்றும் எடுக்கப்படவில்லை.

Co-operative Rural Dispensaries

* 805 Q.—THIRU G. R. EDMUND: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to open Co-operative Rural Dispensaries in this State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) மருத்துவப் பட்டதாரிகளுக்கும் துணை மருத்துவப் பணியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கவும், மருத்துவப் பராமரிப்புப் பணிகளில் பொது மக்களும் பங்கு கொள்ள வகை செய்யவும், அரசு, 1973–74-ஆம் ஆண்டில், இந்திய அரசின் ஐந்து லட்சம் பேர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 13 கிராமப்புற கூட்டுறவு மருந்தகங்கள் திறக்கக் கருதியுள்ளது. முன்னோடித் திட்டமாக இந்த மருந்தகங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி



ஒன்றியங்களில் திறக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் 65 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மருத்துவ அதிகாரி, துணை மருத்துவப் பணியாளர்கள், பொது மக்கள் ஆகியோர் இம்மருந்தகங்கள் நடத்துவதற்காகத் தங்களுக்குள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக்கொள்ள வேண்டும். 25 சதவீதச் செலவு, கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடமிருந்து பங்குத் தொகையாக வசூலிக்கப்பட வேண்டும். எஞ்சிய 75 சதவீதத்தில் 50 சதவீதம் மானியமாகவும் 50 சதவீதம் கடனாகவும் மத்திய அரசு உதவியாக கிடைக்கும்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** தலைவர் அவர்களே, இந்த மருந்தகங்கள் எப்போது ஆரம்பிப்பதாக அரசு உத்தேசித்துள்ளது. நாள் அதிகம் கடத்தாமல் கூடிய விரைவில், அதை ஆரம்பிக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இந்தத் திட்டம் வேலை அற்றவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவது என்ற பெயரால் மக்களுடைய கூட்டுறவு அடிப்படையில் சந்தா செலுத்துகிற முறையில் உருவாகிற மருத்துவமனை திட்டமாகும். இந்தத் திட்டத்தில் கிராமத்தில் உள்ளவர்கள், ஒவ்வொரு கிராமத்தில் உள்ளவர்கள் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்துக் குறிப்பிட்டு அங்குள்ளவர்களும், ஒரு டாக்டரும், சில துணை மருத்துவப் பணியாளர்களும் சேர்ந்து கூட்டுறவு முறையில் அமைத்தால் உடனே செயல்படுத்தலாம். அதற்கு டாக்டர் முன் வரவேண்டும். நாம் நியமிக்கிற டாக்டர் அல்ல. டாக்டர் தானாகவே முன் வந்து, அவருக்குத் துணையாக மருந்து பார்மசிஸ்ட், ஆக்சிலரி நர்ஸ், மேல் நர்சிங் ஆர்டர்லி, ஹெல்ப்பர் இவர்களெல்லாம் அவர்களுக்கு உரிய ஊதியத்தை எடுத்துக்கொண்டு, அந்த சங்கத்திற்கு உறுப்பினர் சந்தா செலுத்தி அதற்கு மேல் மத்திய அரசு தரும் உதவித் தொகையும் சேர்த்து செயல்படுத்த வேண்டும். இது ஒரு விதமான கூட்டுறவு இயக்கம். தொழிலாளர் நலத் துறையால் உருவாக்கப்பட்டது. அப்படி உருவாக்கப்பட்ட அந்தத் திட்டம் அந்தப் பகுதி மக்கள் ஆர்வத்தோடு முன்வந்து நிறைவேற்ற முயற்சித்தால் வெற்றி காணலாம் என்று நினைக்கிறேன்.

[1974 ஏப்ரல் 10

## இந்திய முறை மருத்துவர்கள்

*806 வினா—திரு. எம். சுரேந்திரன் :

திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டு வைத்தியர்களைப் பயன்படுத்தும் முறையில் மத்திய அரசாங்கம் திட்டம் ஒன்றைத் தயாரித்து இந்த அரசுக்கு அனுப்பியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன ?

(உ) அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) & (உ) ஒரு விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

## இந்திய முறை மருத்துவ மனைகள்

*807 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லா நகராட்சிகளிலும் இந்திய முறை மருத்துவ மனைகளைத் தொடங்கச் செய்வதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது குறித்த விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நகராட்சிகளில் தற்பொழுது 63 இந்திய மருத்துவ மருந்தகங்கள் இயங்கி வருகின்றன. எங்கெங்கெல்லாம் இயலுமோ அந்த இடத்தில் சித்த வைத்திய மருந்தகங்களைத் திறக்க எல்லா நகராட்சி மன்றங்களுக்கும் வேண்டுகோள் வழங்குமாறு இந்திய மருத்துவ இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

---

@ 297-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1974 ஏப்ரல் 10]

**திரு. என். கே. பழனிசாமி :** சார், மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்கு இந்தியன் மெடிசன் டாக்டர்கள் கிராமப்புறத்தில் பணி செய்வதற்கு ஒரு திட்டத்தை ஏற்பாடு செய்து அனுப்பியிருந்தார்கள். அதை ஒப்புக்கொள்ளாமல் வேறு ஏற்பாடு, பைலட் ஸ்கீமாக ஏற்பாடு செய்து இருக்கிறார்களே, அந்தத் திட்டத்தை மத்திய சர்க்கார் ஒப்புக்கொள்ளவில்லையா ? மத்திய அரசின் மாற்றுத் திட்டம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, தொடர்ந்து 2–3 ஆண்டுகளாக ஒரு விரிவான கிராமப்புற மருத்துவப் பணித் திட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்ற முயற்சி ஆலோசனையில் இருந்தது, அந்த ஆலோசனை மாநிலத்தில் 4 ஒன்றியங்களில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். 4 பிளாக்கில் ஒரு வடிவு எடுத்து, கடைசியில் அந்த 4 பிளாக்கில்—375 பிளாக்கில் 4 பிளாக்—அதை இரண்டு டிஸ்டிரிக்ட்டாக பிரித்து நடத்துவது என்று மத்திய அரசு சொல்லியது. அதை நிறைவேற்றுவதற்கு, எப்படி நிறைவேற்றலாம் என்பதற்கு தமிழக அரசின் சார்பாக முறையாக திட்டம் போட்டு அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். அந்தத் திட்டத்தைப் பார்த்ததற்குப் பின்னாலே, இந்தியா முழுமைக்கும் சேர்த்து—காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையில் உள்ள—30 சப்-சென்டர்களில் ஒரு ஒன்றியத்தில் 8 சப்-சென்டர்களாக வைத்து இந்தியா முழுமைக்கும்—30 துணை நிலையம் என்ற யோசனையை வைத்தது. இதைப் பார்த்தால் தமிழ் நாட்டில் இந்த கேஸ் தேறுது என்ற நிலையில் உள்ளதாகும்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், நாட்டு வைத்தியப் பிரிவை விரிவுபடுத்தி, அதிலே அந்தப் பழமைக் காலத்திலிருந்து வந்து கொண்டிருக்கும் வைத்திய முறை நிலைமைகளை மேம்படுத்துவதற்கான ரீதியில் அந்தத் திட்டம் அமைவது பற்றி மத்திய அரசுக்கு மாநில அரசு ஆலோசனை கூறியிருக்கிறதா ? அப்படியிருக்கும் இந்த நாட்டு வைத்தியர்களை சில பஞ்சாயத்து மருந்தகங்களில் நியமிக்கப்பட்டு, குறைந்த சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறதே, அந்த நிலைமையை மாற்றுவதற்கு இந்த அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, மருத்துவ வசதி கொடுக்கிற நேரங்களில் நாட்டு வைத்திய முறையை நல்ல விதத்தில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில்

[1974 எப்ரல் 10

கிராமப்புறங்களில் மருத்துவ வசதி ஏற்படுத்தும்போது அவர்களை நியமிப்பது என்று அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது. அது அவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை. அந்த உதவித் தொகை (ஹானரேரியம்) வைத்துக் கொண்டு அவர்கள் மற்ற நேரத்தில் தொழில் நடத்தலாம். அவர்களுக்கு அதிகக் கட்டுப்பாடு கிடையாது. அவர்களுடைய தொழிலை அவர்கள் நடத்திக் கொண்டு, ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அந்த மருத்துவ மனையில் பணியாற்றுவதற்கு ஒரு மாதத்திற்கு ரூ. 150 உதவி தொகையாகத் தரப்படுகிறது. அது சம்பளம் அல்ல. அரசாங்கம் இந்த இந்திய மருத்துவத்தை வளர்ப்பதற்காக, இந்திய மருத்துவத் துறையில் பட்டப்படிப்பு படித்தவர்களை நகராட்சிகள், திருக்கோவில்கள் மருந்தகங்களில் நியமிப்பது என்று ஒரு பக்கத்தில் செய்து கொண்டிருக்கிறோம். இன்னொரு பக்கத்தில், மாவட்ட மருத்துவ மனையில் இதற்கென ஒரு பிரிவை அமைத்து இருக்கிறோம். அதைத் தொடர்ந்து வட்ட மருத்துவ மனைகளில் ஆண்டு ஒன்றுக்கு 10 எடுத்துக்கொள்ள வேண்டுமென்று யோசனை இருக்கிறது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவரவர்களே, சில கிராமங்களில் நல்ல சிறப்புடன் நாட்டு மருத்துவ முறையைப் பின்பற்றி வரும் ஹக்கீம் போன்றோர் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் எந்தவிதமான சான்றிதழோ சர்ட்டிபிகேட்டோ இல்லை. இருந்தாலும், மக்கள் அவர்களிடத்தில் நம்பிக்கை வைத்துச் செல்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஒரு சோதனை நடத்தி, அரசு அவர்களுக்கு டிப்ளமா அல்லது சான்றிதழ் கொடுக்க வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அப்படி நல்ல மக்கள் நம்பிக்கை பெற்று சிறந்த முறையில் மருத்துவத் தொழிலைக் கொண்டிருக்கும் ஹக்கீம் போன்றவர்களுக்கு ஒரு சோதனை வைப்பது நல்லதல்ல. மக்களின் நம்பிக்கைக்கு மாறாக, அவர்களுக்குச் சோதனை வைத்தால், அது பலன் அளிக்காது. அந்த நம்பிக்கையில் பெற்று இருக்கும் வெற்றியை தமிழக அரசு பாராட்டும்.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் சொன்ன ரூ. 150 ஊதியம் நாட்டு வைத்தியர்களுக்குப் போதாது என்று சொல்லப்படுகிறது. அதைக் குறைந்த பட்சம்



1974 எப்ரல் 10]

ரூ. 200 ஆக்கினால் நல்லது. ஆங்கில வைத்திய முறையில் குணமாகாத வாதம், பக்க வாதம் போன்ற நோய்கள், நாட்டு வைத்திய முறையில் குணமாகின்றன. ஆகவே, அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் ரூ. 200 அரசு அளிக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சுவரை வைத்து சித்திரம் எழுத வேண்டும் என்பதில் எனக்கு மிகுந்த அழுத்தமான கருத்து உண்டு. இந்த மருத்துவத்தை ஆதரிப்பதற்குக் கூட எவையெவை முதலில் செய்ய வேண்டுமென்பதில் முறையான எண்ணம் கொள்ள நான் தவறவில்லை. அவர்களுக்கு சரியான அளவு சித்த வைத்திய மருந்துகள் வழங்கப்படவில்லை. அவர்களே மருந்து தயாரித்து வைத்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். மருந்துகள் வழங்காமல் ஊதியம் கொடுப்பதில் பயன் இல்லை. ஆதலால் மருந்து கொடுத்து அவர்களுடைய தொழிலை பாதிக்காத அளவு செய்ய வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டுமென்பது ஆலோசனையில் இருக்கிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்தின் பைலட் ஸ்கீம்படி இந்தியாவில் இருக்கும் 30 சப்-சென்டர்களில் தான் ஆரம்பிப்பதாக முடிவு எடுத்திருப்பார்களானால், அது ஒரு மாநிலத்திற்கு இரண்டு என்ற அளவிலே கூட வராத நிலை ஏற்படும். ஆகவே, நம்முடைய மாநிலத்தின் தேவையை எடுத்துக்கூறி, வற்புறுத்தி, இங்கே இருக்கக்கூடிய ஜனத்தொகையின் அடிப்படையில், கிராம ஜனத்தொகையின் அடிப்படையில் பிரைமரி ஹெல்த் சென்டர்களில் ஆரம்பிக்க வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசை வற்புறுத்த முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, திரும்பத் திரும்ப இரண்டு ஆண்டு காலம் வற்புறுத்திப் பார்த்து விட்டோம். அங்கே உள்ள நலத்துறை அமைச்சருக்கு இப்படி ஒரு ஆலோசனை வழங்கப்பட்டது. முதலில் திட்டக் குழுவிலே வழங்கப்பட்டது. அதற்கான திட்டத்தையும் போட்ட பிறகு, திட்டக் குழுவில் பணம் இல்லாததால் திட்டத்தைச் சுருக்கிக் கொண்டு விட்டார்கள். அந்த திட்டக் குழு எந்த அளவுக்கு அந்தத் திட்டத்தை

நிறைவேற்றுவதற்குப் பணம் ஒதுக்குகிறார்களோ அந்த அளவுக்குத் தான் செய்ய முடியும். பயன் தக்க வகையில் இல்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9.30)

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, இந்த 'நாஷனல் ஹெல்த் ஸ்கீம் ஃபார் ரூரல் ஏரியாஸ்' என்ற திட்டம் மத்திய அரசினால் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும், மத்திய அமைச்சர் அவர்கள் சொல்வது போல இந்தத் திட்டம் மாண்புமிகு பிழைக்காது என்பது உண்மையாக இருந்தாலும், தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இந்திய மருத்துவ முறை ஒரு புத்துயிர் பெற்றிருக்கிறது. தமிழ் நாட்டில் அந்தத் திட்டத்தை உற்சாகப் படுத்தி, அந்தத் திட்டம் நல்ல வெற்றிகரமாக நடப்பதற்கு, இந்த நாட்டில் இந்திய மருத்துவ முறை வளர்ச்சி அடைவதற்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏதாவது பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறதா? அப்படி ஒதுக்கப்படாவிட்டால், இந்தத் திட்டத்திற்காக இந்திய மருத்துவ முறையின் வளர்ச்சிக்காக தனியாக பணத்தைத் தர வேண்டும் என்று மத்திய அரசை நம்முடைய அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய மருத்துவத்திற்கு, அதாவது ஆயுர்வேதம், யூனானி, சித்த மருத்துவம் ஆகியவை களுக்கு என்று மொத்தமாக ஒரு தொகை ஒதுக்கப்பட்டு, அதன் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்பட்டது. அதே முறையில் ஓரளவுக்கு தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படி ஒதுக்கியிருப்பதும் கூட, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கொடுத்ததைப் போல அந்த அளவுக்கு ஒதுக்கவில்லை நிதி நெருக்கடியின் காரணமாக. அப்படி ஒதுக்கியிருக்கிற அளவில் தமிழ் நாட்டில் சித்த மருத்துவ முறையில் ஒரு கல்லூரி இருக்கிற காரணத்தினால் அதற்குள்ள படிப்புக்கு ஆகிற செலவை மாத்திரம் ஏற்றுக்கொள்கிற அளவுக்கு நிலைமை இருக்கிறது. ஓரளவுக்கு குறை இருக்கிறது. வற்புறுத்திக் கேட்குமாறு தெரிவித்திருக்கிறோம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** சித்தம், ஆயுர்வேதம், யூனானி முறையில் தேர்ச்சி பெற்றவர்கள், சேவை பெறுவதற்கு மத்திய அரசின் திட்ட **விவர** அறிக்கையைப் பற்றி மாண்புமிகு **அமைச்சர்**



சொன்னார்கள். இப்பொழுது ஆங்கில முறையில் தேர்ச்சி பெற்றிருக்கிற நிபுணர்கள் வெளி நாடுகளுக்குச் சென்று கூட சேவை செய்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இந்திய மருத்துவ முறையில் மிகவும் நிபுணத்துவம் பெற்றவர்கள் சேவை புரிந்தவர்களையும் வெளி நாடுகளில் மிகவும் அதிகமாக விரும்புகிறார்கள், குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில். அவர்களுக்கு இங்கே நல்ல பயிற்சி கொடுத்து, அங்கே அனுப்புவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த அரசு வற்புறுத்தி வேண்டிய முயற்சியை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு ஏராளமான ஆலோசனைகள் இருக்கின்றன. எதையும் நிறைவேற்றுவதற்கான ஆற்றல் இல்லை. இரண்டுக்குமிடையே திரும்பத் திரும்ப ஆலோசனை சொல்வது என்பது தேவைப்படாத வழக்குகளில் வக்கீல் ஆஜராவது போல்தான்.

**திரு. கோவை செழியன் :** தமிழ் வைத்தியம் உலகத்தில் சிறந்த மருந்துகளைக் கொண்ட முறை என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். கிராமங்களில் இந்த நாட்டு வைத்தியர்கள் போர்டு போட்டுக்கொண்டு ஊசி போடுவது, இங்கிலீஷ் மருந்துகளைத் தருவது போன்ற நிலைமைகள் இருக்கின்றன. இன்னும் சில பேர்கள் பத்திரிகையில் விளம்பரப் படுத்தி, சிட்டுக்குருவி லேகியம், தாதுபுஷ்டி லேகியம் என்று சொல்லி மக்களை ஏமாற்றுகிறார்கள். அது இல்லாமல் அரசாங்கமே ஒரு ரிஸர்ச் சென்டர் ஏற்படுத்த வேண்டும். கான்ஸர், பிளட் பிரஷர் ஆகியவைகளுக்கு தமிழ் மருந்துகள் பயன்படுகின்றன என்று சொல்கிறார்கள்—நம்முடைய தலைமை ஆஸ்பத்திரியில் கூட டாக்டர் ராமச்சந்திரா இதுபற்றி ஆராய்ச்சி செய்வதாகச் சொல்லுகிறார்கள்—அதற்கென்று பணம் ஒதுக்கி தமிழ் வல்லுநர்கள், கெமிஸ்ட்ரி தெரிந்தவர்கள், பாட்டனி தெரிந்தவர்கள், இன்னும் மற்றும் விஞ்ஞானிகள் ஆகியோர்களைப் போட்டு இதை மாடர்னைஸ் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** சித்த மருத்துவத்தினுடைய உண்மையான பெருமை உலகத்திற்குத் தெரிய வேண்டுமானால் அந்த சித்த மருத்துவ முறையில் ஈடுபட்டுள்ளவர்கள் அதன் பெயரால் தவறு செய்வதற்கு இடம் இருக்கக்கூடாது என்பதைப் பற்றி சித்த மருத்துவ ஆலோசனைக் குழுவில் அவ்வப்பொழுது பேசப்பட்டிருக்கிறது. அதுபற்றி விளம்பரம் செய்வதிலே மருத்துவ முறையின் கண்ணியத்துக்கு மாறாக விளம்பரம் செய்வது நிறுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனால் அலோபதி முறையில் இருப்பதுபோல ஒரு ஸ்டாண்டர்டைஸ்டு மெடிஸின் என்ற முறையில் ஒரு பெரிய கம்பெனி தயாரித்து மருந்துகளைக் கொடுப்பது போல, அந்த அடிப்படையில் சித்த மருத்துவ முறை வளராத காரணத்தினால் ஓரளவுக்கு விளம்பரம் இருந்தால் தான் சித்த மருத்துவ முறையைப் பற்றி மக்கள் புரிந்து கொள்வார்கள்.

இரண்டுக்கும் இடையே உள்ள வேற்றுமைகளை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மற்றொன்று சித்த மருத்துவத்தைப் பற்றி அலோபதித் துறையில் ஆற்றல் பெற்றவர்கள் ஆராய்ந்து இன்னென்ன தகுதி உடையது என்பதைச் சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் அப்படி ஆராய்ந்து சொல்வதை பல நேரங்களில் சித்த மருத்துவர்கள் ஒத்துக் கொள்வதில்லை. சில மருந்துகள் இன்னென்ன பலன்களைத் தருகின்றன என்று சித்த மருத்துவர்கள் சொல்கிறார்கள். அதை ஆராய்ந்து பார்த்து குறிப்பிட்ட பலன் அதிலே காணப்படவில்லை என்று அலோபதி வைத்தியர்கள் சொல்கிறார்கள். அதற்கு சித்த மருத்துவர்கள் மறுப்பு தெரிவிக்கிறார்கள்.

இன்னும் சில ஆண்டு காலத்திற்கு சித்த மருத்துவத்தில் ஆற்றல் பெற்றவர்கள் அலோபதித் துறையில் ஆற்றல் பெற வேண்டும். அல்லது அலோபதித் துறையில் ஆற்றல் பெற்றவர்கள் எம்.டி. படித்தவர்கள், அதற்குப் பின்னர் சித்த மருத்துவத்தில் தன்னுடைய ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் சித்த வைத்திய முறைக்கு நல்ல எதிர்காலம் இருக்கும். இன்றைய தினம் இந்த ஆராய்ச்சித் துறையில் இப்படிப்பட்ட கருத்து மாறுபாடுகள் இருந்துகொண்டிருக்கின்றன. இருந்தாலும், முடிந்த அளவுக்கு எல்லா வகையிலும் இந்த ஆராய்ச்சி வளருவதற்கு அரசு ஒத்துழைக்கும்.



1974 ஏப்ரல் 10]

**திரு. மா. வே. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, எல்லா நகராட்சிகளிலும், ஒன்று இந்திய முறை அடிப்படையிலாவது அல்லது ஆங்கில முறை அடிப்படையிலாவது மருத்துவ மனையை தொடங்குகின்ற அளவுக்கு மத்திய அரசை வற்புறுத்தி, மாநில அரசு நிதி பெற்று ஆவன செய்யுமா? மத்திய அரசு மறுத்தாலும், மாநில அரசு நகராட்சிகளில் ஒரு மருத்துவமனையைத் துவங்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, நகராட்சி அங்கு இருப்பதே அதற்கு அங்கு ஆட்சி நடத்துவதற்கு ஆற்றல் இருக்கிறது என்பது தான் பொருள். அப்படி ஒரு ஆட்சியை நடத்துகிறபொழுது, இன்னொரு ஆட்சியில் உள்ளவர்களை இங்கே வந்து மருத்துவ மனை துவங்க வேண்டும் என்று கேட்பது நகராட்சி மன்றத் தலைவருக்கு அவ்வளவு பெருமையானது அல்ல.

### *Work Centres for out-of-School Youths*

* 726 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Central Government have proposed any scheme for establishing Work Centres for training out-of-School Youths in this State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (அ) ஆம்.

(இ) இத் திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள், பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் இளைஞர்களுக்குச் சொந்த தொழிலைத் தொடங்குவதற்கு வாய்ப்புகளை அளிக்கும் அடிப் படையில், அவர்கள் தாமாகவே ஓர் உற்பத்தித் தொழில் ஏற்படுத் திக்கொள்வதற்கு உதவுதலே இங்கு அளிக்கப்படும் பயிற்சியின் நோக்கமாகும். இதற்கு மத்திய அரசின் ஒப்புதல் வந்தால் நாம் இதை ஆரம்பிப்பதற்கு இயலும்.

**திரு. ஆ. பரந்தாமன்:** இந்த ஜாப் ஓரியன்டேஷன் ஸ்கீம் மத்திய அரசினால் கொண்டுவரப்படுகிறது என்று சொல்கிறார்கள். இதற்கு எவ்வளவு செலவு ஆகிறது, எப்பொழுது தொடங்க இருக்கிறார்கள் என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** மத்திய அரசிடத்தி
லிருந்து வந்த கடிதத்திற்கு பதில் எழுதியிருக்கிறோம். அது
எவ்வளவு விரைவில் வருகிறதோ அவ்வளவு விரைவில் மாநில
அரசும், மத்திய அரசும் சேர்ந்து அந்தத் திட்டத்தை நடை
முறைக்குக் கொண்டு வரும்.

*Watar supply from Kadampakkulam.*

*808 Q.—THIRU G. R. EDMUND: Will the Hon. the
Minister for Public Works be pleased to state whether any
representation, for the formation of a separate supply channel for
the 12 tanks under the Kadampakkulam tank in Tiruchendur taluk,
has been received by the Government from the agriculturists of
that area?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அண்மையில் இல்லை.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** அண்மையில் வரவில்லை என்ற
பதிலிலிருந்து நீண்ட நாட்களுக்கு முன்னால் தொகுதி மக்களிட
மிருந்து அப்படிப்பட்ட கோரிக்கை வந்திருக்கிறது என்பதை
மறைமுகமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் அமைச்சர் அவர்கள்.
நீண்ட காலமாக இந்தத் திட்டம் வற்புறுத்தி வரப்படுகிற
காரணத்தினாலும் அது இந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு
மிகப் பலன் உள்ள திட்டமாக இருப்பதின் காரணத்தினாலும்,
இந்தத் திட்டத்தை கூடிய விரைவில் நிறைவேற்றினால் உணவு
உற்பத்தியை நாம் அதிகப்படுத்தி மிக முன்னேறிச் செல்லலாம்
என்ற காரணத்தினாலும், அரசு இந்தத் திட்டத்தை கூடிய விரை
விலே நிறைவேற்றுவதற்கு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கடம்பாக்குளத்திற்கு
கீழே உள்ள ஆயக்கட்டுதார்களுக்கு முன் உரிமை இருக்கிறது.
குளப்பாசிதார்களுக்கு பின் உரிமை தான். முன் உரிமை பெற்ற
கடம்பாக்குள ஆயக்கட்டுதார்கள் பாசன வசதியில் எந்த வகை
யிலும் பாதகம் வாராத வகையில் ஏற்பாடு செய்து—கடம்பாக்
குளத்து ஆயக்கட்டுதார்கள் தங்கள் ஆட்சேபனையை தெரிவித்
திருக்கிறார்கள் என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது—பல
ஆண்டுகளாக இது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மை
தான்—கீழே உள்ள பாசனதார்களுக்கு பாதகம் ஏற்படாமல் பூமி
மட்டத்தைக் குறைக்காமல் 4 மடைகளைப் புதிதாக அமைக்கலாம்
என்று தலைமைப் பொறியாளர் ஆலோசனை தெரிவித்திருக்கிறார்கள்.



அதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அதை நடத்தவேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கிறது. அதற்கு ரூ. 3.685 லட்சம் அளவில் தொழில் நுட்ப ஒப்புதலுக்கு தலைமைப் பொறியாளருக்குச் சென்று, அவரும் ஒப்புதல் அளித்துவிட்டார்கள். இந்தத் திட்ட வேலை கூடிய சீக்கிரம் ஆரம்பிக்கும்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** கடம்பாக்குளத்து நேரடி விவசாயிகள், ஆயக்கட்டுதார்கள் எதிர்க்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே உள்ள ஆட்சே பணையை ஒழுங்கான முறையில் சமாதனப்படுத்தி, அதற்கு ஒப்புதல் தருவதற்கு ஏற்பாடு செய்தால் இந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அவர்களுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் கீழே இருக்கிற குளத்துக்கு நீர்ப்பாசனம் செய்வதற்குத் தான் புதிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் புதிய திட்டத்தின் கீழ் சீக்கிரம் வேலை துவங்கும்.

*Water supply from Manimuthar System.*

*809. Q.—THIRU T. GANAPATHY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to cut direct channels to each ayacut tank under the Manimuthar System; and

(*b*) if so, what is the stage and when it will be sanctioned and work commenced?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. டி. கணபதி:** நாங்குனேரி வட்டத்தில் மணிமுத்தாறு பாசனத்தின் கீழ் பல குளங்கள் இருக்கின்றன. அந்தக் குளங் களுக்கு ஒன்று விட்டு ஒன்று தண்ணீர் விட்டால் மூன்று குளங்கள் இருந்தால் முதல் குளத்துக்கு மாத்திரம் தான் தண்ணீர் விடப் படுகிறது. எல்லாக் குளங்களுக்கும் தண்ணீர் கொடுக்க மாவட்ட அளவில் சொல்லி, அங்குள்ள என்ஜீனியர்கள் ஒரு தனிக்கால் திட்டத்தை வகுத்து, அதற்கான மதிப்பீட்டையும் அனுப்பி

யிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியில்லை என்றால், தனித் தனி கால்வாய் வெட்டி எல்லா குளங்களுக்கும் தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மணிமுத்தாற்றின் கீழ் இருக்கும் பல குளங்கள் ஒன்றுக்கொன்று வெகு தொலைவில் இருப்பதால் வாய்க்காலை வெட்ட இயலாது என்ற தகவல் இருக்கிறது. ஆயினும் எக்சிக்யூடிவ் எஞ்சினியர் அவர்கள் இதைப் பற்றித் தொழில் நுட்பத் துறையின் மூலம் ஏதேனும் செய்ய முடியுமா என்று ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். அதைப் பற்றி அரசுக்குத் தகவல் வந்த பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** மாண்புமிகு கணபதி நாடார் அவர்கள் கோரிக்கை ரொம்ப நியாயமான கோரிக்கை. மணிமுத்தாறு திட்டத்தின்கீழ் சில குளங்கள் வெகு தொலைவில் இருக்கிறது என்பது உண்மைதான். என்னுடைய தொகுதியிலும் அப்படி சில குளங்கள் இருக்கின்றன. ஆகவே, நல்ல மழை பெய்யக் கூடிய காலத்தில் தண்ணீர் அதிகமாக வரும்போது இப்போதுள்ள குளங்களுக்கும் மணிமுத்தாறு திட்டத்திற்கும் இடையிலே ஒரு பெரிய குளத்தை வெட்டி தண்ணீரைத் தேக்கி மற்றக் குளங்களுக்குத் தண்ணீர் கொடுக்க நடவடிக்கை எடுப்பது பற்றி யோசிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இது வாய்க்காலை வெட்டுவது பற்றிய கேள்வி. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இப்போது குளம் வெட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அது பற்றித் தனியாகக் கேள்விப் போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்கள் 810, 811, 812 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.



*Vigilance Cell in Slum Clearance Board.*

* 772 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleasad to state—

(a) whether it is a fact that a Vigilance Cell has been set up at the Slum Clearance Board; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) குடிசைப் பகுதி மாற்று திட்டத்தினால் பயனடைந்த குடிசைவாசிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட குடியிருப்புகளை அதிக விலைக்கு விற்கின்றனர் எனவும், குடியிருப்புகளையும், சீர்செய்யப்பட்ட மனைகளையும் வாடகைக்கு விடுகின்றனர் எனவும் குடிசைப் பகுதி மாற்று வாரியம் நடத்திய பரிசீலனையின் மூலம் தெரிய வந்தது. இத்தகைய தவறான நடவடிக்கைகளை அறவே நீக்குவதற்காக குடிசைப்பகுதி மாற்று வாரியத்தில் ஒரு கண்காணிப்புக் குழு கீழ்க்கண்ட பணியாளர் தொகுதியுடன் பணியாற்றி வருகிறது:—

| | |
|---|---|
| (1) கண்காணிப்பு அதிகாரி என்ற பெயரில் வட்ட ஆட்சியர். | ஒன்று. |
| (2) துணை வட்ட ஆட்சியர்கள். | இரண்டு. |
| (3) வருவாய் ஆய்வாளர்கள். | ஆறு. |
| (4) உதவியாளர்கள். | இரண்டு. |
| (5) இளநிலை உதவியாளர்கள். | மூன்று. |
| (6) தட்டச்சர். | ஒன்று. |
| (7) பதிவெழுத்தர். | ஒன்று. |
| (8) கடைநிலை ஊழியர்கள். | ஐந்து. |

**திரு. நா. வீராசாமி:** இந்தக் கண்காணிப்புப் பிரிவு வீடுகளை அதிக வாடகைக்கு விட்டு விடுகிறார்களா என்பதைக் கண்காணிக்கிறது என்று சொன்னார்கள். சென்னை நகரத்தில் புதிய குடிசைகள் வருவதாகவும், அது பற்றி குடிசை மாற்று வாரியம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் சமீபத்தில் செய்தி வந்தது. அந்த வேலையையும் இந்தக் கண்காணிப்புக் குழு செய்கிறதா? இல்லையென்றால் இப்போது எத்தனை குடிசைகள் இருக்கிறதோ

அவ்வளவு பேருக்கும் அடையாள கார்டு கொடுத்து மேலும் புதிதாக குடிசைகள் ஏற்படாமல் இருக்க இந்தக் கண்காணிப்புப் பிரிவு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** சென்னை நகரத்தைப் பொறுத்தவரை இந்தக் கண்காணிப்புக் குழு நிறுவப்பட்டிருக் கிறது. இந்தக் கண்காணிப்புக் குழு புதிய குடிசைகள் சென்னை நகரில் வராத அளவுக்கும் பார்த்துக் கொள்ளும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்தக் கண்காணிப்புக் குழு ஏதேனும் கேஸ்கள் பிடித்திருக்கிறதா ? அதன் விவரங்கள் என்ன ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** நிறைய கேஸ்களைப் பிடித்திருக்கிறார்கள். தாண்டவராய சத்திரம் திட்டப் பகுதியில் இந்தக் குடியிருப்புகளைத் தவறாகப் பயன்படுத்தியதற்காக 13 பேர் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். அனுமதியின்றிக் குடியிருந்த 6 நபர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். குடிசை மாற்று வாரியப் பகுதியில் 8 நபர்கள் வேறு பெயர்களில் குடியிருந்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டு அவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நொச்சி நகரில் இவ்வாறு தவறு செய்த 10 பேர்கள் கண்டு பிடிக்கப்பட்டு 21-7-73, 15-10-73-ல் வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். நொச்சிக் குப்பத்தில் 7 பேர் அனுமதியின்றி குடியிருந்தது கண்டு பிடிக்கப்பட்டு 21-2-74-ல் வெளியேற்றப்பட் டிருக்கிறார்கள். விசாலாட்சி அம்மாள் குடியிருப்பில் 13 பேர் கண்டு பிடிக்கப்பட்டு 3-9-1973, 10-9-1973-ல் வெளியேற்றப்பட் டிருக்கிறார்கள். வ.உ.சி. நகரில் 17 பேர் கண்டு பிடிக்கப்பட்டு 12-12-1973-ல் ஆறு பேர் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். மீதி உள்ளவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கலைஞர் சாலை மேற்குக் குடியிருப்பில் 33 பேர் கண்டு பிடிக்கப்பட்டு 11 நபர்கள் 1, 19, 20, 21 நவம்பர் 1973 ஆகிய தேதிகளில் வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். மீதி உள்ளவர்களை வெளி யேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விருகம்பாக்கத்தில் 40 பேர் கண்டு பிடிக்கப்பட்டு அவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கோட்டூர்புரக் குடியிருப்பில் 200 பேர் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் நவம்பர் மாதம் 9, 10, 17, 18 ஆகிய தேதிகளில் வெளியேற்றப்பட்டு விட்டார்கள். வெங்கடாபுரம் குடியிருப்பில் 38 பேர் கண்டு பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்



பட்டு வருகிறது. கூவம் ஆற்று ஓரத்தில் மெமோரியல் அருகில் 90 குடிசைகள் புதிதாகத் தோன்றியிருக்கின்றன. அவை அகற்றப்பட்டிருக்கின்றன. கூட்டுறவுக் கட்டடத்தின் அருகில் 60 குடிசைகள் புதிதாகப் போடப்பட்டன. அவர்கள் வெளியேற்றப் பட்டார்கள்.

**திரு. வை. பாலசுந்தரம் :** குடிசைமாற்று திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிற வீடுகளில் ஒரு குடும்பத்தில் இத்தனை நபர்கள் தான் இருக்கலாம் என்று வரையறுக்கப் பட்டிருக்கிறதா ? ஒரு குடும்பத்தில் 16 பேர் கூட இருக்கிறார்கள். அப்படி இருக்கும் நேரத்தில்தான் இப்படிப்பட்ட சங்கடங்கள் வருகின்றன. ஆகவே, பெரிய குடும்பங்களாக இருக்கக்கூடிய நிலையில் தனிச் சலுகைகள் வழங்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** ஏற்கனவே குடிசைகளில் இருந்தவர்களுக்கு—ஒரு குடிசையில் இருந்தவருக்கு ஒரு வீடு என்ற முறையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தவறு நடப்பது எப்படி என்றால் அவர்கள் வேறு எங்காவது குடிசை போட்டுக் கொண்டு அவர்களுக்குக் கொடுத்த வீட்டை வாட கைக்கு விட்டு விடுகிறார்கள். அப்படி வாடகை வாங்கி ஜீவனம் செய்யக்கூடியவர்களைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கத்தான் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** கண்காணிப்புக் குழு தவறுதலாக யாருக்காவது வீடு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் அதையும் கண்காணிப்பதாகச் சொன்னார்கள். அதுமாதிரி குடிசையில் இருப்பவர்கள் மனுச் செய்திருந்தும் கூட வேறு சிலருக்கு குடிசை மாற்று வாரியத்திலிருந்து இடம் கொடுக்கப்படுகிறது. ஆகவே, ஏற்கனவே குடிசையிலிருந்தவர்களுக்கு வீடு கிடைக்க வில்லை. அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அந்தக் குடிசை மாற்று வாரியப் பகுதிகளில் ஏற்கனவே குடிசைகளில் யார் இருந்தார் களோ அவர்களுக்குத்தான் முதலில் கொடுக்கப்படுகிறது. அங்கு தேவையான குடியிருப்புகளை கொஞ்சம் அதிகமான வீடுகளைக் கட்டியிருந்தால் 250 ரூபாய்க்கு கீழ் சம்பளம் வாங்குகின்ற கடைநிலை ஊழியர்களுக்கு தரப்படுகிறது. அதைத் தவிர புதிதாக யாருக்கும் கொடுக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

[1974 ஏப்ரல் 10

**திரு. கே. என். குமாரசாமி:** ஏற்கனவே குடிசைகளில் வாழ்ந்து வந்தவர்களுக்கு அடையாள கார்டுகள் வைத்திருப்ப வர்களுக்கு இன்னும் வீடு கொடுக்கப்படவில்லை. வீடு கொடுக்கும் போது 500 ரூபாய் ப்ரீமியம் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த ஏழை மக்கள் எப்படி 500 ரூபாய் கட்ட முடியும்? இது சம்பந்தமாக புகார் குடிசை மாற்று வாரியத்திற்கு வந்து அரசு அதுபற்றி நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** 500 ரூபாய் ப்ரீமியம் கட்டச் சொல்வது எதற்காக என்று தெரியவில்லை. அப்படிப்பட்ட புகார்கள் இதுவரை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப் படவில்லை. அதுபற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். கார்டுகள் வைத்திருப்ப வர்களுக்கு வீடுகள் இதுவரை கொடுக்கப்படவில்லை என்ற புகார் களும் இதுவரை வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனக்கு அந்தத் தகவல்களை விவரமாகத் தருவார்களேயானால் மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

Dr. H. V. HANDE : Sir, may I know whether it is not possible for the Government to regularise these irregularities, since it is only the poor persons who have fortunately or unfortunately got into these places.

மனிதாபிமான உணர்ச்சியோடு அவர்களை அகற்றாமல் இருக்க அரசாங்கத்தால் முடியாதா? ஏற்கனவே 6 மாதம் 1 வருஷம் என்று இருந்து விட்டவர்கள் எங்கே போவது என்று தெரியாது தவிக்கிறார்கள். ஆகவே, இதற்கு சரியான முறையில் திட்டம் வகுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தவறுகளை முறைப்படுத்த வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்களா என்று தெரியவில்லை. ஏற்கனவே குடிசைகளில் இருந்தவர்களை புதுக் குடியிருப்புக்கு மாற்றுகிறோம். அவர்கள் பண வருவாய்க்காக மற்றவர்களுக்கு விட்டு விட்டுப் போகிறார்கள். அதைக் கண்டு பிடிக்க 3, 4 மாதங்கள் ஆகிவிடுகின்றன. அப்படிக் கண்டு பிடிக்கப் பட்ட பிறகு அவர்களை வெளியேற்றாமல் இருப்பது சாத்தியமல்ல. இதை நாம் அனுமதித்தால் அநேகமாக 70, 80 சதவிகிதத்தினர் மற்றவர்களுக்கு வாடகைக்கு விட்டு விட்டு திரும்பவும் புதுக் குடிசைகள்போட ஆரம்பித்துவிடுவார்கள். அப்படிச் செய்தால்



1974 ஏப்ரல் 10]

இந்தத் தத்துவமே அடிபட்டு நாசமாகிவிடும். அப்படிப்பட்ட எண்ணங்களைத் தயவுசெய்து ஆதரிக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. முனு. ஆதி:** தலைவரவர்களே, இந்த மெம்மோரியல் ஹாலுக்கு பக்கத்தில் கூவம் ஆற்றங்கரையில் இருந்த குடிசைகளை அகற்றிவிட்டதாகச் சொன்னார்கள். அது எங்கள் தலைவர் பெயரால்—எம்.ஜி.ஆர். நகர் என்று வைக்கப்பட்டிருந்ததால் அகற்றப்பட்டதா? அல்லது வேறு காரணமா என்பது அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, அந்த குடிசைப் பகுதிக்கு அவர்களுடைய தலைவர் பெயரை வைத்திருந் தார்களா என்பது எனக்குத் தெரியாது. குடிசைகள் போட்ட எல்லோரும் ஒரு தலைவருடைய பெயரை வைத்து, அந்த நகர் என்று வைத்திருக்கிறார்கள். கலைஞர் அவர்களுடைய பெயரி லேயே கூட பல நகர்களை வைத்திருக்கிறார்கள். அவர்களை அப்புறப் படுத்தும்போது கலைஞரவர்கள் 'என்னை நகரச் சொல்லி விடுகிறார்கள்' என்று சொல்வார்கள். குடிசை போடுபவர்கள் யாராக இருந்தாலும், புது குடிசைப் பகுதிகள் தோன்றாமல் இருப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், ஒரு கண்காணிப்புக் குழு அமைத்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்காக வருடத்தில் எவ்வளவு செலவு செய்யப்படுகிறது? குடிசைமாற்று வாரியத்தின்மீது மேல் ஆதிக்கம் செலுத்தக் கூடியதாக அந்தக் குழு இருக்கிறதா? வேறு ஆட்கள் குடியிருப்புக்களில் வந்து தங்கி யிருந்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கிறதா? அவர்களை வெளியேற்றுவது என்பதுதான் அதன் நோக்கமா? அல்லது அவர்கள் மீது வழக்குகள் போட வாய்ப்பு இருக்கிறதா? குடிசை களில் இல்லாதவர்கள் குடிசைமாற்று வாரிய குடியிருப்புக்களில் வந்து குடியிருக்க இந்த வாரியத்தில் சிப்பந்திகளே உடந்தையாக இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதுபற்றி அரசாங் கத்திற்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? வந்திருந்தால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1974 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் சிப்பந்திகள் இப்படிப்பட்ட தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அரசுக்கு புகார் எதுவும் இதுவரையில் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கண்காணிப்புக் குழு வைத்திருப்பது, புதிய குடிசைகள் வராமல் தடுப்பதற்குத்தான். தவறு நடக்காமல் இருக்க வைக்கப் பட்டிருக்கிறது. மாதத்திற்கு இந்த குழுவுக்கு 7,400 ரூபாய் செலவாகிறது. இதுவரையில் 1,79,000 ரூபாய் செலவிடப் பட்டிருக்கிறது.

## மேட்டுப்பாளையத்தில் வீட்டுவசதித் திட்டம்

* 773 வினா—**திரு. மே. சி. தூயமணி:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதியிலுள்ள அரிசனங்களுக்கும், ஆதி வாசிகளுக்கும் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித் தர எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** குடிசைப் பகுதி மாற்று வாரியத் திட்டத்தின்கீழ் கோயம்பத்தூர் மாவட்டம், மேட்டுப் பாளையத்தில் அரிசனங்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் குடி யிருப்புகள் கட்டுவதற்கான திட்டம் எதுவும் தற்போது இல்லை.

**திரு. மே. சி. தூயமணி:** தலைவரவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியில் தற்போது குடியிருப்புக்கள் கட்டுவதற்கான திட்டம் இல்லை என்று சொன்னார்கள். அங்கே ஏராளமான ஆதிவாசிகள் தங்குவதற்கு குடிசை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அந்த ஆதிவாசிகளுக்காவது குடிசைமாற்றுவாரியத் திட்டத்தின்கீழ் குடியிருப்புகளைக் கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இந்த குடிசை மாற்று வாரியப் பணி இந்தியாவிலேயே நம்முடைய தமிழகத்தில்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பணி முதலில் தலைநகரில் நடைபெறுகிறது. பின்னர் தமிழ்நாடு பூராவும் விஸ்தரிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். இந்தத் திட்டத் திற்கு இன்று 35 லட்சம் ரூபாய் வரையில் செலவிடப்பட்டிருக் கிறது. இந்தப் பணி கன்னியாகுமரி மாவட்டம் வரையில் ஒவ்



1974 ஏப்ரல் 10]

வொரு மாவட்டமாக வந்துகொண்டிருக்கிறது. மாவட்டந் தோறும் உள்ள பணிகள் எல்லாம் முடிந்தபிறகு நகராட்சிகளுக்கும் விஸ்தரிக்கப்படலாம். அதுவரை நகராட்சிகள் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான்; வேறு வழியில்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், இந்த குடிசைமாற்று வாரியம் போன்று அரிசனங்களுக்கும், ஆதிவாசிகளுக்கும் ஒரு வாரியம் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டதே. அது எப்போது ஆரம் பிக்கப்படும்? அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, அதற்கான வாரியத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி அதன் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். முதற்கட்டமாக இந்த வாரியம் பொறையாரில் வீடு கட்டும் பணியைத் தொடங்கியிருக்கிறது; வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## *House sites for rural landless*

* 774 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Labour, with reference to question No. 93 answered on 11th August 1973, be pleased to state the progress so far made in the acquisition of 548 acres of land in Thanjavur district under the scheme for the provision of house-sites for the rural landless?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** புறம்போக்கு நிலத்தையும் சேர்த்து 875.14 ஏக்கர் நிலத்தை மத்திய அரசின் நிலமற்ற கிராமத் தொழிலாளர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கும் திட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் முடியும் நிலையில் உள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், இதில் 548 ஏக்கர் நிலம் வாங்கி 4, 5 வருஷங்கள் ஆகியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை; வீடு கட்டப்படவில்லை. அதற்கு என்ன காரணம்? அதனால் எவ்வளவு வட்டி நஷ்டம் ஏற்படுகிறது? ஏற்கெனவே உழுது பயிர் செய்துகொண்டிருந்தவர்களுக்கு வீடு கட்டப்படும் வரையிலாவது அந்த நிலத்தை பயிர் செய்வதற்கு கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** நிலத்தை வாங்கி, 4, 5 வருஷங்கள் ஆகிவிட்டன என்று சொல்வது நியாயமல்ல. 31—8—1972-ல்தான் தஞ்சை மாவட்டத்தில் நானே ஒரு

கூட்டத்தைக் கூட்டி, இந்த வேலையைத் தொடங்கி இருக்கிறேன். ஆகவே, 4, 5 வருஷம் என்பது தவறு. குடியிருப்பு மனைகளை வழங்குவதுதான் இதன் முக்கியப் பணி. அந்த மனைகள் பள்ளமாக இருந்தாலும் வாங்கி சமன்படுத்த 150 ரூபாய் வரை செலவு செய்து, எல்லா துப்புரவு வேலைகளையும் செய்து, பக்கத்தில் சாக்கடை வசதிகளையும் செய்து கொடுக்கிறோம். தஞ்சை மாவட்டத்தில் போய்ப் பார்த்தால் அதன் முக்கியத்துவம் தெரியும்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, இந்த கிராமப் புறங்களில் நிலம் இல்லாதவர்களுக்கு விட்டுமனை வழங்குகிற கொள்கைக்கு மத்திய சர்க்கார் கொடுக்கின்ற பணத்தின் மூலம் ஒவ்வொரு ஜில்லாவிலும் பகிர்ந்து விட்டுமனைகள் வழங்குவதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. அதற்கு எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்? ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எப்போது பகிர்ந்து அளிக்கப்படும்? வீடு கட்டும் திட்டம் எப்போது அமுலாக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** குடியிருப்பு மனை வழங்கு திட்டம் தமிழ்நாடு பூராவிலும்—நீலகிரி, எற்காடு, கொடைக்கானல் பகுதிகள் நீங்கலாக—விரிவாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் வேலைகள் நடைபெறும். இப்போது வேலைகள் சுறுசுறுப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, கிராமப்புறங்களில் நிலம் இல்லாதவர்களுக்கு விட்டுமனை வழங்குகின்ற திட்டம் இருக்கிறது. பிற்பட்ட மக்களில் இன்றையதினம் கிராமப்புறங்களில் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலம் இல்லாத பிற்பட்ட மக்களுக்கு விட்டுமனை வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, பிற்பட்ட மக்கள் யார் யாருக்கு வீட்டு மனை இல்லை என்று கணக்கெடுத்து. பட்டியல் தயாரித்து, அவர்களுக்கு விட்டுமனை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இது ஜாதி அடிப்படையில் வந்த திட்டம் அல்ல. ஏழை விவசாயிகள் எங்கெங்கு குடியிருக்கிறார்களோ, அங்கே இருக்கிற அடிமனைகளை அவர்களுக்கு சொந்தமாக்குவது தான் இந்த திட்டம்.



**திரு. கு. அ. பொம்மன்:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது நீலகிரி, கொடைக்கானல் பகுதிகளைத் தவிர மற்ற மாவட்டங்களில் வீட்டுமனைகள் வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால் மலைப்பிரதேசங்களில் வழங்கப்படுவதில்லை என்றால், எந்த அடிப்படையிலே அவை நீக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பெரும்பாலும் மலைப் பிரதேசங்களில் மலைத் தோட்டங்கள் இருக்கின்றன. மலைத் தோட்டங்களில் வேலை செய்கின்றவர்களுக்கு வேறு பல ஏற்பாடுகளை வைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இந்தத் திட்டம் ஏழை விவசாய கூலிகளுக்கு என்று உருவாக்கப்பட்டது. ஆகவே அந்தப் பகுதிகள் நீங்கலாக மற்றப் பகுதிகளில் நடை பெறும்.

**திரு. முனு ஆதி:** தலைவரவர்களே, நகர்ப்புறங்களில் வாழ்கிற ஏழை குடிசைவாழ் மக்களுக்கு 3 சென்ட் நிலம் பட்டா வழங்கும் திட்டத்தை வைத்திருக்கிறார்கள். அதுவும் பாதிப் பேருக்குக் கொடுக்கிறார்கள், பாதிப் பேரை விட்டு விடுகிறார்கள். விவசாயி களுக்கு எத்தனை சென்ட் வீட்டுமனை பட்டா செய்து கொடுப்பதாக அரசு முடிவு செய்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, அவர் களுக்கு 2 சென்ட் என்ற அளவிலேதான் தந்து இருக்கிறோம். நிலம் இல்லாத இடங்களில் நிலத்தை விலைக்கு வாங்கி தந்து கொண்டிருக்கிறோம். குடிசைகளில் குடியிருப்போர்களுக்கு அந்த அடிமனைகளை கையகப்படுத்திக் கொடுப்பதுதான் இதன் நோக்கம்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறும்போது 2 சென்ட் தான் வீட்டுமனையாகக் கொடுக்கிறோம் என்றார்கள். பக்கத்திலே உள்ள பாண்டிச்சேரியில் 7 சென்ட் வீதம் கொடுக்கிறார்கள். கேரளத்தில் கிராமப்புறங்களில் 10 சென்டும், நகர்ப்புறங்களில் 5 சென்டும் கொடுக்கிறார்கள். இங்கே 2 சென்ட் கொடுப்பதாக இருந்தால் அவர்களுடைய ஆடு, மாடுகளை கட்டு வதற்குக் கூட போதாது. ஆகையால் குறைந்தது 5 சென்ட் நிலமாவது கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அவரவர்கள் குடியிருக்கின்ற நிலத்தை அவரவர்களுக்கே தரவேண்டுமென்று கேட்கிறார்கள். அப்படி கொடுக்கப்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில்

[1974 ஏப்ரல் 10

நிலம் வாங்குவதில் மிகவும் கஷ்டம் ஏற்படுகிறது. நிலத்தை வாங்காமல் இருப்பதற்கு பலர் சிபாரிசுக்கு வருகிறார்கள். வாங்கிக் கொடுக்க முன்வருவதில்லை. 2 சென்ட் நிலம் எல்லா விவசாய கூலிகளுக்கும் கொடுத்தால், அதுவே அவர்களுடைய நிம்மதியான வாழ்க்கைக்குப் போதுமானது என்று கருதப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிப்பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) நிலத்தைச் சமப்படுத்தி சிப்சம் எடுக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளி மண்ணில் புதையுண்டு மாண்டது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 42-ன் கீழ் திருவாளர்கள் சோ. அழகர்சாமி, எஸ். வடிவேல், ரு. அ. பொம்மன், திருமதி த. ந. அனந்தநாயகி ஆகியோர் 'நிலத்தை சமப்படுத்துவது சிப்சம் எடுப்பது போன்ற வேலையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில் திருச்சி மாவட்டத்திலுள்ள ஒதியம் கிராமத்தில் 2 பெண்களும், நீலகிரி மாவட்டத்தில் உள்ள குன்னூரில் 5 பேர்களும் மண்ணில் புதையுண்டு மாண்டுள்ளனர்; இது சம்பந்தமாக அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கைப்பற்றி விவாதிக்க சபையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அளவுக்கு இது எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அவர்கள் சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.00)

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, கோவையிலே மார்ச்சு மாதம் 30-ந் தேதி சுமார் 50 அடி ஆழப் பள்ளத்தில் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தபோது திடீரென மண் சரிந்து ஒரு பெண் உட்பட 5 பேர் உயிரோடு புதையுண்டு மூச்சுத் திணறி இறந்தனர். இவர்களில் ஒருவர் புது மாப்பிள்ளை. இந்த



1974 ஏப்ரல் 10] [திரு. எஸ். வடிவேல்]

விபத்து கோவை அருகே குன்னூரில் நேற்று நடந்தது. புதையுண்டு இறந்தவர்களின் பெயர்கள் வருமாறு: பாப்பம்மாள் (வயது 50), மாரிமுத்து (வயது 25), சுவாமிநாதன் (வயது 40), துரைசாமி (வயது 25), பாண்டியன் (வயது 14). இவர்களில் மாரிமுத்துவுக்கு கல்யாணமாகி 2 மாதங்கள் தான் ஆகின்றன. மற்றும் கிருஷ்ணன், குருசாமி, கருப்பசாமி ஆகிய மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்களில் குருசாமியின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. குன்னூர் ரெயில்வே காலனி அருகே சரிவான இடத்தைச் சமன் படுத்தும் வேலை நடந்து கொண்டிருந்தது. பெண்கள் உட்பட 20 தொழிலாளர்கள் இதில் ஈடுபட்டிருந்தனர். இவர்களில் சிலர் 50 அடி பள்ளத்தில் நின்றுகொண்டு வேலை செய்து கொண்டிருந்தனர். அப்போது திடீரென்று சரிவான பகுதியிலிருந்து மண் சரிந்து பள்ளத்தில் இருந்த தொழிலாளர் மீது விழுந்தது. இதனால் 8 பேர் மண்ணில் உயிரோடு புதையுண்டனர். இவர்களில் 4 பேர் மூச்சு திணறி ஸ்தலத்திலேயே இறந்தனர். மற்றொருவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியில் இறந்தார். மீட்கப்பட்ட 3 பேர் காயமடைந்தனர். அவர்கள் மூவரும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தீயணைக்கும் படையினர் வந்து மண்ணில் புதையுண்டவர்களை மீட்டனர். செய்தி அறிந்ததும் நீலகிரி மாவட்டக் கலெக்டர் முத்துசாமி, போலீஸ் சூப்ரிண்டெண்ட் ஹரிஹரன் ஆகியோர் விபத்து நடந்த இடத்திற்கு நேரில் வந்து பார்வையிட்டனர்.

இது சம்பந்தமாக நாங்கள் கொடுத்த தீர்மானத்தைப் பார்க்கும்போது அவர்களுக்கு ஏதாவது நஷ்டயீடு கொடுக்க முடியுமா, நம் அரசில் நடவடிக்கை எடுத்து அவர்கள் குடும்பத்திற்கு வாழ்வு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறியத் தான் இந்த தீர்மானத்தை கொடுத்திருக்கிறோம் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

*** திருமதி த. ந. அனந்தநாயகி:** இந்தத் தீர்மானத்தை வலியுறுத்தி பேசும்போது, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நிரந்தரமில்லாத கூலிகள் அவர்களுக்கு என்ன பாதுகாப்பு நாம் தரப் போகிறோம். ஒரு வேலை காண்டிராக்டர் அவர்களை லேபரராக வைத்துக் கொண்டிருந்தால் அவர்களிடமிருந்து பணத்தை வாங்க

அரசாங்கம் முன்வர வேண்டும். இல்லையென்றால் தென்னை மரம், பனை மரத்தில் ஏறுகிறவர்கள், இப்படி எத்தனையோ 1 ரூபாய், 2 ரூபாய்க்கு வேலை கிடைக்காமல் வேலைக்கு போகிறார்களோ, அந்த 2 ரூபாய்க்கு உயிரைக் கொடுக்க வேண்டிய கட்டத்தில் இருக் கிறார்களென்றால், அவர்களுக்கு ஏதாவது பாதுகாப்பு அளிப் பதற்கு இந்த அரசாங்கம் முன்வர வேண்டும். கட்டாயம் நம் முதலமைச்சர், கருணை படைத்தவர், இதில் நிதியை சற்று தாராளமாகக் கொடுத்து உதவுவாரா என்று கேட்டுக் கொள் கிறேன்.

**திரு. கு. அ. பொம்மன்:** பேரவைத் தலைவரவர்களே, அம்மையார் அனந்தநாயகி அவர்கள் சொன்ன கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொண்டு, அதாவது அந்த இடத்தில் வேலை செய்த தொழிலாளிகள் இறக்க நேரிட்டவர்கள் என்பதை நாம் உணர்கின்றோம். ஆகையினால் அவர்களுக்கு முதலமைச் சருடைய துயர் துடைப்பு நிதியிலிருந்து அவர்களுக்கு ஒரு நஷ்டயீட்டை கொடுக்கும்படியாகத் தெரிவித்து, சபையை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது கூட நல்ல தென்று நான் கருதுகிறேன். ஏனென்றால் இதை மொழிந்து பேசும்போது பேசுவதற்கான விஷயங்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கில்லை என்பதை நான் உணர்ந்தேன். அது மாத்திரமல்ல. கொடுக்கப்பட்ட தீர்மானங்கள் இரண்டு. திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டத்தில் ஜிப்சம் சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்துக்கள் (1); குன்னூரில் ரெயில்வே குடியிருப்பில் ஏற்பட்ட விபத்துக்கள் (2). பேசிய உறுப்பினர்கள் திருச்சி மாவட்டத் தில் நடந்த விபத்துக்களை விட்டு விட்டார்கள். குன்னூரில் நடைபெற்ற விபத்துக்களை மாத்திரம் இங்கே எடுத்துச் சொன் னார்கள். அதிலேகூட நம் நண்பர் வடிவேல் அவர்கள் பத்திரிகை களிலே வந்த செய்தியை அப்படியே படித்து தன்னுடைய உரையை முடித்தார்கள். எனக்கு வந்திருக்கின்ற தகவல்களின்படி நீலகிரி மாவட்டம், குன்னூரில் ரெயில்வே குடியிருப்பு ஒன்றுக்கு பாதுகாப்பு தடுப்புச் சுவர் ஒன்று கட்டும் வேலையில், இரயில்வே காண்ட்ராக்டரால் அமர்த்தப்பட்ட 15 தொழிலா ளர்கள் ஈடுபட்டிருந்தனர். அன்று பிற்பகல் 3-30 மணி அளவில்,





திடீரென்று 27 அடி உயர மலையிலிருந்து மண் சரிந்து விழுந்து, அதில் 8 தொழிலாளர்கள் புதையுண்டு போனார்கள். நண்பர் வடிவேல் அவர்கள் மாரிமுத்து என்று திருமணமாகாத ஒருவர் இறந்து விட்டதாகச் சொன்னார்கள். அது பத்திரிகையிலே வந்த தகவலாக இருக்கும்.

எனக்கு தெரிவிக்கப்பட்ட தகவலில் மாரிமுத்து என்ற பெயரில்லை. ஆனால் 4 பேர் இறந்திருக்கிறார்கள். சுவாமிநாதன், துரைசாமி, பாண்டியன், பாப்பம்மாள் ஆகிய நான்கு பேர் இறந் திருக்கிறார்கள். இரண்டு பேர் மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள். ஒருவர் சிகிச்சைக்குப் பிறகு அனுப்பி வைக்கப்பட்டார். இந்த விபத்து குறித்து குன்னூர் காவல் நிலையத்தில் வழக்கொன்று குற்ற எண் 102/74 கிரிமினல் நடை முறைச் சட்டம் 174-வது பிரிவின்படி பதிவு செய்யப்பட்டிருக் கிறது. இது முற்றிலும் அசம்பாவிதமாக, தற்செயலாக நிகழ்ந்து விட்ட ஒரு சம்பவம் என்றே கருதப்படுகிறது. மண் வெட்டிய தால் எந்தவிதமான விபத்தும் ஏற்படவில்லையென்றும் எடுத்துக் கூறப்படுகிறது.

இவர்களுக்கு வேலை கொடுத்தவர் நஷ்டயீடு தர வேண்டு மென்ற கருத்து இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. இவர்களை வேலைக்கு அமர்த்தியவர் ரெயில்வே காண்டிராக்டர். இறந்தவர் களின் உடல் அடக்கத்திற்கான செலவை ஏற்றுக் கொண்டு, ஒவ் வொரு இறந்தவர் குடும்பத்திற்கும் ரூபாய் 80 நிதியுதவி அளித் திருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. மேலும் குன்னூர் தாசில்தார் இறந்தவர்கள் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 80 நிதியுதவி அளித்திருக்கிறார். தொழிலாளர் நஷ்டயீட்டு சட்டத்தின் கீழ் நஷ்டயீடு கோரி ஒலவக்கோடு இரயில்வே டிவிஷனல் பொறியாளரிடம் முறையிடலாமென்று தாசில்தார் அந்தக் குடும்பத்தினர்களுக்கு தெரிவித்திருக்கிறார்கள் இரயில்வே டிவிஷனல் பொறியாளர் எந்த நடவடிக்கை எடுக்கிறார்கள், எப்படி எடுக்கிறார்கள் என்பதைப் பார்த்து அவர்களுடைய உதவி போதுமானதாக இல்லாமல் இருக்குமானால், அதற்குப் பிறகு அரசு அதைப் பற்றி ஆராய்ந்து தகுந்த ஏற்பாடுகள் செய்யும் என்று இந்த நீலகிரி குன்னூர் சம்பவத்தைப் பொறுத்த வரையில் நான் பதிலாக அளிக்கிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஏப்ரல் 10

அடுத்து திருச்சி மாவட்டத்தில் பெரம்பலூர் வட்டம், ஓதியம் கிராமத்தில் அரியலூரைச் சேர்ந்த 'Tiruchi Mining Works, Limited' நிறுவனத்தார் ஜிப்சம் சுரங்கத்தில் 29—3—1974 அன்று நிறுவனத்தார் ஜிப்சம் சுரங்கத்தில் 29—3—1974 அன்று பிற்பகல் 12-30 மணிக்கு தொழிலாளர்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்த போது திடீரென்று மண் 19 அடி உயரத்திலிருந்து சரிந்து விழுந்தது. இதில் அஞ்சலை, சுந்தரவல்லி, கருப்பாயி, சாரதா, கருப்பன் ஆகிய 5 பேர்கள் சிக்குண்டார்கள்.

இவர்களில் அஞ்சலை அம்மாள் ஸ்தலத்திலே மரணம் அடைந்தார். சுந்தரவல்லி அரியலூர் மருத்துவ மனையில் இறந்து போனார்கள். மற்ற மூன்று பேரும் மருத்துவ மனையில் குணமடைந்து வருகிறார்கள்.

இந்த விபத்து பற்றி குன்னம் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் வழக்கு ஒன்றை பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இதுபற்றி உடனடியாக விசாரித்து தகவல் கொடுக்கும்படி திருச்சி மாவட்ட ஆட்சியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார். அவர் தந்த தகவலின்படி விபத்து நடந்தது என்று தெரிந்தவுடன் திருச்சியிலுள்ள மைன்ஸ் ஸ்பெஷல் தாசில்தார் அந்த இடத்தை பார்வையிட்டிருக்கிறார். பார்வையிட்டதில் அந்த விபத்து சுரங்கப் பணியை விஞ்ஞான முறையில் தகுதியுள்ளவர்களைக் கொண்டு நடத்தாத அஜாக்கிரதையின் காரணமாக ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கண்டிருக்கிறார்கள். அதாவது எடுக்கப்பட்ட மண்ணை பள்ளத்தின் வாய் முகட்டிலிருந்து 15 அடிக்கு அப்பால் போட வேண்டும் என்ற விதிமுறை கையாளப்படவில்லை. 45 டிகிரி சாய்வில் தான் மண்ணை வெட்ட வேண்டும். ஆனால் 90 டிகிரி நேர் குத்தாக வெட்டப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தார் சுரங்கப் பணியில் 30 ஆண்டு காலம் அனுபவம் பெற்றவர்களாயிருந்தாலும் கூட இந்தச் சாதாரண விதிமுறையை அவர்கள் கையாளாதது கண்டிக்கத் தக்கது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இந்த நிறுவனத்திற்கு தனியாரிடமிருந்து ஜிப்சம் வெட்டி எடுப்பதற்கான குத்தகை உரிமத்தை 20 ஆண்டு காலத்திற்கு 14—11—1966 முதல் வழங்கப்பட்டுள்ளது. இதை ரத்து செய்வதற்கு இப்பொழுது மாவட்ட ஆட்சியாளர் ஏற்ற நடவடிக்கை



1974 ஏப்ரல் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

எடுத்திருக்கிறார். சுரங்கத் தொழிலாளர்கள் பற்றிய பிரச்னையை மத்திய அரசு அதிகாரிகள் கவனித்து வருகிற காரணத்தால் மாநில அரசு இந்தக் குத்தகை வழங்கியிருக்கிறது என்ற ஒரே நோக்கத்தோடு விபத்துள்ளானவர்களுக்கு நஷ்டயீடு அது தனியார் நிறுவனம் என்ற காரணத்தால் அவர்கள் அளிக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். அந்தத் தனியார் நிறுவனத்தார் ஏற்கனவே விதிமுறைகளை மீறியிருக்கிறார்கள். இப்பொழுது இத்தனை பேர்கள் சாவதற்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள்தான் இந்த நஷ்டயீட்டைத் தர வேண்டும். அவர்கள் என்ன நவடிக்கை எடுக்கிறார்கள் என்று பார்த்து அம்மையார் அவர்கள் கூறியது போல கனிவு உள்ளத்தோடு, கருணை உள்ளத்தோடு நஷ்டயீடாக அந்த தனியார் நிறுவனம் அளிக்கும் உதவி போதுமான அளவுக்கு இல்லாமல் இருக்குமானால், அரசும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்று எடுத்துக் கூறி இந்த விவரங்களுக்குப் பிறகு அவர்களுக்கு பேசுவதற்கு விஷயம் இல்லாத காரணத்தால் இந்தச் சபையை ஒத்தி வைத்து இதுபற்றி பேச வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் தந்த விவரங்களுக்குப் பிறகு சபையை ஒத்தி வைக்க வேண்டியதில்லை என்ற காரணத்தால் அனுமதி தர மறுக்கின்றேன்.

(ஆ) தென்கனிக்கோட்டாவில் நடந்த வகுப்புக் கலவரம் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஏ. சுப்ரமணியம், திரு. லத்தீப், திரு. ஹாண்டே, திரு. பி. வெங்கடசாமி, திரு. கோதண்டபாலையய்யா அவர்கள் ஹோசூரை அடுத்த தென்கனிகோட்டாவில் [illegible]—1974-ம் தேதி அன்று இரு பிரிவு மக்களிடையே கலவரங்கள் ஏற்பட்டு 64 கடைகளும், ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியும் தீக்கிரையாகி 50 பேர்களுக்கு மேல் காயமடைந்திருக்கின்ற மோசமான நிலைமை பற்றி விவாதிக்க ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி சபையை ஒத்தி வைக்க வேண்டிய அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டம், ஹோசூர் பகுதியில் இருக்கிற தென்கனிக்கோட்டா என்ற ஊரில் கடந்த 7—4—1974 அன்று ஒரு பெருன்பான்மை வகுப்பைச் சேர்ந்த ஒரு பிரிவின் சகோதரி ஒரு இடத்தில் உட்கார்ந்து துணி துவைத்துக் கொண்டிருந்ததாகவும்,—பத்திரிகைச் செய்தி தான், ஏனென்றால் வேறு செய்திகளை நான் பார்க்காமல் சொல்லுவது என்றால் நேரடியாகப் பார்க்காமல் சொல்லக் கூடாது —பத்திரிகையில் வந்த செய்தியைச் சொல்லுகிறேன். அந்த சகோதரி ஏதோ கேலி செய்யப்பட்டதாகவும், வேறு வகுப்பைச் சேர்ந்த வாலிபர்கள் கேலி செய்ததைத் தொடர்ந்து ஒரு தகராறு எழுந்ததாகச் சொல்லப்படுகிறது.

காலையில் நடந்த இந்தச் சம்பவம் தகராறுக்குரிய சம்பவமாக மாற்றப்பட்டு விடக்கூடாது என்பதற்காக அங்கிருந்த பெரியவர்கள் பஞ்சாயத்து செய்யப்பட வேண்டும் என்பதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு—பின்னர் பரபரப்பான நிலைமை அமைதி குலைகிற அளவுக்கு ஏற்படக்கூடிய சூழ்நிலை உண்டானபோது கூட காவல் துறையினர் உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. அவர்கள் உரிய நேரத்தில் உரிய நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருப்பார்களானால் அங்கு ஏற்பட்ட அமைதி இன்மையையும், சச்சரவுகளையும் தவிர்த்திருக்கலாம்.

பொதுவாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருப்பதன் நோக்கமே—ஓரிடத்தில் மட்டுமல்ல—பலயிடங்களில் சில விரும்பத் தகாத சம்பவங்கள் நடைபெறுகிறபோது—தவறு செய்தவர்கள் தவறு செய்தவர்களாகக் கருதப்படாமல்—சமுதாயப் பிரச்சினைகளாக மாற்றப்பட்டு, அரசியல் பிரச்சினைகளாக மாற்றப்பட்டு, அமைதி குலையக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்படுவதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

உதாரணமாக, நம்முடைய குமாரபாளையத்தில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டு—அந்தச் செய்தி பத்திரிகையிலும் வந்தது—அரசியல் மேடைகளிலும் பேசப்பட்டது—இங்கும் கூட வந்தது. மனித உணர்ச்சியின் பலவீனம் காரணமாக இதுபோன்ற தவறுகள் —அவர் எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும்—ஒரு சிலர் செய்துவிடுகிறார்கள்—இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுகிறபோது தவறு செய்தவர், தவறு செய்தவராகக் கருதப்பட



வேண்டுமே தவிர இதை சமுதாயப் பிரச்சினையாக அணுகக் கூடாது—அரசியல் வண்ணம் பூசிவிடக் கூடாது—மதமாச்சரியங்களுக்கு இடமளித்துவிடக்கூடாது—என்கிற உணர்ச்சியோடுதான் அப்போதும் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசினோம்.

அந்த அடிப்படையில்—இந்த மாதிரியாக ஒரு சில இடங்களில் நடந்துவிடுகிறது—மனித இச்சைக்கு அடிமைப்பட்டவர்கள் சில காரியங்களைச் செய்துவிடுகிறார்கள்—அப்படிச் செய்யும்போது ஒரு சமுதாயத்திற்கோ, சமூகத்திற்கோ விரோதமாக நடக்கிறார்கள் என்று கருதாமல்—அப்பேர்ப்பட்ட குற்றவாளிகளை போலீசாரிடம் ஒப்படைத்து—மற்ற குற்றவாளிகளை எப்படி நடத்துகிறோமோ அந்த அளவுக்கு இதையும் தனிப்பட்டவர் பிரச்சினையாகக் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும்—இதை இனப் பிரச்சினையாக —சமுதாயப் பிரச்சினையாக—அரசியல் பிரச்சினையாக மாற்றிவிடுகிற காரணத்தினால்தான் இதுபோன்ற குழப்பங்கள் தகாத விளைவுகள் எல்லாம் ஏற்படுகின்றன.

இதுபற்றி மக்கள் பிரதிநிதிகள் இருக்கின்ற இந்த மன்றம் தெளிவான கருத்தைக் கொடுத்து, விளக்கங்களைக் கொடுத்து— இதுபற்றிய சம்பவங்கள் ஏற்படுகிறபோது காவல் துறையினர் எந்த முறையில் முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கான செயல்முறைகளை வகுக்க இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம்.

தேன்கனிக்கோட்டையில் நடந்திருக்கிற சம்பவத்தைப் பார்த்தால்—ஒரு பெண்ணை அவர்கள் எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கேலி செய்வதை நாங்கள் கண்டிக்கிறோம் —எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் கவுரவமாக மரியாதைக்குரியவராகக் கருதப்பட வேண்டியவர்கள் —அதுபோன்று ஒரு பெண்ணைக் கேலி செய்ய, அதன் காரணமாக சில பரபரப்பான நிலைமை நகரத்தில் ஏற்படுகிறது என்றவுடன் காவல் துறையினர் முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுத்திருக்கலாம். இங்கே அப்படிச் செய்ய காவல் துறையினர் தவறியிருக்கிறார்கள்.

காலையில் இந்தச் சம்பவம் நடைபெற்றது என்றவுடன் அதன் விளைவுகள் மாலையில் கலவரமாக மாறுவதற்கு முன்பே நடவடிக்கை எடுத்திருக்கலாம். இது சிறுபான்மையினர் பிரச்சினை

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 ஏப்ரல் 10

—பெரும்பான்மையினர் பிரச்சினை என்பது அல்ல. இதன் காரணமாக இன்றைக்கு சிறுபான்மையினர் பலவித கஷ்டங்களுக்கும், நஷ்டங்களுக்கும், சோதனைக்கும், வேதனைக்கும் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

எனக்கு வந்திருக்கிற தந்தி ஒன்றை முதலமைச்சரிடம் கொடுத்தேன். பங்களூரில் இருந்து தந்தி வருகிறது. உள்ளூரில் அவர்கள் வெளியே வரக்கூட அஞ்சி இருக்கிற நிலைமைதான் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையை மாற்ற இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதித்து—இந்தப் பேரவையில் அதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று என் தீர்மானத்தை வலியுறுத்துகிறேன்.

DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, I have given notice that the business of the House do stand adjourned to discuss this important matter for this reason, namely, that the communal clashes that are going on there, should not flare up and become a State-wide issue.

These clashes occurred very near Hosur where there appears to be some sort of misunderstanding between different communities for quite some time. This is the information I have received from that place. I do not know whether that is a fact and if it is so, it is the duty of the Government to see that this sort of misunderstanding is completely removed in the very beginning itself. It should be nipped in the bud, as otherwise it might snowball into gigantic proportions which might cause a law and order problem for the Government. We have not brought forward this adjournment motion to embarrass the Government or score a debating point. We have brought it only for the purpose of arriving at a consensus so that a united and concerted action could be taken by all members belonging to different sections of this House and dicerent communities to see that this sort of situation does not arise there again.

As the hon. Member, Thiru Latheef, has rightly pointed out the whole thing started because of an alleged teasing of a girl and we do not know the full details. The Government must be having full facts. If proper and adequate steps had been taken, this could have been nipped in the bud.



1974 ஏப்ரல் 10]

Firstly, the clash should not spread all over the taluk. Secondly, it should not bring about a chain reaction. Thirdly, the discussion here should bring about a sobering effect on the parties concerned. It is only for this purpose that we have brought forward this adjournment motion and I hope and trust the purpose will be served. With these words, I resume my seat.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப்பற்றி விவாதிக்க—ஒத்திவைக்க வேண்டுமென்று பேசிய மாண்புமிகு லத்தீப் அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் வகுப்புக் கலவரங்கள் ஒரு சங்கிலித் தொடர் போல ஆவதற்கு இந்தச் சூழ்நிலையை விட்டுவிடக் கூடாது என்று குறிப்பிட்டதை நான் முழுமனதுடன் வரவேற்கின்றேன். அந்த ஒரே காரணத்திற்காக ஒத்திவைத்து இதை ஒரு மணி நேரம் பேசுவது என்பது சரியல்ல என்று நான் கருதுகிறேன்.

மிக ஜாக்ரதையாக இரு உறுப்பினர்களும்—இரு வகுப்பினர்களிடையே நடைபெற்ற கலவரம்—சிறுபான்மை-பெரும்பான்மையினர்களிடையே ஏற்பட்ட பூசல் என்ற அளவோடு வார்த்தைகளை இங்கே கையாண்டார்கள். அவையை ஒத்திவைத்து—இதைப்பற்றிப் பேசுகின்ற நேரத்தில் சிறுபான்மையினோர் யார், பெரும்பான்மையினோர் யார், கேலிக்கு ஆளான பெண் எந்த வகுப்பைச் சேர்ந்தவர், கேலி செய்தவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்கிற விவரங்களில் ஈடுபட்டு, அதன் தொடர்பாக நாம் விரும்பாத, விரும்பத்தகாத சில சூழ்நிலைகள் மாநிலத்தில் ஏற்பட்டுவிடக்கூடும் என்று அஞ்சுகிறேன். மிகவும் எச்சரிக்கையாகவும், ஜாக்ரதையாகவும் இரு உறுப்பினர்களும் அவை—ஒத்திவைப்புத் தீர்மானத்தை முன்மொழிந்ததைப் பாராட்டுகிறேன்.

டாக்டர் ஹாண்டே குறிப்பிட்டதுபோல, திரு. லத்தீப் எடுத்துச் சொல்லியதுபோல—தேர்த் திருவிழாவை ஒட்டி, ஐந்தாறு இளைஞர்கள்—அவர்கள் யார்? சிறுபான்மையினரா, பெரும்பான்மையினரா என்றெல்லாம் நானும் எடுத்துச் சொல்லவில்லை—நம் மாநிலத்தின் குடிமக்கள்—அவர்கள் சேர்ந்து ஒரு பெண்ணைக் கேலி செய்ததன் காரணமாக சச்சரவு எழுந்திருக்கிறது. திரு. லத்தீப் அவர்கள் போலீசார் முன்னெச்சரிக்கையாக இருக்கவில்லை என்று சொன்னார்கள். இன்னாரை—இன்ன இடத்தில் இன்னார் கேலி செய்வார்கள் என்று முன்கூட்டித் தெரிந்துகொண்டு போலீசார் எச்சரிக்கையாக இருப்பது என்பது இயலாத காரியம்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஏப்ரல் 10

சம்பவம் நடைபெற்ற பிறகு பெண்ணின் தகப்பனார் போலீசாருக்குப் புகார் செய்திருக்கலாம். அந்த ஊர் பெரியவர்கள் கூடி இந்த விவகாரத்தில் ஈடுபட்ட இளைஞர்களை விசாரிக்க வேண்டுமென்று மற்றொரு சாராரை அழைத்திருக்கிறார்கள். அவர்கள் வர மறுத்திருக்கிறார்கள். அதன் தொடர்பாக இரு தரப்பிலும் காழ்ப்பான வார்த்தைகள் பரிமாறிக்கொள்ளப்பட்டு, அங்குள்ள சில பெட்டிக் கடைகள் நொறுக்கப்பட்டு, கூரைகளுக்குத் தீ வைக்கப்பட்டது. அதற்குப் பிறகு அவர்கள் வெடி இடுவது போன்ற காரியத்திற்காக வைக்கப்பட்டிருந்த நாட்டுத்துப்பாக்கி ரவைகள் கூட அந்தக் கலவரத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. 32, 42 பேர்களுக்குக் காயம் ஏற்பட்டிருக்கிறது. சிலபேர்களுடைய நிலை கவலைக்கிடமாகச் சொல்லப்படுகிறது. போலீசார் உடனடியாகத் தகவல் அறிந்து அந்த இடத்திற்குச் சென்று, ஏறத்தாழ ரூ. 50,000 அளவிற்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். முழுமையான தகவல் வரவில்லை. மேற்குப் பகுதி டி.ஐ.ஜி. ஒரு போலீஸ் படையோடு அங்கே, தெங்கனிக் கோட்டையில், முகாம் செய்திருக்கிறார். தெங்கனிக்கோட்டையில் விசாரிக்கப்பட்டு, வழக்குகள் எல்லாம் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 33 பேர் இதுவரையிலும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கலெக்டர், இரு தரப்பினரையும் கலந்துபேசி ஒரு சமாதானக் குழுவை அமைத்து, அமைதி ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை அங்கே மேற்கொண்டிருக்கிறார். கலெக்டர் அங்கே முயற்சிகளை மேற்கொண்டும், டி.ஐ.ஜி. முகாமிட்டிருந்தும், போலீஸ் படை அங்கே வைக்கப்பட்டிருந்தும், மீண்டும் ஒரு முறை அங்கே கலவரச் சூழ்நிலை உருவாகி, கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தின் மூலமாகத்தான் அதனைத் தடுக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

கலெக்டர், டி.ஐ.ஜி., எஸ்.பி., டி.எஸ்.பி., அனைவரும் தெங்கனி கோட்டையிலே தங்கி, அமைதி ஏற்படுகின்ற நிலைமையை ஏற்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அனைவரும் கட்சி சார்பற்ற முறையிலே அமைதி நிலையை ஏற்படுத்த, வகுப்புக் கலவரங்கள் இல்லையென்கிற நம்முடைய மாநிலப் புகழினை மேலும் உயர்த்த ஒத்துழைப்பதுதான் சாலச் சிறந்ததாகும். அதற்கு நான் அளித்த விளக்கம் பயன்படும் என்று கூறி, அதனால் இதைப் பற்றி விவாதிக்க அவையின் அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை யென்று கூறி, அமைகிறேன்.



1974 ஏப்ரல் 10]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவையை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்கத் தேவையில்லை யென்று கருதுகிறேன். ஆகவே, இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

அடுத்து, கவன ஈர்ப்புத் தீர்மானம்.

### 3. கவன ஈர்ப்பு.

### (அ) சென்னை மாநகரில் குடிநீர் தட்டுப்பாடு.

THIRU G. R. EDMUND : Sir, I call the attention of the Hon. Minister for Public Health to a matter of urgent public importance, namely, the deteriorating position of drinking water supply in Madras City.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I call the attention of the Hon. Minister for Public Health to a matter of urgent public importance, namely, the deteriorating position of drinking water supply in Madras City.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் பருவ மழை ஓரளவு தவறியதன் காரணமாக சென்னை மாநகருக்கு நீர் வழங்கும் நீர்த் தேக்கங்களில், அதாவது, சத்திய மூர்த்தி சாகர், சோழவந்தான் ஏரி, புழலேரி ஆகிய நீர்த் தேக்கங்களில் உள்ள நீரின் அளவு மிகவும் குறைந்துள்ளது. சென்னை மாநகருக்கு வழங்கப்படும் நீரின் அளவை படிப்படியாகக் குறைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இந்நிலையைச் சமாளிக்கத் தேவையான நடவடிக்கைகளை மாநகராட்சி எடுத்துள்ளது. அவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரத்தில் வழங்கப்படும் குடிநீர் அளவு நாளொன்றுக்கு 52 மில்லியன் காலனிலிருந்து டிசம்பர் 1973-லேயே அது 48 மில்லியன் காலனாகவும், ஜனவரி 1974-ல் வெறும் 40 மில்லியன் காலனாகவும், பிப்ரவரி 1974-ல் 35 மில்லியன் காலனாகவும், (அதுவும் கூட பஞ்செட்டி, தாமரைப்பாக்கம் ஆகிய இடங்களில் துளைக் கிணறுகளிலிருந்து கிடைக்கும் நிலநீர் உட்பட) குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தற்போது கிடைக்கும் தண்ணீரை அக்டோபர் 1974 வரை, அதாவது அடுத்த பருவ மழை வரை நீடித்துப் பயன்படுத்த முயற்சிக்கலாம்.

[திரு. க. அன்பழகன்] [1974 ஏப்ரல் 10

மாநகராட்சி வழங்கும் குடிநீரைத் தோட்டங்களுக்குப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டது. மேலும், மாநகராட்சி மூலக் குழாய்களிலிருந்து தண்ணீரை மின்சார விசையேற்றங்களின் மூலம் நேராக எடுத்துக்கொள்வது, குடிநீரைத் தவறான முறைகளில் பயன்படுத்துவது போன்ற நேர்வுகளில், குடிநீர் இணைப்புகளைத் துண்டிக்கவும் மாநகராட்சி நடவடிக்கை எடுத்திருக்கிறது.

பழுதடைந்த குழாய்க் கிணறுகள் (சென்னை மாநகராட்சியும், தமிழ்நாடு அரசும் 1969-ம் ஆண்டு வறட்சிக் காலத்தில் அமைத்த குழாய்க் கிணறுகள்) புதுப்பிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்படுகின்றன.

புதுக்குழாய் இணைப்புக்கள் கொடுப்பது 1—1—1974 முதல் நிறுத்தப்பட்டது. மீட்டர் பொருத்தப்பட்ட குடிநீர் இணைப்புகளுக்கு இலவசக் குடிநீர் வழங்கும் அளவு 1—2—1974 முதல் தற்காலிகமாக 50 சதவீதம் குறைக்கப்பட்டது. வீடுகள் கட்ட குழாய் இணைப்புகள் மூலம் குடிநீர் வழங்குவதும் 1—4—1974 முதல் நிறுத்தப்பட்டது.

மாநகராட்சியின் பல்வேறு குறுக்களவுகளைக் கொண்ட தற்போதுள்ள 122 திறந்த கிணறுகளைப் பரிசோதிப்பது, தூர் வாருவது, சுத்தப்படுத்துவது ஆகியவை மேற்கொள்ளப் பட்டுள்ளன.

துறைமுகப் பொறுப்புக் கழகம், தமிழ்நாடு மின்வாரியம், இரயில்பெட்டித் தொழிற்சாலை, பி. அண்டு சி. ஆலை போன்ற நீரை அதிக அளவுக்குப் பயன்படுத்துவோருக்குக் குறைந்த அளவு நீர் வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

நீர் வழங்குவதாவது, 1974-ம் ஆண்டு ஜனவரி திங்களிலிருந்து முழுவதும் நிறுத்தப்படும் என்று பணி நிலையங்களுக்கு அறிவித்தல்.

(அ) குடியிருப்போரின் செலவில் திறந்த கிணறுகளைச் சுத்தப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

(ஆ) குடியிருப்போரின் செலவில் அவர்களது சொந்த அளவுக்குள் குழாய் கிணறு பம்புகளுக்கு வசதி செய்தல் என்ற முறையில் குடியிருப்பு இல்லங்களுக்கு உதவி செய்தல். (இப்



1974 ஏப்ரல் 10] [திரு. க. அன்பழகன்]

பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்தக்காரர்களின் முகவரிகள், இப் பணிகளுக்காகும் செலவுத் தொகைகள் குறித்த விவரங்கள் 1—1—1974-ம் நாளிலிருந்து நீர்ப் பணிகள் பொறியாளர் மூலம் கிடைக்கப்பெறும்).

சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் ஆலோசனை கூறியுள்ள கீழ்க்காணும் நடவடிக்கைகள், சம்பந்தப்பட்டத் துறை அலுவலர்களுடன் ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறைச் செயலாளரின் ஆலோசனையோடு 25—1—1974 ஆம் நாளன்று விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டது.

1. தாமரைப்பாக்கம், பஞ்செட்டி ஆகிய பகுதிகளிலிருந்து நிலநீரைச் செங்குன்றம் ஏரிக்குச் செலவின்றித் திருப்பிவிடுகின்ற முயற்சி ;

2. 1969 ஆம் ஆண்டு வறட்சிக் காலத்தின்போது அரசால் அமைக்கப்பட்ட 12,000 குழாய்க் கிணறுகளையும் அரசு செலவில் துறையின் மூலம் அந்தந்த தலைமைப் பொறியாளர்களினால் பழுது பார்த்தல், புதுப்பித்தல் ;

3. அரசுச் செலவில் மேலும் 3,000 குழாய்க் கிணறுகளை நகரின் பல பகுதிகளிலும் அமைத்தல் ;

4. கீழ்ப்பாக்கத்திலிருந்து நகரின் பல பாகங்களுக்கும் வடிகட்டிய நீரை—ஆய நீரை—வழங்குவதற்கு அரசுத் துறையைச் சேர்ந்த 15 லாரிகளைப் பயன்படுத்தல்.

இப் பணிகளுக்காக ஏறத்தாழ ரூ. 50 இலட்சம் செலவாகும் எனத் தனி அலுவலர் மதிப்பிட்டுள்ளார்.

ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை செயலாளர் 6—3—1974 அன்று மேலும் இது குறித்து விவாதித்துள்ளார். தலைமைப் பொறியாளர்கள் ரூ. 3.62 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 2,235 குழாய்க் கிணறுகளைப் பழுது பார்க்க வேண்டி உள்ளது எனத் தெரிவித்தார். சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்கள், பழுதுபார்க்கும் பணியினை முடித்து குழாய்க் கிணறுகளை மாநகராட்சியிடம் ஒப்படைக்க இயலும் வகையில் மேற்சொன்ன 2,235 குழாய்க் கிணறுகளைப் பழுது பார்க்கத் தேவைப்படும் அந்த

[திரு. க. அன்பழகன்] [1974 ஏப்ரல் 10

ரூ. 3.62 லட்சத்திற்கும் உடனடியாக அனுமதி வழங்கிட முடிவு செய்யப்பட்டது. பழுதுபார்க்கும் பணிகள் எல்லாவற்றையும் 1—5—1974-க்குள் முடித்துவிட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. தலைமைப் பொறியாளர்கள், வரையறுக்கப்பட்ட அந்தத் தேதிக்குள் கடமையை முடிக்கலாம் என்று உறுதியளித்துள்ளனர்.

மேலும் தேவைப்படும் ரூ. 50 லட்சத்துடன் தாமரைப்பாக்கம், பஞ்செட்டி ஆகிய இடங்களிலிருந்து நீர் கொண்டு வரும்போது நாளொன்றுக்கு 2 மில்லியன் காலன் நீர் விரயமாவதைத் தடுப்பதற்காக சோழவரம் ஏரிப்படுகையில் மேல் வரவு வாய்க்காலின் பக்கத்திலும், கீழ் வரவு வாய்க்காலின் பக்கத்திலும், சிறு வாய்க்கால்களை அமைக்கவும் தனி அலுவலருக்கு மேலும் 15 லட்சம் ரூபாய் அந்தப் பணிக்குத் தேவைப்படுகிறது. எதிர்காலத் தேவைக்கும் இது நிலையான ஏற்பாடாக இருப்பதால், மேற்கண்ட தொகைக்கு அனுமதி வழங்கலாம் என ஒப்புக் கொள்ளப்பட்டது.

குழாய்க் கிணறுகளைப் பழுது பார்க்க ரூபாய் 3.62 லட்சம் தேவைப்படுவதுடன் குறைந்துள்ள நீர் வசதி நிலைமையினைப் போக்க அவசர நடவடிக்கை எடுப்பதற்கானச் செலவைச் சரிகட்டுவதற்காக ரூ. 65 லட்சம் தேவைப்படுகிறது. தொடக்கத்தில் ரூ. 20 லட்சம் வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மற்றவை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, இப்படித் தொடர்ந்து இதற்கான பணிகள் பல்வேறு அளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்படுகிறேன்.

Thiru K. M. SUBRAMANIAM : In this connection I would like to bring to the notice of Hon. Minister for Health that during 1969 when there was a similar experience, there were many wells under private owners and the Corporation was not able to utilise the water from those wells. Will the Government think of requisitioning those wells and make it compulsory on the part of well-owners to allow the Corporation to enter and repair the wells and supply water to the public in the City of Madras?



1974 ஏப்ரல் 10]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, தற்பொழுது அந்த அளவுக்கு நெருக்கடி நிலை இன்னும் ஏற்படவில்லை. இப்பொழுது, அவரவர்களுடைய கிணறுகளைப் பழுது பார்த்து வைத்துக்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேற்பட்ட நிலை ஏற்படுமானால், அதுபற்றி யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திருவாளர்கள் பொம்மன், எட்மண்ட், லத்தீப், முனு ஆதி ஆகியோர் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

**(ஆ) நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தைச் சேர்ந்த ஆறு தொழிற் சங்கங்கள் வேலைநிறுத்த அறிக்கை கொடுத்திருப்பது குறித்து.**

(முற்பகல் 10.30)

Thiru K. H. BOMMAN : Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, viz., the strike notice given by about six labour unions of the Neyveli Lignite Corporation and the consequences arising out of such notice posing a great disturbance to the industrial peace and the production there.

Thiru M. A. LATHEEF : Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, viz., the strike notice given by about six labour unions of the Neyveli Lignite Corporation and the consequence arising out of such notice posing a great disturbance to the industrial peace and the production there.

Thiru MUNU ADHI : Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, viz., the strike notice given by about six labour unions of the Neyveli Lignite Corporation and the consequences arising out of such notice posing a great disturbance to the industrial peace and the production there.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, 21—3—1974 நாளது கடிதத்தில் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் நிர்வாகத்தினர் அதன் தொழிலாளர்கள் 8—4—1974 அன்றுவரை

[திரு. க. இராசாராம்] [1974 ஏப்ரல் 1

அல்லது அதன் பின்னர் ஏதாவது ஒரு நாளில் 118 கோரிக்கைகள் குறித்து வேலைநிறுத்தம் செய்ய இருப்பதாகக் கீழ்க்கண்ட ஆறு சங்கங்களால் விடுக்கப்பட்ட வேலைநிறுத்த அறிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டனர்.

1. நெய்வேலி நிலக்கரி நிறுவன ஊழியர் முன்னேற்றச் சங்கம்.

2. நிலக்கரிச் சுரங்க தேசியத் தொழிலாளர் சங்கம்.

3. அண்ணா ஊழியர் பணியாளர் சங்கம்.

4. நெய்வேலி நிலக்கரி நிறுவன தொழிலாளர் சங்கம்.

5. நெய்வேலி நிலக்கரி நிறுவன தொழிலாளர் பணியாளர் சங்கம்.

6. நெய்வேலி நிலக்கரி நிறுவன கூட்டுறவுத் தொழிலாளர் சங்கம்.

நெய்வேலி நிலக்கரி நிறுவன கூட்டுறவுத் தொழிலாளர் சங்கத்தினரைத் தவிர மற்ற ஐந்து சங்கங்களால் வேலைநிறுத்த அறிக்கை தொழிலாளர் நல இலாக்காவில் விடுக்கப்பட்ட பட்டது. 25—3—1974 அன்று சென்னை தொழிலாளர் நலத் துறை இணை ஆணையாளர் சமாசப் பேச்சுவார்த்தை நடத்தினார். நிர்வாகத்தின் பிரதிநிதிகளும் மேற்கூறப்பட்ட ஆறு சங்கத்தினரும் சமாச பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர். மேலும் சமாசப் பேச்சுவார்த்தைகள் சென்னை இணைத் தொழிலாளர் ஆணையர் முன்பாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, இந்தப் பேச்சு வார்த்தைகள் வெற்றிபெறவில்லை என்றும், இது மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறதென்றும் நேற்று பத்திரிகைகளில் செய்தி வந்தது. இந்தப் பேச்சுவார்த்தைகளை முனைப்புடன் நடத்தி, நோட்டீஸ் கொடுத்து அவர்கள் வேலைநிறுத்தம் செய்கிறோம் என்ற நோட்டீசை அமல் படுத்துவதற்கு முன்னால் சுமுகமான முறையில் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்கின்ற அளவில்



1974 ஏப்ரல் 10] [திரு. எம். ஏ. லத்தீப்]

பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு உடனடியாக ஒரு சமாசத்திற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? அதிலே அமைச்சரவர்கள் தலையிட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, நெய்வேலி நிலக்கரித் தொழிலாளர்கள் 118 கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இணை ஆணையர் அவர்கள் பரிசீலித்து இன்று ஆணையர் அவர்கள் காலையில் பேசியிருக்கிறார்கள். காலையில் சுமுகமான முடிவு வராவிட்டால் மத்தியானம் நான் உட்கார்ந்து பேசுவதாக இருக்கிறேன்.

**திரு. முனு ஆதி :** தலைவரவர்களே, 16-ஆம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்யப்போவதாக நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அங்கே இப்பொழுதே மத்திய சர்க்கார் போலீசையும், மாநில சர்க்கார் போலீசையும் நிறுத்தி பீதி உண்டாக்கும் விதத்தில் செய்திருப்பதால் வெற்றி பெறுமோ என்று அவர்கள் ஐயப்படுகிறார்கள். மத்திய சர்க்காரின் பொறுப்பிலே இருக்கின்ற திருச்சி பாய்லர் பேக்டரியில் அடிப்படைச் சம்பளம் 318 ரூபாய் தருகிறார்கள். ஆனால் இங்கு 295 ரூபாய் 296 ரூபாய்க்குமேல் தரமாட்டேன் என்று பிடிவாதமாக இருக்கிறார்கள். இந்த உண்மையைத் தெரிந்துகொண்டு ஒரே மத்திய சர்க்கார் தொழிலாளிக்கு அங்கே 318 ரூபாய் அடிப்படைச் சம்பளம்—அது கூடச் குறைவுதான்—இங்கே 296 ரூபாய்க்கு மேல் இல்லை என்று பிடிவாதமாக இருக்கிறார்கள். நெய்வேலி வட்டாரத்திலிருக்கின்ற போலீஸ் பந்தோபஸ்தைப் பார்க்கும்பொழுது வேலைநிறுத்தத்தின் விளைவுகள் ஆபத்தாக இருக்குமோ என்று ஐயம் ஏற்படுகிறது. எனவே அமைச்சரவர்கள் தலையிட்டு அதற்கான புள்ளிவிவரங்களை எடுத்து ஆவன செய்ய முயற்சிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, தொழிலாளர்கள் 395 ரூபாய் கேட்டார்கள். அவர்களும் இறங்கி வந்திருக்கிறார்கள். நிர்வாகத்தினரும் கீழேயிருந்து மேலே வந்திருக்கிறார்கள். இருவரையும் இணைக்கும் வேலையை மேற்கொண்

டிருக்கிறார்கள்: பேச்சுவார்த்தையில் இருப்பதால் மேற்கொண்டும் பல விளக்கங்களைத் தருவது சரியாக இருக்காது என்று நினைக்கிறேன்.

## (4) அறிவிப்புகள்

### விதிக் குழுவிற்கு நியமனம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஒரு அறிவிப்பு. தமிழ் நாடு சட்டப்பேரவை, 229 (1)வது விதியின்கீழ் 1974-75-ம் ஆண்டுக்கு, பின்வரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக் குழுவின் (Committee on Rules) உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:—

1. மாண்புமிகு முதல் அமைச்சர்.
2. மாண்புமிகு பேரவை முன்னவர்.
3. மாண்புமிகு திரு. செ. மாதவன், தொழில் துறை அமைச்சர்.
4. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.
5. திரு. து. ப. அழகமுத்து, அரசுத் தலைமைக் கொறடா.
6. திரு. வா. மை. அப்துல் ஜப்பார்.
7. திரு. மணலி சி. கந்தசாமி.
8. திரு. கே. கந்தசாமி.
9. திரு. கே. என். குமாரசாமி.
10. திரு. ச. சங்குமுத்துத் தேவர்.
11. திரு. ஏ. ஆர். சுப்பையா.
12. திரு. கே. டி. கே. தங்கமணி
13. திரு. இ. எஸ். தியாகராசன்.
14. திரு. வை. பாலசுந்தரம்.
15. டாக்டர் எச். வி. ஹண்டே.
16. திரு. பி. வெங்கடசாமி.

பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாகக் குழுவின் தலைவர் ஆவார்.



## (5) அரசினர் சட்ட முன் வடிவுகள்.

### (அ) 1974-ம் ஆண்டு, பத்திரப் பதிவு (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 7/74).

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, 1974-ஆம் ஆண்டு பத்திரப் பதிவு (தமிழ் நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு* (பேரவைச் சட்ட வரைவு எண் 7/1974) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

1883-ஆம் ஆண்டு நில மேம்பாட்டுக் கடன்கள் சட்டத்தின்கீழ் அல்லது 1884-ஆம் ஆண்டு விவசாயிகள் கடன் சட்டத்தின்கீழ் வழங்கப்படும் கடன்கள் சம்பந்தமாக, கடன்கள் வழங்கும் ஆணைகளின் நகல்கள் அல்லது இயங்காச் சொத்துக்களைக் கொதுவை வைப்பது குறித்த பத்திரங்களின் நகல்கள், 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/1908) 89 ஆவது பிரிவின் (1), (3) உட்பிரிவுகளின்கீழ், சம்பந்தப் பட்ட பத்திரப் பதிவு அதிகாரியின் 1-ம் எண் புத்தகத்தில் தாக்கல் செய்யப்படுகின்றன. நகல்கள் வரப்பெற்றதும், 1908 ஆம் ஆண்டு 16 ஆவது மத்தியச் சட்டத்தின் 54, 55 ஆவது பிரிவுகளின் படி குறியீடுகளில் பதிவுகள் செய்யப்படுகின்றன.

நில மேம்பாட்டுச் சட்டத்தின்கீழ் அல்லது விவசாயிகள் கடன் சட்டத்தின்கீழ் வழங்கப்படும் கடன்கள் கொடுத்துத் தீர்க்கப் பட்ட தகவல்கள் பத்திரப் பதிவுத் துறையில் பெறப்படுவதில்லை. எனவே, 1908 ஆம் ஆண்டு 16 ஆவது மத்தியச் சட்டத்தின் 54, 55-ஆவது பிரிவுகளின்படி வைத்துவரப்படும் குறியீடுகளில் அந்தத் தகவல்கள் இடம் பெறுவதில்லை. இதன் விளைவாக, பத்திரப் பதிவு அதிகாரிகள் அளிக்கும் வில்லங்கச் சான்றுகளிலும் இவை இடம் பெறுவதில்லை. மேற்சொன்ன 1 ஆம் எண் புத்தகத்தில், கடன் தீர்க்கப்பட்டது பற்றிய தகவல் தாக்கல் செய்யப்படுவதற்கு 1908-ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தில் குறிப்பாக விதித்

* 1974 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 7 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. என். வி. நடராசன்] [1974 ஏப்ரல் 10

துறை எதுவுமில்லை என்பதுதான் இதற்குக் காரணமாகும். எனவே, இதனை இம் மாமன்றம் ஏற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Mr. Speaker, I would like to offer a few remarks regarding this Bill which is the subject-matter of discussion. The Bill seeks to amend Section 89 of the Registration Act of 1908.

The reasons for bringing forward this Bill has been mentioned in the Statement of Objects and Reasons. So far as encumbrance certificate is concerned, it should be final, it should be easily accessible to the public, so that the people who want to make registration of documents will have easy access to the encumbrance certificates.

This amendment has been specifically brought forward to obvite the difficulties that have been experienced by the Public.. The main hurdle is the sketchy nature of the encumbrance certificate consequent on discharge of loans that have been taken under the various provisions.

So far as loans are concerned, they are disbursed to persons under the Land Improvement Act of 1883 and other Acts and in the matter of loans, it is intimated to the Registration Department and it is also filed and a copy is also appended with necessary entries made in Book I and when the loan is discharged, an intimation is now made compulsory and if the intimation is not given within the time specified, it will have to be entered in the Book with the department. That is the main purpose of the amendment that is sought by this Bill.

Sir, the records of the Registration Department should be complete and final and in the matter of compilation of records. there is inordinate delay. Certain documents that have been registered in other sub-divisions are given in the index that is maintained by the registration department and memos are not sent in time so much so, the book is not correct and complete. So, there is so much difficulty and litigation because the



1974 ஏப்ரல் 10] [Thiru R. Ponnappa Nadar]

previous encumbrances could not be disclosed. It is to obviate these difficulties the new Bill is brought forward. It will be very helpful. We can know what are the charges that have been discharged and the indication would be clearly set forth in the records that are maintained by the registration department.

So, this amendment would be a welcome measure. I think there are other defects in the Registration Act, which will have to be rectified. I think a comprehensive legislation would have been most appropriate instead of these piecemeal amendments. It would be better if the whole Act is examined by the Law Department and appropriate and suitable amendments are made in the original Registration Act with reference to its application so far as Tamil Nadu is concerned.

With these words, I would once again emphasise that time limit should be set forth for sending communication under this Act. There is no such thing. It only says that "such intimation shall be in such form as may be prescribed and the registering officer shall file the intimation in his Book No. I". Within how many days, within how many months after the discharge of the loan, this intimation has to be sent should be made clear in the Bill. I think some clarification will be made under the rules. When the rules are framed, I think all these things will be looked into.

With these words, I conclude my speech, Sir.

DR. H. V. HANDE: Sir, I want to stress two important things in this Bill.

By bringing this amendment, the problem of patta holders cannot be solved and the problem experienced in issuing encumbrance certificate cannot be solved, because there is a lot of delay in the communication and the method of filing of the documents has not been properly streamlined. Unless the filing of documents is streamlined and looked into, we cannot solve the problem of agriculturists at all. By bringing an amendment

alone, we are not going to solve the problem at all. Myself and several hon. Members have mentioned on the floor of the House and have stressed that every person holding a piece of land should have a pass book containing all the particulars relating to that piece of land, viz., the cost of land, the loans that have been taken on land and whether they have been discharged, etc.

All these things should find a place in the records pertaining to the lands. Otherwise, if a person wants to transfer his piece of land, the other person would not know the amount that has been taken on land and whether the encumbrance has been discharged. Therefore, I hope the Hon. Minister will tell us how he is going to solve this problem and also the method that is to be adopted in the filing of the documents. It should be done as in the case of motor-car document registration. Everything should be mentioned there and the purchaser should know the full history of the owner of the land. They should be made known in the records. I hope the Hon. Minister will clarify all these points in his reply.

With these words, I conclude.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தை வரவேற்று ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப் படுகிறேன். இந்த என்கம்பரன்ஸ் சர்டிபிகேட்டில் லோன் வாங்கினால் எழுதுகிருர்கள், லோன் அடைப்பதை எழுதுவதில்லை என்பதைப் பார்க்கும்போது எவ்வளவு நாட்களாக இந்த விவசாயி களும் சொத்துப் படைத்தவர்களும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக் கிருர்கள் என்பது தெரிகிறது. கடன் கொடுப்பதை மாத்திரம் எழுதி விட்டு, ரிட்டர்ன் செய்வதை எழுதாத முறையில் அந்த இலாக்கா எவ்வளவு அக்கறையற்ற தன்மையில் வேலை செய்திருக் கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. இந்தத் திருத்தத்தின் காரணமாக லாண்ட் இம்ப்ரூவ்மென்ட் லோன்ஸ், அக்ரிகல்சுரல் லோன்ஸ் ஆக்டுகளின்கீழ் ரக்கூடிய கடன்களை என்றைக்கு அடைத்தார்கள் என்ற விவரங்களைத் தஸ்தாவேஜ் களில் கொடுக்க வேண்டுமென்று கொண்டு வந்திருப்பது வரவேற்கத்தக்கது.





டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னது மாதிரி நம்முடைய தமிழக அரசு முன்பே ஒரு வாக்குறுதி கொடுத்தது. இங்கு இருக்கக்கூடிய விவசாயிகளுக்கெல்லாம் லாண்ட் பாஸ் புக் கொடுத்து அவரவர்களுக்கு என்ன சொத்து இருக்கிறது, என்ன விதமான கடன்களை வாங்கியிருக்கிருர்கள், எதையெதை அடைத் திருக்கிருர்கள் என்பதெல்லாம் விவரமாகக் குறிக்கப்படும் என்று இரண்டாண்டுகளுக்கு முன்னுல் சொல்லப்பட்டது. கேள்வி நேரத்தில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இராம நாதபுரத்தில் மட்டும் ஒரு சில இடங்களில் கொடுக்கப்பட்டிருக் கிறது என்று சொன்னுர்கள். மற்ற இடங்களுக்கு இந்த முறையைக் கொண்டு வர என் காலதாமதம் ஆகிறது என்று புரியவில்லை. இருக்கக்கூடிய எல்லாப் பட்டாதாரர்களுக்கும் லாண்ட் பாஸ் புக் கொடுத்து விவரங்களை எழுதச் செய்ய வேண்டும். கிராமப்புறங் களில் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதைப் பார்க்கிறேம். பட்டா நிலங்களை மற்றவர்களுக்கு அசைன் செய்யக்கூடிய நிலைகூட இருக்கிறது. ஒருவன் வாய் செத்த பூச்சியாக இருந்தால் பட்டா நிலத்தைக்கூட அசைன்மென்ட் போட்டு பட்டா நிலக்காரரை வழக்காடுவதற்கு விரட்டியடிக்கக்கூடிய நிலை இருக்கிறது. அரசாங்கமேகூட சில நிலங்களை அப்படி அசைன் செய்திருக்கிறது. சில மாவட்டங்களில் அந்தக் காலத்தில் நிலம் இல்லாத ஏழைகள் என்ற நிலையில் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கிற தாசில்தார், கலெக்டர்களைச் சிலர் தங்கள் கையில் வைத்துக்கொண்டு அன்றைக்கு நிலம் கொடுத்தது தவறு, கான்சல் செய்யப் போகிறேம் என்று செய்யக்கூடிய நிலைமை எல்லாம் ஏற் பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்த பில்லில் பேசினுல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல முடியும்.

* **திருமதி த. ந. அனந்தநாயகி:** விவசாயிகள் படுகிற கஷ்டத்தைப் பற்றிச் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இப்போது அவையின் முன்னுல் இருப்பது ரிஜிஸ்ட்ரேஷன் மசோதா. அது பற்றிப் பேசினுல் பதில் சொல்ல முடியும்.

[1974 ஏப்ரல் 10

**திருமதி த. ந. அனந்தநாயகி :** விவசாயி படும் மற்றக் கஷ்டங்களையும் கூறினேன். லாண்ட் பாஸ் புக்கைச் சீக்கிரமாகக் கொடுக்கக் கூடாதா? சொத்தை விற்கும்போது, வாங்கும்போது அந்த விவரங்கள் எல்லாம் அதிலே இருக்க வேண்டாமா? only at the time of sales or mortgage we enter them. லாண்ட் பாஸ் புக் கொடுத்து கூட்டுறவுக் கடன் எவ்வளவு, மற்றக் கடன்கள் எவ்வளவு என்பவற்றை அறிந்து கொள்ளும் நிலை இருந்தால்தான் சொத்தை விவசாயிகள் பாதுகாத்துக் கொள்ள வழி பிறக்கும். அடுத்த ஆண்டிற்குள்ளாவது இதனைக் கொண்டு வரவேண்டும். இந்தத் திருத்தத்தை இப்போதாவது கொண்டு வந்ததற்காகப் பாராட்டி முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை ஆதரிக்கும் முகத்தான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மசோதாவின் மூலம் சர்க்காரால் கொடுக்கப்படும் கடன்கள் விவசாயிகளால் திருப்பிக் கொடுக்கப்பட்டதும் கடன்கள் நிவர்த்தி செய்யப்பட்டது என்பதைப் பதிய வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தனியார்கள் நிலங்களை அடமானம் வைத்துக் கொண்டு கடன் கொடுக்கிறார்கள். அதற்கு ரிஜிஸ்டர் போட்டு அந்தக் கடன்களைத் திருப்பிக் கொடுத்தால், அம்மாதிரி விவசாயிகள் கடன் வாங்கினால் அதற்கும் தனியாக ரிஜிஸ்டர் போட்டு அந்தக் கடன்களைத் திருப்பிக் கொடுத்தால், அதையும் அந்த ரிஜிஸ்டரில் பதிய வைக்கும் முறையைக் கொண்டு வரவேண்டும். இப்போதும் அது இருந்தாலும் அந்த முறை கட்டாயமாக்கப்படவில்லை. ஒத்திப் பத்திரத்தின் மூலமோ, பெந்தகப் பத்திரத்தின் மூலமோ பணம் கொடுத்தவர்கள் கணக்குத் தீர்ந்த பிறகும் திரும்ப நகல் காப்பியை எடுத்துப் பார்த்து வழக்குப் போட வாய்ப்பு இருக்கிறது.

பெந்தகக் கடன்களையும், ஒத்திக் கடன்களையும் ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் பதிய வேண்டும். கடன் திருப்பித் தீர்க்கப்படும்போது ரத்து செய்வதற்குக் கட்டாயமாக ரிஜிஸ்டர் வேண்டுமென்று நாம் ஏற்பாடு செய்வோமானால் விவசாயிகளுக்கு, படிக்கத் தெரியாத





விவசாயிகளுக்கு ரொம்பச் சவுகரியமாக இருக்கும். பின்னால் அவர்கள் ஏமாற்றப்படாமல் இருக்க வாய்ப்பாக இருக்கும். இனிமேலாவது இந்த அரசு இதுபற்றிச் சிந்தித்து இந்த மாதிரி திருத்தத்தைக் கொண்டுவர முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள், சகோதரி திருமதி அனந்தநாயகி அவர்கள், திரு. மாரிமுத்து அவர்கள், டாக்டர் ஹாண்டே அவர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்கள் அத்தனையும் மேலும் அரசாங்கத்திற்கு உற்சாகம் தரவேண்டும் என்ற அடிப் படையில் இருப்பதைக் கண்டு நான் பெருமைப்படுகிறேன்.

திருமதி அனந்தநாயகி அவர்கள் ஏன் இவ்வளவு காலம், இதற்கு முன்னே செய்திருக்கக் கூடாதா என்று கேட்டார்கள். இதற்கு முன்னே செய்திருக்கக் கூடாதா என்று கேட்டார்கள். பாராட்டும் நல்ல குணம் இப்போதுதான் அவர்களுக்குப் பாராட்டும் நல்ல குணம் வந்திருப்பதால் இந்த நேரத்தில் கொண்டுவரலாம் என்று கருதித் நான் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, இதை ஆதரித்து உங்கள் நல்லெண்ணங்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :—

"1974-ம் ஆண்டு, பத்திரப் பதிவு (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 7/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே,

[திரு. என். வி. நடராசன்] [1974 ஏப்ரல் 10

"1974 ஆம் ஆண்டு, பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 7/74) நிறைவேற்றப்பட வேண்டும்' என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 13/74).

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/74) ஆய்வு செய்வதற்காக 30 உறுப்பினர்கள் அடங்கிய (20 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 10 சட்ட மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன் கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன் :—

1. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்
2. திரு. ஏ. சி. நரசிம்மன்
3. திரு. என். இராசாங்கம்
4. திரு. ஆ. ஆறுமுகம்
5. திரு. அ. ப. சண்முகசுந்தரம்
6. திரு. அ. இராசமாணிக்கம்
7. திரு. எல். கணேசன்
8. திரு. கு. பாலகிருட்டிணன்
9. திரு. எஸ். நல்லசாமி
10. திரு. ஆ. முனியாண்டி
11. திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி
12. திரு. என். டென்னிஸ்

* 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2 ஆம் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1974 ஏப்ரல் 10] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

13. கோவை செழியன்
14. திரு. கே. கந்தசாமி
15. திரு. வா. மை. அப்துல் ஜப்பார்
16. திரு. ஏ. ஆர். மாரிமுத்து
17. திரு. கு. அ. பொம்மன்
18. திரு. சோ. அழகர்சாமி
19. திரு. மணலி சி. கந்தசாமி
20. திரு. இ. எஸ். தியாகராசன்

**திரு. எஸ். வடிவேல் :** தலைவர் அவர்களே, இந்த குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவின் மீது நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இது செலக்ட் கமிட்டிக்குப் போவதால் அங்கு எல்லா உறுப்பினர்களுக்கும் கருத்துக்கள் சொல்ல வாய்ப்பில்லாததால் நான் இரண்டொரு கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** செலக்ட் கமிட்டிக்குப் போனாலும் சட்டசபைக்கு மறுபடியும் வரத்தான் போகிறது.

* THIRUMATHI T. N. ANANDANAYAKI : Members of the Select Committee are not permitted to speak.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** செலக்ட் கமிட்டியில் திரு. வடிவேல் இல்லை. இருந்தாலும், பின்னால் கூட பேச வாய்ப்பிருக்கிறது.

**திரு. எஸ். வடிவேல் :** தோப்பில் நடுவில் இருந்தால் வேறு எங்கேயாவது மூன்று சென்ட் கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது. அண்ணா அவர்களின் செவ்வாழை கதையைப் படித்துப் பார்த்தால் தெரியும். ஒரு ஏழைக் குடியானவன் தோட்டத்தில் குடியிருந்தான். அவன் ஒரு வாழை மரம் வைத்தான். அது பிஞ்சு விட்டவுடன் பிள்ளை கேட்டது பழம் வேண்டுமென்று. அம்மா, அது அரிசி வாங்கத்தான் என்று சொன்னாள், பிள்ளைக்கும் இல்லாமல் அம்மாவிற்கும் இல்லாமல் இரண்டுக்கும் பதிலாக முதலாளி வீட்டுக் கல்யாணத்துக்கு அந்தத் தாரை வெட்டிக் கொண்டு போனார்கள். தாரும் கண்ணீர் விட்டது, அம்மாவும் கண்ணீர் விட்டாள், குழந்தையும் கண்ணீர் விட்டது. அந்த மாதிரி இருக்கிறது இதுவும்.

[திரு. எஸ். வடிவேல்] [1974 ஏப்ரல் 10

தோட்டத்தில் தென்னங்கன்று நட்டு, வாழை நட்டு, வேறு பல மரங்களை நட்டு தண்ணீர் ஊற்றி நன்கு வளர்த்து நல்ல பலனுள்ள தோட்டமாக ஆக்கியிருக்கும் நேரத்தில் தோட்டச் சொந்தக்காரர் அந்த ஏழையை அந்தத் தோட்டத்திலிருந்து அப்புறப்படுத்தி விட்டு மூன்று செண்ட் நிலம் வேறு எங்கேயாவது வழங்குவது என்பது சரியாக இருக்காது.

இன்று கோணா சட்டத்தை எடுத்துக் கொண்டால், கிராமமாக இருந்தால் பத்து செண்ட்கள் கொடுக்கிறார்கள். நகரப் பஞ்சாயத்தாக இருந்தால் ஏழு செண்ட் கொடுக்கிறார்கள். நகரசபையாக இருந்தால் ஐந்து செண்ட் கொடுக்கிறார்கள். கார்ப்பரேஷனாக இருந்தால் மூன்று செண்ட் என்று இப்படி தரவாரியாகப் பிரிக்கப்பட்டு கொடுத்திருக்கிறார்கள். புதுவையில் கூட பத்தரை செண்ட் என்றும், ஏழரை செண்ட் என்றும் வைத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் டவுன் பஞ்சாயத்தில் கொடுப்பதாக இல்லை. டவுன் பஞ்சாயத்து கிராமத்தையொட்டியது. ஆகவே அதையும் சேர்த்துக்கொள்ளலாம்.

எட்டடி குச்சுக்குள் இடும்பா எவ்வளவு நாள் இருப்பேன் என்று முருகன் கோவிலில் பாடுவார்கள். எட்டடி குச்சுக்குள் நூறு ஜனங்கள் இருக்கிற நிலை இருக்கிறது. சுவற்றோடு அளந்து கொடுக்கலாம் என்றிருக்கிறது.

நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் தோட்டத்தில் குடியிருப்பவர்களுக்கு நிச்சயமாக அதிலேயே இருப்பதற்கு ஒரு இடத்தை கொடுப்பதற்கு நம் அரசு முனைய வேண்டும். எல்லா நிலங்களுக்கும் நாம் இப்போது வரம்பு கட்டிவிட்டோம்.

தோட்டம் ஐயாயிரம் ஏக்கர் இருந்தாலும் அதற்கு ஒரு வரம்பு இல்லை என்ற நிலை இருக்கிறது. பல தோட்டங்களில் நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக குடும்பம் குடும்பமாக பரம்பரையாக வாழ்ந்து வந்த பல குடும்பங்கள் இன்று வெளியேற்றப் படுகிறார்கள்.



1974 ஏப்ரல் 10] [திரு. எஸ். வடிவேல்]

என் பிரதேசம் கடற்கரைப் பிரதேசம். முத்துப்பேட்டை, தொண்டியக்காடு போன்ற இடங்களில் உள்ள பல தோட்டங்களிலிருந்து தென்னை மரங்கள் வைத்து தோட்டமாக்கியவர்கள் எல்லாம் வெளியேற்றப்படும் நிலையில் இந்தச் சட்டம் உதவி செய்கிறது.

ஆகவே அந்த ஏழை மக்களைப் பாதுகாக்கக்கூடிய அளவிற்கு இந்தச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

(திரு. துரை முருகன் தலைமை)

THIRU R. PONNAPPA NADAR: Mr. Chairman, Sir, I would like to add a few remarks regarding this Bill which goes to the Select Committee.

So far as this Bill is concerned, it is a departure from the previous enactment that has been passed. Now, the main departure that is made in this Bill is regarding the provision of alternative sites to those persons who have got house-sites in certain garden lands and other areas. There are certain corresponding legislations which are in vogue in our district.

For instance, there is the Travancore-Cochin Kudiyiruppukaran Act which is applicable only within the Kanyakumari district and certain pretections have been granted to those persons under the provisions of that Act. Now, this is over and above the protection that has been given in that enactment which is in force in that transferred area.

I want to know, will there be any change consequent on this legislation and whether that Act would be repealed and what steps are going to be taken by this Government to see that the existing protection that has been afforded to the persons who have got their house-sites, will be continued. All these matters will have to be examined when the Bill is considered by the Select Committee.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 ஏப்ரல் 10

In the Travancore-Cochin Act also, there is a provision for providing alternative sites if a house-site is in the middle of a big garden land. Option is given to the landlord to give the money necessary for rebuilding the house and I think the nearest plot should be provided because most of the people who are affected would be agricultural labourers and for their avocation, they will have to reside within the vicinity of the agricultural land which would be available. So much so, it is just and proper that the original claims and rights of the persons who have been in the land for such a continuous period should be protected and there should be no heard-burning among them and they should not be separated from the place where they will have to work.

In this connection, I would venture to suggest that there should not be any provision which would be interpreted in a way which is beneficial to the landlords or big landowners who have got extensive lands and if extensive lands are available to them, option should be given to the persons who are actually occupying the land to continue to reside in it.

(முற்பகல் 11.00)

Suppose a lady or widow has only five cents. If she were to give three cents, she will be deprived of her entire holding. In such cases there should be specific promise. I hope that matter will be gone into by the Select Committee and that the just claims and interests of the small farmer and the people who gave got very little land will be protected. This legislation will have to protect their interests; the people who are actually in occupation should not be deprived of their rights. Care should be taken to see that no hardship is caused to the small holdings of people who are owning such lands.

With these observations I support the reference to the Select Committee. When the Bill is amended and comes to this House again, I will offer my remarks subsequently.

Thank you.



1974 ஏப்ரல் 10]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** தலைவரவர்களே, இந்த மசோதாவை ஜாயிண்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்ற என் கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்று இருப்பதாகக் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை ஜாயிண்ட் செலக்ட் கமிட்டியில் சொல்லும் போது பரிசீலிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, இந்த மசோதாவை ஜாயிண்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/74) ஆய்வு செய்வதற்காக 30 உறுப்பினர்கள் அடங்கிய (20 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 10 சட்ட மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன் கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்ற தெரிந்தெடுக்கப்பட வேண்டும்."

1. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.
2. திரு. ஏ. சி. நரசிம்மன்.
3. திரு. என். இராசாங்கம்.
4. திரு. ஆ. ஆறுமுகம்.
5. திரு. அ. ப. சண்முகசுந்தரம்.
6. திரு. அ. இராசாமாணிக்கம்.
7. திரு. எல். கணேசன்.
8. திரு. கு. பாலகிருட்டிணன்.
9. திரு. எஸ். நல்லசாமி.
10. திரு. ஆ. முனியாண்டி.
11. திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி
12. திரு. என். டென்னிஸ்.
13. திரு. கோவை செழியன்.
14. திரு. கே. கந்தசாமி.
15. திரு. வா. மை. அப்துல் ஜப்பார்.
16. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.

17. திரு. கு. அ. பொம்மன்.
18. திரு. சோ. அழகர்சாமி.
19. திரு. மணலி சி. கந்தசாமி.
20. திரு. இ. எஸ். தியாகராசன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**(இ) 1974-ம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/74).**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, "1974-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவைச் சட்ட வரைவு எண் 11/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

இம் மாநிலத்தில் செயலிலுள்ளவாறு 1899-ம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 2/1899) 1-வது அட்டவணையின் 5-வது பிரிவு ஒப்பந்தப் பத்திரத்தின்மீது அல்லது ஒப்பந்தக் குறிப்பு மீது முத்திரைத்தாள் தீர்வை விதிப்பது பற்றிக் கூறுகிறது. அப்பிரிவின் கீழ், மாற்று ஆவணம் அல்லது அரசு ஈட்டுப் பத்திரம் விற்பனை சம்பந்தமான அல்லது சட்டப்படி ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனத்தில் அல்லது சட்டப்படி இணைக்கப்பட்ட ஏனைய நிறுவனத்தில் எடுத்துக் கொண்ட பங்குத் தொகைகள் விற்பனை சம்பந்தமான ஒப்பந்தப் பத்திரம் அல்லது ஒப்பந்தக் குறிப்புக்குக் குறிப்பாய்த் தீர்வை விதிக்கப்படத் தக்கதாகும்.

ஆனால், மேற்சொன்ன 5-வது பிரிவின்கீழ் (எ) விதிவிலக்கின் மூலம், சரக்குகளை அல்லது வாணிபப் பொருள்களை விற்பது அல்லது அது தொடர்பான ஒப்பந்தப் பத்திரத்திற்கு அல்லது ஒப்பந்தக் குறிப்பிற்கு முத்திரைத்தாள் தீர்வை விதிப்பினின்றும் விலக்களிக்கப்படுகிறது.

---

* 21—3—1974 தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





இவ்வாறாக, பொதுவாகச் சரக்குகளை விற்பது அல்லது வாங்குவது குறித்து, அனுப்புகை ஒப்பந்தத்திற்கு அல்லது சரக்குகளை உடனே ஒப்படைக்கும் ஒப்பந்தத்திற்கு பொதுவாக முத்திரைத்தாள் தீர்வை விதிக்கப்படுவதில்லை.

ஆனால், 1958-ம் ஆண்டு பம்பாய் முத்திரைத்தாள் சட்டத்தின் கீழ் (பம்பாய் சட்டம் 60/1958) கீழ்க்கண்ட சரக்குகளை வாங்குவது அல்லது விற்பனை செய்வது குறித்த ஒப்பந்தப் பத்திரத்திற்கு அல்லது ஒப்பந்தக் குறிப்பிற்கு முத்திரைத்தாள் தீர்வை விதிக்கப்படத் தக்கதாகும் :—

(1) பங்குச் சான்றிதழ் தொகுதிகள், பங்குகள், பத்திரங்கள், கடன் ஈட்டுறுதிப் பத்திரங்கள், கடனீட்டுறு பங்குகள் அல்லது விற்பனையாகத்தக்க பிற ஈடுகள் ;

(2) பருத்தி ;

(3) தங்கம், வெள்ளிக் கட்டிகள் அல்லது அவற்றின் வகைகள் ;

(4) எண்ணெய் வித்துக்கள் ;

(5) நூல் ;

(6) கனிவளமல்லாத எண்ணெய் வகைகள் ;

(7) நறுமணப் பொருள்கள்.

மேற்சொன்ன பொருட்களையும், சோடா ஹைட்ரோ-சல்பேட்டையும் வாங்குவது அல்லது விற்பது குறித்த ஒப்பந்தப் பத்திரத்தின் மீது அல்லது ஒப்பந்தக் குறிப்பு மீது முத்திரைத் தாள் தீர்வை விதிக்க இயலும் வகையில், இம்மாநிலத்தில் செயலிலுள்ள 1899-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தை திருத்துவதற்கு அவசியமெனக் கருதப்பட்டுள்ளது.

எனவே, மேலே குறிப்பிடப்பட்ட பொருட்களை விற்பது அல்லது வாங்குவது குறித்து, அனுப்புகை ஒப்பந்தத்திற்கு அல்லது சரக்குகளை உடனே ஒப்படைக்கும் ஒப்பந்தத்திற்கு முத்திரை தீர்வை விதிக்க இயலும் வகையில், மேலே சொல்லப்பட்ட சட்டத்தின் 1-வது விவர அட்டவணையின் 5-வது பிரிவிற்குப் பதிலாக, புதிய பிரிவு ஒன்றை அமைத்துக் கொள்வதெனக் கருதப்பட்டுள்ளது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஏப்ரல் 10

புதிதாக அமைத்துக் கொள்ளப்படவிருக்கும் 5-வது பிரிவில் விதிக்கக் கருதியுள்ள ஒருங்கிணைந்த திருத்தத் தீர்வை வீதம் காரணமாக, மேற்சொன்ன பிரிவின்கீழ் வரும் ஆவணங்களுக்குத் தமிழ்நாடு, 1962 ஆம் ஆண்டு முத்திரைத்தாள் (தீர்வைகளைக் கூடுதலாக்குதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1962) 2-வது பிரிவைத் தக்கவாறு திருத்துவதன் மூலம் தீர்வை அதிகரிப்பிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று கருதப்பட்டுள்ளது.

மேற்சொன்ன நோக்கங்களை எய்த இச்சட்ட வரைவு நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

* திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, இந்த முத்திரைத்தாள் சட்டம் திருத்தப்படி இத்தனை நாள் தப்பித்துக் கொண்டிருந்த சிலவற்றை எல்லாம் இவர்கள் வரி போடுவதற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள், என்பதை இந்த விளக்கத்திலிருந்து எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது. குறிப்பாக

Under the Bombay Stamp Act, 1958, stamp duty is leviable on agreement or memorandum of agreement relating to sale or purchase of the following commodities, namely:—

(i) scrips, stocks, bonds, debentures, debenture-stocks or other marketable securities:

Cotton, oil seeds, spices, yarn, etc.,

என்று இருக்கிறது.

1958-லே பம்பாயிலே அவர்களுடைய சட்டத்தை திருத்தி இந்த வரியை போட்டிருக்கிறார்கள். 1958-லிருந்து 1974-வரை நம் தமிழகத்தில் இப்படி பல்வேறு காண்டிராக்ட்ஸ் அல்லது அக்ரிமெண்ட்மேல் ஏன் வரி போடவில்லை. இதற்கு ஏதாவது காரணங்கள் இருந்திருக்கும். இல்லையென்றால் 1958-லிருந்து 1974 வரை 16 வருஷம் வரி போடாமல் இருந்திருக்கத் தக்க காரணமில்லாமல் இருக்க முடியாது.

இன்றைக்கு ஆளுகின்ற கட்சி வரி வாங்குவதில் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்கிறது என்பது உறுதி. அதற்கு இதுவே ஒரு எடுத்துக் காட்டு, ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் சொன்னார்கள். நாங்கள் வரி போட மாட்டோம் வசதிகளைப்



1974 ஏப்ரல் 10] [திருமதி த. ந. அனந்தநாயகி]

பெருக்குவோம் என்று. இதை திருத்திக் கொண்டார்கள். தாங்கக் கூடியவர்கள் மேல் தான் வரி போடுவோம். தாங்க முடியாதவர்கள் மேல் வரி போட மாட்டோம் என்று.

வரிகள் உயர்ந்து 500 கோடி ரூபாய்க்கு வந்து விட்டது. இப்படிப்பட்ட நிலையில் நீங்கள் இங்கே இந்த பார்வேர்ட் காண்டிராக்ட்ஸ்களுக்கு வரி போடுவதென்றால், என்னவாகுமென்றால் காட்டன், ஆயில்சீட்ஸ், யார்ன், ஸ்பைசஸ் இப்படிப்பட்ட பொருள்கள் மீது நீங்கள் போட வேண்டுமா என்பதை சிந்திக்க வேண்டுகிறேன்.

ஏற்கனவே எண்ணெய் வித்துக்கள் விலை அதிகமாகி விட்டது.

ஏற்கனவே உணவுப் பொருட்கள், தேவைப்படுகின்ற எல்லா பொருள்களின் விலையும் எக்கச்சக்கமாக ஏறியிருக்கிறது.

ஸ்பைசஸ் விலையும் எக்கச்சக்கமாக ஏறியிருக்கிறது.

அதே மாதிரி நூல் விலை உயர்வு காரணமாக சேலை, வேட்டி விலை ஏறிக் கொண்டிருக்கிறது.

சாதாரண கைத்தறி சேலை வாங்க வேண்டுமானால் 40 ரூபாய்க்கு குறைந்து கிடைக்காது. ஆண்கள் கட்டும் வேஷ்டி விலையும் உயர்ந்து விட்டது. கண்ட்ரோல் விலையில் துணி சூப்பர் மார்க்கெட் மூலமாக கிடைக்கிறது என்று சொல்லுகிறார்கள். அங்கே பொது மக்களுக்கு கிடைப்பதில்லை. பேல் பேல்-ஆக எங்கேயோ போகிறது என்று படித்திருக்கிறோம்.

இந்த நிலையில் நீங்கள் யார்ன், காட்டன், ஸ்பைசஸ், ஆயில் சீட்ஸ் போன்றவற்றிற்கு வரி போட்டால் நன்மைகள் கிடைக்குமா என்பதை இந்த அரசு யோசித்துப் பார்க்க வேண்டும். ஏதோ பம்பாயில் போட்டார்கள். தமிழ்நாட்டில் பல பேர் தனியார் காண்டிராக்ட்ஸ் செய்து கொண்டு வியாபாரம் செய்கிறார்கள். அதன் மூலம் தொழில் வளர்வதற்கு உகந்ததாகும்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 ஏப்ரல் 10

பம்பாயில் போட்டிருப்பதைப் போன்று இங்கேயும் போடலாம் என்றால், தொழில் வளர்ச்சியை விரட்டியடிப்பது மாதிரி நாம் போடுகிறோம் என்பது பொருள். தமிழ்நாட்டிற்கு இந்த வரியினால், எவ்வளவு பணம் வரப்போகிறது? சாமர்த்தியமாக ரெவின்யூ அமைச்சர் இதில் வருமானம் என்ன என்று சொல்லவில்லை. அவர் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். எவ்வளவு வரும். எத்தனை கோடி ரூபாய் உங்களுக்குக் கிடைக்கப் போகிறது என்பதை சொல்லிர்களானால், இதன் காரணமாக பெருத்த லாபம் இருக்கப் போகிறது என்று சொல்லலாம்.

தொழில் நடத்துகிறவர்கள் ரொம்ப புத்திசாலிகள். எந்தெந்த மாநிலத்தில் வரி விதிவிலக்கு இருக்கிறது. எந்தெந்த மாநிலத்தில் தொழிலில் லாபம் இருக்கிறது, எந்தெந்த மாநிலத்தில் அவர்கள் தொழில் நடத்துவதற்கு தயாராக இருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால் நம் மாநிலத்தில் தொழிலை வளர்ப்பதற்கு வழி வகைகள் செய்ய வேண்டும். இந்தத் திருத்தம் வந்தால் நம் மாநிலத்திலிருந்து தொழிலை விரட்டி அடிக்கக் கூடிய நிலை ஏற்படும்.

இந்தத் திருத்தம் வந்தால் நாட்டு மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் பண்டங்கள் மீது இந்த வரிகளை விதித்து மக்கள் கொடுத்துக் கொண்டு இருக்க முடியுமா என்பதை யோசிக்க வேண்டும்.

அது மாத்திரமல்ல. 1958-லிருந்து 1974-வரை பம்பாயிலே போடக் கூடியது தமிழகத்தில் போடவில்லை என்றால் அதற்கு சில காரணங்கள் இருந்திருக்க வேண்டும். வேண்டாமென்று இருந்திருக்க வேண்டும். இல்லையானால் இது கண்ணுக்கு தெரியாமல் இருந்திருக்க வேண்டும். இல்லாத வரிகளை இவர்கள் உயிர் கொடுத்து இன்றைக்குக் கொண்டு வருகிறார்கள் என்பதை பற்றி அமைச்சர் விளக்கம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா கொண்டு வந்திருப்பதை ஆதரிக்கிறேன். இந்த 5 ஆவது ஷெட்யூல் 1899-ம் வருஷம் சென்ட்ரல் ஆக்ட். ஆனால் இது



1974 ஏப்ரல் 10] [திரு. என். கே. பழனிசாமி]

வரையிலும் பம்பாயிலே இந்த மாதிரி குறிப்பிட்ட பொருள்களுக்கு வரி போட்டார்கள். நாம் வரி போடாமல் இருந்தோம். போடாமல் இருந்தாலும் இப்பொழுது வரி போடுகிறோம்.

எனக்கு முன் பேசிய மெம்பர் யார் பக்கம் பேசினார்கள் என்று தெரியவில்லை. இது பூராவும் ஜெட்டி பிசினெஸ் செய்கிறவர்கள் பேரில் வரி போட்டிருக்கிறது. அவர்கள் யாருடைய ஆதரவுக்குப் பேசினார்கள் என்று புரியவில்லை.

அதுமட்டுமல்ல, பில்லியனை எடுத்துக்கொண்டால், மார்ட்கேஜுக்குப் போனால், மேமோரேண்டம் ஆப் அக்ரிமென்டிற்குப் போனால் ஏற்கனவே ஸ்டாம்ப் ஒட்டி வைத்து இருக்கிறார்கள். கவர்ன்மென்ட் மெமோரேன்டம், அக்ரிமென்ட்டாக இருந்தாலும் சரி, அதற்கு வேண்டுமென்றால் குறைவாகப் போடலாமே தவிர ஜெட்டி, பில்லியன் போன்றவற்றிற்கு அதிகமாகப் போட வேண்டும். ஏன் 50 பைசா என்று அதை ஆக்கக்கூடாது.

கான்டிராக்டர்ஸ்க்கு 15 பைசா போட்டிருக்கிறது. இதை அதிகமாக 50 பைசா என்று போடலாம். கொண்டு வருவது கொண்டு வருகிறோம். இது பெரிய முதலாளிகளுக்குப் போடும் வரி. நமக்குப் பணம் தேவையாக இருக்கிறது. இந்த பில்லியனுக்கு, இந்த கவர்ன்மென்ட் அக்ரிமென்ட் அல்லாத மெமரோன்டம் ஆப் அக்ரிமென்டிற்கு அதற்கு மட்டும் போட்டிருக்கும் வரியைக் குறைத்து, மற்றதற்கெல்லாம் அதிகமாகச் செய்வதில் சர்க்காருக்கு என்ன சங்கடம்? இதனால் பொதுமக்கள் பாதிக்கப் படப் போவதில்லை. பெரு வியாபாரிகள் தான் இந்த வரி கட்டப் போகிறார்கள். சர்க்கார் கொண்டு வந்த இந்த மசோதாவை நான் ஆதரித்தாலும், சர்க்கார் அதிகமாக வரி போடவில்லை என்பது கஷ்டமாக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I welcome this Bill for this reason that there have been going on binami transactions because there is no stamp in these forward contracts and it is almost a gamble in yarn, bullion and many other things. That is why this Bill is brought forward. There should be attempt to prevent at least this sort of speculation.

[Thiru K. M. Subramaniam] [1974 ஏப்ரல் 10

I am glad that the Government has brought forward this measure. I do not support this from the point of view of revenue, but definitely I support it because it will reduce the so-called binami forward transactions which we find in this peculiarly operated business world in India.

Thirumathi Anandayaki said that though this Government says that they are not increasing the tax, the total yield has gone from 200 crores in 1967 to 500 crores now. Thirumathi Anandanayaki and everybody knows that the value of money has gone down and therefore, the value of money is less now. 200 crores of 1967-68 is 500 crores worth now.

I think this Bill is a very welcome measure that will stop speculation to a great extent. Thank you Sir.

DR. H. V. HANDE: Mr. Chairman, in addition to what has been spoken, I wish to offer a few things.

Sir, it is, a well-known fact that a great deal of forward trading is going on in Madras for the past one decade. The hon, Member, Anandayaki wanted to know and probably rightly so, why this Act which had been in operation in the State of Maharashtra from 1958 onwards had not been brought forward here all these years. That is a valid question. I do not know the reasons behind this. But one thing I can point out. This forward trade has been going on in a very fantastic manner in the city of Bombay and practically half the business of Bombay is on account of forward trading in bullion, cotton, oil-seeds, etc. Now Madras has become a place of forward business and the quantum has come to some where though not near Bombay, but to a sizeable extent and it has increased in volume in the last one decade. That has probably been taken note of by the Government.

In this context, I am only sorry that the Government has failed to bring this Bill in a more neat and proper manner. For instance, an indication could have been given of the quantum of revenue that is likely to be raised on account of stamp duty. That need not be a secret. That could have been given so that we can have a proper idea. That has not taken place.



1974 ஏப்ரல் 10] [Dr. H. V. Hande]

Then a number of items have been brought under this stamp duty. They have brought from scrips down to spices. My information is that this has a wider sphere and about 21 or 22 items could come under this. I am sure that within the next few months, another amendment would be brought forward by the Hon. Minister and then some more item would be added. This is a very anamolous position. That has been failure on the part of the department in properly assessing and finding out the spectrum and presenting a full and proper Bill.

Further, this Bill envisages to increase the tax. Already two items were already there. On Memorandum of Agreement, this Government has increased from Rs. 30 to Rs. 45.30 paise. That means, already some items were there.

I would like the Hon. Minister to take the House into confidence and tell us whether this will have an impact on the price spiralling. What would be the direct impact of this?

Our hon. Friend, Mr. K. M. Subramaniam said that there has been a lot of binami transactions. This Bill can be utilised as a radar to scan binami transactions and in that way it is a worthwhile Bill.

In fact in Parliament a lot of complaints were raised that binami transactions were going on. This is a curse of the country. This can restrict such transactions and whether such restriction will have a salutary effect on the price spiralling is another matter. In other words, a thorough assessment and a thorough understanding should have been made and in better manner the presentation of the Bill could have been done. Government has failed to bring the Bill in the manner in which I would want it to be brought. Thank you, Sir.

THIRU R. PONNAPPA NADAR: Mr. Speaker, I would also like to supplement the valuable suggestions that have been made by hon. Members who partscipated in this debate. So far as this amendment is concerned, it follows the Bombay enactment. The stamp duty that is pevalent in our State is the highest and I think there should be some reduction in the stamp duty that is chargeable.

So far as other transactions are concerned, under this legislatiion forward contracts or ready-delivery contract for which exemption was given is now taken away and the amendment seens to achieve objects that have been made in the Bombay Act which is stated in the Bill that has been presented for circulation. Sir, in Bombay, scrips, debentures, cotton, bullion, spices, etc., have all been included. So far as taxing of these articles is concerned, whether it would push up prices or not is a debatable point. I think there will be pushing up of prices on account of this legislation.

I was just seeing whether a Financial Memorandum was appended to the Bill that was circulated to us. To my surprise and dismay, I do not find a Financial Memorandum appended to this Bill. I think there is a serious lacuna in regard to this. The anticipated income or revenue that is going to be derived by this legislation has not been mentioned. I think the Hon. Minister would clarify that position. Normally whenever a Bill is brought forward, a Financial Memorandum is appended to the Bill and I hope such information would be forthcoming from the Hon. Minister. To my surprise, nothing has been mentioned in the Bill. What would be the volume of revenue that would be available to the Government by adopting this amendment to the Stamps Act should be stated.

I think in the matter of Stamp amendment, there should be a uniform policy throughout all the State so that these "Forward Contracts" and "Delivery Contract" would be uniform throughout India. So much so, one State cannot take advantage at the cost of state capital moving from one State to another State.

This comes under the Concurrent List. The State Legislature is competent to carry out this amendment. I think it would be better and advisable if we also fall in line with other States. I think there are 3 or 4 Commercial States in the Indian Union. Among them, Maharashtra tops the list, Bengal and Gujarat occupy the next place and Tamil Nadu occupies the next place. I think it would be better if we compare the Stations that are similar to us and the practice obtained there. It would be better



if we compare our State with Gujarat, West Bengal and other States in order to bring a uniform legislation with regard to imposition of Stamp Duty.

Another point that I would like to suggest is this. We must take into ionsideration whether this legislation would affect the Trade and Commerce that are now prevalent within the Tamil Nadu State. Now the forward contracts are prohibited with regard to foodgrains. Similarly, with regard to essential and very valuable articles prohibition has been imposed. These things should also be examined in the light of the imposition of new stamp duty that is being brought forward under this legislation. Barring that, this legislation would be beneficial as far as our State is concerned and our State revenue would be augmented.

With these observations, I conclude, Sir.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இந்த ஸ்டாம்ப் டியூட்டியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்து பட்டியில் 1958-லிருந்து போடப்பட்டிருக்கிறதே இந்தத் முத்திரைத்தாள் கட்டணம், என் நம்முடைய மாநிலத்தில் காலம் கடத்தப்பட்டிருக்கிறது என்ற ஒரு கேள்வியை கேட்டார்கள்.

ஒரு சில ஆண்டுகளாகவே பரிசீலனை செய்துகொண்டு வருகிறோம். இங்கே பேசிய என். கே. பழனிசாமி அவர்கள் இதனால் எந்தவிதமான கஷ்டமும் ஏற்படாது என்று தெரிவித்திருக்கிறார்கள். போடப்பட்ட கட்டணம் மிகக் குறைந்த அளவுக்குத் தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. என். கே. பழனிசாமி அவர்கள் சொன்னதைப்போல ஃபார்வேர்டு காண்டிராக்ட், ரெடி டெலிவரி காண்டிராக்ட் போன்ற அந்த வகைகளுக்குத்தான் இந்தக் கட்டணம் விதிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் பினான்சியல் மெமோராண்டம் இல்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். இதிலே செலவு செய்கின்ற நிலை இல்லை. இந்தக் கட்டணத்தைப் பொறுத்த அளவிலே அரசாங்கத்திற்குச் செலவு ஏற்படுவதில்லை. அரசாங்கத்திற்கு வருமானம் வருகிற ஒரு நிலை இருக்கிற

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஏப்ரல் 10

காரணத்தினால் பினான்ஷியல் மெமோராண்டம் தேவை இல்லை என்ற கருத்து சொல்லப்படுகிறது. எனவேதான் இங்கே அது குறிப்பிடப்படவில்லை.

ஆன்டிஸிபேடட் ரெவின்யூ எவ்வளவு என்று உறுப்பினர்கள் கேட்டார்கள். இந்தப் பிரச்னையை அரசும்கூட பரிசீலித்துப் பார்த்ததில் இதைப்பற்றியெல்லாம் விவரங்களைச் சேகரித்த பொழுது Anticipated revenue—Duty leviable on forward contracts. Proposals to levy duty under Article 5 of Schedule I of the Indian Stamp Act, 1899—Anticipated revenue report

இதைப்பற்றி ரிப்போர்ட்டு கேட்டதில்

The Board submits that at present Forward Contract agreements and rate delivery contract agreements are exempt from Stamp Duty and it will not be possible to calculate the anticipated revenue. The transactions on these items and amount involved could not be ascertained.

Further, the Board of Revenue has called for reports regarding the anticipated revenue that is likely to be realised with reference to rates of duty as proposed. The documents in regard to forward contracts are exempt from Stamp Duty. Such documents are neither sent for adjudication nor for registration The amount involved in the transactions under these items could not be ascertained. Unless approximate total amount involved in transactions under each category is ascertained, it is not possible to calculate the anticipated revenue. Hence, the particulars called for could not be furnished.

என்றுதான் அவர்கள் அறிக்கை தந்திருக்கிறார்கள். எனவே, ஆண்டிஸிபேடட் ரெவின்யூ என்னவென்று சொல்வதற்கு இயல வில்லை என்ற ஒரு நிலைதான் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** I am sorry to disturb you. I want to elicit one information ஸ்டாம்ப் டியூட்டியைப் பொறுத்தவரையில் ஆன்டிஸிபேடட் ரெவின்யூ எவ்வளவு என்பதை அஸெஸ் பண்ண முடியவில்லை என்று அதிகாரிகள் சொன்னதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.



1974 ஏப்ரல் 10] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

ஆனால், ரஃப்பாகக்கூட எவ்வளவு நடந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லையா? பம்பாயில் ஜாஸ்தியாக நடந்து கொண்டிருக்கிறது. இங்கே இந்த மசோதா கொண்டு வந்தது பற்றி வரவேற்கிறேன். ஓரளவுக்காவது அஸெஸ் செய்து 'இன் டேர்ம்ஸ் ஆஃப் லாக்ஸ் ஆர் குரோர்ஸ்' ஒரு கோடி ரூபாய் அல்லது 50 லட்சம் என்று ஒரு ரஃப் எஸ்டிமேட் கொடுக்கா விட்டால் இந்த மன்றத்தில் எப்படி இதைப் பற்றிப் பேசமுடியும?

அதிகாரிகள் ஏன் முடியாது என்று சொல்கிறார்கள் என்பது எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அந்த விவரத்தை சேகரிக்க முடியாது, கஷ்டம்தான். ஆனால் அதிகாரிகள் வாங்கிக் கொடுத்திருக்கலாம். நீங்கள் விவரம் கேட்டீர்கள். அப்படி கேட்டும்கூட இல்லை, முடியாது என்று அதிகாரிகள் சொல்லியதிலிருந்து எந்தவிதமான எஃபர்ட்டும் அங்கே போகவில்லை என்றுதான் தோன்றுகிறது. அவர்கள் இது விஷயத்தில் போதிய எஃபர்ட்டு எடுத்துக் கொண்டார்கள் என்ற நம்பிக்கை ஏற்படவில்லை. ஒரு கோடி அல்லது 1½ கோடி என்று ரஃப்பாகச் சொன்னால்கூட போதும்.

* **திருமதி த. ந. அனந்தநாயகி:** என்ன வருமானம் வரும் என்று தெரிந்து கொள்ளமுடியாத அளவுக்கு இன்றைக்கு ரிகார்ட்ஸ் இருக்கின்றன. பட்ஜெட்டில் எந்தெந்த வரியைப் போடப் போகிறோம், நிதி நிலையை சமாளிக்க இந்த வரி போடப் போகிறோம், அந்த வரி போடப் போகிறோம் என்று சொல் கிறார்கள். ஆனால் இந்த ஸ்டாம்ப் ஆக்ட்டில் ஃபார்வேர்டு கண்டிராக்ட் பற்றி சொல்லவேயில்லை. வரவு-செலவுத் திட்டத்தில் அதைப் பற்றி இன்பர்மேஷன் கிடையாது, மென்ஷனும் கிடையாது. ஏதோ வருவதையெல்லாம் வரப்படுத்திக் கொள்ளலாம் என்று போடுகிறார்களா? செலவுகளைச் சரிக் கட்டுவதற்கு மோட்டார் வரியை ஏற்றுகிறோம், அந்த வரியை ஏற்றுகிறோம், இந்த வரியை ஏற்றுகிறோம் என்று வரவு-செலவுத் திட்டத்தில் சொன்னார்கள். எந்த நிலையில் ஏற்றுகிறார்கள், எந்த நிதிநிலையில் பற்றாக்குறை, அதை எப்படி சமாளிக்கப் போகிறீர்கள் என்பதைப் பற்றி ஏதாவது

இன்பர்மேஷன் கொடுத்தால்தானே எங்களுக்கு நலமாக இருக்கும். ஒரு கிளீயர் பொஸிஷன் சட்டசபைக்குக் கொடுப்பதே இல்லை என்று ரொம்ப வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்களும், திருமதி அனந்தநாயகி அவர்களும் ஆன்டிஸிபேடட் ரெவின்யூ எவ்வளவு என்று சொல்லப்படவில்லை என்ற நிலைமையை எடுத்துச் சொன்னார்கள். நான் விரும்புவதெல்லாம், சட்டமன்றத்திற்குக் கொடுக்கும் தகவல் சரியாக இருக்கவேண்டும், கரெக்ட் இன்பர்மேஷன் கொடுக்க வேண்டும் என்பதுதான். ஏதோ ஒட்டுமொத்தமாக சொல்லிவிட்டு, பிறகு வித்தியாசம் வந்தால், டாக்டர் ஹாண்டே அவர்கள் ஏதாவது பிரச்னையை கிளப்பக்கூடாது என்ற எண்ணத்தில்தான், நாம் கொடுக்கிற விவரங்கள், புள்ளிவிவரங்கள் சரியானதாக இருக்க வேண்டும், கரெக்ட் இன்பர்மேஷன் அண்டு ட்ரூ இன்பர்மேஷன் கொடுக்கவேண்டும், 'Correct and True information should be given' என்ற முறையில்தான் ரஃப்பாகக்கூட கொடுக்கவில்லை.

சென்னை மாநகரத்தில் எந்த நிறுவனங்கள் இதுபோன்ற பார்வேர்டு காண்டிராக்ட், ரெடி டெலிவரி காண்டிராக்ட் செய்கின்றன என்ற விவரங்கள் இருக்கின்றன. அந்தப் புள்ளி விவரங்களையெல்லாம் சேகரித்திருக்கிறார்கள். திட்டவட்டமாக கணக்குக் கொடுக்கிற அளவுக்கு முடியவில்லையே தவிர, எந்தெந்த நிறுவனங்கள் வியாபாரம் செய்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் இருக்கிறது.

அதிகாரிகளும் இந்த விவரங்களை சேகரிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் இதைப் பரிசிலனை செய்து புள்ளிவிவரங்களை அரசுக்குத் தருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் இன்னும் சில பொருள்களையெல்லாம் இந்தப் பட்டியலில் சேர்த்திருக்கலாமே என்று கேட்டார்கள். சுமார் 20, 30 ஐட்டெம்ஸ் இருக்கின்றன. அவைகளைச் சேர்த்திருக்கலாம் என்று சொன்னார்கள். அப்படி அவசியமாக





இருக்குமானால், நிச்சயம் அரசு இது போன்ற கட்டணத்தை வசூலிப்பதை விட்டுவிடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக, இந்த மசோதா தேவை என்ற ஒரு கருத்தைத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே இந்த மசோதாவை ஏற்றுக்கொண்டு அதைச் சட்டமாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.30)

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, on a point of clarification. Forward contracts on foodstuffs like oil seeds would boost up the prices of foodstuffs. It will only lead to inflation. So, the forward contract itself should be stopped. Will the Government see that those items are taken away from the forward contract? We must discourage such contract

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஸ்டாம்ப் கட்டணம் மிகவும் குறைவு. விலையைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு இல்லை. உணவுப் பிரச்சனைகளைப்பற்றி அம்மையார் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இதனால் உணவுப்பொருட்கள் விலை ஏறிவிடும் என்று சொல்கிறார்கள். இதைப்பற்றி உணவுப்பிரச்சனை வரும் போது கவனித்துக்கொள்ளலாம். இதில் அந்தப் பிரச்சனை வராது. It is only a duty on agreement or memorandum of agreement. It is not a duty on Commodity.

பத்திரத்தின்மேல்தான் விதிக்கப்படுகிறதே அல்லாமல் பொருட்களின்மீது விதிக்கப்படுவதல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** Such an agreement should be totall prohibited. It should be discouraged.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** They are liable to pay the duty.

**திரு. என். கே. பழனிசாமி:** 2,500-க்கு 40 காசு போட்டால் எப்படி விலை ஏறும் என்ற முறையில் அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். குறைந்த அளவிலே இருந்தாலும் கீழே இருப்பவர்கள் பாதிக்கப்படுவார்கள்; மேலே இருக்கிறவர்களுக்கு கவலை இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: இன்றைக்கு விற்கின்ற விலையில் ஒரு ஆயிரம் டன் அல்லது 5,000 டன் மிளகாயை வாங்கி பதுக்கி வைத்துவிட்டு, 4 மாதம் கழித்து விற்ருல் எவ்வளவு லாபம் வரும்? அதையெல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டாமா? இதனுல் ஒன்றுமே ஆகாது என்று சொன்னுல் போதுமா? பின் விளைவுகள் என்ன என்பதையும் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பதிலிலே எல்லாவற்றையும் விபரமாகச் சொல்லியிருக்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, there are many instances where transactions are done in Bombay but the Madras address is given. It looks as if the forward contract is done in Madras. So, this Bill will certainly plug loopholes in such unholy transactions in Bombay. The point is that firm dealing with forward contract is in Bombay but they give Madras address.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அம்மையார் அவர்கள் உணவுப் பொருட்களின் விலை அதிகமாகிவிடும் என்று சொல்லியிருக்கிருர்கள். அதனுல் இந்தமாதிரியான 'பார்வெர்டிங் கான்ட்ராக்ட் ஸிஸ்டத்தை' எடுக்க முடியாதா என்று கேட்கிருர்கள். இந்த அரசாங்கத்தால் எல்லாவற்றையும் தேசிய மயமாக்கிவிட முடியாது; மத்திய அரசுதான் அதற்கு அனுமதி தரவேண்டுமென்று நினைக்கிறேன். எனக்கு சரியாகத் தெரியாது; அமைச்சரவர்கள்தான் அதற்குச் சரியான விளக்கத்தைத் தர வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் ஹாண்டே அவர்கள் சொல்வது ரொம்ப ரொம்ப சரி. டில்லியிலேதான் அதற்கு அதிகாரம் இருக்கிறது. விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம், வியாபாரம் எப்படி நடக்க வேண்டுமென்று சொல்கின்ற அதிகாரம் எல்லாம் மத்திய அரசிடம் தான் இருக்கிறது.





மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்): பேரவை முன்னுள்ள கேள்வி—

"1974-ம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 11/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, "1974 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/74) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

### (4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/74).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

[மாற்றுத் தலைவர்] [1974 ஏப்ரல் 10

தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/74) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/74).

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்." என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீது உச்சவரம்பு கட்டுதல்) சட்டம் (தமிழ் நாடு சட்டம் 58/1961) செயலுக்குவரத் தொடங்கிய நாளன்று உச்சவரம்புக்கு மேற்பட்டு நிலம் வைத்திருக்கும் ஒருவரது நிலத்தின் உச்சவரம்பினை முதல் முறையாக நிச்சயிப்பதற்காக அதிகாரம் பெற்ற அதிகாரியால் அறிவிப்புத் தேதி அன்று அல்லது அதன்பின்னரும் 12 அல்லது 14 ஆவது பிரிவின் கீழ் இறுதியான அறிக்கை வெளியிடப் படுவதற்கு முன்னரும், செய்யப்பட்ட மாற்றம் அல்லது உட்பிரிவினையைக் கருத்தில் கொள்ளக்கூடாது என்று மேற்படி சட்டத்தில் 23 ஆவது பிரிவு வகை செய்கிறது. அறிவிப்புத் தேதி அன்று அல்லது அதற்குப் பிறகும் 12 அல்லது 14 ஆவது பிரிவின் கீழ் இறுதி அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னரும் செய்யப் பட்ட ஒரு விற்பனையை செல்திறன் அற்றது என்று அறிவிக்க

* 3-4-1974-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1974 ஏப்ரல் 10] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

23 ஆவது பிரிவின் கீழ் செயல்படுகையில் அதிகாரம் பெற்ற அதிகாரிக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை என்று பி. இ. கலியபெருமாள் நாட்டாருக்கும், திருச்சிராப்பள்ளி அதிகாரம் பெற்ற அதிகாரிக்கும் (நிலச் சீர்திருத்தங்கள்) இடையே நடைபெற்ற வழக்கில், உயர்நீதி மன்றம் ரேல் முறையீட்டில் (ரிட் மேல் முறையீடு எண் 159/1969) தீர்ப்பு அளித்தது. நிலத்தை எடுத்துக் கொள்ளுவதற்கு அரசுக்கு உள்ள உரிமை 18 (1) பிரிவின் கீழ் அறிவிப்பு வெளியிடப்படும் நாளன்று தான் ஏற்படும் என்றும், 18 (3) பிரிவின்கீழ் வகை செய்யப் பட்டுள்ளவாறு அரசிடம் நிலைபெறாக நிலத்தினை எடுத்துக்கொள்ள அதிகாரம் பெற்ற அதிகாரிக்கு அதிகாரம் அளிப்பதாக 23 ஆவது பிரிவு பொருள் கொள்ளப்படக்கூடாது என்றும், அத்தகைய நிலம் குறித்து நிலம் மாற்றப் பெறுபவருக்கு உள்ள உரிமை பாதிக்கப்படாது என்றும் உயர்நீதி மன்றம் கூறியது.

உயர்நீதி மன்றம் அளித்துள்ள பொருள் விளக்கம் சட்டத்தின் நோக்கத்தையே தோல்வியுறச் செய்யும். சட்டத்தின் நோக்கத்தைத் தெளிவாக விளக்கும் பொருட்டும், அறிவிப்பு தேதிக்குப் பின்னரும் மேற்படி சட்டத்தின் 18 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்னரும் நில உச்சவரம்புச் சட்டத்தின் நோக்கத்தையே தோல்வியுறச் செய்யும் வகையில் நம்மிடமுள்ள உபரி நிலங்களை நில உரிமையாளர்கள் மாற்றுவதை அல்லது உட்பிரிவினை செய்வதைத் தடுப்பதற்காகவும், 23 ஆவது பிரிவிற்குப் பதிலாக புதியதொரு பிரிவை அமைத்துக்கொள்ள முடிவு செய்யப் பட்டுள்ளது. அறிவிப்பு தேதி அன்றும் அல்லது அதற்குப் பின்னரும் 18 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்பும் செய்யப்பட்ட மாற்றங்கள் அல்லது உட்பிரிவினைகள் அனைத்தையும் செல்திறன் அற்றதாக அறிவிக்கவும், அத்தகைய மாற்றம் அல்லது உட்பிரிவினை நடைபெறாமல் இருந்தாற்போலவே அத்தகைய நபர்களின் உச்சவரம்புப் பரப்பினைக் கணக்கிடவும் அதிகாரம் பெற்ற அதிகாரிக்கு அனுமதி அளிக்கவும் இப்புதிய பிரிவு வகை செய்கின்றது. மேற்படி முடிவிற்கு செயல்வடிவம் கொடுப்பதே இச்சட்ட வரைவின் நோக்கமாகும்.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஏப்ரல் 1

இப்பிரேரணையை ஏற்று நிறைவேற்றித் தருமாறு கேட்டு கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த நிலச் சீர்திருத்த மசோதாவின்மீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக, இன்றைக்கு பல்வேறு நிலச் சட்டங்கள் எல்லாம் போட்டாலும் சாதாரண சாகுபடியாளர்கள் அல்லது குத்தகைதாரர்களுக்கு—நிலத்திலே பாடுபடுகின்ற ஏழை மக்களுக்குப் பலன் அளிக்கின்ற வகையிலே அந்தச் சட்டங்கள் இல்லை. இதை அன்றைக்கு பொது விவாதத்தின்போது சொல்லும்போது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 'நான் எதிர்க் கட்சியிலிருந்து சொன்னதைத்தான் இப்போது வடிவேல் அவர்கள் சொல்கிறார்கள்' என்று குறிப்பிட்டார்கள். அதற்கான ஆதாரங்களை எல்லாம் கொண்டு வந்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கவனத்திற்காக அவைகளை அளிக்கிறேன்.

1961 ஆம் ஆண்டு சாகுபடியாளர்கள் 46,07,000 என்று கார்த்திகேயன் கமிட்டியினர் சொல்லியிருக்கிறார்கள். 1971 ஆம் ஆண்டு 64,58,000 வருகிறது. அதைப் பார்க்கும்போது 1961 இல் இருந்ததைவிட 1971 இல் 12.4 சதவிகிதம் விவசாயக் கூலிகள் அதிகரித்திருப்பதைக் காணலாம். எத்தனை சட்டங்களைப் போட்டாலும் இன்றைக்கு இருக்கிற நிலைமை, நிலச் சொந்தக் காரர்கள் குத்தகைதாரர்களை, ஏழை எளிய விவசாய மக்களை வெளியேற்றுகின்ற நிலைமை, வதைக்கின்ற நிலைமைதான் இருக்கிறது.

இந்த நேரத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கூறிய ஒரு கருத்து நினைவுக்கு வருகிறது. "கண்மூடி மௌனி போல் நின்று விவசாய மக்களின் கூலியை அபகரித்தால் என்ன செய்வேன்" என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதைத்தான் நம்முடைய கலைஞர் அவர்கள் பட்டித்தொட்டிகள் எல்லாம் ஏழை மக்களின் எண்ணங்களை ஈர்க்கின்ற வகையிலே பரப்பினார்கள். இன்றைக்கு சட்டச் சிக்கல் வரும்போது, எப்படி



எப்படி இந்த ஏழை எளிய மக்கள் பிரச்சினையை அணுகினால் அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள்; அவர்கள் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட மாட்டார்கள் என்று ஆராய்ந்து கவனம் செலுத்தியிருந்தால், நிச்சயமாக அவர்கள் காப்பாற்றப் பட்டிருப்பார்கள்; நாம் அதை ஏற்றுக்கொள்ள முடியும்; பாராட்டியிருப்போம்.

இன்றைக்கு சட்டத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள நிலங்களை எப்படி எப்படி எல்லாம் வைத்திருக்கிறார்கள் என்று உதாரணங்களோடு நான் சொல்ல முடியும். எங்கள் ஊரிலேயே சொல்கிறேன். ஒரு மிராசுதாருக்கு 40 வேலி நிலம்—அவர் மனையக்காரர் பேரில்—ஆளுக்கு ஆறு வேலி, ஆறு வேலி எழுதி வைத்தார், பெண்டாட்டி பேரிலே 12 வேலி எழுதி வைத்தார், அவரது சொந்தமாக இருப்பது 6 வேலி—அப்படி பெரும் பண்ணை மாறிவிட்டது—சிறு பண்ணையாக இங்கே ஆகிவிட்டது.

குறிப்பாக, நம்முடைய சட்ட அமைச்சர் மாதவன் அவர்கள் திருவாரூர் மகாநாட்டில் கலந்து கொண்ட காலத்தில் சட்டத்தில் இருந்து தப்பிக்க சென்னையில் உள்ள வழக்கறிஞர்கள்—பம்பாயில் இருக்கக்கூடிய என்ஜினியர்கள்—மருத்துவ தலைமை அதிகாரிகள் என்ன என்ன செய்திருக்கிறார்கள் என்பதை நான் ஆதாரப் பூர்வமாக நான் அன்றைக்கு எடுத்துச் சொன்னேன். ஆகவே, இந்த நிலச் சீர்திருத்தச் சட்டங்களை எல்லாம் ஒன்று சேர்த்து—ஓட்டையில்லாமல்—ஒருங்கிணைந்த ஒரு சட்டமாகக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு—முதலமைச்சருக்கு அந்த விவரங்களை எல்லாம் கொண்டுவந்து காட்டுகிறேன் என்று சொல்லி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற திருத்தச் சட்டத்தில் இருந்து எந்த அளவுக்கு நிலச் சீர்திருத்தச் சட்டத்தை முறியடிப்பதற்கு நாட்டிலே இருக்கிற நிலச் சொந்தக்காரர்கள் முயற்சி எடுத்திருக்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும். நாட்டில் இருக்கிற எல்லோருக்கும் தெரிந்த ஒன்று—பகிரங்கமாக கடைபெறுவது—நாம் உச்சவரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர்

என்று கொண்டுவந்தோம். அப்புறம் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று கொண்டுவந்தோம். ஆனாலும் 30 ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு நிலச் சொந்தக்காரர் எவ்வளவு நிலங்களை தம் சொந்தத்தில் வைத்துக்கொண்டிருந்தாரோ, அவ்வளவு நிலங்களை இப்போதும் வைத்துக்கொண்டு சாகுபடி செய்து வருகிறார். நிலம் பினாமியாகத்தான் பல பேர்கள் பெயருக்கு மாற்றப்பட்டிருக்கிறது. பொறுப்பு இவரிடமேதான் இருந்து வருகிறது.

நாம் கொண்டு வந்திருக்கிற நிலச்சட்டத்தின் லட்சியமே, நோக்கமே திட்டமிட்ட முறையில் முறியடிக்கப்பட்டிருக்கிறது. ஆக பினாமியாக சட்டப்பூர்வமாக நிலத்தை வேறு ஒருவர் பெயருக்கு மாற்றி, அந்த நிலங்களை எல்லாம் ஒருவரே வைத்துக் கொண்டிருப்பதை நாம் அனுமதிக்கக் கூடாது. நாம் இந்தச் சபையில் இதுபற்றி அடிக்கடி வற்புறுத்திச் சொல்லி வருகிறோம்.

அரசாங்கம் இது சம்பந்தமாக பினாமியை ஒழிக்க எந்த முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை. மேலும் அறிவித்த தேதிக்குப் பிறகு நிலத்தை மாற்றி இருந்தாலும், அப்படி மாற்றியதைத் தவறு என்று சொல்ல ஆதரைஸ்டு ஆபீசருக்கு அதிகாரம் இல்லை. இந்தத் திருத்தச் சட்டம் வருகிற சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்வது எல்லாம் நிலச்சீர்திருத்தச் சட்டத்தை நல்ல முறையில் அமல் செய்ய முழு முயற்சியைச் செய்ய வேண்டும் என்பதுதான்.

அடுத்து, குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம், நியாயவாரச் சட்டம், குடியிருப்புச் சட்டம் என்பதாக பல சட்டங்கள் இருப்பதை ஒழுங்குபடுத்தி ஒரு ஒருங்கிணைந்த சட்டம் கொண்டு வரவும் சரியான முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. அதற்கும் முயற்சி எடுக்கவேண்டும்.

இன்னும் சர்க்கார் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. பெரிய நிலக்காரர்கள் அவற்றை தம் நிலங்களோடு சேர்த்து அனுபவித்து வருகிறார்கள். நாம் நிலம் இல்லாதவர்களுக்கு புறம்போக்கு நிலத்தை அளிக்க வேண்டும் என்று அறிவித்து விட்ட பிறகு சொந்தமாக நிலம் உடையவர்களானாலும், அதிக நிலம் உள்ளவர்களானாலும் அவர்களிடம் இருக்கிற புறம்போக்கு





நிலங்களை எடுத்து நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** சபாநாயகர் அவர்களே, திருத்தச் சட்டத்தை நான் ஆதரிக்கிறேன். இது கிட்டத்தட்ட 61-லே சட்டம் நிறைவேறியது, 69-லே சட்டம் செல்லாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இன்றைக்கு அதற்கு திருத்தம் அதை வாலிட் ஆக்குவதற்காக வருகிறது.

61-லே சட்டம் கொண்டுவரப்பட்டபோதே நாங்கள் சொன்னோம். இது உச்சவரம்பு சட்டம் அல்ல என்று. 55 இல் இருந்தே சட்டம் வரும் என்று அறிவிக்கப்பட்டுவிட்டது. காங்கிரஸ் மகாநாடுகளில எல்லாம் சொல்லியாகிவிட்டது. இந்த மசோதா நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் அளிக்க இல்லை. நிலம் உள்ளவர்களை 30 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்குட்பட்டு தங்கள் நிலங்களை சட்டப்பூர்வமாக பிரித்து வைத்துக்கொள்ளத்தான் பயன்பட்டது.

நாராயணம் மானயித்வா ஜனயித்வா வானரம், என்பதாக நாராயணன் உருவம் செய்யப்போய் குரங்காக முடிந்தது என்பதைப் போல நிலத்தில் உழுது பாடுபடுகிறவர்களுக்கு நலம் செய்யப்போய் நிலமுடையவர்களுக்குப் பாதுகாப்பாகத்தான் அமைந்தது. பின்னர் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று குறைத்தோம். என்றாலும் கிராமங்களில் நிலச்சுவான்தார்களிடம் முன்பு இருந்த நிலம் அப்படியேதான் இருக்கிறது. ஆகவேதான் இந்தத் திருத்தச் சட்டத்திலே 1961 என்பதற்குப் பதிலாக 1955 என்று போட்டால்தான் சரியாக இருக்கும்.

பலபேர் பினாமியாக ஒருவர் பேரில் எழுதுவது, அவரிடம் இருந்தே அந்த நிலத்தை தம்மேல் அடமானம் செய்யப்பட்டிருப்பதுபோல எழுதி வாங்கிக் கொள்வது என்று வைத்திருக்கிறார்கள். இதுபோல கழுதை மேல் இருக்கிறது; குதிரைமேல் இருக்கிறது; வண்டிமேல் இருக்கிறது என்றாலும் அந்த பூமிகள் எல்லாம் நிலப்பிரபுக்களின் பொசஷனில்தான் இருக்கிறது. இந்த பினாமிகளை எல்லாம் நீக்க வேண்டும்.

[திரு. என். கே. பழனிசாமி] [1974 எப்ரல் 10

நிலச்சீர்திருத்தத்தை அமல் செய்ய பணம் வேண்டும். மத்திய சர்க்கார் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறோமா?

இங்கே நான்கு லட்சம் குத்தகைதாரர்கள்தான் பதிவு செய்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. சிறிய மாநிலமான கேரளத்தில் 27 லட்சம் பேர்கள் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். பாக்கி இருக்கக்கூடிய குத்தகைதாரர்கள் என்ன? மத்திய சர்க்கார் கமிஷன் வந்தது. குத்தகைதாரர் சட்டத்தைப் பொறுத்த சரியான முறையில் சிபாரிசு செய்யவில்லை. உச்ச வரம்புச் சட்டம், மிச்ச வரம்புச் சட்டம் என்ன சட்டம் கொண்டு வந்தாலும் வராவிட்டாலும் உழைக்கின்ற விவசாயி நிலத்தில் இருந்து வெளியேற்றப்படாதிருக்க ஒரு காம்ப்ரிஹென்சிவ் பில் கொண்டு வந்தாகவேண்டும், நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுத்தாக வேண்டும். குத்தகை பாக்கியை எல்லாம் குத்தகைதாரர்கள் ஒத்துக்கொள்ளத் தயாராய் இருக்கிறார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவர்களே, இந்தத் திருத்தத்தைப்பற்றி நான் சில கருத்துக்களைச் சொல்லும்போது, அடிப்படைக் கொள்கையிலே, அதாவது, நிலச்சீர்திருத்தத்திலே, எங்களுடைய கருத்து வேறுபாடு உள்ளதல்ல. அதை வரவேற்கிறோம்.

1961-லே முதன்முதல் இந்த நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவந்தார்கள், காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்த காலத்தில். அப்பொழுது, பல லூப்ஹோல்ஸ் அதிலே இருந்த காரணத்தினால், அவற்றை அடைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு பல திருத்தங்களை செய்திருக்கிறது.

ஆனால், எங்களுடைய குற்றசாட்டெல்லாம், காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்த காலத்திலும், தி.மு.க. ஆட்சியிலே இருக்கிற காலத்திலும், இந்தச் சட்ட நுணுக்கங்களை தனிப்பட்ட நபர் ஒருவர் கோர்ட்டுக்குச் சென்று, அதற்குத் தீர்ப்பு வந்து, அதற்குப் பின்னர் இதுமாதிரி சட்டம் கொண்டு வருகிற நிலைமை இருப்பது ஒரு அரசாங்கமும், அதற்குப் பின்னால் இருக்கிற சட்ட



1974 எப்ரல் 10] [திரு. கோவை செழியன்]

இலாகாவும், அதற்குப் பின்னால் இருக்கிற சட்ட அமைச்சரும் சரியாக இயங்கவில்லையென்ற குற்றச்சாட்டைத்தான் எங்களைப் போன்றவர்கள், வெளியே இருக்கிறவர்கள் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும்.

இந்தக் குறைகள் இல்லாத அளவிற்கு, இந்தச் சட்டம் கொண்டு வராத அளவிற்கு ஏற்கெனவே இருந்திருப்பார்களானால், நன்றாக இருந்திருக்கும். தனிப்பட்ட நபர் கோர்ட்டுக்குச் சென்று பெற்ற தீர்ப்பினை வைத்து, 1971-க்கு முன்னால் சப்-டிவிஷன்கள் செய்ததை எல்லாம், சப்-டிவிஷன்கள் செய்யாததைப்போல் கருதி, அங்கே இருக்கிற அதாரைஸ்ட் ஆபீஸர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று போகும்போது, அடிப்படை உரிமையை, இந்திய அரசியல் சட்டத்திலுள்ள ஃபண்டமெண்டல் ரைட் மீறப்பட்டது என்று கோர்ட்டுக்குச் சென்று, ஒரு தீர்ப்பு வந்ததற்குப் பின்னால் மறுபடியும் நாம் என்ன செய்யப் போகிறோம், மாற்றப் போகிறோமா என்ற விளக்கம் தெளிவாக இல்லை.

ஆகவே, இதைப்பற்றிய விளக்கத்தை அமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என்று விரும்புகிறேன்.

பொதுவாக நிலச்சீர்திருத்தம் வருகிறது என்றவுடனே பலபேர் அதிலேயிருந்து தப்பித்துக்கொள்வதற்கான பல சூழ்ச்சிகளைச் செய்கிறார்கள். இன்னாரும்கூட, அதை ஒரு செலக்ட் கமிட்டிக்கு விட்டு, ஓப்பீனியன் என்ன என்ன இருக்கின்றன என்பதையெல்லாம் பார்க்கவேண்டும். எனக்குத் தெரிந்து என்னுடைய மாவட்டத்திலே பல பேர் இந்தச் சட்டம் வருகிறது என்று தெரிந்த உடனே, தங்களுடைய ஆட்கள் பேரிலே சமையல்காரன் பேரிலே இந்தச் சட்டம் வருவதற்கு முன்னாலே நோட்டிபிகேஷன் வருவதற்கு முன்னாலே மாற்றி விடுகிறார்கள். பல பேர் மாற்றிவிடுகிறார்கள்.

இன்னும் சிலபேர் பெரிய மனிதர்களுக்குப் பயந்துகொண்டு அந்தச் சொத்தை அனுபவிக்காமலேயே இருக்கிறார்கள். அதை இன்னும் நடைமுறையிலே பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த அளவுக்கு ஆட்சேபணை இல்லாமல், மாற்றப்பட்ட சொத்துக்களை, அவர்களே அனுபவிக்க ஏதாவது வழிவகை செய்ய வேண்டும்.

அதற்கு அரசாங்கம் கண்டிப்பான நடவடிக்கை எடுப்பதற்கு வழி செய்கின்ற வகையில் சட்டத்தை மாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினரது கட்சியின் தலைவர் வெளியிட்டுள்ள ஒரு பிரகடனத்தில் தமிழ்நாட்டிலே உள்ள வயல்களை எல்லாம் தேசியமயமாக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறாரே, அந்த நிலச் சீர்திருத்தத்தைப்பற்றி நண்பர் செழியன் அவர்கள் என்ன கருதுகிறார்கள்?

திரு. கோவை செழியன்: நான் சொன்ன கருத்தை மறுபடியும் வலியுறுத்திச் சொல்கிறேன். முதலமைச்சரவர்கள் புரிந்து கொண்டிருப்பார் என்று நம்புகிறேன். நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையிலே எங்களுடைய கருத்து மாறுபட்டது அல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்களுடைய கட்சியின் தலைவர், வயல்களை எல்லாம் தேசியமயமாக்குவோம் என்று சொல்லியிருப்பது பற்றி, நண்பர் செழியனுடைய கருத்து என்ன?

திரு. கோவை செழியன்: இந்தச் சட்டத்திற்கும் இந்தத் திருத்தத்திற்கும் நீங்கள் கேட்பதற்கும் சம்பந்தமே இல்லை. அப்படி கேட்கும்போது எங்களுடைய கொள்கை என்ன என்று தெரிவித்துக்கொள்வோம்.

THIRU R. PONNAPPA NADAR: We want a straight answer from the hon. Member. We would once again appeal that a straight answer may be given by the hon. Member. He is a :all member of that party. He can give his opinion at least his personal opinion.

(திரு. என். கே. பழனிசாமி எழுந்தார்)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் என் மூலமாக கேள்வி கேட்டது திரு. கோவை செழியனை; அக்கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியது திரு. கோவை செழியன். (திரு. என். கே. பழனிசாமி தொடர்ந்து நின்று கொண்டிருந்தார்) நீங்கள்





உட்காருங்கள். திரு. பொன்னப்ப நாடார் என் மூலமாக திரு. கோவை செழியனைக் கேள்வி கேட்டார். ஆகவே, அவர்தான் அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க வேண்டும், நீங்கள் அல்ல.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவரவர்களே, அத்தகைய முற்போக்கான சட்டங்களை அரசாங்கம் கொண்டு வந்தால், உங்களை விட நாங்கள் முன்னாலே இருந்து . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சில நேரங்களில் அரசாங்கம் சோம்பேறித்தனமாக இருக்கலாம், பிற்போக்கு அரசாங்கமாக இருக்கலாம். அந்த நேரங்களில் சொல்லப்பட்ட வயல்களெல்லாம் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்ற கருத்து பற்றி, நீங்கள் வற்புறுத்துகிறீர்களா? உங்களுடைய கருத்து என்ன?

திரு. கோவை செழியன்: வயல்கள் மட்டுமல்ல, நாட்டிலே உள்ள எல்லாப் பொருள்களும், வீடுகள், நிலங்கள், சொத்துக்கள், சுகம் எல்லா பொருள்களையும் அரசாங்கமே எடுத்து நடத்தி விடலாம் என்பது எங்களுடைய குறிக்கோள். அதுதான் அல்ட்டிமேட் எய்ம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: திரு. செழியன் அவர்கள் சுகத்தைக் கூடப் பங்கிட்டுக் கொள்ளலாம் என்று கூறுகிறார்கள். அதை எப்படி என்று கூறினால். . .

திருமதி த. ந. அனந்தநாயகி: அவர்கள் கொள்கையைக் கேட்டால், சீனா. ரஷ்யாவைவிட ரொம்பத் தீவிரமாக இருப்பார்கள் என்று தோன்றுகிறது.

திரு. கோவை செழியன்: சொத்துக்களினாலே அனுபவிக்கின்ற சுகத்தை நான் சொல்கின்றேன். நீங்கள் அதற்கு வேறு குறுக்கு அர்த்தம் எடுத்துக் கொள்வீர்கள் என்றால், அதற்கு நான் பொறுப்பு அல்ல.

மாண்புமிகு மாற்றுக் தலைவர் (திரு. துரை முருகன்): சும்மா இருப்பதே சுகம் என்று சொல்கிறார்களே, அந்தச் சுகமோ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் நண்பர் அவர்களிடத்திலே தெரிந்து கொள்ளவிரும்புவது, கடைசியாக வருகின்ற சோஷலிச சித்தாந்தத்தை அல்ல. எல்லா சோஷலிசக் கட்சிகளும் அதைச் சொல்கின்றன. கம்யூனிஸ்ட்டு கட்சியும் சொல்கிறது, சோஷலிஸ்ட் கட்சிகளும் சொல்கின்றன. ஆனால், அதை உடனடியாக அடைந்துவிடவில்லை. அப்படி அடைவதற்கு முன்பாக, படிப்படியாகக் கொள்கையை, குறிக்கோளை, அவர்களுடைய கட்சியின் திட்டங்களை இதுபோன்ற மாமன்றங்களில் விவாதிப்பது முறையாக இருக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சி அந்த அடிப்படையில் சொல்கிறது. இந்த அளவுக்கு நிலச் சீர்திருத்தம் வேண்டுமென்று தங்களுடைய கருத்தினை திட்டவட்டமாகச் சொல்கிறார்கள். நான் அவர்களுடைய கட்சியின் சார்பாக, அ.தி.மு.க.-வின் சார்பாகச் சொல்லப்பட்ட, வயல்களைத் தேசியமயமாக்குவோம் என்ற கருத்தை என் செழியன் அவர்கள் இங்கே வலியுறுத்தவில்லை யென்று தான் கேட்கிறேன்.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, திருப்பித் திருப்பி, முதலமைச்சர் அவர்கள் என்னுடைய வாயிலிருந்து வேறு ஏதாவது மாறுபட்ட கருத்துக்களை வரவழைக்கலாம் என்று எதிர்பார்க்கிறார்கள். அது அல்ல. நான் ஏற்கெனவே சொல்லிய, வயல்கள், பூமிகள், சொத்துக்கள் இவற்றையெல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதிலே மாறுபட்ட கருத்து இல்லை. அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கிறது என்று சொல்லுங்கள். அந்த இடத்திலே உட்கார்ந்துகொண்டு சொல்ல வேண்டியதை இங்கே உட்கார்ந்திருக்கிறவனைப் பார்த்துக் கேட்டால் எப்படி? எங்களுடைய இலக்கு அது. பூமியாகட்டும், வயல்களாகட்டும், இவற்றையெல்லாம் அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதிலே வேறுபட்ட கருத்து இல்லை. அதை ஏற்றுக்கொள்கிறோம். ஆட்சியிலே இருக்கிறவர்கள் செய்ய வேண்டும்.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் கேட்பது, ஒரு முறையாவது நீங்கள் எங்களைப் பார்த்து, வயல்களை எல்லாம் தேசியமயமாக்குங்கள் என்று கேட்கக் கூடாதா என்பது தான். உங்கள் கட்சித் தலைவருடைய கருத்தை எதிரொலிக்கக் கூடாதா? கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய கருத்தை இங்கே வெளியிட்டது. நண்பர் வடிவேல் அவர்கள் பேசும்பொழுது, மிக முற்போக்கான கருத்துக்களைச் சொன்னார்கள். உங்கள் கட்சித் தலைவர் சொன்ன கருத்தை, வயல்களை எல்லாம் தேசியமயமாக்குங்கள் என்று ஏன் நீங்கள் கேட்கக் கூடாது? உங்களுடைய பேச்சிலே சொல்லவில்லையே, ஏன்?

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, எந்த எந்த நேரத்தில், எதை எதை சொல்லவேண்டுமென்று எங்களுக்குத் தெரியும். அந்த நேரத்தில் சொல்கிறேன். ஆக, இந்த திருத்தம் நான் முன்பே குறிப்பிட்ட மாதிரி, அடிப்படை உரிமைகளை மீறுகின்ற வகையிலே வந்ததாக, சுப்ரீம் கோர்ட்டோ அல்லது உயர் நீதி மன்றமோ தீர்ப்பு அளிக்காத வகையிலே அமையுமா என்று சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**THIRU R. PONNAPPA NADAR:** Sir, I would like to add a few remarks regarding this amendment.

My submission before the House is that this would open the flood gates of litigation because retrospective effect is sought to be given so far as this piece of legislation is concerned. I would in this connection just refer to the statement of objects and reasons given by the Hon. Minister. I would in this connection refer to this passage :—

"In order to make the intention clear and to prevent persons transferring surplus lands or making sub-divisions after the notified date and before the publication of the notification under sub-section (1) of section 18 and thereby defeating the purpose of ceiling law, it has been decided to substitute a new section for section 22 declaring void all transfers or sub-divisions effected on or after the notified date and before the publication of a notifica-

[Thiru R. Ponnappa Nadar] [1974 ஏப்ரல் 10

tion under sub-section (1) of section 18 and empowering the authorised officer to calculate the ceiling area of such persons as if no such transfer or sub-division has taken place."

So far as Transfer of Property Act is concerned, all vested rights are protected. Can this legislation divest that right? The law as it stands will have to be amended, whether we like it or not. The High Court has held that there is lacunae in the legislation that has been passed. In order to plug the loophole a new amendment is sought to be made and a legalising clause is sought to be introduced. Is it just and fair to divest the right which has already vested in certain parties? If there is a benami transaction, if there is bogus transaction or a colourable exercise of the rights that have been conferred under the Land Ceiling Act, I can understand that.

(நண்பகல் 12.00)

But, if it is a *bona fide* tansaction, if it is a transfer for value, will not the Transfer of Property Act vest valuable right in the transferees who have parted with good money and will it be possible to disturb it?

In Kerala, if the transferee is not affected by the Land Ceiling Act, he can retain that land. Why not we adopt such an amendment? Vested right canno tbe divested. I think Hon. Members and this House will agree with me when I say that we shall not tinker with the vested rights which have been inherited and which is passed on to the transferee who have taken documents under valid title.

That valid title cannot be destroyed by a legislation now. It may be argued that in the matter of tenancy legislation and land ceiling, protection is given under the Constitution. But are we justified? If it is a colourable exercise of the rights conferred under the Act, I can understand some deviation can be made.



1974 ஏப்ரல் 10] [Thiru R. Ponnappa Nadar]

But if the transferee has made improvement, put up buildings or if he has effected some valuable improvement which would improve the property, will it be possible to declare such transactions as void? If we do so, are we going to give any land pensation for the improvement that have been made on the land subsequent to the date on which the original transfer has been made.

Sir, it may be said that certain persons have created trusts. Trusts are a head-ache. There is a plethora of them in Tamil Nadu. A legislation regarding trusts will have to be examined by Parliament. I do not think we possess sufficient authority to bring in consolidated legislation on the working of these Trusts. We know for certain that there are many bogus trusts and that is the reason why I say this. There are religious trusts, Charitable trusts and other kinds of trusts created by big business houses and such trusts will have to be administered with great care and caution. It is just to defeat the taxation law that most of these trusts have been created.

As a matter of fact, the beneficiaries under the Trusts are not the real beneficiaries, but the creators of these trusts themselves. So far as creation of these trusts and other things are concerned, it is a matter which will have to be considered at great length. I think a comprehensive legislation will have to be brought forward.

Now, when the land ceiling measure was passed, it had been accused on the floor of the House that the legislation was brought forward by the then Congress Government just to help land lords. What is the surplus that has been got and has it been given to the poor people? Is there any significant improvement? These are matters which will have to be gone into and will have to be examined.

I think, Sir, this legislation even though brought to plug the loopholes pointed out by the High Court, there would be serious difficulties and legal flaws. If we try to divest people of their

vested rights, it will adversely affect the real persons who have parted with money. I think the Hon. Minister will examine that aspect as well.

If this amendment goes before a court of law that will have to be scrutinised by the court of law. I do not fight shy and say that this House has no right to legislate. But we have to consider are we justified in making such sweeping things. I think the matter of giving retrospective effect from the date of original notification is a matter which will have to be considered seriously. With these words, I conclude, Sir.

THIRU M. A. LATHEEF: Sir, I wish to offer a few remarks on the amending Bill.

Though I have wholeheartedly supported all the measures of the Government brought forward to bring in agrarian reforms of far-reaching character and to accomplish socialistic aspirations, now the Bill as has been drafted, I submit I am obliged to oppose it.

My work has sufficiently been lessened by the observations that have been made by our learned Leader of the Congress Party Mr. Ponnappa Nadar.

What I submit is this Bill compartmentalises itself into a legal isolation, constitutional separation and constitutional fissiparity. It tries to validate what it should not validate. We know the Bills as has been presented to us by the Hon. Minister—this amending Bill has been brought forward as a result of the opinion expressed by their Lordships of the High Court of Madras in the Kaliaperumal case very recently with reference to Section 23 of the parent Act. The difference is this.

As has been pointed out, the difference is in respect of the power of the authorised officer to acquire lands and to declare lands as excessive under Section 23 of the parent Act. The difference has been pointed out by their Lordships of the High Court that the authorized officer while acting under section 23 has not been given any power to declare void any sale affected on or after the notified date and before the publication of the final statement under section 12 or 14 of the parent Act.



"What I submit is that this Bill as has been drafted is this: "Section 23—Transfers or sub-divisions made or effected before the publication of notification under sub-section (1) of section 18: Subject to the provisions of section 20, for the purpose of fixing, for the first time after the date of the commencement of this Act, the ceiling area of any person holding land on the date of the commencement of this Act in excess of 30 standard acres ........

Now what I submit is this. This seeks to validate even the transfers and sub-divisions made. The Hon. Minister may say by way of clarification or by way of defence that under Article 31-B —that will be the only answer—the Government is empowered to declare any excessive land and to exercise any power to accomplish the social purposes for which these measures have been brought forward by the Government.

What I submit is this. Even Article 31-B does not empower the Government. They are not empowered. Article 31-B visualises cases that have been enumerated under Article 31-A and the IX Schedule of the Constitution. It is not only a question of divesting as has been pointed out by our learned Friend, Mr. Ponnappa Nadar. But the question of divesting of the title, legal transfer of the title is there; it is also challenging the constitutional, legal inherent rights that have been already vested in the individuals and group of individuals.

If the question of sub-divisions comes by way of benami transaction or bogus trasaction in order to defeat the land reform legislation, if some groups of individuals bring out sub-divisions by benami transactions, then the Government can exercise their powers. But the purpose of this Bill is different.

Take for example. It attracts the mischief of so many constitutional provisions. We have the law of inheritance. We have customary laws. We have the rights provided under the Constitution. There is also Succession Laws. Under the Customary Laws, under the Inheritance Laws, and under the Succession Laws, a family is a joint family. The land is a composite land and the land is owned by a family and it is still undivided. But that does not mean that particular land belongs to one particular gentleman or person it belongs to all the legal representatives of the family, to

all the inheritors of the deceased person who has left the land or bequeathed that piece of land. The actual sub-division of land is not there. There is only the question of each person sharing the land. It cannot be questioned or challenged in a Court of law. The legal sub-division is not there.

Therefore, if you give such arbitrary and sweeping powers to Authorised Authority, viz., any sub-division effected on or after the notified date and before the publication of a notification under sub-section (1) of Section 18 shall be and shall be deemed always to have been, void by the Authorised Authority. How are you going to say that these persons' share given under the Customary law, Inheritance law, would not be challenged or questioned in a Court of Law ?

That is why I submit that this Act goes against the constitutional rights. It is trying to violate the legal discipline. It has not viewed the constitutional rights, the inheritance rights, the legal discipline. It has not been properly viewed. It has not been viewed in a proper perspective. Therefore, it is going to be challenged in a Court of Law. Why don'b you bring a comprehensive law as suggested by the hon. Members here ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I am not able to understand what is meant by comprehensive law. Whenever defects are found in a legislation, the Government brings forward an amendment. The Government cannot anticipate all the defects and bring a comprehensive law. Even in the Privy Purse Abolition Bill, the Government brought forward a Bill to rectify the defects pointed out by the Supreme Court. Whenever difficulties or defects arise, amendments shall be brought forward.

THIRU M. A. LATHEEF : My point is this. We do not want this legislation to go to the Courts of Law for adjudication. The Department of Law is there and responsible members of this House are here. We anticipate that there will be some legal defects. When we point out, it can be rectified. It is for this purpose, the Law Department is there and also to suggest remedial measures to the defects pointed out by the Court.



Therefore, we must have what is called the legal discipline, the legal training, the legal understanding and also understand the legal implications. Without understanding the legal implications, without understanding the importance of legal discipline there is no use in bringing this amendment. The High Court has given a definition to a particular section and that has been accepted by the Government. It has been stated that it would come within the purview of Article 31 (*b*) of the Constitution.

I would like to know how Article 31 (*b*) can come to your rescue with regard to Inheritance Law, with regard to Succession Law, with regard to Customary Law and Individual Right. Even as a Member, I am not able to understand this.

I am with you so far as Agrarian Reforms are concerned. I am with you for establishing an egalitarian Society. I am with you for accomplishing an egalitarain Society. I am with you for social justice and I am with you for social programmes and for socialistic measures. Whenever we enact a law, it must be a law and it should not be something like a law. வெண்ணெய் வெண்ணெயாகத்தான் இருக்க வேண்டும். சுண்ணாம்புகூட வெண்மையாகத்தான் இருக்கிறது.

This law is something like a law. It violates legal discipline and individual rights. Therefore, I submit to the Hon. Minister for Revenue to withdraw this Bill so that it may be gone through and brought forward after proper scrutiny. Even the parent law has created some practical difficulties with regard to lands owned by religious institutions. Even at that time, I was quite clear and pointed out that it would affect the rights of the religious institutions.

*திரு. என். கே. பழனிசாமி:* இப்படிக் கொண்டுவரலாம், இப்படிக் கொண்டுவரலாம் என்று சொல்வதை விட, எப்படி இருக்க வேண்டுமென்று அவர்களே ஒரு திருத்தம் கொடுத்திருந்தால் நல்லது.

THIRU M. A. LATHEEF : Even now I am requesting as a lawyer with all my bonafides that this Bill should be withdrawn. I am not opposing the Government's policy to bring about agrarian reform. I am with the Government. As a lawyer I submit that it should be withdrawn in the interest of all.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Lawyer for the people.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்):** அங்கத்தினராக இங்கே பேசவேண்டும். வக்கீலாகப் பேசக்கூடாது.

THIRU M. A. LATHEEF: Unfortunately, I am a lawyer member. As a lawyer with all the sense of responsibility at my command—as a lawyer for the people—and with all humility at my command, with all the respect that I have for the Hon. Minister, and Chief Minister, I request the Hon. Minister to withdraw this Bill and present a new Bill. I am sure and certain that it is going to be struck down again by the Courts because it affects the individual rights.

It is a law which will create legal fissiparity, legal isolation, and it affects the individual rights given under the Constitution. If we do not accept a particular provision of the Constitution, it will be difficult and therefore I submit through you, Mr. Speaker, to the Hon. Minister to withdraw this Bill and recommit it to the Law Department, or to a Joint Select Committee consisting of the Members of the House and Preserve the dignity of the House. Thank you, Sir.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, அவையின் முன்னல் இருக்கின்ற இந்தத் திருத்தம் மிக முக்கியமான ஒரு திருத்தமாகும். இது அவசியமான திருத்தம் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். இந்தச் சட்டத்திலே

23 of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Section Act 1961 states :—

For the purpose of fixing for the first time after the date of commencement of this Act, the ceiling area of any person holding land on the date of the commencement of this Act in excess of 30 standard acres—

"the Authorised Officer shall not take into consideration any transfer or any sub-division effected on or after the notified date and before the date of the publication of the final statement under





Section 12 or 14. இதிலே சொல்லப்படுவது, the Authorised Officer shall not take into consideration இந்தப் பகுதியைப் பற்றி உயர்நீதி மன்றத்திற்குச் சென்றபொழுது சில விளக்கங்கள் கொடுக்கப்பட்டன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்திப் அவர்களுடைய வாதம் மிகவும் காரசாரமாக இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினராக இருக்கின்ற வழக்கறிஞரேகூட உயர்நீதிமன்றத்திலே இங்கு எழுப்பிய அந்தப் பிரச்னைகளை எழுப்பவில்லை. எழுப்புவதற்கான வாய்ப்பு இல்லை என்று கருதி எழுப்பாமலிருந்து இருப்பார்கள் என்று கருதுகிறேன்.

இந்த விளக்கத்தை தரும்பொழுது உயர்நீதிமன்றத்தில் ரிட் பெட்டிஷனுகவும் பிறகு ரிட் அப்பீலாகவும் சென்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் சொல்லியது மாதிரி ஐந்தாறு ஆண்டுகாலமாக என்று சொல்லக்கூடாது. கடைசியாக சீஃப் ஜஸ்டிஸ் திரு. வீராசாமி அவர்களும், ஜஸ்டிஸ் திரு. இராகவன் அவர்களும் தீர்ப்பு கொடுத்தது 23—1—1973-ல்.

23-1-1973 அன்று கொடுத்திருக்கும் தீர்ப்பில் சில பகுதிகளைப் படிப்பது அவசியமென்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உதவியாக இருக்குமென்ற எண்ணத்தோடு படிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சட்டம் தெரியாது என்ற நோக்கத்தோடு அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

செக்ஷன் 23 : 'The direction in the section is to the Authorised Officer which is that, for the purpose of fixing for the first time, the ceiling area of any person holding land on the date of the commencement of the Act in excess of 30 standard acres, he shall ignore any transfer whether by sale or by gift etc., effected on or after the notified date and before the date of the publication of the final statement under Section 12 or 14. In sharp contrast to Section 22, the Authorised Officer while acting under Section 23 has not been given any power to declare such sale deed to be void. The Section also does not say that the transfer by itself will be bad for any reason. The transfer is not rendered void either expressly or by any statement in the section. The section does not deal with the transferee's rights.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஏப்ரல் 10

It is true that several possibilities may be contemplated with reference of Section 28. One of them, to take an extreme case, may be of a person holding agricultural land in excess of 30 standard acres at the commencement of the Act. After filing a return but before the vesting of surplus land he has transferred the entirety of the land in his holding. The question may arise what should be done in such a case. If the Authorised Officer is to ignore the transfer made by the transferor, the transferee's rights will come in the way of actually taking the land, and be it noted that the State's right to take the land will arise from the date of vesting on notification under Section 18 (3). Instead of transferring the entire land, the transferor conveys just an extent in excess of the ceiling limit. In that case, the effect of ignoring the transfer would be that the Authorised Officer may be entitled to take over what could have been regarded as excess before the transfer out of the lands still in the hands of the transferor; but be it noted that this, he can do only when the land which he proposes to take has, by a notification under Section 18 (3), vested in the Government . . . .'

செக்ஷன் 18 (3)-படி கவர்ன்மெண்ட்க்கு வெஸ்ட் ஆகும் வரை அவர்கள் செய்கிற பாராதீனங்கள், டிரான்ஸ்பர்கள் வாய்டு என்று இருக்கக்கூடாது.

"The Authorised Officer is not empowered to declare them as void"

என்று சொல்லப்பட்டதால் அதுதான் நம்முடைய நோக்கம் என்பது மிகத் தெளிவாக இருக்கிறது. இப்போது கொண்டு வந்திருக்கும் திருத்தத்தில் கூட

"The Authorised Officer shall not take into consideration any transfer"

என்றுதான் இருக்கிறது. வாய்டு என்று சொல்லவில்லை என்ற ஒரே காரணத்திற்காக இது போன்ற டிரான்ஸ்பர்களை அனுமதிக்க ஆரம்பித்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியது போல் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதே கஷ்டமாக இருக்கும். பினாமி டிரான்சாக்ஷன்ஸ். போகஸ்



1974 ஏப்ரல் 10] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

டிரான்சாக்ஷன்ஸ், பலவிதமான மாற்றங்கள் எல்லாம் செய்து விடுவார்கள் என்ற எண்ணத்தில் சட்டத்தில் இருக்கிற குறையைச் சுட்டிக்காட்டிய பிறகு இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவது அவசியம் என்று கருதிய காரணத்தால்தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, it is a very important amendment. When the Authorised Officer is given such kind of power to declare any transfer or sale as void, I would like to know whether the Authorised Officer appointed by the Government is legally qualified. Because the Authorised Officer must hear both the parties and then come to a conclusion whether the sale is bonofide. For such things the Authorised Officer must be legally qualified and he must have legal background.

THIRU M. A. LATHEEF: Sir, what I submit to the Hon. Minister is that in Section 23 (b) the expression 'any sub-division' is used without there being any qualification.

Section 23 (b) says--

'Any sub-division (including sub-division by a decree or order of a civil court or any other lawful authority) whether by partition or otherwise : ......'

In this context, I would like to submit that a father dies and there are two brothers and further issues for those two brothers. They live as joint family and subsequently they render partition. Under the Hindu Law, under the Muslim Law and under other Personal Laws, even though the real property is not rendered into partition, there is always the legal partition which has been accepted by all the Personal Laws of the State. You cannot challenge it because it has been accepted by the Personal Law. So, what you have proposed is against the Constitution and it will be struck down by the court. You can qualify it by using the expressions like 'bogus subdivisions' or 'benami subdivisions'. You simply say 'any partition' and that is something unique. So far as we, the lawyer-Members are concerned, we feel that it violates the constitutional provision and the legal discipline.

(பிற்பகல் 12-30)

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அப்படி தீர்ப்பளிக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அரசியல் சட்டத்தில் பாதுகாப்பு இருக்கிறது. ஹைகோர்ட் தீர்ப்புக்குப் பிறகு இந்தத் திருத்தம் தேவையாகிறது. Our intention has been made very clear இன்டர்ப்ரட் செய்யும்போது சில மாற்றங்கள் தேவையாகின்றன. உறுப்பினர்கள் கூறிய கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்படும். எல்லோரும் வக்கில்களாக இருக்கமுடியாது. எல்லோரும் பி.எல். படித்திருக்கமுடியாது. சட்டம் படித்தவர்கள் எல்லாம் புத்திசாலிகள் என்று சொல்லிவிடமுடியாது, சட்டம் படிக்காதவர்கள் புத்திசாலிகள் அல்ல என்றும் சொல்லிவிட-முடியாது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சட்டப் படிப்பு பற்றி ஏளனமாகச் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சட்ட அறிவு இருந்தால் சுலபமாக புரிந்துகொள்ள வசதியாக இருக்கும்.

THIRU M. A. LATHEEF : My submission is we are not protected under Article 31 (b). Article 31 (c) states as follows :—

"Notwithstanding anything contained in article 13, no law giving effect to the policy of the State towards securing the principles specified in clause (b) or clause (c) of article 19 shall be deemed to be void on the ground that it is inconsistent with, or takes away or abridges any of the rights conferred by article 14, article 19 or article 31; and no law containing a declaration that it is for giving effect to such policy shall be called in question in any court on the ground that it does not give effect to such policy :

Provided that where such law is made by the Legislature of a State, the provisions of this article shall not apply thereto unless such law, having been reserved for the consideration of the President, has received his consent."

If any submit matter that is contained under articles 13, 19 or 31 is affected in the interest of the State, you are protected under Article 31 (b) but this will not cover personal law. That is what I



have to submit. So far as personal laws are concerned, that is accepted and that is upheld by the Constitution. It may be contended that this law contravenes those personal laws and will come under the mischief of those provisions and as such this law may be struck down. That is what I want to submit with all humility. So, what I say is, let the word 'any' be changed to 'all bogus and benami transfers or sub-divisions. Let that be made clear. Then it cannot be challenged in any court of law and it cannot be struck down. That will be more legal, constitutional and will be upheld by any court

**திருமதி த. ந. அனந்தநாயகி :** I want to seek a clarification, Sir. எவ்வளவு சர்ப்ளஸ் லான்ட்ஸ் எடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டதற்கு அமைச்சர் அவர்கள், சுமார் 60,000 ஏக்கர் என்று சொன்னார்கள். 14—3—1974 அன்று, முதல் அமைச்சர் அவர்கள் 90,284 ஏக்கர்கள் எடுக்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ரெவின்யூ துறை அமைச்சர் அவர்கள் சொல்வது சரியா அல்லது முதல் அமைச்சர் அவர்கள் சொல்வது சரியா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் அப்ராக்ஸிமேட்டாகச் சொன்னேன். What Article 31A (1) states is this :—

Notwithstanding anything contained in article 13, no law providing for—

(a) the acquisition by the State of any estate or of any rights therein or the extinguishment or modification of any such rights, or

(b) the taking over of the management of any property by the State for a limited period either in the public interest or in order to secure the proper management of the property, or etc., etc. shall be deemed to be void on the ground that it is inconsistent with or takes away or abridges any of the rights conferred by article 14, article 19 or article 31. அரசியலமைப்புச் சட்டத்தில் பாதுகாப்பு இருக்கிறது. தேவையானால் மத்திய அரசு அனுமதி பெறுவதில் ஆட்சேபணையில்லை. திரு. லத்தீப் அவர்கள்

inheritance right -ஐ என் தடை செய்யவேண்டுமென்று கேட்கிறார்கள். ஏற்கனவே சட்டத்தில் இருக்கிறது. 1960 ஆம் ஆண்டு ஆக்டில் இருக்கிறது. தொடர்ந்து இருக்கிறது. இருக்கிற சட்டத்தை மாற்றுவதில் இன்னும் கஷ்டம் ஏற்படும். Family is taken as a unit. இந்தத் திருத்தம் தேவை. உறுப்பினர் அவர்கள் இந்தச் சட்டம் செல்லாது என்று சொன்னார்கள். கோர்ட்டுக்குப் போனால் நிராகரிக்கப்படும் என்றார்கள். I am prepared to accept his challenge.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

THIRU R. PONNAPPA NADAR : So far as the point raised by the Hon. Member Mr. Latheef is concerned, I would like to reply. So far as personal law is concerned, that will be subordinate to the land ceiling law. 'Notwithstanding anything contained in any law to the contrary'—that is the principle under which land ceiling has been enacted So, on the ground that it contravenes personal law, the land ceiling enactment will not be void But my apprehension is that it will be void on other grounds because vested rights are sought to be divested and I did not get any direct reply from the Hon. Minister. So, I would like to have a clarification on that point.

THIRU M. A. LATHEEF : I am grateful to Mr. Ponnappa Nadar for his enlightenment. I am quite conscious of the wording ' notwithstanding any law to the contrary '. But here social purpose is sought to be achieved by Government by declared policies, such as land ceiling enactment. That will come under Article 31 (b). But so far as right that is in existence is concerned (not by virtue of any particular enactment), so far as personal rights are concerned, a provision which extricates that right from a particular individual, can be challenged in a court of law on the ground that it cannot come under Article 31 (b). We express our feelings in the legislature. If our views are not heard, the alternative is to go to Court. Even with regard to section 23 of the parent Act, we did not visualise that the High Court will give such an opinion. The High Court has laid down certain principles



re. first notification and final settlement. What I say is instead of having loopholes, why can't we say things clearly? Let us be clear and make the intention sound, so that even if it is challenged, our stand may be upheld and the enactment may not be struck down. That is my submission. The Hon. Minister may kindly consider this. He is very definite about his stand. I am here to speak on behalf of the people. I am speaking for the sake of legal discipline, proper convention and constitutional propriety. I hope the Hon. Minister will consider what I had said and accept my view point.

DR. H. V. HANDE : Sir, by way of elucidation I would like to know from Mr Latheef whether this legislation contravenes any articles of the Constitution. A father can have two children or more. But that does not mean that the land ceiling should not apply to them. According to the Land Ceiling Act, the ' Nilasirthirutham Act ', he has to give the surplus land. But according to Mr. Latheef's theory, the inheritance right is there for children and so this law cannot affect that right. If so, can he point out any article of the Constitution which says so? Can he say that this law contravenes this or that article of the Constitution and so is void? In spite of the excellant language he used, I do not think he has pointed out any article which this Bill contravenes. I am not a good lawyer as he is but I had said what appears to me, a lay man. Let him point out which article this law contravenes.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, in the Land Ceiling Act, parent and minor children are included. I do not think the right of inheritance will be held unconstitutional by this measure. But bona fide transactions may be affected.

THIRU M. A. LATHEEF : Sir, I am afraid I have not made myself sufficiently clear. There are certain conceptions in Law—positive concepts and negativa concepts So far as the point raised by Dr. Hande is concerned, it is the particular provision which says that the law of inheritance should not be affected. What I submit is that so far as Article 31-C is concerned, the Government is protected. So far as Articles 14, 19 and 31 are concerned, the

rights that have been conferred under the three articles stand in the way of Government taking any revolutionary, reformatory measures. Apart from this the Constitution negatives other sections so far as other rights are concerned and Government should not go all out to affect the rights inherently received by the individuals and citizens of this country.

So far as the point regarding a family having many children, etc., is concerned. I say Government should qualify the rights of the citizen. There should be some qualification. This kind of arbitrary authority to the Authorised Officer will land us into so many legal complications and will lead to plethora of legal warfare.

Dr. H. V. HANDE : That is why it is purposely and specifically provided so that no exploitation is done. Either you believe in land ceiling or you do not believe in land ceiling. There is no alternative except this enactment. Otherwise, we will be in difficulties. My question was whether there is any contravention of any Article of the Constitution.

Thiru M. A. LATHEEF : I am afraid time is limited . . . .

Thirumathi JOTHI VENCATACHELLUM : On a point of order, Sir. May I know whether the people of legal profession here are arguing as though in a court ?

Thirumathi T. N. ANANDANAYAKI : We are trying to help the Government in drafting a proper legislation so that people will not be put to trouble later on.

Thiru M. A. LATHEEF : My answer is Art. 31-C.........

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 31 விதியிலே கூட திரு. லத்தீப் அவர்களுக்கு ப்ரொடெக்ஷன் இல்லை.

It is said ' Provided that where such law is a law made by the Legislature of a State, the provision of this article shall not apply thereto unless such law, having been reserved for the consideration of the President, has received his assent '.

அதை வாங்கினால் திரும்ப பேசுவதற்கு அவசியம் இல்லை.



நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்களும், ஹாண்டே அவர்களும் லத்தீப் அவர்களுக்கு நல்ல விளக்கம் தந்து இருக்கிறார்கள். இன்னும் விளக்கம் தேவையில்லை என்று கருது கிறேன்.

மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் பேசுகிறபோது உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் எவ்வளவு நிலம் எடுக்கப்பட்டது என்று கேட்டார்கள். அதற்கு விவரம் சொல்வது என்னுடைய கடமை என்று நினைக்கிறேன்.

| | | | | | Acres |
|---|---|---|---|---|---|
| Total extent of land | ... | ... | ... | ... | 91,116 |
| extent taken possession | | ... | ... | ... | 69,879 |
| extent assigned | ... | ... | ... | ... | 47,000 |

நான் சொன்னது 60 ஆயிரம், 66 ஆயிரம் என்று சொன்னேன்.

நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள் இந்தத் திருத்தத்தாலே vested rights should not be divested என்று சொன்னார்கள். நம்முடைய சட்டத்தினுடைய நோக்கம் என்னவென்றால் any transfer should be ignored என்று சொல்லப்பட்டது should be void

சொல்கிறோம். ஏற்கனவே சொன்ன கருத்தை வலியுறுத்தி இப்போது திருத்தம் கொண்டுவந்திருக்கிறோம். ஏற்கனவே செய்த டிரான்ஸ்பர் செல்லாது என்ற நோக்கத்தோடு முதலில் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தை இப்போது முறைப் படுத்தும் அளவுக்கு இந்தத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். So far as ceiling is concerned there is no constitutional point என்று குறிப்பு இருக்கிறது. எனவே திருத்தம் தேவையானது. நல்ல சுவையான விவாதம் நடைபெற்று இருக்கிறது. மேலும் இந்த விவாதத்தில் நேரம் கடத்தாமல், இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களின் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படுகிறது.

[1974 ஏப்ரல் 10

THIRU M. A. LATHEEF : I beg to differ, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3. 4. 5 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே.

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்படவேண்டும்" என கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(உ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/74)**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவு @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறேன்.

---

@ 3—4—1974 தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1974 ஏப்ரல் 10]

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த நிலச் சீர்திருத்த மூன்றுவது திருத்தச் சட்டத்தை அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வரவேற்க இயலாமைக்கு மெத்த வருத்தப்படுகிறேன்.

நிலச் சீர்திருத்தம் நாம் கொண்டு வருவதன் நோக்கம் வருவாய் பெருகியிருக்கின்ற நேரத்தில் அந்த வருவாயை சமதர்ம சமுதாயத்திற்குப் பரவலாக பகிர்ந்து அளிக்கவும், வருவாய்க் குவியலைத் தடுத்து நிறுத்தவும் வழிவகுப்பதுதான். இதுதான் அரசாங்கத்தின் திட்டம் என்பதை நாம் அத்தனைபேரும் மனதில் வைத்துக்கொண்டு இருக்கிறோம். இந்தத் திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும் நாம் எத்தனையோ முறை அலசிப் பார்த்து இருக்கிறோம். எத்தனை தடவை பரிசிலனை செய்து இருக்கிறோம், எத்தனை முறை யார் யார் பரிந்துரை செய்து இருக்கிறார்கள், என்பதை மனதில் கொள்ளவேண்டும். 1961-ம் ஆண்டு நில உச்ச வரம்புச் சட்டத்திற்கு உரிய திருத்தச் சட்டமாகத்தான் இந்தச் சட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக் கிறார்கள் என்பதை நாம் மனதில் வைத்துக் கொண்டு பார்த்தால், 1970-ம் ஆண்டு ஒரு சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்பதை நாம் உள்ளபடியே எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த நேரத்தில், இந்தச் சட்டத்தை அமுலாக்குவது 1962 முதலா அல்லது 1965-ம் ஆண்டு முதலா என்ற பிரச்னை எழுந்தது.

அப்படி எழுந்த நேரத்தில் மீண்டும் பரிசீலிக்கப்பட்டு 1960-வது ஆண்டு முதல் இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தால் சாலப் பொருத்தமாக இருக்கும் என்று ஏற்கனவே எண்ணி, அதிலே முடிவு எடுத்ததை நாம் மறந்து விட முடியாது.

இன்னொன்றையும் நாம் கருத்தில் கொண்டோம். புதியதாக நிலத்தைப் பயிரிடுபவர்கள் இருந்தாலும், ஏற்கனவே உள்ளவர் களுக்கு அந்த நிலத்தை அப்படியே விட்டுவிடலாமா அல்லது கூடுதலாக அவர்களுக்கு ஒதுக்கித் தரலாமா என்ற கருத்தையும் நாம் அப்பொழுது பரிசீலனை செய்தோம்.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஏப்ரல் 10

தோட்டத் தொழிலுக்கு தனிச் சலுகைகள் அளிக்கப்படவேண்டும் என்று இந்திய அரசு பரிந்துரை செய்துள்ளது. இந்திய அரசின் இன்ஸ்ட்ரக்ஷன் பேரில்தான் இந்தத் திருத்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அது மாத்திரமல்ல. சிறிய, சிறிய பிரிவாக இருக்குமானால், அந்தத் தொழிற்சாலையை நடத்த முடியாது என்ற ஒரு கோரிக்கையையும் அந்த உரிமையாளர்கள் மத்திய அரசுக்கு தெரியப்படுத்தியிருக்கிறார்கள். அதன் பேரில்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. யாருக்கும் தனிப்பட்டவர்களுக்கு சலுகை கொடுக்கவேண்டும் என்பதற்காக அல்ல. எஸ்டேட் ஓனர்ஸ் யாரும் எங்களுக்குத் தெரிந்தவர்கள் அல்ல. அம்மாதிரி செய்யவேண்டிய அவசியமும் கிடையாது.

**திரு. கோவை செழியன் :** அமைச்சர் சொன்னதின்பேரில் ஒரு சந்தேகம். உள்நோக்கம் கற்பிக்கவேண்டுமென்று அவர்கள் சொல்லவில்லை. பிராக்மெண்டேஷன் ஏற்பட்டால் இண்டஸ்ட்ரி பாதிக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் இந்தப் பிளாண்டேஷனை அரசாங்கமே எடுத்துக்கொண்டு, இதை லார்ஜ் ஸ்கேலில் செய்வதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டு வரலாம். அப்படிக் கொண்டு வந்தால் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. பிராக்மெண்டேஷன் இடைஞ்சலாக இருக்குமென்றால், அதை அரசாங்கமே எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** நானும் அதைத்தான் குறிப்பிட்டேன். மத்திய அரசாங்கம் அந்த பிளாண்டேஷன் செய்பவர்களுக்கு சலுகை அளிக்க வேண்டும் என்று பரிந்துரை அளித்தது. மாநில அரசு அதை ஏற்றுக்கொண்டது. ஏன் மத்திய அரசை இந்தக் கருத்தை வலியுறுத்தவேண்டாம் என்று நம்முடைய மாநில அரசே கேட்கக் கூடாது என்பதுதான் என்னுடைய வாதம். பிளாண்டேஷன் செய்கிற தொழிலை வைத்திருப்பவர்கள் தனி நபர்கள்தான் என்னுடைய கருத்துப்படி. யார் அந்தத் தனி நபர்கள் என்பதை இந்த மாமன்றத்தில் உள்ளவர்கள் எண்ணிப்பார்க்கவேண்டும். சாதாரண



1974 ஏப்ரல் 10] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

ஏழை தொழிலாளர்கள் பிளாண்டேஷன் வைத்திருக்க முடியாது. ஆலை அதிபர்கள், மிட்டா மிராசுகள், பஸ் அதிபர்கள்தான் தங்களுடைய பணத்தைப் போட்டு இது போன்ற தோட்டங்களை வாங்கி வைத்திருக்கிறார்களே தவிர, கிராமத்தில் இருக்கிற ஏழை எளியவர்கள் அல்ல என்பதை நாம் முதலில் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவேதான் மாநில அரசு தவறு செய்கிறது, மத்திய அரசு அந்தத் தவறுக்கு மேலும் வலியூட்டுகின்ற அளவுக்கு பரிந்துரை செய்கிறது என்பதுதான் என்னுடைய பணிவான குற்றச்சாட்டாகும்.

இன்னொன்றும் சொல்கிறேன். பிளாண்டேஷனுக்கு நாம் விதி விலக்கு அளிக்கின்ற நேரத்தில் அவர்களுக்கு என்ன வசதி வாய்ப்பு தருகிறோம் என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். கடன் வழங்கவேண்டும், உரம் தரவேண்டும், உற்பத்தியை விற்பதற்கான மார்க்கெட்டை நாம் தேடித் தரவேண்டும். இதையெல்லாம் இந்த அரசாங்கம் செய்கின்ற நேரத்தில் ஏன் அந்த நிலத்தை அரசுடைமையாக்கி, அரசாங்கம் இதைச் செய்யக் கூடாது என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோளாகும். இன்றைக்குப் பலர் வருகிறார்கள் இலங்கையிலிருந்து இதுபோன்று இலங்கையில் ரப்பர் தோட்டத்தில் வேலை செய்த தொழிலாளர்கள், தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்த தொழிலாளர்கள் நம்முடைய தமிழ் நாட்டிற்கு வந்து வேறு வேலை வாய்ப்பு இல்லாமல் தவிக்கின்ற காட்சியைப் பார்க்கிறோம். அரசாங்கம் செய்கிற பணியை எடுத்துக்கொள்ள வேண்டும். தனியார் அத்தனை பேர்களுடைய நிலத்தையும் தேசியமயமாக்கி, அங்கே ரப்பர் தோட்டங்களை உருவாக்கி இலங்கையிலிருந்து வருகின்ற அகதிகளுக்கு நாம் புனர் வாழ்வு அளிக்க முடியாதா என்பதை ஏன் இந்த அரசு சிந்திக்கவில்லை என்பதுதான் என்னுடைய வாதம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, பிளாண்டேஷனை நாஷனலைஸ் பண்ணவேண்டும் என்று நண்பர் செழியன் அவர்கள் சொன்ன கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான். உச்ச வரம்பு கொண்டு வந்தால் பிளாண்டேஷன் நல்ல முறையில் செயல்பட முடியாது. அதை ஒட்டி செழியன் அவர்கள்

சொன்ன இரண்டு கருத்துக்களில் எந்தக் கருத்தை திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் ஆதரிக்கிறார்கள். பிளாண்டேஷனை தேசியமயமாக்கவேண்டும் என்பதற்கு ஆதரவு தருகிறார்களா? அல்லது உச்ச வரம்பிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார்களா?

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** அரசாங்கம் இதை தேசியமயமாக்கி விட்டால் நண்பர் செழியன் அவர்கள் சொன்ன கருத்து தானாகவே அடிபட்டுப் போய்விடுகிறது . . .

**திரு. கோவை செழியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். பிராக்மெண்டேஷனால் அந்த இண்டஸ்ட்ரி கெடுகிறது. நாஷனலைஸ் செய்துவிட வேண்டும். முடியவில்லை என்றால் எங்களுடைய உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் சொன்னது போல் சிறு சிறு யூனிட்டாக இருக்க வேண்டுமென்றால், அப்படி சிறு சிறு யூனிட்டாக இருப்பதை கோவாபரேடிவ் முறையில் செய்து, அதை ஒரு அமைப்பாக வைத்து செய்தால் அந்த இண்டஸ்ட்ரி பாதிக்காது. அப்படி இண்டஸ்ட்ரியல் யூனிட் வைத்து, அதை வளர்க்கலாம் என்பது என்னுடைய கருத்து என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தேசியமயமாக்குவதற்கு மத்திய சர்க்காருடைய கன்கரென்ஸ் வேண்டியிருக்கிறது. அதையெல்லாம் பற்றி ராஜமன்னார் குழு அறிக்கையை விவாதிக்கும் பொழுது விரிவாகப் பேசிக்கொள்ளலாம் இது இரு முக்கியமான சட்டப் பிரச்னை.

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தேசியமயமக்க வேண்டும் எபைது தான் என்னுடைய வாதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகப் பேசி முடியுங்கள்

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மத்திய அரசு சொல்லியபடி நாம் கேட்கக்கூடாது என்பது என்னுடைய கருத்தாகும். முதல் அமைச்சர் அவர்கள் தங்களுடைய கருத்தைச் சொல்வார்களா?





மத்திய அரசு சொல்வதற்கெல்லாம் நாம் ஆமாம் போடக்கூடாது. ஏன் வலியுறுத்தி நாம் இதைச் செய்ய முடியாது என்று மத்திய அரசிடம் சொல்லவில்லை என்பதுதான் என்னுடைய வாதம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மத்திய அரசு மாத்திரம் அல்ல, மத்திய அரசுக்கு ஆதரவாக இருப்பவர்கள் சொல்லக்கூடியதற்கும் ஆமாம் போடக்கூடாது என்று சொன்னால், நீங்கள் கேட்பீர்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. செழியனுடைய புரட்சிகரமான உள்ளத்தோடு என் உள்ளமும் ஒத்துப்போகும். அவர்களுடைய நிலைமை அப்படியிருக்கிறது.

என்னைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் நியாயமாகச் சொல்லக் கூடிய விஷயங்களுக்கு நாம் எப்போதும் புறம்பாக நடந்து கொள்வது இல்லை. அதே நேரத்தில், மாநில அரசினுடைய உரிமைகளை விட்டுக்கொடுப்பதும் இல்லை. பிளான்டேஷனை தேசியமயமாக்குவது வேறு விஷயம். உச்சவரம்பு கொண்டு வருவது வேறு விஷயம்.

செழியன் அவர்களும், சௌந்தரபாண்டியன் அவர்களும் வேறுபட்ட கருத்தைச் சொன்னார்கள். சிறிய சிறிய பகுதியாக இருந்தால் தொழிற்சாலையை ஒழுங்காக நடத்த முடியாது என்றால் கூட்டுறவு முறையில் அதை நடத்தலாம் என்ற எண்ணமும் பரிசீலிக்கத்தக்கதொன்றுதான். இருந்தாலும், மாநில அரசு கையகப்படுத்துகிற நேரத்தில் மத்திய சர்க்காரின் ஒப்புதலை நாம் பெறவேண்டி இருக்கிறது. அரசு கையகப்படுத்துவதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. அதை இன்னொரு முற்போக்கான கொள்கையாகக்கூட நாம் அறிவிக்க இயலும் மத்திய சர்க்காரின் ஒப்புதல் தேவைப்படுகிறது என்பதால்தான் சொன்னேன்.

(பிற்பகல் 1-00)

* **திருமதி. த. ந. அனந்தநாயகி:** முதலமைச்சரவர்கள் என்னென்னமோ சொல்கிறார்கள். மத்திய அரசாங்கம் செய்யவில்லை; அவர்கள் அதைச் செய்தார்கள்; இதைச் சொன்னார்கள்

என்று சூட்சமமாக எதை எதையோ சொல்கிறார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அதைப் புரியும்படியாக கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் நல்லது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சூட்சமம் என்பதே புரியாதவர்களுக்குப் புரியும் என்பதுதான்.

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** என்னுடைய கேள்வி என்ன வென்றால், மத்திய அரசு இதுமாதிரி பரிந்துரைத்தபோது மாநில அரசு அதற்கு மறுப்பு தெரிவித்ததா என்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்பு கிறேன். மத்திய அரசு சொல்கிற எல்லாவற்றையும் மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது என்று நான் சொல்கிறேன். யாருக்காக அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஆலை அதிபர்களுக்காக, தொழில் அதிபர்களுக்காக அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டிருக் கிறீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பிளாண்டேஷனுக்கு உச்சவரம்பு தேவையில்லை என்று மத்திய அரசு மாநில அரசுக்கு எழுதிய தாக்கீது என்று கருதிவிடக் கூடாது. எல்லா மாநில முதலமைச்சர்களும் கூடி—மத்திய அரசே கூட்டிய ஒரு மாநாடு அது—மத்திய அரசின் அமைச்சர்களும் கூடி, எல்லோரும் சேர்ந்து எடுத்த முடிவு அது. பிளான்டேஷனுக்கு உச்சவரம்பு ஏற்படுத்தினால் பாதகம் ஏற்படும் என்ற கருத்துத் தெரிவிக்கப் பட்டதால் உச்சவரம்பு விதிக்கப்படவில்லை. நீங்கள் குறிப் பிடுவது முற்போக்கான கருத்து. அதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அவையின் தகவலுக்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் நமது மாநிலத்திலிருந்து மாண்புமிகு முதலமைச் சரவர்கள் என்னை கலந்துகொள்ளச் சொன்னதால் அவர்கள் சார்பில் நான் கலந்து கொண்டேன். பிளான்டேஷனை தேசிய மயமாக்க வேண்டுமென்று அங்கே நான் தெரிவித்தேன். இது





அன்னியச் செலாவணி ஈட்டுகின்ற ஒரு தொழிலாக இருப்பதால் தேசியமயமாக்க முடியாது என்று மத்திய அரசு முடிவு செய்திருக் கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** அதைத்தான் நான் ஏற் கெனவே கேட்டேன். இந்த மாநில அரசு என்ன கருத்தைச் சொன்னது என்று கேட்டேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அப்போதே நான் சொன்னேன். தேசியமயமாக்க நாங்கள் ஆதரவு தந்திருக் கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி 'ஃப்ராக்மென்டேஷனை' இருந்தால் தொழில் வளரமுடியாது. இதில் அன்னியச் செலாவணி இருப்பதால், இது வெளிநாட்டு சம்பந்தப்பட்ட ஒரு தொழிலாக இருப்பதால் மொத்தமாக முடிவு செய்ய வேண்டும்; இப்போது முடியாது என்று சொல்லிவிட் டார்கள். தமிழ்நாடு அரசு எப்போதும் தேசியமயமாக்கும் கொள்கைக்கு ஆதரவளித்திருக்கிறது.

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தமிழ்நாடு அரசு எப்போதும் தயார் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். என்னுடைய கருத்து, மத்திய அரசு பரிந்துரைத்தபோது மாநில அரசு மறுப்பு தெரிவித்ததா.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மத்திய அரசு பரிந்துரை செய்ய வில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** உச்சவரம்பு அவை களுக்கும் தரவேண்டுமென்று தாங்கள் கருதுகிறீர்களா ?

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** உச்சவரம்புபற்றி பேசவில்லை தேசிய மயமாக்கத்தான் கேட்கிறேன். சட்டம் சரியாக அமுல் படுத்தப்பட வேண்டும். உச்சவரம்பு எப்படி. . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Exemption for all these plantation areas or in other words, nationalisation of plantations.

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** நான் சொல்கின்ற தேசியமய மாக்கும் திட்டத்தில் சகலமும் அடிப்பட்டுப்போகிறது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசாங்கம் எடுத்துக்கொண்

என்று சூட்சமமாக எதை எதையோ சொல்கிறார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அதைப் புரியும்படியாக கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் நல்லது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சூட்சமம் என்பதே புரியாதவர்களுக்குப் புரியும் என்பதுதான்.

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** என்னுடைய கேள்வி என்ன வென்றால், மத்திய அரசு இதுமாதிரி பரிந்துரைத்தபோது மாநில அரசு அதற்கு மறுப்பு தெரிவித்ததா என்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்பு கிறேன். மத்திய அரசு சொல்கிற எல்லாவற்றையும் மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது என்று நான் சொல்கிறேன். யாருக்காக அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஆலை அதிபர்களுக்காக, தொழில் அதிபர்களுக்காக அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டிருக் கிறீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பிளாண்டேஷனுக்கு உச்சவரம்பு தேவையில்லை என்று மத்திய அரசு மாநில அரசுக்கு எழுதிய தாக்கீது என்று கருதிவிடக் கூடாது. எல்லா மாநில முதலமைச்சர்களும் கூடி—மத்திய அரசே கூட்டிய ஒரு மாநாடு அது—மத்திய அரசின் அமைச்சர்களும் கூடி, எல்லோரும் சேர்ந்து எடுத்த முடிவு அது. பிளான்டேஷனுக்கு உச்சவரம்பு ஏற்படுத்தினால் பாதகம் ஏற்படும் என்ற கருத்துத் தெரிவிக்கப் பட்டதால் உச்சவரம்பு விதிக்கப்படவில்லை. நீங்கள் குறிப் பிடுவது முற்போக்கான கருத்து. அதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அவையின் தகவலுக்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் நமது மாநிலத்திலிருந்து மாண்புமிகு முதலமைச் சரவர்கள் என்னை கலந்துகொள்ளச் சொன்னதால் அவர்கள் சார்பில் நான் கலந்து கொண்டேன். பிளான்டேஷனை தேசிய மயமாக்க வேண்டுமென்று அங்கே நான் தெரிவித்தேன். இது





அன்னியச் செலாவணி ஈட்டுகின்ற ஒரு தொழிலாக இருப்பதால் தேசியமயமாக்க முடியாது என்று மத்திய அரசு முடிவு செய்திருக் கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** அதைத்தான் நான் ஏற் கெனவே கேட்டேன். இந்த மாநில அரசு என்ன கருத்தைச் சொன்னது என்று கேட்டேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அப்போதே நான் சொன்னேன். தேசியமயமாக்க நாங்கள் ஆதரவு தந்திருக் கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி 'ஃப்ராக்மென்டேஷனை' இருந்தால் தொழில் வளரமுடியாது. இதில் அன்னியச் செலாவணி இருப்பதால், இது வெளிநாட்டு சம்பந்தப்பட்ட ஒரு தொழிலாக இருப்பதால் மொத்தமாக முடிவு செய்ய வேண்டும்; இப்போது முடியாது என்று சொல்லிவிட் டார்கள். தமிழ்நாடு அரசு எப்போதும் தேசியமயமாக்கும் கொள்கைக்கு ஆதரவளித்திருக்கிறது.

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தமிழ்நாடு அரசு எப்போதும் தயார் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். என்னுடைய கருத்து, மத்திய அரசு பரிந்துரைத்தபோது மாநில அரசு மறுப்பு தெரிவித்ததா.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மத்திய அரசு பரிந்துரை செய்ய வில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** உச்சவரம்பு அவை களுக்கும் தரவேண்டுமென்று தாங்கள் கருதுகிறீர்களா ?

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** உச்சவரம்புபற்றி பேசவில்லை தேசிய மயமாக்கத்தான் கேட்கிறேன். சட்டம் சரியாக அமுல் படுத்தப்பட வேண்டும். உச்சவரம்பு எப்படி. . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Exemption for all these plantation areas or in other words, nationalisation of plantations.

* **திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** நான் சொல்கின்ற தேசியமய மாக்கும் திட்டத்தில் சகலமும் அடிப்பட்டுப்போகிறது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசாங்கம் எடுத்துக்கொண்

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1974 ஏப்ரல் 10

டிருக்கிற எல்லா பிரச்சனைகளுக்கும் அதில் பரிகாரம் இருக் கிறது. ஏன் அதற்கு முயற்சி எடுக்கவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. அம்மையார் அவர்கள் சொல்கின்ற அந் வாதத்தில் நான் இறங்கவில்லை. நாம் கொண்டுவருகிற சட்டம் யாருக்குப் பயன்படபோகிறது என்பதுதான் எனது கேள்வி.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பிளான்டேஷனை தேசிய மயமாக்குகிறோம் என்று ஒரு தீர்மானத்தை கொண்டுவருகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். மத்திய அரசு அதற்கு ஒப்புதல் அளிக்காவிட்டால் என்ன செய்யலாம் ?

*** திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** ஏற்கெனவே நெய்வேலி பற்றி ஒரு தீர்மானத்தைப் போட்டோம். மத்திய அரசு ஏற்றுக் கொண்டதோ இல்லையோ. அதற்கு என்ன செய்தோமோ அதையே இதற்கும் செய்வோம். நம்முடைய கடமையை நாம் செய்யத் தவறக்கூடாது. ஒரு சட்டத்தைக் கொண்டுவரும் போது அது மக்களுக்குப் பயனளிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். தனிப்பட்ட சிலருக்குப் பயனளிக்கக்கூடியதாக இருக்கக்கூடாது. என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். ஆகவே, இந்த அரசு கொண்டுவந்திருக்கின்ற திருத்தச் சட்டத் தினால் ஏழை எளிய மக்களுக்கு பயனில்லை; தனிப்பட்ட ஒரு சிலர்தான் பயனடைகிறார்கள் ; ஆளும் கட்சி யாருக்கோ ஆதரவு அளிக்கின்ற வகையில் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக் கிறது ; இந்தச் சட்டத்தினால் ஒரு பயனும் இல்லை என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*** திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்கள் ஒரு சிலவற்றைக்கூற விரும்புகிறேன்.

இந்தத் திருத்த மசோதாவில் பல பிரச்சனைகளைப் பார்க் கிறோம். முதலிலே 1961-லே இருந்த சட்டத்திலே 73(6) பிரிவில் பிளான்டேஷன் ஏரியாவுக்கு எக்சம்ஷன் கொடுத்திருக்கிறோம். அதற்குக் காரணம் முதலமைச்சர் சொன்னமாதிரி. பிளான் டேஷனுக்கு உச்சவரம்பு கொண்டுவருவதால் லாபம் அல்ல ; அதில் பல தடங்கல்கள் இருக்கின்றன. உச்சவரம்பு என்று



1974 ஏப்ரல் 10] [திருமதி த. ந. அனந்தநாயகி]

15 ஸ்டான்டர்டு ஏக்கரா என்று நாம் வைத்திருக்கிறோம். பிளான்டேஷனுக்குக் குறைந்தது 50 ஏக்கராவது இல்லை என்றால் தொழில் நடத்த முடியாது. ஆகையால் அங்கே உச்சவரம்பு கொண்டுவந்தால் நிச்சயமாக பாதகம்தான் ஏற்படும்.

அதுமட்டுமல்ல ; இந்தத் தொழில் சாதாரணமான ஒரு தொழில் அல்ல. தோட்டத் தொழில்—அன்னியச் செலாவணி தந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு தொழிலுக்கு உச்ச வரம்பு கொண்டுவந்தால் அன்னியச் செலாவணியும் பாதிக்கும். நாம் முற்போக்கானவர்கள் என்று நினைத்து, அதற்கு உச்சவரம்பு கொண்டுவர வேண்டுமென்று சொல்லிவிடக்கூடாது. இங்கே பேசிய அங்கத்தினர்களை விட முற்போக்கான எண்ணங்கள் எங்களுக்கு உண்டு.

*** திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** அம்மையார் அவர்கள் உள் நோக்கம் கற்பிக்கின்றார்கள். இங்கே பேசிய அங்கத்தினர்களை விட முற்போக்கு எண்ணம் எங்களுக்கு உண்டு என்று அவர்கள் சொல்வது சரியல்ல.

*** திருமதி த. ந. அனந்தநாயகி :** அதில் என்ன தவறு இருக்கிறது ? இங்கே பேசிய அங்கத்தினர்கள் கருத்துக்களைவிட முற்போக்கான எண்ணம் எங்களுக்கு உண்டு என்றுதான் சொன்னேன். அதில் என்ன தவறு இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் சொன்ன முற்போக்குக் கருத்துக்கு மேலும் ஒன்று உண்டு. அதுதான் தேச நலன். உங்கள் மாதிரி ஒரு குறுகிய எல்லைக்குள் நின்றுவிட்டு ஓடிவிட முடியாது. ஒரு பொதுவான நோக்கத்தோடு எதை எதை எப்போது செய்ய வேண்டுமென்று சிந்தித்துச் செய்யவேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதை உணர்ந்துதான் நாங்கள் அரசியல் சட்டத்தைப் போட்டபோது பிளான்டேஷனுக்கு எக்சம்ஷன் கொடுத்திருந்தோம். மற்ற பொருட்கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 ஏப்ரல் 10

அதேமாதிரி இதையும் கட்டுப்படுத்துவதாக இருந்தால் பெருத்த பாதகம்தான் ஏற்படும். ஆனால் இங்கே இருக்கின்றவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் நாங்கள்தான் ரொம்ப முற்போக்கானவர்கள் என்று கருதிக்கொண்டு எதை எதையோ நினைத்துக் கொண்டு பல சட்டங்களைப் போட்டார்கள். அரசியல் சட்டத்திலே இருக்கின்ற ஓட்டை உடைசல்களை போக்குகிறோம் என்று சொல்லி பல திருத்தச் சட்டங்களைப் போட்டார்கள். சில தொழில்களுக்குக் கொடுத்திருந்த எக்சம்ஷனை விதிட்ரா பண்ணினீர்கள். இன்றைக்கு நீங்கள் 15 ஸ்டான்டர்டு ஏக்கரா என்று வைத்திருக்கிறீர்கள். நாளைக்கு இன்னொருவர் வந்து 3 ஸ்டான்டர்டு ஏக்கரா என்று சொல்வார். உங்களை விட அவர்கள் முற்போக்கானவர்கள் என்று அப்படி செய்யக்கூடும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்போதுதான் அம்மையார் அவர்கள் மத்திய அரசாங்கத்திற்காக வாதாடினார்கள். இதையும் மத்திய அரசுதான் செய்யச் சொன்னது. எங்களை எல்லாம் அழைத்து, 15 ஸ்டான்டர்டு ஏக்கரா என்று நாடு முழுவதும் சட்டம் இயற்றவேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள் 15 ஸ்டான்டர்டு ஏக்கரா என்று நீங்கள் யோசனை சொல்வதற்கு முன்பே செய்துவிட்டோம் என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, மத்திய அரசின் கருத்தும், எங்களுடைய கருத்தும் இந்த விஷயத்தில் ஒன்றுதான்.

***திருமதி த. ந. அனந்தநாயகி :** சில எக்சம்ஷன்களை விதிட்ரா செய்திருக்கிறீர்கள். அதைத்தான் நான் சொல்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு அம்மையார் அவர்கள் கூறும்போது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் செய்துவிட்டு, ஓடிவிடுவீர்கள் என்று சொன்னார்கள். அது எனக்குப் புரியவில்லை. எங்களுடைய கட்சி தமிழ்நாட்டிலே மட்டும்தான் வலுவோடு இருக்கிறது; மற்ற இடங்களிலும் வருவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். இது உலகறிந்த உண்மை. எங்கள் கட்சியிலே ஒரு முடிவை எடுக்கிறோம். அதைப்பற்றி பேசுகிறோம். ஆனால் அம்மையார் அவர்கள் கட்சியின் கொள்கைக்கும் தான் சொல்கின்ற கொள்கைக்கும் சம்பந்தமில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அறநிலையத்துறை



74 ஏப்ரல் 10] [திரு. கோவை செழியன்]

துகாப்பு மானியம் வந்தபோது அதிலே அப்படி பேசியிருக்
றார்கள். கட்சி கொள்கை வேறு, என்னுடைய கொள்கை வேறு
ன்று சொல்லியிருக்கிறார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : No reflection on the conduct
a member.

***திருமதி த. ந. அனந்தநாயகி :** அறநிலையத் துறையைப்
பொறுத்த வரையில் ஒவ்வொருவரும் ஒரு கொள்கையை
வேறு டையவர்களாக இருக்கிறார்கள். எங்கள் கட்சியிலும்
ஆஸ்திகர்களும் ட்ட கருத்தை உடையவர்கள் இருக்கிறார்கள்.
கோவிலுக்குப் ருக்கிறார்கள்; நாஸ்திகர்களும் இருக்கிறார்கள்;
போகாதவர்களும் இருக் பாகிறவர்களும் இருக்கிறார்கள்;
கிறார்கள். அது அவர்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன்.
அதை வைத்துத்தான், கட்சியின் கொள்கை வேறு, என்னுடைய
கொள்கை வேறு என்று சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த மசோதாவில் அவர்கள்
சொன்ன கருத்துக்குப் பதில் சொல்லுங்கள்.

**திரு. கோவை செழியன் :** கட்சியின் கொள்கைக்கு மாறுபட்டு
அவர்கள் பல நேரம் பேசுகிறார்கள் என்பதற்காகச் சொன்னேன்.
திரு. சுப்பிரமணியம் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்திற்கு
எதிராகப் பேசினார்கள். ஆகவே அவர்கள் எங்கள் கட்சியைப்
பற்றித் தவறாகப் பேசவேண்டாம் என்று தெரிவித்துக்கொள்
கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** எங்கள் கட்சிக் கட்டுப்பாட்டை
காப்பாற்றிக்கொள்ள எங்களுக்குத் தெரியும்.

***திருமதி த. ந. அனந்தநாயகி :** எங்கள் கட்சியை நடத்திக்
கொள்ள எங்களுக்குத் தெரியும். அவர்கள் கட்சியில் உள்ள
கட்டுப்பாடும் தெரியும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஒரு விளக்கம். 1960-ஆம்
ஆண்டு யார் யார் எவ்வளவு நிலம் வைத்திருந்தார்களோ அந்த
நிலத்திற்கு மேல் விஸ்தரிக்கக் கூடாது என்று 1970 ஆம் ஆண்டு

[திரு. ப. உ. சண்முகம்] [1974 ஏப்ரல் 10

சட்டத்தில் செய்தோம். அதன் பிறகு ப்ளாண்டேஷன் முதலாளிகள் எங்களை வந்து சந்தித்தார்கள். அவர்கள் சொன்ன கருத்து என்னவென்றால் 1960 ஆம் ஆண்டு சட்டத்தில் மேற்கொண்டு 25 சதவிகிதம் விஸ்தரித்துக்கொள்ள அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. அந்த அடிப்படையில் நாங்கள் வங்கிகளில் கடன் வாங்கியிருப்பது மாத்திரம் அல்ல—25 சதவிகிதம் விஸ்தரிப்புக்கு அரசாங்கத்திடமும் கடன் வாங்கியிருக்கிறோம். ஆகவே, இப்போது இப்படிச் செய்வது நியாயம் அல்ல என்றார்கள். ஆகவே, நாம் 1970 வரை எந்த அளவுக்கு விஸ்தரித்திருக்கிறார்களோ அந்த அளவுக்கு மட்டும் வைத்துக் கொள்ளலாம் என்று அனுமதிக்கிறோமே தவிர, முழு அளவுக்கு அவர்களை அனுமதிக்கிற—அல்லது தோட்ட நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கிற திருத்தம் கிடையாது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The plantation is an important thing. We earn foreign exchange by exporting Tea, Coffee and Rubber. How can we fix a ceiling? It should be clarified.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்.** ஏற்கனவே எவ்வளவு நிலம் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம் என்று இருந்தது. ஏன் அதைத் திரும்பப் பெற்றீர்கள் என்று கேட்டார்கள். 15 ஆயிரம் ஏக்கரா வரை வைத்திருக்கிற பிர்லா நீலகிரியில் மேலும் 20 ஆயிரம் ஏக்கரா வாங்குவதற்கோ, 50 ஆயிரம் ஏக்கரா வாங்குவதற்கோ நாம் விட முடியாது. அப்போது போட்ட சட்டம்—60-ல் எவ்வளவு நிலம் இருந்ததோ அதற்குமேல் விஸ்தரிக்கக் கூடாது என்பதாகும். நான் முன்பே சொன்னபடி அந்தப் பழைய சட்டத்தில் 25 சதவிகிதம் விஸ்தரித்துக்கொள்ளலாம் என்று அனுமதிக்கப்பட்டிருந்ததால் நாங்கள் வங்கிகளிடம் இருந்தும், அரசாங்கத்திடம் இருந்தும் கடன் வாங்கி விஸ்தரித்திருக்கிறோம் என்று சொன்ன காரணத்தினால் 70-இல் எந்த அளவுக்கு இருந்ததோ அந்த அளவுக்குமேல் விஸ்தரிக்கக்கூடாது என்று இப்போது திருத்தம் செய்திருக்கிறோம். தோட்டக்காரர்கள் இஷ்டப்படி விஸ்தரித்துக்கொள்ள அனுமதிக்க முடியாது. அந்தக் கருத்தில் நாங்கள் எந்தவகையிலும் மற்றவர்களுக்குப் பின்தங்கியவர்கள் அல்ல.



1974 ஏப்ரல் 10]

* **திருமதி த. ந. அனந்தநாயகி:** இன்றைக்குப் பணக்காரர்கள் கேட்கிறார்கள். 60-ஐ 70 ஆக்கிவிடுகிறீர்கள். உங்களுக்கு நிரந்தரமான ஒரு கொள்கை இருக்கவேண்டும். கொடுத்திருந்த எக்சம்ஷனை எடுத்துவிடுவது—அப்புறம் 70 வரை விஸ்தரித்துக் கொண்ட நிலங்களை வைத்துக்கொள்ளலாம் என்று முதலாளிகளுக்காகச் செய்வது . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இது நீதி மன்றத்திற்குச் சென்றாலும் கூட நமக்குப் பாதகமாகத்தான் வரும் என்று தகவல் கொடுத்திருப்பதால்தான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோமே தவிர—பணக்காரர்கள் கேட்டார்கள் என்பதற்காக என்பதை நான் ஒத்துக்கொள்ளத் தயாராய் இல்லை. கூட்டுறவுத்துறையில் நீலகிரியில் இதுபோன்ற ப்ளாண்டேஷனைச் செய்துகொண்டிருக்கிறோம். கூட்டுறவுத் துறையில் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ள அரசாங்கம் தயார். இருபது, இருபத்துமூன்று ப்ளாண்டேஷன் கூட்டுறவுத்துறையில் நல்ல முறையில் நடைபெறுகின்றன. அவைபோல இவைகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ள இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் தயாராய் இருக்கிறது.

* **திருமதி த. ந. அனந்தநாயகி:** 60-க்கு மேலே விஸ்தரிக்கக் கூடாது என்று சொன்னால் அதில் நிரந்தரமாக இருக்கவேண்டும். இப்போது 60-க்கு மேலே இனி நிலத்தில் பணம் போட முடியாது. நிலத்திற்கு உச்சவரம்பு வந்துவிட்டது. எந்த ப்ளாண்டேஷனில் பணம் போடலாம் என்பதாக எந்தப் புதுப் பணக்காரர்கள் பணம் போட்டிருக்கிறார்கள்' இப்போது 70 வரை உள்ள நிலங்களுக்கு விலக்கு என்று சொல்வதன் மூலம் அவர்களுக்கு எல்லாம் பாதுகாப்பு அளிக்கிற வகையில்தான் இந்தத் திருத்தச் சட்டம் வந்திருக்கிறது. சட்டம் கொண்டுவரும்போதே நன்கு ஆராய்ந்து அலசிப் பார்த்துக் கொண்டுவர வேண்டும். ஸ்டாண்டர்ட் ஏக்காரவுக்கு டெஃபினிஷன் கொடுக்கிறபோதே எத்தனை விலக்கு, முக்கால் ஏக்ர்கார ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் சில இடத்தில் ½ ஏக்கரா ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 ஏப்ரல் 1

We have withdrawn. We have again gone back to 6(

என்பதாக எல்லாம் எத்தனை விளக்கங்கள். அதை நாங்கள்தான் போட்டோம் என்று ஆரம்பத்தில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. பிறகு அவற்றை எல்லாம் ஆராய்ந்து காம்பிரஹென்சிவ்வாகக் கொண்டுவந்திருக்க வேண்டாமா? கரும்பு சாகுபடிக்கு விட்டு வைத்தீர்கள். பின்ன கரும்புக்குக் கிடையாது என்றீர்கள்.

தோட்டப் பயிர்களைப் பொறுத்தவரை சீலிங் வைக்க முடியாது. ஐம்பது ஏக்காவது இருந்தால்தான் பிளாண்டேஷனை எடுத்துக்கொண்டால் மயைப் பதப்படுத்தி வைக்கிற இயந்திர அமைப்புச் செலவு எல்லாவற்றுக்கும் கட்டுபடியாகும். சிறுசிறு நிலங்களாக இருந்தாலும் அவற்றை கூட்டுறவுத்துறையிலாவது ஒன்று சேர்த்தால்தான் வயபிள் யூனிட்டாக இருக்கும். அப்போதைக்கப்போது திருத்தம் கொண்டுவருவது—அன்றைக்கு 60-க்குமேல் விஸ்தரிக்கக்கூடாது. இன்றைக்கு 70-க்குமேல் விஸ்தரிக்கக்கூடாது. நாளைக்கு 74-க்கு மேல் விஸ்தரிக்கக்கூடாது என்று வரும். ஏனென்றால், இப்போது கொண்டு வந்துள்ள திருத்தச் சட்டத்திலேயே மேலும் 20 சதவிகிதம் விஸ்தரித்துக் கொள்ள அனுமதி இருக்கிறது.

He will be eligible to hold ...........

'An additional extent of land interspersed among or contiguous to such plantations upto 20 per cent of the extent of plantations' என்பதாக இனிமேலும் வாங்கலாம் என்று போட்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படி எங்கே போட்டிருக்கிறோம்?

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I will tell you. On page 86 of the Objects and Reasons it is stated. In addition, they will be eligible to hold, with the permission of the Land Board, under section 31 of the Act, an additional extent of land. These are the last few sentences in the Statement of Objects and Reasons.



1974 ஏப்ரல் 10] [திருமதி த. ந. அனந்தநாயகி]

இன்னும் என்க்ரோச்மெண்டை எடுத்துக்கொண்டால் எத்தனையோ ஆயிரக்கணக்கான ஏக்கரா ஆக்கிரமித்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

Most of the planters have got encrachment and thousands of acres have been encroached.

60 என்பது 70 ஆயிற்று. நாளை அது எப்படியாகும் என்று சொல்ல முடியாது. ஏன் சொல்கிறேன் என்றால் சிலோன் அகதிகள் வருகிறார்கள். பர்மா அகதிகள் வருகிறார்கள். தோட்ட நிலம் இல்லை என்று பாதிப்பேரை அந்தமானுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

The vested interest an get the things done.

இப்படித் தமிழகத்திலே இருக்கக்கூடிய தோட்ட நிலங்களை எல்லாம் இப்படிப்பட்ட அகதிகளுக்குக் கூட்டுறவு முறையிலாவது உடனடியாக எடுத்துத் தருவார்களானால், அது சாலச்சிறந்ததாக இருக்கும். மத்திய அரசாங்கத்தின் மேலே நீங்கள் பொறுப்பு போடுவது தவறு. நீங்கள் தேசியமயமாக்கத் தயாராக இருப்பது போலவும், அவர்கள் முட்டுக்கட்டையாக இருப்பதைப் போலவும் நீங்கள் மத்திய அரசு மீது பழி போடுகிற தன்மையை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தேசிய நலனைப் பார்க்கும்போது, ஆத்திரப்பட்டு, அவசரப்பட்டு, அதற்கு விரோதமாகத் செய்யக் கூடாது என்றுதான் ஆற அமர யோசித்து, அந்தக் காலத்திலேயே ஒயில் எரியாக்களை எல்லாம் எக்சம்ஷன் செய்து வைத்தோம். ஒரு நிலையிலே நீக்கி விடுங்கள்.

இன்னும் ஒரு காரணம் சொல்வார்கள். அங்கே கடன் வாங்கி விட்டேன், இங்கே கடன் வாங்கிவிட்டேன், 76 வரையிலே எக்சம்ஷன் கொடுங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, நீங்கள் துண்டு துண்டாகக் கொண்டு வராமல், நீங்கள் என்ன என்ன அமெண்ட்மெண்ட் கொண்டு வருகிறீர்கள் என்பது எல்லாமே மறந்து விடுகிறது, ஆகவே, மொத்தமாகவே, சமதர்மத்தின் அடிப்படையிலே நீங்கள் திருத்த வேண்டுமென்றாலும், மொத்தமாக

We have withdrawn. We have again gone back to 60 என்பதாக எல்லாம் எத்தனை விளக்கங்கள். அதை நாங்கள்தான் போட்டோம் என்றாலும் ஆரம்பத்தில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. பிறகு அவற்றை எல்லாம் ஆராய்ந்து காம்பிரஹென்சிவ்வாகக் கொண்டுவந்திருக்க வேண்டாமா? கரும்பு சாகுபடிக்கு விட்டு வைத்தீர்கள். பின்னர் கரும்புக்குக் கிடையாது என்றீர்கள்.

தோட்டப் பயிர்களைப் பொறுத்தவரை சீலிங் வைக்க முடியாது. ஐம்பது ஏக்கராவது இருந்தால்தான் டீ ப்ளாண்டேஷனை எடுத்துக்கொண்டால் டீயைப் பதப்படுத்தி வைக்கிற இயந்திர அமைப்புச் செலவு எல்லாவற்றுக்கும் கட்டுபடியாகும். சிறுசிறு நிலங்களாக இருந்தாலும் அவற்றை கூட்டுறவுத்துறையிலாவது ஒன்று சேர்ந்தால்தான் வயபிள் யூனிட்டாக இருக்கும். அப்போதைக்கப்போது திருத்தம் கொண்டுவருவது—அன்றைக்கு 60-க்குமேல் விஸ்தரிக்கக்கூடாது. இன்றைக்கு 70-க்குமேல் விஸ்தரிக்கக்கூடாது. நாளைக்கு 74-க்கு மேல் விஸ்தரிக்கக்கூடாது என்கிறார். ஏனென்றால், இப்போது கொண்டு வந்துள்ள திருத்தச் சட்டத்திலேயே மேலும் 20 சதவிகிதம் விஸ்தரித்துக் கொள்ள அனுமதி இருக்கிறது.

He wil! be eligible to hold ...........

' An additional extent of land interspersed among or contignous to such plantations upto 20 per cent of the extent of plantations ' என்பதாக இனிமேலும் வாங்கலாம் என்று போட்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படி எங்கே போட்டிருக்கிறோம்?

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I will tell you. On page 86 of the Objects and Reasons it is stated. In addition, they will be eligible to hold, with the permission of the Land Board, under section 31 of the Act, an additional extent of land. These are the last few sentences in the Statement of Objects and Reasons.



இன்னும் என்க்ரோச்மெண்டை எடுத்துக்கொண்டால் எத்தனையோ ஆயிரக்கணக்கான ஏக்கரா ஆக்கிரமித்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

Most of the planters have got encrachment and thousands of acres have been encroached.
60 என்பது 70 ஆயிற்று. நாளை அது எப்படியாகும் என்று சொல்ல முடியாது. ஏன் சொல்கிறேன் என்றால் சிலோன் அகதிகள் வருகிறார்கள். பர்மா அகதிகள் வருகிறார்கள். தோட்ட நிலம் இல்லை என்று பாதிப்பேரை அந்தமானுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

The vested interest an get the things done.

இப்படித் தமிழகத்திலே இருக்கக்கூடிய தோட்ட நிலங்களை எல்லாம் இப்படிப்பட்ட அகதிகளுக்குக் கூட்டுறவு முறையிலாவது உடனடியாக எடுத்துத் தருவார்களானால், அது சாலச்சிறந்ததாக இருக்கும். மத்திய அரசாங்கத்தின் மேலே நீங்கள் பொறுப்பு போடுவது தவறு. நீங்கள் தேசியமயமாக்கத் தயாராக இருப்பது போலவும், அவர்கள் முட்டுக்கட்டையாக இருப்பதைப் போலவும் நீங்கள் மத்திய அரசு மீது பழி போடுகிற தன்மையை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தேசிய நலனைப் பார்க்கும்போது, ஆத்திரப்பட்டு, அவசரப்பட்டு, அதற்கு விரோதமாகச் செய்யக் கூடாது என்றுதான் ஆற அமர யோசித்து, அந்தக் காலத்திலேயே ஒயில் ஏரியாக்களை எல்லாம் எக்சம்ஷன் செய்து வைத்தோம். ஒரு நிலையிலே நீக்கி விடுங்கள்.

இன்னும் ஒரு காரணம் சொல்வார்கள். அங்கே கடன் வாங்கி விட்டேன், இங்கே கடன் வாங்கிவிட்டேன், 76 வரையிலே எக்சம்ஷன் கொடுங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, நீங்கள் துண்டு துண்டாகக் கொண்டு வராமல், நீங்கள் என்ன என்ன அமென்ட்மென்ட் கொண்டு வருகிறீர்கள் என்பது எல்லாமே மறந்து விடுகிறது, ஆகவே, மொத்தமாகவே, சமதர்மத்தின் அடிப்படையிலே நீங்கள் திருத்த வேண்டுமென்றாலும், மொத்தமாக

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 ஏப்ரல் 10

இந்தச் சட்டத்தைத் திருத்தி, சந்துபொந்துகளை எல்லாம் அடைக்கத் திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

* **திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, இந்த மசோதாவை எதிர்க்கின்றேன். காரணம், சபையில் இருக்கக் கூடிய எல்லா கட்சிகளும் கொண்டு வந்திருக்கக் கூடிய—கட்சியினுடைய கொள்கைகூட, எதிர்க்கப்படுகின்ற முறையிலே—இருப்பதன் காரணமாக, இதை எல்லோரும் சேர்ந்து எதிர்ப்பதால், ஏன் இந்த மசோதாவை வாபஸ் வாங்கிக் கொள்ளக் கூடாது என்று கேட்கிறோம்.

1970-ம் வருஷத்திலே ஒரு மசோதாவினைக் கொண்டு வந்து அதற்கு மேல் அதையெல்லாம் அதிகமாக எடுத்துக்கொள்வதைத் தடை செய்துவிட்டு, மறுபடியும் அதற்கு விதிவிலக்கு கொண்டு வருவது சரியல்ல. காரணம், பிளாண்டேஷன் இண்டஸ்ட்ரி மட்டுமல்ல, எந்த இண்டஸ்ட்ரியை எடுத்தாலும் பணம் ஒதுக்கக் கூடியவர்கள் அதிகமாக அங்கே போட்டு, இண்டஸ்ட்ரியை வளர்த்துவதில்லை. ஷேரை வாங்கி, விற்கக்கூடிய வியாபாரம் தான் நடக்கிறதே ஒழிய, அதிகப்படியாக தொழிலை அபிவிருத்தி பண்ணக்கூடிய நிலைமையிலே நடைபெறுவதில்லை.

அதே மாதிரி பிளாண்டேன் இண்டஸ்ரீஸ்ஸை எடுத்துக் கொண்டாலும் எத்தனைத் தோட்டத்திலே புதிதாக வைத்திருக்கிறார்கள். யார் யார் எந்த அளவுக்கு அபிவிருத்திப் பண்ணி இருக்கிறார்கள் என்றால், 99 சதவிகிதம் எந்தவிதமான அபிவிருத்தியும் இல்லை.

அது மட்டுமல்ல, ஒவ்வொரு பிளாண்டேஷனை எடுத்துக்கொண்டாலும் 4,000, 3,000 ஏக்கர் தரிசு நிலம் இருக்கிறது. இதை வைத்துக்கொண்டு, அடிக்கக்கூடிய கள்ளப் பணத்தைப் பூராவும் வெள்ளைப் பணமாக ஆக்கத்தான் புறம்போக்கு நிலமிருக்கிறது. உருளைக் கிழங்கு, இதையெல்லாம் போட்டு, வரியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகத்தான் இது இருக்கிறது. லாண்ட் ரெஃபார்ம்ஸ் பேனல் இந்த மாதிரி புறம்போக்கு நிலங்களை



1974 ஏப்ரல் 10] [திரு. என். கே. பழனிசாமி]

யெல்லாம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சிபாரிசு பண்ணி இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் மாநில சர்க்காரும் 1970-ம் வருஷத்திலே இந்த பூமியையெல்லாம் எடுத்தார்கள். ஆனால், மத்திய சர்க்கார் அதிலே தலையீடு செய்யக் காரணம் என்ன ?

கேரள சர்க்காரிலே, பிளாண்டேஷன்ஸ் பூராவையும் சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று எல்லா கட்சிகளும் ஏகமனதாகத் தீர்மானம் போட்டு, மத்திய சர்க்காருக்குப் போயிருக்கிறது. ஆனால், மத்திய சர்க்கார் இதுவரையிலும் அங்கீகாரம் கொடுக்கவில்லை. இது தப்பு, அதுதப்பு என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். வெள்ளைக்காரன் போய் 26 வருஷம் ஆகியும், மிச்சம் இருப்பதற்கு என்ன காரணம் ?

ஃபாரின் எக்சேஞ்கிடைக்க வேண்டுமென்று சொல்வார்கள். சரி, சர்க்கார் நடத்தினால் ஃபாரீன் எக்சேஞ் கிடைக்காதா ? நோட்டிஃபைட் செய்தது, 5,000 ஏக்கர் சர்க்காருக்குச் சொந்தமிருக்கிறது. 5,000 ஏக்கரிலே ஏன் பிளாண்டேஷன் செய்யவில்லை. தனிப்பட்டவர்கள் நிலங்களை எல்லாம் எடுத்துக்கொள்ளலாம், தரிசாக இருக்கிறது. அவர்களும் தரிசாகத்தான் போடப் போகிறார்களேயொழிய 'டீ'-யை அங்குப் போடவில்லை. சர்க்கார் "டீ" இண்டஸ்ட்ரியிலே புகுவதற்காகப் பிளாண்டேஷன் வைத்திருக்கிறார்கள். எந்த பிளாண்டேஷனும் கிடையாது. இதைக் கொண்டு வரவேண்டிய அவசியம் என்ன ? கள்ளப் பணத்தை வெள்ளைப் பணமாக்கவேண்டும். இது முதலாளிகளுக்கு அவசியம். மாநில சர்க்காரோ, மத்திய சர்க்காரோ, இவற்றை எடுத்து, வெளிநாட்டுக்கு அனுப்பினால் ஃபாரின் எக்ஸ்சேஞ் வராதா ?

வெள்ளைக்காரன் மேலிருக்கிற பற்று மத்திய சர்க்காருக்கு இன்னும் போகவில்லையென்பதுதான் இதிலிருந்து தெரிகிறது. நாங்கள் எல்லோரும் சேர்ந்து, இந்த மசோதாவை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, I had no idea to speak but after hearing the speech of the hon. Member, Thirumathi Anandanayaki, I want to speak a few words about Estates.

Estates are a big problem in this country. Most of the estates belong to the Sterling Companies and they are not rupee companies and they are owned by foreigners. The Government will face a lot of difficulties in settling the compensation issue if they are taken over by them. These estates are spread all over the country.

There is a huge estate in Assam belonging to James Finaly. In Munnar also there are similar estates belonging to James Finaly. If they are going to nationalise them, they will have to pay compensation. The Government are already finding it difficult to borrow money for the purchase of essential articles necessary for the development of the country. I am not against nationalisation. I believe in socialism.

Why the Government of India have not nationalised? It is because they are not progressive enough as the Government of Tamil Nadu. Let them be run co-operative lines but care you run an estate with 50 acres economically? The minimum extent necessary to run an estate economically is 800 acres. So, all these aspects have to be considered. It is very essential that we should go deep into the matter. As the Hon. Chief Minister has remarked, fragmentation also will bring inefficiency and so we have to consolidate them.

Then the only alternative is nationalisation and for that a huge amount of compensation has to be paid. At the present juncture, it is not possible to do so. So definitely the only alternative is to run the new estates on co-operative lines and this the Government can do. Thank you, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவில் முடிவுற்று நாளைக் காலை 9-00 மணியளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

(6) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

ஏதும் இல்லை.





## இணைப்பு

[178 பக்கத்தில் 806-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையக் காண்க]

கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதிகளைப் பெருக்கும் நோக்குடன் கிராமப் பகுதிகளில் மக்கள் நல்வாழ்விற்கான தேசியத்திட்டம் (National Health Scheme for Rural Areas) என்று அழைக்கப்படுகிற முன்னோடித் திட்டம் ஒன்றை இந்திய அரசின் மக்கள் நல்வாழ்வு அமைச்சகம் செயல்படுத்தக் கருதியது. இத்திட்டத்தின் கீழ், கிராமப்பகுதி மக்களுக்கு மருத்துவ உதவி அளிக்க இந்திய முறை மருந்தகம், ஹோமியோபதி, யுனானி, சித்த மருத்துவத் துறைகளில் பதிவு பெற்ற மருத்துவர்களின் பணியைப் பயன்படுத்தக் கருதப்பட்டது. இதுகுறித்து, விரிவாகப் பரிசீலிக்கவும் இந்த முன்னோடித் திட்டத்தைச் செவ்விய முறையில் செயல்படுத்தத் தேவையான மாறுதல்கள் பற்றிக் கருத்து தெரிவிக்கவும், 1972 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நடைபெற்ற மாநில சுகாதார அமைச்சர்களின் கூட்டத்தில் அமைச்சர்கள் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. குழு தெரிவித்த கருத்துரைகள் பரிசீலிக்கப்படலாம் என்று, தமிழ்நாட்டிற்கான விரிவான திட்டம் ஒன்று தனக்கு அனுப்பப்படலாம் என்றும் மத்திய அமைச்சர் 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் கேட்டுக் கொண்டார்.

அவ்வாறே உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ற திருத்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இத்திருத்தத் திட்டத்தின் கீழ் இந்திய முறை மருந்துவர்களை மட்டுமன்றி ஆங்கில முறை மருத்துவர்களையும் பயன்படுத்திக் கொள்ள உத்தேசிக்கப்பட்டது. இந்திய அரசிடமிருந்து அண்மையில் பெற்ற கடிதத்தின்படி, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இந்திய அரசு அவ்வளவு ஆர்வமாயில்லை என்று உணரப்படுகிறது. ஏனெனில், நாடு முழுவதிலும் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களைச் சேர்ந்த 30 துணை நிலையங்களில் அங்கொன்றும், இங்கொன்றுமாக கிராமப் பகுதிக்கான மக்கள் நல்வாழ்வு முன்னோடித் திட்டம் ஒன்றைச் சோதனை அடிப்படையில் கொண்டுவர அவர்கள் கருதியுள்ளனர்.

With a view to augmenting the medical facilities in the rural areas, the Government of India, Ministry of Health, proposed to introduce a Pilot Scheme called the National Health Scheme for Rural Areas. Under this Scheme, it was proposed to utilise the service of Registered Medical Practitioners in the Indian Systems of Medicine, Homoeopathy, Unani, Siddha, etc., for randering medical aid to the people in the rural areas. At the conference of the State Health Ministers held in July 1972, a Committee of Ministers was constituted to go into the details and to suggest such modifications as may be necessary, to ensure the smooth and efficient implementation of this Pilot Scheme. In August, 1972 the Union Minister requested that the suggestions made by the Committee might be considered and a detailed scheme for Tamil Nadu sent to him.

Accordingly a revised scheme to suit local conditions was formulated and forwarded to the Government of India. Under the Revised scheme, it was proposed to utilise not only the services of Practitioners of Indian Systems of Medicines but also the services of Practitioners of Allopathic Medicine. Form the reply received from Government of India recently it is felt that the Government of India are not keen on the implementation of the scheme for they have proposed to introduce a Pilot Health Scheme for Rural Areas on an Experimental basis in 30 sub-centres of Primary Health Centres on a random basis all over the country.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

---

### வியாழக்கிழமை, 1974 ஏப்ரல் 11

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### மாயூரம் மகளிர் கலைக் கல்லூரி.

* 813 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் மகளிர் கலைக் கல்லூரியில் வரலாற்றுத் துறையில் எத்தனை ஆசிரியைகள் தற்போது பணியாற்றி வருகிறார்கள் ?

(இ) தற்போது உள்ள வகுப்புகளுக்குத் தேவையான வரலாற்று ஆசிரியைகள் நியமிக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(உ) ஆம் எனில், அதற்குரிய காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) பேராசிரியர்—ஒருவர்

துணைப் பேராசிரியர்—எழுவர்.

ஆற்றுநர்—ஒருவர்.

(இ) உண்மை அல்ல.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, வரலாற்று ஆசிரியர்கள் இல்லை என்றுதான் அங்கிருந்து மனு வந்தது. அமைச்சரவர்களின் பதிலில் அப்படி இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, உண்மை ஏது என்

பதை ஆராய்வதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா? அப்படிப் போதுமான வரலாற்று ஆசிரியர்கள் இல்லையென்ருல் அவர்களை நியமிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அந்தத் துறைக்குப் போதுமான ஒரு பேராசிரியர், 7 துணைப் பேராசிரியர்கள், ஒரு டெமான்ஸ்ட்ரேட்டர் என்ற அளவில் மொத்தம் 9 பேர் இருக்கிருர்கள். அந்தத் துறைக்குப் போதுமான அளவில்தான் இருக்கிருர்கள். வேண்டுமென்ருல் இடையிலே அங்கே ஒரு திங்கள் அல்லது இரண்டு திங்கள் துணைப் பேராசிரியர்கள் ஒருவர் இருவர் நியமிக்கப்படாமல் இருந்திருக்காலாம். இப்பொழுதிருக்கும் சூழ்நிலையில் தேவையான அளவில் இருக்கிருர்கள்.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, கல்லூரிகள் ஜூன், ஜூலையில் துவங்கப்பட்டால் கிட்டத்தட்ட டிசம்பர் மாதம் வரையில் போதுமான பேராசிரியர்கள் இல்லாமல் இருப்பதால் வகுப்புகள் நடத்துவதற்குத் தாமதமாகிறது. இப்படிப்பட்ட நிலைமை தொடர்ந்து பல்லாண்டுகள்ாக இருந்து வருகிறது. அந்தக் குறையை இந்த ஆண்டிலிருந்தாவது போக்குமளவில் கல்லூரி துவங்கும் நேரத்திலேயே எல்லாக் கல்லூரிகளிலேயும் பேராசிரியர்களை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கல்லூரி திறப்பதற்கு முன்னலேயே எவ்வளவு இடங்கள் காலி ஏற்படவேண்டும், எந்தெந்த இடங்களில் யாரைப் போட வேண்டுமென்று முன்கூட்டியே தீர்மானித்து, 10-ஏ (1)-ன்படி முன்கூட்டியே தேர்ந்தெடுத்து அந்த இடங்களை நிரப்ப வேண்டும் என்றும், பிறகு தேர்வு ஆணைக்குழு தேர்ந்தெடுப்பதற்கு வசதி ஏற்படும் சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதைக் கல்லூரி கல்வி இயக்குநரிடத்திலும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், மாயூரம் பெண்கள் கல்லூரியில் ஏற்கனவே பாட்டனி புரொஃபசர் இல்லாமல் இருப்பதாகத் தகவல் கொடுக்கப்பட்டது. இப்படி இந்தக் கல்லூரியைப்பற்றி இம்மாதிரி புகார்கள் வருகின்றனவே, குறிப்பிட்ட பேராசிரியர்கள் அங்கே போடப்படாமல் இருக்கிருர்களா? இப்பொழுது அங்குள்ள நிலைமை என்ன? மற்ற எல்லாப் பேராசிரியர்களும் போடப்பட்டிருக்கிருர்களா?





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதைப் பற்றிய குறிப்புகள் இல்லை. தனிக்கேள்வி போட்டால் அந்தத் தகவலை அறியலாம். வரலாற்றுத் துறையைப் பொறுத்தவரையில் அந்தக் குறைபாடு இல்லை என்பதைத்தான் சொன்னேன்.

*Devikumari College, Kuzhithurai*

* 814 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether there are proposals to open new courses [illegible] at the Devikumari College at Kuzhithurai [illegible] in Kanyakumari district?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை. [illegible]விகுமாரி கல்லூரியில் புதுவகுப்புகள் [illegible]ங்கக்கோரும் செயற்குறிப்பு ஏதும் அரசிடமோ அல்லது கல்லூரிக் கல்[illegible]யக்குநரிடமோ பரிசீலனையில் இல்லை.

**திரு. என். டென்னிஸ் :** தலைவர[illegible]களே, குழித்துறை பக்க[illegible] பெண்கள் கல்வி கற்பதற்கு வேறு கல்லூரிகள் இ[illegible] நிலைமை இருக்[illegible]. அவர்கள் நாகர்கோவிலுக்குத்தான் போக வேண்டியி[illegible] [illegible]தாக ஏகதேசம் 10 ஏக்கர் நிலங்கள் அந்தக் கல்லூரி கட்டடம் அமைப்பதற்காக டொனேட் செய்திருக்கிருர்கள். அந்த இடத்தில் இந்தக் கல்லூரியைமாற்றிஞல். இன்னும் அதிக வகுப்புகளை வைப்பதற்கு வசதியாக இருக்கும். அம்மாதிரி புதிய வகுப்புகளை வைக்கவும், கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றி விண்ணப்பங்கள் வரவில்லை, அதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்திடம் இல்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் வந்தால் ஆராயலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்தக் கல்லூரி சம்பந்தமாக இப்பொழுது ஒருசில சயன்ஸ் சப்ஜெக்ட்ஸ் ஒருசில ஆர்ட்ஸ் சப்ஜெக்ட்ஸ் இருக்கின்றன. பி.ஏ. போன்ற பட்டப் படிப்பிலே இன்னும் அதிகமாக மாணவிகளைச் சேர்த்துக் கொள்வதற்கு எல்லா சௌகரியங்களும் இருந்தும் அந்த இலாக்கா—தேவஸ்வம் இலாக்கா—நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இனிமேலாவது வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

*[1974 ஏப்ரல் 11*

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, கல்லூரிக் கல்வி இயக்குநரிடத்திலோ அல்லது பல்கலைக் கழகத்தினிடத்திலோ அந்தக் கல்லூரி நிர்வாகத்தினரிடமிருந்து விண்ணப்பம் வரவில்லை. முறைப்படி அவர்களிடமிருந்து விண்ணப்பம் வந்தால் பல்கலைக் கழகமும் கல்லூரிக் கல்வி இயக்குநரும் ஆராய்வார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : தலைவரவர்களே, கல்குளம், விளவங்கோடு ஆகிய இரண்டு தாலுக்காக்களிலும் ஏகதேசம் எட்டு லட்சம் ஜனத்தொகை இருக்கிறது. இந்தக் கல்லூரியில்தான் பெண்கள் படிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அது பெயரளவில் கல்லூரி என்று இருக்கிறதே தவிர பி.யூ.சி.க்குக்கூட 300 மாணவிகள்கூடச் சேர்க்கப்படுவதற்கான கட்டிட வசதி இல்லை என்று கூறப்படுகிறது. ஆகவே, அரசாங்கம் தேவஸ்வம் போர்டோடு கலந்து கல்லூரியை விஸ்தரித்து எந்த அளவில் மாணவிகளைச் சேர்க்கத் தேவைப்படுகிறதோ அந்த அளவில் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, இதற்கு அந்தக் கல்லூரி நிர்வாகத்தினர்தான் அந்த முயற்சியில் ஈடுபடுதல் வேண்டும். இடவசதி, மற்றவைகளை அவர்கள் ஏற்படுத்தினால் பல்கலைக் கழகம் ஒரு கமிஷனை அமைத்து புது வகுப்புகளை, பட்டப் படிப்பிற்குத் தேவையான வகுப்புகளை அமைத்து தர இயலும். கட்டிடத்திற்கு ஏற்பாடு செய்தால் பல்கலைக் கழகம் அனுமதி வழங்க இயலும். எனவே கட்டிட வசதிகளுக்கு அந்தக் கல்லூரி நிர்வாகத்தினர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். வேண்டுமென்றால் பல்கலைக் கழகம் அவர்களை இந்த இடத்தை விஸ்தீரணம் செய்ய முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : தலைவரவர்களே, கேள்வியில் தேவிகுமாரி கல்லூரி என்று இருக்கிறதே, அது ஆண்டவன் பெயரா அல்லது தனிப்பட்ட நபரின் பெயரா? நிர்வாகத்தினர் யார் என்று அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, கன்னியாகுமரி தேவஸ்வம் போர்டின் சார்பாக இந்தக் கல்லூரி நடைபெறுவதால் தேவிகுமாரி கல்லூரி என்று வைத்திருக்கிறார்கள்.



*1974 ஏப்ரல் 11]*

## *Foreign exchange earned by Tourist Homes*

* 815 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Tourist Homes run by the Government have earned foreign exchange during the calandar years 1971 and 1972; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : (அ) மற்றும் (இ) : தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் நடத்தி வரும் சுற்றுலா இல்லங்கள் மூலம் 1971 ஆம் ஆண்டில் அன்னியச் செலாவணி ஏதும் கிடைக்கவில்லை. 1972 ஆம் ஆண்டில் 20 டாலர்கள் கிடைத்தன.

**திரு. என். டென்னிஸ்** : தலைவரவர்களே, இப்பொழுது அங்கே வசூலிக்கப்படும் கட்டணங்கள் உயர்ந்ததாக இருக்கிறது. குறைந்த வருவாய் உள்ளவர்களையும் 'அட்ராக்ட்' செய்யக்கூடிய விதத்தில் குறைந்த கட்டணத்தில் அங்கே வசூல் செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, முன்பே நான் ஒரு கேள்விக்கு விடையளித்தபொழுது முன்பு ஒருமுறை குறிப்பிட்டிருக்கிறேன், நம்முடைய சுற்றுலா இல்லங்களில் விதிக்கப்பட்டிருக்கும் கட்டணம் அதிகம் என்று சொல்வதற்கில்லை. பிற நாடுகள், பிற மாநிலங்களோடு ஒப்பிடுகின்ற நேரத்தில் குறைந்த அளவாகத்தான் இருக்கிறது. கூடுமானவரையில் வெளிமாநிலங்கள், வெளிநாடுகளிலேயிருந்து வருகின்ற பயணிகளைத் தங்கச் செய்வதற்கேற்ற வகையில் இவைகளை அமைக்க வேண்டுமென்ற அளவில் சுற்றுலாத் துறை கவனிக்க வேண்டியிருக்கிறது. மற்றபடி குறைந்த அளவில் வைக்க வேண்டுமென்றால் வேறு பல வகைகளில் ரெஸ்ட் ஹவுஸ், ஓய்வு இடங்கள், ஓய்வு இல்லங்கள் ஆகியவைகளை டவுன்ஷிப் கமிட்டிகள், நகராட்சி மன்றங்கள் சார்பாக அப்படிப்பட்ட விடுதிகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

**திரு. ஏ. எம். இராஜா** : தலைவரவர்களே, 1971 ஆம் ஆண்டில் அன்னியச் செலாவணி ஒன்றுகூட வரவில்லை என்றும், 1972 ஆம் ஆண்டில் 20 டாலர்கள் கிடைத்தன என்றும் குறிப்பிட்டார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால் நம்முடைய சுற்றுலா பயணிகள் தங்கும் விடுதிகள் மற்ற ஹோட்டல்களைவிட வசதி குறைந்தவையாக இருப்பதால்தான் வெளிநாட்டுப் பிரயாணிகள் அங்கு வந்து தங்குவது இல்லையா? அல்லது என்ன காரணம் என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா? அப்படியில்லையென்றால் இந்த சுற்றுலா பயணிகள்

தங்கும் விடுதிகளை ஹோட்டல்களில் என்னென்ன வசதிகள் இருக்கின்றனவோ அந்த அளவில் உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அன்னியச் செலாவணியை வாங்குகின்ற அத்தகைய உரிமைக்கு நாம் ரிசர்வ் வங்கியின் அனுமதியைப் பெற வேண்டும். சுற்றுலா இல்லங்கள், இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பணம் மாற்று உரிமம் (Money changer's licence) பெற்றதற்குப் பிறகு அன்னியச் செலாவணி நடைமுறையில் ஈடுபட இந்திய அரசின் சுற்றுலா-விமானப் போக்குவரத்து அமைச்சரகம் 1972 நவம்பரில்தான் அவற்றிற்கு அதிகாரம் வழங்கியது. ஆகவேதான் 1971-ல் அந்த அளவிற்கு டாலர் வரவில்லை. 1972-ல் 20 டாலர்கள் கிடைத்தன. 1973-ல் 46 பவுண்டுகள், 393 டாலர்கள் கிடைத்திருக்கின்றன. ஆனால் அவர்களெல்லாம் டாலர்களை இங்கே வந்து மாற்றினாலும் மாற்றலாம் அல்லது பம்பாய், டெல்லி ஆகிய இடங்களில் மாற்றிக்கொண்டால் நமக்கு டாலர் கிடைக்காது. வெளிநாட்டுப் பயணிகள் இந்தியாவிலே வேறு எங்கேயாவது மாற்றியிருக்க வேண்டும். நமக்கு வந்த கணக்கைத்தான் இங்கே தருகிறோம்.

**திரு. கே. என். குமாரசாமி :** சுற்றுலா மாளிகை அன்னியச் செலாவணி ஈட்டித் தருவதில் எந்த நகரத்தில் இருக்கிற சுற்றுலா மாளிகையில் அப்படி வருவாய் அதிகமாக வந்திருக்கிறது? வெளிநாட்டினர் தங்க மிகவும் விருப்பப்படும் இடம் எது என்று ஏதாவது குறிப்புப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதா? அல்லது ஏதாவது வசதிகள் அதிகம் வேண்டும் என்று அந்தப் புத்தகத்தில் எழுதி வைத்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எந்தச் சுற்றுலா மாளிகையில் இருந்து கொடுத்தது என்ற தகவல் இல்லை. கன்னியாகுமரியில் சுற்றுலா மாளிகை வைத்திருக்கிறோம். கொடைக்கானலில் இருக்கிறது. மதுரையில் இருக்கிறது, திருச்சியில் இருக்கிறது. ஊட்டியில் இருக்கிறது. ஏர்க்காட்டில் இருக்கிறது. சென்னை மகாபலிபுரத்தில் கட்ட ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். என்னென்ன வசதிகளை வேண்டுமென்று எழுதியிருக்கிறார்களோ அந்தக் குறிப்புகளைப் பார்த்து அவ்வப்போது அத்துறை இயக்குநர் கவனித்துத் தக்க ஏற்பாடுகள் செய்து கொண்டு வருகிறார்கள்.



இந்தியாவிற்கு வந்து பம்பாயில் இறங்கும்பொழுது டாலரை ரூபாயாக மாற்றிவிட்டால் தமிழ்நாட்டுக்கு வரும்போது ரூபாய் நோட்டுக்களை எடுத்துக் கொண்டு வருவார்கள். ஆகவே இங்கு டாலர் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. இந்தியா முழுவதும் கணக்கிட்டால் எவ்வளவு அன்னியச் செலாவணி கிடைத்திருக்கிறது என்று கணக்கிட முடியும்.

**திரு. வை. பாலசுந்தரம் :** வெளி நாட்டுப் பயணிகள் அதிகம் வந்தால்தான் அன்னியச் செலாவணியை நாம் அதிகமாகப் பெறமுடியும். பம்பாய், டெல்லி, கல்கத்தா போன்ற நகரங்களில் வெளிநாட்டுச் செலாவணி அதிகமாகக் கிடைப்பதற்குக் காரணம் அங்கு பயணிகள் வந்து இறங்கி பார்ப்பதற்கு வசதிகள் செய்யப்படுகின்றன. இங்கு சென்னையைப் பொறுத்த வரையில் இங்கு அந்த விமானங்கள் வருவது கிடையாது. ஆகவே அதற்கான வழிவகை செய்தால் நாம் அதிக அன்னியச் செலாவணியைப் பெறமுடியும். ஆகவே அதற்காக இந்த அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்த அளவிற்கு பெரிய பெரிய விமானங்கள் வெளி நாடுகளிலிருந்து வருவதற்கு, சென்னை நகரில் இறங்கிச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று மத்திய அரசின் சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அன்னிய நாடுகளிலிருந்து வருகிற விமானங்கள் எல்லாம் பம்பாய், டெல்லி, கல்கத்தா ஆகிய இடங்களைத் தொட்டு விட்டு சென்று விடுகின்றன. ஆசிய நாடுகளில் இருந்து, சிங்கப்பூர், மலேஷியா, ஹாங்காங், பாங்காக் போன்ற இடங்களிலிருந்து வருகிற விமானங்கள் சென்னை நகரைத் தொட்டுவிட்டுச் செல்கிற அளவிற்கு ஏற்பாடு செய்தால் அதன் மூலம் பயணிகள் வந்து இங்கு தங்க வாய்ப்பு ஏற்படும். மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் இதுபற்றி கவனிப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மிகப் பெரிய ஜம்போ போன்ற விமானங்கள் இறங்கத்தக்க அளவிற்கு விமானக் கூடங்கள் சீர் செய்யப்படவேண்டும். அதற்கான முயற்சி எடுப்பதாகவும் மத்திய அரசு கூறியிருக்கிறது.

**திரு. எஸ். வடிவேல் :** நம் மாநிலத்தில் எவ்வளவு சுற்றுலா பயணிகள் விடுதிகள் இருக்கின்றன? வெளிநாட்டுக்காரர்களுக்கு ஒரு வாடகை, நம் நாட்டுக்காரர்களுக்கு ஒரு வாடகை என்று ஏதாவது பாகுபாடு இருக்கிறதா? உறுப்பினர்களுக்கு வேறு, அமைச்சர்களுக்கு வேறு என்று அந்தப் பயணிகள் விடுதிகளில் ஏதாவது மாற்றம் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தனிக் கேள்வி போட்டால் விபரங்கள் முழுவதும் கூற இயலும். அப்படி எந்த மாற்றமும் கிடையாது. அன்னிய நாட்டுப் பயணிகள் வந்தாலும்சரி, வெளி மாநிலங்களிலிருந்து வந்தாலும் சரி அல்லது உள்நாட்டுப் பயணிகள் வந்து தங்கினாலும் சரி எல்லோருக்கும் ஒரேவிதமான தன்மைதான் கையாளப்படுகிறது.

**திரு. கே. ஆர். கிருஷ்ணன் :** சுற்றுலா விடுதிகளில் வந்து தங்கும் பயணிகளுக்கு இரவு நேரங்களில் பொழுதுபோக புராதனக் கலையான தெருக்கூத்து போன்றவைகளை ஏற்பாடு செய்து இரவு பொழுதைப் போக்குவதற்கு வசதி செய்து கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஸீஸன்ஸ் என்று சொல்லப்படுகிற நவம்பர், டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி திங்கள்களில் அன்னிய நாட்டுப் பயணிகள் வருகிறபோது கிராமீய நடனங்கள், நம் நாட்டு கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய பெரிய பெரிய ஹோட்டல்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த இடங்களில் அப்படிச் செய்கிற அளவிற்கு அதிகப்பட்சமாக ரூ. 500 உதவி செய்வதற்கு முன்வந்தது. நம் சுற்றுலா விடுதிகளில் இப்படிப்பட்ட கலை நிகழ்ச்சிகளைச் செய்வதற்கான வசதிகள் பலவிடங்களில் இல்லை. மகாபலிபுரத்தில் அமைக்கப்பட இருக்கிற சுற்றுலா மாளிகையில் அந்த வசதிகளை ஏற்படுத்தலாம் என்ற எண்ணம் இருக்கிறது.

**திரு. ஆ. பரந்தாமன் :** அன்னியச் செலாவணி பெறுகிற வகையில் சென்னையில் இருக்கிற வி. ஜி. பன்னீர்தாஸ் நிறுவனத்தினர் சென்னைக்கு அருகாமையில் ஒரு அதிசயக் குடிசை ஏற்படுத்த அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் நம் அரசிடமிருந்து ஏதாவது கடன் கேட்டிருக்கிறார்களா ? அப்படி இருந்தால் அவர்களை ஊக்குவித்து அந்த அதிசயக் குடிசையை சென்னைக்கு அருகாமையில் ஏற்படுத்த ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. எஸ். முருகையன் :** தமிழ்நாடு அதிகமாக அன்னியச் செலாவணியை பெறமுடியவில்லை என்று சொன்னார்கள். அதிகப்படியான அன்னியச் செலாவணியைப் பெறுவதற்கு தனி முயற்சி ஏதாவது மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா ? மற்ற மாநிலங்களை விட கலைச் செல்வங்கள் நம் மாநிலத்தில் அதிகமாக இருந்தும் கூட சரியான விளம்பரம் இல்லாததன் காரணத்தினால்



தான் அதிகப்படியான அன்னிய நாட்டுப் பயணிகள் இங்கு வருவது தடைபடுகிறது என்று சொல்லப்படுவது உண்மையா ? அப்படியானால் அந்நிலையை மாற்றி அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பல்வேறு காரணங்களில், வருகிறவர்கள் இரண்டு மூன்று நாட்கள்தான் செலவழிக்க முடியும் என்ற நிலையில் டெல்லி, பம்பாய் நகரங்களைப் பார்த்துவிட்டு சென்று விடுகிறார்கள். அதோடு கூட ஒரு விமான வசதிதான் இங்கு இருக்கிறது. அதுகூட இரண்டு மூன்று நாட்கள் நின்றுவிடுகிறது. சென்ற ஆண்டு கூட சில பயணிகள் டெல்லிக்கு வந்து இங்கு வர முயன்றும் ஆகாய விமானப் போக்குவரத்து தடைப்பட்டு விட்டது. தவிர அந்நியச் செலாவணி எங்கு கிடைத்தாலும் அதைப் பயன்படுத்துகிற முழுப் பொறுப்பும் ரிசர்வ் வங்கிக்குத் தான் இருக்கிறது. நம் கைக்கு அவை வந்தாலும் அதைப் பயன்படுத்த முடியாது. நம் கையில் இருந்தால் கூட அது குற்றமாக ஆகும். எங்கு அந்நியச் செலாவணி கிடைத்தாலும் அது ரிசர்வ் வங்கிக்குத்தான் செல்லும். ஆகவே மத்திய அரசு தக்க வகையில் அதைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சி செய்யும்.

**திரு. கோவை செழியன் :** தமிழ்நாட்டில் வெளிநாட்டினரைக் கவர்கிற வகையில் பல இடங்கள் இருக்கின்றன. ஆனால் நமக்கே கூட அது தெரியாமல் இருக்கிறது ஏராளமான சிற்பங்கள் நிறைந்த கோவில்கள் எல்லாம் நிறைய இருக்கின்றன. அவை தமிழர்களுக்குக் கூடத் தெரிவதில்லை. அவற்றிற்கு சரியானபடி விளம்பரம் இல்லை. சுற்றுலாத் துறை சரியான முறையில் பணியாற்றவில்லை என்பதுதான் பொதுவான குற்றச்சாட்டு. அவை வெளிநாட்டினருக்குத் தெரிகிற முறையில் நன்கு விளம்பரப்படுத்தப்படவேண்டும். வெளிநாட்டினர் வந்து தங்குகிற விடுதிகளைப் பற்றி வெளிநாட்டினர் குறை கூறுகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகள் அங்கு இல்லை. எல்லா ஹோட்டல்களிலும் பார் அட்டாச்ட் இருக்கவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். நமக்கு வேண்டுமானால் அது வேண்டாம். ஆனால் வெளிநாட்டினருக்கு அந்த வசதியை நாம் செய்து தரவேண்டும். மேலும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. கோவை செழியன் :** மேலும் கைடுகள் சரியான முறையில் கிடைப்பது இல்லை என்று சொல்கிறார்கள். வெளிநாடுகளில் நல்ல முறையில் பல கைட்ஸ் இருக்கிறார்கள். ஆகவே நிறைய விடயம் தெரிந்த படித்த கைட்ஸ்களைப் போடுவதற்கும் அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சுற்றுலாத் துறை ஆண்டுக்காண்டு ஓரளவிற்கு வளர்ச்சி பெற்றுக் கொண்டுதான் வருகிறது. போதுமான அளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கிறதா என்றால் கிடைக்கிற நிதி வசதி மிகக் குறைவாக இருக்கிறது. அகில இந்திய அளவிலானாலும் சரி, மாநில அளவிலானாலும் சரி எவ்வளவுக்கெவ்வளவு நிதி வசதி அதிகமாகக் கிடைக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு வசதி வாய்ப்புகளை அதிகமாகப் பெருக்கமுடியும். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது நாளுக்கு நாள் சுற்றுலாத் துறையின் மூலம் ஏற்படுகிற வசதி வாய்ப்புகள் நிரம்ப வந்துகொண்டிருக்கின்றன. சுற்றுலாப் பயணிகள் தங்கி பார்ப்பதற்கேற்ற இடங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றை பல்வேறு வகைகளில் தொகுத்து வைக்கும் முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறது. வழிகாட்டிகளாக இருப்பவர்களுக்கு தனிப் பயிற்சி அளிக்க சுற்றுலாத் துறையினர் ஈடுபட்டு வருகிறார்கள். தனிப் பயிற்சி அளிக்கப்பட்டவர்களைப் பயன்படுத்திக்கொள்ளும் சூழ்நிலை எதிர் காலத்தில் ஏற்படும் என்ற நோக்கத்தில் சுற்றுலாத் துறையினர் அதற்கான கவனத்தைச் செலுத்தி வருகிறார்கள்.

### கோவை மாவட்டத்தில் பணிபுரியும் மகளிர் இல்லங்கள்

* 764 **வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் வினா எண் 560-க்கு, 29—3—1973-ல் அளிக்கப்பட்ட விடையையொட்டி, தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் பணிபுரியும் மகளிர்களுக்கான இல்லங்கள் எத்தனை எங்கெங்கு அமைந்துள்ளன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** கோவை மாவட்டத்தில் பணிபுரியும் மகளிர்களுக்கான கீழ்க்கண்ட இல்லங்கள் இரண்டு உள்ளன :—

(1) மகளிர் இல்லம். 18, மேற்கு லோகமான்ய தெரு, ஆர்.எஸ். புரம், கோயம்புத்தூர்.

(2) கிருத்துவ இளம் மகளிர் இல்லம், அவினாசி சாலை, கோயம்புத்தூர்.

மேலே முதலாவதாகக் குறிக்கப்பட்டுள்ள இல்லத்தை மூடிவிட உத்தேசித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, இந்த இல்லங்களில் மகளிருக்கு என்னென்ன வசதிகள் குறைவாக இருக்கின்றன ? கோவையில் உள்ள இல்லத்தை மூடுவதாகத் தெரிவித்தார்கள். மூடவேண்டிய அவசியம் என்ன ? வேறு நகரத்திற்கு, திருப்பூர் போன்ற நகரத்திற்கு, மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?



**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தண்ணீர் வசதி அதிகமாக இல்லாத காரணத்தால் அங்கே வந்து தங்கி வசதி பெறுகிறவர்கள் தங்க மறுக்கிறார்கள். ஐந்து பேர் இருக்கிறார்கள். எனவே தான், அதை வேறு இடத்திற்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது.

### காரையூர் மீனவர்களுக்கு வீட்டு மனைகள்

* 765 **வினா.—திரு. க. சுப்பு :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் காரையூரில் வசிக்கும் மீனவர்கள் வீட்டு மனைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலங்கள், அளவிடப்பட்டு, அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளனவா ?

(இ) இல்லையெனில், தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மீனவர்களின் வீட்டுமனைக்கென்று ஒதுக்கப்பட்ட 1.26 ஏக்கர் பரப்புள்ள நிலம் வருவாய்த்துறையால் இன்னும் உட்கோட்டம் செய்யப்படாமலும், எல்லை வகுக்கப்படாமலும் உள்ளது. இது குறித்து ராமநாதபுரம் மாவட்டம் ஆட்சித் தலைவரிடமிருந்து கேட்கப்பட்டுள்ள அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, ராமேஸ்வரம், தனுஷ்கோடி என்ற இடத்தில் பாதி கட்டிடங்கள் இடிந்தும், பாதி கட்டிடங்கள் நல்லவையாகவும் இருக்கின்றன. அது மத்திய அரசுக்குச் சொந்தமா, மாநில அரசுக்குச் சொந்தமா என்று எனக்குத் தெரியவில்லை. மாநில அரசுக்குச் சொந்தமாக இருந்தால், அதிலே மீனவர்கள் குடியிருப்புக்கு நல்ல வசதி இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநில அரசு முற்படுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இது காரையூர் கிராமத்தில் அவர்களுக்கு என்று இடம் எடுத்தாகிவிட்டது. வருவாய்த் துறை கோடிட்டு பகிர்ந்து அந்த நிலத்தைக் கொடுக்கவில்லை. அதனால் தான் இப்போது நிலுவையில் இருக்கிறது.

### *Coffee Plantations*

* 766. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(*a*) whether the Government have proposed to raise any coffee plantations in this State; and

(*b*) if so the details thereof?

[1974 ஏப்ரல் 11

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) & (இ) ஆம். இத்திட்டங்களின் விவரங்களாவன :—

சேலம் மாவட்டம் ஏற்காடு மலையில் சுமார் 810 ஏக்கர் நிலங்களில் காப்பித் தோட்டம் வளர்ப்பதற்கான திட்டம் ஒன்று வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் நிதியுதவியுடன் ரூ. 13.10 லட்சம் மூலதனச் செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

ஸ்ரீலங்கா அகதிகளின் மறுவாழ்வு குறித்து, வனத்துறைத் தலைவர் சேலம் மாவட்டம் கொல்லிமலையில் 400 ஹெக்டேர் நிலத்தில் காப்பித்தோட்டம் பயிரிடுவதற்கான திட்டம் ஒன்றை ரூ. 81.80 லட்சம் செலவில், தயாரித்து இந்திய அரசுக்குப் பணிந்தனுப்பியுள்ளார். இந்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

நீலகிரி மாவட்டத்தில் ரூ. 75 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 2,500 ஏக்கரில் காப்பித் தோட்ட வளர்ச்சித் திட்டம் ஒன்றும், சேலம் மாவட்டம் ஏற்காடு மலையில் ரூ. 7.50 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 250 ஏக்கரில் காப்பித்தோட்ட வளர்ச்சித் திட்டம் மற்றொன்றும் வேளாண்மை மறுநிதிக் கழக உதவியோடு செயல்படுத்த பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, வேறு இடங்களுக்கும் இதை விஸ்தரிப்பதற்கு, அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா? இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் எத்தனை தொழிலாளர்கள் பயன் அடைவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** வேறு இடங்களில் எடுப்பதற்கான உத்தேசம் எதுவும் இப்போது இருக்கவில்லை. இதிலே கிட்டத்தட்ட 3,000 ஏக்கர் தீவிரச் சாகுபடிக்காகவும் 1,500 ஏக்கர் சாதாரண சாகுபடிக்காகவும் என்று விவரம் இருக்கிறது. எத்தனை பேர் பயன் பெறுவார்கள், எவ்வளவு அவர்களுக்கு ஒதுக்கப்படும் என்ற குறிப்பு இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் கேட்டு பதில் சொல்ல முடியும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவரவர்களே, 4,000 அடிக்கு மேல் காப்பி தோட்டம் வளர்ப்பதற்கு வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட மலைப்பகுதிகளில் ஏராளமான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அண்மையில் சிலோனிலிருந்து அகதிகளாக தமிழர்கள் இந்தியாவிற்குத் திரும்பி வர இருக்கிறார்கள். அந்த நீலகிரி பகுதியில் இருக்கும் புறம்போக்கு நிலங்களில் இவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து, அதன் மூலம் காப்பித் தோட்டங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா? காப்பிக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும்



1974 ஏப்ரல் 11]

நல்ல கிராக்கி இருக்கிறது. நமக்கு வெளிநாட்டுச் செலாவணியும் கிடைக்கிறது. ஆகவே, இதற்குக் கூடுதலான தொகை ஒதுக்கி அந்த அகதிகளைப் பயன்படுத்தி. அதிகமான காப்பித் தோட்டத்தை வளர்க்கும் திட்டத்தை அரசு விரைவில் வகுக்குமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** கூடுமான வரையில் நிறைய நிலங்கள் இருக்கின்றன. 2,500 ஏக்கர்தான் இப்போது நீலகிரியில் எடுத்து இருக்கிறார்கள். இன்னும் பல இடங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன. அதிலே ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. ஆக்கிரமிப்புகளை இப்போது அப்புறப்படுத்த முடியாது. 2,500 ஏக்கர் எடுத்து இருக்கிறோம். அதில் காப்பித் தோட்டம் மறுநிதிக் கழகத்தின் உதவியோடு 7½ இலட்சம் ரூபாய் செலவில் வளர்க்க இருக்கிறோம். ஸ்ரீலங்கா அகதிகள் குன்னூர், ஊட்டி போன்ற இடங்களுக்குப் போக மறுக்கிறார்கள். அப்படிப் போனாலும் உடனே திரும்பி வந்து விடுகிறார்கள். அவர்கள் சமநிலையில் உள்ள இடங்களில்தான் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகவே, அங்கே செல்ல விரும்புகிற அத்தனை பேருக்கும் வேலைவாய்ப்புக் கொடுக்கும் திட்டத்தை அரசு வைத்து இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவிலுள்ள மேற்குத்தொடர்ச்சி மலையில் காப்பித் தோட்டங்கள் சில இருக்கின்றன. அதற்கு அருகாமையில் புதிதாக காப்பித் தோட்டங்கள் ஏற்படுத்துவதற்கு லாயக்கான இடங்கள் நிறைய இருக்கின்றன. ஆகவே, அந்தத் திட்டத்தை விஸ்தரிக்க அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இப்போது கன்னியாகுமரி பகுதியில் ரப்பர் தோட்டம் வைத்து இருக்கிறோம். அங்கே காப்பித் தோட்டம் வைப்பது பற்றிய திட்டத்தை அரசு எடுத்துக்கொள்ளவில்லை.

**திரு. அ. ஆறுமுகம் :** தலைவரவர்களே, சேலம் மாவட்டம் ஏற்காடு கொல்லி மலையில் காப்பித் தோட்டங்களை ஏற்படுத்தப்போவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தத் திட்டத்தை அங்கே ஏற்படுத்துகிறபோது எத்தனைத் தொழிலாளர்கள் அதன் மூலம் பயன்பெறுவார்கள் என்று அறிய விரும்புகிறேன். அதோடு நம்முடைய அரசுக்கு எவ்வளவு வருமானம் வரும் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** 81.80 லட்சம் செலவில் இந்தத் திட்டத்தை 400 ஹெக்டேர் நிலப்பரப்பில் நிறைவேற்றுவதற்காக மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறது. மத்திய அரசு ஒப்புக்கொண்டு

[1974 ஏப்ரல் 11

பணம் கொடுப்பார்களானால், பின்னர் எத்தனை பேர்களுக்கு பகிர்ந்து கொடுக்க முடியும், அதனால் வரும் லாப நஷ்டம் என்ன என்று சொல்ல முடியும். திட்டம் இப்போது மத்திய அரசுக்குச் சிபார்சு செய்து அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: சார், இந்தக் காப்பித் தோட்டம் வளர்ப்பதற்கான இடங்கள், அதற்குப் பக்குவமான நிலங்கள் இந்த மாநிலத்தில் எவ்வளவு இருக்கிறது என்று சர்வே செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி சர்வே செய்யப் பட்டு இருந்தால், அதிலே பாலமலைப் பகுதி சேருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அந்த விவரம் இப்போது இல்லை. அது விவசாயத்துறையில் இருக்கலாம். அகதிகளுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக காப்பித் தோட்டம் வளர்ப்பதற்காக இந்தத் திட்டத்தை மலைப்பகுதிகளில் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதை எப்படி எந்தெந்த இடங்களில் நாம் செயலாற்றலாம் என்பதைக் குறித்துத்தான் மறுநிதி உதவிக் கழகத்தின் பண உதவி கேட்டு மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். மாநிலம் பூராவும் எவ்வளவு நிலம் இருக்கிறது, அதிலே காப்பித் தோட்டங்கள் எவ்வளவு இருக்கிறது என்பதை விவசாயத்துறையிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டும்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, காப்பிக் கொட்டையைப் பொறுத்தவரையில் நமக்கு பற்றுக்குறை இருப்பதாகத் தெரியவில்லை. இந்த காப்பிக் கொட்டைப் பயிரை அபிவிருத்தி செய்தால் உலக நாடுகளில் பூராவும் அதற்கு வரவேற்பு இருந்தால் அந்தத் திட்டத்தை நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய நம்முடைய அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இது அகதிகளுக்கான திட்டம் பற்றியது. காப்பிக் கொட்டை பயிரிடுவது பற்றியெல்லாம் இந்தத் துறையைச் சேர்ந்தது அல்ல.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்த பர்மா அகதிகளுக்காக, இலங்கை அகதிகளுக்காக அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்காக எங்கெங்கே காப்பித் தோட்டம் வளர்க்க முடியுமோ அங்கேயெல்லாம் காப்பித் தோட்டம் வளர்க்கும் திட்டத்தை அரசு போடுவதாக கொள்கை வைத்திருக்கிறதா? அவர்களுக்கு சரியான முறையில் வேலை கிடைக்காததால் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். தனியாருக்கு 90 ஆண்டு



1974 ஏப்ரல் 11]

குத்தகை விடுவதை விட, இவர்களுக்கு கூட்டுறவுத் துறையில் காப்பித் தோட்டங்களைக்கொடுத்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க சர்க்கார் காலதாமதம் இல்லாமல் திட்டம் வகுக்க முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: வருவாய்த்துறை எந்தெந்த இடங்களில் ஆக்கிரமிப்புகளை நீக்கி அகதிகளுக்காக காப்பித் தோட்டம் வளர்க்கும் திட்டத்திற்கு தருகிறார்களோ அங்கெல்லாம் அந்தத் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. எங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் இடங்களில் காப்பித் தோட்டம் வளர்ப்பதற்கான திட்டம் மேற்கொள்ளப்பட்டிருப்பதைக் குறித்து நான் பதில் கூறியிருக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: இது பொதுவான கேள்வியாக இருக்கிறது. இதற்கு விவசாய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டும்.

THIRU K. T. K. THANGAMANI: Sir, the question is addressed like this: Whether the Government have proposed to raise any coffee plantations in this State; and if so, the details thereof? There is no mention about 'agathigal' or any group of people. The question should have been addressed to the Hon. Minister for Agriculture.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் அக்ரிகல்சுரல் டிபார்ட்மெண்டிற்குத்தான் போய் இருக்கிறது. கேள்வி பொதுவாகத்தான் இருக்கிறது. அக்ரிகல்சுரல் டிபார்ட்மெண்டில் 'ரிஹாபிலிடேஷன்' என்ற நினைப்பில் அவர்களுக்கு அனுப்பிவிட்டு இருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அதனாலே துணைக்கேள்விகள் அதிகம் அனுமதித்து, அக்ரிகல்சுரல் மினிஸ்டரை பதில் சொல்லச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அக்ரிகல்சுரல் மினிஸ்டர் பதில் சொல்லலாம். அவரிடத்தில் தகவல் இருக்கவேண்டுமே.

மேல்நாட்டார் கால்வாய் மராமத்து

*816 வினா—திரு. வி. மலைக்கண்ணன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை ஆற்றிலிருந்து இராசசிங்கமங்கலம் கண்மாய்க்கு செல்லும் மேல்நாட்டார் கால்வாய் மராமத்து வெட்டப்போவது முடியுமா?

(ஆ) இத்திட்டத்தின் திருத்திய மதிப்பீடு எவ்வளவு?

—3

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இத்திட்டம் முடியுந்தருவாயில் இருக்கிறது.

(இ) ரூபாய் 14 இலட்சம்.

(முற்பகல் 9.30).

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த ஆர். எஸ். மங்கலம் கால்வாய்த் திட்டம் முடிந்தால் வைகை ஆற்றிலிருந்து ஆர். எஸ். மங்கலம் கண்மாய்க்குத் தண்ணீர் வந்து பாசன வசதிக்கு உதவியாக இருக்கும். இந்த ஆண்டு வைகை சானலே ஆர். எஸ். மங்கலம் கண்மாய்க்குப் போகக் கூடிய அளவுக்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதை என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியாது. விரைவில் முடிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## சண்முக நதியின் குறுக்கே பாலம்

* 817 வினா—புலவர் சி. பழனிச்சாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனி வட்டம், மானூருக்கருகில் சண்முக நதியின் குறுக்கே பெரிய பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

புலவர் சி. பழனிச்சாமி: மானூர் கிராமத்தில் இருக்கும் பத்தாயிரம் மக்கள் இந்தப் பாலம் அமையாத காரணத்தால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வெள்ள காலங்களில் சண்முக நதியில் ஏராளமாக வெள்ளம் வருவதால் ஆற்றைக் கடந்து செல்ல வழியே இல்லாத நிலையில் போக்குவரத்து கட தடைப்பட்டு விடுகிறது. ஆகவே, அங்கு ஒரு பெரிய பாலத்தை அமைத்து அந்த ஊர்ப் பொதுமக்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சமீபத்தில் பழனி வட்டத்தில் இரண்டு பெரிய பாலங்களைக் கட்டி திறந்து வைத்து விட்டு வந்தோம். இப்போது அங்கு ஏற்கனவே தரைப்பாலம் இருக்கிறது. புதிய பாலம் கட்ட வேண்டுமென்றால் 12 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. நிதி ஆதாரத்தைப் பொறுத்து இதைப் பரிசீலிக்கலாம்.

திரு. ஈா. ரா. முனுசாமி: இப்படிப் பாலங்கள் கட்டுவதற்கு 12 லட்சம் ரூபாய் ஆகிறது, 13 லட்சம் ரூபாய் ஆகிறது என்று சொல்லுகிறார்கள். இது போன்ற ஒரு பாலம் கட்டித் தரவேண்டுமென்று செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் பத்தாண்டு, பதினைந்து ஆண்டு காலமாகக் கோரிக்கை இருக்கிறது. வெள்ள காலத்தில் ஜனங்கள் வெளியே வாமுடியாத நிலை ஏற்படுகிறது. அப்பேர்ப்பட்ட இடங்களிலிருந்து ஜனங்கள் வெளியே வர பாலம் கட்டித்தர அரசு முன்வருமா?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதை அதர் ரோட்ஸ் ஸ்கீம் என்ற திட்டத்தின்கீழ்ப் பரிசீலிக்கலாம்.

## *New Dams in Nanguneri taluk.*

* 818 *Q.*—Thiru T. GANAPATHY: Will the Hon. the Minister for Public Works be pleased to state the present stages of Pachayar Dam and Kodumudi Dam schemes in Nanguneri taluk, Tirunelveli district?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்திலுள்ள பச்சையாறு, கொடுமுடியாறு ஆகியவற்றின் குறுக்கே முறையே ரூபாய் 225 லட்சம், ரூபாய் 72 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், அணை கட்டுவதற்கான தலைமைப் பொறியாளரின் (பாசனம்) செயற் குறிப்புகள் பற்றி வருவாய்த்துறை வாரியத்துடன் கலந்தாலோசித்து அரசு பரிசீலித்து வருகிறது. வருவாய்த்துறை வாரியத்தின் குறிப்புரைகள் வரப்பெறுவதன் மேல் முடிவு எடுக்கப்படும்.

திரு. டி. கணபதி: இந்த இரண்டு அணைகளும் நாங்குநேரி, மேலப்பாளையம், இராதாபுரம் ஆகிய மூன்று தொகுதிகளுக்கும் உட்பட்டிருக்கிறது. அவை வறண்ட பிரதேசமாக இருப்பதாலும், 1974-75-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அடையாள நிதி ஒதுக்கம் செய்திருப்பதாலும் இதை விரைவில் நிறைவேற்றித் தர மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அடையாள நிதி ஒதுக்கம் செய்திருப்பதிலிருந்தே அரசுக்கு இருக்கும் அக்கறையை உணர்ந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

திரு. டி. கணபதி: பச்சையாறு அணைத் திட்டப் பகுதியில் அட்டாமிக் ஸ்டேஷன் அமைய இருப்பதால் அதற்குத் தண்ணீர் தேவையாக இருக்கிறது. ஆகவே, மழை காலத்தில் கடலில் சென்று விழுகும் தண்ணீரைப் பயன்படுத்தி அடாமிக் ஸ்டேஷனுக்குக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இத்திட்டம் முடியுந்தருவாயில் இருக்கிறது.

(இ) ரூபாய் 14 இலட்சம்.

(முற்பகல் 9.30)

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த ஆர். எஸ். மங்கலம் கால்வாய்த் திட்டம் முடிந்தால் வைகை ஆற்றிலிருந்து ஆர். எஸ். மங்கலம் கண்மாய்க்குத் தண்ணீர் வந்து பாசன வசதிக்கு உதவியாக இருக்கும். இந்த ஆண்டு வைகை சானலை ஆர். எஸ். மங்கலம் கண்மாய்க்குப் போகக் கூடிய அளவுக்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதை என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியாது. விரைவில் முடிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### சண்முக நதியின் குறுக்கே பாலம்

* 817 வினா—புலவர் சி. பழனிச்சாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனி வட்டம், மானூருக்கருகில் சண்முக நதியின் குறுக்கே பெரிய பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

புலவர் சி. பழனிச்சாமி: மானூர் கிராமத்தில் இருக்கும் பத்தாயிரம் மக்கள் இந்தப் பாலம் அமையாத காரணத்தால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வெள்ள காலங்களில் சண்முக நதியில் ஏராளமாக வெள்ளம் வருவதால் ஆற்றைக் கடந்து செல்ல வழியே இல்லாத நிலையில் போக்குவரத்து கூட தடைப்பட்டு விடுகிறது. ஆகவே, அங்கு ஒரு பெரிய பாலத்தை அமைத்து அந்த ஊர்ப் பொதுமக்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சமீபத்தில் பழனி வட்டத்தில் இரண்டு பெரிய பாலங்களைக் கட்டி திறந்து வைத்து விட்டு வந்தோம். இப்போது அங்கு ஏற்கனவே தரைப்பாலம் இருக்கிறது. புதிய பாலம் கட்ட வேண்டுமென்றால் 12 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. நிதி ஆதாரத்தைப் பொறுத்து இதைப் பரிசீலிக்கலாம்.

திரு. ரா. ரா. முனுசாமி: இப்படிப் பாலங்கள் கட்டுவதற்கு 12 லட்சம் ரூபாய் ஆகிறது, 13 லட்சம் ரூபாய் ஆகிறது என்று சொல்லுகிறார்கள். இது போன்ற ஒரு பாலம் கட்டித் தரவேண்டுமென்று செஞ்சி வட்டம் ஒன்றியத்





தில் பத்தாண்டு, பதினைந்து ஆண்டு காலமாகக் கோரிக்கை இருக்கிறது. வெள்ள காலத்தில் ஜனங்கள் வெளியே வரமுடியாத நிலை ஏற்படுகிறது. அப்பேர்ப்பட்ட இடங்களிலிருந்து ஜனங்கள் வெளியே வர பாலம் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதை அதர் ரோட்ஸ் ஸ்கீம் என்ற திட்டத்தின்கீழ்ப் பரிசீலிக்கலாம்.

### *New Dams in Nanguneri taluk.*

* 818 Q.—Thiru T. GANAPATHY: Will the Hon. the Minister for Public Works be pleased to state the present stages of Pachayar Dam and Kodumudi Dam schemes in Nanguneri taluk, Tirunelveli district?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்திலுள்ள பச்சையாறு, கொடுமுடியாறு ஆகியவற்றின் குறுக்கே முறையே ரூபாய் 225 லட்சம், ரூபாய் 72 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், அணை கட்டுவதற்கான தலைமைப் பொறியாளரின் (பாசனம்) செயற் குறிப்புகள் பற்றி வருவாய்த்துறை வாரியத்துடன் கலந்தாலோசித்து அரசு பரிசீலித்து வருகிறது. வருவாய்த்துறை வாரியத்தின் குறிப்புரைகள் வரப்பெறுவதன் மேல் முடிவு எடுக்கப்படும்.

திரு. டி. கணபதி: இந்த இரண்டு அணைகளும் நாங்குநேரி, மேலப்பாளையம், இராதாபுரம் ஆகிய மூன்று தொகுதிகளுக்கும் உட்பட்டிருக்கிறது. அவை வறண்ட பிரதேசமாக இருப்பதாலும், 1974-75-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அடையாள நிதி ஒதுக்கம் செய்திருப்பதாலும் இதை விரைவில் நிறைவேற்றித் தர மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அடையாள நிதி ஒதுக்கம் செய்திருப்பதிலிருந்தே அரசுக்கு இருக்கும் அக்கறையை உணர்ந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

திரு. டி. கணபதி: பச்சையாறு அணைத் திட்டப் பகுதியில் அட்டாமிக் ஸ்டேஷன் அமைய இருப்பதால் அதற்குத் தண்ணீர் தேவையாக இருக்கிறது. ஆகவே, மழை காலத்தில் கடலில் சென்று விழுகும் தண்ணீரைப் பயன்படுத்தி அட்டாமிக் ஸ்டேஷனுக்குக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1974 ஏப்ரல் 11

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அங்கத்தினர் குறிப்பிடுவது போன்ற தகவல் இல்லை. இரண்டு ஆண்டுகளுக்குள்—ஏறக்குறைய இரண்டுமே கட்டுப் படியாகக் கூடிய திட்டங்கள், லாபகரமாக இருக்கும் என்ற நிலையில் நிறை வேற்றப்படும். வருவாய்த் துறை வாரியத்திலிருந்து அறிக்கை எதிர்பார்க்கப் படுகிறது. அது வந்தவுடன் முடிவெடுக்கப்படும்.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: இந்தத் திட்டத்தால் எவ்வளவு ஏக்கர் அந்த வட்டாரத்தில் பயன் பெறும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பச்சையாறு அணைத் திட்டப் பகுதியில் ஏற்கனவே பாசனம் செய்யப்பட்டு வரும் 10,203 ஏக்கர் நிரந்தரமாகத் தண்ணீர் பெற வாய்ப்பு இருக்கிறது. ஷார்ட் டர்ம் பயிர் 3,313 ஏக்கர் பலன் பெறும். அது போக 832.57 ஏக்கர் புதிதாகப் பாசனத்திற்கு வரும். கொடு முடியாறு நீர்த்தேக்கத்தால் 4,809.86 ஏக்கர் நிரந்தரமாகத் தண்ணீர் வசதி பெறும். 823.87 ஏக்கர் குறுகிய காலப் பயிருக்குத் தண்ணீர் கிடைக்கும். அதுபோக புதிதாக 321.16 ஏக்கர் பாசன வசதி பெறும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த இரண்டு முக்கியமான திட்டங் களுக்கும் எவ்வளவு செலவாகும் என்ற விவரத்தை எல்லாம் அமைச்சர் அவர் கள் தந்திருக்கிறார்கள். இது எகனமிக் யூனிட்டாக இருக்குமா? போதிய அளவு தண்ணீர் கிடைக்குமா என்ற ஆராய்ச்சி எல்லாம் முடிந்து சாதகமாக இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது பொருளாதாரத் துறையில் நல்ல கட்டுபடியாகக் கூடியதாக இருக்குமென்று நம்பப்படுகிறது. தண்ணீர் இருக்குமென்றும் நம்பப்படுகிறது. வருவாய்த் துறையிலிருந்து அறிக்கை வந்தவுடன் அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நாங்குநேரி, ராதாபுரம் ஆகிய பகுதிகள் நம்முடைய மாநிலத்திலேயே மிகவும் வறட்சியான பிரதேசங்கள். சம்மர் சீசனில் குடிக் கக்கூடத் தண்ணீர் கிடைக்காது. இது எகனமிக் யூனிட் இல்லையென்று ஒரு வேளை வருவாய்த் துறையிலிருந்து அறிக்கை வந்தாலும் அங்கிருக்கும் சூழ் நிலைகளைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு திட்டங்களை நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அங்கத்தினர் குறிப்பிடுகிற அத்தனை யையும் அரசு பரிசிலித்து பரிவோடு, இரக்க சுபாவத்தோடு நோக்கன் ஸிடரண்ட் ஒதுக்கியிருக்கிறோம். வருவாய்த்துறை அறிக்கை வந்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.



1974 ஏப்ரல் 11]

## Agro-Economic Research

* 819. Q.—Thiru R. R. MUNUSAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any Agro-Economic Research is being conducted in this State by the State Government; and

(b) if so, the details thereof?.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (ஆ) வேளாண்மை-பொருளாதார ஆராய்ச்சி, மாநில அரசினால் நடத்தப்படுவதில்லை; பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்டு வருகிறது.

திரு. நா. வீராசாமி: இது பல்கலைக் கழகத்தால் நடத்தப்பட்டு வருகிறது, அரசால் நடத்தப்படுவதில்லை என்று சொன்னார்கள். இந்த நாடு விவசாயத்தை நம்பியிருக்கும் நாடு. நம்முடைய அரசாங்கமே இதிலே ஆராய்ச்சி செய்தால் தான் விவசாயத்தை நம்பியிருக்கும் தொழிலாளர்கள், விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர வழி செய்ய முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறை பற்றிய புத்தகங்களை எல்லாம் படித்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, இந்த ஆராய்ச்சியைப் பல்கலைக் கழகத்திற்கு விடாது அரசாங்கமே எடுத்துக் கொண்டு விவசாயத் தொழி லாளர்களுடைய பர் காபிடா இன்கம் உயருவதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இந்த ஆராய்ச்சி தனியார் துறை யால் நடத்தப்படவில்லை. பல்கலைக் கழகம் என்று சொல்லும்போது அந்த மானேஜிங் போர்டு அரசால் நியமிக்கப்படுவதாகும். அதைத் தனியார் துறை என்று சொல்லிவிட முடியாது. எப்படி பர் காபிடா இன்கமை உயர்த்துவது என்பதும் ஆராய்ச்சியில் அடங்கியிருக்கிறது. மானாவாரிப் பயிரில் கிடைக்கும் வருமானத்தை விட பாசனத்தில் எவ்வளவு தூரம் வருமானத்தை அதிகரிக்க முடியும் என்பதெல்லாம் ஆராய்ச்சியில் இருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: பல்கலைக் கழகம் இது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்து முடிவுகளை வெளியிட்டிருக்கிறார்களா? விவரங்களை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தனிக் கேள்வி போட்டால் முடிவு களை எல்லாம் அச்சிட்டுக் கொடுக்க முடியும். சுருக்கமாகச் சொல்ல வேண்டு மென்றால் சொல்லுகிறேன். மானாவாரியாகப் பயிரிடப்படுவதைவிட பாசன முறையில் நீர் பாய்ச்சி பயிரிடப்படுமானால் மகசூல் 3 மடங்கு அதிகமாக இருக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். புதிய டெக்னாலஜி, புதிய முறைகள், புதிய ரசாயன உரங்கள், என்.பி.கே. இவற்றைப் போடுவதால் எவ்வளவு

னாம் மகசூல் அதிகப்படுகிறது என்று கூறியிருக்கிறார்கள். 'கே', போடு வதால் எந்த விதமாகவும் மகசூல் அதிகரிக்கவில்லை என்றும் சொல்லியிருக்கி றார்கள்.

**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** விவசாயப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வேறு என்னென்ன தொழில்களை தமிழ் நாட்டில் துவக்கலாம் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் ஒரு ஆராய்ச்சிக் குழுவை நியமிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** அக்ரோ இண்டஸ்ட்ரிஸ், அதாவது விவசாயத்தை ஒட்டிய தொழில்கள் என்னென்ன என்பது கொஞ்சம் தெரியும். அதற்குத் தனியாக குழு நியமித்து விரிவான ஆராய்ச்சி பண்ணுவது பற்றி ஆலோசிக்கலாம் என்று கருதுகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தற்பொழுது இந்த விவசாயத் தொழில் ஒரு கட்டுபடியாகக்கூடிய தொழிலாக இல்லை என்று அதிலே ஈடுபட்டிருக்கிற பல பேர்களும், பெரும்பான்மையான மக்கள் சொல்கிறார்களே. அப்படி கட்டுபடியாகமல் இருப்பதற்கு காரணங்கள் என்ன என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்து, கட்டுபடியாகக்கூடிய ஒரு தொழிலாக அதை நடத்துவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பது பற்றி பல்கலைக் கழகத்தில் செய்யக்கூடிய இந்த ஆராய்ச்சியில் சேர்க்கப்பட்டிருக்கிறதா? அல்லது பாசனம், பாசனம் இல்லாத நிலங்களுக்கு இன்னென்ன உரம் போட்டால் விளைச்சல் அதிகமாகும் என்பதைப்பற்றி மட்டும் ஆராய்ச்சி செய்யப்படுகிறதா? அல்லது இதைக் கட்டுபடியாகக்கூடிய ஒரு தொழிலாகச் செய்வதற்கு, இதிலே ஈடுபட்டிருக்கிற வர்களுக்கு ஊக்கம் அளிக்கும் தொழிலாக இதை மாற்றுவதற்கு என்னென்ன செய்தால் சரியாக இருக்கும் என்பதையும் சேர்த்து இதிலே ஆராய்ச்சி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** விவசாயம், வேளாண்மை கட்டு படியாகாத தொழில் என்பதை நான் ஒப்புக் கொள்வதற்கு இல்லை. நான் சொல்வதைப்பற்றி வருந்த வேண்டாம். யாருக்காவது விவசாயம் தெரியும் என்று கூறுபவர்களை நான் கேட்பேன், விவசாயத்தில் வருமானம் வருமா என்று. பொதுவாக நஷ்டம் வருகிறது என்று சொல்பவர்களுக்கு விவசாயம் தெரியாது. வருமானம் வரும் என்று சொல்பவர்களுக்கு விவசாயம் தெரியும் நான் நினைத்துக் கொள்வதைச் சொல்கிறேன். இந்த ஆராய்ச்சி 13 வகை களிலே நடைபெறுகிறது. முன்பு ஒரு மாண்புமிகு உறுப்பினர் கேட்கும்





பொழுது பதில் சொன்னேன். பதின்மூன்று வெவ்வேறு விதமான ஆராய்ச்சி களில் என்னென்ன முடிவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று விரிவாகச் சொல்லவேண்டுமென்றால் இப்போது முடியாத காரியம். பிறகு அச்சிட்டுத் தனியாக தருகிறேன்.

**திரு. கோவை செழியன்:** விவசாயத்தில் எல்லோருக்கும் வருமானம் வருகிறது என்று சொல்வது ஒரு தவறான கருத்தாகும். இயற்கையைப் பொறுத்துத்தான் அதெல்லாம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேளாண்மை பொருளாதார ஆராய்ச்சி ஏதேனும் நடத்தப்படுகிறதா என்பது கேள்வி. மற்றபடி எல்லா பொருள்களைப் பற்றியும் சப்ளிமெண்டரி கேட்பது முறையல்ல.

**திரு. கோவை செழியன்:** அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலை வைத்துத் தான் நான் கேட்கிறேன். வேளாண்மைப் பொருளாதார ஆராய்ச்சி பல்கலைக் கழகத்தில் செய்யப்படுவதாகச் சொன்னார்கள். ப்ரொஃபஸர் ராஜகோபால் அவர்கள் தலைமையில் அது நடக்கிறது. அது பாடம் சொல்வதற்கு மட்டும் தான் பயன்படுகிறது. அதை பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு எந்த ஒரு கண்டுபிடிப்பும் செய்து சொல்லவில்லை. பொது மக்களுக்கு பயன் படுகின்ற வகையில் எக்ஸ்டென்ஷன் டிபார்ட்மெண்ட் மூலமாக பயன்படுகிற வகையில் அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** யுனிவர்ஸிடி ரூரல் ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட் என்று தனியாக அமைத்து சில ஆராய்ச்சிகள் நடைபெறு கின்றன. இதில் தீர்மானமாக கண்டிபிடிக்கப்பட்டவைகளை மக்களுக்கு நிச்சயம் தெரிவித்துக் கொண்டு வருகிறோம். நல்ல எக்ஸ்டென்ஷன் சர்வீஸ் இருக்கிறது. மக்களுக்குத் தெரிவிப்பதற்கு போதுமான அதிகாரிகள் ஒவ்வொரு பிளாக்கிலும் இருக்கிறார்கள். அவர்கள் மூலம் தெரியப்படுத்தி வருகிறோம்.

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அக்ரோ எகனமிக் ரிஸர்ச் 13 தலைப்புகளில் செய்யப் படுவதாகச் சொன்னார்கள். பதின்மூன்று தலைப்புகள் என்னென்ன என்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா? அதிலே உரத்தைப்பற்றியும் ஆராய்ச்சி செய்வதாகக் குறிப்பிட்டார்கள். பொட்டாஷ் தேவையில்லை என்று ஆராய்ச்சியில் கண்டுபிடித்திருக்கிறார்கள் அக்ரோ எகனமிக் ரிஸர்ச் டிபார்ட் மெண்டில் என்று சொன்னார்கள். ஆனால் நம்முடைய விவசாயத் துறையில் பொட்டாஷ் போடச் சொல்கிறார்கள். அக்ரோ எகனமிக் ரிஸர்ச்சில் பொட்டாஷ் தேவையில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது

நம்முடைய அக்ரிகல்சர் டிப்பார்ட்மெண்ட் பொட்டாஷ் போடச் சொல்கிறார்கள். இது வீண் தானே? இம்மாதிரி பணம் வீண் விரயம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி மேற்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: உரத்தைப்பற்றி ரொம்ப தீவிரமாக ஆராய்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. எவ்வளவு நைட்ரஜன் உரம் போட்டால் அதிகப்படியான மகசூல் வரும், எதற்கு மேல் போடக்கூடாது, எதைவிடக் குறைவாகப் போட்டால் மகசூல் குறையும் என்றெல்லாம் ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. எழுபது கிலோ நைட்ரஜன் போட்டால் அதிக மகசூல் கொடுக்கும் என்று கூறுகிறார்கள். இரண்டாவதாக Potassium தமிழ் நாட்டில் அவ்வளவு அதிகமாகத் தேவையில்லை, நீலகிரி மாவட்டம், கோவை மாவட்டத்தில் சில பகுதிகளைத் தவிர, பொட்டாஷியம் என்பது பொதுவாக தேவையற்ற உரமாக இருக்கிறது. தமிழ் நாட்டிலுள்ள நிலங்களில் அந்தச் சத்து போதுமான அளவு இருக்கிற காரணத்தினால் நான் கூடிய வரைக்கும் சொல்லிக் கொண்டு வருகிறேன், வீணாக பொட்டாஷியம் உரத்தில் பணம் போடாதீர்கள் என்று. பொட்டாஷியம் உரம் நீலகிரி மாவட்டம், கோவை மாவட்டம் சில பகுதிகளைத் தவிர மற்ற இடங்களுக்குத் தேவையில்லை. முக்கியமாக பழ வகைகளுக்கு அது தேவைப்படுகிறது. நைட்ரஜன் உரம் மிகவும் முக்கியமானது என்பது எல்லோருக்கும் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண் 820.

(பல உறுப்பினர்கள் துணைக் கேள்வி கேட்பதற்காக எழுந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 15 நிமிடங்கள்தான் இருக்கின்றன. ஐந்து கேள்விகள் இருக்கின்றன. வேண்டிய அளவுக்கு துணைக் கேள்விகள் போட்டிருக்கிறீர்கள். ஏழு துணைக் கேள்விகள் போட்டாகி விட்டது. அதற்கு மேல் கேட்பது நல்லது அல்ல.

திரு. என். கே. பழனிசாமி எழுந்திருந்தார்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): நான் இன்பர்மேஷன் கொடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு மேல் பிரிவிலேஜ் கொண்டு வாருங்கள்.

THIRU K. T. K. THANGAMANI: When so many supplementaries are demanded, there is a way out. Half an hour discussion may be allowed.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: எழுதிக் கொடுங்கள், பார்க்கலாம்.



*Small Farmers' Development Agencies*

*820 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that the State Government propose to set up Small Farmers' Development Agencies in the State, and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம் ஐந்து மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி: இந்தத் திட்டத்தின் விவரம் என்ன? உண்மையாகவே சிறு விவசாயிகளினுடைய முன்னேற்றத்திற்கான திட்டம் என்பது அவர்கள் உற்பத்திக்கு மட்டும் அல்ல, அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்கவேண்டும், எப்பொழுது விலை குறைகிறதோ சர்க்காரே தலையிட்டு சர்க்கார் நிர்ணயித்த விலைக்கு வாங்க வேண்டும். இப்படிப்பட்ட திட்டத்தை கிராமப்புறங்களில் புகுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் என்பது முற்றிலும் நாம் மத்திய சர்க்காரினுடைய பணத்தைக் கொண்டு நடத்திக்கொண்டு வருகிறோம். ஏறத்தாழ 3 மாவட்டங்களுக்கு ரூ. 1½ கோடி, 2 மாவட்டங்களுக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். ஒன்றுக்குப் பாதி செலவு செய்கிறோம். மார்க்கெட் பற்றி சொன்னார்கள். விலைவாசியைப் பற்றி சொன்னார்கள். விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கவேண்டும் என்பதற்காக மார்க்கெட்டிங் கமிட்டிகளுக்கு சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சிறு விவசாயிகளுடைய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எப்படியெல்லாம் ரொடேஷன் கிராப் போடலாம் என்று அவர்களுக்கு அறிவுரை வழங்கப்படுகிறதா? அதுமட்டுமல்லாது, அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கிக்கொள்வதற்கு அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் மூலம் அவர்களுக்கு ஏதாவது ஒத்தாசை செய்யப்படுகின்ற திட்டம் ஏதாவது தீட்டப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ரொட்டேஷன் ஆஃப் கிராப்ஸ் பற்றி பொதுவாக எல்லா விவசாயிகளுக்கும் நாங்கள் அறிவுரை சொல்லி வருகிறோம். அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் என்பது சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தை ஒட்டியதாக இல்லை. சிறு உழவர்களை நாம் இரண்டாகப்

பிரித்திருக்கிறோம். தானாகவே சொந்த நிலத்தை நன்றாக வளப்படுத்தி அதன் மூலம் ஒரு குடும்பத்தின் 'செலவுக்கு கட்டுபடியாகக்கூடிய விதத்தில் வருமானம் பெறுகின்ற விவசாயிகள் ஸ்மால் ஃபார்மெர்ஸ். இரண்டாவது வகை மார்ஜினல் ஃபார்மர்ஸ். தங்கள் நிலத்தை வளப்படுத்துவது மட்டுமல்லாமல் வேறு உப தொழில்கள் தெரிந்துவரவேண்டும். பால் பண்ணை வைப்பது, கோழி பண்ணை வைப்பது இப்படி தெரியவேண்டும். இப்படி இரண்டு வகையிலே அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகிறோம்.

**திரு. கே. எ. வகாப் :** சிறு விவசாயிகள முன்னேற்றத்திற்காக இதுவரையில் என்ன செய்திருக்கிறார்கள் என்ற விவரங்கள் தெரிந்தால் நலமாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நஷ்டம் வருகிற விவசாயிகள் நல்ல விவசாயிகள் என்று ஒப்புக்கொள்ள முடியாது என்றெல்லாம் கூறினார்கள். சிறு விவசாயிகள் அண்மையில் நஷ்டம் அடைந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய பயிர் இன்ஷுரன்ஸ் போன்ற முறையை சிறு விவசாயிகளுக்கு ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் உடனடியாக முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தவறாக என்னைப்பற்றி சொல்ல வேண்டாம். நஷ்டம் அடைகின்ற விவசாயிகள் நல்ல விவசாயிகள் அல்ல என்று நான் சொல்லவில்லை. நான் சொன்னது நன்றாக விவசாயத்துறையில் நவீன முறைகளைத் தெரிந்தவர்கள் விவசாயத்தில் நஷ்டப்படத் தேவையில்லை என்பது தான். சிறு விவசாயிகளுக்கு அந்தப் புது முறைகள், நவீன விவசாய முறைகள் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. புதியதாக மத்திய அரசு சில திட்டங்களைப் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். வட ஆற்காடு, சேலம் பகுதிகளிலே அந்தப் புது திட்டங்களின் அடிப்படையில் மத்திய வங்கிகளிலிருந்து, மற்றும் மத்திய சர்க்காரின் 14 தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து, இன்னும் அதிக உதவியைச் செய்வதற்கு முன்வந்திருக்கிறார்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** சார், இந்த சிறு விவசாயிகள் பொட்டாஷ் போடவேண்டாமென்று சொல்லியிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் நம்முடைய விவசாய இலாகாவிலுள்ள வர்கள் பொட்டாஷ் மிக்சர் போடவேண்டுமென்று விவசாயிகளை வற்புறுத்து கிறார்கள். அதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அமைச்ச ரவர்கள் போடவேண்டாமென்று சொல்லும்போது, இலாகாவினர் போட வேண்டுமென்று சொல்லி வற்புறுத்துகிறார்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் டிபேட்ஸ் கூடாது என்று விதி இருக்கிறது. அந்த விதியைக் கடைப்பிடிக்க வேண்டும். நீங்கள் தகவலுக்காக கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** இது டிபேட் அல்ல; கேள்விதான். மினிஸ்டர் சொல்வதில் தவறு இல்லை. இலாகாவினர் சரியாக செயல்படவில்லை. அதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, தவறான முறையில் விவசாய இலாகாவினர் வற்புறுத்துவதை தடுக்க உத்தர விடப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு உர மிக்சரைப் பற்றி நன்றாகத் தெரியும் என்பது எனக்குத் தெரியும். நமது மாநிலத்தில் பொட்டாஷ் மிக்சர் பயன்படுத்த வேண்டுமென்று சொல்ல வில்லை. இங்கே இருக்கின்ற 14 மாவட்டங்களில் நிலத்தை சோதனை செய்து பார்த்து, பொட்டாஷ் தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கே இருக்கிற ஒரு தனியார் கம்பெனி பொட்டாஷ் மிக்சரை தயார் செய்து வருகிறார்கள். அவர்கள் அதற்கு சில காரணங்களைச் சொல்கிறார்கள். குறிப்பாக, மத்திய அரசு நைட்ரஜனுக்கு நிர்ணயித்திருக்கிற விலை போதாது. பொட்டாஷ் என்பது சாம்பல். இந்த சாம்பல் சத்தையும் சேர்த்து தயார் செய்தால் எந்த விலைக்கு வேண்டுமானாலும் விற்கலாம் என்று அவர்கள் பொட்டாஷ் மிக்சர் தயார் பண்ணுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். மொத்தத்தில் நமது மாநிலத்திற்கு பொட்டாஷ் மிக்சர் தேவையில்லை. ஆகவே, இந்த மாநிலத்திற்கு ஏற்ற உரத்தை தயார் செய்யுங்கள் என்று நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** சார், இந்த சிறு உழவர்கள் மேம்பாட்டு அமைப்புகள் நம்முடைய மாநிலத்தில் மூன்று மாவட்டங்களில் இருக்கின்றன என்று நினைக்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் 2, 3 ஆண்டுகளாக செயல் பட்டுக்கொண்டிருக்கிறது. அங்கே ஒதுக்கப்பட்ட பணம் 5 லட்சம் ரூபாய். ஆனால் ஒன்றே முக்கால் லட்சம் ரூபாய்தான்—மானியத்தை—செலவழித்திருக் கிறார்கள். மீதி செலவழிக்கப்படவில்லை. காரணம் என்ன என்று கேட்டால் மானியமாக கொடுத்த பணத்திற்கு ஈடான கடன் தொகை கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இங்கே மத்திய கூட்டுறவு வங்கியில் கொடுப்பதற்கு பண வசதி போதுமானதாக இல்லை; வேறு வங்கிகளிலும் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். ஆகவே, ஒதுக்கப்பட்ட பணம் முழுவதையும் செலவழிக்கின்ற வகையில் கொடுக்கின்ற மானியத்திற்கு ஈடான கடன் தொகையும் வழங்கப்படுவதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நெல்லை மாவட்டத்தைப்பற்றிக் கேட்கிருர்கள். அங்கே 1.6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 55 லட்சம் ரூபாய்தான் செலவழிக்கப் பட்டிருக்கிறது. அதோடு நின்றுவிடவில்லை; தொடர்ந்து நடக்கிறது. அவர்கள் ஒரு முக்கியமான கருத்தைச் சொன்னர்கள். மத்திய அரசு கொடுக்கிற பணத்தை தவிர வங்கிகளிடமிருந்து பணம் கடன் கிடைத்தால் சிறு விவசாயி களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்று சொன்னர்கள். அந்தக் கருத்தை மத்திய அரசு ஏற்கெனவே ஏற்றுக்கொண்டு, தகுந்த உத்தரவு பிறப்பித்திருக் கிருர்கள். தேசியமயமாக்கப்பட்ட 14 வங்கிகளும் இந்த சிறு விவசாயிகள் மேம்பாட்டு அமைப்புகளுக்கு கடன் கொடுக்க வகை செய்திருக்கிருர்கள் அதை நல்லமுறையில் பயன்படுத்த இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினு எண் 821.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், இது விவசாயிகள் பிரச்சனை. நிறைய விபரங்கள் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அதனுல் இன்னும் சில துணைக்கேள்விகளுக்கு அனுமதி தரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லா வினுக்களுக்கும் எல்லா உறுப்பினர் களும் துணைக்கேள்வி கேட்கவேண்டுமென்றில்லை. உங்களுக்கும் மற்றவர் களுக்கும் பல கேள்விகளில் துணைக் கேள்விகள் கேட்க அனுமதி கொடுக்கப் பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** அடுத்த வினுவில் இன்னும் நிறைய துணைக்கேள்விகள் கேட்க வாய்ப்பு இருக்கிறது.

## *Admission of students to Agricultural colleges*

*821 Q.—THIRU K. KANDASAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the number of candidates who applied for admission to the Agricultural Colleges during the year 1973;

(b) the number among them selected; and

(c) the number among those selected belonging to the Backward Classes?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** பேரவை முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

@ 419-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**திரு. சு. துரைசாமி :** தலைவரவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற விவர அறிக்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 455 பேர்களில் 203 பேர்கள் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று தரப்பட்டிருக்கிறது. ஆனல் கோவை மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகளில் பெரும்பகுதியினர் கவுண்டன்மார்கள். விகிதாச்சார அடிப்படையில், பாக்வெர்டு, பார்வெர்டு, ஷெடியூல்டு காஸ்ட் என்ற விகிதாச்சாரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் பெரும்பாலோர் கவுண்டன்மார்கள் விவசாயிகளாக இருப்பதால், அவர்களைத் விவசாயக் கல்லூரிக்கு தேர்ந்தெடுப்பதில் ஒரு தனிச் சலுகையாக 10, 15 மார்க்குகள் கொடுத்து சேர்த்துக்கொள்ள உத்தரவிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** இப்போது மார்க் தருகின்ற முறை வைக்கப்பட்டிருக்கிறது. இன்னின்ன பகுதிக்கு இத்தனை மார்க் என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்திருக்கிறது. அதனுல் வேறுவிதத்திலே அதை மாற்றி அமைக்க முடியாது. நண்பர் அவர்கள் குறிப்பிட்டபடி, பின்தங்கிய வகுப்பினருக்கு 31 சதவிகிதம் என்று நாம் ஆணை பிறப்பித்திருந்தாலும் ஏறத்தாழ சில பகுதிகளில் 60 சதவிகிதம் வரை சேர்க்கப்படுகிருர்கள். குறிப்பாக, அகிரிகல்ச்சர் எஞ்சினீயரிங் கல்லூரியில் 60 சதவிகிதம் வரை பிற்பட்ட வகுப்பினர் சேர்க்கப்பட்டிருக்கிருர்கள். அதற்கு காரணம் என்ன வென்றல் பொதுக்கோட்டாவில் பிற்பட்டவர்கள், முற்பட்டவர்கள் அல்லது தாழ்த்தப்பட்டவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோருக்கும் போட்டி இருப்பதால் அதிலே தேர்ச்சி பெற்று 60, சதவிகிதம் வரையில் வந்து விடுகிருர்கள். கோவையிலுள்ள விவசாயிகள் தமிழ்நாட்டிலேயே விவ சாயத்தைப்பற்றி அதிகமாக தெரிந்தவர்கள் என்பது என்னுடைய கருத்து. ஆகவே கோவை மாவட்டத்திலிருந்து ஒருவர் விவசாயக் கல்லூரிக்கு மனு செய்தால் கூடிய வரையில் அவர் தேர்ந்தெடுக்கப்படுகிருர். அங்கே உள்ளவர்களுக்கு விவசாயத்தைப்பற்றி நன்ருகத் தெரியும் என்பதுதான் அதற்கு காரணம்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, இந்த விவசாயக் கல்லூரியில் வேளாண்மையில் திறமை பெற்றவர்களின் குடும்பத்தினர் புறக்கணிக்கப் படுவதாகத்தான் எனக்குத் தகவல் வருகிறது. காரணம் என்னவென்றே புரியவில்லை. அந்த வேளாண்மைத் திறமைப்பெற்றவர்கள் குடும்பத்தினர் விவசாயக் கல்லூரியில் சேர்வதன் மூலம் மேலும் திறமைப் பெறுவதற்கும் நாட்டினுடைய விவசாய அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும் அவர்கள் திறமையைப் பயன்படுத்த வாய்ப்பு ஏற்படும். ஆகவே, அவர்களுக்கு முதலிடம் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** தலைவரவர்களே, 'விவசாயக் கல்லூரிகள் சீட்டுகள் ஒதுக்குவதில், ஏற்கெனவே பரம்பரை பரம்பரையாக விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் குடும்பத்தினருக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிருர் என்று கருதுகிறேன். அதைப்பற்றி ஏதாவது செய்ய முடியுமா என்று எதிர்காலத்தில் பரிசீலனை செய்யலாம்.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கோவை மாவட்ட விவசாயிகளைப்பற்றிச் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனுல் அந்த பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் அது ஒரு அட்டானமஸ் பாடி. அதிலே மாணவர்களைத் தேர்ந்தெடுக்க செலக்ஷன் கமிட்டி வைத்திருக்கிருர்கள். அதிலே இரண்டு டீன்கள் இருக்கிருர்கள். அவர்கள் முடிவு செய்கிறபடி தேர்ந்தெடுக்காமல், வைஸ் சான்சிலர் இஷ்டப்படித்தான் நடக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. ஏதாவது தகவல் வேண்டுமானுல்தான் கேள்விகள் கேட்கலாம். கேள்வி நேரத்தில் குற்றஞ்சாட்டுவதோ, வேறு விவகாரங்களைப் பற்றிச் சொல்வதோ கூடாது. ஏதாவது தகவல் வேண்டுமானுல் கேளுங்கள்.

**திரு. கோவை செழியன் :** தகவலுக்காகத்தான் கேட்கிறேன். விவசாயக் கல்லூரிக்கு தேர்ந்தெடுக்கப்படுகிற ஒரு மாணவனுக்கு வேளாண்மைத் தொழிலில் 75 மார்க்குகள் தகுதி பெற்றிருக்க வேண்டுமென்று வைத்திருக்கிருர்கள். அதன்படி செலக்ஷன் செய்வதில்லை. அத்தகைய தவறு நடக்காமல், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிற குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு முக்கியத்துவம் தருகின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.00)

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** தலைவரவர்களே, பல கேள்விகள் கேட்டிருக்கிருர்கள். முதலிலே செலக்ஷன் கமிட்டி நடக்கவில்லை என்று சொன்னுர்கள். இந்த மாதிரி குற்றச்சாட்டு கோவை பல்கலைக் கழகத்தைப் பற்றி வரவில்லை. வேறொரு பல்கலைக் கழகத்தைப் பற்றி வந்தபொழுது அதை அனுப்பச் சொல்லி பார்த்தேன். கோவை மாவட்டத்தையும் பார்த்தேன். செலக்ஷன் கமிட்டி யார் யாரைச் சொன்னுர்களோ அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிருர்கள். அதில் எந்தவித மாற்றமும் செய்யாமல் அவர்கள் அந்த மாணவர்களை அனுமதித்திருக்கிருர்கள் என்று நான் அந்த உறுதியைச் சொல்ல முடியும்.



1974 ஏப்ரல் 11]

கையெழுத்து என்னிடம் இருக்கிறது. தலைவர் அவர்களிடம் காண்பிக்க வேண்டுமானுல் காட்டுகிறேன். செலக்ஷன் கமிட்டியில் யார் யாரைச் சொன்னுர்களோ, எங்களுக்கு தெரிவிக்கப்பட்டதோ அந்தப்படி தேர்ந்தெடுத்திருக்கிருர்கள். அடுத்த கேள்வி செலக்ஷன் கமிட்டியில் உள்ளவர்கள் மார்க் போடும்போது விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்கள், விவசாயத்தில் பரம்பரையாக ஈடுபட்டு, விவசாயம் தெரிந்தவர்களுக்கு, சற்று அதிகம் மார்க் கொடுக்க வேண்டுமென்பது. இன்னதுக்கு இவ்வளவு மார்க் என்று கோர்ட்டு உத்திரவுப்படி ஒதுக்கியிருக்கிறோம். அதில் Optitude என்ற பகுதியிருக்கிறது. aptitude பகுதியில் நிச்சயம் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு அங்கே செலக்ஷன் கமிட்டியில் உள்ளவர்கள் அதிகமான மார்க் போட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

### கொள்ளு பயிரிடல்

* 822 வினு—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்தப் பகுதிகளில் கொள்ளு பயிர் செய்யப்படுகின்றது ?

(இ) 1972-73-ஆம் ஆண்டில் அதன் மொத்த உற்பத்தி என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** (அ) நீலகிரி, மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள் தவிர, மற்ற அனைத்து மாவட்டங்களிலும் கொள்ளு தமிழ்நாட்டில் பயிரிடப்படுகிறது.

(இ) 1972-73-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 48,850 டன் கொள்ளு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

### ஆற்காடு ஒன்றியத்தில் புதிய பாலங்கள்

* 823 வினு.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை தொகுதி, ஆற்காடு யூனியனைச் சேர்ந்த பாப்பேரி, குக்குண்டி கிராமங்களுக்கு அருகே ஓடும் கால்வாய்களின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இல்லை.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இந்தப் பாலம் கட்டுவது சம்பந்தமாக பஞ்சாயத்து யூனியன், டி.டி.சி. ரெக்கமெண்டு செய்து அனுப்பியுள்ளார்கள். பல காலமாக பாதை வசதியில்லாமல் அவதிப்படுகிருர்கள்.

தேர்தல் நேரத்தில் நான் வேறு வாக்கு கொடுத்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் என்னை இதிலிருந்து காப்பாற்றுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சாலைகள் ஊராட்சி ஒன்றிய சாலைகள் அல்ல. ஊராட்சி மன்றத்தின் சாலைகள். இந்த ஊராட்சி சாலைகளை எடுத்துக் கொள்வதில் மராமத்து பிற வேலை வாய்ப்பு திட்டத்தின் கொள்கையில் கூட இது வராது. காரணம் 1,500 மக்களுக்கு குறைவாக இருக்கிறது. அதைப் போலவே இதை வேறு பிற சாலைகள் "அதர் ரோட்ஸ்" என்ற திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டுமானால் இந்த ஆண்டு நிதிநிலை இடம் தரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அணைக்கட்டு கால்வாய் போகக் கூடிய பகுதி.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பேரவைத் தலைவரவர்களே, தனித் தனியாகச் சொல்ல வேண்டுமானால் பாப்பேரி சாலைக்கு 75 ஆயிரம் ரூபாய். அதைப் போலவே சின்னகுக்குண்டி சாலைக்கு 75 ஆயிரம் ரூபாய். குக்குண்டி சாலை அபிவிருத்தி செய்வதற்காகவும், அங்கே பாலம் கட்டுவதற்காகவும் ஏறத்தாழ 1 லட்சம் ரூபாய்க்கு மேல் ஆகின்ற காரணத்தாலே இந்த 2½ லட்சம் ரூபாய் இந்த ஆண்டு நிதிநிலை அதற்கு சரியாகயில்லை. இதர ரோட்ஸ் திட்டத்தில் இப்படிப்பட்ட வேலைகள் இதர சாலைகள் திட்டமாக சேர்த்துக் கொள்ளப்படும் வழக்கம். இந்த ஆண்டு இதர சாலைகளுக்கு நிதி ஒதுக்கவில்லை.

**திரு. நா. வீராசாமி:** ஒவ்வொன்றுக்கும் 75 ஆயிரம் ரூபாய் என்று சொன்னார்கள். அதிலே எங்களையெல்லாம் காப்பாற்றிக் கொள்வதற்காக கேள்வி கேட்கவில்லை, பாலாற்றிலிருந்து தண்ணீர் வந்தால் அந்த கிராமங்களுக்குள்ளே போக முடியாது. தப்பித் தவறி புதிதாக திருமணம் செய்த தம்பதி வந்தால் அந்தக் கரையில் இருக்க வேண்டும். ஆகவே தான் இந்த மழை காலங்களில் அந்தக் கால்வாய் தண்ணீர் போக வேண்டிய நேரத்தில் கிராமங்களுக்குள்ளே போக முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் ஒரே ஆண்டில் எடுத்துக் கொள்ளாவிட்டாலும் ஒவ்வொரு ஆண்டு ஒவ்வொரு கிராமம் எடுத்துக் கொள்வது என்ற நிலையில் அமைச்சர் அவர்கள் அனுமதி அளிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இந்த குக்குண்டி சாலை ஆர்காடு வட்டத்தில் குக்குண்டி ஊராட்சி சாலையாகும். இந்த சாலையின் மொத்த நீளம் 2 கிலோ மீட்டர். இச்சாலை ஆற்காடு திண்டிவனம் சாலை கிலோ மீட்டர் 8/6-ல் பிரிகிறது. இதில் கிலோ மீட்டர் 0/0-0/3 வரை சரளைக்கல் பாப்பும் வேலை நடைபெற்றிருக்கிறது. மீதியுள்ள சாலை முறம்பு பரப்புமாக இருக்கிறது.





1/0 கிலோ மீட்டர் முதல் 1/2 வரை பொதுப் பணித்துறையின் பராமரிப்பிலிருந்து வரும் குக்குண்டி ஏரி நீர்பிடிப்பு இடத்தினுள் செல்கிறது. ஏரியில் அதிக அளவு நீர்மட்டம் உயரும்போது இந்த நீர்பிடிப் பரப்பான சாலையும் (கிலோ மீட்டர் 1/0—1/2 வரை) நீரில் மூழ்கி விடுகிறது. இவ்விடத்தில் பாலம் அமைக்கவும் 1/0—1/2 கிலோ மீட்டர் வரை சாலையை உச்ச அளவு நீர் மட்டத்தை விட உயர்த்தி பாதுகாப்பு சுவர் எழுப்பவும் ரூபாய் 1 லட்சம் தேவைப்படுமென்று குறிப்பிட்டேன். அது இப்பொழுது அந்த திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. மீண்டும் அதுபற்றி அனுப்புவார்களானால் பொதுப் பணித்துறையிடம் சொல்லி அது பற்றி ஏற்பாடு செய்யலாம்.

**திரு. நா. வீராசாமி:** பொதுப்பணித்துறையில் செய்ய முடியாது என்று சொல்லி விட்டார்கள். பொதுப்பணித்துறைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை . . .

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** பாயிண்ட் ஆப் ஆர்டர். நம்முடைய மாமன்றத்தில் ஏற்கனவே உங்களுக்கு முன்பிருந்த பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு ரூலிங் கொடுத்திருக்கிறார். "A member should catch the eye of the Speaker and not the ear". இன்றைக்கு பேரவைத் தலைவர் சத்தம் போடுகிறவர்களுக்குத் தான் நிறைய கேள்விகளை அனுமதித்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்த நிலை தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்குமானால் ஒழுங்காக இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரும் கூச்சல் போடவில்லை. எல்லா மெம்பர்களும் கேட்கிறார்கள் என்ற நிலை வருகிறது. திரு. சௌந்தரபாண்டியனுக்கு முக்கியமான கேள்விகள் என்ன வருகிறது என்று அந்தக் கேள்விகளைக் கொடுக்கிறேன். குக்குண்டி வடாற்காடு மாவட்டத்தில் இருப்பதால் சௌந்தரபாண்டியனுக்கு அதுபற்றி துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு கொடுக்க முடியாது.

**திரு. நா. வீராசாமி:** பொதுப்பணித் துறையினர் அதற்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை, செய்ய முடியாது என்று தெளிவாகச் சொல்லி விட்டார்கள். ஆனால் மழை காலங்களில் நிச்சயமாக அந்த ஏரி நிரம்பி உள்ளே போகின்ற காரணத்தால் அமைச்சர் அவர்களிடத்தில் வேறு நிதி இருக்கிறது. அந்த நிதியிலிருந்து ஏதாவது சிறிது ஒதுக்கி, ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு பாலம், அணைக்கட்டுகள் கட்டுவதற்கு அமைச்சர் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** வேறு எந்தவிதமான நிதியும் என்னிடத்தில் இல்லை. அந்த நிதியை பொதுப்பணித் துறையினர் செலவழிப்பதற்கு அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். காரணம், பொதுப் பணித்துறையின் அந்த அணையிலிருந்து தான் தண்ணீர் வழிந்து சாலை மோசமாக ஆகிக் கொண்டிருக்கிறது. எனவே இதை ஊராட்சி மன்றம் செய்ய இயலாது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

**திரு. கே. எ. வகாப் :** சாலை போடுவதைப் பற்றிச் சொன்னார்கள். சாலை போடுவது பொதுப் பணித் துறை சம்பந்தப்பட்டது தான். ஆகவே தான், இந்தக் கேள்வியை பொதுப்பணித் துறைக்கு அனுப்பினேன். உள்ளாட்சித் துறைக்கு வந்திருக்கிறது. எப்படியாவது இதைச் செய்வதற்கு பொதுப் பணித்துறையோ அல்லது பிற ரோடு சாலைகள் என்று சொன்னார்கள், அந்த துறையில் எடுத்து வேண்டுமானால் செய்யட்டும், சாலை தேவை என்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு எப்படியாவது முயற்சி எடுத்து செய்ய வேண்டும், ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பேரவைத் தலைவரவர்களே, இந்த நீர் பிடிப்பு ஏற்படுகின்ற நேரத்தில் இப்படிப்பட்ட இடையூறுகள் வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இது சம்பந்தமாக மேற்கொண்டு அதர் ரோட்ஸ் அதில் செய்ய இயலாது என்று தெரிந்தவுடன், அதற்குப் பிறகு வேறு நிதியிலிருந்து செய்வதற்கு இந்த நிதி நிலையில் வழி வகை ஒன்றும் காணப்படவில்லை. அதைத் தனியாக எழுதி அனுப்புவார்களானால் அதைப் பரிசீலனை செய்யச் சொல்லி முதலமைச்சர் அவர்களுக்கும், நிதியமைச்சர் அவர்களுக்கும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எழுதி அனுப்புகின்றேன்.

*Surcharge under Radhapuram Canal System*

* 824. *Q.*—THIRU T. GANAPATHY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state.—

(*a*) the rate of surcharge proposed to be collected in the areas under the Radhapuram Canal System in Tirunelveli district; and

(*b*) on what basis the surcharge is calculated?





**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) நெல்லை மாவட்டம் இராதாபுரம் கால்வாய் திட்ட எல்லைக்குள் இருக்கும் நிலங்கள் மீது, உள்ளூர் வரி, மேல் வரி, கீழ்க்கண்ட வீதத்தில் வள்ளியூர் இராதாபுரம் ஊராட்சி ஒன்றியங்களால் வசூலிக்கப்படுகிறது.

(1) வள்ளியூர் : அரசினருக்கு செலுத்தப்படும் நிலவரி ஒவ்வொரு ரூபாய் மீதும் இரண்டு ரூபாய்.

(2) இராதாபுரம் : அரசினருக்கு செலுத்தப்படும் நிலவரி ஒவ்வொரு ரூபாய் மீதும் இரண்டரை ரூபாய்.

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 116-வது பிரிவின்படி, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் அவ்வூராட்சி ஒன்றிய எல்லைக்குள் இருக்கும் எந்த எந்த நிலத்திற்காகவும் நிலவரி செலுத்துவோர் மீது, அவர்களால் அரசிற்கு செலுத்தப்படும் நிலவரியின் ஒவ்வொரு ரூபாய் மீதும் விதிக்கப்படும் உள்ளூர் வரி 0.45 பைசாவிற்கு கூடுதலாக உள்ளூர் வரி மேல்வரி ஒன்றையும் விதிக்கலாம்.

**திரு. டி. கணபதி :** தலைவரவர்களே, இராதாபுரம் சேனலில் உள்ள நிலங்களில் அடிப்படை நில வரி, அதன் மீதான செஸ் சர்சார்ஜ், வாய்க்கால் வரி, வாய்க்கால் வரி மீது சர்சார்ஜ் என்று போடப்படுவதால் ஒரு ஏக்காராவுக்கு ரூபாய் 80, 100 வந்து விடுகிறது. இந்தக் கேள்வியை வருவாய் துறை அமைச்சருக்கு அனுப்பியதாக நினைக்கின்றேன். வாய்க்கால் வரியை ரத்து செய்து அபிவிருத்தி வரி என்று வைத்தால் நல்லது. இந்த வரியான ரூபாய் 80 என்பது தமிழ் நாட்டைத் தவிர வேறு எந்த இடத்திலும் இல்லாத நிலைமை இருப்பதால் இதை அரசு பரிசீலனை செய்யுமா. தண்ணீர் வரிக்கு பதிலாக அபிவிருத்தி வரி என்று மாற்ற அரசாங்கம் யோசனை செய்யுமா? ஒரு ஏக்காராவுக்கு ரூ. 80 என்று வசூல் பண்ணக் கூடியதை நிறுத்த அரசு ஏற்பாடு பண்ண முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இந்த பஞ்சாயத்து மேல் வரிகள் விதிக்கப்படுவது ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த வரையில். ஊராட்சி ஒன்றியங்களை 6 பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. நிதி நிலை போதாது. ஊராட்சி ஒன்றியங்கள் அதிகமாக மேல்வரி விதிப்பார்களானால், அதற்கு ஈட்டு மான்யமாக அந்த அளவுத் தொகை வழங்கப்பட்டு, அதனால் பல வேலைத் திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்கள் வரியின் மூலம் செய்யப்படுகிறது. இது இராதாபுரம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மட்டுமல்ல. தமிழ் நாட்டில் பல ஊராட்சி ஒன்றியங்களில் ரூபாய் 2.50 விதிக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

காரணத்தினால் பினான்ஷியல் மெமோராண்டம் தேவை இல்லை என்ற கருத்து சொல்லப்படுகிறது. எனவேதான் இங்கே அது குறிப்பிடப்படவில்லை.

ஆன்டிசிபேடட் ரெவின்யூ எவ்வளவு என்று உறுப்பினர்கள் கேட்டார்கள். இந்தப் பிரச்னையை அரசும்கூட பரிசீலித்துப் பார்த்ததில் இதைப்பற்றியெல்லாம் விவரங்களைச் சேகரித்த பொழுது Anticipated revenue—Duty leviable on forward contracts. Proposals to levy duty under Article 5 of Schedule I of the Indian Stamp Act, 1899—Anticipated revenue report

இதைப்பற்றி ரிப்போர்ட்டு கேட்டதில்

The Board submits that at present Forward Contract agreements and rate delivery contract agreements are exempt from Stamp Duty and it will not be possible to calculate the anticipated revenue. The transactions on these items and amount involved could not be ascertained.

Further, the Board of Revenue has called for reports regarding the anticipated revenue that is likely to be realised with reference to rates of duty as proposed. The documents in regard to forward contracts are exempt from Stamp Duty. Such documents are neither sent for adjudication nor for registration. The amount involved in the transactions under these items could not be ascertained. Unless approximate total amount involved in transactions under each category is ascertained, it is not possible to calculate the anticipated revenue. Hence, the particulars called for could not be furnished.

என்றுதான் அவர்கள் அறிக்கை தந்திருக்கிறார்கள். எனவே, ஆண்டிசிபேடட் ரெவின்யூ என்னவென்று சொல்வதற்கு இயலவில்லை என்ற ஒரு நிலைதான் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே**: I am sorry to disturb you. I want to elicit one information ஸ்டாம்ப் டியூட்டியைப் பொறுத்தவரையில் ஆன்டிசிபேடட் ரெவின்யூ எவ்வளவு என்பதை அஸெஸ் பண்ண முடியவில்லை என்று அதிகாரிகள் சொன்னதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.



ஆனால், ரஃப்பாகக்கூட எவ்வளவு நடந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லையா? பம்பாயில் ஜாஸ்தியாக நடந்து கொண்டிருக்கிறது. இங்கே இந்த மசோதா கொண்டு வந்தது பற்றி வரவேற்கிறேன். ஓரளவுக்காவது அஸெஸ் செய்து 'இன் டேர்ம்ஸ் ஆஃப் லாக்ஸ் ஆர் குரோர்ஸ்' ஒரு கோடி ரூபாய் அல்லது 50 லட்சம் என்று ஒரு ரஃப் எஸ்டிமேட் கொடுக்கா விட்டால் இந்த மன்றத்தில் எப்படி இதைப் பற்றிப் பேசமுடியும?

அதிகாரிகள் ஏன் முடியாது என்று சொல்கிறார்கள் என்பது எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அந்த விவரத்தை சேகரிக்க முடியாது, கஷ்டம்தான். ஆனால் அதிகாரிகள் வாங்கிக் கொடுத்திருக்கலாம். நீங்கள் விவரம் கேட்டீர்கள். அப்படி கேட்டும்கூட இல்லை, முடியாது என்று அதிகாரிகள் சொல்லியதிலிருந்து எந்தவிதமான எஃபர்ட்டும் அங்கே போகவில்லை என்றுதான் தோன்றுகிறது. அவர்கள் இது விஷயத்தில் போதிய எஃபர்ட்டு எடுத்துக் கொண்டார்கள் என்ற நம்பிக்கை ஏற்படவில்லை. ஒரு கோடி அல்லது 1½ கோடி என்று ரஃபாகச் சொன்னால்கூட போதும்.

* **திருமதி த. ந. அனந்தநாயகி**: என்ன வருமானம் வரும் என்று தெரிந்து கொள்ளமுடியாத அளவுக்கு இன்றைக்கு ரிகார்ட்ஸ் இருக்கின்றன. பட்ஜெட்டில் எந்தெந்த வரியைப் போடப் போகிறோம், நிதி நிலையை சமாளிக்க இந்த வரி போடப் போகிறோம், அந்த வரி போடப் போகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் இந்த ஸ்டாம்ப் ஆக்ட்டில் ஃபார்வேர்டு கண்டிராக்ட் பற்றி சொல்லவேயில்லை. வரவு-செலவுத் திட்டத்தில் அதைப் பற்றி இன்பர்மேஷன் கிடையாது, மென்ஷனும் கிடையாது. ஏதோ வருவதையெல்லாம் வரப்படுத்திக் கொள்ளலாம் என்று போடுகிறார்களா? செலவுகளைச் சரிக் கட்டுவதற்கு மோட்டார் வரியை ஏற்றுகிறோம், அந்த வரியை ஏற்றுகிறோம், இந்த வரியை ஏற்றுகிறோம் என்று வரவு-செலவுத் திட்டத்தில் சொன்னார்கள். எந்த நிலையில் ஏற்றுகிறார்கள், எந்த நிதிநிலையில் பற்றாக்குறை, அதை எப்படி சமாளிக்கப் போகிறீர்கள் என்பதைப் பற்றி ஏதாவது

திரு. ரா. ரா. முனுசாமி : கேள்வி நேரத்தில்—இந்த அவையில் முனுசாமி, வீராசாமி, குமாரசாமி என பல சாமிகள் இருப்பதால் சாமி என்பதற்குள் எல்லாக் கேள்விகளையும் வீராசாமி தட்டிக்கொண்டு போகிறார்கள். இப்பேர்ப் பட்ட சாமிகளுக்கு மறுபெயர் சூட்ட நமது பேரவைத் தலைவர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) உறுப்பினர்கள் ஒரு துறைக்கு கேள்வி போட்டு, வேறு துறையிலிருந்து விடை அளிக்கப்பட்டதாகக் கூறப்படுவது குறித்தும் உறுப்பினர் கூற்றுக்கும் அமைச்சர் கூற்றுக்கும் முரண்பாடு இருப்பதாகக் கூறப் படுவது குறித்தும்.

திரு. எம். சுரேந்திரன் : சார் ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். கேள்வி நேரத்தில்போது உறுப்பினர்கள்—தாங்கள் கேள்வி போட்ட துறை வேருகவும், பதிலளிக்கப்படுவது வேறு துறையாகவும்—பொதுப்பணித்துறைக்கு அனுப்பி னும்—ஊராட்சித் துறையில் இருந்து பதில் அளிக்கப்படுகிறது என்பதாக எல்லாம் குறிப்பிட்டார்கள். இது சம்மந்தமாக வருங்காலத்திலாவது ஒழுங் காக இருக்கும்படியான ரூலிங் தங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறேன்.

அடுத்து இரண்டாவது விவாசாயத் துறை அமைச்சர் பதில் சொல்கிற போது, விவசாயக் கல்லூரிகளுக்கு செலக்ட் கமிட்டி . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் கீழ் வராது.

திரு. எம். சுரேந்திரன் : மிரட்டி கையெழுத்து வாங்கப்பட்டதாக கோவை செழியன் கூறினார்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் கீழ் வராது. உறுப்பினர் கூறியதற்கும், அமைச்சர் கூறியதற்கும் முரண்பாடு இருந்தால் அதைக் கொண்டு வருவதற்கு வேறு முறை இருக்கிறது.

ஒரு துறைக்கு உறுப்பினர் குறிப்பிட்டு, இன்னொரு துறையில் இருந்து விடை வந்திருப்பது பற்றி சொன்னார்கள். உறுப்பினர்கள் கூட தெரியாமல் ஒரு துறைக்கு அனுப்பிவிடலாம். ஆனால் துறையினர் பரிசீலித்து அதை எந்தத் துறைக்கு அனுப்பவேண்டுமோ அங்கே அனுப்புகிறார்கள். இதில் எந்தவிதமான பாயிண்ட் ஆப் ஆர்டரும் இல்லை.



## (3) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) சேலம் உருக்காலைத் தொழிலாளர்கள் வேலையிழப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. ஹாண்டே அவர்களும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும்

'I move that this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely, that more than 7,000 workers having been rendered jobless in Salem Steel Plant for the past few days following a strike lanuched by the contractors'

என்கிற பொருள்பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலைத் தொழிலாளர்களாக இருக்கக்கூடியவர்களில் 7 ஆயிரம் பேர்கள் வேலையிழந்து தவித்துக்கொண்டிருக்கக்கூடிய பயங்கரமான நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். குறிப்பாக, அமைச்சர் அவர்களும் அந்தப் பகுதியில் இருந்து வந்திருக்கக்கூடியவர்—அதனால் அந்தத் தொழிலாளர்களது இன்னல்கள் நன்ருகத் தெரிந்திருக்கும்.

முக்கியமாக, இதில் இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஒன்று, தொடர்ந்து வேலை செய்வதற்கு வாய்ப்புகள் இருந்தும்—காண்டிராக்டர்கள் இதுபோல 7 ஆயிரம் பேர்களை வேலையைவிட்டு நீக்கியிருப்பதாகச் சொல்லப்படு கிறது ஒரு கோணத்தில்.

இன்னொரு கோணத்தில் பார்த்தால், மத்திய அரசாங்கம் 15 கோடி தருவ தாகச் சொல்லிவிட்டு, இன்றைக்கு 3 கோடியே கொடுத்திருக்கிற காரணத்தினால் தொடர்ந்து வேலைகளைச் செய்ய முடியாத நிலையில் காண்டிராக்டர்கள் இந்த 7 ஆயிரம் பேர்களை வேலையைவிட்டு நீக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதுபற்றி உண்மை விவரம் அமைச்சர் அவர்களுக்குத் தான் தெரியும். இன்றைக்கு 7 ஆயிரம் பேர்கள் வேலை இழந்திருக்கிற காரணத்தினால் ஒரு பயங்கரமான நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது.

யாரோ சிலபேர் மத்திய அரசாங்கத்தை அணுகி—சேலம் உருக்காலை வேலை மந்தம் அடையவிடக் கூடாது என்று வற்புறுத்திய காரணத்தினால் திரும்பவும் இதற்கு பணம் ஒதுக்கப்படுவதாக பத்திரிகையில் பார்த்தோம். அமைச்சர்

அவர்கள்தான் இதுபற்றி விவரங்களைத் தெளிவுபடுத்த வேண்டும். ஏற்கனவே தொழில் அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது சேலம் உருக்காலைக்கு ஒதுக்குவதாக வாக்களிக்கப்பட்ட தொகை ஒதுக்கப்படாவிட்டால் தொழிலாளர்கள் பலபேர்கள் பாதிக்கக்கூடிய நிலைமை வரும் என்று சொன்னார்கள்.

மத்திய அரசு 15 கோடி ஒதுக்குவதாகச் சொல்லி, ஒதுக்காத காரணத்தினால் தான் இந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களா? இப்படி மந்தப் பட்டு இந்த வேலைக்கே முற்றுப்புள்ளி வைக்கப்பட இருக்கிறதா? அமைச்சரவை சார்பாக யார் வேண்டுமானாலும் மத்திய அரசுக்கு எடுத்துத் தெரிவிக்கலாம். அப்படி யாராவது அணுகி இருந்தால் இதுபற்றி என்ன வாக்குறுதி அளிக்கப் பட்டிருக்கிறது? இது மிக முக்கியமான பிரச்சினை. I am making an impassioned plea.

நம்முடைய மாநிலத்தின் தொழில் வளத்தைப் பொறுத்தது. அதோடு இதில் தொழிலாளர்களது பிரச்சினையும் கலந்திருக்கிறது. பணத் தட்டுப்பாடு இல்லை என்றால்—காண்டிராக்டர்கள் எந்தக் காரணத்தினால் இந்தத் தொழிலாளர்களை வேலையைவிட்டு நீக்கியிருக்கிறார்கள்? இதுபற்றி தொழிலாளர் நல அமைச்சர் பரிசீலனை செய்தார்களா?

இது மிக முக்கியமான பிரச்சினை—அவை நடவடிக்கைகளை ஒத்திவைத்து விட்டு இதைப்பற்றி இரண்டு மணி நேரம் பேசவேண்டும்—இது ஒன்றும் சென்ஷர் மோஷன் கிடையாது. மேல்சபையில் இதுபோல ஒத்திவைத்து விவாதித்திருக்கிறார்கள். அதுபோல இங்கும் அவை நடவடிக்கையை ஒத்தி வைத்து இதுபற்றிப் பேசவேண்டுமென்று கேட்டு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை வலியுறுத்துகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, சேலம் உருக்காலை ரொம்ப முக்கியமான விஷயமாக இருந்த காரணத்தினால் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். இதே மன்றத்தில் தொழிலமைச்சர் பேசுகின்ற போது முன்பு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று அறிவித்தார். அடுத்தாற்போல மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில் இந்த மாதிரி பாதகம் ஏற்படாது என்று நாடாளுமன்ற உறுப்பினருக்கு வாக்குறுதி கொடுத்ததாகச் செய்தி வந்தது.

இன்னொரு முக்கியமான விஷயம்—இதன் பின் அணியில் காண்டிராக்டர்கள் என்ன காரணத்தினால் இதுவரை பணியாற்றி வந்த 7 ஆயிரம் தொழிலாளர்களை வேலையில் இருந்து நீக்கியிருக்கிறார்கள். இதுபற்றி தொழிலாளர் நல அமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள்? டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதுபோல இது தொழில் சம்பந்தப்பட்டது—தொழிலாளர்கள்



சம்பந்தப்பட்டது—தொழிலாளர்களது வேலை பாதிக்கப்படாமல் இருக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை எல்லாம் விவாதிக்க வேண்டும், அரசாங்கத்திற்கு இதில் பொறுப்பு இருக்கிறது என்பதனால்தான் ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்திருக்கிறோம். இதுபற்றி விவாதிப்பது உதவிகரமாக இருக்கும் என்ற முறையில் சபையை ஒத்திவைத்து, இதை விவாதிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு. தங்கமணி அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் கொடுத்திருக்கிற இந்தப் பிரச்சினையில் அவர்கள் இருவருமே சொன்ன ஒரு கருத்தை நான் அரசின் சார்பில் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன்.

சேலம் இரும்பு தொழிற்சாலைக்கு இந்த ஆண்டு 14 கோடி ஒதுக்குவதாக வாக்களித்துவிட்டு, 3 கோடி ரூபாயைத்தான் மத்தியப் பேரரசு ஒதுக்கியிருக்கிறது என்பதை நீங்கள் எல்லாம் நன்றாக அறிவீர்கள். அதுபோல நாங்களும் இதுபற்றிய சங்கடத்தில் இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சேலம் 'இரும்பு தொழிற்சாலை வேகமாக நடைபெறுவதற்கு மேற்கொண்டு என்ன என்ன காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதை—நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்றும் நம்புகிறேன்.

மேலே கூறப்பட்ட நிலைமையைப்பற்றி இந்த அரசுக்கு ஆதாரபூர்வமாக எந்தவித தகவலும் கிடைக்கப் பெறவில்லை. எனினும், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் மற்றும் சேலம் இந்துஸ்தான் உருக்காலையின் பிரதம திட்டப் பொறியாளர் திரு. எம். எஸ். ராஜகோபாலிடமும் தொலைபேசி மூலம் இந்த நிலைமைபற்றி விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

சேலம் உருக்காலைத் திட்டத்தின் கீழ் உள்ள இடங்களில் நிலத்தை சீர்படுத்துதல், சுற்றுப்புறச் சுவர் கட்டுதல், தெருக்கள் அமைத்தல், மற்றும் இதர வேலைகளையும் ஹிந்துஸ்தான் ஸ்டீல் ஒர்க்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (லிட்) என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி நிர்வாகம் இந்த வேலைகளை சுமார் 150 ஒப்பந்தக்காரர்களிடம் கொடுத்துள்ளது. இந்த ஒப்பந்தக்காரர்கள் "வேலையின் அளவுப்படி ஊதியம்" என்ற அடிப்படையின் கீழ் சுமார் 4,500 தொழிலாளர்களை வேலையில் அமர்த்தியுள்ளனர். பொருள்களின் விலை உயர்ந்துள்ளதாலும், குறிப்பாக அதிகமாகப் பயன்படுத்தப்படும் வெடி மருந்துகளின் விலை உயர்ந்துவிட்டதாலும், ஒப்பந்த விகிதத்தை உயர்த்தும்படி ஒப்பந்தக்காரர்கள் ஹிந்துஸ்தான் ஸ்டீல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் நிர்வாகத்தினரை கேட்டுக் கொண்டனர்.

[திரு. க. இராசாராம்] [1974 ஏப்ரல் 1

இந்தக் கோரிக்கை ஹிந்துஸ்தான் நிர்வாகத்தின் ராஞ்சியில் உள்ள தலைமை அலுவலகத்தின் பரிசீலனையில் உள்ளது என்று தெரியவருகிறது. இதற்கிடையில் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி ஒப்பந்தக்காரர்கள் 27—3—1974 முதல் வேலையை நிறுத்தி விட்டனர். எனினும், 600 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள 50 ஒப்பந்தக்காரர்கள் வேலையைத் தொடர்ந்து செய்ய ஆரம்பித்து விட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

இந்தத் தகராறு மத்திய அரசின் ஒரு நிறுவனமான ஹிந்துஸதான் ஸ்டீல் ஓர்க்ஸ்க்கும் அதன் ஒப்பந்தக்காரர்களுக்கும் இடையே உள்ள தகராறு ஆகும். இதில் மாநில அரசு எந்தவிதத்திலும் சம்பந்தப்பட்டதல்ல. எனினும், இம் மாநில அரசு, ஹிந்துஸ்தான் நிர்வாகத்திடம் இந்தத் தகராறை சுமுகமாக விரைவில் முடிவு செய்யும்படி கேட்டுக்கொண்டுள்ளது.

இதற்கிடையில் ஒப்பந்தக்காரர்களுக்கும், சேலம் உருக்கு ஆலை நிர்வாகத்தினருக்கும் இடையே நடந்த சமரசப் பேச்சுவார்த்தைகளில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு அதன் விளைவாக, நிலையான முடிவான ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடவும் அதற்கிடையில் ஒப்பந்தக்காரர்கள் வேலைக்குத் திரும்ப வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் ஏறக்குறைய பாதி ஒப்பந்தக்காரர்கள் 2,000 தொழிலாளர்களுடன் 10—4—1174 அன்று (நேற்றைய தினம்) வேலைக்குத் திரும்பி இருக்கிறார்கள். சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்தத் தகவலை நேற்றையதினம் எனக்குத் தெரிவித்தார்களென்பதை அறிவிக்க விரும்7கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, இது குறித்து விவாதிக்க, அவையை ஒத்திவைக்கத் தேவையில்லையென்று கருதி, இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

## (ஆ) வடலூர் செராமிக்ஸ் அண்ட் ரிப்ராக்டரீஸ் கதவடைப்பும் தொழிலாளர் பாதிப்பும் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. கே. டி. கே. தங்கமணி ஆகியோர், தென் ஆற்காடு மாவட்டம், வடலூரிலுள்ள நெய்வேலி செராமிக்ஸ் அண்ட் ரிப்ராக்டரீஸ் என்ற தொழிற்சாலை நிர்வாகம் சென்ற ஆண்டு நவம்பர் 24-ந் தேதி முதல் கதவடைப்புச் செய்ததின் மூலம் 350 தொழிலாளர் வேலை இழந்து இன்றுவரை தொழிற்சாலை திறக்கப் படவில்லையென்றை பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கும் அளவுக்கு எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி மாத்திரம் விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 11]

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவரவர்களே, நெய்வேலி பக்கமுள்ள வடலூரிலே செராமிக் இண்டஸ்டரி பல வருஷங்களாக நடந்து வரக்கூடிய தொழில். அந்தத் தொழிலிலே, மானேஜ்மெண்டுக்கும் தொழிலாளர்களுக்கும் இருந்த தகராறின் காரணமாக, கடந்த நவம்பர் மாதம் 24-ந் தேதியன்று அந்த நிறுவனத்தினர் தொழிலை மூடிவிட்டார்கள். மூடியபிறகு, இன்றுவரையிலும் தொழிற்சாலை திறக்கப்படவில்லையென்று செய்தியை நான் அறிகிறேன்.

தொழிற்சாலை மூடப்பட்டதன் காரணமாக, 350 தொழிலாளர்கள் எந்தவிதமான வருவாயுமற்ற நிலையிலே, மிகுந்த சிரமத்திற்குள்ளாக்கப்பட்டு, கஷ்டப்படுகின்ற நிலையிலே இருக்கிறார்கள். நிர்வாகமும் தொழிற் சங்கமும் சேர்ந்து பேசி எந்த முடிவிற்கும் இதுவரையிலும் வர முடியவில்லை என்றுதான் தெரிகிறது. அப்படி நிர்வாகம் கதவடைப்புச் செய்ததை அரசாங்கம் எந்த அளவிற்குத் தலையிட்டு, முயற்சி எடுத்தது என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

இப்படி நவம்பர் மாதம் கதவடைப்பு செய்யப்பட்ட ஒரு தொழிற்சாலை ஆறு மாத காலமாகத் திறக்கப்படாமல் இருக்குமானால், அதிலே வேலை செய்து, அதனையே நம்பியிருக்கக்கூடிய தொழிலாளர்களுடைய கதி என்னவாகும் என்பதைத் தயவுசெய்து அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அந்தத் தொழிலிலே உற்பத்தியாவது நாட்டிலே அத்தியாவசியப் பண்டமா, இல்லையா என்பது வேறு பிரச்னை. ஆனால், அந்தத் தொழிலை நம்பி வாழக்கூடிய குடும்பங்களின் கதி என்ன என்பதைத்தான் நாம் கவனித்துப் பார்க்கவேண்டும்.

இதில் அரசாங்கம் மிகவும் மெத்தனமாக இருந்திருக்கிறது. இவ்வளவு நாட்கள் ஒரு தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது, அரசாங்கம் ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லையென்பது, அரசாங்கத் தரப்பிலே ஒரு பெரிய தவறு நடந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

ஆகவே, 350 குடும்பங்கள் சம்பந்தப்பட்ட முக்கியமான விஷயமாக இருக்கிற காரணத்தாலே, இந்த அவையை ஒத்திவைத்து, விவாதிப்பது, பின்னால் ஏற்படுகின்ற பல காரியங்களுக்கு, தொழில் தகராறு சம்பந்தமான காரியங்களுக்கு, அரசாங்கம் எப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதுபற்றி கருத்து தெரிவிக்க ஒரு அம்சமாக இருக்கும் என்ற காரணத்தாலே, சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, ஒரே ஒரு விஷயம்தான். சென்ற ஆண்டு 5 மாதம், 6 மாதம் என்று ஸ்டிரைக், கதவடைப்பு இருந்தது. இந்த ஆண்டு, வேலை நிறுத்தம் வந்தால், உடனடியாக செட்டில் பண்ணக்கூடிய நிலை இருக்கும்போது 350 பேர் தொழிலை இழக்கக்கூடிய நிலையிலே கதவடைப்பு

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 ஏப்ரல் 11

செய்திருக்கிறது என்பதிலே, அரசு கவனமற்றுத்தான் இருக்கிறது. ஆகவே, துரிதமாக கவனம் செலுத்தப்பட வேண்டும். இதுவரையில் கவனம் செலுத்தப் படாமலிருந்தால், இனியாவது கவனம் செலுத்தி செயல்பட வேண்டுமென்பதை வற்புறுத்தத்தான் இந்த நோட்டீஸை நான் கொடுத்திருக்கிறேன்.

ஆகவே, சபையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, இதில் அரசு எந்தவிதமான மெத்தனத்தையும் கையாளவில்லை. சூழ்நிலைகளின் காரணமாக அரசு தொடர்ச்சியாக ஒவ்வொரு பிரச்னையையும் தீர்த்து வருகிறது என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தொழிற்சாலையில் 400 தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். இந்த நிறுவனத்தில் சிராமிக் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அக்டோபர் திங்கள் 1973-க்குரிய உற்பத்தி போனஸ் நிர்ணயிக்கும் முறைபற்றி வேறுபாடு இருந்தமையால் நெய்வேலி சொராமிக்ஸ் மற்றும் ரிபேக்டரீஸ் லிமிடெட் தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் 21—11—73 லிருந்து உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர். அதன் காரணமாக நிர்வாகம் 24—11—73 முதல் கதவடைப்பு செய்தது.

தொழிற் துறை அலுவலர், கடலூர் இருதரப்பாரிடையே சமரசம் செய்வதைக் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். எந்தவிதமான உடன்பாடும் ஏற்படாததால் சமரச முறிவு அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைத்தார்.

அரசு தங்களுடைய ஆணை எண். 355, தேதி 21—2—74-ல் கீழே கண்டுள்ள கோரிக்கைகளை சென்னை இண்டஸ்டிரியல் டிரிபியுனலின் தீர்ப்புக்கு அனுப்பியுள்ளது :—

1. நிரந்தரம் செய்யப்படாத தொழிலாளர் தவிர மற்ற ஏனைய தொழிலாளர்களுக்கு உற்பத்தி போனஸ் நிர்ணயிக்கும் முறைபற்றிய கோரிக்கை நியாயமானதா ; அப்படியானால் அவர்கள் எத்தகைய நிவாரணத்திற்குத் தகுதி உடையவர்கள் ?

2. வேலை நிறுத்த, கதவடைப்பு இருந்த காலத்திற்கு சம்பள கோரிக்கை நியாயமானதா ?

மேற்கண்ட அரசு ஆணை பெற்றுக்கொண்ட பிறகு நிர்வாகம் 4—3—74 முதல் படிப்படியாக கதவடைப்பை நீக்கியது. அப்படியிருந்தும் தொழிலாளர்கள் வேலைக்கு திரும்பவில்லையென்று தொழிலாளர் துறை அலுவலர் தெரிவித்துள்ளார்.



1974 ஏப்ரல் 11] [திரு. க. இராசாராம்]

உதவி தொழிலாளர் நல ஆணையர் 11—3—74-ம் நாள் மேலும் பேச்சுவார்த்தை நடத்தினார். அதுசமயம் தொழிலை மீண்டும் ஆரம்பிக்கவும், எஞ்சியுள்ள கோரிக்கைகளை பிற்பாடு நேரடி பேச்சுவார்த்தைக்கு எடுத்துக் கொள்ளவும் இருதரப்பாரும் ஒத்துக்கொண்டனர். சங்கம் குற்றப்பத்திரிகை தரப்பட்டுள்ள தொழிலாளர்கள் மீது எந்தவிதமான ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்ககூடாதென்று வற்புறுத்தியது. ஆனால் நிர்வாகம் சங்கத்தின் கோரிக்கைக்கு இணங்கவில்லை.

பிறகு இருதரப்பாரும் நிர்வாகத்தின் டைரக்டர் திரு. மெஹ்ரா அவர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால் நேரடி பேச்சுவார்த்தை பலனளிக்கவில்லை. உதவித் தொழிலாளர் நல ஆணையர் மறுபடியும் இந்த இக்கட்டான நிலையை தீர்த்துவைக்க முயற்சி எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். தொழிலாளர் நல ஆணையாளர் அவர்கள் இதிலே ஈடுபடுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, இதுபற்றி விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லையென்று கருதி, இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

## (4) கவன ஈர்ப்பு.

### (அ) தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரையில் குடிதண்ணீர் தட்டுப்பாடு குறித்து.

**திரு. கே. ஆர். கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரையில் குடி-தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு குடம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் விற்கும் நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தைப் பற்றிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இது அவசர முக்கியமான காரியம் என்று குறிப்பிடப்பட்டு, ஏற்கனவே கவனிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதிலே, ஊத்தங்கரை பேரூராட்சியில் 4 துளைக் கிணறுகள் வைக்கப்பட வேண்டுமென்று கேட்கப்பட்டது. அதற்குக் குடிநீர் வாரியம் ஒப்பளிப்பு வழங்குவதற்காக உடனடியாக அனுப்புமாறு வாரியத்தின் தலைமைப் பொறியாளரைக் குடிநீர் வாரியம் கேட்டுக்கொண்டது

அத்துடன் மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்காகச் செலவு செய்ய ரூ. 32,000 தேவைப்படும் என்று தெரிவித்து, இப்பொழுது துளைக் கிணறுகள் போடுகிற வேலை நடைபெற்று வருகிறது. அதன் மூலமாக, உடனடியாகக் கவனிக்கப் பட்ட முறையில், ஊத்தங்குடி பகுதியிலே குடிநீர் தட்டுப்பாடு நீக்கப்படுகின்ற முறையில், துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் இந்தப் பிரச்னையைப்பற்றி வேறு விவாதிக்க அவசியமில்லையென்று தெரிவித்துக்கொள் கிறேன்.

(முற்பகல் 10-20)

**திரு. கே. ஆர். கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, ஊத்தங்கரை ஒரு பேரூராட்சியாக மட்டுமல்லாமல், ஒரு தாலுகாவினுடைய தலைநகரமாகவும் இருக்கிறது. அங்கு, ஏற்கனவே 24 கிணறுகள் வெட்டப்பட்டு, மேற்கொண்டு ஆழப்படுத்த முடியாத நிலையிலே மிகவும் ஆழமாகவும் இருக்கின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இங்கே அமைச்சரவர்கள் சொன்ன விளக்கத்தின்படி குழாய்க் கிணறுகளைப் போடுவதற்காக 32,000 ரூபாய் செலவைப் பஞ்சாயத்தே செய்ய வேண்டுமென்ற தீர்மானம் கோரப்பட்டதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். ஆனால் அந்தப் பஞ்சாயத்தின் நிதிநிலைமைப்படி அந்த அள விற்குப் பணம் செலவு செய்ய முடியாத நிலைமை இருக்கிறது.

மேலும் 32,000 ரூபாய் செலவில் கையாலே ஆட்டக்கூடிய விசையைத்தான் ஏற்படுத்த முடியும். அவ்வளவு பெரிய நகரத்திற்கு அது போதுமானதாக இருக்காது. ஆகவே மோட்டார் வைக்கக்கூடிய குழாய்க் கிணறுகளை அமைத் தால் நன்றாக இருக்கும். மேலும் அந்தச் செலவு பூராவையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இது குடிநீர் வாரியம் நிறைவேற்றுகின்ற பணி. தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக ஒரு செலவுக்கு அரசை அனுமதி கேட்டிருக்கிறார்கள். அந்த முறையில் மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அந்தச் செலவினத்தை ஏற்றுக்கொள்ளுமாறு தெரிவித்திருக்கிறார்கள்.

மோட்டார் வைக்க வேண்டுமென்றால், நல்ல அளவில் குடிநீர் கிடைத்து மோட்டார் மூலமாக இறைக்கின்ற அளவில் தண்ணீர் கிடைத்தால் இறைக்கும் முறை வரவேற்கத்தக்கதுதான். ஆனால் கிடைக்கின்ற தண்ணீரின் அளவு குறைந்திருந்தால் மோட்டார் வைத்தால் நீண்ட காலத்திற்குத் தண்ணீர் கிடைக்காது. பலநேரங்களில் தண்ணீர் இல்லை என்ற நிலை ஏற்படும். ஆகவே, தண்ணீர் கிடைக்கின்ற அளவைப் பொறுத்து மோட்டார் வைப்பதைப்பற்றிப்



பரிசீலிக்க வேண்டும். உடனடித் தேவைக்காக இந்த வேலைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. நீண்ட காலத் தேவைக்காக ஒரு ஆய்வுத் திட்டம் மேற் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திருவாளர்கள் கே. என். குமார சாமி, ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசரப் பொது முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

## (ஆ) பல்லடம் லட்சுமி மில்லில் நடந்துவரும் வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, இந்தத் தீர்மானம் கொடுத்து ஒரு மாதமாகிவிட்டது. ஆகவே, இரண்டு மாதமாக இருக்கிறது என்பதை மூன்று மாதங்கள் என்று திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அண்மையில் பல்லடம், லக்ஷ்மி மில்லில் மூன்று மாதகாலமாக வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறுவதும், மில் நிர்வாகம் மில்லில் புதிய ஆட்களை வாச்மேன்களாகப் போட்டு கெடுபிடி செய்வதும், லையன்களில் குடி யிருப்பவர்களை வேலைக்குச் செல்ல நிர்ப்பந்திப்பதுமான நிலை உருவாக்கப் பட்டுள்ளதால் தொழிலாளர்கள் அச்சத்திற்குள்ளாகி இருக்கும் நிலைபற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, அண்மையில் பல்லடம், லக்ஷ்மி மில்லில் மூன்று மாதகாலமாக வேலை நிறுத்தப் போராட்டம் நடை பெறுவதும், மில் நிர்வாகம் மில்லில் புதிய ஆட்களை வாச்மேன்களாகப் போட்டு கெடுபிடி செய்வதும், லையன்களில் குடியிருப்பவர்களை வேலைக்குச் செல்ல நிர்பந்திப்பதுமான நிலை உருவாக்கப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் அச்சத் திற்குள்ளாகி இருக்கும் நிலைபற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, பல்லடத்திலுள்ள லட்சுமி மில் தொழிலாளர்கள் கீழ்க்கண்ட காரணங்களுக்காக 4—1—1974 முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் : (i) மீலின் இலாகாவில் வேலைப்பளு அதிகரிப்பு, ( ) பத்தொன்பது தொழிலாளர்கள் விசாரணைக்காக தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருப்பது.

[திரு. க. அன்பழகன்] [1974 ஏப்ரல் 11

கோவை தொழிலாளர் துணை உதவி ஆணையர் இப்பிரச்சனை சம்பந்தமாக சமரசப் பேச்சுவார்த்தை நடத்தினர். உடன்பாடு ஏற்படாததால் அவர் 15—2—1974-ல் சமரச முறிவு அறிக்கை அனுப்பிவைத்தார். ரீலிங் இலாகாவி இழை உண்டுபண்ணும் பகுதியில் (Stable fire unit) எவ்வளவு வேலைப்பளு கொடுக்க வேண்டும் என்ற முக்கிய கோரிக்கை 30—3—1974 நாளிட்ட தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறை அரசு ஆணை எண் 603-ல் கோவை தொழிலாளர் கோர்ட்டு தீர்ப்பிற்காக விடப்பட்டிருக்கிறது.

பத்தொன்பது தொழிலாளர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப் பட்டிருப்பது சம்பந்தமாக இன்னும் விசாரணை முடிவுறவில்லையாகையால் அதன்மீது இந்நிலையில் நடவடிக்கை எடுக்க இயலாது. வேலைநிறுத்தம் இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முக்கிய கோரிக் கையை தீர்ப்பிற்கு விட்டிருப்பதால் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பி சுமுகமான நிலையை சீக்கிரம் ஏற்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

மில்லில் புதிய ஆட்களை வாட்சுமேன்களாகப் போடுவது. காலனி லையன் களில் குடியிருப்பவர்களை நிர்ப்பந்திப்பது சம்பந்தமாக, நிர்வாகம் கோவில் பட்டியிலிருந்து சில வாட்சுமேன்களை கோவை பல்லடம் மில்லில் எந்த சூழ் நிலையையும் சமாளிப்பதற்காக மாற்றம் செய்ததாகத் தெரிய வருகிறது. லையன் களிலே குடியிருப்பவர்களை நிர்பந்திப்பது சம்பந்தமாக எந்தவிதமான புகாரும் தொழிலாளர் துறை ஆணையர் அலுவலகத்திற்கு வரவில்லை.

இந்தத் தகராறு தொழில் கோர்ட் தீர்ப்பிற்கு விடப்பட டிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, வேலைப்பளு சம்பந்தமாக இரண்டு தொழிலாளர்கள் பேரில் முதலில் ஆட்சேபனை வந்தது. அது சம்பந்த மாக மேனேஜ்மெண்ட்டார் அவர்களுக்கு. நோட்டீஸ் கொடுத்தோ, அல்லது என்கொயரி வைத்தோ அவர்கள் கேட்க மறுத்திருந்தால் அவர்களை டிஸ்மிஸ் செய்திருக்கலாம். ஆனல், எடுத்தவுடனேயே வெளியிலே உள்ள தொழிலாளி கள் புகார் செய்தார்கள் என்ற பொய்யைச் சாக்காக வைத்துக்கொண்டு தொழிலாளர் சட்டத்திற்கு விரோதமாக எடுத்தவுடனேயே அந்த இரண்டு தொழிலாளர்களையும் சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். கேட்டால், அப்படித் தான் என்று பேசுகின்ற அளவிற்குத் தைரியம் அவர்களுக்கு எதனுல் வந்தது என்பது எனக்குத் தெரியவில்லை.



1974 ஏப்ரல் 11] [திரு. கே. என். குமாரசாமி]

அன்றுடத் தொழில் தகராறுகள் சட்டத்திற்கு விரோதமாக செய்திருப்ப தால் அதை ஆட்சேபனை செய்வதற்காக தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் செய் கிறார்கள். அதனுல் இன்றைக்கு 27 பேர், எல்லாச் சங்கங்களையும் சேர்ந்த முக்கிய லீடர்ஸ் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கம் கேட்பதற்காக ஏதாவது வேண்டுமானுல் சொல்லுங்கள், புதிய கருத்துக்களைச் சொல்ல வேண்டாம்.

**திரு. கே. என். குமாரசாமி :** வேண்டுமென்றே இப்படிப் பழி வாங்கி விட்டால் ஆலைத் தொழிலாளர்கள் மேனேஜ்மெண்டார் சொல்வதைக் கேட் பார்கள் என்ற காரணத்திற்காக வேண்டுமென்றே 29 பேர்களைப் பழி வாங்கி யிருக்கிறார்கள். இது தொழில் தகராறுகள் சட்டத்திற்குப் புறம்பாக சர்வாதிகாரத் தன்மையோடு மேனேஜ்மெண்டார் நடக்கிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதிலே தொழிலாளர் களுக்கு நியாயம் வழங்கவில்லையென்றால் நிலைமை மிகவும் மோசமாகப் போகும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. 100 நாட்களுக்குப் பிறகு, முன்பே பட்டினி போட்டு எந்தவிதமான . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ரூல் 41-லே இரண்டு கேள்விகள் விளக்கம் பெறுவதற்காக இருக்கிறது அதை வேறு விவாதத்திற்கு, மற்றக் கருத்துக்களைச சொல்வதற்குப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது.

**திரு. கே. என். குமாரசாமி :** அவர்கள் பட்டினியாக இருக்கிறார்கள். அமைச்சரவர்கள் சொன்னார்கள், ஏதோ ஓர்க் லோட் என்பதுபற்றி தொழில் கோர்ட்டுக்கு விடப்பட்டிருப்பதாக, தொழிலாளர் தரப்பில் ஏற்றுக்கொண் டாலும், 29 பேர்களையும் வேலைக்கு அனுமதிக்க அமைச்சரவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, அங்கிருக்கிற நிர் வாகம் இரண்டு பேரை நீக்கியிருக்கிறது என்று சொன்னார்கள். பத்தொன்பது தொழிலாளர்கள் பேரிலே தொழில் கோர்ட்டிலே பிரச்னையிருப்பதாகத் தகவல் இருக்கிறது. அது பற்றிய முழு விவரங்களையும் நான் கேட்கிறேன்.

அந்த நிர்வாகம் மிகவும் தைரியமாக இரண்டு பேரை நீக்கியதற்குக் காரணம் புரியவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரசாமி அவர் கள் கூறினார்கள். நிர்வாகத்தினர் அப்படிப்பட்ட தைரியத்தோடு இருப்ப

[திரு. க. இராசாராம்] [1974 ஏப்ரல் 11

தற்கு இந்த அரசாங்கம் எந்தத் தைரியத்தையும் கொடுப்பதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் தைரியம் இங்கேயிருந்து சப்ளை செய்யப்படுவதில்லை என்பதை மட்டும் தெரிவித்து, தொழிலாளர் பிரச்னையில் என்ன நியாயம் உண்டோ அவற்றை அரசு அலசிப் பார்த்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்தத் தொழில் தகராறுக்கு ஆரம்ப காரணமாக இருந்த பிரச்னையை கோர்ட்டுக்கு விட்டிருப்பதாகவும், அரசு தலையிடுவதில்லை என்பதுபோலவும் அமைச்சரவர்கள் கூறினார்கள். அடிப்படை பிரச்னை என்னவென்றால் 28 பேர்களை பழிவாங்கியிருப்பதாகும். முதலிலே இரண்டு பேராக இருந்து படிப்படியாக அன்றாடம் ஒருவர் இருவர் என்று ஏறி 28 ஆக ஆகியிருக்கிறது. இனிமேல் எவ்வளவு ஆகும் என்று தெரியாது. நான் ஏன் பயப்படுகிறேன் என்றால், அரசு இதிலே தலையிடுவதற்கு ஏற்படுகின்ற தாமதத்தைப் பயன்படுத்திக்கொண்டு—அமைச்சரவர்கள் கூறினார்கள் நாங்கள் தைரியத்தை சப்ளை செய்வதில்லை என்று, அது உண்மை, நான் அதை ஒத்துக் கொள்கிறேன்—ஆனால் அரசாங்கம் எஃபெக்டிவ்வாக, சரியாகத் தலையிடுவதற்கு ஏற்படுகின்ற தாமதத்தை அவர்கள் பயன்படுத்திக் கொண்டு தைரியமாக, மேனேஜ்மெண்டார் மேலும் பலரைப் பழிவாங்கி எண்ணிக்கையை அதிகப்படுத்திவிட்டால் தலைவர்களையும், மற்றவர்களையும் பழிவாங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்ற நம்பிக்கையில் அவர்கள் செய்வதைப் போல் தோன்றுகிறது. ஆகவே அரசு உடனடியாக இதில் தலையிட வேண்டும், இது நீடித்தால் பிரச்னை மிகப்பெரிய அளவில் போய்விடும். காரணம் என்னவென்றால், அனைத்துச் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். மற்றத் தொழிற்சாலைகளில் இருப்பவர்கள் இந்தத் தொழிலாளர்கள் பழிவாங்கப்படுவதைப் பார்த்துக்கொண்டு பேசாமல் இருக்க மாட்டார்கள். எனவே, அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைத்து, அந்தத் தொழிலாளர்கள் நிர்வாகத்தால் பழிவாங்கப்படுவதைத் தடுத்து நிறுத்தி, தொழிலாளர் நலத்திற்கேற்ற வகையில் நல்ல பணிகளை அவசரமாகச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்தப் பிரச்சினையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் தலையிட்டாலே இந்தப் பிரச்னை அநேகமாக முடிந்துவிடும். யாரையும் பழி வாங்க வேண்டியதில்லை. எங்களுக்கு யாரையும் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணமும் இல்லை. பிரச்னை அவர்களுக்கும் எனக்கும் மத்தியில்தான் இருக்கிறது. விரைவில் நாங்கள் கூடி இதற்குச் சுமுகமான ஏற்பாடுகளைச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## (5) அறிவிப்புகள்

### அரசினர் உறுதி மொழிக் குழுவிற்கு நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டப் பேரவையின் 214 (1) வது விதியின் கீழ் பின்வரும் பேரவை உறுப்பினர்களை 1974-75-ம் ஆண்டுக்கான அரசினர் உறுதி மொழிக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:

1. திரு. சி. வி. எம். அண்ணாமலை
2. திரு. எம். ஏ. அபுசாலி
3. திரு. செ. அரங்கநாயகம்
4. திருமதி. த. ந. அனந்தநாயகி
5. திரு. நா. கிருட்டிணன்
6. திரு. தே. கேசவலு
7. திரு. கே. டி. கே. தங்கமணி
8. திரு. எஸ். நல்லசாமி
9. திரு. எம். முத்தையா
10. திரு. ஆ. முனியாண்டி
11. திரு. வ. க. ராமராசன்
12. திரு. ஜே. ஜேம்ஸ்

பேரவை 215 வது விதியின்கீழ், திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றாம் திருத்த சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/74)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) மூன்றாம் திருத்த சட்ட முன்வடிவு மீதான விவாதம் தொடங்கும்.

[பேரவைத் தலைவர்] [1974 ஏப்ரல் 11

இதைச் சேர்த்து 9 சட்டமுன்வடிவுகள் இரண்டு தீர்மானங்கள் இருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு சட்டமுன்வடிவிற்கும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கிக் கொண்டு பேசினால் நல்லது என்று நினைக்கிறேன். அப்படி முறையில்லை என்றாலும் 9 பில்லும் 2 தீர்மானங்களும் இருப்பதால் ஒரு சட்ட முன்வடிவை ஒரு நாள் முழுவதும் விவாதித்துக்கொண்டு போவது என்பது முறையாக இருக்காது என்பதால் நேரத்தைக் குறிப்பிட்டுக் கொண்டு பேசுவது நல்லது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஒரு முக்கியமான தீர்மானம் வருகிறது. ஆகவே, பில்ஸ் மாத்திரம் இன்று வைத்துக் கொள்ளுங்கள். ரிலிஜியஸ் எண்டௌமென்ட் பில்லை எடுத்துக்கொண்டால் நாலைந்து திருத்தங்கள் வருகின்றன. அதைப் பற்றியெல்லாம் விரிவாகப் பேச வேண்டியிருக்கும். வேண்டுமென்றால் மாலையும் வைத்துக் கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்குச் செல்லுகிற மசோதாக்களை மறுபடியும் விவாதிக்கின்ற வாய்ப்பு இருக்கும் காரணத்தால் அவற்றை விவாதம் இல்லாமலே முடித்து விடலாம். மற்ற மசோதாக்கள் சிறிய மசோதாக்கள். அந்த மசோதக்களை ஒட்டிய கருத்துக்களை மட்டும் பேசினால் சீக்கிரம் முடிந்துவிடும். வேறு கருத்துக்களுக்கும் போவதால் காலதாமதம் ஆகிறது. எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மசோதா எந்த இலாகாவைப் பற்றியதாக இருக்கிறதோ அதைப் பற்றிய, அதிலிருக்கக்கூடிய குற்றங் குறைகளை மசோதா வாயிலாகச் சொல்லுவதற்கு வழி இருக்கவேண்டும். Otherwise it is not at all correct.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது முறையல்ல. விவாதத்திற்கு வருகிற திருத்தத்தைப் பற்றித்தான் பேச வேண்டுமே தவிர பொதுவாக மசோதா பற்றிப் பேசுவது முறையல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ரிலிஜியஸ் என்டௌமென்ட் பில்லில் கணக்குக் காட்டுவது பற்றி வருகிறது. கணக்குக் காட்டாமல் எவ்வளவோ கோயில்கள் இருக்கின்றன. அதைப் பற்றியெல்லாம் பேசாமல் இருக்க முடியுமா?



1974 ஏப்ரல் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொது விவாதமாகப் பேசுவது முறையல்ல. என்ன திருத்தம் வருகிறதோ அதைப் பற்றி மட்டுந்தான் பேச வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அறநிலைய மசோதா விவாதத்திலே காட்டு இலாகாவைப் பற்றியோ, ரெவின்யூ இலாகாவைப் பற்றியோ பேசினால் முறையல்ல. அறநிலையத் துறை பற்றிய கருத்துக்களை எப்படிப் பேசாமல் இருக்க முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டமன்ற விதிமுறைகளின் கீழ் ஏற்கனவே பல பேரவைத் தலைவர்கள் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். எந்தத் திருத்தம் வந்திருக்கிறதோ அதைப்பற்றித்தான் பேச வேண்டும். பொதுவாகப் பேசுவது முறையல்ல.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த மசோதாக்கள் சம்பந்தமாக ஏற்கனவே பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. நமது தமிழ்நாட்டில் ஒரே நாளில் அரை டஜன் மசோதாக்கள் நிறைவேற்றப்படுகின்றன. மசோதாக்களின் பேரில் அதிகமான அக்கறையை உறுப்பினர்கள் எடுத்துக் கொள்கிறார்கள் என்பதைக் காட்டவில்லை என்று செய்தி வந்திருக்கிறது. ஆகவே அவசர அவசரமாக இவற்றை எல்லாம் முடிக்க முடியாது. நேற்று விடப்பட்ட மசோதாக்கள் இருக்கின்றன. நேற்றே கொடுக்கப்பட்ட முக்கியமான ஒரு தீர்மானம் இருக்கிறது. அந்தத் தீர்மானத்தின் மீது விவாதம் வரும் போது எந்த அளவுக்கு அது நீடிக்கப்படுகிறது என்று பார்க்க வேண்டும். அதற்குப் பின்னாலே மசோதாக்கள் இருக்கின்றன. இன்றைக்கே முடித்துவிட வேண்டுமென்ற நிலையை வைத்துக் கொண்டு நேரத்தை நிர்ணயிக்க முடியாது. மசோதாவுக்கு உட்பட்ட விஷயங்களைப் பேச வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆகவே, இன்றைக்கு எல்லாம் முடிந்துவிடும் என்ற நிலையை எடுக்கக்கூடாது. 15, 16, 17 தேதிகளில் கூட்டம் வைத்திருக்கிறோம். தேவையானால் கூட ஒரு நாள் வைத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இன்றைக்கு இந்த அவையின் முன் விவாதத்திற்கு இருக்கும் மசோதாக்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் இன்றைக்கு முடிகிற மாதிரி இல்லை. இன்றைக்கு இவற்றை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு முடிக்கிற அளவுக்கு முடித்துக் கொண்டு 15, 16, 17 தேதிகள் நிர்ணயிக்கபபட்டிருப்பது மாற்றி 15-ம் தேதி இவற்றைத் தொடர்ந்து எடுத்துக்கொண்டு 16, 17, 18 என்று வைத்துக்கொள்ளலாம்.

## 2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

### (ஆ) சட்டமுன்வடிவுகளை உறுப்பினர்களுக்கு முன்னதாகவே கொடுக்காதது குறித்து

**திரு. என். கே. பழனிச்சாமி:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நேற்று எடுத்துக் கொண்டதிலிருந்து கணக்குப் பார்த்தால் 14 பில்கள் வந்திருக்கின்றன. இந்த 14 பில்களையும் முதலிலேயே கொடுக்கவில்லை இரண்டு நாள் இருக்கும்போதுதான் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு வரியாகப் படிப்பதற்கே இரண்டு நாட்கள் ஆகிவிடும். இவற்றைப் படிக்காமல கருத்துக்களைச் சொல்ல முடியாது. இந்த மாதிரி டிலே பண்ணி பில்களைக் கொடுப்பது உறுப்பினர்கள் படிக்காமல் இருக்க வேண்டுமென்பதற்காகவா? தாங்கள் இதுபற்றி ரூலிங் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவில் 10, 11 ஆகிய தேதிகளில் பில்களை எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அரசுத் துறையில் இருப்பவர்கள் இவற்றைக் கொண்டுவந்து கொடுக்காத காரணத்தால் இப்படிப்பட்ட குறைகள் ஏற்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட குறைகள் இல்லாமல் சம்பந்தப்பட்ட துறையில் இருப்பவர்களும், துறையைச் சார்ந்த அமைச்சர்களும் கவனம் செலுத்த வேண்டும்.

**Dr. H. V. HANDE:** Sir, Hon. Minister for Industries suggestel that at least Bills going for Select Committee neel not be discussed in detail here. But here there is a small snag which I will point out. I had already mentioned it to the previous Hon. Speaker. Since the Bill is going to be referred to a Select Committee, it is said there need not be much discussion at the stage of reference of it to a Select Committee. After it comes from the Select Committee, then also it is said that all the party members had been in the Select Committee and as such there need not be much discussion. So ............................

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் கருத்தைச் சொன்னார்கள் . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இந்த பாயின்டை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை . . .





**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் என்னுடைய பாயின்டை முடித்து விடுகிறேன். அதற்குள் குறுக்கிடுகிறீர்களே. பொறுமையாகக் கேளுங்கள்.

அந்த மாதிரி வரும்போது, செலக்ட் கமிட்டிக்கு மசோதா போகும்போது சில கருத்துக்களைச் சொல்லி அந்த முறையில் அவர்கள் அணுகுவது முறையாக இருக்கும் என்று சொல்ல வாய்ப்பு இருக்கவேண்டும்.

My time is also precious. I will not take much time.

மூன்று நாட்கள் ராஜமன்னார் கமிட்டி ரிப்போர்ட் விவாதத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மசோதாக்களை அவசரமாக ரஷ் பண்ணிக்கொண்டு நிறைவேற்றினால் கெட்ட பெயர் வர வாய்ப்பிருக்கிறது. தாங்கள் நல்ல பாயின்டைச் சொன்னீர்கள். 9 பில்கள் இருக்கின்றன என்று காஷன் பண்ணினீர்கள். நாங்களும் சீக்கிரத்தில் முடித்துவிடுகிறோம். திருத்தம் வந்தால் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னது போல் திருத்தத்தை ஒட்டி சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புக் கொடுக்க வேண்டும். திருத்தத்தை இப்படிப் போட வேண்டுமென்று சொல்லுவது மாத்திரமல்லாது விரிவாகப் பேச வாய்ப்புக் கொடுக்கவேண்டும். வரம்பு மீறிப் பேச விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் செலக்ட் கமிட்டிக்குப் போகிற பில்களின்மீது விவாதம் வேண்டாமென்று சொன்னார்களே தவிர, விவாதிக்கவே கூடாது என்று சொல்லவில்லை. நேற்றுக் கூட செலக்ட் கமிட்டிக்குப் போகிற பில்லில் பேசியிருக்கிறீர்கள். தடை செய்யவில்லை. அதற்கு ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வேண்டுமா?

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** எல்லாக் கட்சிகளுக்கும் வாய்ப்புக் கொடுத்தீர்கள். நான் எழுந்தவுடனே உங்களுக்கு ஏன் அலர்ஜி வருகிறது? நான் ஒரு கருத்தைச் சொல்ல வாய்ப்புக் கிடையாதா? அதைக் கேட்கக் கூட உங்களுக்கு பொறுமை கிடையாதா?

திரு. தாங்கமணி அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வாய்ப்புக் கொடுத்தீர்கள். அந்த வாய்ப்பு எனக்குக் கொடுக்கக்கூடாதா? அநாவசியமாக சூட்டை உண்டாக்குகிறீர்களே.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இங்கு எழுப்பப்பட்ட பிரச்சினையின்மீது எங்களுடைய கட்சியின் சார்பில் கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்னும் அதிக அவகாசம் வேண்டுமென்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதிலே பங்கு கொள்ளுகிறவர்களுக்குப் போதிய வாய்ப்பு ஏற்படும் முறையில் தாங்கள் இந்த விவாதத்தைப்

பயனுள்ளதாக ஆக்கவேண்டும். சில நேரங்களில் இதைப் பற்றி விவாதிக்கும் போது இதற்கு அப்பாற்பட்ட சில விஷயங்கள் புகுந்து விடுகின்றன. ஆகையால் அதையும் கட்டுப்படுத்த வேண்டும்.

மாண்புமிகு சபை முன்னவர் அவர்கள் ஒரு ஆலோசனை கூறினார்கள். அந்த ஆலோசனை ஏற்றுக் கொள்வதற்குரிய முறையில் இருக்கிறது. ஒன்பது பில்களும், 3 ரெசல்யூஷன்களும் இருக்கின்றன. கான்ஸ்டிடியூஷன் அமென்ட்மென்ட் சம்பந்தமாகக் கருத்துக்கள் தெரிவிக்க வேண்டும். ஆகவே ஒரு நாள் கூட இந்த அவையை நீட்டிப்பது பொருத்தமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்தியானம் வைத்துக் கொள்ள வேண்டுமென்பதை ஆட்சேபிக்கிறேன். மத்தியானம் வருவது கஷ்டமாக இருக்கிறது. ஒரு நாள் வேண்டுமானால் அதிகப்படியாக வைத்துக் கொள்ளலாமே தவிர மத்தியானம் வைக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திங்கட்கிழமை பில்களை எடுத்துக் கொண்டு ராஜமன்னார் கமிட்டி அறிக்கையை 16, 17, 18 தேதிகளில் வைத்துக் கொள்ளலாம் என்று அவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள். அப்படி வைத்துக் கொள்ளலாம்.

15-ம் தேதி அளவிலாவது இந்த பில்களையும், தீர்மானத்தையும் முடிக்கப் பாருங்கள்.

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/74)

THIRU R. PONNAPPA NADAR : Mr. Speaker, Sir, so far as this important amendment is concerned, I would like to offer a few remarks regarding this. This is a most obnoxious section, that is, section 73 in the Land Ceiling Act. According to the Ruling Party certain far-reaching amendments have been carried out. Exemption was considered a red rag by the D.M.K. while they were in opposition. Now the D.M.K. is in power; so far as the provisions of this Bill are concerned, I would say that it helps the neo-capitalists who have acquired property. That is the first objection.



So far as the provisions of this Bill are concerned, it is true that the estates earn foreign exchange and estates should be viable units is admitted by all parties. But why should there be so much exemption is the point which we will have to consiler. Supposing a new acquisition has been made after the two dates mentioned in the amendment, a special favour should be shown to those who have acquired the estates after the date on which the Bill came into force, that is, 6th April 1960. I do not think there is any purpose in this.

I would once again say there is an indecent hurry in the matter of this amendment. In the Objects and Reasons set forth, it has been said that representations have been received and it is on the basis of those representations that the new amendment is sought to be made.

Sir, who are the persons who have represented? That is a matter which will have to be clarified by the Hon. Minister who pilots the Bill.

According to me, consequent on the bus nationalisation, certain interested parties acquired estates and they acquire special benefit under this amendment. So far as the original Act was concerned, there was exemption for hills orchards and Thopes which have been abrogated in part.

Now the Hon. Minister while he was giving information regarding the land taken over under the Land Ceiling Act, he said that the total notified surplus was 91,116 acres, the extent taken possession by Government was 68,879 acres and the extent assigned was 41,723 acres and the number of persons who have been benefited was 19,737. That is the latest information that has been given by the Hon. Minister.

Sir, this plantation industry has got a peculiarity. It should be a viable unit; if it is not viable unit, the whole industry will go to dogs. That is the reason why the Act as it was orginal by promulgated gave specific exemptions. Now the D.M.K. party has abrogated certain provisions; now they want to re-introduce and help some party men or the neo rich or progressive farmers . . . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நேற்று நடைபெற்ற விவாதத்தின் போது நான் இல்லை. இந்த அரசின் மீது மாசு கற்பிப்பதுபோல் தொடர்ந்து இப்படிப்பட்ட வாதம் நடைபெறுகிறது. 1961-ல் நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டம் 6-4-60-ல் இருந்து அமலுக்கு வருகிறது. அன்றிருந்த சட்டப்படி, காங்கிரஸ் ஆட்சியின் கொண்டுவந்த சட்டத்தின்படி, உறில் ஏரியா பூராவிற்கும் எக்ஸெம்ஷன், மலைப் பகுதிகளைப் பொறுத்தவரையில் ப்ளான்டேஷன் எவ்வளவு வேண்டுமானாலும் 1960-ல் இருந்ததை விட அதிகமாக உற்பத்தி செய்யலாம். புதிய ப்ளான்டேஷனுக்கும் வழி இருக்கிறது. ப்ளெய்ன் ஏரியாவைப் பொறுத்த வரையில் அதில் போட்டிருப்பது 20 சதவிகிதம் எஸ்டேட்டிலிருந்து கண்டிக்வஸாக, தொடர்பாக, நடுவில் இருக்குமானால் ப்ளான்டேஷன் அனுமதிக்கப்படலாம். அதற்கு அனுமதி, தனி அனுமதி கொடுக்கலாம் என்று அந்தச் சட்டத்தில் இருக்கிறது, 31-வது பிரிவுப்படி.

இது 61-ம் வருடத்திய சட்டம். அது தொடர்ந்து அமலில் இருக்கிறது. அந்தச் சட்டப்படி உறில் ஏரியாவைப் பொறுத்தவரையில் இந்தப் ப்ளான்டேஷனுக்கு எந்தவிதமான கட்டுப்பாடும் இடையாது. ப்ளெய்ன் ஏரியாவைப் பொறுத்தவரையில் 20 சதவிகிதம் அதிகப்படுத்தலாம் என்று போட்டிருந்தார்கள். பிறகு 1972-ம் ஆண்டு நாங்கள் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தோம். அந்தச் சட்டப்படி மலைப்பகுதிகளுக்கு கொடுத்திருந்த பொதுவான விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டது. காங்கிரஸ் கட்சியின் கொள்கையை விட சிறிது தீவிரமாக ப்ளான்டேஷனைப் பொறுத்த வரையில் மாற்றியமைத்தோம். இடையிலே இருக்கவேண்டும் அல்லது ப்ளாண்டேஷனை ஒட்டியிருக்கவேண்டும். இரண்டும் இருந்து ஸ்பெஷல் பெர்மிஷன் 31-வது பிரிவுப்படி வாங்கினால்தான் இனிமேல் ப்ளான்டேஷன் எக்ஸ்பாண்ட் செய்யப்படும் என்று உத்தரவு போட்டோம்.

72-ம் ஆண்டு சட்டப்படி 15-2-70-ல் 15 ஏக்கராகக் கொண்டு வந்தோம். பின்னால் இந்த 73-வது பிரிவுபற்றி மறுபரிசீலனை செய்தோம். 20 சதவிகிதம் எக்ஸ்பாண்ட் செய்யலாம் என்றிருந்த கொள்கை தேவை இல்லை என்று முடிவு எடுத்தோம். 6-4-60-ல் இருந்து முடிவு எடுத்திருக்கிறோம்.

மத்திய அரசு ஒரு கொள்கையைச் சொல்லியிருக்கிறது. அவர்கள் சொல்லியிருப்பது, ப்ளான்டேஷனைப் பொறுத்தவரையில் ஆதியில் இருந்த விதிவிலக்கு கொடுக்கவேண்டும் என்ற கொள்கையை எடுத்திருக்கிறார்கள்.





இரண்டாவதாக, 6—4—60-ல் இருந்து தொடர்ந்து பத்து பனிரெண்டு ஆண்டுக்காலம் காங்கிரஸ் ஆட்சி போட்ட சட்டத்தின் அடிப்படையில் நிறைய ப்ளான்டேஷன் வந்திருக்கிறது. ஆகவே நீங்கள் அனுமதித்த சட்டப்படி அனுமதித்த பிறகு ஏற்பட்ட பளான்டேஷனை நாஷனலைஸ் செய்கிறீர்களா, இது சட்டத்திற்கு முரணானது, இதை மத்திய அரசு விரும்பவில்லை. ப்ளான்டேஷனுக்குள்ள விதிவிலக்கு 6—4—60 படி உள்ளது தொடர்ந்து இருக்கவேண்டுமென்று வலியுறுத்தினார்கள். அதற்காக சட்டம் கொண்டு வந்திருக்கிறோம்.

ஆகவே, இதில் கொள்கை மாற்றம் எதுவும் இல்லை. ப்ளான்டேஷனுக்கு விதிவிலக்கு கூடாது, ஸீலிங்தான் போடவேண்டும் என்று சொல்கிறீர்களா அல்லது எல்லாவற்றையும் தேசீயமயமாக்கவேண்டுமென்று சொல்கிறீர்களா? இந்த அரசின் சார்பில் பலமுறை சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு உதாரணத்திற்கு, 6—4—60-ல் ஆயிரம் ஏக்கர் அனுமதித்து ஐம்பது ஏக்கர் பக்கத்தில் வருகிறது என்றால் அதை மட்டும் எடுப்பது நியாயாமா. இதுதான் கேட்ட கேள்வி. அது நியாயமான கேள்வி என்பதால் இந்தத் திருத்ததைக் கொண்டு வந்திருக்கிறோம்.

எஸ்டேட் ஓனர்களுக்கு அல்லது நிலச்சுவாந்தார்களுக்கு சலுகை அளிப்பதற்காக அல்ல இதைக் கொண்டுவந்திருக்கிறோம். நம் சட்டத்தில் தெளிவாகப் போடப்பட்டிருக்கிறது. மத்திய அரசு ஒரு கருத்தை வலியுறுத்தியது. அந்த நியாயமான கருத்தை ஒத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. அல்லது எல்லாவற்றையும் எடுப்போம் என்று முடிவு எடுக்கவேண்டும். பேசிய பேச்சிலிருந்துதான் தெரிந்து கொண்டது, 20 சதவிகிதம் எக்ஸ்பான்ஷன் எதிர்காலத்தில் இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்தலாம் என்பதாகப் புரிந்துகொண்டேன். அதை மத்திய அரசிடம் வலியுறுத்தலாம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** அமைச்சர் அவர்கள் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது 1960-ம் ஆண்டு கொண்டு வந்த சட்டத்தில் இருந்த விதிமுறைகளை, நிலச்சீர்திருத்தச் சட்டத்தில் இருந்த விதிமுறைகளை, 1970-ல் ஒரு படி முன்னே சென்று மாற்றினோம் என்று சொன்னார்கள். காங்கிரஸ் ஆட்சியை விடத் தீவிரமாகத்தான் செயல்பட்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள்.

அடுத்தபடியாக, மத்திய அரசு ப்ளான்டேஷனில் தலையிடுவது சரியில்லை என்ற கருத்தைச் சொன்னதால் அதை ஏற்றுக்கொண்டு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆகவே, மத்திய அரசின் கொள்கை பிற்போக்குவாதம் என்று கருதுகிறீர்களா? அப்படி பிற்போக்கு

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1974 ஏப்ரல் 11

வாதம் என்ற கருத்து வந்தால் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளாமல் அதை பிற்போக்குவாதம் என்று சொல்லி ஏற்றுக்கொள்ளாமலிருப்பார்களா? அல்லது தற்காலத்திற்கு தங்களுக்கு அது பொருத்தமாக இருக்கிறது அல்லது தேவை யாக இருக்கிறது என்பதற்காக அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்கிறார்களா என்று கேட்கிறேன்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மத்திய சர்க்கார் என்று சொன்னவுடனே ஒரு அலர்ஜி ஏற்பட்டு விடுகிறது. அப்படிச் சொல்லவில்லை. மத்திய சர்க்கார் நம் பாயிண்டில் ஒன்றை சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பாயிண்டை மறுக்க வேண்டுமானால் ஒரு முடிவு எடுக்க வேண்டும். அகில இந்தியாவில் ஒரு முடிவு எடுக்க வேண்டும். அவர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை. இப்போது அவர்கள் இந்தச் சட்டத்திற்கு அனுமதி கொடுக்கும் போது "சப்ஜெக்ட்டு டு திஸ் கண்டிஷன்ஸ்" என்று போட்டு கொடுத்திருக் கிறார்கள். அது அவர்களுடைய கருத்து. 6—4—1974-லிருந்து அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள்.

அதாவது, நான் உதாரணத்திற்கு கூடச் சொன்னேன். 6 ஏக்காரவை விட்டு 50 ஏக்காரவை எப்படி எடுக்க முடியும் என்று. இப்போது அவர்கள் சொல்லியிருப்பது நியாயமான கருத்து என்பதைத்தான் நான் சொல்லிக் கொண்டிருந்தேன். மத்திய சர்க்காரை ஆதரித்ததாகச் சொல்ல வேண்டு மென்று விரும்புகிறார்கள்.

தம்மைப் பொறுத்த வரையில் இந்த பிளான்டேஷனைப் பொறுத்த வரைக்கும் விரைவில் மத்திய சர்க்கார் ஒரு முடிவை தைரியமாக எடுக்க வேண்டும். அதை சர்க்காரே எடுத்துக் கொள்ளவேண்டும். ஃபாரின் எக்ஸ்சேன்ஜ் வேண்டுமென்றால், சர்க்காரே எடுத்துக் கொள்ள வேண்டும். சீலிங் ஆக்ட் கொண்டு வரலாம். அரசாங்கம் ஏராளமாகக் கூட்டுறவுத் துறை யில் நடத்துகிறோம் நல்ல லாபத்துடன். அந்தச் சட்டத்திற்கு அனுமதி கொடுக்க வேண்டும். ஃபாரின் எக்சேன்ஜ் என்று சொல்லி போஸ்ட்போன் பண்ணுவது என்ற கொள்கை தவறு என்ற கருத்தை இதைப் பொறுத்த அளவுக்கு இந்தச் சட்டத்திலிருந்து செய்யுங்கள். அந்த அனுமதி கொடுக்கிறோம் "சப்ஜெக்ட் டு தீஸ கன்டிஷன்ஸ்" என்று கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திருத்தத்தை கொண்டு வந்திருக் கிறோம்.



1974 ஏப்ரல் 11]

THIRU R. PONNAPPA NADAR: Sir, I am very much gratified on the clarification given by the Hon. Law Minister. So, ar as Nationalisation of Plantations is concerned, we do not oppose the nationalisation. So far as the plantation industry is concerned, the Central Government has given its objective.

In Kerala, the Kerala Government wanted to nationalise the Kannan-Devan Tea Estates and they sought the permission of the Central Government. According to me, the permission was not accorded on the ground that it would adversely affect the interest of the State because we will be losing foreign exchange in abundant measure. We do not at all oppose the nationalisation of the plantations.

So far as the present legislation is concerned, we thought there were some points because the Original Act as has been passed, dates back to 6th April 1960. Now the clarification made by the Hon. Minister for Law indicates that it will not affect any of those persons who are in actual possession of small bits.

Another point we want to stress is regarding plantation industry. We know the Estate owners are in actual possession of some more areas. It is peculiar to our district. In our district, in Kanyakumari there are certain owners who are in possession of large extent of acres measuring more than 1,000 acres. I know in one case in which the Estate Owner is occupying more than 900 acres of waste lands adjoining his industry.

The matter was pending before the Supreme Court for final adjudication. Such kind of things should not occur. Actually the owner was owing only 100 acres of land. In spite of that decision has been rendered by the Court and we have to abide by the decision of the Court. The Government must see that such favouritism is not shown to a particular individual. This is the point which I am stressing. In the name of plantation industry, the planters should not grab the adjoining lands and get into their possession all the poramboke lands which are lying in the vicinity of their Estates.

Another point which I want to stress is this. There are certain abandoned Estates in Kanyakumari district. Previously they were Tea and Coffee Estates. There are also certain buildings and

[Thiru R. Ponnappa Nadar] [1974 ஏப்ரல் 11

'emnants of buildings are also there. The State claims these areas According to me, the State could not have any title as per the original agreement. These will not come in Government's possession but the Forest Department says that they form part of Reserve Forests and so much so they are entitled to these lands. Such an argument should not be advanced because the State cannot prescribe the adverse possession against the wish of the people. I think some of these land owners have put in their claims before the Settlement Authorities and Revenue Authorities and they have not been given a final decision.

So far as these estates are concerned, they will have to be brought within the ambit of the proposed legislation because they once formed part of the Estate and they have now been abandoned. But there is no Estate proceedings or any other proceedings under which the Government can validly say that they have got a title. These things may be examined and the reasonable claim of these persons may also be examined by the authorities concerned.

So far as small planters are concerned, according to me the present amendment is not going to be beneficial for them. That is the reason why the Central Government has said that in the peculiar nature of this industry, special consideration will have to be shown to them. I think this legislation will dispel the doubt in amending Section 73 of the Act and there may not be any legal lacuna so far as this amendment is concerned.

With these observations, I conclude, Sir.

திரு. என். கே. பழனிசாமி: கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1970-ம் ஆண்டு சட்டம் திருத்தம் கொண்டு வரவேண்டுமென்பது சஜ்ஜெஷன் தானா அல்லது கொண்டு வந்தே ஆக வேண்டுமா? இல்லா விட்டால் இதை நெகடிவ் பண்ணுவதற்கு ஆல்டர்னேடிவ் என்று சொன்னார்கள். முற்போக்குச் சட்டத்தை 1970-ல் கொண்டு வந்து விட்டு, பின்னால் வரக்கூடிய தீர்மானம் இருக்கிறது. இரண்டிற்கும் வித்தியாசமாக இருக்கிறது. ஒரு பக்கத்தில் முற்போக்கு தீர்மானம், இன்னொரு பக்கத்தில் பிற்போக்கு தீர்மானம். இதை பிற்போக்கு என்று சொல்ல வேண்டும். சர்க்கார் பார்த்து ஒன் விக்டிமா பண்ணக் கூடாது. மத்திய சர்க்கார் என்ன செய்ய முடியும் என்று கேட்கிறேன்.



1974 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கும் சேர்ந்து பதில் சொல்லுகிறேன். மத்திய சர்க்காரிலிருந்து வந்த கடிதத்தில்

"The Statement of Objcets and Reasons appended to the Bill does not indicate as to why the exemption in respect of the plantation is proposed to be restriced to the plantations that were in existence on 6th April 1960. The proposal seems likely to place at a disadvantage those planters who might have brought fresh areas under plantations during the last ten years. It seems also likely to leave untouched those planters who might have done nothing to expand or develop their plantations and would still be able to retain upto 20 per cent of the area available to them in 1960."

என்று அவர்கள் கேட்டு, அதற்கு பதில் கொடுக்கப்பட்டபொழுது

"With reference to the observations in the letter, under Section 73 (vi) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, all plantations in existence on the date of commencement of the Act were exempt from the said Act. The date of the commencement of the Act, 1961 was 6th April 1960. Under the Tamil Nadu Land Reform (Reduction of Ceiling on Land) Act, 1970, the definition of the Act in clause (11) of section 3 of the 1961 Act was modified as the 15th February 1970 the date on which the Tamil Nadu Act 17 of 1970 came into force. Consequently, the exemption in Section 73 (vi) applies to the extent of plantations that were in existence on the 15th February 1970.

என்று சொல்லப்பட்டு,

The State Government however appreciates the sentiments which have weiged with the Government of India in suggesting special treatment to be given to the progressive planters who had extended the area under plantation after 6th April 1960 in the larger interests of the country."

என்று சொல்லப்பட்டு பதிலளிக்கப்பட்ட பிறகு, மத்திய அரசாங்கம் கொடுத்த அனுமதியில்

"With reference to your letter on the subject mentioned above, I am directed to return herewith two authentic copies of the Bill with the President's assent signified thereon under Article 201 of the Constitution of India.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஏப்ரல் 11

The above assent of the President is being given subject to the following amendments being made to the Act by the State Government through subsequent amendment procedure, or the issue of Ordinance, whichever is convenient:

Section 73 of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act 1961 may be suitably amended to provide that the plantations as were in existence on the 15th February 1970, which is the date of commencement of the Act as amended by the Tamil Nadu Act 17 of 1960, shall be exempt from the ceiling law.

என்று அவர்கள் கொடுத்த அனுமதியின் பேரில்தான் இந்த திருத்தம் கொண்டு வரப்படுகிறது. இதற்கான விளக்கத்தை சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனவே, இந்த நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சட்ட அமைச்சர் சொன்ன பிறகு "இன் அடிஷன் டு திஸ்" அதை மறுபடியும் பார்க்க வேண்டுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிளப்பியிருக்கிறார்கள். அது பரிசீலிக்கப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொண்டு இந்த மசோதாவை நிறைவேற்றி தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ் நாடு 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்த சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/74 ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**பிரிவு 2.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"பிரிவு 2 இச்சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

'In clause 2 for the figures and brackets "10 (1) (iv)", substitute "10 (1) (vi)"

என்ற திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2 திருத்தப்பட்டபடி பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.



1974 ஏப்ரல் 11]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, "தமிழ் நாடு 1974-ம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்த சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 17/74) திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: இந்த மசோதா சட்டமானால் எந்த அளவுக்குப் பாதகம் ஏற்படும் என்பதற்கு நான் சில உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

உதாரணமாக, கன்னியாகுமரி பகுதியில் ரப்பர் தோட்டத்திற்கு தனிப்பட்டவர்களுக்கு 37,000 கொடுத்து இருக்கிறது. சர்க்கார் தரப்பிலிருந்து 7,000 ஏக்கர் இருக்கிறது. இதிலே தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல இந்தியாவிற்குத் தேவையான ரப்பர் முழுவதும் உற்பத்தி செய்யப்படுகிறது, வெளி நாட்டிற்கு அனுப்பும் அளவுக்கும் அவர்கள் உற்பத்தி செய்து வருகிறார்கள். அப்படி உற்பத்தியாகும் ரப்பரை அவர்கள் டன்லப் போன்ற கம்பெனிகளுக்குக் கொடுக்கிறார்கள்.

இராமநாதபுரத்தில் இப்போது புதிதாக ஒரு ரப்பர் தொழிற்சாலை ஏற்பாடு செய்து இருக்கிறோம். நமக்குத் தேவையான டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டிற்குத் தேவையான ரப்பரை நாம் எடுத்துக்கொள்ள முடியும். வெளிநாட்டிற்கும் அனுப்பி பணம் செய்ய முடியும். இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் அந்த மாதிரி அவர்களுக்குக் கொடுத்தாகவேண்டும். நமக்கு ஏற்கனவே இருக்கும் பிளான்டேஷனை நாம் அதிகமாக டெவலப் செய்ய முடியாது.

தேக்கு மரம் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும். 1,000 அடிக்குக் கீழே உற்பத்தியாகும் என்று சொல்கிறார்கள். தேக்குமரத்தில் ரப்பரை விட அதிகமாக பணம் கிடைக்கிறது. 1000 அடிக்குக் கீழே ரப்பரும் பயிராகும். தேக்கை அழித்து விட்டுக்கூட ரப்பர் போடலாம். இதற்கெல்லாம் வாய்ப்பிருக்கிற நேரத்தில், மத்திய சர்க்கார் சொல்கிறார்கள் என்பதற்காக இப்படிப்பட்ட திருத்தத்தைக் கொண்டு வருவது கேவலமான முறையில் இருக்கிறது என்று கூறி இதை வன்மையாக நான் எதிர்க்கிறேன்.

[1974 ஏப்ரல் 11

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இப்போது மாண்புமிகு பழனிசாமி அவர்கள் 37,000 ஏக்கர் பாரஸ்ட் நிலம் தனியாருக்குக் கொடுத்ததாகச் சொன்னார்கள். இது தவருன தகவல். உண்மைக்குப் புறம்பானது. தோட்டப் பிரதிநிதிகள் கூடி தோட்டமாக வைத்து இருக்கிறார்கள். அரசாங்கம் தனியாக அவர்களுக்குக் கொடுக்கவில்லை. அது எல்லாம ரெவின்யூ புறம்போக்காக இருந்த பகுதிதான். அதை அவர்கள் வைத்து இருந்தால் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க ஆட்சேபணை இல்லை. புதிதாகக் காட்டு நிலம் கொடுக்கவில்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இது மாதிரி எல்லாத் தோட்டங்களிலும் பெரிய கம்பெனியினர் என்குரோச்மென்ட் செய்து பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்து இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அப்படிப்பட்ட நிலங்களை எடுத்து, இந்த இலங்கை அகதிகளுக்கு, பர்மா அகதிகளுக்குக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பிளான்டேஷனை அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது வேறு. நம்முடைய நிலங்களை ஆக்கிரமித்துள்ளார்கள் அதை அப்புறப்படுத்த வேண்டுமென்பது வேறு. அதிலே ஆட்சேபணை இல்லை. அது கொள்கைப் பிரச்னை. அந்த இலாகா வரும்போது அதைப் பற்றிக் கூறலாம். பிளான்டேஷனை சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும், தனியார் ஆக்கிரமிப்புகளை நீக்கவேண்டும் என்பதிலே கொஞ்சம்கூட கருத்து வேறுபாடு கிடையாது.

ஆனால் இப்போது வந்திருக்கும் சட்டத்திற்கும் அதற்கும் தொடர்பு இல்லை. திரு. என். கே. பழனிசாமி சொன்னதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. ஆயிரம் ஏக்கர் அனுமதித்து இருக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். தொடர்ந்து இருக்கவேண்டும், அல்லது நடுவில் இருக்கவேண்டும். அதிலே பிளான்டேஷன் போடுவதா கூடாதா என்ற பிரச்னை 1960-ம் ஆண்டிலிருந்து இருக்கிறது. மத்திய சர்க்கார் அதை மட்டும் எடுக்காதீர்கள் என்று சொன்னார்கள். அது நியாயம். அது கூட எதிர்காலத்தில் தேவை என்று கூறுகிறார்கள். எல்லாக் கட்சிகளும் அந்தக் கருத்தை ஆதரித்தால், எங்களுக்கும் அதில் கருத்து வேறுபாடு இல்லாததால், அதைப்பற்றி மத்திய அரசுக்குச் சொல்லி எதிர்காலத்தில் இந்த 20 சத விகிதம் எக்ஸ்பான்ஷனும் கொடுக்கக் கூடாது என்று வலியுறுத்தத் தயாராக இருக்கிறோம். இந்தக் கொள்கையில் எங்களுக்குக் கருத்து வேறுபாடு கிடையாது.



1974 ஏப்ரல் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/74)" திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1974).

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேரவைத் தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1974-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

விற்பனை வரி சீரமைப்பின் முக்கியமான அம்சம் வரையறுத்துள்ள விற்பனையின் அளவு ரூ. 25,000 லிருந்து ரூ. 50,000 ஆக உயர்த்தப்பட்டதாகும். இந்த வரம்பு வரை, விற்பனையின் அளவுள்ள வியாபாரிகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனை வர்த்தக சமுதாயமும், சிறு வியாபாரிகளும், பொது மக்களும் வரவேற்றார்கள். இதனால் 40,000 சிறு கடை வியாபாரிகள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இரண்டு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட இழப்பு ஏற்படும்.

இதை ஈடுசெய்வதற்கும், நிதி வசதியைப் பெருக்குவதற்கும் ஏற்ற வகையில் ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் ரூபாய்க்கு மேல் மொத்த வியாபாரத் தொகையை உடைய வணிகர்களால் தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 1/1959) செலுத்தத்தக்க வரி மீது விதிக்கத்தக்க கூடுதல் விற்பனை வரி விகிதத்தை 1974-75-ம் வரி விதிப்பு ஆண்டு முதற்கொண்டு 5 சதவிகிதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்த அரசு முடிவு செய்தது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4-3-74 தேதி இம்மாமன்றத்தில் 1974-75-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டது போல் தாங்கும் சக்தி உள்ளவர்கள் மீது வரி உயர்த்தும் கொள்கைப்படி இது சரியானது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள்.

* 8—4—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஏப்ரல் 11

இறக்குமதியாளர் ஒருவரால் அல்லது மொத்த விற்பனை வணிகர் ஒருவரால் தமிழ்நாடு 1939-ம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 6/1939) செலுத்தத்தக்க வரி மீது விதிக்கத்தக்க கூடுதல் விற்பனை வரி வீதத்தையும் 1974-75 வரி விதிப்பு ஆண்டிலிருந்து 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

மேற்சொன்ன செயற்குறிப்புகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்காக, தமிழ்நாடு 1974-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 16/1974) கொண்டுவரப்பட்டு அது பரிசீலனைக்காக அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

இச்சட்ட முன்வடிவை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இப்பாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, இந்தக் கூடுதல் வரிச் சட்டத்திலே ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பத்து லட்சம் ரூபாய் டர்ன்ஓவர் செய்பவர்களுக்கு 5 சதவிகிதம் சர்சார்ஜ் போட்டிருக்கிறீர்கள். இதனால் உங்களுக்கு எவ்வளவு வருமானம் வந்தது, எத்தனை வியாபாரிகள் அதிலே இருந்தார்கள், என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருந்தால் நன்றாக இருந்திருக்கும். இந்த 5 சதவிகிதத்தை 10 சதவிகிதம் என்று கூடுதலாக ஆக்குவதால் இன்னும் எவ்வளவு கூடுதல் வருமானம் வரும் என்பதை அமைச்சர் அவர்கள் பதில் தெரிவிக்கும்போதாவது தெரிவிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

இது சாதாரணமாக விற்பனை வரி என்றாலும், இது வாங்குவோர் தலையில் விழும் வரிதான். வாங்குவோர் கையில் வாங்கி அரசாங்கத்திற்கு ஏஜெண்டாக இருந்து வியாபாரிகள் கட்டுகிறார்கள். அவர்கள் வாங்குவோரிடத்தில் வசூலிக்கக்கூடாது. அவர்களுக்கு வரும் லாபத்தில் 10 சதவிகிதம் வரியாகக் கட்டவேண்டும். அப்படிப்பட்ட நிலையில் இருக்கிறபோது வியாபாரிகள் 10 லட்சம் டர்ன்ஓவர் என்றால் பெரும் வியாபாரிகள் அவர்கள் தலை எதைவேண்டுமானாலும் தாங்கும் என்று நினைப்பது சரியல்ல. பொருள்களின் விலை மோசமாக ஏறிக்கொண்டிருப்பது தெரியும்.

(திரு. துரைமுருகன்—தலைமை)

பண வீக்கத்தின் காரணமாக ஒரு ரூபாய் விற்ற பொருள்களெல்லாம் இன்றைக்கு ரூ. 10 விற்றுக்கொண்டிருக்கிறது என்பது எல்லோரும் அறிந்ததே. ஆகவே, பண வீக்கத்தின் காரணமாக சாதாரணமாக முன்பு ஒரு வியாபாரி



1974 ஏப்ரல் 11] [திருமதி த. ந. அனந்தநாயகி]

ஒரு லட்சம் ரூபாய்க்கு வியாபாரம் செய்தால், இன்றைக்கு 10 லட்சம் ரூபாய்க்கு வியாபாரம் செய்கின்ற அளவுக்கு அவருடைய டர்ன்ஓவர் நிலைமை வந்துவிடும்.

ரூபாய் 10 லட்சம் அளவில் வியாபாரம் செய்யக் கூடியவர் ஒரு பெரிய வியாபாரி, அவர் டாடா, பிர்லா தாங்கக்கூடிய தலை என்று சொல்லி வரி போட்டால் இங்கு இருக்கக்கூடிய தொழில்கள் பாதிக்கப்படுமா என்று அரசு ஆலோசித்திருக்கிறதா? ஏன் இதைச் சொல்கிறேன் என்று கேட்டால், சாதாரணமாக விற்பனை வரி என்றால் வாங்குகின்றவர்களிடமிருந்து வாங்கிக் கொடுத்துவிடுகிறார்கள் வியாபாரிகள். அதனால் அவர்களுக்கு கஷ்டம் கிடையாது. ஆனால் 10 லட்சம் ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்பவர்களுக்கு 10 சதவிகிதம் அடிஷனல் டாக்ஸ் என்றால், வியாபாரிகளிடமிருந்து இதைப்பற்றி உங்களுக்கு என்னென்ன கோரிக்கைகள் வந்திருக்கின்றன.

சாதாரணமாக வரி போடாமல் இருப்பதற்குத்தான் யாரும் ஆசைப்படுவார்கள். ஆனால் இதன் மூலமாக எத்தனை பேர்கள் பாதிக்கப்படுவார்கள், இதன் காரணமாக தொழிலில் ஏதாவது மந்தம் ஏற்படுமா, 10 லட்சம் என்ற உச்ச கட்டத்தை 15 லட்சம் என்று செய்ய முடியுமா என்பதைப்பற்றியெல்லாம் அரசு யோசித்து நல்ல முறையில் ஒரு தீர்வு காணவேண்டும். அப்படிச் செய்தால்தான் உண்மையிலேயே இது சரியான முறையில் அமையும்.

வியாபாரிகளுக்குத் தெரியும், இப்படி வரி போட்டால் தொழிலையே 5 லட்சம், 5 லட்சம் டர்ன்ஓவர் காண்பிக்கக்கூடிய அளவில் சிறியது சிறியதாக 10 பேர்கள் பேரில் பிரித்து வைத்துவிடுவார்கள். பெரிய தொழில் நடத்துவதிலே லாபம் இருக்கும், அல்லது அந்த லாபம் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு ஏதுவாக இருக்கும். சிறிய சிறிய பகுதிகளாக பிரித்து 10 லட்சம் டர்ன்ஓவர் வரக்கூடாத அளவுக்கு வியாபாரிகள் நடவடிக்கை எடுத்தால் நல்ல தொழில்கள் பாதிக்கப்படுமா என்பதை அரசாங்கம் யோசிக்கவேண்டும்.

அரசாங்கத்திற்கு ஒரு காமதேனுவாக விற்பனை வரி இலாகா கிடைத்திருக்கிறது. ஆண்டுக்கு ஆண்டு 10 கோடி, 12 கோடி என்று அதிகமாக வரி வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள்.

கடைசியில் இது பொன் முட்டை இடும் வாத்தாக மாறிவிடக்கூடாது. இதன் மூலம் வருகின்ற வரி வருமானமும் குறைந்து போய்விடக் கூடாது. காரணம் 5 சதவிகிதம் என்பதை 10 சதவிகிதமாக உயர்த்தினால், 10,000 ரூபாய் மொத்தமாகக் கட்டுவதற்கு வியாபாரி யோசிப்பான். ஆகவே, நாம்

5 லட்சத்துக்கும் குறைவாகவே தொழில் நடத்துவோம், 10 லட்சத்துக்கும் குறைவாகவே தொழில் நடத்துவோம் என்று தொழிலைப் பிரிப்பதன் மூலம் ஒரு வேளை தொழில் பாதிக்கப்படுமா என்ற நிலைமையும்பற்றி யோசிக்க வேண்டும்.

இந்த விற்பனை வரியின் மூலம் அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருமானம் எவ்வளவு, 10 சதவிகிதம், 5 சதவிகிதம் சர்சார்ஜ் போட்டால், எத்தனை வியாபாரிகள் இதுவரை வரி கட்டுகிறார்கள், சென்ற ஆண்டு இதன் மூலம் எத்தனை வருமானம் வந்திருக்கிறது, அதிகப்படியாக எவ்வளவு வரி வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது, 10 லட்சம் என்று இருக்கிற உச்சகட்டத்தை இன்னும் உயர்த்த முடியுமா என்பதையெல்லாம் அரசு யோசிக்க வேண்டும் என்று கூறி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: இந்த மசோதாவை வரவேற்கிறேன். ஆனால் அதே சமயத்தில், 10 லட்சத்திற்கு மேலே தான் ஸ்லாப் சிஸ்டம் போடக்கூடாது. 10 லட்சம் வரையில் 10 சதவிகிதம் போட்டு அதற்கு மேல் வந்தால் ஒரு ஸ்லாப் சிஸ்டம் போட்டால் என்ன? காரணம் என்னவென்று கேட்டால், 10 லட்சம், 5 லட்சம் என்று போட்டிருக்கிறோம் என்றால், பெரிய கடைகளில் அந்த வரி பூராவும் மக்களிடமிருந்து வாங்கிவிடுகிறார்கள். அடிஷனல் டாக்ஸ் என்று 5 சதவிகிதம் 10 சதவிகிதம் சர்சார்ஜ் வாங்குகிறார்கள். மத்திய சர்க்கார் பல வரிகளைப் போட்டிருக்கிறார்கள். ரெஃப்ரிஜிரேட்டர் டூத் பேஸ்ட் எல்லாவற்றிற்கும் வரி போட்டிருக்கிறார்கள். இப்படி போடக்கூடிய வரிகளெல்லாம் யார் மீது விழுகிறது என்றால் ஏழை எளிய மக்கள் மீதுதான் விழுகிறது.

பத்து லட்சத்துக்கு மேல் 10 சதவிகிதம் அதிகம் என்று போட்டாலும்கூட, பெரிய வியாபாரிகள்தான் அதை லாபத்திலிருந்து கட்டவேண்டும் என்று இருந்தாலும்கூட, நடைமுறையில் போட்ட வரியைவிட 4 மடங்குக்கு மேலே வியாபாரிகள் மக்களிடமிருந்து அதை வாங்கிவிடுகிறார்கள். அதை அப்படி வாங்காமல் செய்வதற்கு சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏற்கனவே பொருள்கள் மீது வாங்கக்கூடிய வரி என்று போட்டு, அதற்கு மேலே அடிஷனல் சர்சார்ஜ் போடப்பட்டாலும், 10 சதவிகிதத்துக்கு பில் போட்டு கொடுக்கிறார்கள். அவர்கள் இப்படி சட்ட விரோதமாக செய்து கொண்டிருந்தாலும் அவர்கள் மீது இதுவரையில் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே, 10 சதவிகிதம் என்று போட்டாலும் சரி, 20 சதவிகிதம் என்று போட்டாலும் சரி, வாங்குகின்ற ஜனங்களிடமிருந்துதான் அது வாங்கப்படும்.



வியாபாரிகளுக்கு மக்களை ஏமாற்றி எப்படி இதை வாங்குவது என்பது நன்றாகத் தெரியும். ஜனங்களுக்குக் கஷ்டம் இல்லாமல், அவர்களிடமிருந்து அதிகப்படியாக வியாபாரிகள் வாங்க முடியாத வகையில் சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, நான் இந்த மசோதாவை எதிர்க்கிறேன்.

இந்த மசோதாவிலே 5 சதவிகிதம் என்று இருப்பதை 10 சதவிகிதமாக உயர்த்துவதாக கூறப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்தால் ஏதோ 10 லட்சம் ரூபாய்க்கு தொழில் செய்கிறவர்கள் மீது வரி என்று நினைக்கக்கூடும். விற்பனை வரியானது சாதாரணமாக ஏழை எளிய மக்களையும் வாங்குகின்றவர்களையும் தான் அதிகமாக பாதிக்கிறது என்ற வாதத்தை நான் முதலில் கூற விரும்புகிறேன். ஒரு வேளை வாங்குவோர்கள் மீது இந்த வரி திணிக்கப்படமாட்டாது, அதற்கு நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்று அரசாங்கத்தினர் திட்டவட்டமாக வாதாடுவார்கள். இல்லை என்று நான் மறுக்கவில்லை.

ஆனால், அந்த வாதத்தில் உண்மை இருக்க முடியாது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். உதாரணமாக இம்மாதிரி இன்டைரக்ட் டாக்ஸ் என்று சொல்கிறதனுடைய இன்ஸிடென்ஸ் யார் வாங்குகிறார்களோ அவர்கள் தலையிலேதான் சாரும் என்பது பொருளாதாரக் கொள்கையை படித்திருக்கிற ஒவ்வொருவரும் ஒத்துக்கொள்ளக்கூடிய விஷயமாக இருக்கிறது. பெரிய தொழில் செய்கிறவர்கள்தான் இதைக் கொடுக்கவேண்டும் என்று இருந்தாலும், அவர்கள் தங்களுடைய விற்பனை விலையை திருத்தி அமைப்பார்கள். எப்படி நமது அரசாங்கம் சொல்கிறதோ விற்பனை வரியை திருத்தி அமைப்பதன் மூலம் கோடிக்கணக்கான ரூபாயை தாங்கள் பெறுகிறோம் என்று சொல்கிறதோ—அதைக் கூட்டுகிறோம் என்று சொல்ல மாட்டார்கள், திருத்தி அமைக்கிறோம் என்று சொல்வார்கள்—அதே மாதிரி வியாபாரிகளும் விற்கின்ற விலையைத் திருத்தி அமைத்து, விலைவாசியை உயர்த்துவதற்கு ஏதுவாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஒரு வேளை ஆடம்பரப் பொருள்களை வாங்குகின்றவர்களைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால், அத்தியாவசியப் பண்டங்களுடைய விலையை, விற்கின்ற விலையை திருத்தி அமைத்து விடுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். ஆதலால்தான் நாங்கள் இதை எதிர்க்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். நாங்கள் இதை எதிர்த்தால் ஒரு வேளை சிலர் எங்களைச் சித்தரிக்கலாம், நீங்களெல்லாம் பணக்காரர்களுக்கு ஆதரவாக இருப்பவர்கள், பிற்போக்குவாதிகள் என்று சொல்லலாம். ஆனால், உண்மை நிலை என்ன என்பது இந்த இலாகாவிலிருக்கிற பெரிய அதிகாரி

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 ஏப்ரல் 11

களுக்கு நன்றாகத் தெரியும். இந்த இலாகாவிலிருந்து சோதனை போடுகிற வர்களும், ஆய்வு செய்கின்றவர்களும் வியாபாரிகளுக்கு எத்தனை தொல்லைகளைக் கொடுத்திருக்கிறார்கள், துன்பங்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதெல்லாம் நாம் நன்றாக உணர்ந்துகொண்ட உண்மையாக இருக்கிறது.

இதற்கு முன்னால் இந்தச் சட்டம் வந்தபொழுது ஒரு சில பட்டணங்களுக்கு மட்டும்தான் போடப்பட்டிருந்தது. மதுரை, கோவை, அதே மாதிரி நமது சென்னை மாநகரம் இம்மாதிரி பகுதிகளுக்குத்தான் போடக்கூடியவர்களுக்குத் தான் போடப்பட்டிருந்தது. அப்பொழுதே 10 சதவிகிதம் போடவேண்டும் என்று வாதாடினார்கள். நாங்கள் எதிர்த்ததன் காரணமாக 5 சதவிகிதம் என்று ஒப்புக்கொண்டார்கள். இதை மறுபடியும் இப்பொழுது 10 சதவிகித மாக உயர்த்தியிருக்கிறார்கள் என்று சொன்னால், இன்னும் நிச்சயமாக விலை வாசியை உந்தித் தள்ளும், ஏழை எளிய மக்களை இது பாதிக்கும், அத்தியா வசிய பண்டங்களின் விலை உயரும் என்ற கருத்தினை வலியுறுத்தி, இது தேவை யில்லை, இந்தத் தேவையற்ற திருத்தத்தினை வாபஸ் பெறவேண்டும் என்று தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொண்டு, இதோடு அமர்கிறேன்.

**திரு. எம். ஏ. அபுசாலி:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரி மசோதாவை ஆதரித்து அதில் உள்ள சில சிக்கல்களைச் சொல்ல விரும்பு கிறேன்.

குறிப்பாக, மளிகை வியாபாரிகளைப் பொறுத்தவரையில் பொதுவாக மக்கள் வரி கொடுக்கிறார்கள். அதிலே பல சாமான்கள் அடங்கியுள்ளன. குறிப்பாக, ஒரு மளிகைக் கடைக்கு சாமான் வாங்க ரு. 50 கொடுத்து ஒரு பையனை அனுப்பினால், அவன் 10 பில்கள் வாங்கவேண்டிய நிலைமையில் இருக்கிறான். மளிகை கடையில் உள்ள கணக்குப் பிள்ளை பி.காம் படித்தவராக இருக்க மாட்டார். சாதாரணமாக ரூ. 100, 150 வருமானம் உள்ள சம்பளக்காரராகத் தான் இருப்பார் என்று நான் கருதுகிறேன். அந்த அடிப்படையில் அவருக்கே எந்தச் சாமானுக்கு எந்த வரி போடுவது என்று புரிவதில்லை.

ஒரு வாரத்திற்கு முன்பு நான் கடைக்கு சாமான் வாங்கப் போயிருந்தேன். கணக்குப்பிள்ளை என்னிடம் சொன்ன விலை வேறு, பில்லைப் பார்க்கும்பொழுது வேறு விலை. எனக்கு ஒன்றும் புரியவில்லை. இதற்கு 5 சதவிகிதம், இதற்கு 7 சதவிகிதம், இதற்கு 10 சதவிகிதம் என்று சொல்கிறார். தயவு செய்து உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த அளவுக்கு வரியை உயர்த்தி யிருக்கிறார்கள். எந்த அளவுக்கு எந்தச் சாமானுக்கு வரி போட வேண்டும் என்பது புரியவில்லை.



1974 ஏப்ரல் 11] [திரு. எம். ஏ. அபுசாலி]

சாதாரணமாக கோவாபரேடிவ் சொஸைடியைப் பொறுத்தவரையில் எதை எடுத்துக்கொண்டாலும் ஒரு முனை வரி இருக்கிறது. அதனால் சொஸைடி சம்பந்தமாக அதிகாரிகள் நல்ல முறையில் கணக்கு எடுத்துக்கொள்ள வாய்ப்பு இருக்கும் என்று கருதுகிறேன். வியாபாரிகளைப் பொறுத்தவரையில் அதி மிக சிக்கலாக இருக்கிறது. பொதுவாக அதிகாரிகள் வியாபாரிகளிடத்தில் வருகிறபொழுது ஒரு திருடனைப் போலப் பார்க்கிறார்கள்.

(முற்பகல் 11.30)

குறிப்பாக, நான் என்னுடைய வியாபாரத்தில் உட்கார்ந்திருக்கும்போது, சேல்ஸ் டாக்ஸ் ஆபிசர் வந்தார். அதற்கு முன்னால் அவருடைய பியூன் வந்து சொன்னான். சி.டி.ஓ. வந்திருக்கிறார் என்று சொன்னான். வரச்சொல் என்று சொன்னேன். அவர் வந்தவுடன் உட்காரச் சொன்னேன். அவர் நான் உட்கார்ந்திருக்கும் சேரில் உட்காரச் சொல்வேன் என்று நினைத்தார் போலும். நான் எனக்குப் பக்கத்தில் இருக்கும் சேரில் உட்காரச் சொன்னாலும், அவர் உட்காரவில்லை. அப்புறம் சாப்பிட்டார்; பில்லை கொடு என்றார். கொடுத்தேன். பில்லை கொடுத்தபிறகு என்ன வியாபாரம் நடக்கிறது; ஒரு நபருக்கு 7½ ரூபாய் பில் வருகிறதே என்று கேட்டுவிட்டு, ஒரு நபருக்கு 7½ ரூபாய் என்றால் ஒரு நாளைக்கு எவ்வளவு வியாபாரம் நடக்கும் என்று கேட்டார். எனக்கு கணக்குத் தெரியாது. நான் கணக்குப்பிள்ளை இல்லை என்று சொன்னேன். சரி, கணக்குப்பிள்ளை வந்த பிறகு என்னை வந்து பார்க்கச் சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டு போய்விட்டார். நான் வெளியிலே வந்த பிறகு 6 மணிக்கு ஐயாவை வந்து பாருங்கள் என்று பியூன் சொன்னான். அந்த அதிகாரியின் பெயர் ஷேக் தாவுத் என்று கருதுகிறேன். நான் 6 மணிக்குப் போக மறந்துவிட்டேன். 7 மணிக்குப் போனேன். அதனால் நாளைக் காலை வந்து பாருங்கள் என்று சொல்லிவிட்டார். இப்படி பல முறை அதிகாரிகள் இழுத்தடிக்கிறார்கள். இப்படிப்பட்ட அதிகாரிகளின் நடத்தையைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மளிகைக் கடையைப் பொறுத்தவரையில் பல முனை வரிகளைப் போட்டால் வருமானம் வரும் என்று கருதுகிறீர்கள். ஆனால் இந்தக் கணக்கை நீங்கள் போட்டால் அது தப்புக் கணக்கு என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையால், ஒருமுனை வரியையே போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாட்டுத் தீவனங்களுக்கு வரி விலக்கு என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் மாட்டுத் தீவனமான பிண்ணாக்குக்கு வரி போடப்பட்டிருக்கிறது. மாடு களுக்கு பிண்ணாக்கு முக்கியமான ஒரு தீவனம். அதனால் பிண்ணாக்குக்கும் வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். ஏ. அபுசாலி] [1974 ஏப்ரல் 11

நாங்கள் பேசுவதை, சில பத்திரிகை நிருபர்கள் இங்கே வந்திருந்தாலும் பத்திரிகைகளில் போடுவதில்லை. தினமணிப் பத்திரிகையில் சில நேரங்களில் போடுகிறார்கள். அவர்களைப் பாராட்ட வேண்டும். பத்திரிகைகளில் செய்தி வந்தால்தான் எங்களுடைய தொகுதி மக்கள் ஏதோ நம்மைப்பற்றி பேசியிருக்கிறார்கள் என்று கருதுகிறார்கள். இல்லை என்றால் நம்மைப்பற்றிக் கவலையே படவில்லை என்று நினைக்கிறார்கள். அந்த முறையில் தினமணி பத்திரிகையில் கொஞ்சம் போடுகிறார்கள். தினத்தந்தியில் அறவே போடுவதே இல்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): இது பத்திரிகை மசோதா அல்ல. பத்திரிகைகளில் உறுப்பினர்களின் பேச்சைப் போடுவதும், போடாததும் அவர்களுடைய விருப்பம். இந்த மசோதாவுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. உறுப்பினர்கள் பேசுவதை கட்டாயம் பத்திரிகைகளில் போட வேண்டுமென்று நாம் அவர்களை வற்புறுத்த முடியாது. அவர்களைத் தண்டிக்கவும் முடியாது. பத்திரிகை தர்மம் அப்படி இருக்கிறது. ஆகவே, இந்த மசோதாவைப்பற்றி பேசுவதாக இருந்தால் பேசுங்கள்.

(உறுப்பினர் தொடர்ந்து பேசவில்லை.)

DR. H. V. HANDE: Sir, without taking much time of the House, I would like to invite the attention of the Hon. Minister only to one point, namely, the dangerous practice that is being adopted by this Government in trying to exploit the sources of income and to enlarge the scope of taxation.

Surcharge on sales tax is a practice that has to be discouraged, in my opinion. If the Government are encouraged or are allowed to go scot-free, in their attempt to increase the surcharge step by step to augment their resources, then a situation might arise when they also directly or indirectly would be indulging in a large scale taxation of areas where the Income-tax is already levied.

When the Government originally brought forward the proposal to levy surcharge, a lot of discussion took place in this House and I specifically pointed out to the then Hon. Minister in charge of sales tax, Thiru P. U. Shanmugham—if I remember aright—that they would be entering the arena of income-tax and this will affect the earning of the Central Government.



1974 ஏப்ரல் 11]

Therefore, I would like the Hon. Minister to bear in mind that even though this may be technically correct, in effect it would become unconstitutional and it will be eroding into the powers of the Central Government.

So, I would like the Hon. Minister to assure this House and I say, 'Thus far and no further'.

If he would not say that, it is quite likely that in the next session he would come forward with another Bill to increase the surcharge further. Also, they will say that hereafter the income-tax also can be levied by the State Government. So, let us be clear in our method of taxation. Let there be no confusion between the Central and State Government. With these words, I resume my seat.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): அடுத்து மாண்புமிகு அமைச்சரவர்கள் ... (திரு. எம். ஏ. லத்தீப், திரு. பெ. சௌந்தரபாண்டியன் ஆகியோர் எழுந்தனர்). ஏற்கெனவே இது பட்ஜெட்டில் பேசப்பட்டது. இது ஒரு சின்ன மசோதா. முஸ்லிம் லீக் கட்சியின் சார்பில் திரு. அபுசாலி அவர்கள் பேசிவிட்டார்கள். அதனால் மேற்கொண்டு இதில் விவாதம் வேண்டியதில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் . . ,

திரு. எம். ஏ. லத்தீப்: அப்படியானால் எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு கிடையாதா? இது நார்மல் பிராக்டிஸ் . . . .

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, நாம் இப்போது ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறோம். இப்படிச் சட்டத் திருத்தம் கொண்டுவரும்போது மானியக் கோரிக்கையைப் போல அவசரப்பட்டு விவாதிக்கக் கூடாது. சட்டம் படித்தவர்களின் கருத்தை அறிந்து அதன்படி செய்தால் நல்ல முறையில் திருத்தம் செய்யலாம்; புதிய திருத்தங்கள் தேவையில்லாமல்கூட ஆக்கலாம். ஆகவே, சட்டம் படித்த உறுப்பினர்களுக்கு கருத்து தெரிவிக்க வாய்ப்பளித்தால் நல்ல பல கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு ஏற்படும். அதனால் கட்சி வாரியாக இல்லாமல் பேச விரும்புகின்ற சட்டம் படித்த உறுப்பினர்களுக்கு வாய்ப்பளிப்பது பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1974 ஏப்ரல் 11

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்):** ஏற்கெனவே இதைப் பற்றி பட்ஜெட்டிலே பேசியாகிவிட்டது. எல்லாக் கருத்துக்களையும் சொல்லியாகிவிட்டது. இது ஒரு சின்ன மசோதா. இன்றைக்கும் இதில் பலர் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகையால் மேற்கொண்டும் விவாதிக்க வேண்டியதில்லை. இதில் பாலிஸி [illegible] ஒன்றும் இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: நான் இந்த மசோதாவில் பேச விரும்புகிறேன். என்னுடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): அப்படியானால் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுங்கள். அதற்குமேல் அனுமதிக்க மாட்டேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** இரண்டு நிமிடம் பேசுவதை விட பேசாமலே இருந்துவிடலாம். டைம் லிமிட் கூடாது. அதிக நேரம் வேண்டும்.

Mr. Chairman, Sir, I fully support the Government stand that they should augment their resources to carry on the administration. No Government can be carried on without there being a sound financial base. Therefore, I can understand the anxiety of the Government to augment their resources by way of increasing the taxes and surcharges. It is only on that basis the Government have brought forward this amending Bill, I presume. But at the same time we must keep in view the implications of any fiscal measure upon the general economic conditions and also the price level in the counrry.

So far as this Bill is concerned, I am afraid—as has been observed by the speakers who preceded me—by increasing the surcharge further, we will be facilitating hoarders and black-marketers. That is what I honestly feel. If you fix a limit of turnover of Rs. 10 lakhs now and then refix it and increase the surcharge by 10 per cent, the normal habit among business men is that they will split up their accounts and they would not give an amalgamated and complete account to the assessing authorities and they would be able to sucoeed in the evasion of tax. That is one point.



1974 ஏப்ரல் 11]

Another thing is that they are going to indulge in malpractices, hoarding and blackmarketing. No bills will be produced and most of the business will be carried on in blackmarketing, hoarding and other things. Ultimaely, what will happen is that there will be a considerable amount of shiftability and the consumers will suffer. There is no doubt about it.

Already the people are suffering due to spiralling of prices. There has been a tremendous unrest among the people. Now if you further shift the burden upon the consumers, then there will be a lot of trouble, there will be no saving, there will be no investment and the economic development will be retarded. People will suffer and all these will emanate from further extension of the basis of the surcharge. Therefore I support the observations made by Thiru R. Ponnappa Nadar and Mrs. T. N. Anandanayaki. I think the Government would reconsider its decision to enhance the level of surcharge. Because you are not allowing me further time, I am sitting.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மசோதாவின் மீது தங்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது—இது அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் தானே தவிர—சர்சார்ஜ் இல்லை. அதற்கும் இதற்கும் வித்தியாசம் உண்டு.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்ட சில நகரங்களுக்குக் கொண்டுவந்துவிட்டு, இதை இப்போது மற்ற நகரங்களுக்கும் விரிவுபடுத்துவதாகச் சொன்னார்கள். அடிஷனல் சேல்ஸ் டாக்ஸைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு முழுவதற்கும்தான் போடப்பட்டிருக்கிறது. It applies to the entire State. சர்சார்ஜ்தான் முன்பு முக்கியமான சில நகரங்களுக்குப் போடப்பட்டது, இப்போது அதை அதிகமான நகரங்களுக்கு விஸ்தரிக்கும் நிலைமை ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் சட்டப் பிரச்சினையைக் கிளப்பினார்கள். இது டாக்ஸ் ஃபார் இன்கம் என்பதுபோல ஆகிவிடும் என்கிற கருத்தைத் தெரிவித்தார்கள் என்று நினைக்கிறேன். டாக்டர் ஹாண்டேயைப் போலவே கருத்துள்ளவர்கள் ஹைகோர்ட் வரை போனார்கள். ஹைகோர்ட்டில் இந்தச் சட்டம் செல்லும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, சட்டப் பிரச்சினைபற்றி அச்சப்படுவதற்கு இடம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வரி விதிப்பின் மூலம்—நாம் போடுகிற வரி கன்ஸ்யூமர்களையே சாரும் என்ற கருத்தையும் சொன்னார்கள். தமிழ்நாடு அடிஷனல் சேல்ஸ் டாக்சைப் பொறுத்தவரையில்—

The tax payable under the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959) (hereinafter in this section referred to as the said Act), shall in the case of a dealer whose total turnover for a year exceeds ten lakhs of rupees, be increased by an additional tax at the rate of five per cent of the tax payable by that dealer for that year and the provisions of the said Act shall apply in relation to the said additional tax as they apply in relation to the tax payable under the said Act :

Sub-section (2) states as follows :—

" Notwithstanding anything contained in the said Act, no dealer referred to in it in sub-section (1) shall be entitled to collect the additional tax payable under the said sub-section."

Sub-section (3) states as follows :—

" Any dealer, who collects the additional tax payable under sub-section (1), in contravention of the provisions of sub-section (2), shall be punishable with fine which may extend to one thousand rupees, and no Court below the rank of a Presidency Magistrate or a Magistrate of the First Class shall try any such offence."

என்று தெளிவாகப் போடப்பட்டிருக்கிறது. இது கன்ஸ்யூமர்களின் மீது சுமத்தப்படாது. மேலும் 10 லட்சத்திற்குமேல் டர்ன் ஓவர் உள்ளவர்களை சிறிய வியாபாரிகள் என்று நான் கருதவில்லை. இப்போது அவர்கள் கொடுத்து வருகிற 5 சதவிகிதத்தைத்தான் நாம் 10 சதவிகிதம் ஆக ஆக்குகிறோம்.

அம்மையார் அவர்கள் இதன்மூலம் வரக்கூடிய வருமானம் எவ்வளவு, இதனால் எத்தனை பேர்கள் பாதிக்கப்படுவார்கள் என்கிற விவரங்களைக் கேட்டார்கள். 20 ஆயிரத்தில் இருந்து 50 ஆயிரமாக வரி விதிப்புக்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பதனால் 40 ஆயிரம் வியாபாரிகள் பயன் அடைவார்கள். இதனால் அரசுக்கு 2 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. 10 லட்சத்திற்கு மேல் அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் என்கிறபோது 4671 பேர்கள் தான் வரி விதிக்கப் படுவார்கள். 1972-73 இல் இந்த அடிஷனல் சேல்ஸ டாக்ஸ் மூலம் கிடைத்த வருமானம் மூன்று கோடியே பதினேந்து லட்சத்து 27 ஆயிரம் ரூபாய் ஆகும். 1973-74 ஜனவரி 2 கோடி 99 லட்சம் வந்திருக்கிறது. இதன் மூலம் எதிர்



பார்க்கப்படுவது 3 கோடியே, 29 லட்சத்து 850 ரூபாய். ஒன்று, ஒன்றேகால் கோடியே அதிகமாக இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. பாதிக்கப்படக் கூடியவர்கள் எண்ணிக்கையும் குறைவு. கன்ஸ்யூமர்கள் மேல் போடக்கூடியதும் அல்ல.

திரு. என். கே. பழனிசாமி அவர்கள் 10 லட்சத்திற்கு மேல் ஸ்லாப் வைத்து முதல் ஸ்லாப் 5 சதவிகிதம் என்றால் அதற்கு ஸ்லாப் 10 சதவிகிதம் என்பதாக விதிக்கலாம் என்றார்கள். அதுபற்றி பரிசீலித்துத்தான் ஒரு முடிவு செய்ய வேண்டும். இப்போது ஒன்றும் சொல்ல முடியாது.

இது மிகவும் அவசியமான திருத்தம்—சிறு வியாபாரிகளுக்குப் பல காரியங்களைச் செய்ய, அரசாங்கத்திற்கு வருமானம் அளிக்கக்கூடியது. இந்த மசோதாவை ஏற்று நிறைவேற்றித் தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்)** : பேரவை முன்னுள்ள கேள்வி.

" தமிழ்நாடு 1974-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1974) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவுப் பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : தலைவர் அவர்களே, " தமிழ் நாடு 1974-ம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1974) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

### (இ) தமிழ் நாடு 1974-ம் ஆண்டு மாவட்ட நகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1974)

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1974) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்"

என நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) 81 (2)-வது பிரிவின்படி, கட்டிடங்கள் அல்லது நிலம் அல்லது இவை இரண்டின் ஆண்டு மதிப்பில் மேற்படி சட்டத்தின் 78-வது பிரிவின் விதித்துறைகளுக்கு உட்பட்டு, நகராட்சி மன்றத்தினால் முடிவு செய்யப் படக்கூடிய சதவீதங்களில் சொத்து வரி விதிக்கப்படவேண்டும்.

அரசுக் கட்டிடத்தின் அல்லது இரயில்வே கட்டிடத்தின் அல்லது சாதாரணமாக வாடகைக்கு விடப்படாத வகையைச் சேர்ந்ததும், நிர்வாக அதிகாரியின் கருத்துப்படி அதன் ஆண்டு மொத்த வாடகைத் தொகை மதிப்பிட முடியாதது மான ஒரு கட்டிடத்தைப் பொறுத்தவரையில் அதன் ஆண்டு வாடகை மதிப்பு நிலத்தின் மதிப்பீட்டு விலையும் அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு தற்காலத்தில் ஆகும் தோராயச் செலவும் சேர்ந்த மொத்தத் தொகையில் தேய்மானத்திற்கு நியாயமான தொகை கழித்துக் கொண்டது போக எஞ்சியுள்ள தொகையில் ஆறு சதவீதம் என்று கருதப்படவேண்டும்.

மேலே சொல்லப்பட்ட தேய்மானக் கழிவுத் தொகை எந்த ஒரு நேர்விலும் மேற்படி கட்டுமானச் செலவில் பத்து சதவீதத்திற்குக் குறைவாக இருக்கக் கூடாது; மேலும் யந்திரங்கள், மரச்சாமான்கள் இவற்றின் விலையை ஆண்டு வாடகை மதிப்பைக் கணக்கிடுவதற்குச் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்று மேற்படி சட்டத்தின் 82 (2)-வது பிரிவின் வரம்பு நிபந்தனை வகை செய்கிறது.

தொழில் பேட்டைகளில் உள்ள கட்டிடங்களைப் பொறுத்த வரையில், நீர் வழங்கல், விளக்கு வசதி போன்ற வசதிகளை தொழில் துறையே செய்து கொடுக்கிறது. இவற்றை நகராட்சிகள் செய்து கொடுப்பதில்லை; எனவே, அத்தகைய கட்டிடங்களுக்குச் சொத்து வரியை மதிப்பிடுகையில் சில சலுகைகள் வழங்குவது அவசியமெனக் கருதப்படுகிறது. ஆகவே, அத்தகைய சொத்துக்களின் ஆண்டு மதிப்பைக் கணக்கிடுவதற்காக, அச் சொத்துக்களின் மூலதன மதிப்பில் 6 சதவீதத்திற்குப் பதிலாக 4 சதவீதம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

* 7—3—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது



இவை கூறி, இதனை இம் மாமன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: While I agree with the principle of the law, I have to point out that there is a small lacuna. Generally, in big bungalows which are residential areas, there is a practice now when furniture fittings and other things are taken into account separately and building is assessed separely. Suppose a building costs one lakh of rupees and furniture fittings are there including air conditioning equipments. What happens is, in assessing such bungalows there is unlimited scope for transferring some of the value of the buildings to the furniture fittings.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, இந்த முனிசிபல் திருத்தச் சட்டம் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் பில்டிங்குக்கு வரியை 4 சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்றுதான் இருக்கிறது. அதைப்பற்றி மாத்திரம் பேசுங்கள் என்றால் பேச முடியாது.

காரணம், முனிசிபல் நிர்வாகத்திலே சொத்து வரியிலே பல சிக்கல்களை அனுபவித்து வருகிறார்கள். ரெயில்வே பில்டிங்குக்கு 6 சதவிகிதம், இண்டஸ்ட்ரியல் பில்டிங், எஸ்டேட் பில்டிங் ஆகியவற்றிற்கு 4 சதவிகிதம் கேட்கிறார்கள்.

சாதாரணமாக, வீடுகளுக்கு 20 சதவிகிதம், 20½ சதவிகிதம் வரி கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டிலே இருக்கக் கூடிய கட்டிடங்களுக்கு அவர்களாகவே, தண்ணீர் சப்ளை, டிரெயினேஜ் பெசிலிட்டீஸ் செய்துகொள்வதாலே, அவர்களுக்கு 4 சதவிகிதம் என்று போடுகிறார்கள். ஆனால், பெரிய நகராட்சிகளிலே வரிதான் வாங்கப்படுகிறதே தவிர, வசதி செய்யப்படுகிறதா என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்கவேண்டும்.

சென்னை மாநகராட்சியிலே குடி தண்ணீர் வசதி கிடையாது, சாக்கடை வசதி கிடையாது. விளக்கு வசதி கிடையாது. வரி வாங்க மாத்திரம் தயங்குவது கிடையாது. அதற்கென்று ஒரு நிலையை கிடையாது. வரி வாங்கத் தயங்குவது கிடையாது, ஆனால் வசதி பெருகுவது கிடையாது.

எக்ஸ்டென்ஷன் ஏரியாவிலே இருக்கிறவர்கள் ரோட் கூடப் போட்டார்கள். வெஸ்ட் மாம்பலத்திலே, குடி தண்ணீர் கிடையாது, சாக்கடை கிடையாது, விளக்கு கிடையாது. கனம் முதலமைச்சர் தொகுதியிலே பெரும் பகுதிக்கு சாக்கடை வசதியில்லை.

என்னுடைய தொகுதியிலே 100-வது டிவிஷனிலே தண்ணீர் கிடையாது, லேட்ட்டே கிடையாது, சாக்கடையே கிடையாது. நகரசபை வைத்திருக்கிறோம், நகராட்சிகளை வைத்திருக்கிறோம், டவுன்ஷிப் ஆகிறது, முனிசிபாலிட்டி ஆகிறது. அங்கே இருக்கிற குடிமக்கள் வயிற்றிலே நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். என்ன வரி போடப் போகிறார்களோ, வரி மாத்திரம் வாங்கிக் கொள்கிறார்கள், நமக்கோ வருமானமே கிடையாது என்று கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தண்ணீர் வசதி செய்துகொள்வதால், இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுக்கு 4 சதவிகிதம்தான் வரி என்று சொல்கின்றவர்கள், பொதுமக்களுக்கு, ரோடும் கொடுப்பதில்லை, விளக்கும் கொடுப்பதில்லை, சாக்கடையும் கொடுப்பதில்லை, இருக்கிற குப்பைகளை எடுப்பதில்லை. அங்கு மாத்திரம் சொத்து வரி வாங்குகிறார்களே அது என்ன? அதல்லாமல், குவின்குவினியல் ரிவிஷன் வேறு. ஓனர்ஸ் ஆக்குபேஷனில் இருந்தாலும் சரி, 5 வருஷத்திற்கு ஒரு முறை திரும்பவும் வந்து வரியை ஏற்றுகிறார்கள். வரவில்லையென்றால், ரிவைஸ் பண்ணுவோம். ரூபாய் 500 கட்டினீர்களே, 5 வருஷம் ஆகிவிட்டது, ரூ. 700 கட்டுங்கள் என்று சொல்கிறார்கள்.

கொடுமையாக ஆகிவிட்டது. வசதி கிடையாது. ஊழலோ பெருகி விட்டது. அதற்கு எடுத்துக்காட்டே, சென்னை நகராண்மைக் கழகம். சீர்கேடுகள் வந்துவிட்டன. வரிக்காக திருத்தம் கொண்டு வரும் அமைச்சரவர்கள், சீர்கேடுகளைச் செம்மைப்படுத்த, திருத்தங்கள் கொண்டு வந்தால் வரவேற்கலாம். மாநகராட்சிக்கு, நகராட்சிகளுக்கு வரி கொடுக்க, அரசாங்கத்திற்கு சாதகத்தைத் தேடிக்கொள்ள இருக்கிறார்களே தவிர, பொது மக்களுக்கு என்ன நடக்கிறது?

தண்ணீர் கொடுக்க கடன் வாங்குகிறார்கள். கடன் வாங்கி விட்டு, தண்ணீர் சப்ளை கொடுக்கிறார்களா என்றால், ஃபோபாலோ அப்பே கிடையாது. திருப்பத்தூரில் 10 வருஷத்திற்கு முன்னால், வாட்டர் சப்ளைக்காகக் கடன் வாங்கியிருக்கிறார்கள். நார்த் ஆர்க்காட்டில் 7, 8 இடங்களில் . . .

திரு. செ. கந்தப்பன்: வட ஆர்க்காட்டிலே இருக்கிற திருப்பத்தூர் நகராட்சிக்கு தண்ணீர் வழங்கப்பட்டு இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இன்னும் சில முனிசிப்பாலிட்டீஸ் இருக்கின்றன. லிஸ்ட் இருக்கிறது இப்பொழுது. உங்களிடம் கொடுக்கிறேன். தண்ணீர் சப்ளைக்காகக் கடன் வாங்கிக்கொள்வது, தண்ணீர் கொடுப்பதில்லை.





கடனைத் திருப்பிக் கொடுப்பதிலே டிலே இருக்கிறது. கார்ப்பரேஷனுக்கு முக்கியமானவற்றிற்கெல்லாம் கடன் கொடுத்திருக்கிறது அரசு. ஆனால், பாதி தான் பயன்படுத்தியிருக்கிறார்கள். இந்த அளவிலே நகராட்சி மூலமாகக் கொடுக்கப்படுகின்ற கடன்கள். ஒழுங்காக அந்தக் காரியங்களுக்குச் செலவழிக்கப்படுகிறதா என்றே கண்காணிக்கப்படுவதில்லை. குறிப்பிட்ட காரியங்களுக்குக் கடன் கொடுக்கிறார்களே ஒழிய, கார்ப்பரேஷனில் அந்தக் குறிப்பிட்ட காரியங்கள் நடைபெறுவதில்லை. கார்ப்பரேஷனிலே கூடக் கடன் வாங்கி சம்பளம் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.

Financialy irregularities are there in various municipalities.

ஆகையினால், நகராட்சிகளையும், நகராண்மைக் கழகங்களையும் வரி போடுவதற்கு மாத்திரம் இலக்காக வைத்துக்கொள்ளாமல் என்ன என்ன நடக்கிறது முனிசிபாலிட்டியில், எங்கெங்கு டிலே இருக்கிறது என்பதையெல்லாம் ஒரு ஹை பவர் கமிட்டி, ஒரு அட்வைசரி கமிட்டி, லோக்கல் எம்.எல்.ஏ.க்களைப் போட்டு அமைக்கவேண்டும்.

முனிசிபாலிட்டியிலே என்ன கதி இருக்கிறது என்று லோக்கல் எம்.எல்.ஏ.க்களுக்குத்தான் தெரியும். சென்னை நகர எம்.எல்.ஏ.க்களை, கார்ப்பரேஷனில் உறுப்பினர்களாக வைத்தால்தான், எங்கள் பகுதிகளுக்குத் தண்ணீர் வருகிறதா, குப்பையை எடுக்கிறார்களா, இல்லையா, சாக்கடை ஒழுங்காக ஓடுகிறதா, இல்லையா என்பதையெல்லாம் எடுத்துச் சொல்ல முடியும். நாங்கள் ஓட்டுப் போடவில்லை, மேயர் பதவிக்கு நிற்கவில்லை. அங்கு இருந்தால்தான் தொகுதி வசதிகளைப் பார்க்கமுடியும் என்று எத்தனை வருஷங்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்கு ஒரு திருத்தம். முனிசிபாலிட்டியிலேயும், கார்ப்பரேஷனிலேயும், எம்.எல்.ஏ.க்கள் will be automatically made members without voting powers என்று சொன்னால், . . ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். அதனை இந்த மன்றத்திலே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன்.

அது மட்டுமல்ல, தொழில் நகரம், அல்லது இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் என்று சொல்லப்படுகின்ற இடங்களுக்கு 4 சதவிகிதம் அதிகம் என்பதுதான் என்னுடைய எண்ணம். அவர்கள் எல்லா வசதிகளையும், குடிநீர் வசதி, மின்சார வசதி, எல்லாவற்றையும் செய்து கொள்கிறார்கள். அதற்குப் பிறகும்

[திரு. கே. எ. வகாப்] [1974 ஏப்ரல் 11

4 சதவிகிதம் போட வேண்டுமா என்பது பிரச்னைக்குரிய கேள்விதான். ஆகவே, இதை இன்னும் குறைப்பதற்கு வழி இருந்தால்கூட, அதைச் செய்தால் நல்லது என்றுதான் நினைக்கிறேன். சிறு தொழில்கள், பெரும் தொழில்கள் வளர அது முக்கியமான காரணமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம், நகராட்சிகள், மாநகராட்சிகளிலே இருக்கிற சுகாதாரச் சீர்கேடுகளைப்பற்றியெல்லாம் மாண்புமிகு அம்மையார் அவர்கள் எனக்கு முன்னால் எடுத்துச் சொன்னார்கள். நல்ல முறையிலே செயல்படுவதற்கு மாநகராட்சி மன்றம் போன்ற பெரிய மன்றங்கள் ஈடுபடவேண்டும். இங்கே, மாநகராட்சியிலே முக்கியமாக இருப்பது சுகாதாரச் சீர்கேடு.

இங்கு இருக்கின்ற ஆடுகள் வெட்டுகின்ற இடத்தைப் பார்க்கின்ற வாய்ப்பு ஏற்பட்டது. அதைவிடச் சுகாதாரக் கேடான பகுதி இந்த மாநகரத்திலேயே இருக்குமா என்பது சந்தேகம். அங்கு புழுக்கள் நெளிந்து கொண்டிருக்கின்றன, நாற்றம் வெகுதூரத்திலேயே அடிக்கிறது. ஆண்டுதோறும் ரூ. 8 இலட்சம் வருமானம் வருகிறது. அதில், பாதியை அதற்காகச் செலவழிக்கக் கூடாதா? டெல்லியிலே ரூ. 7 இலட்சம் வருமானம் வருகிறது. அதற்காக, ரூ. 5 இலட்சம் வருஷாவருஷம் செலவு செய்யப்படுவதாகத் தெரிகிறது. ரூபாய் 8 இலட்சம் வருமானம் வந்தும்கூட, ரூ. 1 இலட்சம்கூட, வருஷத்திற்கு செலவிடப் படவில்லையென்று தெரிகிறது. அங்கு பயங்கரமான சுகாதாரக் கேடு இருக்கிறது. அந்தத் துறையிலே வசூலிப்பதைக் கொண்டு, அந்தத் துறையை அபிவிருத்தி செய்யவேண்டும்.

இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் என்று சொன்னால், அங்கே வசூலிக்கின்ற தொகையினை, அவர்களுக்கு புறச் சாலைகளை அமைப்பது, குடிநீர் வசதிகளுக்கு ஏற்பாடு செய்வது, பிற சுகாதாரக் கேடுகளை நீக்குவது போன்றவற்றிற்காக செலவு செய்ய நம்முடைய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

மாநகராட்சியைப் பொறுத்தவரை, மாண்புமிகு அம்மையார் அவர்கள் நல்ல கருத்தைச் சொன்னார்கள். இப்பொழுது, இங்கே கவுன்சிலர்கள் கிடையாது. அதற்கென்று ஏற்படுத்தப்பட்ட தனி அதிகாரி, எல்லா இடங்களுக்கும் சென்று பார்க்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, டிவிஷன் வாரியாக 10, 12 இடங்களைக் கொண்ட அட்வைசரி கமிட்டி அமைத்தால் மிகவும் நலமாக இருக்கும் என்பது பொதுமக்களது அபிப்பிராயம். பல பகுதிகள் கவனிக்கப் படாமலிருக்கின்றன இப்பொழுது அண்மையிலே ஆரம்பகாலத்திலே கொஞ்சம் . . .



1974 ஏப்ரல் 11]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): இது டிஸ்டிரிக்ட் முனிசிபாலிட்டியைப் பற்றியது கார்ப்பரேஷனைப்பற்றியது அல்ல.

திரு. கே. எ. வகாப்: ஆகவே, இப்படிப்பட்ட இந்த அட்வைசரி கமிட்டி ஒன்று மாநகராட்சிக்கு வைப்பதுபற்றி யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, தொழிற்சாலைகளுக்கு இன்னும் ஊக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டு, தொழிற்சாலைகளுக்கு சாலை வசதிகள் கிடையாது; அப்படிப்பட்ட சாலை வசதிகளை ஏற்படுத்த, இந்த வரியினைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

DR. H. V. HANDE: Sir, I would like to offer a few remarks in connection with this amendment.

Firstly, the practice of the Government has been to bring in piece-meal amendments as a device and method by which they have a knack of increasing the tax, at the same time barring us from discussing in detail the problems of municipalities or corporations. We are barred from discussing it in detail on the off repeated answer that the amendment has a limited scope.

Thus in instalment basis and piece-meal fashion they bring in legislations. That is why I say this practice should summarily be done away with and we should be allowed opportunity to discuss an amendment and point out the faults and acts of commissions and omissions that are going on.

We cannot highlight these when municipalities are completely defunct, some of the major panchayats and corporation are defunct. After that the municipal members cannot discuss. Therefore I would suggest in this context that the Minister may take into serious consideration the practice of laying on the table of the House a detailed information of the budgetary provisions of municipalities or corporations which are superseded. It will be like States which are superseded, Parliament is allowed to discuss in detail, similarly municipalities and corporations wherever they are superseded, we should be allowed a chance to discuss the entire budgetary provision. Otherwise, it will be overlooking and going over the head of the democratic set-up and allowing the executive officer to do things where the Special Officer will have direct access to the Minister and he will do things by-passing the elected bodies.

[Dr. H. V. Hande]

Another thing is this 4 per cent. We should commend the Government for reducing it by 2 per cent, from 6 to 4 per cent. But the generality of the situation should be taken into consideration. There are properties on which urban tax is levied. There should be proper co-ordination between urban tax and this. We should know the quantum of urban tax and house tax on a particular house. These together come to a huge sum. Actually there are no owners at all, especially in Madras City or Madurai. According to me, nobody is in possession of real estate. Everybody is a tenant of the corporation or Municipality. I have a house, but I am a tenant of the corporation.

Another point that was made by Mrs. Anandanayaki was about M.L.As. being allowed to sit in the Corporation. With all respect to the Lady Member, I should say that we are doing legislative work on a state-wide basis. I would like that we should not be asked to sit in the corporation council. (Interruption) There is a complete difference of opinion. With great respect—I have nothing personal—even the lady Member herself will feel it a nuisance. So, I am very much against it . . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI: The Hon. Member Dr. Hande was not a member of the Corporation, but I had been a member for over six years. That place is not a very bad place not to permit M.L.As. We can go there and make it better by our presence.

DR. H. V. HANDE: I am only against our being forced into that council. Whenever any complaint is made with regard to the corporation or municipality, our representations would be given due weight. If that assurance is given that is enough. The conditions of municipalities all over the State is in a deplorable state . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): மான்யத்தில் பேசு வதை மசோதாவில் பேச வேண்டியதில்லை. ஏற்கனவே இந்த மான்யம் நடந்து முடிந்திருக்கிறது. அப்போது நகராட்சி நடைமுறையைப்பற்றிப் பேசியிருக்கிறோம். பொதுவானதை மட்டும் பேசி முடியுங்கள். 9 பில்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சமயமும் இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தால் நல்லதல்ல. அதனால்தான் சொல்லுகிறேன்.



திருமதி த. ந. அனந்தநாயகி: சமயம் வரும்போது பேசினாலே ஒன்றும் செய்ய மாட்டேனென்கிறார்கள். டிமாண்டில் ஒன்றிரண்டு பேர்கள்தான் பேச முடிகிறது. இப்படி வரும்போது பேச வேண்டியதுதான்.

DR. H. V. HANDE: I would like to tell the Chairman, Mr. Duraimurugan that I have been speaking on amendments for the past ten years and I know my limitations. This is a Bill with regard to taxation and whenever taxation is brought forward, it is usual and it is customary for members to speak on all aspects (Mr. Speaker in the Chair). Probably, Mr. Duraimurugan—now as a member—would share my views. I would like to conclude by saying that municipalities are in a deplorable condition. It is imperative to see to it that they are right. I hope and trust that the Honourable Minister would address himself to the serious task of seeing that these municipalities are made at least tolerably better. Thank you.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் களே, இந்தத் திருத்தத்தில் திருமதி அனந்தநாயகி அவர்கள் குறிப்பிட்டது போல இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு நகராட்சிகள் மாநகராட்சியில் நடைபெறுகின்ற ஒரு சில காரியங்களைப்பற்றி இங்கே குறை பாடுகளை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில், மாநகராட்சிகள், நகராட்சி யில் செய்யப்பட்டிருக்கின்ற நல்ல காரியங்களைப் பாராட்டியிருப்பாரானால் உண்மையிலேயே நான் அதுபற்றி மெத்த மகிழ்ச்சி அடைந்திருப்பேன்.

இந்த சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையிலும் அவர்கள் ஆறு ஆண்டு களுக்கு மாநகராட்சி உறுப்பினராக இருந்ததாக அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் இருந்த சமயத்தில் நடைபெறாத நல்ல பல வேலைத் திட்டங்கள் இப்பொழுது நடைபெற்று வருவதை அவர்கள் ஏன் தான் பாராட்டாமல் விட்டு விட்டாரோ என்று எனக்குத் தெரியவில்லை.

சென்னைக்கு வருபவர்கள் இன்றைய தினம் சென்னை மாநகரத்தை பார்த்து விட்டு ஒரு காலத்தில் நம்முடைய முதலமைச்சர் அடிக்கடி இதைக் குறிப் பிடுவார் சிங்காரச் சென்னை, என்று. இந்தச் சிங்காரச் சென்னை இப்பொழுது தான் இருக்கிறது என்பதை வெளியிலிருந்து வந்து பார்த்துச் செல்பவர்கள் சொல்லிக்கொண்டுதான் போகிறார்கள். இங்கு வருகின்ற அவர்கள் அண்ணா சாலையைப் பார்த்தால், அது அவர்கள் காலத்தில் எப்படி இருந்தது, இப்பொழுது எப்படி இருக்கிறது என்பதை அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

[மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1974 ஏப்ரல் 11

அதைப்போலவே இந்தக் கடற்கரை சாலையைப் பார்ப்பவர்களுக்கு இந்த கடற்கரை எவ்வளவு அழகாக இருக்கிறது என்பதைப் பார்த்துவிட்டு இங்கே நடைபெற்றிருக்கின்ற வேலைகளையெல்லாம் பார்த்து பிற மாநிலத்தில் இருந்து வருபவர்கள் மாத்திரமல்ல, உலகச் சுற்றுப் பயணம் வருபவர்கள்கூட இன்றைய தினம் தமிழ் நாட்டிலே, அதிலும் குறிப்பாக சென்னை மாநகரத்திலே நடைபெற்றிருக்கின்ற வேலைகளையெல்லாம் பார்த்து எவ்வளவு பாராட்டிச் செல்லு கிறார்கள் என்பது அவர்கள் கவனத்திற்கு வரவில்லை. வந்தாலும் பாராட்டி னால் அவ்வளவு சிறப்பாக இருக்காது என்ற காரணத்தாலோ அல்லது பாராட்டி விட்டால செய்யப்பட வேண்டிய வேலைகள் செய்யாமல் விட்டுவிடுவோமோ என்ற எண்ணத்தில்கூட சொல்லியிருக்கலாம். நான் அதைக் குறைவாக எடுத்துக் கொள்ளாது செய்யப்பட வேண்டிய காரியங்களை நிச்சயமாகச் செய் வோம் என்று இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணமாக, பல வேலைகள் செய்யப்படவில்லை என்று அவர்கள் குறிப் பிட்டார்கள். இப்பொழுது அந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. குழந்தைகளுக்கு அவர்கள் ஒதுக்கும் இடங்கள் இப்பொழுது 100 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவை செய்யப்பட்டு வருகின்றன. அதைப் போலவே குழாய்கள் பழுது பார்க்கப்பட்டு வருகின்றன.

தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சிய காரணத்தாலே இன்றையதினம் அரசாங்கத்தின் மூலம் பல லட்சம் ரூபாய் செலவு செய்து பழுது பார்க்கப்பட்டு வருகிறது, அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

அதைப் போலவே இங்கே நம்முடைய பிராட்வே பஸ் ஸ்டாண்டு பற்றி நான் சமீபத்தில்கூட ஒரு கடிதத்தைப் பார்த்தேன். நானே அந்த இடத்திற்குச் சென்று பார்த்தேன். அந்த இடத்தை எப்படி விஸ்தரிப்பது என்பதைப்பற்றி இப்பொழுது பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றோம். ஏனென்றால் அது மிக மிக மோசமான நிலையில், இன்றைக்கு அல்ல, பல ஆண்டுகளுக்கு முன்பே இருந்த போதிலும், அதை எப்படித் திருத்துவது என்ற திட்டத்தைத் தயா ரிக்கச் சொல்லியிருக்கிறேன். விரைவில் அந்தத் திட்டத்தை தயாரித்து அதை ஒரு நல்ல அழகான பேருந்து நிலையமாக்குவதற்கு நிச்சயமாக முயற்சி எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வகாப் அவர்கள் ஒரு யோசனையைச் சொன்னார்கள். வரியைக்கூட நாம் என் இவ்வளவு வாங்க வேண்டும்? வாங்காமல் இருந்தால் தொழில் வளம் பெருக வாய்ப்பு



1974 ஏப்ரல் 11] [மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்]

இருக்குமே என்ற கருத்தைக் கூறினார்கள். வாங்குவதே கூடாது என்று அவர்கள் வற்புறுத்துவார்களேயானால், பிறகு "என்னுடைய முதலைப் போட்டு என்னுடைய பாட்டன் சொத்திலிருந்து சம்பாதித்ததை நான் முதலீடு செய் திருக்கிறேன், எதற்காக வருமான வரி கட்ட வேண்டும்?" என்ற கேள்விகள் வந்தாலும் வரும். அவர்களுடைய சொத்திலேயிருந்து செலவழித்தாலும் வரி கட்ட வேண்டியிருக்கிறது. நகராட்சிகளிலே இண்டஸ்ட்ரியல் ஏரியாவிலே சில காரியங்களைச் செய்தாலும் வரி விதிக்கின்ற அதிகாரம் நமக்கு இருக்கிறது. அதிகமாக இருக்கக்கூடாது என்றுதான் சலுகை காட்டுகின்ற அளவில் 4 சதவிகிதமாக இது குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன் னார்கள். நகராட்சி மன்றங்கள் நல்ல சீர்திருத்தம் அடைய வேண்டுமென் பதைப்பற்றிக் கூறினார்கள். இப்பொழுது நகராட்சி மன்றங்களுக்கு மேலும் பல அளவு நிதி ஒதுக்கீடு செய்து குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகப் பெரும் பெரும் நகராட்சி மன்றங்களில், நீண்ட நெடுங்காலமாகத் தீர்க்கப் படாமல் இருந்த நகராட்சி மன்றங்களில் குடிநீர் வசதி செய்து கொடுப்பதற் காகவும், சாக்கடைத் திட்டத்திற்கு வசதி செய்து கொடுப்பதற்காகவும் என்று கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும். அதில் சில காலதாமதம் இருந்தாலும் விரைவில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அதைப்போலவே மாநகராட்சிகளில், நகராட்சிகளில் நடைபெற வேண்டிய வேலைகளைப் பற்றி இன்னும் சிறப்பான திட்டங்களைத் தீட்டி நல்ல முறையில் செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தி னர்கள் சொல்லிய யோசனைகளை, இந்தத் திருத்தத்தில் மட்டுமல்லாமல் அவர்கள் சொன்ன யோசனைகளை மேலும் வளர்ச்சி பெறும் அளவில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1974 ஏப்ரல் 11

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/74) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

### (7) அரசினர் தனித் தீர்மானம்.

### 1973 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (32-வது திருத்த) சட்டமுன்வடிவினுல் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களை உறுதிப்படுத்தல்.

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு, 1973-ம் ஆண்டு அரசியலமைப்பு (32-வது திருத்த) சட்டமுன்வடிவினுல் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியலமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின்கீழ் வருபவையுமான திருத்தங்களை இப் பேரவை இசைவுடன் உறுதிப்படுத்துகிறது".

1973-ஆம் ஆண்டு அரசியலமைப்பு (முப்பத்திரண்டாவது திருத்தச்) சட்ட வரைவு, ஆந்திரப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு அரசுப் பணிகளிலும், கல்வியிலும், சம வாய்ப்புக்களும் வசதிகளும் செய்து கொடுப்பதற்காக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 371-ஆவது பிரிவைத் திருத்தவும் 371 டி, 371 இ ஆகிய புதிய பிரிவுகளைச் சேர்த்துக் கொள்ளவும் விழைகிறது. இத் திருத்தச் சட்ட வரைவு, இந்திய அரசியலமைப்புச சட்டத்தின் 368-வது பிரிவைச் சேர்ந்த (2)-ஆவது பகுதியின் வரம்பு நிபந்தனையின்கீழ் மாநிலச் சட்ட மன்றத்தின் இசைவைப் பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது.

1956-ம் ஆண்டில், ஆந்திர மாநிலம் ஏற்படுத்தப்பட்டபோது, தெலுங்காளு பகுதியின் வளர்ச்சி குறித்தும், மற்றும் அப்பகுதியில் வாழுகின்ற மக்களுக்கான வேலை வாய்ப்புக்கள் கல்வி வசதிகள் ஆகியவை குறித்தும் சில



1974 ஏப்ரல் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யக் கருதப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 371-வது பிரிவைச் சேர்ந்த (1) பகுதியின விதித்துறைகள், இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் சிலவற்றிற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவையாகும். தெலுங்காளு பகுதிவாழ் மக்களுக்கு, ஏனையவற்றுடன், வேலை வாய்ப்புக்களும், ஏற்படுத்திக் கொடுப்பதற்காக, 1957-ஆம் ஆண்டு அரசுப் பணிகள் (குடியிருப்பு விதி) சட்டம் நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டது.

தலைமை உயர்நீதி மன்றம், தெலிங்காளு பகுதியில் அளிக்கக் கருதப்பட்டுள்ள சில பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பொறுத்தமட்டில், மேற்படி சட்டத்தின் சில விதித்துறைகள் அரசியலமைப்புக்குப் புறம்பானவை என்று தீர்ப்பளித்தது. பல்வேறு வகையான காரணங்களால் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செயற்படுத்தியதால் சில சமயங்களில் தெலிங்காளு பகுதியிலும் சில சமயங்களில் ஆந்திரப் பிரதேசத்தின் பிற பகுதிகளிலும் ஓரளவிற்கு அதிருப்தியைத் தோற்றுவித்தது. இப்பிரச்சினைகளைத் தீர்க்க அவ்வப்போது சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அண்மையில் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த தலைவர்கள் பலர் அதிருப்தி ஏற்பட்டதற்கான காரணங்களைப் பரிசீலிப்பதற்கு ஒருமித்த முயற்சி எடுத்துக் கொண்டு ஆந்திரப் பிரதேச மக்களிடையே முழு அளவில் கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்தும் பொருட்டு இப் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வுகளைக் கண்டனர்.

அம்மாநிலத்தில் உள்ள பின்தங்கிய பகுதிகளின் விரைவான வளர்ச்சிக்கான ஒரு சீரான அணுகுமுறையைக் குறிப்பிடுகின்ற பொதுவாக ஆறு அம்சத் திட்டம் என்று சொல்லப்படுகிற சில ஏடுபாடுகளை அவர்கள் 1973-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21-ம் நாளன்று தெரிவித்தனர்.

இதனால் மொத்தத்தில் மாநிலத்தின் சீரான வளர்ச்சிக்கும், கல்வி, வேலை வாய்ப்பு, மற்றும் அரசுப் பணிகளில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு சம வாய்ப்புக்கள் வழங்குவதற்கும் வழி ஏற்படும் இத் திட்டத்திற்கு ஆந்திரப் பிரதேசத்தில் பரவலான ஆதரவு கிடைத்தது. ஆந்திரப் பிரதேச அரசு இத் திட்டத்தை ஏற்றுக்கொண்டது.

ஆந்திரப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு, கல்வி நிறுவனங்களிலும், அரசுப் பணிகளிலும், சேர்வதில் சம வாய்ப்புக்கள் அளிப்பதற்குப் பொருந்துகிற வகையில் ஆறு அம்சத் திட்டத்திற்குச் செயல்வடிவம் கொடுக்கவும், அரசுப் பணிகள் தொடர்பான சில தகராறுகள், குறைகள் ஆகியவற்றைக் கவனிப்பதற்கான அதிகார வரம்புடன் கூடிய நிர்வாக நடுவர் மன்றம்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 ஏப்ரல் 11

ஒன்றை அமைக்கவும் தேவையான அரசியலமைப்புப் படிக்கான அதிகாரங்கள் வழங்குவதற்காக இச் சட்டவரைவு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் இச் சட்ட வரைவு அம்மாநிலத்தில் மத்தியப் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான சட்டமியற்ற நாடாளு மன்றத்திற்கு அதிகாரம் அளிக்கவும் விழைகிறது. மற்றும் இதில் முன்னர் செய்யப்பட்ட சில நியமனங்களைச் செல்லுபடியாக்குவதற்கான விதித்துறை உட்பட சில இடைநிகழ்வான தொடர்பான விதித்துறைகளும் அடங்கியுள்ளன. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 371-ஆவது பிரிவைச் சேர்ந்த (1) பகுதியின் கீழ் அமைக்கப்பட்ட வட்டாரக் குழுவைக் கலைத்து விடுவதற்கு இந்த ஆறு அம்சத் திட்டம் வகை செய்வதால் மேற்படி பகுதியை ரத்து செய்யவும் இச் சட்ட வரைவு வகை செய்கிறது.

இந்தத் தீர்மானத்தை ஏற்க வேண்டுமென இம் மன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

*** திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவரவர்களே, அரசியல் சட்டம் இந்த 33-வது திருத்தத்தின்பேரிலே எனது கருத்துக்களைச் சொல்ல முன் வந்துள்ளேன்.

இந்த அரசியல் சட்டத் திருத்தம் பாராளுமன்றத்தாலே நிறைவேற்றப்படக் கூடியதாக இருந்தாலும் இம்மாதிரியான திருத்தங்கள் மாநிலங்களினுடைய சட்டப் பேரவைகளிலே வைத்து அனுமதியைப் பெற வேண்டுமென்ற விதிக்கிணங்க இந்த அவையிலே அதைப்பற்றி நாம் விவாதிப்பதற்காக உள்ளோம்.

ஆந்திராவிலே ஏற்பட்ட நிகழ்ச்சிகள் அதற்கான திருத்தங்களைப் பற்றி நாம் இங்கே பேசுவதன் மூலம் வருங்காலத்திலே நமக்கு அதிலேயிருந்து சில அறிவுரைகள் கிடைக்கும் என்ற காரணத்தினாலே அதைப்பற்றி நாம் பிரச்னைகளை வாதிப்பது நல்லது என்று நான் கருதுகிறேன்.

ஆந்திர மாநிலம் அப்பொழுது சென்னையோடு இணைந்து, சென்னை மாநிலத்தோடு சேர்ந்திருந்த ஒன்று. 1953-ஆம் ஆண்டிலே ஆந்திர மாநிலம்-தனியாகப் பிரிந்த பிறகு ஆந்திர மாநிலத்திலேயிருந்த மக்களிடயே விசால ஆந்திரம் ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை ஏற்படுத்தப்பட்டது. அப்பொழுது ஹைதராபாத் மாநிலம் என்று ஹைதராபாத் தனி ஸ்டேட்டாக இருந்த காலம். அதிலே ஆந்திரம் பேசக்கூடிய, தெலுங்கு பேசக்கூடிய மக்களை இணைத்து விசால ஆந்திரம் எற்படுத்த வேண்டுமென்று எல்லாப் பகுதிகளிலேயும் ஒரு கோரிக்கை எழுப்பப்பட்டது.



1974 ஏப்ரல் 11] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

அப்பொழுது ஹைதராபாத் பகுதி அதாவது தெலுங்கானா பகுதி இருக்கிறதே அது மிகவும் பிற்பட்ட பகுதியாக இருந்தது. அதை இந்த விசால ஆந்திரம் என்ற பெயரிலே, சென்னை மாநிலத்தோடு இருந்து பிரிந்த பகுதியோடு இணைப்பதால் அந்தப் பகுதி மக்களின் வளர்ச்சி பாதிக்கப்படுமோ என்ற அச்சம் அங்கேயிருந்தது.

ஆகவே, ஹைதராபாத் பகுதியிலிருக்கும் தெலுங்கானா பகுதி தனி மாநிலமாக இருக்க வேண்டுமென்ற கருத்து அப் பகுதியிலே இருந்தது. அப்பொழுது அந்த விசால ஆந்திரம் வேண்டுமென்று கருதிய தலைவர்களால் அந்தத் தெலுங்கானா பகுதி மக்களோடு பேசப்பட்டு தெலுங்கானா பகுதி விசால ஆந்திரமாக ஆந்திர மாநிலத்தோடு தெலுங்கானா பகுதி இணைக்கப்பட்டால் தெலுங்கானா பகுதிக்கு விசேஷ சலுகைகள் கொடுக்கப்படும், அவர்களுடைய வளர்ச்சி பாதிக்கப்பட மாட்டாது, அதற்கான ஏற்பாடுகளெல்லாம் செய்யப்படும் என்று உறுதியளித்து, அந்த உறுதியின் பேரிலே அரசியல் சட்டத்திலே ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டதன் பலனாக அவர்களுக்குத் தனியாக அவர்களுடைய வளர்ச்சிக்கு சில சலுகைகள் கொடுக்கப்பட்டன.

அது 1972-ம் ஆண்டு வரையிலும் இருந்தது. அதிலே பெரிய குறைபாடுகள் எதுவும் கிடையாது. ஆனால் யாரோ சிலர் சுப்ரீம்கோர்ட்டில் தொடுத்த வழக்கின் காரணமாக—நான் எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால்—மக்கள் எல்லாம் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்; இரு தரப்பில் இருப்பவர்களும் ஒத்துக் கொண்டு தனியான வளர்ச்சிக்கு ஏற்பாடுகள் எல்லாம் செய்து நடைமுறையில் நல்ல முறையில் நடந்து குறைபாடுகள் எல்லாம் நீக்கப்பட்டு அங்கே ஒரு சுமுகமான நிலை ஏற்பட்டு விட்டது—அந்த நிலையிலே 1972-ம் ஆண்டில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த அரசியல் சட்டத் திருத்தம் விசாலாந்திரா ஏற்படுத்தப்பட்டு தெலிங்கானா பகுதிக்கு விசேடமான சலுகைகள் கொடுப்பதற்காக அமைக்கப்பட்ட 'பப்ளிக் எம்ப்ளாய்மென்ட் ஆக்ட்' செல்லுபடியாகாதென்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்ததன் விளைவாக ஆந்திர மாநிலத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியை நாம் எல்லாம் கவனித்துக் கொண்டு வந்திருக்கிறோம்.

சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக் கொடுத்தவுடனே எப்படியோ அங்கிருக்கிற மக்களின் ஆத்திரத்தை உண்டு பண்ணக்கூடியவைகள் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் பேசித் தீர்த்து முடிவு காணுவதற்குப் பதிலாக ஏதோ கிளர்ச்சியில் இறங்க வேண்டுமென்ற எண்ணத்தில் கிளர்ச்சி தூண்டிவிடப்பட்டது.

ஒன்றை நாம் இந்தச் சமயத்தில் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். பப்ளிக் எம்ப்ளாய்மென்ட் ஆக்ட் என்பது சுப்ரீம் கோர்ட்டால் நிராகரிக்கப் பட்டதே தவிர அங்கு ஆட்சியில் இருக்கும் கட்சியோ, மாநிலத்திலே இருக்கிற இதர எதிர்க் கட்சிகளோ அல்லது மத்தியில் இருக்கும் அரசோ இது தேவை யில்லை என்று கூறவில்லை.

சுப்ரீம் கோர்ட் வழக்கின் காரணமாக சில தவறுகள் இருக்கின்றன என்ற காரணத்திற்காக சட்டபூர்வமாகத் தள்ளுபடி செய்யப்பட்டது. தள்ளுபடி செய்யப்பட்ட உடனே ஆந்திர மாநிலத் தலைவர்கள் எல்லாம் ஒன்றுகூடி தெலிங்கானு பகுதிகள் பாதிக்கப்படாமல் இருக்க மாற்று ஏற்பாடுகளை எப்படிச் செய்ய வேண்டுமென்று அவர்கள் உட்கார்ந்து பேசுவதற்கான ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்குமானுல் ஆந்திரத்தில் இவ்வளவு பெரும் கிளர்ச்சிகள் நடந்து உயிர்ச் சேதம், பொருட் சேதம் ஏற்பட்டு பெரும் மோசமான நிலைமைகள் ஏற்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

நாம் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இதோடு சேர்ந்து இன்னுென்றும் இருந்தது. ஆந்திர மாநிலத்திலே அரசு தீவிரமான நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவது பற்றி அந்தச் சமயத்தில் அறிவித் திருந்தார்கள். அந்த அறிவிப்பு வந்ததற்கும் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வந்த தற்கும் சரியாக இருந்தது. 'காக்காய் உட்கார பனம்பழம் விழுந்த கதை' ஆயிற்று. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நிலத்தை விடக்கூடாது என்ற எண்ணத்தில் இருந்தவர்கள் எல்லாம் பின்பக்கத்தில் இருந்து பெரும் கிளர்ச்சியை ஆரம்பித்து அரசே ராஜினுமா பண்ண வேண்டிய நிலைமையை ஏற்படுத்திஞர்கள்.

எந்தக் கிளர்ச்சி எங்கே ஆரம்பித்தாலும் அந்தக் கிளர்ச்சி எதற்காக நடத்தப்படுகிறது என்று சொல்லுகிருர்களோ அதைவிட அதற்குப் பின்னுலே வேறு முக்கியமான சில காரணங்கள் இருக்கின்றன. அங்கிருந்த நிலப் பிரபுக்கள், இதற்குப் பின்னுல் இருந்து தூண்டிவிட்டார்கள்; எப்படியாவது காலதாமதம் ஆகட்டும் என்ற காரணத்திற்காக.

ஆனுல் மக்களிடத்திலே, சாதாரண மக்களிடத்திலே அதுவும் இந்தக் காலத்தில் இவ்வளவு வளர்ச்சி அடைந்திருக்கிறேம் என்று கூறிஞலும்கூட மொழி, இனம், சாதியைச் சொல்லி மக்களைத் தன்பால் இழுப்பது நடந்து கொண்டுதான் இருக்கிறது. கொள்கையைச் சொல்வது, பொருளாதாரக் கொள்கையைச் சொல்வது, அரசியல் கருத்துக்களைச் சொல்வது என்ற முறையில் மக்களை இழுப்பதைவிட, மதத்தைச் சொல்லி, மொழியைச் சொல்லி, இனத்தைச் சொல்லி மக்களை ஆத்திரப்படுத்தி தன்பால் இழுப்பது இன்று



சுலபமாக இருக்கிறது. இதற்கு இப்போதிருக்கும் அரசியல் நிலைமையில் யாரும் விலக்கே கிடையாது. சாதியைப் பயன்படுத்துவது, மதத்தைப் பயன் படுத்துவது மிகச் சாதாரணமாகப் போய்விட்டது. சுதந்திரத்திற்கு முன்னுல் எந்த அளவுக்குச் சாதி உணர்ச்சிகள், மத உணர்ச்சிகள், மொழி உணர்ச்சிகள் இருந்ததோ அதைவிட இப்போது அதிகமாக இருக்கிறது. கொள்கையைச் சொல்லி மக்கள் ஆதரவைப் பெறுவதைவிட சாதியைச் சொல்லிப் பெறுவது சுலபமாக இருக்கிறது, மதத்தைச் சொல்லிப் பெறுவது சுலபமாக இருக்கிறது. இதனுல் இந்த நாட்டுக்குப் பிற்காலத்தில் நன்மை பயக்குமா தீமை பயக்குமா என்பதை நினைத்துப் பார்க்காமல் உடனடியாகப் பலன் கிடைக்க வேண்டு மென்பதற்காக சாதி, மதத்தைப் பயன்படுத்தக்கூடிய துர்பாக்கியமான நிலைமை நாட்டில் இருக்கிறது. இந்த நிலையை எப்போது தவிர்க்கப் போகிறேம் என்று சொல்ல முடியவில்லை. (மணி அடிக்கப்பட்டது).

**திரு. கே. டி. கே. தங்கமணி** : 1½ மணி வரை இந்த விவாதம் போகுமா?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து** : தெலிங்கானு—ஆந்திரா என்று தனி மாநிலங் களாகப் போக வேண்டுமென்று பெரும் கிளர்ச்சி செய்தார்கள். யார் விசாலாந்திரம் வேண்டுமென்று கூறினுர்களோ அவர்களே தெலிங்கானு தனியாகப் போகவேண்டுமென்று சொன்னுர்கள். ஆந்திரா தனியாகப் போக வேண்டுமென்று சொன்னுர்கள். பெரும் கிளர்ச்சி நடத்திஞர்கள். அது தீ பரவுவது மாதிரிப் பரவிவிட்டது. யார் சொல்வதையும் காதில் வாங்காமல் கலவரம் செய்தார்கள். பொதுச் சொத்து நாசமாக்கப்பட்டால் யாருக்கு நட்டம் என்பதைப்பற்றி யாரும் சிந்தித்துப் பார்ப்பது கிடையாது. அது நம்முடைய வரிப் பணம், நம்முடைய சொத்து. அது எரிக்கப்பட்டால் நாட்டுக்கு நஷ்டம்; நமக்கு நஷ்டம் என்று பார்க்காமல் ஆத்திரம் வந்ததால் தெருவில் போகும் பஸ்ஸை—சர்க்கார் பஸ்ஸைக் கொளுத்துகிருர்கள் தனியார் பஸ்ஸைக் கொளுத்திஞலும் நாட்டுக்கு நஷ்டந்தான்.

இம்மாதிரி நடந்த பெரும் கிளர்ச்சியை மத்திய சர்க்கார் மிகப் பெரும் ராஜதந்திரத்தோடு சமாளித்தார்கள். அது பாராட்டப்படக்கூடிய ஒன்று. இவ்வளவு பெரிய கிளர்ச்சிக்குப் பிறகும் அமைதியான முறையில் சமாளித் தார்கள். எதற்காக இதைக் கூறுகிறேன் என்றுல்—எவ்வளவு பெரிய ஆத்திர மூட்டத்தக்க செயலாக இருந்தாலும், சம்பவங்களாக இருந்தாலும்கூட, கூடிப் பேசுவோமானுல் தீர்வு காண முடியும்; கலகம் செய்து, சண்டை போட்டுத் தான் காண வேண்டுமென்று இல்லை.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 ஏப்ரல் 11

நேற்றைய தினம் செய்தி பார்த்தோம். மூன்று தேச வெளிநாட்டு அமைச்சர்கள் கூடி (பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ்) ஒரு பெரிய முடிவை எடுத்திருக்கிறார்கள். இந்தியாவிற்கு வருங்காலத்தில் பெரும் சங்கடங்களைத் தீர்க்கக்கூடிய பெரும் முடிவுகள்—ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து அந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இது ஒரு பெரும் காரியம். நாட்டிற்கு எதிர்காலத்தில் பெரும் நன்மை விளைவிக்கக்கூடிய காரியம். எவ்வளவு பெரிய பிரச்சினையாக இருந்தாலும் உட்கார்ந்து அமைதியாகப் பேசுவோமானால் தீர்வு காண முடியும் என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

அந்த முறையில் ஆறு அம்சத் திட்டத்தினை ஆந்திர மாநிலத்தில் இரு தரப்பாரும் ஏற்றுக் கொண்டு பெரும் அமைதியை ஏற்படுத்தக்கூடிய காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அதன் மூலம் அவர்களுக்குக் கிடைத்திருப்பது மத்திய யூனிவர்சிடி ஒன்று. அவர்கள் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே மத்திய யூனிவர்சிடி வைக்க வேண்டுமென்று சொன்னால் 'வேண்டாம்; வட நாட்டில் இருப்பவர்கள் ஆட்சி புரிய வாவது' என்று சொல்லப்படும்.

பாண்டிச்சேரியில் சென்ட்ரல் யூனிவர்சிடி வைக்க முன்வந்தபோது அதற்கு ஒரு ஆட்சேபனை தெரிவித்தார்கள். பாண்டிச்சேரியை அடிமைப்படுத்த மத்திய அரசு நினைக்கிறது என்றார்கள். அந்த வகையில் ஒரு உணர்வு வளர்ந்து இருக்கிறது. இந்த உணர்வு எந்தக் காலத்திலும், எந்த நேரத்திலும் நன்மை பயக்காது.

மத்தியில் இருக்கும் அரசுக்கு சரியான அதிகாரம் இருந்த காரணத்தால் தான் ஆந்திர மாநிலத்தில் இவ்வளவு பெரும் கிளர்ச்சி ஏற்பட்டும் இவ்வளவு சுமுகமாகத் தீர்க்க முடியாது. அந்த அதிகாரம் அவர்களுக்கு இல்லையென்றால் ஆந்திர மாநிலம், தெலிங்கானா மாநிலம் என்றுதான் பிரிந்திருக்கும். அதைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியாது. அந்த அதிகாரம் இல்லையென்றால் இரண்டு பேரும் சேர்ந்து பேச வாய்ப்பே இருக்காது. மத்திய அரசு எங்கோ இருந்து வந்த அரசு என்று எண்ணம் இல்லாமல் நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சேர்ந்து அமைத்த அரசு என்ற எண்ணத்தில் பார்த்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜமன்னார் குழு அறிக்கையின் மீதான விவாதம் வரும்போது இதைப்பற்றி யெல்லாம் பேசலாம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இந்தத் திருத்தத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12·30)



1974 ஏப்ரல் 11]

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின் பேரில் என் கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால், அரசியல் சட்டம் 368-வது பிரிவு உபபிரிவு 2-ன் அடிப்படையில் சில முக்கியமான திருத்தங்களை நாடாளுமன்றம் நிறைவேற்றினாலும் கூட குறிப்பிட்ட அளவு மாநிலங்களும் அதற்கு அங்கீகாரம் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த முறையில்தான் இந்தத் தீர்மானம் இங்கு வந்திருக்கிறது. எப்போது இந்தத் தீர்மானம் வந்திருக்கிறதோ அப்போது அந்தத் தீர்மானத்தின் உள்ளடக்கத்தின் பேரில் நமக்கு பேசுவதற்கு வாய்ப்பு உண்டு. நான் அதிக நேரம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை.

இந்த மன்றத்தில் பல விஷயங்கள் விவாதிக்கப்படுகின்றன. அதுவும் இன்று அதிகமான அதிகாரங்கள் மாநிலத்திற்கு வேண்டுமென்று நாம் கேட்கிறோம். ஆனால் அதற்கும் அப்பால் சென்று மாநிலம் தனியாகச் செயல்படக்கூடிய அளவிற்கு உரிமை வேண்டுமென்று இந்த மன்றத்தில் பல தடவை எழுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தத் தீர்மானத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று வருவதற்குப் பதிலாக ஆளும்கட்சி சார்பில் நிராகரிக்க வேண்டுமென்று அவர்கள் கொண்டு வந்திருப்பார்களேயானால் உண்மையிலேயே அந்த அரசியலை என்னால் பாராட்டியிருக்க முடியும்.

ஆனால் இந்தத் தீர்மானம், அரசியல் சட்டத் திருத்தத்தை நாம் அங்கீகரிக்கிறோம் என்று கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் திருத்தம் என்னவென்று பார்த்தால் என்னென்ன விஷயங்களை இங்கு நாம் கூடாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறோமோ அதையெல்லாம் செய்ய வேண்டும் என்ற அளவிற்கு அந்தத் திருத்தம் இருக்கிறது.

ஒரு விஷயத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கல்வியைப் பொறுத்தவரையில் அது மாநிலத்தினுடைய பொறுப்பாகத்தான் இருக்க வேண்டும். இந்தக் கல்வியை மத்தியிலிருந்து நம் பேரில் திணிக்கக் கூடாது என்ற கருத்து பலதடவை சொல்லப்பட்டிருக்கிறது. இந்தியாவிலே மூன்று பல்கலைக் கழகங்கள் மத்திய அரசே நடத்தக்கூடிய பல்கலைக் கழகங்கள். ஒன்று, டெல்லி, இன்னொன்று, வாரணாசி, இன்னொன்று, அலிகார். இந்த மூன்று பல்கலைக் கழகங்களைப் பொறுத்தவரையில் அந்த ரிப்போர்ட்கள் எல்லாம் பார்லிமெண்டில் விவாதிக்கப்படுகின்றன.

இந்தத் திருத்தத்தின் அடிப்படையில் நான்காவது பல்கலைக் கழகம் மத்திய அரசால் ஹைதராபாத்தில் கொண்டுவரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை ஆந்திர தேச மக்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். எதை

அடிப்படையாக வைத்து? நம் மாநிலத்தில் நம் ரிசோர்ஸஸை வைத்துக் கொண்டு சில காரியங்களைச் செய்யமுடியாமல் போனால் நமக்கு உதவி செய்வதற்கு—மேல் ஆதிக்கம் அல்ல, நம் பேரில் நல்லெண்ணம் கொண்டு—மத்திய அரசு இந்தக் காரியத்தைச் செய்கிறது என்ற முறையில் ஏற்றுக் கொண்டார்கள். நாம் எதை எங்களுக்கு தனியாக, எந்தவிதமான இடைஞ்சலும் இல்லாமல் விடவேண்டுமென்று சொன்னோமோ அதைக் கூட மத்தியில் நீங்கள் நல்லெண்ணத்தோடு இருப்பதால் அந்தப் பல்கலைக் கழகத்தை வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டு ஷெட்யூலில் 7-ல் நான்காவது பல்கலைக் கழகமாகச் சேர்த்திருக்கிறார்கள். இது எந்த அளவிற்கு இந்த ஆட்சியாளர்களின் கொள்கைக்கு ஒத்துவருகிறது என்று தெரியவில்லை.

பல நல்ல விஷயங்களை மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். அவை எந்தளவிற்கு அதற்குரிய இடத்தைப் பெறுகிறதோ எனக்குத் தெரியாது. அவர்கள் மிக முக்கியமான விஷயங்களை எடுத்துச் சொன்னார்கள். சரித்திர ரீதியாக சில விஷயங்களையும் நடைமுறையில் உள்ள சில விஷயங்களை எடுத்துச் சொன்னார்கள்.

ஆந்திராவில் நடந்த கிளர்ச்சியைப் பொறுத்தவரையில் ஆந்திராவில்தான் கிளர்ச்சி நடந்தது என்று நாம் மகிழ்ச்சி அடையமுடியாது. நாளைக்கு அதே உருவத்தில் அல்லது வேறு முறையில் தமிழ்நாட்டிலும் வரலாம். ஆந்திராவில் முதலில் கிளர்ச்சி ஏற்பட்டது. அதற்குப் பின்னால் குஜராத்தில் கிளர்ச்சி ஏற்பட்டது. அதற்குப் பின்னால் பீகாரில் கிளர்ச்சி ஏற்பட்டது. இனி அடுத்தாற்போல் எங்கு வருமோ நமக்குத் தெரியாது.

கிளர்ச்சி ஆரம்பமாகும்போது நியாயமாக இருக்கலாம். நியாயமாக இருக்கக்கூடிய விஷயத்தை தவறான வழியில் இழுத்துச் செல்வதற்காக இப்போது ஒரு சக்தி இந்த நாட்டில் உருவாகியிருக்கிறது என்று எங்கள் கட்சி நினைக்கிறது. ஆந்திராவில் இந்தக் கிளர்ச்சி உருவானது. உருவான அந்தக் கிளர்ச்சிக்கு ஆதரவாக நின்றவர்கள் பெரும் பணக்காரர்களும், பெரிய நிலப் பிரபுக்களும், பெரிய வியாபாரிகளும் ஆதரவாக நின்றனர். அங்கிருக்கக்கூடிய போலீஸ் அதிகாரிகள் கூட, அங்கிருக்கக்கூடிய ஜில்லா கலெக்டர்கள்கூட இந்த இயக்கத்தோடு சேர்ந்து நின்றார்கள்.

அப்போது காங்கிரஸ் கட்சியில் இருக்கக்கூடிய இன்டக்ரேஷனிஸ்ட்ஸ், நாடு ஒன்றாக இருக்கவேண்டும் என்று சொல்லக்கூடிய ஒரு வலுவான க்ரூப்பும்,



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்து நின்று இப்படி பிரிவினை வேண்டுமென்று கேட்கக்கூடிய இந்த இயக்கத்தை எதிர்ப்போம், அதை உயிரைக் கொடுத்தாவது நாங்கள் எதிர்ப்போம் என்ற முறையில் எதிர்த்தோம்.

நான் ஏற்கனவே ஒரு முறை சொல்லியிருக்கிறேன். எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் இருபது பேர்களுக்கு அதிகமாக உயிர் நீத்தார்கள். அப்போது மணலி கந்தசாமி அவர்கள் கூடச் சொன்னார்கள், சாதாரணத் தொண்டர்கள் செத்துவிட்டார்கள் என்று. விஜயவாடாவில் இருக்கக்கூடிய எங்கள் கட்சிச் செயலாளர், நாங்கள் எல்லோரும் ரொம்பவும் மதிக்கக்கூடிய ஒரு அருமைத் தோழர் படுகொலை செய்யப்பட்டார். கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அதோடு எங்கள் கட்சி ஆபீஸை போலீஸ் வந்து சர்ச் செய்ய வந்தபோது அனுமதிக்க முடியாது என்று சொல்லி இன்றும் எங்கள் கட்சித் தொண்டர்கள் ஆயுதபாணிகளாக நின்று அதைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இதையெல்லாம் நான் சொல்லக் காரணம், ஒரு அராஜக நிலையை உருவாக்கிவிட்டார்கள். ஒருசிலர் சொன்னார்கள், அதை எதிர்ப்பது feeble voice என்று Feeble voice was no longer feeble. It has become effective voice.

எங்கள் வாயிஸ் எபக்டிவாக ஆயிற்று. அராஜக நிலையை எதிர்த்து நாங்கள் குரல் கொடுத்தோம். நான் அடிப்படையாகச் சொல்லவில்லை. எங்கள் கட்சிச் செயலாளர் திரு. ராஜேஸ்வர ராவ் 20,000 பேர்கள் கொண்ட ஊர்வலத்தை நடத்திச்சென்று ஒரு பொதுக்கூட்டம் நடத்திய பிறகுதான் அச்சம் தவிர்க்கப்பட்டது. ஆறு அம்சத் திட்டம் வந்தது. பிரதமரே நுழைய முடியவில்லை, அமைச்சர்களே நுழைய முடியவில்லை என்ற நிலை இருந்தது. ஜில்லாவிற்கு ஜில்லா உரிமை கொண்டாடும் அளவிற்குப் போகிறது. மதுரை ஜில்லா மதுரை ஜில்லாக்காரர்களுக்குத்தான் என்று சொல்வதைப்போல்—ஒரு மொழி பேசுவோரும் இன்னொரு மொழி பேசுவோரும் சண்டைபோடுவது அல்ல—ஒரு மாவட்டத்துக்காரர்கள் இன்னொரு மாவட்டத்துக்காரர்களுடன் சண்டை போடுவதுபோன்ற நிலை ஏற்பட்டிருந்தது.

சன்ஸ் ஆப் தி சாயில் தியரியை, எங்கள் ஊர்க்காரர்களே எங்கள் ஊரில் இருக்க வேண்டும் என்ற அளவிற்கு படுமோசமான கோஷத்தைக் கிளப்பினார்கள். எங்கள் கட்சி சார்பில் ஈஸ்வர ரெட்டி அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசினார்கள். நேரடியாக மத்தியில் நின்று மிகப் பெரிய ஊர்வலத்தை நடத்தியவர்களில் அவர்களும் ஒருவர்.

விவசாயத் தொழிலாளர்கள் இரண்டு மூன்று ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்கள். இந்தக் காலத்திலும் தொழிலாளிகளை எந்த நிமிடத்திலும் வெளியே போகச் சொல்ல முடியும். தொழிலாளர்கள், விவசாயிகள் பார்த்தார்கள் ஜெயிலுக்குப் போகிறவர்கள் எல்லாம் நிலப்புரபுக்களாக இருப்பதை. நிலப்பிரபுக்களின் பெண்கள் வைர நகைகளைப் போட்டுக் கொண்டு ஜெயிலுக்குச் செல்வதைப் பார்த்தார்கள். பார்த்து இது நம் போராட்டம் அல்ல என்பதை ஏழை விவசாயிகள், தொழிலாளிகள் உணர்ந்து கொண்டார்கள்.

இந்த நாட்டில் சோஷலிஸம் வரவேண்டும் என்று சொல்கிறோம். சோஷலிஸம் என்ற அமைப்பு ஏற்படுகிறபோது அங்கு வேலையில்லாத் திண்டாட்டம் இருக்காது. உழைப்பவர்களுக்குத்தான் மதிப்பு உண்டு. ஏமாற்றுகிறவர்களுக்கு அல்லது பணத்தை மட்டும் வைத்துக் கொண்டு எதையும் செய்யலாம் என்று நினைப்பவர்களுக்கு அங்கு இடம் இருக்காது. அதற்கு அஸ்திவாரமாக விவசாயிகளும், தொழிலாளர்களும்தான் இருப்பார்கள். ஆகவே, அந்த அடிப்படையிலேதான் இந்த 6 அம்ச கோரிக்கை வந்தது. அந்த 6 அம்ச கோரிக்கைக்குள் நான் போக விரும்பவில்லை. அதே நேரத்தில், இன்று பின் தங்கிய பகுதிகள் இருக்கின்றன. அதற்கு உதவி செய்ய வேண்டும்.

இன்று தமிழ்நாட்டில் அத்தகைய அபாயம் இருக்கிறது. ஒரு சில மாவட்டங்களுக்கு வசதி வாய்ப்புக் கொடுக்கப்படுவது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது. சில மாவட்டங்கள் ஒதுக்கப்படுகின்றன. அது அரசியல் காரணத்திற்காக ஒதுக்கப்படலாம். சில மாவட்டங்கள் பின் தங்கிய மாவட்டமாக இருந்தாலும் அதற்குச் சரியான கவனம் இல்லை. ஆங்காங்கு நியாயமான கோரிக்கை கிளப்பப்படுகிறது. அது கவனிக்கப்படாமலும் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

ஒரு மாவட்டம் இன்னொரு மாவட்டத்தைவிடச் சிறந்ததாக இருக்கிறது என்று இல்லை. இதை வைத்துக் கொண்டுதான் தெலுங்கானா பகுதியில் சில விசேஷ சலுகைகள் கொடுத்து இருக்கிறார்கள். இங்கே நாம் ஒன்றாக இருந்த போது, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பெரும் பகுதி, கேரளாவின் பெரும் பகுதி, கர்நாடகத்தின் பகுதி நம்மோடு சேர்ந்து இருந்த நேரத்தில், பட்ஜெட் சமர்ப்பிக்கப்படுகிறபோது அந்த பட்ஜெட்டை சமர்ப்பணம் செய்யவிடாமல் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் சொன்னார்கள். ராயலசீமா பகுதி பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. ராயலசீமா பகுதி இந்த மாகாணத்தில் இருக்கிறது. அதைப்பற்றிக் குறிப்பிடாததால் இந்த பட்ஜெட்டை எதிர்க்கிறேன் என்று கிளப்பப்பட்டு, அதற்கு ரூலிங் கொடுக்கப்பட்டிருக்கிறது. ரிகார்ட்ஸ் எடுத்துப் பார்த்தால் தெரியும்.



நம்முடைய மாநிலத்தைப் பொறுத்து இப்படி பின் தங்கிய பகுதிகள் ஏதோ ஒரு காரணத்தால் கவனிக்கப்படாது இருக்கின்றன. சில பகுதிகள் விசேஷமாக கவனிக்கப்பட்டு இருக்கின்றன. அவ்வளவு ரத்தம் சிந்தி இவ்வளவு கஷ்டம் இவ்வளவு நஷ்டம் ஏற்பட்ட பிறகு இந்தக் காரியம் செய்யப்பட்டிருக்கிறது. கடைசியில் 'குட் சென்ஸ் பிரிவேயில்ட்'. நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் அரசியல் வாதிகள், அறிவாளிகள் ஆகியோருக்கு வேறு எண்ணம் இருப்பதாக நினைக்கவில்லை. அவர்கள் திறமை வேறு விதத்தில் போய்விடாமல் இருக்க வேண்டும்.

நாட்டில் சில 'டென்டென்ஸிஸ' இருக்கின்றன. அது என்னவென்றால் tendencies, disruptionist tendencies. I will call these tendencies, 'disruptionist tendencies'

அது எப்படி கிளப்ப முடியும் என்றால், ஜனநாயகத்தின் பெயரால், மதத்தின் பெயரால், மொழியின் பெயரால், சில ஜாதிகளின் பெயரால் கிளப்பலாம். இதிலே இரண்டு விதம். ஒன்று ஜாதிச் சண்டை இழுப்பது. ஜாதியின் பெயரால் மதத்தின் பெயரால் கட்சி இருக்கக் கூடாது என்பது—பெரியாரின் கொள்கை.

இன்றைக்கு மதச் சார்பில்லை என்று சொல்லிவிட்டு, ஒவ்வொரு மதத்தையும் வளர்வதற்கு வழிகோலிவிட்டு மதத்திற்கு மதம் சமரசம் செய்து ஒவ்வொரு மதமும் வளரவேண்டுமென்று செயல்படுகிறது. இது அபாயகரமாக உருவெடுத்து விடக்கூடும். இதைப் பக்குவமாகக் கவனிக்கவேண்டும். ஏதோ ஆந்திர மாநிலத்தில் நடந்தது என்று இல்லாமல் நாடு முழுவதும் உறுப்படியான நிலையில் இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது. இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

நான் முன்னால் சொன்னபடி, இந்தக் கொள்கைக்கு ஆளும் கட்சி ஆதரவு தரவேண்டுமென்ற அவசியம் ஏன் ஏற்பட்டது? அவர்கள் கொள்கைபடி இது சரிதானா என்பதை பதில் சொல்லும் நேரத்தில் அமைச்சர் சொல்ல வேண்டும்.

இந்த அரசியல் சட்டத் திருத்தத்தை மாநிலங்கள் ஆதரிக்க அனுப்ப வேண்டுமென்ற முறையில் இது செய்யப்படுகிறதா அல்லது ஒரே பார்வையாக செய்யப்படுகிறதா என்று சொன்னால் நன்றாக இருக்கும் என்று கூறி எங்கள் கட்சியின் சார்பாக இதை ஆதரித்து என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** சார், ஒரு கிளாரிபிகேஷன். தலைவரவர்களே, அவர்கள் பேசும்போது பல கருத்துக்களைச் சொன்னார்கள். அதிலே ஒரு கருத்து "சன்ஸ் ஆப் தி சாயில்" பாலிசியை நான் எதிர்க்கிறேன் என்று முறையில் சொன்னார்கள். இன்றைய தினம் அவர்கள் ஆளும் காங்கிரசை ஒரு பக்கத்திலே ஆதரித்துக்கொண்டு போகிறார்கள். ஆளும் காங்கிரஸ் பல மாநிலங்களில் மகாராஷ்டிரா, ஹரியானா போன்ற இடங்களில் ஆட்சி பீடத்தில் இருக்கிறது. நேற்றைக்கு ஆந்திரா தொழில் அமைச்சர் அவர்கள் நிருபர்களைச் சந்திக்கும்போது சொல்லியிருக்கிறார்கள் அது ஆந்திர மாநிலத்தின் பரிசிலனையில் கொள்கை அளவில் இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி இந்தியாவில் பல மாநிலங்களில் மிகத் தீவிரமாக அந்தந்த மாநிலங்களில் உள்ளவர்களை அந்தந்த மாநிலங்களில் வேலைக்கமர்த்துவது என்று வைத்து இருக்கிறார்கள். இதற்கு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் என்ன கூறுகிறார் என்பதை மாண்புமிகு தலைவரவர்களே, உங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பொதுவாக எதிர்ப்பதாகத்தான் குறிப்பிட்டேன். இந்த 'சன்ஸ் ஆப் தி சாயில்' பற்றி கேரள சட்ட மன்றத்தில் கேட்டபோது, கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவர், கேரள முதலமைச்சர் அச்சுதமேனன் "இந்த நாட்டின் ஒற்றுமையைக் குலைத்துவிடும்" என்று வெளிப்படையாக விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள்.

ஒரு சமயத்தில் இந்த 'சன்ஸ் ஆப் தி சாயில்' பற்றி லெனினிடம் கேட்டார்கள். அப்போது சொன்னார், தொழில்படி பிரித்தால், அது பலவித நிலைகளுக்குக் கொண்டு போய்விடும். பிறகு ஒரு நாடு என்று பிரித்து, ஒரு ஊர் என்று பிரித்து, ஒரு தெரு என்று கடைசியில் பிரிக்கிற நிலைமைக்குக் கொண்டு போய்விடும். தொழில் வளராது என்று சொன்னார்கள். If it is extended it may go to an absured limit. ஆனால், அந்தத் தன்மைதான் அதிகமாக வளர்ந்து வந்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் காங்கிரஸ் கட்சி ஏதோ ஏற்றுக் கொண்டு அதை அமல் படுத்துவது போல் காரியம் செய்வதாகச் சொன்னார்கள். கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஏதோ ஒரு மாநிலத்தில் மிக அதிகமாக வேலையில்லாப் பிரச்சினை இருந்தபோது வங்காளத்தில் அங்கே சொன்னார்களே தவிர அந்த எண்ணம் நிறைவேற்றப்படக் கூட இல்லை.



**திரு. நா. வீராசாமி:** அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் லட்சுமண தாஸ், ஆந்திராவில் தொழில் அமைச்சராக இருப்பவர் சென்னைக்கு வந்த நேரத்தில் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி கொடுத்து இருக்கிறார்கள். வெளிப்படையாகவே சொல்லி இருக்கிறார்கள். ஆந்திரா மாநிலத்தில், அந்த அரசாங்கத்தில், அந்தக் கொள்கை பரிசிலனையில் இருக்கிறது. 500 ரூபாய்க்கு கீழே இருக்கும் அந்தப் பதவிகளில் ஆந்திராவில் வசிப்பவர்களே இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும், கட்சி வேறுபாடு இல்லாமல் அந்த உணர்வு கொண்டு இருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் பக்தவத்சலம் போன்றவர்கள் கூட தமிழ்நாட்டில் எதிர்த்து இருக்கிறார்கள் ஆந்திராவில் இருக்கும் அரசு மாத்திரம் இன்னும் அதை எதிர்க்கவில்லையே என்ன காரணம் என்று கேட்டேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** அது தவறு என்பது என்னுடைய கருத்து.

* **திரு. எம். ஏ. லத்தீப்:** பேரவைத் தலைவரவர்களே, அவையின் ஒப்புதலுக்காக பாராளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டு இருக்கும் இந்தச் சட்டத் திருத்தத்தில் என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்று இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பல கருத்துக்களை, பல பிரச்னைகளை அன்றாடம் பேசிக் கொண்டிருக்கும் பிரச்னை பற்றி எடுத்துச் சொன்னார்கள்.

ஆந்திர தேசம் நம்முடைய அண்டை மாநிலம். ஆகையால் அங்கே இருக்கின்ற மக்களுக்கு சில சௌகர்யங்கள் செய்யும்போது அவர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் திட்டப்படிதான் இந்த 6 அம்ச திட்டத்தை ஏற்றுக்கொண்டு இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

1953-ம் ஆண்டு ஆந்திரப் பிரதேசம் பிரிக்கப்பட்டது. அன்றைக்கு ஆந்திரப் பிரதேசத்தை ஆந்திரப் பிரதேசம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு மக்கள் ஆத்திரப்பட்டார்கள். அவர்களுடைய கோரிக்கையைப் பெற்ற பிறகு அவர்களுடைய ஆத்திரம் அடங்கும் வரையில் நிலைமை மாறி நல்ல சூழ்நிலை ஏற்படும் என்று நினைத்து இருந்தார்கள்.

ஆனால் பிறகு 1957-லே வேறு சில பகுதிகள் தெலுங்கானா என்ற பகுதிகள் ஆந்திராவோடு இணைத்து வைக்கிறபோது, ஹைதராபாத்தோடு இணைந்து இருந்த முல்கி சர்வீஸ் ரூல்ஸ் படி சன்ஸ் ஆப் தி சாயில் பிரச்னை எழுந்தது. இங்கே மாண்புமிகு வீராசாமி அவர்கள் அந்த அடிப்படையிலே ஒரு வினா எழுப்பினார்கள். அந்த சர்வீஸ் ரூல்லை ரத்து செய்து 1957-லே ஒரு சட்டத்தை நிறைவேற்றினார்கள்.

இந்தச் சட்டத்தினுடைய இரண்டாம் ஷரத்தினுடைய அடிப்படையில் பப்ளிக் எம்ப்ளாய்மெண்டு ஆக்ட் என்கின்ற சட்டத்தினுடைய அடிப்படையில் இரண்டாவது விதியின் கீழ் முல்கி ரூல்லை ரெப்பீல் செய்தார்கள். ரெப்பீல் செய்த அந்தப் பகுதி செல்லாது. அப்படி ரத்து செய்தது செல்லாது என்ற வகையில் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு வந்ததன் விளைவாக மீண்டும் கிளர்ச்சி வெடித்தது என்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

இதன் வாயிலாக நான் இதை ஆதரிக்கின்றேன் என்று எழுந்திருக்கிறேனா அல்லது எதிர்க்கிறேன் என்று எழுந்திருக்கிறேனா என்று சிலர் இங்கே கேட்கலாம். எந்த அடிப்படையில் ஆதரிக்கிறீர்கள், எந்த அடிப்படையில் இதை எதிர்க்கிறீர்கள் என்று கூட வினாக்களை எழுப்பலாம்.

என்னைப் பொறுத்த வரையில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும், மாநிலச் செம்மையாகச் செயல்படுவதற்கு மாநிலத்தில் இருக்கிற அரசுகள் தங்களுடைய திட்டங்களை தங்களுடைய சட்டங்களை மக்களுடைய வாழ்க்கைக்கு வளம் சேர்க்கின்ற வகையிலே நிறைவேற்றுவதற்கான செம்மையான அதிகாரங்களை, தேவையான அதிகாரங்களைப் பெற்றுத் திகழ வேண்டும் என்ற கொள்கையை நான் வலியுறுத்தக் கூடியவன், அல்லது அதை ஏற்றுக்கொண்டிருப்பவன்.

அதே நேரத்தில் இன்றைக்கு இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. கல்வி என்ற ஒரு துறை இருக்கிறதே, அந்தத் துறையில் மாநில அரசுக்குத்தான் அதிகாரம் இருக்கிறது. ஆனால் அதிலே தலையிட்டு, குறுக்கிட்டு செய்யக் கூடிய, மாநில அரசின் அதிகாரத்தை தன்னகப்படுத்தக்கூடிய வகையில் ஹைதராபாத்தில் ஒரு புதிய பல்கலைக் கழகத்தை ஏற்படுத்துவதற்கு இந்தத் திருத்த மசோதா வகை செய்கிறபொழுது, அது இந்த அவையினுடைய ஒப்புதலுக்கு வருகிறது, அதற்கு ஆதரவு தரவேண்டும் என்று இங்கேயிருக்கிற மாண்புமிகு சபை முன்னவர் தெரிவித்தார்கள். அது எந்த வகையில் நியாயம், என்ற கேள்வியையும் கேட்டார்கள். அதுவும் ஒரு நல்ல கேள்வி, அதை நான் கூட ஏற்றுக்கொள்கிறேன். நாமெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய கேள்வி.



ஆனால் இந்தத் திருத்தச் சட்டம் எதனுடைய விளைவு என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். புறக்கணிக்கப்படுகிற ஒரு கட்டத்தில் இருக்கிற மக்கள் தாங்கள் விரும்புகின்ற வளர்ச்சியைப் பெறவில்லையானால் அதற்கு ஆட்சியிலிருப்பவர்கள் மத்தியில் இருப்பவர்கள் இடைஞ்சலாக இருப்பார்களேயானால், அவர்களுடைய உணர்ச்சிக்கு ஏற்ற வகையில் திட்டங்களைக் கொடுக்காமல், காலத்திற்கு காலம், நேரத்திற்கு நேரம் ஃபார்முலாக்களைக் கொடுத்து, 5 அம்ச திட்டம், 6 அம்ச திட்டம் என்றெல்லாம் அவர்களை வைத்து விளையாடிக் கொண்டிருந்தால், அதன் முடிவு என்னவாக இருக்கும் என்ற அளவுக்குத்தான் இந்தத் தீர்மானத்தை நாம் சிந்தித்துப் பார்க்கக்கூடியவர்களாக இருக்கிறோம்.

முல்கி ரூல்லை எடுத்துவிட்டு, அந்த இடத்தில் அட்மினிஸ்ட்ரேடிவ் ட்ரிபியூனலைப் போட்டு, அந்த ட்ரிபியூனலுடைய முடிவுகள்தான் கடைசியாக இருக்கும். அப்பாயிண்ட்மெண்டைப் பொறுத்த வரையில், அதனுடைய முடிவுகளை சுப்ரீம் கோர்ட் தவிர வேறு எந்த கோர்ட்டிலும் சாலெஞ்ச் செய்ய முடியாது, சவால் விடுவதற்கு அங்கே வழிவகை செய்யப்படவில்லை. அதே நேரத்தில் கொடுக்கப்படுகிற நியமனங்களெல்லாம் வட்டாரத்தில் இருக்கிற வட்டார உணர்வுகளின் அடிப்படையில், வட்டாரத் தேவைகளின் அடிப்படையில்தான் கொடுக்கப்படும்.

தெலுங்கானாவில் சில பதவிகளைக் கொடுக்க வேண்டுமென்றால், தெலுங்கானாவில் உள்ள மக்களுக்குத் தான் கொடுக்கவேண்டும். ஆந்திரப் பகுதியில் கொடுக்க வேண்டுமென்றால், ஆந்திரர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும். இதிலே ஏதாவது தகராறுகள் வருமேயானால், எந்தத் தகராறும் அட்மினிஸ்ட்ரேடிவ் டிரிபியூனலுக்குத்தான் அனுப்ப வேண்டும். தெலுங்கர்களை எந்த வகையில் உயர்த்த வேண்டும். தெலுங்கர்களுக்கு என்னென்ன முன்னேற்றங்கள் கண்டிட வேண்டும், ஆந்திரப் பகுதியிலே என்னென்ன முன்னேற்றங்கள் கண்டிட வேண்டும், இதற்கு திட்டச் செலவுகளை திட்ட ஒதுக்கீடுகள் செய்யும் பொழுது எந்த வகையில் திட்ட ஒதுக்கீடு செய்யவேண்டும், அவர்களுக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும், இவர்களுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதையெல்லாம் வரையறுத்திருக்கிறார்கள். தகராறு வந்தால் அட்மினிஸ்ட்ரேடிவ் ட்ரிபியூனலுக்கு அனுப்ப வேண்டும் என்ற அளவுக்கு சட்ட திட்டங்களை இயற்றி இருக்க வேண்டும். அதிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன? ஒரு வட்டாரத்தில், ஒரு பிரதேசத்தில் ஒரு மாநிலத்தில் இருக்கிற மக்கள், அவர்களுடைய முன்னேற்றம் தடைப்படுகின்ற வகையில் அரசாங்கச் சட்டங்களும், அரசாங்கக் குறுக்கீடுகளும் மத்திய அரசிலிருந்தும்

மற்ற இடங்களிலிருந்தும் வருமானால், மக்கள் கிளர்ச்சி செய்யும்பொழுது அரசியல் சட்டம் தூள் தூளாக்கப்படும் என்பதுதான் இந்த அரசியல் சட்ட திருத்தத்தில் நமக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

பல்கலைக் கழகத்தை மத்திய அரசு ஏற்படுத்தக்கூடிய கட்டாயத்துக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. அது மாநில அரசின் அதிகாரங்களில் தலையிடக்கூடிய ஒன்றாக இருக்கிறது என்பதை கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டாலும், எந்தக் கட்டாயத்தில் இந்த அரசியல் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாநில சுயாட்சி வேண்டும் என்று கேட்கிறவர்களும், அதை மறுக்கிறவர்களும் இதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆந்திராவில் இருக்கக்கூடிய மக்கள் ஒரே மொழியைப் பேசக்கூடியவர்களாக இருக்கிறார்கள். தெலுங்கானாப் பகுதியில் இருப்பவர்கள் பேசும் மொழியும் தெலுங்குதான், ஆந்திரப் பகுதியில் இருக்கும் மக்கள் பேசும் மொழியும் தெலுங்குதான். ஆனால் இரண்டு பகுதியைச் சார்ந்த மக்களும் தங்களுடைய பகுதியில் வளர்ச்சி ஏற்படவில்லை. தங்களுடைய பகுதியில் வளர்ச்சி ஏற்படவில்லை என்ற மனத் தாங்கல் காரணமாக போராட்டம் வெடித்து அதனுடைய விளைவு எவ்வளவு பயங்கரமாக இருக்கிறது என்பதை இந்தத் திருத்தம் உணர்த்துவதாகும்.

அதே நேரத்தில் ஒரு மாநிலத்தில் ஒரே மொழி பேசுகின்ற தமிழர்கள், ஆந்திரர்கள், மலையாளிகள், கன்னடியர்கள், இந்துஸ்தானியர்கள், மராட்டியர்கள் என்று நாம் பிரித்துப் பார்க்கின்றபொழுது மக்களிடையே இவ்வளவு வேற்றுமை, மத்திய அரசு அநீதி இழைக்கின்ற நிலை எழுகிறது என்றால், மாநிலங்களுக்கு மாநிலம் அநீதிகள் இழைக்கப்படுகின்றபொழுது, எவ்வளவு தூரம் மக்களுடைய உணர்ச்சிகள் எழுப்பப்படும், தூண்டப்படும் என்பதை நாம் இந்த நேரத்தில் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதனுடைய கட்டாயத்தினுடைய அடிப்படையில் ஒரே மாநிலத்தில் இரண்டு பகுதிகளாக இருக்கிற ஒரே மொழி தெலுங்கு பேசுகின்ற மக்களுடைய தகராறுகளைத் தீர்ப்பதற்கு மத்திய அரசு அட்மினிஸ்ட்ரேடிவ் ட்ரிபியூனல் ஏற்படுத்தி, பல்கலைக் கழகம், வட்டார வளர்ச்சி மன்றங்கள் ஏற்படுத்தி, அங்கே ஏற்படுகின்ற தகராறுகளைத் தீர்ப்பதற்கு அங்கே இருக்கிற கோர்ட்டினுடைய அதிகாரங்களைப் பிடுங்குகின்ற வகையிலே இந்த அரசியல் சட்டத் திருத்தம், சில ஷரத்துக்களையே நீக்குகின்ற அளவுக்கு கொண்டுவரக்கூடிய அளவுக்குக் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது என்றால், மக்களுடைய உணர்ச்சிகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும், அந்த உணர்ச்சியின் விளைவாகத்தான் இந்தத்



திருத்த மசோதா கொண்டு வரவேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகியிருக்கிறார்கள், அந்தக் கட்டாயத்தினுடைய உணர்வை இந்தத் திருத்தம் உணர்த்துவதன் காரணமாக இந்த அரசியல் சட்ட திருத்தத்தை நாங்கள் கொள்கை அளவிலே ஆதரிக்கிறோம் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம்முடைய திரு. மாரிமுத்து அவர்கள் சில கருத்துக்களை இங்கே சொன்னார்கள். அவர்கள் செய்தார்கள், இவர்கள் செய்தார்கள் என்றெல்லாம் சில கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கெல்லாம் யார் காரணம் என்பதைப்பற்றி தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அது இந்தியிலே இருக்கிறது. அதைப் படித்துவிட்டு பிறகு விளக்கம் சொல்கிறேன். 'ஆப்கோ . . .

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆன் ஏ பாயிண்ட் ஆப் ஆர்டர், இங்கே இந்தியைப் படிக்கலாமா? நாம் தான் அதை ஒத்துக்கொள்ளவில்லையே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற மொழிகளிலே இந்தி ஒன்று.

திரு. எம். ஏ. லத்தீப்: இந்த அவையிலே நான்கு மொழிகள் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றன. திராவிட மொழிகள், இந்துஸ்தானி என்று சொல்லக்கூடிய மொழி . . .

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அரசாங்கம் அதை ஒத்துக்கொள்ளவில்லை. அதை இங்கே படிக்கலாமா?

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இரு மொழிக் கொள்கைக்கு விரோதமாக இருக்கிறதே. இங்கே தெலுங்கில் கூட பேசுவதற்கு அனுமதிக்கவில்லை. ஆங்கிலத்தில் பேசுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்த அவையில் திரு. வெங்கடசாமி அவர்கள் பல முறை தெலுங்கில் பேசியிருக்கிறார். தெலுங்கில் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார். தெலுங்கில் பேசுவதற்கு அனுமதிக்கவில்லை என்று சொல்ல முடியாது. நம்முடைய விதியில்கூட. தெலுங்கில் பேசுவதற்கு இடம் இருக்கிறது

திரு. ஜே. ஜேம்ஸ்: மும்மொழித் திட்டத்தை எதிர்க்கிறோம். இருமொழித் திட்டம் வைத்திருக்கிறோம் என்று அரசாங்கம் சொல்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசாங்க மொழிக் கொள்கை வேறு. மன்றம் ஏற்றுக்கொண்டிருக்கிற விதிமுறைகள் வேறு அரசாங்கக் கொள்கைக்கு நேர் மாறான கருத்து என்பதற்காக பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியாது. சட்டமன்ற விதி முறையில் இந்தியில் பேசுவதற்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. நா. வீராசாமி: அவர் இந்தியில் படித்தால் பொன்னப்ப நாடார் கட்சியினர்களுக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்ற விதிமுறையில் சொல்லப்பட்டிருப்பது இது தான்—

'The business of the Assembly shall be transacted in English or in Tamil, provided that any member may address the Assembly in any recognized language of the State or in Hindi, and provided further that the Speaker may permit any member who cannot adequately express himself in any of the aforesaid languages to address the Assembly in his mother-tongue.

For purposes of this rule, 'recognized language' shall mean any one of the following languages, namely, Telugu, Malayalam, Kannada or Hindustani'.

இந்த மொழிகளல்லாது வேறு ஒரு மொழியில் பேசுவதாக நினைத்தாலும் கூட பேரவைத் தலைவர் அனுமதி கொடுக்கலாம். இதிலே எந்தவிதமான பாயிண்ட் ஆப் ஆர்டரும் இல்லை. இந்தியை ஏற்றுக்கொண்டிருக்கிற உறுப்பினர்களே இதை மறுக்கிறார்களே!

திரு. எம். ஏ. லத்தீப்: இந்தியைப் பற்றி சொன்னார்கள். நாங்கள் எந்த மொழிக்கும் விரோதிகள் அல்ல. ஆனால் மக்களுடைய விருப்பத்துக்கு விரோதமாக, எந்த மொழி திணிக்கப்பட்டாலும், அதை உயிர் இருக்கும் வரையில் எதிர்ப்போம்.

தமிழ் நாட்டு மக்களுடைய விருப்பத்துக்கு விரோதமாக எந்த மொழியையும் யாரும் இங்கே திணிக்க முயல்வார்களேயானால், தமிழ் நாட்டில் இருக்கிற 4½ கோடி மக்களுடைய பிணங்களின் மீது நடந்து தான் திணிக்க முடியும் என்ற அளவுக்கு நான் சொல்கிறேனே தவிர, வேறு எந்த மொழியையும் நான் எதிர்க்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, நீங்கள் ஸப்ஜெக்ட்டுக்கு வாருங்கள்.

(பிற்பகல் 1.00)



திரு. ஏ. ஆர். மாரிமுத்து: யாரும் திணிக்கவில்லை; அவர்கள்தான் இப்போது திணிக்கிறார்கள். (சிரிப்பு).

திரு. எம். ஏ. லத்தீப்: அதைப் படித்துவிட்டு, விளக்கத்தைச் சொல்லி விடலாம் என்று நினைத்தேன். இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களுக்குக்கூட கொஞ்சம் தெரியும். அதனால் நான் ஒன்றும் தவறாகச் சொல்லிவிட முடியாது. படிக்க வேண்டாமென்றால் படிக்கவில்லை. மகாராஷ்டிரத்திலே சேதுவக்கர் அந்த அளவுக்குச் சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு கலகங்கள் ஆந்திராவில் ஏற்பட்டிருக்கின்றன. ஒரே மொழி பேசுகின்ற மக்களிடையே இத்தகைய ஒரு வெறுப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது; ஒரு விரோத மனப்பான்மை வளர்ந்திருக்கிறது; விரோதிகளாக இருக்கிறார்கள். சண்டை சச்சரவுகள், சிக்கல்கள், குழப்பங்கள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. அரசியல் சட்டத்தையே திருத்த வேண்டிய அளவுக்கு நிலைமை வளர்ந்திருக்கிறது. அதற்கு யார் காரணம்? இந்த நாட்டை ஆண்டுகொண்டிருக்கின்ற மத்திய அரசாங்கம்தான் அதற்குக் காரணம். நாளுக்கு நாள் அவர்கள் கையாளுகின்ற முறைகேடான கொள்கைகள்தான் அதற்குக் காரணம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் சொல்லி எச்சரிக்கை விட்டிருக்கிறார்கள்.

மாநிலங்களுக்குச் சிறப்பான அதிகாரங்கள் வேண்டும். அரசியல் சட்டத்திலே வரையறை செய்யப்பட்டிருக்கிறபடி, அது முறையாகச் செயல்படுத்தப்படவேண்டும். இருபது ஆண்டு காலமாக மத்தியிலும் மாநிலங்களிலும் ஒரே கட்சி ஆட்சி செய்துகொண்டிருந்தால் மாநிலங்களுக்கு என்ன அதிகாரம், மத்திய சர்க்காருக்கு என்ன அதிகாரம் என்ற கேள்வி எழவில்லை; யாரும் எழுப்பவில்லை; மத்தியிலே ஆண்டுகொண்டிருந்த கட்சியே மாநிலங்களிலும் ஆண்டுகொண்டிருந்ததால், மத்தியிலுள்ளவர்கள் நிர்வாக முறைகளை வகுத்துக் கொண்டிருந்ததால் எந்தவிதமான சிக்கலும் ஏற்படவில்லை.

ஆனால் இன்றைக்கு பல்வேறு கட்சிகள் பல்வேறு மாநிலங்களிலே ஆட்சி செய்வதால் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால், அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரம் முழுமையாகச் செயல்படுத்தப்படுகின்ற வகையிலே திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த முற்படும்போது ஏற்படுகின்ற சிக்கல்களுக்குப் பரிகாரம் காணும் வகையிலே இன்று இந்த அரசியல் சட்டத் திருத்தம் வந்திருக்கிறது. இது வெறும் திருத்தம் தான். ஆனால் மத்திய அரசின் போக்கு மாறவில்லை என்றால், மோசமான விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்குமானால், அரசியல் சட்டத்தையே மாற்றியமைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்பதை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 ஏப்ரல் 11

இன்றைக்கு இருக்கின்ற கொள்கை எப்படி இருக்கிறது? குழப்பங்கள் ஏற்பட்டால்தான், சச்சரவுகள் ஏற்பட்டால்தான், போராட்டம் நடந்தால்தான், அடித்தால்தான் அடங்குவோம் என்ற முறையிலே மத்திய அரசின் கொள்கை இருக்கிறது. அதை எதிர்க்கின்ற வகையிலே இந்தத் திருத்தத்தை ஆதரிக்கிறோம் என்று சொல்லி அமர்கிறேன்.

DR. H. V. HANDE: Honourable Speaker, Sir, in addition to what has already been spoken on this Amendment. I would like to offer a few specific remarks.

Firstly, I do not subscribe to the stand taken by our Congress Party Leader here because I personally feel that this Amendment itself has been brought forward due to certain unfortunate happenings in the State of Andhra Pradesh, for which the direct responsibility rests on the Congress Governments at the Centre and in the State of Andhra Pradesh. If they had acted more judiciously and in a more impartial manner and in a more pragmatic manner, the entire episode that has happened in Andhra Pradesh in the past three or four years could have been stopped.

This aspect of the matter has to be properly examined.

For instance, the very Andhra question, Telengna problem, Mulky Rules, Six-Point Formula and other things had emanated originally some years ago. The States Reorganisation Committee consisting of different party leaders was headed by Thiru Fazle Ali went into the matter and it was also brought before the Parliament and the late lamented Prime Minister, Shri Jawaharlal Nehru had assured the House at that time that even after five years if the people of Telengana wanted the Telengana State, they were prepared to give it. If only we look into the Parliamentary Debates, we will find these things. Therefore the seed for bifurcation of the State of Andhra Pradesh was sown 18 years ago.

Then I come to the 'sons of the soil' policy. The Honourable Member, Thiru Veeraswami has asked a valid question.

Though we may differ from the D.M.K. on other matters, but on this particular matter, we agree with them. The main cause of the 'sons of the soil' problem is the Congress Party.



1974 ஏப்ரல் 11]

How can we deny it? The Congress Party in Andhra Pradesh, the Congress Party in West Bengal, the Congress Party in Uttar Pradesh, the Congress Party in Maharashtra and the Congress Party in Madhya Pradesh has *ad nauseum* advocated this theory openly and deliberaely both on the floor of the House and outside. But I can appreciate the stand of the Honourable Member, Thiru Marimuthu. I know personally he is against it . . .

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: எங்கெங்கே பேசப்பட்டது என்று சொல்கிறார்கள். எங்கே வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் அதன் முடிவு என்ன என்பதுதான் பிரச்னை. எத்தனையோ கருத்துக்கள் பேசப்பட்டிருக்கின்றன. எப்படியெல்லாம் பேசப்பட்டது என்பது தெரியும். அதையெல்லாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. முடிவு என்ன என்பதைத்தான் பார்க்க வேண்டும்.

திரு. கோவை செழியன்: சார், ஒரு இன்ஃபர்மேஷன். பிரதம அமைச்சர் இந்திராகாந்தி அவர்கள் பீகார் சுரங்கத் தொழிலாளர்கள் கூட்டத்தில் பேசும்போது 'சன்ஸ் ஆப் தி சாயில் தியரியை' ஒத்துக்கொண்டு பேசியிருக்கிறார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அது சரியான செய்தி அல்ல; அந்த மாதிரி எதுவும் கிடையாது.

திரு. எம். ஏ. லத்தீப்: இப்போது மகாராஷ்டிர மாநிலத்திலே சர்க்கார் உத்தியோகத்தில் 80 சதவிகிதம் அந்த மாநிலத்தில் உள்ளவர்களுக்கே கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆளுகின்ற அந்த மாநிலத்தில் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அப்பேர்ப்பட்ட உத்தரவை இந்த அரசு போட்டால் ஏற்றுக்கொள்வீர்களா? இல்லை என்றால் 'சன்ஸ் ஆப் தி சாயில் தியரி' எந்த அடிப்படையிலே போடப்பட்டிருக்கிறது என்பதை விளக்குவீர்களா?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, நான் சொல்வது 'சன்ஸ் ஆப் தி சாயில்' என்பதை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. அது பார் என்று சொல்வதில் உள்நாட்டுக்குள்ளே ஒரு கலகம் வந்து. ஒருவருக்கொருவர் அடித்துக்கொள்வார்கள். நல்ல நிலைமையை அது ஒருக்காலும் ஏற்படுத்தாது.

அவர்கள் சொல்வதுமாதிரி பிரதம அமைச்சர் கூறியதாக நான் எங்கும் பார்க்கவில்லை. அப்பகுதி மக்களுக்கு ஓரளவு 'பிரிஃபரன்ஸ்' கொடுக்கலாம் என்ற முறையிலே சொல்லி இருக்கலாம். சன்ஸ் ஆப் தி சாயில் தியரியை ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.

DR. H. V. HANDE: So far as the sons of the soil theory is concerned, I am very definite that we are against it. At the same time it is our duty to see that the counterparts in the other States also should oppose it. Let us not try to work at cross purposes. Both Mr. Marimuthu and myself are interested in the welfare of the State and there is no doubt about it. But in the State of Maharashtra, the Chief Minister Thiru V. P. Naik has supported it. This virus was started there and spread to several parts of the country. This theory must be discouraged.

Sir, what is this amendment? It is based on the 'sons of the soil' theory. Tremendous benefits have been given to Telengana and the dice is heavily loaded in favour of Telengana. If you see the provisions of the amendment, you will see that it is based on the sons of the soil theory. Why was this Jai Andhra Movement started? It was started because of the promulgation of the Mulky Rules. What are the Mulky Rules? The Mulky Rules are based on the sons of the soil theory.

On what basis was this 'Jai Andhra' movement started? Who piloted it? At that time of course Swatantra leader Latchanna was there. But who spearheaded and piloted it? It was the Congress Party and the Deputy Chief Minister at that time. Where is he now? He has been taken back to the Congress. Along with him some others are members of the Cabinet. I share Mr. Marimuthu's view that this has been a tragic thing . . .

THIRU R. PONNAPPA NADAR: Most of the arguments could be advanced in Parliament. Now we shall confine ourselves to the Bill.

DR H. V. HANDE: I am shocked at Mr. Ponnappa Nadar's plea. This is a Constitutional Amendment which is coming before this House, and not any piece of legislation. This is the only opportunity we have to voice our view points. It is a Constitutional amendment which the State Legislatures have to ratify. When it is coming up before us, it is our duty, as members, to give our views. That is quite clear.



What I say is the whole thing had been spearheaded by the Congress Party of Andhra Pradesh. The whole 'Jai Andhra' movement was fanned and a holocost was created by the Congress Party. But suddenly after some months, the same people said " we will join the Cabinet ". They started the movement. They fanned it. They were responsible for all the bloodshed. Several murders had taken place as pointed out by Thiru K. T. K. Tangamani.

I demand on the floor of this House, who has been responsible for the blood bath? It is nobody except the party in power, viz., Congress Party. Now suddenly they say " we do not know anything ". It is because they have joined the Cabinet. Mr. Latchanna did not join the Cabinet. Mr. Rathnasabapathy lost his representation in Council. That is a different point.

What is this Mulki Rule? Government had no guts to say what it was. It is said that the Mulki Rule is there to remove backwardness. How do you remove backwardness? Ramanathapuram in Tamil Nadu is backward district. You pour in money there, start some development work and make it prosperous. That is the only remedial measure.

The whole economy of Andhra Pradesh had been upset by this Mulki Rule. What I say is that this Bill is a dubious method to cover the 'sons of soil' theory; That should be completely *rooted* out.

In 1957, a special law known as Public Employment (requirement of residence) Act was passed by Parliament. By section 2 of that Act, Mulki Rule was repealed. After that law was brought in to the statute book, a case went to Supreme Court. Supreme Court held in October 1972 that Section 2 of the Public Employment (requirement of residence) Act was *ultra vires*.

[Dr. H. V. Hande] [1974 ஏப்ரல் 11

My submission is if only Parliament had been seized of the matter, if only the Ruling Congress people had acted in time by bringing in this measure before the Supreme Court struck it down, they could have avoided much of the blood-shed.

I ask, Sir, is it very difficult for the Law Department of the Centre to anticipate that the Supreme Court would strike down Section 2. We all knew it. Everyone knew that the Supreme Court would strike it down. But the Ruling Party people did not act in time.

After much of the blood-shed, after the Supreme Court struck it down, this thing has been brought in. If only they had acted in time, they could have avoided the blood-shed. But they kept mum at the time when they had to act. They failed in their duty. That is my charge.

Another thing, Sir. I shall finish in a minute or two.

On 18th January, Andhra Pradesh was brought under President's Rule. When the issue came in Parliament, every Opposition member pointed out what they feared. But the Ruling Party did not pay heed to the views of the Opposition. With its brutal majority, they thought nothing would happen. But what happened? Hundreds of people died. After the blood-shed, this has come up.

If only timely action had been taken, blood-shed could have been avoided. But what I say is, don't sow seeds of disintegration. On behalf of my party and individually, I am not for disintegration. But by this 'sons of soil theory' you are throwing seeds of disintegration. That should be fought and resisted.

I know what the Honourable Leader of the House is also feeling. When the Bill came in Parliament, I did not know what exactly was the stand taken by the D.M.K. party. That is not relevant here. Everyone would say that the Centre failed in its duty to act in time and avoid the blood-shed. What I say is it is the duty of Central Government to tell the States not to embark on this 'sons of soil theory. Instead of doing that, they should not fan that idea if some States do have that idea. This sons of soil theory should be rooted out. That is my submission, Sir. This is what I want to submit.

---



1974 ஏப்ரல் 11]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்திலே ஓரிரு கருத்துக்களை மட்டும் சுருக்கமாகக் கூறி அமைந்திட விரும்புகிறேன்.

அரசியல் அமைப்புச் சட்டம் 371-வது ஷரத்திலே செய்யப்படுகிற திருத்தம் பற்றி இங்கே எல்லோரும் விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆந்திர மாநிலம் எப்படி அமைந்தது என்கிற வரலாறுகளை எல்லாம் இந்த மன்றத்தில் எடுத்துக் கூறினார்கள். பொட்டி ஸ்ரீராமுலு 1953 இல் செய்த பெரும் தியாகத்தினால் ஆந்திர மாநிலம் உருவாயிற்று என்பது நமக்குத் தெரியும்.

ஆந்திர மாநிலத்தை விசால ஆந்திராவாக அமைத்திட 1956-ல் முயற்சி செய்தார்கள். அதில் ஒன்று கோஸ்டல் ஆந்திரா—இன்னொன்று தெலுங்கானா. தெலுங்கானா பகுதி பிற்பட்ட பகுதியாக இருந்த காரணத்தினால் விசேஷ சட்டம், சலுகைகள் எல்லாம் அப்போது அரசாங்கத்தில் இருந்து கொடுக்கப் பட்டன.

இந்த முல்கி விதிகள் செல்லுமா செல்லாதா, இவர்களுக்கு அரசாங்கத்தில் உத்தியோகம் எத்தனை சதவிகிதம் கொடுக்கப்படவேண்டும் என்பதை எல்லாம் உச்ச நீதிமன்றம் ஆராய்ந்து, அது கொடுத்த தீர்ப்பின் அடிப்படையில் ஆந்திர மாநிலத்தில் ஏற்பட்ட கொந்தளிப்பை எல்லாம் நான் கூற முற்பட வில்லை.

பொதுவாக அங்கிருந்தவர்கள் எல்லாம் கிளர்ச்சிகளைச் செய்தார்கள்— ஒரு சிலரைத் தவிர, இந்திய கம்யூனிஸ்டு கட்சி மட்டும் அதை ஆதரிக்கவில்லை, அதேமாதிரி ஒருசில காங்கிரஸ்காரர்களும் ஆதரிக்கவில்லை.

நாட்டினைத் துண்டாடி ஆந்திராவைப் பிரிக்கக் கூடாது, அதிலும் சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்று பலரும் முயன்றார்கள். தேசத்திலே இன்று பல பிரச்னைகள் இருக்கின்றன. தேசத்திலே இருக்கிற பல பிரச்னைகளை தீர்க்க வேண்டுமென்றால், சட்ட பூர்வமான முறையிலே கிளர்ச்சிகளை உருவாக்கவேண்டுமேயொழிய கிளர்ச்சியின் அடிப்படையிலே எல்லாவற்றையும் தீர்க்கவேண்டுமென்று முயற்சித்தால், அது நிச்சயமாக முடியாது என்பதற்கு ஆந்திர மாநிலக் கிளர்ச்சி நல்ல எடுத்துக் காட்டு என்று நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆந்திரக் கிளர்ச்சியில் எத்தனை பேர்களைக் கொன்றார்கள்? எவ்வளவு பொதுச் சொத்துக்குச் சேதம் ஏற்பட்டது என்ற விவரங்களைப் பத்திரிகை களிலே பார்த்தோம். ஆந்திராவிலே ஆத்திரம்தான் முந்தி இருந்தது என்று

இங்கு பலரும் பேசினார்கள். ஆந்திராவில் நடந்த நிகழ்ச்சிகள் விரும்பத்தக்கவை அல்ல. ஒரு தேசத்திலே, அதிலும் குறிப்பாக ஒரு ராஜ்யத்திலே இருக்கிற பிரச்னைகள் பல்வேறாக இருக்கின்றன. சில பகுதிகள் முற்பட்ட பகுதிகளாக இருக்கின்றன. பல பகுதிகள் பிற்பட்ட பகுதிகளாக இருக்கின்றன. எல்லோரும் சரிசமமாக இருக்கவேண்டும். அந்த நிலைக்கு அரசாங்கம் சில கடமைகளைச் செய்யத் தவறிவிட்டது என்ற காரணத்தினால், ஏற்பட்டதே தவிர, அந்த முல்கி விதிகளைப் பொறுத்தவரையிலே தனிப்பாதுகாப்பு அளிக்கப்பட்டது. அது அரசியல் சட்டத்திற்கு முரண்பட்டதாக இருக்கிறது என்று உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையிலே இந்தக் கிளர்ச்சிகள் எல்லாம் நடந்தன. அதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும்.

நாட்டைத் துண்டாட வேண்டுமா? நாட்டினுடைய ஒற்றுமையைப்பற்றி கவனிக்க வேண்டாமா என்பதைப் பற்றி தேசிய உள்ளம் படைத்தவர்கள், தேசிய எண்ணம் படைத்தவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். 1956-லே மொழிவழி மாநிலங்களாக இந்தியாவைப் பிரிக்க வேண்டுமென்று மொழிவழி மாநிலங்களாக இந்தியாவைப் பிரித்து அமைத்தார்கள். உத்தரப் பிரதேசத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று அதற்கு முன்னதாக ஏற்படுத்திய கமிட்டி இந்த முடிவெல்லாம் கொடுத்திருக்கிறது. நிர்வாகச் சௌகரியத்திற்காக வேண்டி, மிகப் பெரிய மாநிலமாக இருந்த உத்தரப் பிரதேச மாநிலத்தைப் பிரிக்கவேண்டுமென்று கூறினார்கள்.

இப்பொழுது நாட்டிலே பல இடங்களிலே பூசல்கள் ஏற்பட்டிருக்கின்றன. 1956-ல் இருந்ததைவிட இப்பொழுது அதிகமான பூசல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அஸ்ஸாம் பகுதியிலே பல்வேறு கிளர்ச்சிகள் ஏற்பட்டுக்கொண்டிருந்ததை அந்த நிலைமையையெல்லாம், மிஸோரம் என்பதையெல்லாம் பார்க்கிறோம். நாகாலாந்து போன்ற இடங்களிலெல்லாம் நாம் ஜாக்கிரதையாகக் கவனிக்கவேண்டும். இந்தத் தேசத்திலே பிரிவினைச் சக்தியை நாம் பெருக்கக் கூடாது. பிரிவினை எந்தப் பகுதியிலிருந்து வந்தாலும் முறியடிக்கவேண்டும், வன்மையாக முறியடிக்கவேண்டும்.

இன்று நாட்டிலே இந்தப் பிரிவினை கோஷம் வெகுவாக ஏற்பட்டிருக்கிறது. பிரிவினைக் கோஷம் வேறு முறையிலே தமிழ்நாட்டிலே வந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது அந்தப் பிரச்னைப்பற்றிக் கூறவிரும்பவில்லை. இராஜமன்னார் குழு அறிக்கை விவாதத்திலே பேசுகின்ற நேரத்திலே, இந்தப் பிரிவினை எப்படி தலைதூக்குகிறது என்பதுபற்றிப் பேச விரும்புகிறேன்.





இந்தத் தேசத்தினை துண்டாடுவதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம். இந்தத் தேசத்தின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட பல தலைவர்கள், சிறைவாசம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பதற்கு நிச்சயமாக அவர்கள் ஒன்று சேருவார்கள் என்ற கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். கிளர்ச்சிகளைத் தூண்ட நாம் வழிகாட்டிகளாக இருக்கக்கூடாது என்பதை உணர்ந்து இந்தச் சட்டத்திலே இருக்கிற நல்ல அம்சங்களை எல்லாம் நாங்கள் வரவேற்கிறோம்.

ஆந்திராவிலே புதிய யூனிவர்சிட்டியை அமைக்கப்போகிறார்கள், இது மாநிலத்திற்குள்ள அதிகாரத்தைச் சுரண்டுவது அல்லவா என்றெல்லாம் பேசினார்கள். மத்திய அமைச்சர் உமா சங்கர் திக்ஷித் அவர்கள் தெளிவாக விவாதத்திலே பேசி இருக்கிறார்கள், அந்த இராஜ்யத்தின் நன்மைக்காக, ஆந்திரப் பிரதேசத்திலே, ஏழை எளிய மக்களுடைய நன்மைக்காக, அந்தச் சட்டத் திருத்தம் வந்திருக்கிறதே தவிர, வேறல்ல என்று

சமீபத்திலே, டிசம்பர் மாதத்திலே ஓரிரு நாட்கள் அங்கே தங்குவதற்குச் சந்தர்ப்பம் கிட்டியது. அங்குள்ள ஒரு சில அரசியல் தலைவர்களோடு நான் பேசினேன். இது தலைவர்களுடைய கிளர்ச்சியேயொழிய மக்களுடைய கிளர்ச்சி அல்ல. ஆனால், தலைவர்கள் மக்களைத் தூண்டி விடப் பார்த்தார்கள். ஒருசில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் எல்லாம் கட்டு அவிழ்த்துவிட்ட அடக்கு முறையின் காரணமாக வந்தது என்றெல்லாம் கூறினார்கள். யார் குற்றவாளி என்ற விவாதத்திற்குரிய பிரச்னைக்கு நான் புகவில்லை. தோல்விகள் வருகிற நேரத்தில் அரசியலமைப்புச் சட்டப்படி நாம் எல்லோரும் இந்தப் பிரச்னையை ஏற்றுக்கொள்கிறோம்.

எனக்கு முன்னால் பேசிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு விவாதத்தை எடுத்துக் கூறினார்கள். இதை ஆளுங்கட்சியிலே இருக்கிறவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற கருத்தினை அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் மோதல் ஏற்படக் கூடிய முறையிலே இந்த மன்றம் இருப்பது பொருத்தம் அல்ல. அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையிலே இயங்குகின்ற ஓர் உறுப்பாக நாம் இருக்கிற காரணத்தினால், நாம் அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு நம்முடைய விவாதங்களை நடத்திச் செல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அரசியலமைப்புச் சட்டம், மேம்பாடான, நன்மையான தன்மையில் போகவேண்டுமே தவிர, நம்முடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை எல்லாம் அதிகமாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 ஏப்ரல் 11

சன்ஸ் ஆப் தி சாயில் தியரியைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். ... மட்டங்களிலே அது உருவாகிக் கொண்டிருக்கிறது. மகாராஷ்டிராவிலே உருவாகியிருக்கிறது. பிளிட்ஸ் பத்திரிகையிலே இதுபற்றி ஒரு தலையங்கமே எழுதியிருக்கிறார்கள். வங்காளத்திலே. . .

திரு. எம். ஆர். கண்ணன் : சன்ஸ் ஆப் தி சாயில் தியரியில் என்ன தப்பு? அந்த அந்த ஊரிலே இருக்கிறவர்களுக்கு உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதனாலே நாடு எப்படி பிளவுபட்டுவிட்டது என்று தெரியவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்பொழுது இருக்கிற அரசியலமைப்புச் சட்டத்திலே எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் போகலாம், எங்கு வேண்டுமானாலும் சொத்து சேமிக்கலாம் என்ற அடிப்படை ஜீவாதார உரிமைகள் எல்லாம் இருக்கின்றன. இப்பொழுது குறிப்பிட்டது இது சட்டபூர்வமாக இல்லை. ஆனால் நாட்டுமுறையிலே நடந்துகொண்டிருக்கிறது.

உதாரணமாக, கேரளாவிலே தும்பா ராக்கெட் ஸ்டேஷன் இருக்கிறது நாம் ஏற்படுத்தியது, எனக்கு நேரிடையாகத் தெரியும். கிளர்ச்சிகள் எல்லாம் ஏற்படாமல் நாட்டின் ஒற்றுமையை காக்கவேண்டிய பொறுப்பு அரசியல் தலைவர்களுக்கு உண்டு என்ற காரணத்திற்காகத்தான் இதை விளக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே பார்த்தால் தமிழர்களுக்கு வேலையில்லாத நிலைமை இருக்கிற நேரத்திலே, மத்திய அரசினது குறுக்கீட்டால், வேறு மாநிலங்களில் உள்ளவர்களுக்கு, வேலை அளிக்கப்படுகிறது, வேறு பகுதிகளில் உள்ளவர்கள் வேலையில் அமர்த்தப்படுகிறார்கள் என்று கூறுகிறார்கள். இராஜ்ய நன்மையைக் கருதி, எதையும் இழக்காமலிருக்க எல்லோரும் பொறுப்புடன் இருக்கவேண்டும். இந்தியா ஒரே இராஜ்யம் என்றிருக்க வேண்டும். அந்த உணர்வினைப் பெற்றிடவேண்டும். இந்தத் தேசத்தில் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட உத்தமத் தலைவர்களை ஞாபகத்திலே வைத்துக்கொள்ளவேண்டுமென்று கூறி, நான் அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது இந்திய பாராளுமன்ற இரண்டு அவைகளில் நிறைவேற்றப்பட்டு 1973-ம் ஆண்டு அரசியலமைப்பு (32-வது திருத்த) சட்டத்திற்கு ஏற்பளிக்கின்ற வகையில், இந்தியாவிலுள்ள சட்டமன்றங்களில் பாதியாவது, ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற அரசியலமைப்புச் சட்டமுறைப்படி ஒப்புதலுக்காக இங்கே அனுப்பப்பட்டிருக்கிறது.



1974 ஏப்ரல் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

1956-ல் ஆந்திர மாநிலம் ஏற்படுத்தப்பட்டபோது, தெலிங்கானா பகுதியின் வளர்ச்சி குறித்தும், மற்றும் அப்பகுதியில் வாழுகின்ற மக்களுக்கான வேலை வாய்ப்புகள், கல்வி வசதிகள் ஆகியவை குறித்தும் சில பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதற்கு, அரசியலமைப்புச் சட்டத்தின் 371 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) பகுதியின் விதித்துறைகள், இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் சிலவற்றிற்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவை. தெலுங்கானா பகுதி வாழ் மக்களுக்கு, ஏனையவற்றுடன், வேலை வாய்ப்புக்களும், ஏற்படுத்திக் கொடுப்பதற்காக, 1957-ஆம் ஆண்டு அரசுப் பணிகள் (குடியிருப்பு விதி) சட்டம் நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டது. தலைமை உயர்நீதி மன்றம், தெலிங்கானா பகுதியில் அளிக்கக் கருதப்பட்டுள்ள சில பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பொறுத்த மட்டில், மேற்படி சட்டத்தின் சில விதித்துறைகள் அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானவை என்று தீர்ப்பளித்தது.

இதனால், ஆந்திராவில் பல கிளர்ச்சிகள் ஏற்பட்டன. அதிலே நாம் புகவில்லை. இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 371-ஆவது பிரிவைச் சேர்ந்த (1) பகுதியின்கீழ் ஏற்படுத்தப்பட்ட சட்டம் இது எனவே, திருத்தாமல் அமைதி காண முடியாது என்ற சூழ்நிலை ஏற்பட்டது.

ஆந்திராவைச் சேர்ந்த கல்வி நிறுவனங்களிலும், அரசுப் பணிகளிலும், சேர்வதில் சம வாய்ப்புகள் அளிப்பதற்குப் பொருந்துகிற வகையில் ஆறு அம்சத் திட்டம் தீட்டி அந்த மாநில மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுகிற அளவுக்குச்செயல் வடிவம் கொடுக்க இது விதிக்கப்பட்டது. அரசுப் பணிகள் தொடர்பான சில தகராறுகள், குறைகள் ஆகியவற்றைக் கவனிப்பதற்கான அதிகார வரம்புடன் கூடிய நிர்வாக நடுவர் மன்றம் ஒன்றை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகவே, 371-வது பிரிவு திருத்தம் கொண்டு வரப்பட்டது.

அதோடு மட்டுமல்லாமல், அந்தத் தெலிங்கானா பகுதி மக்கள், ஆந்திரப் பகுதி மக்களுடைய வாழ்வுக்காக, மத்திய அரசாங்கம் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற குறிப்பின் அடிப்படையில் மத்திய அரசே ஏற்படுத்த முடியாது, மாநில அரசினுடைய ஒப்புதல் இல்லாமல். அதற்கும் வழிவகை செய்கின்ற வகையில் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலும் எந்தவகையிலும் பாதிக்கின்ற ஒன்று அல்ல இது. ஆந்திர மாநிலத்திலே அமைதி ஏற்படுத்த, அவர்களுடைய நன்மைக்காக, இன்றைக்கிருக்கிற அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையிலே, அமைந்த கருத்துக்களுக்கு ஏற்ப இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 1.30)

இந்த திருத்தத்தில் சட்டமன்றங்களைப் பொறுத்து ஒரு குறிப்பிட்ட மாநிலத்தைப் பொறுத்திருக்கிற காரணத்தால் எல்லா மாநிலத்தினுடைய சட்ட அவைகளுக்கு அனுப்பப்பட்டு குறைந்தது பாதி மாநிலங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற விதி இருப்பதால்தான் இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அதற்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் தான் இந்த மன்றம் தன் ஆதரவை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து தெரிவித்து, பக்கத்தில் ஆந்திர மாநிலத்தில் அவர்களும் விரும்புவது காரணமாக அவர்களும் நிறைவேற்றி அனுப்பி வைத்ததின் காரணமாக, பாராளுமன்றம் ஏற்றுக் கொண்டதின் அடிப்படையில் நாம் ஏற்பு அளித்து அனுப்ப விருக்கிறோம்.

அனுப்பவிருக்கிறோம் என்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொள்கை அடிப்படையில் எதிர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆகவே கொள்கை அடிப்படையில் இன்றைக்கு இருக்கிற அரசியல் சட்டத்தை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோமா என்றால் கொள்கை அடிப்படையில் ஏற்றுக் கொள்ளவில்லைதான். மாநிலத்தில் சுயாட்சி வேண்டும். மத்தியில் கூட்டாட்சி வேண்டும், இன்னென்ன அதிகாரங்கள் இருக்க வேண்டும், என்னென்ன அதிகாரங்கள் வர வேண்டும் என்பதை ராஜமன்னர் அறிக்கை வரும்போது விவாதிக்க இருக்கிறோம்.

ஆனால், அது வரையில் இந்தச் சட்டத்தின் அடிப்படையில்தான் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறோம். ஆக இந்தச் சட்டத்தை எதிர்த்து செய்ய முடியாது, நாம் கொண்டிருக்கிற கொள்கைக்கு மாறுபட்டது என்று கொள்வதற்கில்லை.

அடுத்தபடி வருகிற தீர்மானத்தை அவர்கள் பார்க்க வேண்டும். உங்கள் கொள்கைப்படி கேட்டால் அர்ச்சகர்கள் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கேட்டிருப்பது இன்றைய அரசியல் சட்டத்திலிருக்கிற இந்தச் சட்டத்தை கொள்கையின்படி 100-க்கு 100 ஏற்றுக் கொள்கிறீர்களாவென்றால் இல்லை. ஆனால் அந்தச் சட்டம்தான் இப்பொழுது நடைமுறையில் இருக்கக்கூடியது.





மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை சோஷலிச அடிப்படையில் திட்டமென்றால் 100-க்கு 100 இந்த அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொள்கிறார்களா என்றால், அவர்களும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

ஆனால் இன்றைக்குக் கட்டுப்பட்டுதான் நடக்க வேண்டும். அதன்கீழ் தான் நடக்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் இங்கே இந்தத் தன்மையில் கொண்டு வரப்படுகிறதே தவிர, இதை ஆளும் கட்சி எதிர்த்து இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். எதிர்த்திருக்க வேண்டுமென்றால் நாம் இப்போது கொண்டிருக்கும் கொள்கை அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், மத்திய அரசை எதையும் கேட்காமல் காரியம் நடக்க வேண்டும் என்றால் அரசியல் சட்டப்படி நடக்க முடியாது.

அடுத்து அருகிற தீர்மானத்தை எடுத்துக் கொண்டால், அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கொண்டு வருகிறோம். அதற்குப் பிறகு கொண்டு வருகிற ராஜமன்னர் குழு அறிக்கை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும்போது என்ன கேட்க வேண்டிவரும்? இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் அரசியல் சட்டத்தைத் திருத்துங்கள் என்றுதான் கேட்டுக் கொள்ள வேண்டும். திருத்தியதற்குப் பிறகு வருகிற சட்டத்தின் கொள்கை அடிப்படையில் வலியுறுத்திக் கொண்டு வர வேண்டும். அந்த அரசியல் சட்டத்தின் அடிப்படையில்தான்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அமைச்சர் அவர்கள் இந்த அரசியல் சட்டத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற நிலைமையிருக்கிறது என்று சொன்னால் அதைப்பற்றி ஆட்சேபணை கிடையாது. விவாதம் வந்த பிறகு அரசாங்கத்தின் நிலைமை என்ன என்ற கேள்விதான் கேட்க வேண்டும். ஒரு தடவை அங்கே தீர்மானத்தை நிறைவேற்றி அது வந்து நிர்மாணத் திட்டத்தை நாம் வகுத்த பிறகு

We have to obey when the Act is passed. Till such time, when it has come in the form of a Bill, it can be indicated whether the Government is apposing it or whether it is for the particular Bill. That was the question that was raised. After it comes as an Act, all of us have to obey.

அப்படி வருகிற நேரத்தில் உங்கள் நிலைமை என்ன என்பது தான் கேள்வி.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் கேட்டதெல்லாம் ஏற்கனவே அரசியல் சட்டம் அங்கே நிறைவேற்றியிருக்கிறார்கள். அது முழுமை பெறுவதற்கு இங்கே ஆந்திராவில் இருக்கக்கூடிய, நாட்டிலிருக்கக் கூடிய டாக்டர்ச் சட்ட

மன்றங்கள் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். நமது சட்டமன்றத்தைப் பொறுத்த வரையில் இந்தத் தீர்மானத்தை அங்கீகரிக்காது இருக்க வேண்டாமா? அந்த அரசியல் சட்டத்தை எதிர்த்தும் பாஸ் ஆக வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்:** நாம் சொல்கிற கொள்கையைப் பொறுத்த வரையில் நண்பர்கள் பேசியபோது மத்திய பல்கலைக் கழகத்தை வைப்பது என்ற கருத்தை மறுத்து பேசியிருக்கிறார்கள் கொள்கையளவில். தமிழகத்தில் மத்திய பல்கலைக் கழகத்தை விரும்புகிறார்களா என்றால் விரும்பவில்லை என்று பதில் சொல்லுவோம். அதற்குச் சட்டத்தை எதிர்த்து பேசுகிறோம் என்று சொல்லப்படும். ஆந்திராவைப் பொறுத்து, அவர்கள் விரும்புகின்ற ஒன்றை இன்றைக்குச் சட்டத்தின் அடிப்படையில் நாம் விரும்பினால், கொள்கை அடிப்படையில், கருத்துக்கள் அடிப்படையிலே மாநில சுயாட்சி, தனியாகப் பெற வேண்டும், மத்தியில் கூட்டாட்சி பெற வேண்டும், எந்தெந்த அதிகாரம் இருக்க வேண்டும், எந்த அளவுக்கு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்ற கொள்கை இருப்பதால் இன்று ஏற்று கொள்கிறோம்.

அடுத்து, தீர்மானம் வருகிறது. இங்கே நிறைவேற்றப்படுகிற சட்டங்களைக் கொள்கை அடிப்படையில் ஜனாதிபதிக்கு அனுப்புவதே தவறு. ஆனால் இன்றைக்குச் சட்டப்படி அனுப்பித் தீர வேண்டும். நாம் அத்தனை பேரும் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு தான் வந்திருக்கிறோம்.

இப்பொழுது நம் கொள்கை இதிலிருக்கிற அத்தனையும் ஏற்றுக் கொள்ளக் கூடியதா என்றால் கொள்கைப்படி ஏற்றுக்கொள்ளக் கூடாதுதான். இன்றைக்கு அவர்கள் மாற்றியமைக்க, திருத்தியமைக்க விரும்ப வேண்டும். இந்த நாடு மாற்றிக் கொண்டு, திருத்துகின்ற தன்மையில் வரும் என்பதற்காக அதைக் குறிப்பிட்டேனே தவிர, வேறொன்றுமில்லை. ஆனால் மாநிலத்தில் நாம் விரும்புகின்றது வேறு, அவர்கள் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறது ஒன்று. மத்திய அரசாங்கம் நாடியிருப்பதால் திருத்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற கொள்கைப் பிரச்னையைப் பொறுத்த வரையிலும் இந்த அரசாங்கத்தின் தன்மையைப் பொறுத்த வரையிலும் வேறு விதமாக வராது. நம் உறுப்பினர்கள் சொல்லும்போது இது தேவையில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆனால் பல்கலைக் கழகத்தை வைப்பதைப் பொறுத்து மத்திய அரசாங்கம் அனுமதி பெற்றுத்தான் வைக்க வேண்டும். ஆனால் அரசியல் சட்டத்தில் துவக்கக் கல்வி, உயர் கல்வி, உயர்நிலைப் பள்ளியில் விஷயத்தில் தலையிட



முடியாது. ஆனால் கல்லூரிக் கல்வி, மேல் பட்டப்படிப்பு, பட்டப் படிப்பு மேம்பாடு படுத்த மத்திய அரசு ஈடுபடலாம் என்று அரசியல் சட்டத்திலிருக்கின்ற காரணத்தால்தான், யூனிவர்சிடி கிராண்ட்ஸ கமிஷன் வைத்து அவர்கள் பணம் ஒதுக்கிடுவதும், மற்றதெல்லாம் நடைபெறுகிறது. அந்த அடிப்படையில் நடைபெறுகிற இந்தக் கொள்கை மாறுபாடானது என்ற அளவில் அல்ல, இது சம்பிரதாயம் என்ற முறையில் பக்கத்து மாநிலம் விரும்புகிறது என்ற காரணத்தால் இந்த மாநிலத்தைப் பாதிக்காது என்ற நிலையில் அமைந்திருக்கிறது என்ற காரணத்தால், இதற்கு ஏற்பு அளிக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு, 1973-ம் ஆண்டு, அரசியலமைப்பு (32-வது திருத்த) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியலமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின் கீழ் வருபவையுமான திருத்தங்களை இப்பேரவை இசைவுடன் உறுதிப்படுத்துகிறது".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, 15—4—1974 திங்கட்கிழமையன்று காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.36 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது

## 8. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

237. Notification issued with G.O. Ms. No. 479, Co-operation, dated the 29th December 1973 in regard to certain amendments to rules 85-D, 85-F and 85-K of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

238. Notification issued with G.O. Ms. No. 600, Revenue, dated the 11th February 1974 in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge in respect of the film show entitled "Hindustan Ki Kasam". [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

B. *Reports, Notifications and other papers.*

175. Notification issued with G.O. P. No. 7237, Revenue, dated the 4th December 1973, rescinding the Revenue Department Notification II-1 No. 1884 of 1960, published at page 623 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 26th October 1960.

* 176. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 15 of 1974) with Annexure.

† 177. The Tamil Nadu Additional Sales Tax (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 16 of 1974) with Annexure.

† 178. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1974 (L.A. Bill No. 17 of 1974) with Annexure.

* Despatched to Members on 8th April 1974.
† Despatched to Members on 9th April 1974.



## இணைப்பு.

(324-ம் பக்கத்தில் 821-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

I. வேளாண்மைக் கல்லூரிகள் கோயம்புத்தூர் மற்றும் மதுரை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் :—

| 1973-ஆம் வருடம் வேளாண்மை கல்லூரிகளில் சேருவதற்கான விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர் (1) | | தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை (2) | | தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் பிற்பட்ட சமூகத்தினைச் சார்ந்தவர்கள் (3) | |
|---|---|---|---|---|---|
| பி.எஸ்சி. (வேளாண்மை) .. | 3,135 | பி.எஸ்சி. (வேளாண்மை) .. | 217 | பி.எஸ்சி. (வேளாண்மை) .. | 82 |
| பி.எஸ்சி. (தோட்டக்கலை) .. | 339 | பி.எஸ்சி. (தோட்டக்கலை) .. | 20 | பி.எஸ்சி. (தோட்டக்கலை) .. | 15 |
| பொறியியல் (வேளாண்மை) | 602 | பொறியியல் (வேளாண்மை) | 50 | பொறியியல் (வேளாண்மை) | 30 |
| எம்.எஸ்சி. (வேளாண்மை) | 264 | எம்.எஸ்சி. (வேளாண்மை) | 115 | எம்.எஸ்சி. (வேளாண்மை) .. | 47 |
| பி.எச்டி. (வேளாண்மை) | 151 | பி.எச்டி. (வேளாண்மை) | 57 | பி.எச்டி. (வேளாண்மை) .. | 29 |
| மொத்தம் .. | 4,491 | மொத்தம் .. | 459 | மொத்தம் .. | 203 |

II. வேளாண்மைக் கல்லூரி, அண்ணாமலை நகர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்—

1,379 (மொத்தத்தில்) 79 (மொத்தத்தில்) 37 (மொத்தத்தில்)

238. Notification issued with G.O. Ms. No. 600, Revenue, dated the 11th February 1974 in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge in respect of the film show entitled "Hindustan Ki Kasam". [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

B. *Reports, Notifications and other papers.*

175. Notification issued with G.O. P. No. 7237, Revenue, dated the 4th December 1973, rescinding the Revenue Department Notification II-1 No. 1884 of 1960, published at page 623 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 26th October 1960.

* 176. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 15 of 1974) with Annexure.

† 177. The Tamil Nadu Additional Sales Tax (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 16 of 1974) with Annexure.

† 178. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1974 (L.A. Bill No. 17 of 1974) with Annexure.

* Despatched to Members on 8th April 1974.
† Despatched to Members on 9th April 1974.



## இணைப்பு.

(324-ம் பக்கத்தில் 821-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

I. வேளாண்மைக் கல்லூரிகள் கோயம்புத்தூர் மற்றும் மதுரை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் :—

| 1973-ஆம் வருடம் வேளாண்மை கல்லூரிகளில் சேருவதற்கான விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர் (1) | | தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை (2) | | தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் பிற்பட்ட சமூகத்தினைச் சார்ந்தவர்கள் (3) | |
|---|---|---|---|---|---|
| பி.எஸ்சி. (வேளாண்மை) .. | 3,135 | பி.எஸ்சி. (வேளாண்மை) .. | 217 | பி.எஸ்சி. (வேளாண்மை) .. | 82 |
| பி.எஸ்சி. (தோட்டக்கலை) .. | 339 | பி.எஸ்சி. (தோட்டக்கலை) .. | 20 | பி.எஸ்சி. (தோட்டக்கலை) .. | 15 |
| பொறியியல் (வேளாண்மை) | 602 | பொறியியல் (வேளாண்மை) | 50 | பொறியியல் (வேளாண்மை) | 30 |
| எம்.எஸ்சி. (வேளாண்மை) | 264 | எம்.எஸ்சி. (வேளாண்மை) | 115 | எம்.எஸ்சி. (வேளாண்மை) .. | 47 |
| பி.எச்டி. (வேளாண்மை) | 151 | பி.எச்டி. (வேளாண்மை) | 57 | பி.எச்டி. (வேளாண்மை) .. | 29 |
| மொத்தம் .. | 4,491 | மொத்தம் .. | 459 | மொத்தம் .. | 203 |

II. வேளாண்மைக் கல்லூரி, அண்ணாமலை நகர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்—

1,379 (மொத்தத்தில்) 79 (மொத்தத்தில்) 37 (மொத்தத்தில்)

**I. Agricultural Colleges at Coimbatore and Madurai in Tamil Nadu Agricultural University—**

| Number of candidates who applied for admission to the Agricultural College during the year 1973. (a) | | The number among those selected: (b) | | The number among those selected belonging to Backward Classes (c) | |
|---|---|---|---|---|---|
| B.Sc. (Ag.) .. .. | 3,135 | B.Sc. (Ag.) .. .. | 217 | B.Sc. (Ag.) .. .. | 82 |
| B.Sc. (Hort.) .. .. | 339 | B.Sc. (Hort.) .. .. | 20 | B.Sc. (Hort.) .. .. | 15 |
| B.E. (Ag.) .. .. | 602 | B.E. (Ag.) .. .. | 50 | B.E. (Ag.) .. .. | 30 |
| M.Sc. (Ag.) .. .. | 264 | M.Sc. (Ag.) .. .. | 115 | M.Sc. (Ag.) .. .. | 47 |
| Ph.D. | 151 | Ph.D. .. .. | 57 | Ph.D. .. .. | 29 |
| Total .. | 4,491 | Total .. | 459 | Total .. | 203 |

**II. Agricultural College at Annamalai Nagar, Annamalai University—**

1,379 (in total) 79 (in total) 37 (in total)

### தமிழ் நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1974 ஏப்ரல் 15.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**1. வினாக்கள்—விடைகள்.**

**வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.**

**பள்ளிகளுக்குப் பரிசுகள் வழங்கல்.**

* 825 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தின் சிறந்த பள்ளிகளுக்குப் பரிசு வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. கோ. இளங்கோவன் :** தலைவர் அவர்களே, பரிசு வழங்கவில்லை யென்றாலும், நல்ல பள்ளிகளை அரசு கணக்கில் எடுத்துக்கொண்டிருக்கிறதா ? ஆம் எனில், அவற்றை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நல்ல பள்ளிகள் என்று எடுக்கப்படுவதற்கு விதிமுறை வகுப்பது கடினமாக இருக்கிறது. எந்தத் தன்மையை வைத்து நல்ல பள்ளிகள் என்று எடுப்பது ? இடத்தைப் பொறுத்தா, கட்டடத்தைப் பொறுத்தா ? சேர்க்கப்படுகிற மாணவர்களைப் பொறுத்தா ? கல்வி அளிக்கும் தன்மையைப் பொறுத்தா ? எப்படிப்பட்ட தன்மைகளைப் பொறுத்து நல்ல பள்ளி என்று கணக்கிடுவது மிகக் கடினம். ஆகவே, சிறந்த ஆசிரியர்கள் என்ற அளவுக்கு துவக்கப் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்து கல்வி மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு ஆசிரியர்களுக்கும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் இரண்டு பேருக்கும் பரிசு வழங்கும் திட்டமும், நற்சான்றுகள் வழங்கும் திட்டமும் இருந்து வருகிறது.

[1974 ஏப்ரல் 15

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, அதிகமான மதிப்பெண்களைப் பெற்ற உயர்நிலைப் பள்ளிக்குப் பரிசு வழங்கும் திட்டத்தைக் கொண்டுவர அரசு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அரசு அளவில் நடைபெறவில்லை. ஆனால், மாவட்ட அளவில் ஆங்காங்கிருக்கும் மாவட்ட ஆசிரியர்கள் கழகத்தின் சார்பாகவும், மாவட்டக் கல்விக் கழகத்தின் சார்பாகவும் கணக்கில் முதல் எண் பெற்றிருக்கிற பள்ளிகளுக்கு அல்லது உயர்ந்த மதிப்பெண்கள் பெறுகிற பள்ளிகளுக்கு கேடயங்கள், பரிசுகள் வழங்கும் பழக்கம் சில பல மாவட்டங்களில் இருந்து வருகின்றது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் சில பள்ளிகளில் தொடர்ந்தாற்போல் நூற்றுக்கு நூறு மாணவர்கள் தேர்கிறார்கள். சில பள்ளி களில் தேர்வுக்கு அனுப்பப்படுகிற மாணவர்கள் அனைவரும் தோல்வியுறு கின்றனர். இவற்றை கணக்கில் எடுத்து, எந்தப் பள்ளி சிறந்த முறையில் 'ரிசல்ட்'டை உற்பத்தி செய்கிறதோ அந்தப் பள்ளிக்குப் பரிசு வழங்குவதால் மாணவர்களின் தரத்தை உயர்த்துவதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, இதனை அரசு யோசிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதுபற்றி அரசிடம் செயற்குறிப்பு இல்லை. முதலில் கூறியதுபோல், மாவட்ட அளவில் இருக்கும் சில பெற்றோர்கள்—ஆசிரியர்கள் சங்கங்கள் இப்படிப்பட்ட பள்ளி களுக்கு அல்லது சிறந்த மதிப்பெண்கள் பெறுகிற பள்ளிகளுக்குப் பரிசுகள் வழங்கும் திட்டத்தை வைத்திருக்கிறார்கள்.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஓராண்டு எந்த வேலை நிறுத்தமும் இல்லாது ஒழுங்கும் கட்டுப்பாடும் உள்ள பள்ளிகள் சிறந்த பள்ளிகள் என்று தேர்ந்தெடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட செயற்குறிப்புகள் இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, இப்பொழுது சிறந்த இரயில்வே ஸ்டேஷன்கள், நல்ல முறையில் நடத்தப்படும் ஹாஸ்டல்கள் ஆகிய வற்றுக்குப் பரிசு வழங்குகிறார்கள். அதே மாதிரி, பள்ளிகளைப் பொறுத்த வரையிலும், எந்தப் பள்ளியில் இருக்கக்கூடிய மாணவர்கள் ஸ்போர்ட்ஸில் நல்ல முறையில் விளங்குகிறார்கள், எந்தப் பள்ளி தூய்மையாக வைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று இப்படி எட்டு விஷயங்களில் நல்ல நிலைமைகள் இருக்கின்றன என்று பரிசீலனை செய்வதற்கு அரசுக்கு ஏதாவது ஆலோசனை உண்டா ?



1974 ஏப்ரல் 15]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாநில அளவில் அரசைப் பொறுத்த வரையில் அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை. மாவட்ட அளவில் சிலபல இடங்களில் அப்படிப்பட்ட முயற்சிகளுக்கு ஆக்கம் தந்து வருகிறார்கள். சிறந்த ஆசிரியர்களை ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்து, சிறப்பு ஆசிரியர்கள் என்ற வகையில் அவர்களுக்குப் பரிசுகள் வழங்கி வருகின்றனர்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, இத்தகைய பரிசுகள் மாநில அளவில் வழங்கப்படவில்லை என்றாலும், மாவட்ட அளவில் வழங்கப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், ஆலயங்களைப் பொறுத்துக் கூட, தூய்மையாக வைத்திருக்கக்கூடிய ஆலயங்களுக்கு மாநில அளவில் பரிசு வழங்கப்படுவதாகத் தெரிகிறது. எனவே, அறிவாலயங்களாக விளங்கும் பள்ளி களுக்கும் அத்தகைய முறையில் மாநில அளவில் பரிசுகள் வழங்க அரசு இனி யேனும் ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இது வரையில் செயற்குறிப்பு இல்லை. இனிமேல்தான் ஆலோசிக்க வேண்டும்.

**திரு. கோவை செழியன் :** தலைவர் அவர்களே, நல்ல முறையில் படிக்கின்ற மாணவர்களுக்குப் பரிசு கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. பல பள்ளிகளில் மாணவர்கள்—ஆணா பெண்ணா என்று தெரிந்துகொள்ள முடியாமல்—ஹிப்பி களாக இருக்கிறார்கள். எல்.எஸ்.டி. போன்ற மருந்துகளைச் சாப்பிட்டுக் கெட்டு விடுகிறார்கள். அப்படியில்லாத மாணவர்கள் உள்ள பள்ளிகளுக்காவது பரிசு கொடுக்க முன்வந்தால் நாடு முன்னேறும். அதை அரசு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட வகையில் தேர்ந்தெடுப்பது மிக மிகக் கடினம். சிறந்த மாணவர்களுக்கு, சிறந்த கல்வித் திறனை வெளிப்படுத்துகிறவர்களுக்கு தங்கப் பதக்கங்கள். வேறு பல சான்றிதழ்களை வழங்குகின்ற தன்மைகளை அந்தந்த உயர்நிலைப் பள்ளிகளே மேற்கொண்டிருக்கின்றன.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, சிறந்த பள்ளிகள் என்று சொல்லப்படுகிறது. அதிகமான மார்க் வாங்கி பாஸ் செய்கிற மாண வர்கள் உள்ள பள்ளிகள் என்னும்போது, தனியார்ப் பள்ளிகளும் தீர்மானிக்கப் படுகின்றனவா ? அரசாங்கப் பள்ளிகளும் தீர்மானிக்கப்படுகின்றனவா ?

[1974 ஏப்ரல் 15

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படி சிறந்த பள்ளிகள் என்று தேர்ந்தெடுக்கும் செயற்குறிப்பு அரசாங்க அளவில் மாநில அளவில் இல்லை என்று குறிப்பிட்டேன். மாவட்ட அளவில் ஏதாவது சிலபல இடங்களில் ஆசிரியர் கழகங்கள் மாவட்ட பெற்றோர் சங்கங்கள் ஆகியவை ஏற்படுத்தி வருகின்றன.

**திரு. நா. வீராசாமி :** ஆசிரியர் அளவிலே பரிசுகள் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். அந்த ஆசிரியர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்து எடுக்கப் படுகிறார்கள். வாலி பால், கால் பந்து, சடுகுடு போன்ற விளையாட்டுக்களில் வெற்றி பெறுகிறவர்களுக்குப் பரிசு கொடுக்கின்றோம். அதுபோல் நல்ல "ரிசல்ட்" கொடுக்கும் பள்ளிகளுக்கு ஒரு பரிசு, நல்ல முறையில் நடத்திக் கொள்ளும் மாணவர்களுக்கு அரசுப் பாராட்டு என்று பல பரிசுகளை உண்டு பண்ணி, தமிழ்நாடு அளவில் இப்படிச் செய்தால், மாணவர்களுடைய போக்கை, கவனத்தை வேறு பக்கத்தில் திருப்பவும், மாணவர்களை உற்சாகப் படுத்தவும் நல்ல முறையில் அமையும் அல்லவா ? அம்மாதிரி அரசு செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஆசிரியர்களை எந்த வகையில் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதற்கு விவரக்குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று சொல்லலாம். ஆனால், இப்பொழுது ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் இரண்டு துவக்கப்பள்ளி ஆசிரியர்கள், இரண்டு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். பள்ளிகளை எந்த அடிப்படையில் சிறந்த பள்ளிகள் என்று வகைப்படுத்துவது என்பதிலேதான் வேறுபாடுகள் இருக்கின்றன. மாநில அளவில் அரசைப் பொறுத்து இதுவரை அப்படிப் பட்ட செயற்குறிப்பு இல்லை. இனிதான் ஆராய வேண்டும்.

**திரு. கோ. இளங்கோவன் :** தலைவரவர்களே, ஆசிரியர்களுக்குப் பரிசு அளிப்பதில் இரண்டு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், இரண்டு துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பரிசு அளிக்கப்படுவதாகக் கூறினார்கள். ஆண்டுதோறும் பள்ளிகளும் அதிகரிக்கின்றன, ஆசிரியர்களும் அதிகரிக்கிறார்கள், ஆகவே இந்தப் பரிசுகளையும் அதிகரிக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப் பட்ட எண்ணம் இல்லை.



1974 ஏப்ரல் 15]

### திருப்பூர் நகராட்சி உயர்நிலைப்பள்ளிகள்.

826 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகராட்சி மன்றம் தன் நிர்வாகத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளை அரசு ஏற்று நடத்த வேண்டும் என வேண்டியுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம். நிதிநிலையின் காரணமாக ஒவ்வோராண்டும் ஒரு சில நகராட்சிப் பள்ளிகளைத்தான் அரசு ஏற்றுக் கொள்ள இயலும். திருப்பூர் நகராட்சியின் கோரிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது அரசின் ஆய்வில் உள்ளது என்று கூறினார்கள். திருப்பூர் நகராட்சி 5 உயர்நிலைப்பள்ளிகளை நிர்வகிக்கின்ற பொறுப்பில் இருக்கிறது. இதனால் நகராட்சிக்குக் கூடுதல் செலவு ஏற்படுவதால் இந்த ஆண்டு நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேற்கொள்ளும் பொழுது திருப்பூர் நகராட்சியின் நிர்வாகத்திலுள்ள இரண்டு மூன்று உயர்நிலைப் பள்ளிகளை யாவது எடுப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நகராட்சி பள்ளிகளை அரசு ஏற்றுக்கொள்கின்ற வகையில் எந்த நகராட்சியினுடைய நிதி நிலைமை மிகமிக மோசமாக இருக்கிறது என்று பார்த்து அந்த அடிப்படை யிலேதான் அந்த நகராட்சிப் பள்ளிகளை எடுப்பது என்று அரசாங்கம் முடிவு செய்கிறது. ஏற்கனவே 10 பள்ளிகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 10 பள்ளிகளை எடுப்பதற்குத் திட்ட மிட்டிருக்கிறது. அந்த பத்து பள்ளிகளை எடுக்கின்ற நேரத்தில் எந்தெந்த நகராட்சிகள் மிக மிக மோசமான நிதி நிலையில் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து அந்த நகராட்சியிலுள்ள பள்ளிகளை எடுக்க வேண்டும். ஆகவே கோரிக்கைகளை விட்டிருக்கின்ற எல்லா நகராட்சிகளையும் பற்றிப் பரிசீலித்து முடிவெடுக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த அளவில் திருப்பூர் நகராட்சி எந்த நிலையில் வருகிறது என்பதை ஆய்வுக்குப் பிறகுதான் முடிவெடுக்க வேண்டும்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** தலைவரவர்களே, வரவிருக்கும் ஆண்டில் நகராட்சிகள் உயர்நிலைப் பள்ளிகளைத் துவக்கக்கூடாது என்று ஏதாவது அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1974 ஏப்ரல் 15

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, துவங்கக் கூடாது என்பது அல்ல, ஆனால் பெரும்பாலான நகராட்சிகளில் போதுமான அளவில் நகராட்சிப் பணிகளைச் செய்வதற்கு நிதி வசதி இல்லாததால் புதிய உயர்நிலைப் பள்ளிகளைத் துவங்க வேண்டாமென்ற கருத்தை உள்ளாட்சித் துறை மேற்கொண்டிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலில் பத்து பள்ளிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளப் போவதாகக் கூறினார்கள். மிகமிக மோசமான நிதி வசதி கொண்ட சிங்காநல்லூர் நகராட்சியின் பள்ளி இந்த பத்து பள்ளிகளில் வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அது பற்றிய விவரக்குறிப்பு இல்லை. கிட்டத்தட்ட 126 பள்ளிகளுக்கு மேல் நகராட்சிமன்றங்கள் நடத்தி வருகின்றன. இதுவரையில் 10 உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கத்தில் எடுத்திருக்கிறோம். அடுத்து 10 உயர்நிலைப் பள்ளிகளை மேற்கொள்ளுவதற்கு உத்தேசித்திருக்கிறோம். மிகவும் மோசமான அளவில் நிதிநிலை உள்ள நகராட்சிகளிலுள்ள பள்ளிகளை எடுக்க வேண்டும். அந்த வகையில் சிங்காநல்லூர் அடங்கினால் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அது பற்றிய விவரக்குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் ஆய்வுக் குறிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா என்ற அந்த நிலைமைகளை ஆராயலாம்.

## *Education for linguistic minorities in Kanyakumari*

* 827 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether provision has been made for imparting education to the students belonging to the minority language groups in their mother tongue in Kanyakumari district?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம்.

**திரு. என். டென்னிஸ் :** சார், கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறுபான்மை மொழியினர் கல்வி கற்பதற்குப் போதிய வகுப்புகள் இல்லாத நிலைமை இருக்கிறது. புதிய ஆசிரியர்களும் நியமிக்கப்படுகின்ற நிலைமை இல்லை. சிறு பான்மை மொழியினர் பயிற்சி பெறுவதற்காக இருந்த பயிற்சிப் பள்ளியும் விளவங்கோட்டிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்குவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?



1974 ஏப்ரல் 15]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, 1 முதல் 5 வகுப்புகளில் வகுப்பு ஒன்றுக்கு 10 மாணவர்கள் சிறுபான்மை மொழியினர் சேர்ந்து பயிலுகின்ற சூழ்நிலை ஏற்பட்டால் அங்கே சிறுபான்மை மொழியினருக்காக வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரப்படும். ஆறாம் வகுப்பிலிருந்து 8-ஆம் வகுப்பு வரையில் குறைந்தது ஒரு வகுப்பில் 10 மாணவர்கள் அல்லது 3 வகுப்புகளில் 30 மாணவர்கள் என்று இருந்தால் சிறு பான்மை மொழியினருக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும். 9, 10, 11-வது வகுப்புகளில் ஒவ்வொரு வகுப்பிலும் 15 பேர்கள் அல்லது 3 வகுப்புகளிலும் 45 பேர்கள் இருந்தால் அங்கு அதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படும். எங்கெங்கு அத்தகைய தன்மைகள் ஏற்படுகிறதோ அங்கு அத்தகைய வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதற்கு அரசு ஆயத்தமாக இருக்கும். 1971–72-ம் ஆண்டில் துவங்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளிகளில் 14,219 சிறுபான்மை மொழியினர், அதாவது மலையாள மொழி பயிலும் மாணவர்கள் சேர்ந்திருந்தார்கள். 3 பள்ளிகளில் மலையாளம் பயிற்றுமொழியாக இருந்தது மட்டுமல்லாமல் 601 தனிப்பிரிவுகளும் பல்வேறு பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டன. செகண்டரி பள்ளிகளைப் பொறுத்தவரையில் 8,614 மாணவர்கள் மலையாள மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயில 270 செப்பரேட் செக்‌ஷன்கள் பல்வேறு ப்ள்ளிகளிலும் அமைக்கப்பட்டிருந்தன.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, இந்த மலையாள மொழி வழங்குகின்ற கூடலூர் போன்ற பகுதிகளில் அங்கேயே பிறந்து அங்கேயே வளர்ந்து அங்கேயே தொழில் செய்கிறார்கள். மலையாள மொழிதான் அங்கே எல்லா பள்ளிகளிலேயும், கோர்ட்டிலேயும் இருப்பதால் அங்கே மலையாளமாகத்தான் இருக்கிறதே தவிர அங்கே தமிழ்மொழி இப்பதாகத் தெரியவில்லை. இனி மேலாவது அங்கே தமிழ்தான் இருக்க வேண்டும், மலையாளம் இருக்கக்கூடாது, எல்லாப் பள்ளிகளிலேயும் தமிழ்தான் கற்பிக்க வேண்டுமென்ற நிலைமை தமிழகத்தில் இருப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தமிழகத்தின் எல்லைக்குள்ளே, தமிழ் முதல் மொழியாகவும், ஆங்கிலம் இரண்டாவது மொழியாகவும் பயிற்றுவிக்கின்ற தன்மை வரும். ஆனால் துவக்கப் பள்ளிகளில் சிறுபான்மையோர் தங்கள் தாய்மொழியில் கல்வி பயில்வதற்கு வாய்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே எந்தெந்த இடத்திலே சிறுபான்மை மொழியினர் நான் குறிப்பிட்ட கணக்கின் அடிப்படையிலே இருந்து தங்கள் தாய்மொழியிலே பயில வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்களுக்கு வாய்ப்புகளைத் தரவேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். சட்ட

திட்டத்தின் அடிப்படையிலே மட்டுமல்லாமல் மண்டல குழுத் தீர்மானத்தின் படி தென் மாநிலங்கள் நான்கும் அந்த அளவில் ஒப்பந்தத்திற்கு வந்து அந்த அடிப்படையில் பணியாற்றி வருகிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவில் மலையாள ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று இருந்து அது இப்பொழுது மூடப்பட்டு விட்டதால் மலையாள பயிற்சி ஆசிரியர்கள் இப்பொழுது கேரளத்திற்குச் சென்றுதான் பயிற்சி பெறுகிறார்கள். எனவே மீண்டும் இந்த மாவட்டத்தில் அந்தப் பள்ளியைத் துவங்கி நடத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதனுடைய நிலைமை என்னவென்று தெரியவில்லை. போதுமான ஆசிரியர்கள் இருந்து வேலை கிடைக்காத நிலைமை இருந்தால் மீண்டும் அந்தப் பயிற்சிப் பள்ளியைத் துவங்க வேண்டிய அவசியம் இருக்காது. ஆனால் ஆசிரியர்கள் தேவைப்பட்டு, போதுமான ஆசிரியர்கள் இல்லை என்ற நிலைமை ஏற்படுமானால் பயிற்சிப் பள்ளியைத் துவங்க வேண்டிய அவசியம் ஏற்படும். ஆகவே, சூழ்நிலைகளை அறிந்து அதற்கேற்ப முடிவெடுக்க வேண்டும். ஆனால் அதுபற்றிய விவரக் குறிப்புகள் என்னிடத்தில் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதற்கு அவசியம் இருக்கிறதா இல்லையா என்று அறிந்து சொல்லலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : In many districts of our State, there are local areas wherein linguistic minorities live in large numbers. There are Kannada areas, Telugu areas and Malayalam areas. They have been recognised and accepted by our State Government. For instance in Coimbatore district, there are nine Taluks where Telugu people are in great numbers. But there is no single Telugu school there. Will the Hon. Minister for Education take steps to see that Telugu schools are opened in such local areas wherein Telugu is predominantly spoken?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் முதலிலே கூறியபடி மாணவர்கள் குறைந்தது 10 மாணவர்கள் ஒரு வகுப்புக்கு வந்து விண்ணப்பம் செய்தால் அவர்களுக்கு அந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதற்கு அரசு ஆயத்தமாக இருக்கும். அந்த அடிப்படையிலே அவர்கள் முன்வர வேண்டும்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, இப்படி சிறுபான்மை, பெரும்பான்மை என்று வைத்து சிறு வயதிலேயே தமிழ் படிக்க வேண்டும், மலையாளம் படிக்க வேண்டும், தெலுங்கு படிக்க வேண்டும் என்ற



உணர்ச்சியைத் தூண்டுவதால் இந்த நாட்டில் அப்படிப்பட்ட உணர்ச்சி அவர்கள் பெரியவர்கள் ஆனதற்குப் பிறகும் அவர்களுக்கு வருகிறது. ஆகவே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந்த நாட்டிலே தமிழ்தான் படிக்க வேண்டும் அடுத்தபடியாக ஆங்கிலம் படிக்க வேண்டும் என்ற நிலையை உண்டாக்கினால் இந்த உணர்ச்சி வருவதற்கு வாய்ப்பு இருக்காது. ஆகவே, இந்த நாட்டைப் பொறுத்தவரையில் சிறுபான்மை, பெரும்பான்மை என்று இல்லாமல் இந்த நாட்டிலே பிறந்த அனைவரும் தமிழையும், ஆங்கிலத்தையும் தான் படிக்க வேண்டும் என்ற நிலையை உண்டாக்குவதற்கு நம்முடைய அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, உலகத்திலே எல்லோருமே, மாண்புமிகு உறுப்பினர் உட்பட, தாய்மொழிப்பற்று வேண்டுமென்று சொல்லி வருகிறார்கள். தாய்மொழிக்கு உரிய இடம் கொடுக்க வேண்டும். அப்படி வரும்பொழுது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மொழி தாய்மொழியாக இருக்கிறது. ஆகவே, பெரும்பான்மை மொழி பேசுகின்ற ஒரு மாநிலத்தில் மற்றவர்கள் சிறுபான்மையோர் ஆகிறார்கள். எப்படி இந்த மாநிலத்தில் மலையாளம், கர்நாடகம், ஆந்திரத்தைச் சேர்ந்தவர்கள் சிறுபான்மையோராகக் கருதப்படுகிறார்களோ அதேபோல் அந்த மாநிலங்களில் வாழ்கின்ற தமிழர்கள் சிறுபான்மையோராகக் கருதப்படுகிறார்கள். அவர்களுக்கு அங்கே தமிழிலே சொல்லிக்கொடுக்க வேண்டுமென்ற நிலையில், அதேபோல் இங்கேயுள்ள அந்த மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் மலையாளம், கன்னடம், தெலுங்கு மொழிகளில் பயிற்சி பெற வேண்டுமென்று எண்ணுவது இயற்கையாகும். ஆகவே, தென் மாநிலங்களைப் பொறுத்தவரையில் நான்கு மாநிலங்களில் சிறுபான்மையோருக்கு வசதி ஏற்படுத்தித் தருவதில் எந்தச் சங்கடமும் இல்லாமல் சுமுகமான சூழ்நிலையின் அடிப்படையில் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU N. DENNIS : Sir, Vilavancode Taluk is a bilingual area wherein Tamil and Malayalam language is also spoken. But there is no English medium school there. Will the Hon. Minister take steps to see that English medium classes will be opened at least in the taluk headquarter town Kuzhithurai for the convenience of Malayalam speaking linguistic minorities?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, சிறுபான்மையோர் கூட அவர்களுடைய மொழியிலே பயில்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற முறையில் வாய்ப்பு ஏற்படுத்தித் தருகிறோம். பெருநகராக இருக்கின்ற இடங்களில் அகில இந்திய அளவிலே பணியாற்றி

மாற்றுதலுக்கு ஆளாகின்றவர்கள் அல்லது சிறுபான்மை மொழியோ வட்டார மொழியோ தங்கள் தாய்மொழியாக இல்லாதவர்கள் பயிலுகின்ற அவசியம் உடையவர்கள் குறிப்பிட்ட அளவில் எண்ணிக்கை உடையவர்களாக இருந்தால் ஆங்கில மொழிக்கு அனுமதி வழங்கப்படுகிறது. ஆகவே, காரணங்களைச் சொல்லி, அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருந்தால் விண்ணப்பித்து அதற்கான அனுமதியைப் பள்ளிக் கல்வி இயக்குநரிடத்தில் பெறலாம்.

## *Purchase of medicines in Hospitals*

*828 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to revise the system of purchase of medicines by the Government Hospitals in this State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.**

(இ) இம் மாநில அரசு மருத்துவ நிறுவனங்களுக்குத் தேவைப்படும் மருந்துகள் வாங்குவதற்கு, நிதித் துறையைச் சேர்ந்த அமைப்பு—செயல் வகைக் குழுவின் (Organisation and Method Cell) பரிவுரைகளின் அடிப்படையில் மத்திய கொள்முதல் அமைப்பு ஒன்றை அமைக்க 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**திரு. என். டென்னிஸ்:** இப்போது பல மருத்துவ மனைகளில் உடனே மருந்துகள் கிடைக்காமல் காலதாமதம் ஏற்படுகிறது. அப்-டு-டேட் மருந்துகள் காலதாமதம் இல்லாமல் கிடைக்க அரசு வேண்டிய நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** நடைமுறைக் கொள்கையின்படி சென்னையிலுள்ள மெடிகல் ஸ்டோர்ஸ் என்ற அந்த அமைப்பில் இருந்து பொதுவாக மருந்துகள் வரவழைக்க வேண்டுமென்ற முறை இதுவரை இருந்து வருகிறது. அப்படி வரவழைக்க வேண்டுமென்ற முறையில் காலதாமதம் ஆகிறது என்று பல்வேறு இடங்களில் இருந்து தெரிவிக்கிறார்கள். ஆனால், இன்றியமையாத தேவையை நிறைவேற்ற உடனடியாகக் கிடைக்காத மருந்துகளைப் பெற மருத்துவ அதிகாரிகள் நெருக்கடியைச் சமாளிக்கும் வகையில் அந்தந்த இடங்களிலேயே வாங்கிக் கொள்ளலாம் என்று அனுமதி இருக்கிறது. முறைப்படி முயற்சித்து முடியாதபோது அப்படி வாங்கிக் கொள்ளலாம்.



**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மருந்து வாங்குவதில் இதுவரை பின்பற்றப்பட்டு வந்த நடைமுறையை மாற்றக் காரணம் என்ன? தற்போது அது நடைமுறைக்கு வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மெடிகல் ஸ்டோர்ஸ் என்ற அந்த நிறுவனம் சென்னையிலிருந்து பல பேருடைய வேண்டுகோளைக் குறித்த காலத்தில் நிறைவேற்றவில்லை என்று பல முறை மாவட்ட மருத்துவ அதிகாரிகளாலும் அல்லது மருத்துவ மனை நிர்வாகப் பொறுப்பிலுள்ளவர்களாலும் தெரிவிக்கப்பட்டு வந்திருக்கிறது. அப்படி அவர்கள் அனுப்பியும்கூட சிக்கனமாக இல்லையென்ற கருத்தும் இருந்து வருகிறது. சிக்கனப்படுத்தவும், மருந்துகள் மருத்துவ மனைக்குத் தேவையான காலத்தில் உடனுக்குடன் வழங்கவும் தமிழக அரசு மத்திய நிலையம் ஒன்றை ஏற்படுத்தி அதன்மூலம் மருந்துகளை வழங்கலாமா என்ற கருத்தும் ஆய்வில் மேற்கொள்ளப்பட்டது. அப்படி வாங்கும்போது வாங்குகின்ற முறையில்கூட ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக ஒப்ப அறிவிப்பு கேட்காமல் குறிப்பிட்ட விலை நிர்மானிக்கப்பட்டு அந்த விலை அடிப்படையில் நேரடியாக வாங்கிக் கொள்ளச் செய்ய வேண்டுமென்ற விரிவான ஆலோசனைக் கருத்து அடிப்படையில் நடைமுறைப் படுத்த விரும்பினோம். சட்ட சிக்கல் காரணமாகத் தாமதம் ஆகிறது. இறுதியாக இந்தக் குறிக்கோள் நிறைவேற்றப்படும் என்று நம்புகிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம்:** பொதுவாகவே மருந்துகளில் கலப்படம் செய்வதாகப் பேசிக் கொள்ளப்படுகிறது. இப்படிக் கலப்படம் செய்கிற நிலைமை இருக்கும் காரணத்தால் முக்கியமாகப் பயன்படுத்துகிற மருந்துகளைப் பரிசோதனைச் சாலைகளில் பரிசோதனை செய்துவிட்டு பின்னர் பொது மக்களுக்குப் பயன்படுத்துகிற அளவுக்கு அரசு வழிவகை செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மருந்துகள் எல்லாம் கலப்படமாகிறது என்ற கருத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை. நூற்றில் 99—அதுகூட அல்ல—1,000-ல் 999 அளவு மருந்துகள் கலப்படமாவதில்லை. ஒன்றிரண்டு மருந்துகள் தரத்தில் குறைந்ததாக ஆகிவிடுகிறது. ஒன்றிரண்டு மருந்துகள் வரையறுக்கப்பட்ட கால எல்லையைக் கடந்து சில கடைகளில் விற்கப்பட்டு விடுகின்றன. அவைகளைக் குறித்து அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த முறையில் மருந்துகளில் எப்போதாவது ஏற்படும் கலப்படத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மற்றப்படி கலப்படம் செய்ய இடம் இல்லை.

[1974 ஏப்ரல் 15

## கிருஷ்ணராயபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்

* 829 வினா.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கிருஷ்ணராயபுரம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்காக ரூ. 10,000 அடையாள நன்கொடைத் தொகையும் 5 ஏக்கர் நிலமும் இருக்க வேண்டும் என்று விதி உள்ளது. கிருஷ்ணராயபுரத்தில் 5 ஏக்கர் நிலம் கிடைக்கப் பெறாததால், 5 ஏக்கர் நிலம் கிடைக்கப் பெற்றுள்ள கோவகுளத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவது பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** இந்தச் சுகாதார நிலையம் கட்டும் பிரச்சினை பல ஆண்டு காலமாக இருந்து வருகிறது. விரைவில் அரசு முடிவு எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** எந்த இடத்தில் கட்டுவது, யார் இடம் தருகிறார்கள் என்பது நீண்ட காலப் பிரச்சினை. இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் முதலில் அந்த இடத்தில் குடும்ப நல மருத்துவ மனை கட்டப்படும். அதற்குப் பின்னர் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டப்படுகிற முறைப்படி நிதி கிடைக்கிற வசதிக்கேற்ப ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ மனைக் கட்டடம் கட்டப்படும். அந்தப் பணிகள் இப்போதே துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

## செவிலியர்கள் நியமனம்

* 830 வினா.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 ஆகஸ்டு மாதம்வரை வேலையில்லாமல் இருக்கும் நர்சுகள் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை யாது?



1974 ஏப்ரல் 15]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) 679.

(இ) அவ்வப்போது ஏற்படும் தேவைகளுக்கேற்ப கூடுதல் செவிலியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகின்றது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** செவிலியர் பயிற்சி பெறுகிறவர்கள் அவ்வளவு பேரும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான். சிலர் ஐந்து ஆண்டுகள், 7 ஆண்டுகள் ஆகியும் வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள். அரசாங்கம் சிறப்புத் திட்டம் வகுத்து ஆண்டுக்குக் குறைந்தது இவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்புத் தர முன்னோடித் திட்டம் வகுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஒவ்வொரு ஆண்டும் அரசு அந்தத் துறைக்கு எவ்வளவு பேரை அதிகமாக ஏற்றுக் கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு ஏற்றுக் கொள்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் 1971-72-ம் ஆண்டில் அதிகம் பேரை எடுக்க வேண்டுமென்று முயற்சித்து கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளில் 172 பேரும், மாவட்ட, வட்ட மருத்துவ மனைகளில் 295 பேரும் ஆக 467 பேர் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். அடுத்த ஆண்டு 80 பேர்—107 பேர்—ஆக 187 பேரும், அதற்கடுத்த ஆண்டு 56 பேர்—100 பேர்—ஆக 156 பேர் என்று எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றனர். மூன்று ஆண்டுக் காலத்தில் 810 பேர் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். பயிற்சி பெறுகிறவர்கள் எண்ணிக்கையைக் குறைத்து வேலையில்லாத நெருக்கடிக்கு ஆளாகாமல் முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தந்த ஆண்டு தேர்வு பெறுகிறவர்கள் தேர்வு பெற்ற ஆண்டை வைத்து பதிவு செய்கிறார்கள். பதிவு முறைப்படி வேலை அளிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட முறைகளை மேற்கொள்வதன் மூலம் கூடுமான வரையில் வேலையில்லாமல் துன்பப்படுவதற்கு இடம் இல்லாமல் அரசு கவனித்து வருகிறது.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** மருத்துவக் கல்லூரிகளின் தரத்தை உயர்த்த மருத்துவக் கல்லூரி இடங்களைக் குறைத்தது போல் செவிலியர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிற இடங்களின் எண்ணிக்கையையும் ஆரம்ப காலத்திலே குறைப்பதற்கு அரசு முன்வருமா? அதே போன்று செவிலியர்-பேஷண்டுகள் ரேஷியோவை மாற்றி செவிலியர்களின் எண்ணிக்கையை மருத்துவ மனைகளில் அதிகப்படுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** முன்னரே தெரிவித்தேன். செவிலியர் பயிற்சிக்கு எடுக்கப்படுகிறவர்களின் எண்ணிக்கை இப்போதே குறைக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றிச் சரியான விவரங்கள் இல்லை. நினைவில் இருந்து தெரிவிக்கிறேன். எண்ணிக்கையைக் குறைத்திருப்பதோடு வருகிற ஆண்டில் 300 பேருக்கு வேலை அளிக்க அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. அதே

சமயத்தில் விகிதாசார எண்ணிக்கையை அதிகப்படுத்துவது என்பது மிகப் பெரிய பொருளாதாரச் செலவை ஏற்படுத்தும் என்ற காரணத்தால் உடனடியாக அதை ஏற்றுக் கொள்ள முடியாது. படிப்படியாக, தேவைக்கேற்ப, வளர்ச்சிக்கேற்ப அந்த எண்ணிக்கையை அதிகரிக்கலாம். வருகிற ஆண்டில் 350 பேருக்கு பல்வேறு மருத்துவ மனைகளில் வேலை வழங்க அரசு நிர்மானித்திருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** 679 பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவர்கள் எந்தவிதமான பிரைவேட் நர்சிங் ஹோமில் கூட வேலை இல்லாமல் இருக்கிறார்களா? பிரைவேட் நர்சிங் ஹோமில் ஏற்கனவே அனுபவம் பெற்றவர்களுக்கு சர்க்கார் மருத்துவ மனைகளில் எடுக்கும்போது முதலிடம் கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இதிலே நாங்கள் பார்த்து தேர்ந்தெடுக்கும் முறை கிடையாது. தேர்வு பெற்று முடிந்தவுடன் பதிவு செய்யப்படுகிறது. அந்த எண்ணிக்கை அடிப்படையில் ரிஜிஸ்ட்ரேஷன் நம்பர் தரப்படுகிறது. அந்த வரிசையில் வேலைக்கு எடுத்துக் கொள்கிறோம். சில செவிலியர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் வேலை பார்த்து விட்டு பிறகு இங்கு கிடைக்கும்போது வருகிறார்கள். தனிப்பட்ட மருத்துவ மனைகளில் வேலை வாய்ப்புப் பெற்றவர்களும் இங்கே அவர்களுடைய முறை வரும்போது விருப்பப்பட்டால் வேலையில் சேர்ந்து கொள்ளலாம். ஆகவே, முறைப்படி செயலாற்றப்படுகிறது.

(முற்பகல் 9-30)

**திரு. எம். சுரேந்திரன் :** இந்த செவிலியர்கள் வேலை செய்வதில் அவர்களது நேரம் அதிக நேரமும் எழுத்து வேலைக்காகப் போய்விடுகிறது. ஆகவே நோயாளிகளைக் கவனிக்கும் நேரம் மிகக் குறைவாகத்தான் இருக்கிறது என்ற புகார் இருக்கிறது. இந்த எழுத்து வேலைக்கு வேறு ஏதாவது ஒரு ஏற்பாடு செய்து அவர்கள் நோயாளிகளை முழுமையாகக் கவனிக்கக் கூடிய அளவிற்கு ஒரு நடைமுறையை ஏற்படுத்த முடியுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அப்படி ஒரு கருத்து சொல்லப்படுகிறது. ஏதாவது சில இடங்களில் எழுத்து வேலைகளுக்காகத் தனியாக ஒருவர் இருப்பது அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும். இல்லை என்றால், எழுத்து வேலை செய்ய ஒருவர் இருந்தால் அந்தக் குறிப்புகளை வைத்துக்கொண்டு மருந்துகள் வழங்குவது போன்றவற்றில் அவர்கள் சம்மதித்தால் தான் செவிலியர்கள் அவர்கள் பணியை செம்மையாகச் செய்யமுடியும். ஆகவே இடத்திற்கேற்ப, நிலைமைக்கேற்ப அது ஆய்வு செய்யப்படவேண்டுமே தவிர





பொதுவாக அப்படி ஒரு கருத்தை ஏற்றுக்கொள்வது என்பது, எதுவும் குறிப்பு எழுதாமல் செவிலியர் காரியம் செய்யவேண்டுமென்றால் அவர்கள் பொறுப்புக்கு ஏற்றதாக எல்லாயிடங்களிலும் அது அமையாது.

**திரு. கே. என். குமாரசாமி :** இந்தச் செவிலியர் பயிற்சிக்கு அரசுக்கு ஆகும் செலவு எவ்வளவு? அப்படிச் செலவழித்து பயிற்சி அளிக்கப்பட்ட பிறகு வேலை இல்லாமல் ஐந்து அல்லது ஆறு ஆண்டுக் காலம் இருப்பார்களேயானால் அது சமுதாயத்திற்கு ஒரு பெரிய நஷ்டம்தானே. ஆகவே, அது சம்பந்தமாக அரசாங்கம் பரிசீலனை செய்து தேவையான அளவிற்கு நர்ஸ்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான சாத்தியக் கூறுகளை உண்டாக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** கணக்கு போட்டுப் பார்க்கத் தேவையில்லை. அப்படி பயிற்சிக்கு சேருகிறவர்களின் எண்ணிக்கையைக் குறைத்திருக்கிறோம். பொது அறிவே போதும். அவர்கள் கேட்ட வினாவிற்கு விடை வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. என். மருதாசலம் :** செவிலியர் பயிற்சி தேர்வு பெற்ற பிறகு நீண்ட நாட்கள் அவர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வயதாகிப் போய் விடுகிறது. அப்படி அவர்களுக்கு வயதாகிப் போவது அவர்கள் தவறல்ல. வயதாகிப் போவதால் வேலை கிடைக்க தடை ஏற்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு வயதானாலும் வேலை கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** வயது காரணமாக தடைபடுவதில்லை. ஒருவேளை திருமணத்திற்கு ஏதாவது தடை இருந்தால் இருக்கலாமே தவிர இந்தக் காரியத்திற்கு தடை இல்லை.

**திரு. கே. கந்தசாமி :** அரசாங்கம் பல முயற்சிகள் செய்தும் கூட இன்னும் கிராமப்புறங்களில் சுகாதார அறிவு குறைவாகவே இருக்கிறது. பலவிதமான நோய்களுக்கு மக்கள் ஆட்பட்டு வருகிறார்கள். எனவே, வேலைவாய்ப்பு இல்லை என்ற பிரச்னையை விட பயிற்சி பெற்ற செவிலியர்களை கிராமப்புறங்களுக்கு ப்ரைமரி ஹெல்த் சென்டர் அல்லது அவை இல்லாத இடங்களில் அவர்களுக்கு பொறுப்பைக் கொடுத்து கிராம மக்களிடையே சுகாதார அறிவைப் பரப்பவும், அவர்களால் முடிந்த அளவிற்கு சிகிச்சை அளிக்கவும் அரசாங்கம் முயற்சிக்கக் கூடாதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** செவிலியர்கள் டாக்டர்கள் இருக்கிற இடங்களில் பணியாற்றுவதுதான் ஏற்புடையது. மருத்துவ மனைகளில் பணியாற்றுவதற்குத் தேவையான பயிற்சியைத்தா அவர்கள் பெற்றிருக்

கிறார்கள். வேறுவிதமான பெண்கள் அதற்கான பயிற்சி பெற்று, ஹெல்த் விஸிட்டேர்ஸ் பயிற்சி பெற்று, ஏ.என்.ம்.-க்கான பயிற்சி பெற்று கிராமங்களில் பணி செய்ய நியமிக்கப்படுகிறார்கள். அதிகப்படியான அளவில் நியமிக்கப்பட வேண்டும் என்பது பொதுவான ஒரு வேண்டுகோள். அதற்கு அதிக அளவில் நிதி வேண்டும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** செவிலியர்கள் இடையே இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காக, பயிற்சி அளிக்கிற எண்ணிக்கையைக் குறைத்து வருகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் வளர்ந்துவருகிற சமுதாயத்தில் அப்படி அவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்குப் பதிலாக குறிப்பிட்ட அளவிற்கு தனியார் ஆஸ்பத்திரிகளில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்தால் இந்தக் கஷ்டம் ஏற்படாது. ஆகவே, அரசாங்கம் அதற்கான வழிவகை வகுத்து தனியார் ஆஸ்பத்திரிகளில் குறைந்தபட்சம் இவ்வளவு நர்ஸ்களை வைத்திருக்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கிற வகையில் அரசாங்கம் ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்தப் பிரச்னை பற்றி இப்போது எதுவும் தெரிவிப்பதற்கில்லை. அதுபற்றி துறையினரைக் கேட்டு கலந்துதான் நான் பதில் அளிக்க முடியும்.

*** 831 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவ மனைகளில் செவிலியர்கள், நோயாளிகளின் எண்ணிக்கையில் எந்த விகிதாசார அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர் ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அரசு மருத்துவ மனைகளில் செவிலியர்கள் நோயாளிகளின் அடிப்படையில் நியமிக்கப்படுவதில்லை. அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அதாவது 7 படுக்கைகளுக்கு 1 செவிலியர் என்ற விகிதத்தில் நியமிக்கப்படுகிறார்கள்.

**திரு. என். கிட்டப்பா :** சென்னை பொது மருத்துவ மனையில் நரம்பு சிகிச்சைப் பிரிவு என்று இருக்கிற பிரிவில் போதுமான செவிலியர்கள் இல்லை என்று கூறப்படுவது அரசுக்குத் தெரியுமா ? அதை நிவர்த்தி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** உறுப்பினர் அவர்களுக்கு அண்மையில் கிடைத்த அனுபவம் என்று நான் கருதுகிறேன். எனக்கு இன்னும் அந்தத் துறையில் உள்ளவர்கள் அதுபற்றி சரியாகத் தெரிவிக்கவில்லை. ஆனால் ஒவ்வொரு துறையில் உள்ளவர்களும் எங்களுக்கு டாக்டர்களின்



எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டும், செவிலியர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டும், பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும், இருக்கிற படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று ஒவ்வொரு துறைத் தலைவரும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் எங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நான் முதல் அமைச்சர் அவர்களிடம் இன்னும் அதிக நிதி வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** எவ்வளவு மாணவர்களை எடுக்கிறார்கள் செவிலியர் பயிற்சிக்கு என்று தெரியவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். முன்பு ஒரு டேர்ம்க்கு 175 பேர்களை எடுத்துக்கொண்டிருந்தார்கள். இப்போது அதை 75 ஆக ஆக்கிவிட்டார்கள். இந்தியன் நர்ஸஸ் கவுன்சில் அவர்களின் பரிந்துரைப்படி ஐந்து நோயாளிகளுக்கு ஒரு நர்ஸ் என்றும் கார்டியாலஜி அல்லது நியூராலஜி போன்ற வார்டுகளில் இருக்கிறவர்களுக்கு மூன்று பேர்களுக்கு ஒருவர் என்றும் பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

இப்போது ஏழு படுக்கைகளுக்கு ஒருவர் என்றால் 120 நோயாளிகளுக்கு ஒரு செவிலியர் என்ற விகிதத்தில் பணியாற்றுகிறார்கள். இப்போது எழுத்து வேலையும் அதிகமாகி இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். சமீபத்தில் 120 பேர்களுக்கு ஒரு நர்ஸ் என்ற முறையில் இருந்ததன் காரணமாக செத்துப்போன ஒரு நோயாளியின் பிணத்திற்கு வாயில் மருந்தைப் போட்டுவிட்டு தண்ணீரை ஊற்றிவிட்டுப் போயிருக்கிறார்கள். இறந்து போனது அவர்களுக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத எதையாவது இந்த அவையில் பேசுவதற்கு தலைவர் அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். வேலை அதிகமாக இருக்கும்போது, செத்துப் போனவனுக்கு மருந்தை ஊற்றியிருக்கமாட்டார்கள்.

**திரு. கோவை செழியன் :** நான் ப்ரூவ் செய்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. சம்பந்தமுள்ளதைத்தான் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரத்தில், முதல் கேள்விக்கு விடை அளிக்கப்பட்டதையொட்டி இரண்டொரு கேள்விகள் போடலாமே தவிர இதை 'டிபேட்டபிள் மாட்டராக' கேள்வி நேரத்தில் கொண்டு வரக் கூடாது என்பதற்கு விதி தெளிவாக இருக்கிறது.

**திரு. கோவை செழியன் :** நான் சொல்வதைக் கேட்க வேண்டும். முறை கெட்டு நான் கேட்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்களின் விடையிலிருந்து விளக்கம் பெற இரண்டொரு கேள்விகள் கேட்கலாமே தவிர அதை விவாதத்திற்குரிய பிரச்சனையாக கேள்வி நேரத்தில் கொண்டு வரக்கூடாது. குற்றஞ்சாட்டிப் பேசுவது என்றால், அதற்கு வேறு நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதற்குக் கேள்வி நேரத்தைப் பயன்படுத்த வேண்டாம்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நான் முதலில் படித்ததைத் திரும்பவும் படிக்கிறேன். "அரசு மருத்துவ மனைகளில் செவிலியர்கள் நோயாளிகளின் எண்ணிக்கை அடிப்படையில் நியமிக்கப்படுவதில்லை. அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அதாவது 7 படுக்கைகளுக்கு 1 செவிலியர் என்ற விகிதத்தில் நியமிக்கப்படுகிறார்கள்." பொதுக் கணக்கு அது. இது நான் சொன்ன விடை. அதிலிருந்து எழுகிற வினாக்களைக் கேட்கலாம்.

**திரு. கோவை செழியன் :** ஏழு படுக்கைகளுக்கு ஒரு செவிலியர் என்று சொன்னால் 120 நோயாளிகள் கொண்ட வார்டில் கிட்டத்தட்ட 86 படுக்கைகள் இருக்கின்றன. எண்பத்தாறு படுக்கைகளுக்கு இப்போது ஒரு நர்ஸ்தான் போட்டிருக்கிறார்கள் ஜி.எச்.-ல். அது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதற்கு ஏதாவது மாற்று நடவடிக்கைகள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இப்போது ஏழு படுக்கைகளுக்கு ஒரு செவிலியர் என்ற அடிப்படையில், எட்டு மணி நேரத்திற்கு ஒரு செவிலியர் அந்த இடத்தில் இருப்பதால் 21 படுக்கைக்கு ஒரு செவிலியர் என்ற விகிதத்தில் அது நடைமுறையில் இருந்து வருகிறது. இருபத்தொன்று படுக்கைகளுக்கு ஒரு செவிலியர் என்று சொல்லி அமைகிற இடத்தில் சிலயிடங்களில் 26 படுக்கைகள் இருக்கலாம். சிலயிடங்களில் 32 படுக்கைகள் இருக்கலாம். ஒரு செவிலியர் பொதுவாக மேற்பார்வை பார்க்கிறார். அதனால் சிலநேரங்களில் 21 படுக்கைகள் என்பது 26 அல்லது 32 ஆகின்றன. எண்பத்தாறு படுக்கைகளுக்கு ஒரு செவிலியர் என்பது சரியல்ல. யாராவது விடுமுறையில் போயிருக்கலாம் அல்லது யாருடனாவது பேசிக்கொண்டிருப்பார்கள்.

எனவே, 86 படுக்கைகளுக்கு ஒரு செவிலியர் என்ற நிலை எங்கும் இல்லை. படுக்கைகளின் எண்ணிக்கையை விட அதிக நோயாளிகளை சில டாக்டர்கள் அனுமதிக்கவேண்டிய நெருக்கடி ஏற்படுகிறது. இருபத்துநான்கு படுக்கைகள் உள்ள இடத்தில் 40 நோயாளிகள் இருக்கிற நிலைமை இருக்கிறது. அந்த இடங்களில் அதிகப்படி செவிலியர்களை நியமிக்கவேண்டும் என்று மருத்துவ மனைத் தலைவர் கேட்டிருக்கிறார்கள். அதை ஓரளவிற்கு உயர்த்த அரசு



ஆணையிட்டிருக்கிறது. அந்த அளவிற்கு ஓரளவிற்கு அதிக அளவிற்கு செவிலியர்கள் இந்த ஆண்டு நியமிக்கப்படுவதற்கு ஒப்புதல் கொடுத்திருக்கிறோம்.

**திரு. நா. வீராசாமி :** திரு. செழியன் அவர்கள் கேட்ட கேள்வியை எக்ஸ்பஞ்ச் செய்யவில்லையென்றால் தவறான செய்திகள் பத்திரிகைகளில் வரும். நீங்கள் ஒரு ரூலிங் கொடுக்காவிட்டால் பத்திரிகைகளில் போட்டு விடுவார்கள். அதைப் படிக்கும்போது நமக்குக் கஷ்டமாக இருக்கும்.

**திரு. கோவை செழியன் :** நான் ப்ரூவ் பண்ணுகிறேன்.

**திரு. நா. வீராசாமி :** ப்ரூவ் செய்வது வேறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அனுமதிக்காத கேள்விகள் நிகழ்ச்சிக் குறிப்பில் ஏறாது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இறந்து போனவரின் வாயில் மருந்தை விட்டார்கள் என்று சொன்னார்கள். இறந்து போய்விட்டார் என்று டாக்டர் டிக்ளேர் செய்வது வரையில் நர்ஸஸ் தங்கள் கடமையைச் செய்தாக வேண்டும். இறந்து போய்விட்டாரா இல்லையா என்பது ஐந்து நிமிட நேரம் பரிசோதனை செய்துதான் டாக்டர்கள் சொல்கிறார்கள். அந்த நேரத்தில் ஒரு மருந்து போட்டால் அந்த மருந்துக்காகும் செலவு நஷ்டம் அல்ல. அவர்கள் கடமையைச் செய்கிறார்கள் என்பதுதான் பொருள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இறும் உயிருக்கும் ஆயுள் மருந்து ஒழுக்குதல், தீது அன்றால். அல்லனபோல் ஆவனவும் உண்டு சில. ஆகவே, சாகிற உயிருக்கும் மருந்து ஊற்றுவது தீது அல்ல.

## *Distribution of yarn in Chinnalapatti*

* 810 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total number of cards for the purchase of yarn issued in Chinnalapatti in 1973 (till the end of May);

(*b*) the population of this place; and

(*c*) the total number of weavers in this area?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) 7,090 கார்டுகள்.

(இ) 24,417.

(உ) சார்ந்திருப்பவர்கள் உட்பட 16,566 பேர்கள்.

THIRU N. DENNIS: Sir, may I know from the Hon. Minister the method adopted to issue such cards, how the quantum of yarn is determined and whether any verification is made to detect bogus cards and if bogus cards are detected, may I know the action taken thereon?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, நெசவாளர்கள் இருக்கின்ற ஒவ்வொரு ஊர்களிலும் அனைத்துக் கட்சி குழு போடப்பட்டு, கார்டுகள் இருக்கின்றனவா, அவைகள் யார் பேரில் இருக்கின்றன என்று அவர்களுடைய கருத்துக்களைப் பெற்று, ஒப்புதல் பெற்று, அந்தக் கார்டுகள் வழங்கப்படுகின்றன. அந்தக் கார்டுகளின் அடிப்படையில் இருக்கின்ற நூலைப் பகிர்ந்து கொடுக்கிறோம். அதிலே ஆங்காங்கு தவறு ஏற்பட்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டதற்குப் பின்னாலே, அந்த நான்-கோவாபரேடிவ் செக்டாரிலே உள்ள தறிகள் அனைத்தையும் ஒன்றாக இணைத்து சர்வீஸ் கோவாபரேடிவ்ஸ் என்ற முறையில் சட்ட ரீதியில் கொண்டு வந்து விடலாம் என்று முடிவு எடுத்து இருக்கிறோம்.

**திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்:** தலைவரவர்களே, சின்னாளப்பட்டியில் நெசவாளர்களுக்கு சர்வகட்சி சார்பில் கார்டு வழங்கப்பட்டது. அதை அறிந்த சில சுயநல மாஸ்டர் வீவர்கள் தவறான செய்திகளைப் பரப்புகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாஸ்டர் வீவர்கள் பரப்பினால் பரவாயில்லை. பொறுப்புள்ள அமைச்சர் பதவியில் உள்ளவர்களே டெல்லியில் இருந்து இங்கே வருகை தந்து, சின்னாளப்பட்டி ஜனத்தொகைக்கு அதிகமாகவே இது போன்ற கார்டுகள் கொடுக்கப்பட்டன என்று சொன்னதாகத் தகவல் தரப்பட்டது. உடனடியாக நானே அந்த அமைச்சரோடு தொடர்பு கொண்டேன். இதுவரையில் பதில் இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, பொதுவாக தமிழ்நாட்டில் பல இடங்களில் இந்த கார்டு கொடுத்த விஷயத்தில் தவறு ஏற்பட்டது என்ற முறையில் இப்போது 'நியு எனுமரேஷன்' ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. அது முடிந்து விட்டதா? அப்படி முடிந்து விட்டது என்றால், இன்றைக்கு நாடு பூராவும் எத்தனை தறிகள் போட்டிருப்பதாக அரசுக்கு விவரங்கள் வந்து இருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பல இடங்களில், சில இடங்களில் என்பதில் கருத்து வேறுபாடு இருக்கிறது. நானே ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் கடிதம் எழுதி, இப்படிப்பட்ட அனைத்துக்கட்சி குழு ஏற்படுத்தி இருக்கிறோம். அதிலே நீங்கள் தவறு இல்லாமல் இருக்க





நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசுக்கு ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டு இருக்கிறேன். ஆங்காங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் கருத்துகள் தெரிவித்தபடி, உடனடியாக விசாரணை செய்து, நடவடிக்கை எடுக்கச் செய்துள்ளோம். அதற்கு அடுத்து, சென்சஸ் விதிமுறைப்படி, மத்திய அரசாங்கத்தின் உதவியோடு, இப்படிப்பட்ட சென்சஸ் எனுமரேஷன், கே. டி. கே. தங்கமணி சொன்னது போல செய்தோம். அந்த சென்சசிலும் தவறு இருப்பதாகத் தகவல் வந்து கொண்டிருக்கிறது. இறுதியான பரிகாரம், சர்வீஸ் கோவாபரேடிவ் சொசைடீஸ் மூலம் நூல் வழங்குவதற்கு, சட்ட ரீதியாகப் பதிவு செய்திருக்கும் கோவாபரேடிவ்ஸ்க்குக் கொடுப்பது என்று முடிவு எடுத்து செயல்பட்டு வருகிறது.

**திரு. பெ. சீனிவாசன்:** தலைவரவர்களே, சின்னாளப்பட்டியில் அமுதா டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனத்திற்குக் கார்டு வழங்கப்பட்டது உண்மையா? அப்படி ஒரு நிறுவனம் இல்லை என்று புகார் வந்திருப்பது உண்மையா? அது குறித்து விசாரணை செய்ய அரசு முயற்சி எடுத்து இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்போது வந்த இந்தத் தகவல் இயக்குனருக்கு அனுப்பப்பட்டு விசாரிக்கப்படும்.

### கொடுமுடியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை

***811 வினா—திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு வட்டத்திலுள்ள கொடுமுடி அருகில் கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலை ஒன்றை ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தின் எல்லைக்குள் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்றை அமைக்குமாறு மேற்படி ஊராட்சி ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது. ஏனைய சர்க்கரை ஆலைகளை அமைப்பதற்கான இடங்களைத் தேர்ந்தெடுக்கும்போது இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவரவர்களே, கொடுமுடி பகுதியில் ஓராண்டில் 11 மாதத்திற்குத் தண்ணீர் இருக்கிறது. நிறைய கரும்பு வளர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அமைக்க இருக்கும் சர்க்கரை ஆலையை அந்தப் பகுதியில் அமைக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பரிசீலிக்கப்படும் என்று சொன்னேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, புதிதாகப் பல இடங்களில் சர்க்கரை ஆலை நிறுவ அரசு ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. அப்படி ஆரம்பிக்க இருக்கும் சர்க்கரை ஆலைகள் எந்தெந்த இடங்களில் ஆரம்பிக்கப் பட இருக்கின்றன என்பதையும், அப்படி ஆரம்பிக்கப்படும்போது தஞ்சை மாவட்டத்தில் உள்ள மாயவரம் பகுதியில்—நீண்ட நாள் கோரிக்கை இது—இந்த சர்க்கரை ஆலைகளில் ஒன்றை அந்தப் பகுதியில் ஆரம்பிக்க இயலுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எட்டு சர்க்கரை ஆலைகளைக் கூட்டுறவுத் துறையில் அமைக்க இருக்கிறோம். அந்தச் சர்க்கரை ஆலைகளை எங்கெங்கே அமைக்கவேண்டுமென்று ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரையும், அந்தந்தப் பகுதியில் இருக்கும் வாய்ப்புக் கூறுகளை ஆராய்ந்து அனுப்புமாறு சொல்லி இருக்கிறோம். சட்டமன்றத்தில் அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் அப்படிப் பட்ட யோசனைகளைத் தெரிவித்து இருப்பார்களானால், அவைகளைப் பரிசீலித்து அந்த இடங்களில் இருக்கின்ற வாய்ப்புக்கூறுகளைத் தெரிவிக்க வேண்டுமென்று எழுதியிருக்கிறோம். அந்தக் கருத்துகள் வந்துவிட்ட பின்னாலே தேர்ந் தெடுக்கப்படும்.

திரு. த. சோணையா : தலைவரவர்களே, இப்போது அரசாங்கம் எட்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை நிறுவ இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித் தார்கள். அப்படி அமைக்கப்படும் நேரத்தில் கரும்பு அந்தப் பகுதியில் போதிய அளவுக்குக் கிடைக்குமா, மற்ற மற்ற சாத்தியக் கூறுகள் இருக்கின் றனவா என்பதைப் பார்த்து அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைப் பற்றி இப்போது சொன்னேன். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் அதைத்தான் கேட்க விரும்புகிறார்கள். இவைகளைப் பற்றி எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் சொன்ன கருத்து, எழுதிக்கொடுத்த கருத்து ஆகியவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப் பட்டு, அந்த இடத்தில் இருக்கும் வாய்ப்புக்கூறுகளை ஆராய்ந்து, பரிசீலித்து அனுப்பச் சொல்லியிருக்கிறோம். அவைகள் வந்த பின்னாலே, பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், சர்க்கரை ஆலைகளாகட்டும் அல்லது வேறு தொழிற்சாலைகளாகட்டும், ஆரம்பிக்கும்போது அப்படி ஆரம்பிப்பதற்கு எம்மாதிரியான அடிப்படை அம்சம் தேவையிருக்கிறது என்பதைப் பற்றி அரசு என்ன கருத்து கொண்டிருக்கிறது. அதோடு அந்த சர்க்கரை ஆலைகளை முக்கியமாக கரும்பு அதிகமாக விளையும் இடங்களில் ஆரம்பிக்கும் முறை இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. மாதவன் : கரும்பு கிடைப்பதுதான் முக்கியமாக பரிசீலிக்கப்படுகிறது. அந்தக் குறிப்புகள்தான் இப்போது பெறப்பட்டு வருகின்றன.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்ட மாதிரி அந்த இடம் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த இடம். 2,500 டன் 'கிரஷிங் கபாசிடி' இருக்கவேண்டுமென்றால் 15,000 ஏக்கர் தேவை. எங்கள் பகுதியில் 11 மாதம் தண்ணீர் பாயும். 15,000 ஏக்கருக்கு மேல் இருக்கிறது. எல்.பி.பி. பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 1 லட்சம் ஏக்கர் இருக்கிறது. பி.ஏ.பி. பொறுத்தவரையில் 30,000 ஏக்கர் இருக்கிறது. 250 நாட்களுக்கு மேல் சப்ளை செய்கிற அளவுக்கு தண்ணீர் வசதி இருக்கிறது. கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம் பரிந்துரைப்படி, அந்தத் தகுதிகள் எதுவுமே இல்லாத இடமான கோவையில் நீங்கள் ஆரம்பிப்பதாக இருக்கிறீர்களே, அதை கொடுமுடிக்கு மாற்றுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த முடிவு நாங்கள் எடுக்கவில்லை, நாமும் எடுக்கவில்லை. 1967-க்கு முன்னாலே அந்த இடம் தேர்ந்தெடுக்கப் பட்டது. அப்படியிருக்கும்போது மாண்புமிகு அங்கத்தினர் சொன்ன கருத்து, நாம் பரிசீலிக்கும் அந்தக் கருத்துக்கள் எல்லாம் ஏ. எம். இராஜா அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி அரசுக்குத் தெரிவித்து இருக்கிறார்கள்.

திரு. கே. ரங்கநாதன் : தலைவரவர்களே, சர்க்கரை ஆலை ஏற்கனவே கோவை மாவட்டத்தில் நிறுவ ஆரம்ப வேலைகள் நடைபெற்று நின்று விட்டது. எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு அங்கத்தினர் அந்தப் பகுதியில் பணம் கொடுப்பதிலே காலதாமதம் ஆனது. அதைப்பற்றி நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். தண்ணீர் கிடைக்காத நிலை அந்த இடத்தில் இருந்தது. ஓரளவிற்குத் தட்டுப்பாடு அகற்றப்பட்டிருக்கிறது.

## *Production of Nitric Acid*

* 812 *Q.*—THIRU G. R. EDMUND : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any project in (i) public and (ii) private sector has been set up in Ambattur for the production of Nitric Acid; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) சைதாப்பேட்டையில் ஆண்டொன்றுக்கு 7,000 டன்கள் நைட்ரிக் அமிலமும், 5,000 டன்கள் சோடியம் நைட்ரேட் அமிலமும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ மத்திய அரசு 1973-ம் ஆண்டு இசைவுக் கடிதம் ஒன்றை சென்னையில் உள்ள டாக்டர் முகுந்தா என்பவருக்கு வழங்கியுள்ளது. அவர் அத்தொழிற்சாலையை அம்பத்தூரில் நிறுவி வருகிறார்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, இதிலே மத்திய அரசாங்கத்தின் பங்கு, மாநில அரசாங்கத்தின் பங்கு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, அந்தத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு பப்ளிக் செக்டாரிலிருந்து, அல்லது கூட்டுறவு செக்டாரிலிருந்து ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டதா? அந்த முயற்சிக்கு அரசாங்கம் என்ன பதில் தந்தது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி எந்தத் தகவலும் என்னிடத்தில் இல்லை.

## மன்னிப்பள்ளம் ஆனந்தத்தாண்டவபுரம் சாலை

* 832 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தொகுதியில் மன்னிப்பள்ளத்திலிருந்து ஆனந்தத் தாண்டவபுரம் வரை கப்பிச்சாலை அமைக்கும் பணி துவங்கப்பட்டுவிட்டதா?

(இ) ஆம் எனில், அவ்வேலை எப்போது முடிவுபெறும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இச்சாலையின் ஒரு பகுதி வேலைதான் துவக்கப்பட்டுள்ளது.

(இ) மன்னிப்பள்ளம்-ஆனந்தத்தாண்டவபுரம் சாலை மேம்பாடு வெள்ளப் பாதிப்பு, நிவாரணத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது. சேத்தூர்-பொன்மாசநல்லூர் சாலையின் மொத்த நீளமான 3.8 கிலோ மீட்டரில் 1.6 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலை செப்பனிடப்பட்டு முடிவுறும் தறுவாயில் உள்ளது. மீதமுள்ள 2.2 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையும் 2.8 கிலோ மீட்டர் நீளமுள்ள பொன்மாசநல்லூர் கிராம சாலையும் நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் எடுத்துக் கொள்ளப்படவில்லை.



திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதியாக இருந்து, நீண்டநாட்களாக அந்தப் பகுதியினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அந்தச் சாலை வேலை இப்போது துவங்கப்பட்டு இருக்கிறது. எனவே அந்தப் பகுதியில் உள்ள நிலைமையைக் கருதி, இன்னும் ஆங்காங்கு விடப்பட்டிருக்கும் அந்தப் பகுதிகளையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியையும் இணைந்து அந்தப் பகுதிகளுக்கும் கப்பிச் சாலையாக அமைத்திட அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நிதிப் பற்றாக்குறை காரணமாக உடனடியாக எடுத்துக்கொள்ள இயலவில்லை.

திரு. க. மு. இராசகோபால் : தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையிலே கொடுக்கப்பட்டிருக்கிற பணம் போதாத காரணத்தினால் பல இடங்களில் இருக்கின்ற நகர்ப்புறங்களை இணைக்கின்ற பாதைகள், தாம்போதிகள் இன்னும் சரிவர கட்டப்படாமல் ,சிற்றூர்களெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையினால் பொதுப் பணித் துறையில் எடுத்துக்கொண்டு நடத்துவதற்கு தம்முடைய உள்ளாட்சித் துறை சிபார்சு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சிபார்சு செய்வதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை. எடுத்துக்கொள்ளத்தான் ஆட்சேபணை.

## அய்யாவையனாற்றின் குறுக்கே பாலம்

* 833 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதியில் கொற்கை பஞ்சாயத்தினையும், தாழஞ்சேரி பஞ்சாயத்தினையும் இணைக்க அய்யாவையனாற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டும் வேலை எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இவ்வேலையைச் செயலாக்கும் நிலை ஆரம்பக் கட்டத்தில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : கொற்கை, தாழஞ்சேரி பஞ்சாயத்துக்களை இணைக்கின்ற அய்யாவையனாற்றுக்குக் குறுக்கே கட்டப்படும் பாலத்திற்கு இரண்டு முறைகள் டெண்டர் கோரப்பட்டும் இதுவரையில் டெண்டர் கேட்பவர்களிடமிருந்து டெண்டர் வராத நிலையை நான் உணர்கிறேன். எனவே, அதற்கு டிபார்ட்மெண்ட் மூலமாகவோ அல்லது வேறு ஏதாவது ஒரு முறையிலோ அந்தப் பாலத்தினைக் கட்டி முடிப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

[1974 ஏப்ரல் 15

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கொற்கை பஞ்சாயத்தையும் தாழஞ்சேரி பஞ்சாயத்தையும் இணைக்கின்ற அய்யாவையனாற்றுப் பாலம் கட்டுவதற்கு 1971-ம் ஆண்டு திட்டம் தயாரிக்கப் பட்டு, 2—3—1972-ல் அது ஒப்பந்தக்காரர்களுக்கு விடப்பட்டது. ஒப்பந்தக் காரர்கள் அந்த உடன்படிக்கையின்படி செயல்படவில்லை. இதற்கிடையில் மார்க்கெட்டிங் காம்ப்ளெக்ஸ்-ன் கீழ் இந்த வேலையை எடுத்துக்கொள்ளலாம் என்று யோசித்து முடிவு எடுக்கப்பட்டது.

ஆனால், மத்திய அரசு இந்தப் பால வேலையை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று உத்தரவிட்டதன் காரணமாக, அது எடுத்துக்கொள்ளப்படவில்லை. அது அவசியம் என்று கருதியதினால் மாயூரம் ஊராட்சி ஒன்றியமே இந்த வேலையை மீண்டும் எடுத்துச் செய்யலாம் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இதற்கான திருத்த மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு ஊராட்சி ஒன்றிய ஆய்வாளர் ஊராட்சி ஒன்றியப் பொறியாளரைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாவட்ட வளர்ச்சி அலுவலரும் இதுபற்றி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

### சென்னை-கம்பம் விரைவுப்பேருந்து

* 834 **வினா—திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைக்கும் கம்பத்திற்கும் இடையே திண்டுக்கல் வழியாக துரித வண்டி விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசினிடமுள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** சென்னைக்கும் கம்பத்திற்கும் இடையே திண்டுக்கல் வழியாக துரித வண்டி விடும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்:** சென்னைக்கும் கம்பத்திற்கும் இடையே துரித பஸ் இல்லாமல் அந்தப் பகுதி மக்கள் கஷ்டப்படுகிறார்கள். மேலும் சென்னையிலிருந்து திண்டுக்கல் செல்லவேண்டும் என்றால் பஸ்கள் அதிகமாக இல்லை. சென்னையிலிருந்து மதுரை நகரத்திற்குச் செல்லக்கூடிய பஸ்களெல்லாம் திருச்சி மேலூர் வழியாக செல்லுகின்ற காரணத்தினால் சென்னையிலிருந்து திண்டுக்கல் கம்பத்திற்கு ஒரு பஸ் விட்டால் எதுவாக இருக்குமே? அதற்கு ஏற்பாடு செய்வார்களா?



1974 ஏப்ரல் 15]

**மாண்புமிகு திரு. ச. இராச்சந்திரன்:** தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து திண்டுக்கல் வழியாக 11 விரைவு பேருந்துகள் ஏற்கனவே சென்று வருகின்றன. திண்டுக்கல்லில் இறங்கி கம்பம் போவதற்கு நிறைய பேருந்து வசதி இருக்கிறது. ஆகவே தற்பொழுது விரைவுப் பேருந்து நேரடியாக விடும் உத்தேசம் எதுவுமில்லை.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** பேரூர்களை இணைப்பதற்கு சென்னை நகரிலிருந்து நெடுந்தூர பஸ்களை விடுவது எந்த அடிப்படையில்? வழித் தடங்கள் பொறுக்கப்படுவது வசூலை முன்னிலையாக வைத்துப் பொறுக்கப் படுகிறதா? அல்லது மக்களுடைய வசதிகளை முன்னிலையாக வைத்துப் பொறுக்கப்படுகிறதா? அப்படியானால் இதுவரையில் விண்ணப்பம் செய்யப் பட்டுள்ள நெடுந்தூர தடங்கள் பற்றி அரசு எடுத்துள்ள முடிவு என்ன என்பதை நான் அறியலாமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தனிக் கேள்வி போட்டால் விவரம் தர ஏதுவாக இருக்கும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சென்னை-கம்பம் துரித பஸ் ஏற்பாடு இருக்கிறதே, ஏற்கனவே சென்னையிலிருந்து பழனிக்கு இம்மாதிரி துரித பஸ் போகிறது. கம்பத்திற்குச் செல்வதற்கு இடையிலே இருக்கக்கூடிய தேனீ போன்ற இடங்களுக்கு லாபகரமாகப் போகும் என்பது மாத்திரமல்ல, அந்தப் பகுதியிலிருப்பவர்கள் மதுரைக்கு வந்து பஸ்களில் ஏறிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும். இது சம்பந்தமாக அரசு மீண்டும் பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தற்பொழுது அத்தகைய உத்தேசம் இல்லை.

**திரு. பெ. சீனிவாசன்:** இந்தக் கம்பம் பள்ளத்தாக்கு ஏரியாவில் நிறைய ஊர்கள் இருக்கின்றன. பெரிய முனிசிபல் டவுன்கள் ஏராளமாக இருக்கின்றன. சென்னையிலிருந்து பஸ் விட முடியாவிட்டாலும், திண்டுக்கல்லிலிருந்து எக்ஸ்பிரஸ் பஸ், மதுரையிலிருந்து எக்ஸ்பிரஸ் பஸ், ராஜபாளையத்திலிருந்து எக்ஸ்பிரஸ் பஸ் இப்படி அடிக்கடி எக்ஸ்பிரஸ் பஸ் விடுகிற நிலைமையில் குறுகிய தூர எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடுவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் வேண்டிய ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இது அரசு போக்குவரத்துத் துறை இலாகா சம்பந்தமான கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்படும்.

### தேனி-சுப்புலாபுரம் பேருந்துப்பணி

* 835 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், தேனியில் இருந்து சுப்புலாபுரத்திற்கு தனியாரால் நடத்தப்படும் நகர பஸ் சர்வீஸ் இயக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) உரிய நேரத்தில் இப்பேருந்தினை ஓட்டிச் செல்வதில்லை என்ற குற்றச்சாட்டு குறித்து மறைமுக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த வழித்தடத்தில் இப்பேருந்து உரிய நேரத்தில் தற்பொழுது ஓட்டப்படுகின்றது என்று அந்த விசாரணையிலிருந்து தெரியவருகிறது.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. பெ. சீனிவாசன்: சுப்புலாபுரம், தேனி, வடமலைக்குண்டு ஆகிய பகுதிகளில் ஒரே தனியார் ஆபரேட்டர், பிரைவேட் ஆபரேட்டர் இருக்கிறார் என்று நினைக்கிறேன். இங்கே பி.ஆர்.சி. பஸ்களை விடுவதற்கு, குறைந்தது தேனி, வடமலைக்குண்டு பகுதிக்கு பி.ஆர்.சி. பஸ்கள் விடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இது இந்தக் கேள்வியிலிருந்து எழவில்லை.

திரு. எம். தேவராசன்: நெடுந்தூர பஸ்களை விடுவது பற்றி சமீபத்தில் மத்திய அரசு ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறதே. அது பற்றி நமது அரசின் கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த விவரத்தைப் பத்திரிகையிலே பார்த்தேன். அரசுத் தரப்பில் எந்தவிதமான தகவலும் இன்னும் கிடைக்கவில்லை.

### *Tiruppapuliyur Pataleeswarar Devasthanam*

* 860 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the gold Kalasams of the Tiruppapuliyur Pataleeswarar Devathanam have been missing around January 1974; and

(b) if so, the details thereof?



மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) & (இ) திருப்பாதிரிப்புலியூர் பாடலீஸ்வரர் திருக்கோயிலின் தங்கக் கலசம் திருடப்படவில்லை. ஆனால் மேற்படி கலசத்திலிருந்து சுமார் 360 கிராம் எடையுள்ள தங்கம் சுரண்டி திருடப்பட்டுள்ளது. இத்திருட்டுப்பற்றி காவல்துறையிடம் புகார் செய்யப்பட்டு புலன் விசாரணையில் இருந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. நடைமுறைக் கேள்விகள்.

### அமைச்சரவையிலிருந்து விளக்கம் கோரல்

திரு. கோவை செழியன்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். தங்கள் அனுமதியோடு ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வந்துள்ளேன். ஏற்கனவே இந்த மன்றத்திலே நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து. அவர்களை ஒரு விளக்கம் கேட்டபொழுது, இரண்டு நாட்கள் கழித்துச் சொல்கிறேன் என்று சொன்னார்கள். நம்முடைய அமைச்சர் அவையிலே உள்ள மாண்புமிகு சத்தியவாணிமுத்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்ட் ஆப் ஆர்டரில் வராது. வேறு நேரத்தில் கேளுங்கள்.

திரு. கோவை செழியன்: நான் சொல்வதைக் கேளுங்களேன். எதிலே வருகிறது என்று சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்ட் ஆப் ஆர்டரில் வராது. மற்றைய விதிமுறைகளைப் பாருங்கள் . . .

திரு. ஜே. ஜேம்ஸ்: இது சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது சம்பந்தமாக இது சம்பந்தமாக என்று இங்கே வந்து சொல்லிவிட்டால் தலைவர் முடிவு எடுப்பதற்கு முன்னால் அதை அவையிலே எழுப்பியதாகிவிடும். இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை. நான் இப்படிக் கொடுத்திருக்கிறேன். என்ன ஆயிற்று என்று அவையிலே கேட்பதுகூட முறை அல்ல.

**திரு. பெ. சீனிவாசன் :** திரு. செழியன் அவர்கள் எழுப்பியது பாயிண்ட் ஆப் ஆர்டரின் கீழ் வராமல் போகலாம். இந்தப் பேரவையில் ஒரு எதிர்க்கட்சி விளக்கம் கேட்பதற்கு ஏதாவது வழி வேண்டும். அதற்கு அசெம்பளி ரூல்ஸில் வழியில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எந்த விதிமுறையின் கீழ் இதைக்கொண்டு வரவேண்டும் என்று விதிமுறையை மாற்றியபிறகு பார்க்கலாம்.

**திரு. பெ. சீனிவாசன் :** தற்பொழுது விதி இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதிமுறையை மாற்றுவதற்கு ஏதாவது வழி செய்யலாமா என்று பார்க்கலாம். இப்பொழுது விதிமுறையில் இடமில்லை. அப்படிப்பட்ட பிரச்னைக்கு விதிமுறையிலே ஏதாவது வழி செய்யலாமா என்று பின்னால் பார்க்கலாம்.

**திரு. கோவை செழியன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷனிலும் வராது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் பொறுத்த வரையிலே சில ஒத்திவைப்புத் தீர்மானங்கள் 10, 11-ம் தேதிகளில் கொடுக்கப் பட்டிருக்கின்றன. முக்கியமான தீர்மானம் என்று நினைத்துத்தான் அதைப் பற்றி எந்த முடிவும் எடுக்காமல் இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். பதினைந்தாம் தேதி ஆகிவிட்டதால் அதனுடைய நிலை என்ன? இம்மாதிரி ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் பற்றி என்ன நிலை என்று தாங்கள் சொன்னால் உதவியாக இருக்கும். ஏற்கனவே கொடுக்கப்பட்ட தீர்மானங்கள் நிராகரிக்கப் படாமல் இருப்பதால் அவை முக்கியமான தீர்மானங்கள் என்று தாங்கள் கருதியிருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். நான்கு தினங்கள் ஆகியும் கூட அவை என்ன நிலையில் இருக்கின்றன? ஒத்திவைப்புத் தீர்மானம் என்ன என்பதை நான் சொல்ல விரும்பவில்லை. அதுபற்றி ஏதாவது தகவல் தந்தால் உதவியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதுபற்றி நாளைக்குப் பார்க்கலாம்.

(முற்பகல் 10-00)

**திரு. முனு ஆதி :** சார், பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, நான் கூட ஒரு இன்பர்மேஷன் கேட்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆப் இன்பர்மேஷனும் இல்லை: பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.



## 3. கவன ஈர்ப்பு.

### (அ) சங்கரி நகரில் குடிநீர்த் தட்டுப்பாடும், குடிநீர் வழங்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியமும் குறித்து

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, சேலம் மாவட்டம் சங்கரி நகரில் தற்போது கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டு, அங்குள்ள மக்கள் அவதியுறும் நிலைபற்றியும், அதை நிவர்த்திக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதான அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, சங்கரி பேரூராட்சியின் மக்கள் தொகை 14,008 ஆகும். மொத்தம் உள்ள 13 தொகுதிகளில் 5 தொகுதிகள் நகரிலும் மற்ற 8 தொகுதிகள் கிராமப்புறத்திலும் உள்ளன. சங்கரி பேரூராட்சி முழுவதுமாக 30 கிணறுகள் உள்ளன. அவற்றுள் 9 கிணறுகள் நகரத்திலும் மற்ற 21 கிணறுகள் கிராமப்புறத்திலும் உள்ளன.

இரண்டு துளைக் கிணறுகளும், 9 கிணறுகளும், இரண்டு குளங்களும் பேரூராட்சிக்கு நீர் வழங்குவதற்கு ஆதாரமாக உள்ளன. குடிநீர் வசதியை மேம்பாடு செய்வதற்காகக் கீழ்க்கண்ட நிவாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

குடிநீர்ப் பற்றுக்குறையை நீக்க 28—3—1974 முதல் லாரிகள் மூலம் 15 தடவையாக தினம் 15,000 காலன் குடிநீர் இப்பகுதிக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஐந்து கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டும், இரண்டு துளைக் கிணறுகளை மேம்படுத்தியும் நிலையான குடிநீர் வசதிக்கு வகை செய்யப் பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம் இரண்டு புதிய துளைக் கிணறுகளை யுனிசெப் உதவியுடன் தோண்டி வருகிறது. எனினும், இன்னும் மூன்று புதிய துளைக் கிணறுகளைத் தோண்டுவதற்கான முயற்சிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விரைவில் மேற்கொள்ளும். பேரூராட்சியின் நிதியிலிருந்து கிராமப்புறத்திலுள்ள 21 கிணறுகளும் ஆழப்படுத்தப்படுகின்றன. தேவையான அளவு நீர் கிடைக்கின்றது. சில கிணறுகளில் நீர் 10 அடிக்கும் அதிகமான அளவு உள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட கிராமப்புற தொகுதிகளில், கஸ்தூரிபட்டி, நட்டாம்பாளையம், பாக்கலையூர் பகுதிகளில் குடிநீர்ப் பற்றுக்குறை கடுமையாக உள்ளது. மேற்குறிப்பிட்ட கிராமங்களில் உள்ள கிணறுகளை ஆழப்படுத்தும் வேலை, பாறைகளை உடைக்கும் அமைப்பின் உதவினால்

நடைபெற்று வருகின்றது. குடிநீர் வாரியம் மூலமாக மேலும் சில துளைக் கிணறுகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தக்க காலத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகளினால் இவ்வூராட்சிக்கு குடிநீர் வசதி மேம்படுத்தப் பட்டுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, சங்கரி நகரத்தில் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க ஒரு நிரந்தர பரிகாரம் காணும் பொருட்டு, காவிரி ஆற்றிலிருந்து நீர் கொண்டுவரும் திட்டம் ஒன்று இருந்ததே, அந்தத் திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதையறியலாமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சங்கரி நகரப் பகுதிக்கு 18 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள காவேரி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கப்படுவதற்கான திட்டத்திற்கு மூலச் செலவு 36.25 லட்சம் ஆகும் என்றும், ஆண்டு பராமரிப்புச் செலவு 1,75,000 ரூபாய் என்றும் கணக்கிடப்பட்டது. இந்த காவேரி குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற சங்கரி பேரூராட்சியின் நிதி வசதி இயலாததால் குறைந்த செலவில் சங்கரி நகர குடிநீர்த் திட்டத்தை உருவாக்க மறுபரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. கடனை வழங்கப்படும் சுமார் 36 லட்சம் ரூபாய்க்கு. வட்டியும் முதலுமாகத் திருப்பிக் கட்ட வல்லமை இல்லாததால் மாற்றுத் திட்டமாக நிலத்தடி நீரை அடிப்படையாகக் கொண்ட திட்டம் ஒன்று நடைபெற்று வருகின்றது. அது முடிந்தவுடன் வாய்ப்பு இருக்குமானால் நிரந்தர பரிகாரம் காணமுடியும்.

## (ஆ) செங்கல்பட்டு மாவட்டத்தில் பருவ மழை பொய்த்துவிட்டதும், நிலவரி, கடன் வசூல் இவைகளைத் தள்ளிவைக்க வேண்டியதன் அவசியமும் குறித்து

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் கடந்த பல மாதங்களாகப் பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தாலும், வறட்சி நிலை நீடித்து வருவதாலும் இம்மாவட்டத்தினை பஞ்சம் பாதித்த பகுதியாக அறிவிக்க வேண்டுமென்றும், உழவர்களிடமிருந்து வசூலிக்கும் நிலவரி, அரசுக் கடன் தொகைகள் ஆகியவற்றைத் தள்ளிவைக்க வேண்டுமென்றும், குடிநீர்க் கிணறுகள், ஏரி குளங்கள் ஆகியவற்றை ஆழப்படுத்த தனி நிதி ஒதுக்க வேண்டுமென்பதும் பற்றிய அரசாப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே. 1383-ம் பசலி ஆண்டில் வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததால் செங்கற்பட்டு மாவட்டத்தில்



கீழ்க்காணும் வட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார் :—

(1) திருத்தணி

(2) பள்ளிப்பேட்டை துணை வட்டம்.

(3) பென்னலூர்பேட்டை துணை வட்டம்

(4) ஸ்ரீபெரும்புதூர் வட்டம்

(5) பொன்னேரி வட்டம், கும்மிடிப்பூண்டி துணை வட்டம்.

**(1) திருத்தணி.**—இவ்வட்டத்திலுள்ள நிலங்கள் அனைத்தும் ஒரு போக நன்செய் நிலங்களாகும். 1383-ம் பசலி ஆண்டில் 12,083 ஏக்கர் நன்செய் நிலத்தில் ஒரு போகப் பயிர் பயிரிடப்பட்டது. 9,356 ஏக்கர் நிலம் தரிசாக விடப்பட்டது. இந்த வட்டத்தில் 1383-ம் பசலி ஆண்டில் பயிர் விளைச்சலின் கீழ் உள்ள 12,083 ஏக்கர் நன்செய் நிலங்களில் 9,322 ஏக்கர் நிலத்தில் அறுவடை செய்யப்பட்டது. இதன் மூலம் ரூபாய்க்கு 25 காசுக்கும் அதற்கு மேற்பட்டு பலன் கிட்டியது. எஞ்சிய 2,761 ஏக்கர் நிலத்தில் உள்ள பயிர் சாவியாகிவிட்டது. எனவே, தண்ணீர்ப் பற்றுக்குறை காரணமாக 13 (2) ஆம் எண் வாரிய நிலை ஆணையின் கீழ் முழு தீர்வை விதிப்பதினின்றும் தள்ளுபடி பெறுவதற்கு திருத்தணி வட்டம் தகுதியுடையதாகும். அடிப்படை நிலவரி, உள்ளூர் செஸ் வரி, உள்ளூர் செஸ் மேல் வரி, கூடுதல் நன்செய்த் தீர்வை ஆகியவற்றின் கீழ் தள்ளுபடி வழங்கப்படும் மொத்தத் தொகை தோராயமாக ரூ. 3,25,879 ஆகும். தற்போது இரண்டாம் போகப் பயிராகப் பயிரிடப்பட்டுள்ள வேர்க்கடலைப் பயிர் நிலைமையும் சரியாக இல்லை என்றும், பாசனம் பெறாத நிலையில் 1,210 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்ட வேர்க்கடலைப் பயிர் மழையின்மையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், 4,401 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள பாசனம் பெறும் வேர்க்கடலைப் பயிர் பூச்சிகளாலும், நீர்ப்பற்றாக்குறையாலும் பாதிக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், இந்த நிலங்கள் ஒருபோக நன்செய் நிலங்களாயிருப்பதால், இரண்டாவது போகப் பயிரான வேர்க்கடலைக்குத் தள்ளுபடி எதும் வழங்க அவை தகுதியுடையவை அல்ல.

குடிநீர் கிடைப்பதைப் பொறுத்தமட்டில், கிட்டத்தட்ட எல்லாக் கிராமங்களிலும் நீர்ப் பற்றாக்குறை இருந்து வருவதால், குடிநீர்ப் பற்றுக்குறையைப் போக்குவதற்குக் குடிநீர்க் கிணறுகள், குட்டைகள், ஊருணிகள்

முதலியவற்றை ஆழப்படுத்துவதற்கு நிதிகள் வழங்குவதற்கான செயற் குறிப்புகளைத் தனியே பணித்தனுப்புவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

**(2) பள்ளிப்பேட்டை துணை வட்டம்.**—நடப்புப் பசலி ஆண்டில் இத்துணை வட்டத்தில் 81.00 ஏக்கர் நிலம் மழையின்மையால் தரிசாக விடப்பட்டுள்ளது என்றும், அதற்கான வரித் தள்ளுபடி தோராயமாக ரூ. 500 என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார். பாசன வாயில்களுக்கு நீர் கிடைக்காத காரணத்தினால் தனிப்பட்டவர்களின் கிணறுகளிலிருந்து பாசனம் பெற்று அதன் மூலம் 287.26 ஏக்கர் நிலத்தில் பயிர்கள் பயிரிடப் பட்டன. எனவே. 1,255 ரூபாய்க்கு நீர்வைக்கம்மி தள்ளுபடி வழங்கப்பட வேண்டும்.

**(3) பென்னலூர்ப்பேட்டை துணை வட்டம்.**—இத்துணை வட்டத்தில், பாசன வாயில்களிலிருந்து நீர் கிடைக்காததால் 1,680.88 ஏக்கர் நன்செய் நிலம் தரிசாக விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தரிசு நிலங்களுக்கு வழங்கப்படும் தள்ளுபடி 6,133 ரூபாய் என்று கணக்கிடப் படுகிறது.

**(4) ஸ்ரீபெரும்புதூர் வட்டம்.**—பாசன வாயில்களிலிருந்து நீர் கிடைக்காததால், இவ்வட்டத்திலுள்ள கீழ்க்காணும் கிராமங்களில் உள்ள நிலங்களில் பயிரிடப்பட்ட முதல் போகப் பயிர் மூலம் 25 சதவீதத்திற்குக் குறைவான பலன் கிட்டியதென்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார் :—

| | பாதிக்கப்பட்ட பரப்பு. |
|---|---|
| இடையார்பாக்கம் | 363.30 ஏக்கர் |
| கோட்டூர் | 109.14 ஏக்கர் |
| எமிலியான்கோட்டூர் | 88.93 ஏக்கர் |

இந்தக் கிராமங்களுக்கு அடிப்படை நிலவரி ரூ. 9,622.11. உள்ளூர் செஸ் வரி ரூ. 1,179.96. உள்ளூர் செஸ் மேல் வரி ரூ. 6,555.26, கூடுதல் நன்செய்த் தீர்வை ரூ. 889.99. ஆக மொத்தம் ரூ. 1[illegible].967.92 தள்ளுபடி வழங்கப்படும் என்று கணக்கிடப்படுகிறது.

**(5) பொன்னேரி, கும்முடிப்பூண்டி துணை வட்டம்.**—இப்பகுதிகளில் முறையே 2,000 ஏக்கர், 1,000 ஏக்கர் நிலங்களில் பயிர்கள் சாவியாகிவிட்டன. இந்த வட்டங்களுக்கு வழங்கப்பட வேண்டிய வரித் தள்ளுபடி தொகை தோராயமாக ரூ. 25,000 ஆகும். இது குறித்து ஆழ்ந்து ஆய்வு செய்து



விரிவான அறிக்கை ஒன்றை உடனடியாக அனுப்புமாறு சைதாப்பேட்டை வருவாய்க் கோட்ட அதிகாரிக்குக் கட்டளையிட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார்.

வறட்சி, புயல் முதலியவற்றின் நேர்வில், உழவர்கள் கடன் தவணைகளைச் செலுத்தும் நிலையில் இல்லாதபோது அரசு நிலுவைத் தொகைகளை மெதுவாக வசூலிக்கும் கொள்கையைப் பின்பற்றுமாறு அல்லது வசூல் செய்வதை ஒத்திப்போடுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கட்டளையிடுவது அரசின் கொள்கையாகும். பஞ்சம் ஏற்பட்டுள்ள பகுதிகளில் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நாட்டத்திற்குக் கொண்டு வரப்படும்போதெல்லாம் அப்பகுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களது விருப்பப்படி கடன் நிலுவைகளை ஒத்திப் போடவும் அவர்களுக்கு அதிகார மளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. மு. இராசகோபால் :** தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். செங்கற்பட்டு மாவட்டத்தில் மழை இல்லாமல் கடுமையான பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது திருத்தணி, ஸ்ரீபெரும்புதூர் போன்ற இரண்டு, மூன்று வட்டங்களைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிக்கை படித்தார்கள். ஆகவே, மற்றப் பகுதிகளில் எல்லா ஏரிகளும் நிறைந்திருக்கின்றனவா, பஞ்சம் இல்லையா என்ற கேள்வி எழுகிறது. அதைப்பற்றி நான் சில விளக்கங்களைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் கூட ஒரு காலிங் அடென்ஷன் நோட்டீஸ் கொடுப்பீர்களானால், அமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு அறிக்கை கொடுப்பார். இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவரவர்களே, சட்டப்படி போனால் அவர் தொகுதியைப்பற்றி அவர் வட்டாரத்திய பிரச்சினை பற்றி எப்படிச் சொல்ல முடியும்? சில நேரங்களில் கொஞ்சம் விதியைத் தளர்த்த உங்களுக்கு அதிகாரமிருக்கிறது. தளர்த்தலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, பொதுவாக செங்கற்பட்டு முழுவதும் பாதிக்கப்பட்டு, தொடர்ந்த வறட்சி நிலைமை நீடித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இப்பொழுது வரி வசூல் செய்கின்ற அந்த கெடுபிடிகளை நிச்சயம் தளர்த்தி வரி வசூலைத் தள்ளி வைப்பதற்கு ஒரு தனி

ஆணையை அரசாங்கம் பிறப்பிக்க வேண்டுமென்றும், ஏரி, குளங்களை ஆழப்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துக்களைப் பெற்று, மாவட்டத்தில் 27 ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தனி நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன் வரவேண்டும். இவற்றைக் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** செங்கற்பட்டு முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பது என்பது ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல. சில பகுதிகளில் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இரண்டு நாளைக்கு முன்னால் மாவட்ட ஆட்சித் தலைவருடன் நான் நேரடியாகப் பேசினேன். அவர் நிலைமையை அறிந்து, இந்தக் கடன் வசூலையெல்லாம் கடுமை முறையில் வசூலிக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார். நிலைமை சீர்படுவதற்கு வறட்சி நிவாரணக் குழு தேவையான நிவாரணப் பணிகளைச் செய்வதற்கு அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அவர் அறிக்கை வந்த பிறகு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. அரசினர் தனித் தீர்மானம்.

**சாதி, பிரிவு, உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுடையவர்களிடையே இருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள், ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்க இயலும் வகையில் அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து.**

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

“சாதி, பிரிவு, உட்பிரிவு ஆகியவற்றின் அடிப்படையில், இந்து சமய நிறுவனங்களில் அர்ச்சகர்களையும் பூசாரிகளையும் ஏனைய உள்துறை ஊழியர்களையும் பரம்பரை முறையில் நியமனம் செய்யும் நடைமுறை பற்றி பொதுமக்கள் பரவலாகக் குறைபாடு கூறுதல் இருப்பதாலும்;

இந்து சமூகத்தில் நிலவும் பரம்பரை முறையில் சமயப் பூசாரிகளை நியமிக்கும் முறை நீக்கப்பட வேண்டுமென்றும், இதற்குப் பதிலாக சமயச் சார்புள்ள நிறுவனம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்றும், தேவையான கல்வித் தகுதிகள் உள்ளவர்கள், ஏற்பளிக்கப்பட்ட நிறுவனங்களில் பூசாரிக்குரிய பணிகளில் பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென்றும், சாதி, இனம் அல்லது வகுப்பு வேறுபாடின்றி



அனைவருக்கும் பூசாரிகளாக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்றும், “தீண்டாமை அரிசனங்களின் பொருளாதார, கல்வி வளர்ச்சி குறித்த குழு” கருத்துத் தெரிவித்துள்ளதாலும்;

உச்ச நீதி மன்றத்தால் பொருள் விளக்கம் கூறப்பட்டுள்ளவாறு, அரசியலமைப்பின் தற்போதுள்ள விதித் துறைகளின் கீழ், கோயில்களுக்குப் பொருந்துகிற ஆகமங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளை யொட்டி குறிப்பிட்ட பிரிவு அல்லது உட்பிரிவுகளிலிருந்து அர்ச்சகர்களையும், பூசாரிகளையும் நியமிக்க வேண்டும், அவ்வாறு செய்யத் தவறினால் சமயக் கோட்பாடுகளில் தலையிடுவதாகுமென்பதாலும்;

சமூக சீர்திருத்த நடவடிக்கையாக, சாதி, பிரிவு அல்லது உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையேயிருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள் அல்லது ஏனைய உள் துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்கப்பட வேண்டுமென்று இந்த அவை கருதுவதாலும்;

மேற்சொன்ன நோக்கத்துக்காக இம்மாநில சட்டமன்றம் சட்டமியற்ற இயலும் வகையில் அரசியலமைப்பு தக்கவாறு திருத்தப்பட வேண்டுமென்பதாலும்;

சட்ட வரைவில் குறிப்பிட்டுள்ளபடி @ அரசியலமைப்பைத் தக்கவாறு திருத்துவதற்குத் தேவையான சட்டமொன்றை இயற்றுமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்வதென இப்பேரவை தீர்மானிக்கிறது.”

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I move—

“In para 2 of the Resolution, for the words beginning with ‘an ecclesiastical organisation’ and ending with the words ‘creed or race’, substitute the following:—

‘an ecclesiastical organisation of Hindus possessing requisite theological and educational qualifications who might be trained in recognised institutions in priesthood and that the line should be

@ 577-578-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

open to all candidates irrespective of caste or sect, leading a life of moral purity as traditionally considered necessary by the majority of worshippers.'

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I second it.

THIRU P. SOUNDARAPANDIAN : Sir, I move—

For the last para of the Resolution, substitute the following :—

'This House recommends to the President of India to refer the decision of the Supreme Court on the Tamil Nadu Archaka Government Order to all Judges of the Supreme Court to discuss and decide the validity of the decision.'

THIRU P. SREENIVASAN : I second the amendment, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதை வழிமொழிவது யார் ?

THIRU P. SREENIVASAN : I have already seconded it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டு தீர்மானங்கள், 6 மசோதாக்கள் இருக்கின்றன. தீர்மானத்திற்கு எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்வது என்பதைப்பற்றிச் சொன்னால் நல்லது. திரு. தங்கமணி, திரு. மாரிமுத்து இதற்கு ஒரு முடிவைச் சொல்லுங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** முதல் மசோதா பொறுக்குக் கமிட்டிக்கு போவதால் அதன் பேரில் பேசத் தேவையில்லை. பொறுக்குக் கமிட்டியில் பேசுவது என்ற முறையை வைத்திருக்கிறார்கள். இந்த மசோதா ஒரு நாள் பூராவும் போகக் கூடிய பெரிய மசோதா.

**மாண்மிபுகு பேரவைத் தலைவர் :** தலைவர்கள் முடிவு செய்யலாம் இது பற்றி.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்தக் கமிட்டியில் 1, 2 உறுப்பினர்கள் சொல்லுவதற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கமிட்டியில் 20 பேர் இருக்கிறார்கள். இருபது பேர் போக மற்றவர்கள், இல்லாதவர்கள்.



**திரு. கே. டி. கே தங்கமணி :** உங்கள் டிஸ்கிரிஷன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த இந்த விஷயத்திற்கு இவ்வளவு நேரம் என்று முடிவு பண்ணி விட்டால், அதற்குத் தகுந்தபடி வாய்ப்பு அளிக்கலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தீர்மானங்கள், மசோதாக்கள் அறநிலையம் சம்பந்தமானது. இரண்டு கருத்து, நான்கு கருத்துக்களாக வந்திருக்கிறது. அதில் அதிக நேரம் வராது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதல் தீர்மானத்திற்கு எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ளலாம் ?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஒரு தீர்மானத்திற்கு ஒரு மணி நேரம்;

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது நேரம் 10-15 ஆகிறது. 11-15-க்கு முடித்து விடலாமா ?

**திரு. கே. டி. கே. தங்கமணி :** முதல் தீர்மானத்தைப் பொறுத்தவரையிலும் ஏற்கனவே இந்த பிரச்னை எழுந்தபோது ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரும்போது நான் ஆலோசனை சொல்லியிருக்கின்றேன். பல விஷயங்களைத் தயார் பண்ணி வைத்திருக்கிறோம். அதிகம் பேர் தங்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருப்பதால் இந்த இரு தீர்மானங்களுக்கும் பகல் பூராவும் போதும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கட்சித் தலைவர்கள் மட்டும் பேசுவது என்று வைத்துக் கொள்ளலாமா ?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** இப்போது இரு தீர்மானங்களும் ரொம்ப முக்கியமான தீர்மானங்கள். பல பேர் கருத்தைச் சொல்லுவதற்கு விரும்புவார்கள். ஆகையினால், அதற்கு 1 மணி நேரம் என்று வைத்தால் அந்த நேரத்திற்குள் அமைச்சர் அவர்களும் பதில் சொல்லுகின்ற நிலை வந்தால் கருத்தைச் சொல்லுவதற்கு நேரமில்லாமல் போய்விடும். காலை நேரம் பூராவும் இரு தீர்மானங்களையும் வைத்துக் கொள்ளலாம் என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தலைவர்கள் வரைக்கும் பேசுவது என்று வைத்து விடலாமா? முன்னேயிருக்கிறவர்கள் முடிவு பண்ண வேண்டும். அமைப்பர் அவர்கள் ஏதாவது இப்பொழுது சொல்லப் போகிறாரா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Hon. Speaker, Sir, I am very happy that the Government has brought this Resolution. In this progressive world, changes are necessary and we do not go after changes, but changes force themselves on us.

It is very necessary that the old system must give way to new to suit the present conditions. It was given to Sir C. P. Ramaswamy Iyer to open the temples to Harijans in the old Travancore State. Now, it is given to the D.M.K. Government to improve many things in temples and spend Rs. 12 crores for temple renovation

Now, the society is degenerating to such an extent that a firm believer in religion like me believes that unless people have faith in God, temple worship will become useless and there is likely to be chaos in the world. One of the reasons for chaos in world is the lack of faith in God.

I am not opposing this resolution, at all. I am only saying that when an archaka is appointed, he should be a Hindu. I do not say that Muslims and Christians will come forward. For the sake of giving trouble, sometime later, anybody may say that there is only the word 'man' and so it may not denote only Hindus. That possible misunderstanding may be mooted. Therefore I say that Archakas should be Hindus and no- non-Hindus. That is my first point.

What I say is that so far as qualification is concerned it is not enough if there is only educational qualification. The ecclesiastical class which has got the requite educational qualification must also have the theological qualification. Temples are not just idle homes. To me idols are gods and those who do worship in temples must



have theological education along with educational qualification. So it is that I have specified in my amendment 'theological qualification in addition to educational qualification'. I hope that would be accepted. That is my second point.

The third point is most important. Even today many worshippers are not following practices prescribed for them in spite of the fact that they are traditional worshippers or spiritual worshippers. They have to set an example of pure life. Purity of life is important whether he is a Nandanar or Brahmin or non-Brahmin. They should have purity of life as prescribed in Hindu theology. Temples are not to be exploited. They are to be kept sacred.

Unlike other States in Iidia, Tamil Nadu is the only State wherein there are 15,000 temples under one Endowments Department. That is the reason why Tamilians are more disciplined and have fear of rights and wrongs. That is why they lead a better walk of life. I say that practice should be strengthened.

For that, besides educational qualification, the archakas must have theological qualification also. They must follow certain principles of life which will infuse confidtnce and reserence in others. That is my third point.

I do not object to any caste. Here reference is made to "caste, creed or race". I do not think 'race' comes here. It must be only Hindu race and Hindu caste. As I have already said, caste is irrelevant, in temple matters.

Our greatest reformer, Adi Sankaracharya, when he was worshipping in Benaras, was met by a Harijan. The Harijan asked him "why not come near me". Sankara said 'Why not'. It was at that time that Sankaracharya wrote the greatest of sanskrit literature, viz. 'Manishapanchakam'. Therein it has been said that all men are equal; there is no distinction between man and man." Those words are written not by me or anybody else but by the greatest reformer of Hindu religion namely, Adi Sankaracharya.

[1974 ஏப்ரல் 15

Hinduism does not want any caste. He must have religious faith and should have good character and conduct and lead a good walk of life. I am sure that this resolution brought by Government is extremenly good. I think, it is necessary and useful to preserve the greatness of Tamil Nadu.

Therea res some places which attract thousands of people. It is because the person there doing pujas leads a good life and pure life. So it is, I sav trat Archakas besides possessing educational qualification, must also have the theological qualification. Then they will inspire confidence in the worshippers who come to temples to worship the Gods.

Let the archaka be of any caste.

What is important is that purity of life should be maintained. I am not trying to give a certificate to this Government. But let me say that all these seven years the D.M.K. Government had maintained our temples properly and they had preserved the heritage. It is better my amendment is also accepted so that the matter may not be dragged before Court consisting of 12 to 14 Judges.

So far as temple rights and management is concerned, it is necessary that Constitution must be amended because Tamil Nadu has the maximum number of temples. It is a State of temples. Definitely I support the resolution to amend the Constitution. In order that trouble may not be caused later on, I have given notice of amendments. I have explained them and I hope and trust that Government would accept my useful suggestions.

*திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அறநிலைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களை இந்த அவையில் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்



1974 ஏப்ரல் 15] [திரு. பெ. சௌந்திரபாண்டியன்]

சுப்ரீம் கோர்ட்டில் சொல்லப்பட்ட தீர்ப்பில் என்ன இருக்கிறது என்பதை நாம் முதலில் காணவேண்டும். ஆகமங்கள் படித்து தேர்ச்சி பெற்றவர்களுக்குத்தான் அர்ச்சகர்களாவதற்கான வேலை வாய்ப்பைத் தரவேண்டும். யாரையும் நியமித்துக் கொள்ள இது அரசாங்க வேலை அல்ல. மத சம்பந்தமான பொறுப்பாகும். எல்லா மதங்களுக்கும் இந்தப் பொறுப்பு இருக்கிறது என்பது தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

முதலில் நான் எடுத்துக் கூற விரும்புவது மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையில் இருக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும் "அரசாங்கம் போட்ட ஆணை என்ன? அதன்மீது யார் வழக்குத் தொடுத்தார்கள்? வழக்கில் அரசாங்கத் தரப்பில் என்ன என்ன வாதங்கள் எடுத்து வைக்கப்பட்டன? எதிர்தரப்பில் கூறப்பட்ட வாதங்கள் என்ன? இதன்மீது சுப்ரீம் கோர்ட்டில் என்ன நீதி அளிக்கப்பட்டது?" என்கிற விவரங்களை எல்லாம் இந்த உறுப்பினர்களுக்குக் கொடுத்திருக்க வேண்டும். வழக்கு பற்றி அவையில் உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் தெரியுமா என்றால் என்னைப் பொறுத்தவரையில் பல பேர்கள் இந்த விவரங்களை அறியமாட்டார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசாங்கம் இந்தத் தனித் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு முன்னால் என்ன செய்திருக்க வேண்டுமென்றால் நான் முன்பு சொன்னதுபோல அந்த வழக்கு—தீர்ப்பு சம்பந்தப்பட்ட எல்லா விவரங்களையும் தொகுத்து ஒவ்வொரு உறுப்பினருக்கும் வழங்கியிருக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் அதை வழங்குவதற்குத் தவறிவிட்டது என்பதை நான் மெத்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, இனிமேலாவது இதுபோன்ற தீர்மானங்கள் வருகிற நேரத்தில் அதுபற்றிய விவரங்களை எல்லாம் இந்த அவையில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எடுத்துத் தொகுத்துக் கொடுத்தால்தான் உறுப்பினர்கள் பலவற்றையும் கவனித்து, தங்கள் கருத்துக்களை எடுத்து வழங்கத்தக்க சூழ்நிலை இருக்கும். இதுபற்றிய வழக்கில் நீதிமன்றத்தின் தீர்ப்பு அரசாங்க ஆணைக்கு விரோதமாகக் கூறப்பட்டிருக்கிறது. அரசாங்க ஆணை என்ன, அதை எதிர்த்து வழக்காடியவர்களின் கருத்தென்ன. அரசாங்க ஆணைக்கு ஆதாரமாக நமது அட்வகேட் ஜெனரல் ஆணித்தரமாக எடுத்து வாதாடிய கருத்துக்கள் என்ன . .

**திரு. நா. வீராசாமி :** சார், இதை உறுப்பினர் ஆதரிக்கின்றாரா? எதிர்க்கின்றாரா? ஒன்றும் புரியவில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உறுப்பினர் மிகவும் அவசரப்படுகிறார். கடைசியில் என் கருத்தைச் சொல்வேன்.

(முற்பகல் 10.30)

ஆகவே இந்த வழக்கை நடத்தக்கூடிய முழுப் பொறுப்பும் அட்வொகேட் ஜெனரலுக்கு இருக்கிறது. அவர்தான் இந்த அவைக்குத் தகுந்த காரணங்களையும் தகுந்த பரிகாரத்தையும் தேடுவதற்கும் விளக்கம் அளிப்பதற்குமான பொறுப்பிலே இருக்கிறாரே தவிர என்னைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இதற்குத் தகுந்த விளக்கம் அளிப்பார்கள் என்று ஒப்புக்கொள்ள முடியாது.

அட்வொகேட் ஜெனரலும் இந்த அவையிலே அங்கம் வகிக்கக் கடமைப்பட்டிருக்கிறார். பேரவைத் தலைவர் அவர்களே, அவரை இந்த அவைக்கு வரவழைத்து அவருடைய வாதத்தையும் அவர் தரப்பிலே சொல்லப்பட்ட கருத்துக்களையும் அரசாங்கத்தின் சார்பிலே சொல்லப்பட்ட சான்றுகளையும் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறார். அவரை இந்த அவைக்கு அழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைமைச் செயலகத்தின் முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. ராயப்பா அவர்கள் ஒரு வழக்கைத் தொடர்ந்தார். அந்த வழக்கிலே அவருக்குச் சாதகமாக தீர்ப்பு இல்லையென்றவுடனே அவர் சுப்ரீம் கோர்ட்டிற்கே மீண்டும் ஒரு மேல்முறையீடு செய்துகொண்டார்கள் என்பதை நாம் எல்லாம் அறிவோம், இந்த நாடும் அறிந்திருக்கிறது. இந்த அரசாங்கம் போட்ட ஒரு ஆணையின் மீது சுப்ரீம் கோர்ட்டு ஒரு தீர்ப்பை அளித்தது, இந்த அரசாங்கம், அதை ஏன் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளவில்லை? இதற்கு நம்முடைய அட்வொகேட் ஜெனரல் அவர்கள் முயற்சி எடுத்தார்களா? அவர் அப்படி முயற்சி எடுக்கத் தவறியதன் காரணம் என்ன? இதற்கு விடை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



காவிரி நதிநீர்ப் பிரச்னை வந்தபொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே உள்ள எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளையும் கூட்டிப் பேசி ஒருமித்த முடிவு எடுத்த காட்சியைப் பார்க்கிறோம். இது சமுதாயத்தின் பிரச்னை, அரசாங்கத்தின் ஆணைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட பிரச்னை, முக்கியமான பிரச்னையாக இருப்பதால் ஏன் சர்வ கட்சித் தலைவர்களையும் அழைத்து இதைப்பற்றி ஒரு தீர்வு காணுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

சுப்ரீம் கோர்ட்டிலே ஏற்கனவே ஒரு வழக்கிலே, கோலக்நாத் வழக்கிலே சீப் ஜஸ்டிஸ் திரு. சுப்பா ராவ் அவர்கள் ஒரு தீர்ப்பை வழங்கினார்கள், அப்போதும் பார்த்தோம், அடிப்படை உரிமைகளை மாற்ற முடியாது, கான்ஸ்டிட்யூவண்ட் அசெம்பிளியை கூட்டித்தான் பண்டமண்டல் ரைட்டை மாற்ற வேண்டுமென்று தீர்ப்புக் கூறியதை நாம் பார்த்தோம், அந்த நேரத்திலே என்ன நடந்தது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்திலே 13-வது ஆர்டிகிளிலே

'Any law which is repugnant to the Articles in this Chapter (that is, Fundamental Right) is inoperative என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நேரத்திலே What is Law என்பதையும் பார்க்க வேண்டும்.

Law includes an order, notification, regulation or custom having the force of law either in All-India or in any area.

என்பதையும் நாம் கருத்திலே கொள்ள வேண்டும். சுப்ரீம் கோர்ட்டிலே திரு. சுப்பா ராவ் கொடுத்த தீர்ப்பு சரிதானா என்று பார்க்கவேண்டும். அது ஒரு பிரச்னையாக ஆகி, அகில இந்தியாவிலும் அது ஒரு சட்ட சிக்கலை உருவாக்கிற்று என்பதை மறந்துவிட முடியாது.

அந்த நேரத்திலே என்ன செய்தார்கள்? குடியரசுத் தலைவர் அவர்கள் சுப்ரீம் கோர்டிலே உள்ள எல்லா நீதிபதிகளையும் ஒரே இடத்திலே அழைத்து அமரச்செய்து இந்தச் சட்ட சிக்கலுக்கு ஒரு பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக்கொண்டதை நாம் பார்த்தோம். அப்போது சுப்ரீம் கோர்டிலே இருந்த எல்லா நீதிபதிகளும் ஒன்று சேர்ந்து ஒரே இடத்திலே அமர்ந்து ஏறத்தாழ 3 மாதங்கள் இதைப்பற்றி ஆராய்ந்து அடிப்படை உரிமையை மாற்றுவதற்கு கான்ஸ்டிட்யூவண்ட் அசெம்பிளிக்குத்தான் அதிகாரம் இருக்கிறது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது.

## சாதி, பிரிவு, உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையே இருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள், ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்க இயலும் வகையில் அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து

[திரு. பெ. சௌந்தபாண்டியன்] [1974 ஏப்ரல் 15

ஆகவேதான் நான் கேட்கிறேன், அரசாங்கத்தின் ஆணைக்கு எதிராக ஒரு தீர்ப்பு கொடுக்கப்பட்டவுடன் ஏன் நம்முடைய அரசாங்கம் உடனடியாக குடியரசுத் தலைவரை அணுகி சுப்ரீம் கோர்டிலே உள்ள எல்லா நீதிபதிகளையும் அழைத்து இந்த சட்ட சிக்கலுக்கு ஒரு பரிகாரம் காணக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். நம்முடைய அட்வொகேட் ஜெனரல் என்ன செய்தார்? ஏன் இந்த ஆலோசனையை அரசாங்கத்திற்கு வழங்கவில்லை.

என்னுடைய பணிவான வேண்டுகோள் என்னவென்றால், நாம் மத்திய அரசினிடத்திலே இந்தத் தீர்மானத்தை அனுப்பி இதற்கு ஒரு பரிகாரம் காண வேண்டுமென்று கேட்கிற நேரத்திலே அதனாலே பரிகாரம் கிடைப்பதற்கு நீண்ட நெடுங்காலம் ஆகும். ஏற்கெனவே சுப்ரீம் கோர்டிலே கொடுக்கப்பட்ட ஒரு தீர்ப்பிலே ஏற்பட்ட இதுபோன்ற சட்ட சிக்கலுக்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்களோ அந்த ஏற்பாட்டையே இதற்கும் செய்ய வேண்டும் என்று ஏன் நம்முடைய அரசாங்கம் கேட்டுக்கொள்ளக்கூடாது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு திருத்தம்கூடக் கொடுத்திருக்கிறார்கள், அதைப்பற்றி அவர்கள் விளக்கம் சொன்னால் நன்றாக இருக்கும்.

குடியரசுத் தலைவர் அவர்கள் ஏதாவது கருத்தைப் பெறவேண்டுமானால் சுப்ரீம் கோர்ட்டிற்கு அனுப்பி அவர்களுடைய ஒப்பினியனைப் பெறலாம் என்றுதான் இருக்கிறது. அவர்கள் சொல்வது முன்னாலே ஒரு தீர்ப்பு வருமானால் பின்னாலே அந்தத் தீர்ப்பை எதிர்த்து ஒரு வழக்கு வருகின்றபொழுது நம்முடைய உச்ச மன்ற நீதிமன்ற நீதிபதிகள் சேர்ந்து முடிவெடுப்பார்கள் என்பதுதான். அதைத்தான் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

குடியரசுத் தலைவர் நீதிபதிகளை அழைத்துப் பேசி பரிகாரம் காணக்கூடிய முறையில்லை. குடியரசுத் தலைவர் வேண்டுமானால் ரெபரன்ஸ் கேட்டு அவர்களிடமிருந்து ஒபினியன் வாங்கலாம், அப்படி நாம் வாங்கினால்கூட அது நமக்குப் பயன்படாது. காரணம் அதுகூட கோர்ட்டைக் கட்டுப்படுத்தாது. நாம் செய்கின்ற முறைப்படி அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட்டால் உடனடியாகப் பலன் கிடைக்கும். ஆகவே நாம் இப்போது எடுத்திருக்கக்கூடிய முயற்சிதான் சரியான முயற்சி.



சாதி, பிரிவு, உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையே இருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள், ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்க இயலும் வகையில் அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து

1974 ஏப்ரல் 15] [திரு. செ. மாதவன்]

அவர்கள் சொல்கிறபடி எல்லா நீதிபதிகளையும் குடியரசுத்தலைவர் அழைத்துப் பேசுகின்ற முறை எதிலே வருகிறது என்று எனக்குத் தெரியவில்லை. குடியரசுத் தலைவர் ஒபினியன் கேட்கலாம், அவர்கள் யோசனை தெரிவிப்பார்கள், அது பயன் உள்ளதாக இருக்காது. அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று நாம் சொல்கிறோம். அதைப்பற்றி அவர்களுடைய கருத்து என்ன?

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** குடியரசுத் தலைவர் மூலமாக ஏன் முன் முயற்சி எடுக்கவில்லை என்று கேட்கிறேன். அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தைப்பற்றிப் பின்னாலே சொல்ல இருக்கிறேன் . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்த முயற்சி தேவையில்லை என்பது தான் எங்களுடைய கருத்து. நம்முடைய சட்டத்தைப்பற்றி உச்ச நீதி மன்றத்திலே ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே நாம் கொள்கையை நிறைவேற்றமுடியவில்லை. அதை மாற்றுவதற்கு உடனடியாக அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படவேண்டும், அப்படித் திருத்தப்பட்டால்தான் நாம் நம்முடைய கொள்கையை நிறைவேற்றமுடியும் என்று கொண்டுவந்திருக்கிறோம். இதற்குப் பதிலாக மறுபடியும் ரெபரன்ஸ் கேட்பதுபோன்ற முறையில் ஈடுபட்டால் காலதாமதம்தான் ஆகும், ரெபரன்ஸ் என்ற அடிப்படையிலே நாம் செய்தாலும்கூட அது செல்லாது என்று சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதிலே குடியரசுத் தலைவர் மூலமாக எல்லா நீதிபதிகளையும் கேட்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள், அது எந்த அரசியலமைப்புச் சட்டத்திலே இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை, அவர்கள் அதைப்பற்றி விளக்கினால் பரவாயில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** நான் இந்தத் தீர்மானத்திற்கு விரோதமாகப் பேசவில்லை. ஏன் முதல் முயற்சியாக எடுத்துக்கொள்ளவில்லை என்றுதான் கேட்டேன், அதைச் சட்ட அமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இப்படி ஒவ்வொரு முயற்சியாக எடுத்துக்கொண்டு போய் . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சட்ட அமைச்சர் தெரிந்துகொள்வதற்காகக்கூடக் கேட்கலாம். உச்ச நீதி மன்றத்தினுடைய தீர்ப்பை மறுபடியும்

*[மாண்புமிகு திரு. செ. மாதவன்] [1974 ஏப்ரல் 15*

உச்ச நீதி மன்றத்திற்கே சென்று அது செல்லுமா என்று ஆராய்வதற்கு எந்த அரசியல் அமைப்புச் சட்டத்திலே இடம் இருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** ஏற்கெனவே கோலக்நாத் வழக்கிலே எல்லா நீதிபதிகளையும் வைத்து ஒரு முடிவு எடுத்திருக்கிறார்களே, அந்த முடிவைப்போல் இந்தப் பிரச்சினையிலும் எடுப்பதற்கு நாம் ஏன் முயற்சி எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதைத்தான் கேட்கவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** விளக்கத்தைத்தான் சொன்னேன். அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படவில்லை. அவர்கள் எதைக் குறிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை. எப்படி ஏற்படுகிறது என்றால், முன்னாலிருந்த நீதிபதி சில தீர்ப்புகளை ஃபண்டமெண்டல் ரைட்டைப்பற்றிக் கொடுக்கிறார்கள். அதே சப்ஜக்டைப்பற்றி பிறகு உள்ள நீதிமன்றங்களில் மறுபரிசீலனைக்கு வருகிறது. அப்பொழுது நீதிமன்றங்களில் எல்லா நீதிபதிகளும் முடிவெடுக்கலாம். எனவே நாட்டிற்கு முக்கியமான முடிவு என்று கருதினால் தவிர குடியரசுத் தலைவரையோ, பாராளுமன்றத்தையோ, மத்திய அரசையோ நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று உத்தரவிட, உத்தரவு போட உரிமை கிடையாது. உத்தரவு இடப்படவும் இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, ஒரு நாட்டின் முன்னேற்றத்தில் ஃபண்டமெண்டல் ரைட்ஸ் குறுக்கிட்டால் எல்லா ஜட்ஜ்களும் சேர்ந்து பரிசீலிக்கின்ற முறை இருக்கிறது. நம்முடைய தமிழ் நாட்டின் ஆணைக்கு விரோதமாக தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. ஒரு சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகப் போடப்பட்ட ஆணையாகும் அது. ஆகவே, ஏன் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்படிப் படிப்படியாக முயற்சியெடுக்க வேண்டுமென்பதற்குப் பதிலாக ஒரேயடியாக அரசியல் சட்டத்தையே திருத்திவிட்டால் தமிழகம் மட்டுமல்லாமல் இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களும் அப்படிச் செய்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில்தான் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் படிப்படியாகச் செல்ல வேண்டுமென்று வலியுறுத்தி தீர்மானத்தின் மொத்தக் கருவையும் சிதைத்துவிடுவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*1974 ஏப்ரல் 15]*

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** நான் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். நான் இதை என்னுடைய வாதமாக வைக்கிறேனே தவிர பிடிவாதமாக நிச்சயமாகக் கேட்க மாட்டேன். ஏனென்றால் அரசாங்கம் ஏன் முயற்சியெடுக்கவில்லை என்றுதான் கேட்கிறேனே தவிர, நம்முடைய அட்வகேட் ஜெனரல் என்ன முயற்சியெடுத்தார்கள் என்று கேட்கிறேனே தவிர வேறொன்றுமில்லை.

ஆகவே, இந்த நல்ல தீர்மானத்தை இந்த அரசாங்கம் கொண்டு வந்திருப்பதை உள்ளபடியே நான் வரவேற்கிறேன். அதேநேரத்தில், இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு மிக மிக கால தாமதம் ஆகாமல் எவ்வளவு விரைவில் திருத்துவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமோ அந்த அளவிற்கு முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, என்னுடைய திருத்தத் தீர்மானத்தையும் வலியுறுத்தி மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை முழுமனத்தோடு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*** திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவரவர்களே, மாண்புமிகு இந்து சமய அறக்கட்டளை அமைச்சரவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை ஆதரித்து நானும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானம் மிகவும் அவசியமான ஒரு தீர்மானமாகும். இந்தியாவிலே எட்டு கோடி மக்கள் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள், முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், கிறித்துவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லக்கூடிய ஒரு பகுதியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்கள் ஜாதியால் ஒதுக்கப்படுவது மட்டுமல்லாமல் தீண்டப்படாதவர்களாக ஒதுக்கப்பட்டு வந்ததை இன்றைய அரசு போக்குகின்ற அளவில் பல சட்டங்களைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் எந்தக் கோவிலுக்கும் சென்று தரிசனம் செய்ய உரிமைகள் வழங்கப்பட்டிருந்தாலும் கோயிலின் உள்ளே நுழையக் கூடாது என்ற பெரிய அநீதி இந்த நாட்டில் இருந்தது. அந்த அநீதிக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற முறையிலே காந்திஜி அவர்கள் ஆலயப் பிரவேசம் செய்தது நமக்கு நினைவில் இருக்கிறது.

## சாதி, பிரிவு, உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையே இருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள், ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்க இயலும் வகையில் அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து

[திரு. ஆ. கு. சுப்பையா] [1974 ஏப்ரல் 15

ஆலயப் பிரவேசம் என்று சொல்லும்பொழுது உள்ளே சென்று தரிசிப்பதற்கு மட்டும் ஒரு உரிமை வழங்கப்பட்டது. இன்றைக்கு எடுத்துக்கொண்டாலும்கூட நமது அரசே சட்டம் கொண்டுவந்த பிறகு சில கோவில்களில் தர்மகர்த்தாக்கள் போடப்பட்டிருக்கிறது. அந்தக் கோவில்களில் அரிசனங்கள் துணிவாக உள்ளே நுழைய முடியாது. எந்தவொரு கோவிலிலும் கண்டிப்பாக சட்டப்படி ஒரு தர்மகர்த்தா இருந்தே ஆக வேண்டுமென்று நம்முடைய அரசு சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அம்மாதிரி கொண்டு வந்திருக்கும் சட்டப்படி பார்த்தால் ஒவ்வொரு கோவிலுக்கும் ஒரு தாழ்த்தப்பட்டவர் அறங்காவலராக இருந்து அதன் நிர்வாகத்தை நடத்துவதற்கு உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அவ்வாறு உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்ற அந்தச் சந்தர்ப்பத்திலே இன்றைக்கு தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் தமிழகத்திலே 70 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். அந்த இந்து சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் இந்து கோயில்களில் சென்று அர்ச்சகர்களாக, பூசாரிகளாக இருக்கக்கூடாது என்றால் அது எவ்வளவு பெரிய அநீதி என்பதை இன்றையதினம் பார்க்க வேண்டும்.

இந்த அரசியல் சட்டத்தை இன்றைக்கு வேதாந்தமாகப் பேசுகிறார்கள். அரசியல் சட்டம் ஏதோ ஒரு காலத்திலே தயாரிக்கப்பட்டது. அன்றைய சூழ்நிலைக்கேற்ப அன்றைக்கிருந்தவர்கள் அரசியல் சாசனத்தை எழுதி வைத்திருக்கிறார்கள். இன்றைய சமுதாயத்தில் பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. அந்த மாறுதல்களுக்குத் தக்கவாறு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டியிருக்கிறது.

மன்னர் மானிய ஒழிப்பு வந்த காலத்தில் இந்தியாவில் பெரிய சர்ச்சை ஏற்பட்டு அதனால் ஏற்பட்ட விளைவுகளை நாம் அறிவோம். அந்த மானியம் ஒழிக்கப்பட வேண்டுமென்ற நல்லெண்ணம் உள்ளவர்கள், நாட்டின் மீது பற்றுள்ளவர்கள், மக்கள் மீது அதிக அக்கறை உள்ளவர்கள் ஒரு அணியாக நின்று அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று மிகப்பெரிய இயக்கத்தை நடத்தி இந்திய சரித்திரத்தில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியதையும் நாம் அறிவோம்.



சாதி, பிரிவு, உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையே இருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள், ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்க இயலும் வகையில் அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து

1974 ஏப்ரல் 15] [திரு. ஆ. கு. சுப்பையா]

ஆகவே, 20, 24 தடவைகள் அரசியல் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே இந்து சமுதாயத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்கள் கோவில்களிலே சென்று அர்ச்சகம் செய்ய அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்பதற்காக இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அவ்வாறு திருத்தம் செய்தால் இந்தியாவிலே உள்ள ஏறத்தாழ 8 கோடி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்குகின்ற ஒரு சட்டத்தை அந்தந்த இராஜ்யத்திலே இருக்கின்ற இராஜ்ய அரசுகள் நிறைவேற்ற முடியுமென்ற நல்லெண்ணத்தோடு தமிழக அரசு இந்தச் சட்டத் திருத்தம் அவசியம் என்று இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அந்தத் தீர்மானத்தின் பிரகாரம் தமிழக மக்களுக்கு, தமிழ்நாட்டிலுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கு நீதி வழங்குகின்ற ஒரு தீர்மானத்தை இன்றைய தினம் நம்முடைய சபை நிறைவேற்றுகிறது என்று சொன்னால் இது 70 இலட்சம் மக்களுக்கு பெரியதொரு நல் வாய்ப்பை ஏற்படுத்துகின்ற தீர்மானமாகும். இந்தத் தீர்மானத்தை நாம் அவசியம் நிறைவேற்றுவதன் மூலமாக நாம் கொண்டு வந்துள்ள சட்டங்களை, பல சட்டங்களைத் தீவிரமாக அமல் படுத்துவது மட்டுமல்லாமல் மேலும் மேலும் தாழ்த்தப்பட்டவர்களுக்காகக் கொண்டு வரும் சட்டங்களை இந்திய குடியரசுச் சட்டம் செல்லாது என்று சட்டம் சொல்லுகின்ற நிலையை மாற்றும் நிலையை நாம் ஏற்படுத்த முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள நான் விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் ஒரு குறிப்பிட்ட தொழிலைத்தான் செய்ய வேண்டுமென்று சொல்வது மனித சமுதாயத்தில் எவ்வளவு பெரிய அநீதி என்பதைப் பார்க்க வேண்டும். ஜீவாதார உரிமைகள் பேசும்பொழுது தாழ்த்தப்பட்டவர்கள்தான் தோட்டித் தொழில் செய்ய வேண்டும், நகரசுத்தித் தொழிலாளர்களாக இருக்க வேண்டும் என்று சொல்லும் அளவில் இன்றைக்கு நிலைமைகள் இருக்கின்றன.

அந்த நிலைமைகளை மாற்றுகின்ற அளவில் நமது அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து இம்மாதிரி நகரசுத்தித் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்கள் சகல பேர்களுக்கும் அந்த வாய்ப்பு, வசதிகளை ஏற்படுத்துவது மிகவும் அவசியம்.

[திரு. ஆ. கு. சுப்பையா] [1974 ஏப்ரல் 15

அதைப்போலவே, அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு இன்றையதினம் தீண்டப்படாதவர்களாக இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள், தீண்டப்படாதவர்கள் என்ற நிலை நம்முடைய நாட்டில் இருக்கிறது. அதைப் போக்கும் முறையிலே சட்டப்பிரகாரம் அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவது மிகவும் அவசியமாகிறது.

அதை உத்தேசித்து தமிழகத்திலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இந்த அரசு முன்னால் கொண்டு வந்திருக்கும் பல சட்டங்கள் இருக்கின்றன. அதைப்போல இன்றையதினம் அர்ச்சகர்களாக வருவது என்பது அந்தக் கோவிலுக்கு உள்ளே நுழைந்து மற்ற ஜாதியைச் சேர்ந்தவர்கள் மணியடிக்கலாம், இவர்கள் அடிக்கக்கூடாது என்றால் அப்படி எதற்காக ஒரு தெய்வம் இருக்கிறது என்று எங்களுக்குப் புரியவில்லை.

ஆகவே, தெய்வம் என்பது எல்லோருக்கும் பொதுவானது, இந்து மக்கள் அத்தனைபேர்களுக்கும் பொதுவான ஒரு தெய்வம். தாழ்த்தப்பட்டவர்கள் உள்ளே சென்று மணியடிக்கக்கூடாது, பூசை செய்யக்கூடாது என்றால் எப்படி ஏற்றுக்கொள்வது என்ற கேள்வி எழுகிறது.

ஆகவே, அந்த முறையிலே பார்க்கும்பொழுது இன்றையதினம் நல்லதொரு தீர்மானத்தை அரசாங்கம் கொண்டு வருகிறது. இந்தத் தீர்மானத்தை முழுக்க ஆதரிக்க வேண்டிய பொறுப்பு சகல பேர்களையும் சார்ந்ததாகும். இதிலே எந்தவிதமான கட்சிப் பாகுபாடும் கிடையாது. இந்தத் தீர்மானம் சம்பந்தமாக எந்த அரசியல் பேதமும் கிடையாது. ஆகவே, சகல பேர்களும், சகல கட்சிகளும் இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக ஆதரிக்கின்ற முறையிலே, என்னுடைய கட்சியின் சார்பிலே இந்தத் தீர்மானத்தை முழுக்க முழுக்க ஆதரித்து இந்தத் தீர்மானத்தை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டு மத்திய அரசு அரிசன மக்களுக்கு அநீதி இழைக்காத அளவிலே இந்தத் திருத்தத்தைச் செய்து, அரிசன மக்களுக்குக் கொண்டுவந்துள்ள சட்டம் செல்லுபடியாகும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, சமூக சீர்திருத்தம் செய்யப்பட வேண்டுமென்பதை அடிப்படையாக வைத்து இந்த நாட்டில் எழுந்த சுயமரியாதை இயக்கத்தின் வாரிசுகளாக இருக்கும் திராவிட



1974 ஏப்ரல் 15] [திரு. இராம. அரங்கண்ணல்]

முன்னேற்றக் கழகத்தால் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த நாளிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், உயர்ந்த மக்கள் என்று அழைக்கப்படுகின்ற எல்லா சமூகத்தினரும் சம உரிமையைப் பெற்று மனிதன் மனிதனாகத்தான் இருக்க வேண்டுமென்ற உன்னதமான கோட்பாட்டுக்காக பல நல்ல காரியங்களைச் செய்து வருவது இந்தியாவெங்கும் அறிந்த உண்மையாகும்.

அந்த வகையில் நம்முடைய இந்து அறநிலைய விதிகளில் 55-வது பிரிவில் ஒரு சாதாரணத் திருத்தத்தைச் செய்து அர்ச்சகர்களாக யாரும் வரலாம் என்ற கட்டளையை நம் அரசு பிறப்பித்தது. அந்தச் சாதாரணக் கட்டளையை எதிர்த்து மேல் கோர்ட்டுக்குப் போய் அது இந்து மதத்திற்குள்ளே தலையிடுவதாகும் என்று சொல்லி தடை பிறப்பிக்கப்பட்டு அதை நீக்குவதற்காக அரசியல் சட்டமே திருத்தப்பட வேண்டுமென்ற எண்ணத்தில் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தை அநேகமாக எல்லோரும் சேர்ந்து ஏகோபித்து நிறைவேற்றுவோம் என்று நான் நம்புகிறேன்.

நண்பர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பேசிய நேரத்தில் உற்சாகமாக ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். சமுதாயத்தில் கீழ்ப்பட்டவன், தாழ்த்தப்பட்டவன் என்ற எண்ணம் இருக்கக்கூடாது என்பது தான் இந்து சமயத்தின் கோட்பாடு என்று சொன்னார்கள். இந்து சமயம் ஒரு விரிந்த கடல். அதனுடைய கோட்பாடு ஸ்ரீ சங்கராச்சாரியார் அவர்களால் சொல்லப்பட்டது ஒரு தடவை. வேதத்திலும் உபநிஷத்திலும் தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லப்பட்டாலும் என்னைப் பொறுத்தவரை அப்படித் தாழ்த்தப்பட்டவர்கள் என்று இருக்கக்கூடாது என்று விளக்கம் கொடுத்தார்கள். இதே விளக்கத்தை ஆதி சங்கரரும் கொடுத்தார்கள்; மத்வரும் கொடுத்தார்கள்.

விசிஷ்டாத்வைதத்தைப் போதித்த இராமானுசரும் மிகுந்த உருக்கத்தோடு யார் நாமம் போடுகிறார்களோ அவர்கள் எல்லாம் அரி புத்திரர்கள்தான் என்று சொன்னார்கள். அது உதட்டளவில் ஒப்புக் கொள்ளும் கருத்தா? உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகிறதா நாட்டில் என்று பார்த்தால் அதுதான் சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது

[திரு. இராம. அரங்கண்ணல்] [1974 ஏப்ரல் 15

எங்களைப் பொறுத்த அளவில் நாங்கள் என்ன கொள்கை உடையவர்கள் என்பது நாடறிந்த விஷயம். மனிதர்களைத் தான் தெய்வமாக மதிக்கிறோமே தவிர மற்றத் தெய்வங்களின் மீது என்னைப் போன்றவர்களுக்குக் கொஞ்சம் கூட நம்பிக்கை கிடையாது. நம்பிக்கை இல்லை என்றாலும் அந்த நல்ல இடங்களில் எல்லாம் எவ்வளவு புனிதமான வகையிலே, அருமையான சிறப்புக்களைப் பெருக்குகின்ற வகையிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்று பரிபாலனம் செய்து வருகிறது என்பதை நாடு அறியும். எந்த எண்ணமாக இருந்தாலும் அடுத்தவன் மனதைப் புண்படுத்தக்கூடாது, தானாகக் கனியவேண்டும்; எண்ணங்களால் ஒவ்வொரு மனமும் கனியவேண்டுமென்ற கொள்கையுடையது திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்தத் திருத்தத்தைப் பொறுத்த அளவில் எல்லோரும் ஏற்றுக் கொள்கிறோம். இந்தியாவில் பீகாரானாலும், உ.பி. ஆனாலும், ஒரிஸ்ஸாவானாலும் எந்த மாநிலமாக இருந்தாலும் ஆதித் திராவிட மக்களுக்கு உரிமைகள் கொடுக்கப்பட வேண்டுமென்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் உரிமைகளைக் கொடுக்க வேண்டுமென்று சட்டம் வருகிற நேரத்தில் மேலே இருக்கிறவர்கள் ஆதரவாக இருப்பதில்லை.

எல்லோரும் ஒன்றுதான்; இதற்காகத்தான் காந்திஜி பாடுபட்டார்; அரிசன் என்ற பெயரை வைத்தார் என்றெல்லாம் பேசுகிறவர்கள் அந்த உரிமைகளைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தருகிறார்களா என்று பார்த்தால் இல்லை.

இப்படி ஒரு திருத்தம் இங்கே வரவேண்டுமென்று திரு. சௌந்தர பாண்டியன் பேசினார். அவர் என்ன பேசினார் என்றே என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதே எண்ணத்தை மேலே இருப்பவர்கள் கொண்டு எட்டு கோடி மக்களுக்கு உரிமை வழங்கும் சட்டத் திருத்தத்தை நாங்களே கொண்டு வருகிறோம் என்று செய்திருக்கக்கூடாதா?

மதத்திற்குள்ளே நுழையக்கூடாது, இந்து சமயக் கோட்பாட்டுக்குள் அழையக்கூடாது என்பதெல்லாம் விக்டோரியா காலத்து சித்தாந்தம். அதை வைத்துக் கொண்டு இந்தப் புரட்சிக் காலத்தில் அழுது கொண்டிருக்க முடியுமா? மனிதனுக்கு எவ்வளவோ உரிமைகள் தருகிறோம்.

நண்பர் சுப்பையா அவர்கள் சொன்னது போல் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்ட பிறகு பல பொருளாதார உரிமைகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தில் அவர்களுக்கு



1974 ஏப்ரல் 15] [திரு. இராம. அரங்கண்ணல்]

உத்தியோகம் தருகிறோம் என்று சொல்லுகிறோம். அரசாங்க அதிகாரியாக அவர்கள் கோயிலுக்கு வந்தால் எல்லோரும் கும்பிடுகிறார்கள். எந்த சாதியைச் சேர்ந்தவர் என்று பார்ப்பதில்லை. ஆனால் அந்த அதிகாரியின் மகன் அர்ச்சகராகத்தான் இருப்பேன், ஆண்டவனைப் பூஜிப்பேன் என்று சொன்னால் உரிமை இல்லை என்று ஏற்றுக் கொள்ளாத நிலை இருக்கிறது. அந்த அளவுக்கு உள்ள மாற்றம் ஏற்படாத நிலைமை இருக்கிறது.

இந்தச் சட்டத் திருத்தத்திற்கு வேறு விதமான வியாக்கியானம் கூடச் செய்யலாம். நல்ல சட்டம் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்தது என்றும் சொல்லலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தார் மோசமான அளவில் கோயில்களிலிருந்து வெளியேற்றி அர்ச்சகர்களாக ஆதித் திராவிடமக்களை நுழைக்கிறார்கள் என்ற வாதங்களை எல்லாம் பேசத்தான் போகிறார்கள். எப்படியாவது பேசி, செய்வது தவறு என்று மக்கள் மனதில் அப்படிப்பட்ட குழப்பங்கள் ஏற்படச் செய்வார்கள். அந்தக் குழப்பங்கள் எல்லாம் ஏற்படாமல் இந்த உரிமைகளை வழங்க நிச்சயமாக அனைவரும் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவை எடுத்துக் கொள்வோம். அரசியல்வாதிகள்—எந்தக் கட்சியாக இருந்தாலும் சாதி பேதம் கூடாது என்று சொல்லுகிறார்கள். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்து காட்டியது போல் எந்த முதலமைச்சரும் செய்து காட்டியதில்லை. இந்த முதலமைச்சர் செய்து காட்டிய காரணத்தால் அது சாதாரணமாகப் போய்விட்டது. இந்தியாவில் இருக்கும் எந்த முதலமைச்சருக்கு தைரியம் வந்தது அல்லது அரசியல் கட்சித் தலைவருக்குத் தைரியம் வந்தது? தன்னுடைய குடும்பத்திற்கு ஒரு பெண்ணை, புறக்கணிக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்த பெண்ணை, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பெண்ணைத் தன்னுடைய மருமகளாக 'நீயும் என்னுடைய மகள்தான்' என்று ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவம் அரசியல்வாதிகளில் இந்தியாவில் யாருக்கு ஏற்பட்டது—நம்முடைய முதலமைச்சருக்குத்தான் ஏற்பட்டது. யாராவது பாராட்டிப் பேசினார்களா?

பாராட்டிப் பேச பல விஷயங்கள் இருக்கின்றன, இது சாதாரணமானது என்று கருதுகிறார்களா? திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் எடுத்த முடிவு என்ற காரணத்தால் அது சாதாரணமானது என்று கருதப்படுகிறதா?

**சாதி, பிரிவு, உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையே இருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள், ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்க இயலும் வகையில் அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து**

*[திரு. இராம. அரங்கண்ணல்]* *[1974 ஏப்ரல் 15*

நான் இதைச் சுட்டிக்காட்டக் காரணம், தலைவர் மட்டுமல்ல, சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த நாங்கள் சாதி ஒழிப்பில் எவ்வளவு தீவிரமாக உள்ளவர்கள் என்பதை உணரவேண்டும்.

மனித நீதி எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். மனித நீதி, பொருளாதார நீதி, சாதி இல்லாத நிலை பிராமணர்களையும் சேர்த்து வரவேண்டும். நாங்கள் எங்களுடைய உரிமைகளைக் கேட்ட காலத்தில் பிராமணத் துவேஷி என்று தூற்றப்பட்டோம். ஆனால் இன்று பிராமணர்களே அப்படிக் கூறவில்லை. நீங்கள் மனித நீதிக்காகத்தான் பாடுபட்டீர்கள் என்று சொல்லுகிறார்கள்.

ராஜாஜியைப் போன்ற சிறந்த புருஷர் இதைப் பொறுத்த அளவில் யாரும் இருக்க முடியாது. அவர் சாதி விட்டு சாதி தன்னுடைய மகளுக்குத் திருமணம் செய்து காட்டினார். கொள்கையைப் பேசவில்லை, செய்து காட்டினார். அப்படிப்பட்ட தலைவர்கள் மேலே இல்லாத குறையோ, இருக்கிற தலைவர்கள் கூட உதட்டளவில் பேசி ஆதித் திராவிட மக்கள் ஓட்டுக்களைப் பெற வேண்டுமென்ற எண்ணத்தில் இருந்து காரியம் வருகிற நேரத்தில் செய்யக்கூடாது என்று கருதுகிற காரணத்தால் சமூக நீதி கிடைக்காமல் சிறு காரியத்திற்குக் கூட வாதாடி, சண்டை போட்டு அதற்குப் பிறகு பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

ஆனால் நம்முடைய மன்றத்தைப் பொறுத்த அளவில் இந்தத் தீர்மானத்தை எல்லோருமே ஏகமனதாக ஏற்றுக் கொண்டு நிறைவேற்றித் தருவார்கள் என்று கருதுகிறேன். இது சாதாரணமான காரியம் அல்ல. இதனால் அர்ச்சகர்களாகத்தான் அரிசன மக்கள் போகப் போகிறார்கள் என்பதும் அர்த்தமல்ல. அவர்கள் அர்ச்சகர்களாகத்தான் போகப் போகிறார்கள் என்பது எதிர்காலத்தில் நடக்கிற காரியம் அல்ல. யார் யாருக்கு என்னென்ன உரிமைகள் உண்டோ அந்த மனித உரிமைகள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென்ற பெரிய எண்ணத்தைக் கொண்டுள்ள இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த கட்சியின் தொண்டனாக இருக்கிறேன் என்ற மகிழ்ச்சியைத் தெரிவித்து அமர்கிறேன்.

*(முற்பகல் 11-00)*

**திரு. கே. கந்தசாமி :** தலைவர் அவர்களே, இன்று தமிழக அரசின் சார்பாக ஜாதியின் பெயரால் நியமிக்கப்படுகிற கோவில் பூசாரிகள் ஒரு குறிப்பிட்ட இனத்தவர்களுக்கு மாத்திரம் என்ற நிலையை மாற்றி இந்து சமுதாயத்தைச்

**சாதி, பிரிவு, உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையே இருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள், ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்க இயலும் வகையில் அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து** 

*1974 ஏப்ரல் 15]* *[திரு. கே. கந்தசாமி]*

சேர்ந்த யாரும் தகுதி உடையவர்களாக இருந்தால் அவர்களை பூசாரிகளாக நியமிக்கலாம் என்ற விதத்தில் சட்டத்தைத் திருத்தும் முறையில் கலைஞர் அவர்களின் அரசு கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை பார்வேர்ட் ப்ளாக் கட்சியின் சார்பாக மனதார வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

இந்தச் சட்டம் உண்மையிலே—இந்து மதத்தின் கோட்பாடு, அடிப்படைத் தத்துவமே ஜாதியின் பெயரால் உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற நிலை இருக்கக்கூடாது என்பதுதான். அப்படியிருந்தும்கூட ஆகமத்தின் பெயரால், வேதத்தின் பெயரால், சாஸ்திரங்களின் பெயரால்—பல காலங்களில் தோன்றி யுள்ள பல மகான்கள் ,பல பெரியோர்கள் உயர்ந்த தத்துவங்களைச் சொல்லி யிருந்தாலும் சரி—நடைமுறையில் பிழைப்பதற்காக இதைத் தொழிலாக மாற்றிக் கொண்டவர்கள் மதத்தின் பெயரால் பல தவறுகளைச் செய்து இந்து மதத்தை பழிக்கக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தியிருப்பது ஒவ்வொரு இந்துவும் வருத்தப்படக் கூடியதாகும் என்று வேதனையோடு கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆக, இன்று நாத்திகமும், இந்து மதத்தைப் பற்றி இழிவாகப் பேசுகிறவர் களும் அதிகமாக ஆகியிருக்கிறார்கள் என்று சொன்னால் அதற்காக நான் அவர்களைக் குறை கூற மாட்டேன். இந்து மதத்தின் அடிப்படைக் குறைபாடுகள்தான் அதற்குக் காரணம். இந்து மதத்தின் பெயரால் இழைக்கப் படுகிற தவறுகள்தான் அதை உண்டாக்குகிறது.

காந்தி அடிகள்கூட கூறியிருக்கிறார்கள். ஹரிஜன் என்றால் ஹரி என்றால் காட், ஜன் என்றால் ஸன், ஹரிஜன் என்றால் கடவுளின் குழந்தைகள் என்று கூறி கடவுளின் குழந்தைகளாக இருப்பவர்களை தீண்டப்படாதவர்கள் என்று சொல்லி ஒதுக்கி தள்ளி வைக்கப்படுவது சமூக அநீதியாகும் என்று பல முறை காந்தி அடிகள் கூறியிருக்கிறார்கள். எழுதியும் இருக்கிறார்கள்.

ஆகவே மக்களாக பிறந்த ஒவ்வொருவருக்கும் பிரஜை என்ற முறையில் எப்படி வாழ்வதற்கு உரிமை உண்டோ, எந்த வேலையையும் பார்ப்பதற்கு தகுதி உண்டோ அதேபோல் ஆண்டவனை வழிபடுவதோடல்லாமல் பூசை நிவேத்தியம் செய்வதற்கும் அருகதை உடையவர்களாகவும் நாம் அனைவரையும் அங்கீகரிப்பதில் தவறு இல்லை. ஆகவே பரம்பரை வாரிசாக இருந்து பூசைகள் முதலியவற்றை நடத்தவேண்டும் என்பதை மாற்றுவதற்கு உச்ச நீதி மன்றம்

குறுக்கீடாக இருந்தாலும் இன்றையதினம் அதற்கேற்ற வகையில் அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தும்வகையில் ஒரு தீர்மானத்தை அரசு கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

ஆனால், ஒரு குறிப்பிட்ட மதத்தினரைப் புண்படுத்துகிற அளவிற்கு அல்லது அவர்களின் மதக்கோட்பாடுகளில் தலையிடுகிற அளவிற்கு அரசு எடுக்கிற மறைமுகமான முயற்சி இது என்று சிலர் கூறலாம். இந்துக்கள் தாங்களாகவே இருக்கிற இந்தக் குறைபாடுகளை நீக்கியிருந்தால் அரசு இந்த அளவிற்கு சட்ட ரீதியாக இதைக் கொண்டுவரவேண்டிய அவசியம் வந்திருக்காது. மதத்தின் ஆதி கர்த்தாக்களாக இருந்திருப்பவர்கள் இந்து மதம்தான் புராதனமான மதம் என்று கூறியிருக்கிறார்கள்.

அவ்வளவு புராதனமான மதத்தில், அவ்வளவு பழைமையான மதத்தில் இவ்வளவு பெரியதொரு குறைபாட்டை வைத்திருப்பதில் என்ன நியாயம் இருக்கிறது என்று நாம் ஏன் யோசிக்கக்கூடாது? ஆக, பழமையான மதத்தில் உள்ள, இந்து மதத்தில் உள்ள குறைபாடுகளை நீக்குவது என்பது இந்து சமுதாயத்திற்குச் செய்யக் கூடிய ஒரு அத்தியாவசியமான கடமையாகும்.

குறிப்பாக, எங்கள் பகுதியில் பழமையான தெய்வங்களை வழிபடுகிறார்கள். எங்கள் பகுதியில் ஹரிஜனங்களும் ஜாதி இந்துக்களும் சகோதரர்கள் போல் வாழ்ந்து வருகிறோம். கலைஞர் அவர்கள்கூட எங்கள் பகுதிக்கு வந்திருந்தார்கள். உசிலம்பட்டியில் கோட்டைமந்து என்ற இடத்தில் கருப்பண்ண சாமி கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலில் பூசாரிகளாக இருப்பவர்கள் ஹரிஜன இனத்தைச் சார்ந்தவர்கள். அந்தக் கோவிலில் விழா நடைபெறும்போது அந்த ஹரிஜன பூசாரியின் பாதத்தைத் தொட்டு வணங்கி பிரசாதம் வாங்கிக் கொள்ளும் வழக்கம் இன்றும் எங்கள் பகுதியில் இருந்து வருகிறது.

ஆகவே ஆகமங்கள், சாஸ்திரங்கள் என்ற பெயரில் இழைக்கப்பட்ட ஒரு அநீதிதான் இந்த ஜாதி வேறுபாடு என்பதை நாங்கள் நன்கு உணருகிறோம். ஆகவே தாழ்ந்த குலம் உயர்ந்த குலம் என்ற வேறுபாடு இருத்தல் கூடாது. ஆகவே எந்தவித வேறுபாடும் இல்லாமல், தாழ்ந்த குலம், உயர்ந்த குலம்



என்ற வேறுபாடு இல்லாமல் இந்துவாக இருக்கிற எவரும் அர்ச்சகர்களாக அல்லது பூசாரிகளாக விரும்பினால் வரலாம், அவர்களை அப்படி நியமிக்கலாம் என்ற அடிப்படையில் கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன்.

இந்து மதத்தின் தனிப்பட்ட விதிமுறைகளில் குறுக்கிடு செய்வதற்கு, அதற்கான எந்தவிதமான முயற்சிக்கும் நாம் இடம் அளித்துவிடக் கூடாது என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன். ஆக, இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் இதை எங்கள் கட்சி சார்பாக மனப்பூர்வமாக ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை வரவேற்று சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

சமுதாயத்தில் புரட்சிகரமான மாறுதல்களை விரும்புகிற நம் தமிழக அரசு இந்தப் புனிதமான தீர்மானத்தைக் கொண்டுவந்திருப்பது இந்த நாட்டில் இருக்கிற கோடானுகோடி மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு புத்துணர்ச்சியை ஊட்டுகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அச்சப்படுவது எல்லாம் இந்தப் புரட்சிகரமான தீர்மானம் எங்கே மத்திய அரசால் புறக்கணிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம்தான் எங்களை வாட்டிக்கொண்டிருக்கிறது.

ஏனென்றால், எத்தனையோ தீர்மானங்கள், எத்தனையோ சட்டங்கள், நாட்டுக்குத் தேவையானவைகளை இந்த மன்றத்தின் மூலம் போட்டு மத்திய அரசின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டவைகள் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கின் நிலையில்தான் இருந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், இது சாதாரண விஷயம் அல்ல. இத்தனை ஆண்டுக் காலமாக அடித்தளத்தில் உள்ள இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மக்களை உலுக்கிக் கொண்டிருந்த ஒரு கோரமான பிரச்னைக்கு வழிகாட்டுகிற வகையில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறு எந்த மாநிலமும் செய்யாத ஒரு புரட்சிகரமான மாற்றத்தைச் செய்யும் வகையில் 1970 ஆம்

ஆண்டு இந்த மாமன்றத்தில் ஜாதி பாகுபாடு கூடாது, ஆண்டவனை அர்ச்சிக்கிற வகையில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் அர்ச்சகர்களாக ஆகலாம் என்ற சட்டத்தை 1970-ல் இந்த மன்றம் நிறைவேற்றியது.

ஆனால், சில சமூக விரோத சக்திகள் என்று சொல்லக்கூடிய ஜாதி துவேஷம் கொண்டவர்கள் அதை ஊசலாட வைத்திருக்கிறார்கள், இந்து மதத்திற்கு விரோதமான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள் என்றே நான் கருதுகிறேன். இந்த மன்றத்தில் பேசியவர்கள் எல்லாம் இத் தீர்மானத்தை ஒருமுகமாக வரவேற்றுப் பேசினார்கள். அந்த வகையில் பார்க்கிறபோது உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆனால், மத்திய அரசு பெரிய மனது வைத்து நிறைவேற்ற வேண்டுமென்று சொல்கிற நேரத்தில், பரம்பரை பாத்தியதை முறையைப் பாதுகாக்கும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளான 25, 26-வது பிரிவுகளைத் திருத்துவதுடன் இந்து லாவின் 372-வது பிரிவையும் திருத்தவேண்டும் என்று வலியுறுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

சமுதாயத்தின் அடித்தளத்தில் குமுறிக் கொண்டிருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் வளர்ச்சி காண வேண்டுமென்றால் பலவகைகளிலும் அவர்கள் முன்னேற வேண்டும் என்று சொல்கிற வகையில் இந்த அர்ச்சகர்களைப்பற்றிச் சொல்கிற நேரத்தில். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் ஆர்வம் காட்டியிருக்கிறார்கள் என்று நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. ஆனால், எனக்கு இருக்கிற வருத்தமெல்லாம்—இங்குப் பேசப்பட்ட கருத்துக்களைக் கேட்டு சந்தோசப் பட்டேன். ஆனால் இந்தக் கருத்துக்கு விரோதமான கருத்துக்கள் சில வெளியே பேசப்படுகின்றன என்பதைப் பார்க்கும்போது வேதனைப்படுகிறேன்.

நேற்றுமுன்தினம் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் சிலை திறப்பு விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த நேரத்தில் தமிழ் நாடு ஒரு புனித தீர்மானத்தைக் கொண்டுவர இருக்கிறது. அப்படிப் பட்டதொரு தீர்மானத்தை நாம் வரையறுக்கப் போகிறோம் என்ற இனிப்பான செய்தியை நான் சொன்னவுடன்—இன்று இந்த மன்றத்தில் கருத்து வேற்றுமை இல்லாது அண்ணா தி.மு.க. நண்பர்கள் இத் தீர்மானத்தை வரவேற்றார்கள்—திரு. எஸ். எம். துரைராஜ் அவர்கள் இந்தத் தீர்மானம் நாட்டை ஏமாற்றுகிற தீர்மானம். யாருக்கு வேண்டும் இந்தத் தீர்மானம் என்ற



கருத்தை அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியது என்னை வருத்தத்தில் ஆழ்த்தியது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தலைவரவர்களே, நான் தங்கள் மூலமாக ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கொன்றும், அங்கொன்றும் பேசும் தன்மை வேறு விஷயத்தில் வைத்துக்கொண்டாலும், இந்த விஷயத்தில் வைத்துக் கொள்ள வேண்டாம். இது சாதாரண விஷயம் அல்ல. இது ஒரு இனத்தைச் சேர்ந்த, ஒரு இனத்தின் இழி நிலையைப் போக்க வழி காணும் உன்னதப் பிரச்னையாகும். இதிலே தயவு செய்து அப்படி இருக்கக்கூடாது என்பதையும் அதனால் ஏற்படும் பயங்கரத்தையும் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டுமென்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளியில் எந்தக் கருத்து வேண்டுமானாலும் பேசலாம். ஆனால், இந்தத் தீர்மானத்தைக் காட்டி, இது ஏமாற்றுகிற தீர்மானம், ஆதி திராவிட சமுதாயத்தை ஏமாற்றும் தீர்மானம் என்று சொல்வது சரிதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்பதை இந்த நேரத்தில் நான் தங்கள் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி அவர்கள் அங்கே சொன்னபோது, அங்கே இருந்த மக்கள் உடனே சொன்னார்கள், தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக வரலாம், ஆனால், அர்ச்சகனாக வரமுடியாத அவல நிலை, அவல கதி இந்து சட்டத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த இந்து சட்டத்தை, இந்து லாவை திருத்தியாகவேண்டுமென்று எதிரில் பொதுக்கூட்டத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த எண்ணற்ற மக்கள் ஒரே குரலில் சொன்னார்கள் என்று எண்ணிப் பார்க்கிற நேரத்தில் அதிலே எவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்கள், எத்தகைய அக்கறை காட்டுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவரவர்களே, நான் தங்கள் மூலமாக இன்னொன்றையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த நாட்டை ஆளும் தமிழக முதலமைச்சர் அவர்கள் துரதிருஷ்டவசமாக இந்தத் தீர்மானத்தையும், சட்டத்தையும் கொண்டு வந்த காரணத்தினாலே, ஒரு வேளை டெல்லி சுப்ரீம் கோர்ட்டிலே இது தோற்கடிக்கப்பட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன். இந்தத் தீர்மானத்தைப்

புறக்கணித்து விடலாம். இதை உதாசினம் செய்து விடலாம். இதைக்கொண்டு வந்த தமிழக அரசை உதாசினம் செய்து விடலாம். ஆனால், கோடானுகோடி தாழ்த்தப்பட்ட மக்களின் இழிநிலையைப் போக்க வந்த இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவது யார் என்பதை மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோடானு கோடி மக்கள் மதிக்கிற இந்தத் தீர்மானத்தைத் தயவுசெய்து புறக்கணிக்கவேண்டாம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்ன நினைத்துக் கொண்டார்களோ தெரியவில்லை, சுப்ரீம் கோர்ட்டிலே இது தோற்கடிக்கப்பட்ட பின்னாலே பிரதம மந்திரி இந்திரா காந்தி அவர்கள் இதிலே கவனம் செலுத்தி இருக்கலாம். ஏன் தோற்கடிக்கப்பட்டது என்று ஆராய்ச்சி செய்து இருக்கலாம். அலசிப் பார்த்திருக்கலாம். எப்படி இது புறக்கணிக்கப்பட்டிருக்கிறது, உதாசினம் செய்யப்பட்டு இருக்கிறது என்று பார்க்கிறபோது எனக்கு முன்னாலே பேசிய திரு. அரங்கண்ணல் அவர்கள் சொன்னது போல் தமிழக அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது, தமிழக அரசு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறது என்ற ஒரே பாவத்திற்காக டெல்லி இதை உதாசீனம் செய்கிறதே தவிர வேறு எந்தக் காரணமும் புலப்படவில்லை என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேறு எங்காவது அவர்கள் விளையாடிவிட்டுப் போகட்டும். ஆனால், அடித்தளத்தில் தவித்துக்கொண்டிருக்கும் மக்கள் தலையில் அரசியல் பிரச்னையைக் கிளப்பி அரசியல் லாபம் பெறலாம் என்ற எண்ணம் கொண்டு தமிழ்நாட்டு மக்கள் சமுதாயத்தின் தலையில் கை வைக்கவேண்டாம் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இது சாதாரண விஷயமா? அர்ச்சகன் வேண்டுமானால் சாதாரணமாக இருக்கலாம். இங்கே தீர்மானம் போட்டு, டெல்லியில் திருத்தம் கொண்டு வந்தும் வெற்றி பெறலாம். அப்படிச் செய்வதால் எத்தனை பேர் அர்ச்சகர்களாக ஆகப்போகிறார்கள்? ஒரு சில விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள்தான் அர்ச்சகர்களாகப் போவார்கள். தமிழ்நாட்டில் உள்ள கோவில்களில் அத்தனையிலும் தாழ்த்தப்பட்டவர்கள்தான் அர்ச்சகர் [illegible]



வரவேண்டுமென்று நியதி இல்லை. ஒரு லட்சியத்திற்காக ஒரு பகுதி மக்களின் இழி நிலையைப் போக்கத்தான் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறதே தவிர உண்மையான நோக்கம் என்ன என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் நாட்டில் இருக்கும் இழிநிலையைப் போக்குவதற்கும், கேவல நிலையை அகற்றுவதற்கும் ஓரளவு சாத்தியக் கூறுகளை உருவாக்கத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறார்கள் என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எத்தனையோ தீர்மானங்கள், சட்டங்கள் போட்டு டெல்லிக்கு அனுப்பி வைத்த நேரத்தில் அதைப் புறக்கணித்தது போல், டெல்லி சர்க்கார் இதைப் புறக்கணிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இது கோடானுகோடி மக்களின் வாழ்க்கைப் பிரச்னையைப் பாதிப்பதாக இருக்கிறது. அவர்களுடைய இழி நிலையையும், இழிவையும் போக்கும் தீர்மானமாக இருப்பதால் இதை உடனடியாக டெல்லி சர்க்கார் ஏற்றே தீரவேண்டும், செய்தே தீரவேண்டும். செய்து தரவில்லை, எப்போதும் போல் செவிடன் காதில் ஊதிய சங்கு போல்-- நான் முன்னே கூறியது போல் இருக்குமானால் --இது புறக்கணிக்கப்படுகிற சூழ்நிலை வருமானால் புரட்சியே வெடிக்கும் நிலை உருவாகும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடிமைகளாக தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்க விரும்பவில்லை. ஆமைகளாக இருக்கவே விரும்புகிறார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன். எந்த அரசு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறது என்பதை மறந்து விட்டு, இது ஒரு சமுதாயத்தின் இழிவை ஒழிக்கிற ஜீவாதாரப் பிரச்னை, எந்த அரசு கொண்டுவந்தாலும் இதை ஏற்றுத் திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று அந்த எண்ணத்தில் மத்திய சர்க்கார் மனமுவந்து இதற்குத் திருத்தத்தைக்கொண்டு வந்து உடனடியாக நிறைவேற்றுவதன் மூலம் அந்த மக்களுக்குச் செய்யும் நல்ல கடமை என்பதை உணர்ந்து செய்யவேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லி, நான் முதலில் குறிப்பிட்டதுபோல் இங்கே இருக்கும் இந்து லா 372 பிரிவையும், 25-26 உட்பிரிவையும் திருத்தவேண்டும், திருத்தம் கொண்டு வந்து விமோசனம் காணவேண்டுமென்று கூறி, மத்திய அரசு அத்தகைய சூழ்நிலையை உருவாக்கவேண்டுமென்று கேட்டு, இந்தத் தீர்மானத்தைக்கொண்டு வந்த இந்த அரசைப் பாராட்டி, இந்தத் தீர்மானத்தை வரவேற்று அமைகிறேன், வணக்கம்.

THIRU B. VENKATASWAMY : Sir, in support of the motion brought forward by the Hon. Minister, on behalf of the Swatantra Party I want to say a few words.

Even at the time of drafting the Constitution, a mistake has been committed and the Harijans had been denied the fundamental right. That is what I am feeling. In a democracy every one should have equal rights. That is the object with which tre Constitution has been enacted. But in the beginning it has been neglected and I am very happy that at least now this Government has been kind enough to bring this resolution. Our Revered Rajaji has enacted legislation long ago allowing Harijans to enter our Hindu temples.

Regarding the priests to be appointed in temples, I think it is right the resolution is brought now. They have now brought this resolution to give the fundamental right to Scheduled Castes, etc., who had been deprived of this right all along. So it is necessary to amend the Constitution to give them also the right to be Priests in Hindu temples. At the same time it is necessary that the priest should be a Hindu and must have faith in Hindu religion. Otherwise people coming to worship will lose interest.

My friend has given an amendment to refer the Supreme Court judgment to Committee of experts. As our Law Minister said no Court sits in judgment over the decision of Supreme Court. As I said earlier, the archaka must have faith in God ; otherwise the cause of Hinduism will be affected.

I hope the Central Government will bring forward this legislation (keeping in view this resolution) by allowing qualified persons irrespective of caste or creed to become Priests in Hindu temples. I hope the Constitution will be amended likewise. Thank you.

திரு. என். இராஜாங்கம் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.





இந்து மதத்தில் பல்வேறு ஜாதிகள் அடங்கியிருக்கின்றன. அந்த ஜாதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு பிரிவினராக உள்ளார்கள். தாழ்த்தப்பட்ட மக்களை இந்துக்கள் என்று ஏற்றுக்கொண்ட பிறகு, அவர்களை இந்துக் கோவில்களில் விடுவது தவறு என்று நினைத்த காலத்திலிருந்து, அதற்குப் பிறகு அவர்களை விடுவிக்கக் கோவில்களுக்கு அவர்கள் செல்லலாம் என்று அனுமதித்த பிறகு, அவர்களும் இந்துக்கள் என்று ஏற்றுக்கொண்ட பிறகு கோவில்களில் ஆண்டவனுக்கு அர்ச்சனை வேலை செய்வதற்கு அல்லது நெய்வேத்தியம் முதலிய காரியங்கள் செய்வதற்குத் தடை இருக்கிறது என்று சொன்னால் இந்து மதத்தினுடைய நிலை என்ன என்று இந்து மதத்திலுள்ள நல்லவர்கள் எண்ணிப்பார்க்கவேண்டும்.

பொதுவாக, இந்து மதத்தில் அடங்கிய அத்தனை பேர்களுக்கும், இந்து மதத்திலுள்ள அத்தனை ஜாதியினருக்கும் எல்லா உரிமைகளும் உண்டு. இது சமயச் சார்பற்ற நாடு என்றெல்லாம் சொல்லி இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். அப்படியிருந்தாலும்கூட இந்தியாவிலுள்ள இந்து மதத்தைச் சார்ந்தவர்களான தாழ்த்தப்பட்ட மக்களை, அரிசனங்களை அர்ச்சகர்களாக நியமிப்பது கூடாது என்று சுப்ரீம் கோர்ட்டு இதைத் தள்ளுபடி செய்திருக்கிறது என்றால் எந்த அடிப்படையில் தள்ளுபடி செய்திருக்கிறது என்று நமக்குப் புரியவில்லை.

ஒரு சமயம் பாரம்பரை பாரம்பரையாக—இந்து மதம் என்றைக்கு முதல் இந்தியாவில் இருந்ததோ, என்றைக்கு வெளி வந்ததோ, என்றைக்கு மக்களுக்குத் தெரிந்ததோ, அந்தக் காலத்திலிருந்து இந்து மதத்தினர் ஒரு சமூகத்தை அடக்கி வைத்திருந்தார்கள் என்ற காலம் வரை, காலம் காலமாக, பாரம்பரை பாரம்பரையாக அனுபவித்து வந்தவர்கள் வேண்டுமென்றே இவர்களைத் தள்ளிவிட்டார்களா என்ற ஐயம் எழுகிறது. இந்து மதம் ஒரு நல்ல மதம். உலகத்திலுள்ள எல்லா மதத்தினரும் ஜாதியில்லாத மதத்தினர்களாக இருக்கிறார்கள். இந்து மதச் சட்டம், அரசியல் சட்டம் இதற்கு இடம் கொடுத்துத்தான் ஆகவேண்டும். நந்தனார் கோவிலில் நுழைந்து ஆண்டவனைத் தரிசிக்கச் சென்றபொழுது, நந்தி குறுக்கே நின்றது. உடனே சிவபெருமான் அந்த நந்தியை அகற்றிவிட்டு 'விடுடா வழி' என்று சொல்லி. அதற்குப் பின்னர் நந்தனார் கோவிலுக்குள் நுழைந்தார் என்ற வரலாறு இருக்கிறது.

இப்பொழுது எந்த நந்தி தடுக்கிறது? பரம்பரை பரம்பரை என்று சொல்லிக்கொண்டு, இந்து மதத்தில் ஒரு வெறித்தன்மையைக் கொண்டு, இந்து மத வெறியவர்களாக மாறியவர்கள்தான் இதைத் தடுக்கவேண்டும்.

இந்து மதத்தைக் காப்பாற்றவேண்டும் என்று நினைக்கிறவர்கள், இந்து மதத்தின் உட்பொருளை நன்றாக அறிந்தவர்கள், உள்ளபடியே இறைவனுக்கும் மக்களுக்கும் என்ன தொடர்பு உண்டு என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். இறைவனால் படைக்கப்பட்ட மக்கள், கடவுளால் படைக்கப்பட்ட எந்த ஒரு தனி மனிதனும் புறக்கணிக்கப்பட அந்த மதத்தில் இடம் கொடுக்கக்கூடாது என்பதை உணரவேண்டும். இந்து மதம் என்று வைத்துக்கொண்டு, இந்துக்கள் என்று சொல்லிக்கொண்டு, 16, 18 கோடி மக்களையும் இந்துக்கள் என்று சொல்லிக்கொண்டு இந்து மதத்தில் புகுத்திக்கொண்டு, அப்படியிருந்தும் அவர்கள் இந்து மதத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்று எண்ணுகின்ற அந்தக் கொடுமை இன்றைக்கு உலகில் எந்த நாட்டிலும் கிடையாது. நான் இதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

சுப்ரீம் கோர்ட்டானாலும் சரி, எந்தக் கோர்ட்டானும் சரி, இதை மறு பரிசீலனை செய்யவேண்டும். ஒன்று இந்து மதத்திலிருந்து எங்களை தூக்கி எறிய வேண்டும், இல்லாவிட்டால் இந்து மதத்திலிருந்து நீக்கிவிடவேண்டும், எங்களை இந்துக்கள் என்று சொல்வதிலிருந்து நீக்கிவிடவேண்டும், இந்தச் சட்டம் செல்லாது என்று சொல்லிவிடவேண்டும். எங்களை இந்துக்களாகச் சேர்த்துக் கொண்டு, இந்தியாவில் இத்தனை கோடி தாழ்த்தப்பட்ட மக்கள், அரிசனங்கள் இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு எங்களைப் புறக்கணிக்கின்ற இந்து மதம் எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதை இந்து மதத்திலுள்ள நல்லவர்கள் உணரவேண்டும். ஆகவே அவர்களெல்லாம் சுப்ரீம் கோர்ட்டுக்கு போராட செய்யவேண்டும் என்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இந்தியாவில் உள்ள எத்தனையோ கோடி மக்கள் பல்வேறு ஜாதிகளைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த உரிமை இருக்கும்பொழுது, இந்திய நாட்டில் ஆறில் ஒரு பங்கு பெரும்பகுதி மக்களைக் கொண்ட ஒரு சமூகத்தினரை, இந்து மதச் சட்டம் தடை செய்கிறது என்றால், 10 கோடி, 12 கோடி மக்களும் இந்து மதத்திலிருந்து விலகி விடுவதா என்ற கேள்விக்குப் பதில் சொல்லவேண்டும். இந்து மதத்தை





ஆதரிக்கின்றவர்கள், இந்துக்களாக உள்ளவர்கள் இந்திய அரசியல் சட்டத்தை ஒரு மதச் சார்பற்ற சட்டமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்திய அரசியல் சட்டம் வேறு, இந்து மதச் சட்டம் வேறு என்று நினைக்கிறார்களா என்பதை அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இந்தத் தீர்மானத்தை என்னுடைய சமூக சார்பில் ஆதரிக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை தமிழக முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள், எந்த மாநிலத்திலும் இல்லாமல், இந்த மாநிலத்தில் தைரியமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால் அது மிகவும் பாராட்டத் தக்கது.

இந்து மதத்தைப்பற்றிச் சொல்லிக்கொண்டு வந்த எத்தனையோ பெரியவர்கள் மத்தியில் 1928, 1929, 1930 ஆகிய மூன்று ஆண்டுகளில் இதே சட்டமன்றத்தில் ஆலயங்களில் அரிசனங்களை விடுவதா, வேண்டாமா, இந்து மதத்தில் உள்ளடக்கியவர்களுக்கு இப்படி ஒரு தடை இருக்கலாமா, வேண்டாமா, அப்படி தடை விதிக்கிற இந்து மதம் இருக்கவேண்டுமா என்றெல்லாம் விவாதங்கள் நடந்திருக்கின்றன. செயற் குறிப்புகள் இருக்கின்றன. பல்வேறு நிபுணர்கள் இதைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள்.

இந்து மதத்திலுள்ளவர்கள் எல்லோரும் எல்லா உரிமைகளையும் படைத்தவர்கள். இந்து மதத்தில் அடங்கியிருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களையும் கோவில்களுக்குள் விடவேண்டும் என்று அன்றைக்குச் சொன்னார்கள். இன்றைக்கு இவர்கள் அர்ச்சகர்களாக வேலை செய்வதற்கு மறுப்பு தெரிவிக்கிறார்கள்? ஏன் இந்த நிலை? ஆகவே, இந்து மதத்தைவிட்டு நாங்கள் போவதா, இருப்பதா என்பதை இந்தத் தீர்மானம் நிர்ணயிப்பதாகும். ஆகவே, தமிழக சர்க்கார், நம்முடைய முதல்வர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி இந்திய சர்க்காருக்கு அனுப்பி வைத்து, அதிலே சட்ட சிக்கல் இருந்தாலும், எப்படியாவது அதைத் தீர்த்து வைக்க வேண்டும். எத்தனையோ முறை அரசியல் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. கோடிக்கணக்கான மக்களுக்காக அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டிய அவசியம் இருந்தால், அதைச் செய்து தான் தீரவேண்டும். இந்தத் தீர்மானம் நியாயமானது. நேர்மையானது, இந்து மதத்தினரை எந்த விதத்திலும் பாதிக்காது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன் . . .

சாதி, பிரிவு, உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையே இருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள், ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்க இயலும் வகையில் அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து

[1974 ஏப்ரல் 15

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்து மதத்தில் இருப்பதா, அதை விட்டு போவதா என்பது இந்தத் தீர்மானத்தில் அடங்கியிருக்கிறது என்று தாடுவது அவ்வளவு சரியல்ல. இந்து மதத்தை விட்டுப் போய் விடுவார்களா என்ற பயத்தில் நான் சொல்லவில்லை. எந்த மதத்திற்குச் சென்றாலும், அந்தத் திருத்தம் அரசியல் சட்டத்தில் செய்யப்பட்டால்தான் எல்லோருக்கும் பாதுகாப்பு. ஆகவே, வேறு மதத்திற்குப் போனாலும் தப்பித்து விடலாம் என்பது அல்ல. எந்த மதத்திற்குப் போனாலும் இதே கதி தான். ஆகவே, மொத்தத்தில் ஒரு பாதுகாப்பு வேண்டும் என்பதற்காகத்தான் அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று குறிப்பிட்ட இந்தத் தீர்மானத்தை இங்கே நிறைவேற்ற இருக்கிறோம்.

**திரு. என். இராஜாங்கம் :** தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் பேசியது உள்ளபடியே எனக்குத் தெரியும். இந்து மதத்தை விட்டு நாங்கள் போவதாக இல்லை. எங்கள் மதம் என்று எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இவ்வளவு நாள் புறக்கணிக்கப்பட்டதால் ஏற்பட்ட வயிற்று எரிச்சல் காரணமாகச் சொல்லவேண்டி வந்தது. காலம் காலமாக இந்துக்கள் என்று சொல்லிவிட்டு, இந்துக்கள் என்று எழுதிவிட்டு, எத்தனையோ கோடி மக்கள் இருக்கிறார்கள் என்று உலகத்திற்குச் சொல்லிவிட்டு, எங்களை மட்டும் புறக்கணிக்கக்கூடிய ஒரு நிலைமையை ஒட்டித்தான் சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **THIRU K. S. KOTHANDARAMIAH** : Sir, I thank you very much for giving me this opportunity to offer a few remarks on this Resolution about the abolition of hereditary system of Archakas. I am going to oppose this Resolution on certain fundamental points.

Our Assembly is a democratic Institution and we are, i.e., every member here is, free to express his views without fear or favour. Therefore I request that all Members should first hear me and then think. I have got the right to speak my mind.

சாதி, பிரிவு, உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையே இருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள், ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்க இயலும் வகையில் அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து


1974 ஏப்ரல் 15] [Thiru K. S. Kothandaramiah]

In regard to the resolution, we are confusing issues. Our Government is democratic Government; it is a secular Government. There are the three big religions in this country, i.e., the Hindus, the Christians and the Musalmans. When it is a secular Government, it has no business to interfere with religious matters.

The Scheduled Castes Committee had recommended that the hereditary system should go; it could have recommended that the status of secular State should be put an end to and it be declared as a Hindu State. Then both the Centre and the States can interfere with these matters.

In a secular State every citizen has the fundamental right in religious matters. If it is declared a Hindu State, we can interfere with all matters relating to Hindus, not only with temples but all other matters and revolutionary changes can be brought about.

Heriditary system is no curse. There are certain professions in the country which require the hereditary system. For example, take the example of pipers. The pipers are well-known, they play very well. There, the son gets training from his father and becomes a good piper. Similarly with regard to Archakas and so many other professions. There are temples where archanas are based on agama sastras. There are many temples of that category. There are also other temples where there are no archanas according to agama sastra. There anybody can do archana. Agama system of worship is going on from father to son and from son to grandson and like that. For that it is necessary to have hereditary system. Otherwise the whole system falls down. Let us do away with this or that Brahmin priest. That is not the point. If a Harijan becomes a priest after him his son becomes priest. If he goes, his son who has been trained by him must come to preserve the agama sastra worship. It is not like transferring one officer to another place.

(முற்பகல் 11.30)

[1974 ஏப்ரல் 15

THE HON. THIRU S. MADHAVAN : For the information of the hon. Member I may say that the Supreme Court has agreed with our view that there is no hereditary system.

THIRU K. S. KOTHANDARAMIAH : If you change that, archana system will go down. Son learns from father and then he becomes archaka. It is not like transfer of an officer. Son or grandson gets training from forefather and steps in when the elder goes out. It is a good system. There is nothing bad about it. This resolution is not practicable for implementation. Bb that we will be destroying the ancient temple service system. So far as caste is concerned, one can have it in his house. What I say is caste fanaticism must go. But what is happening is, in the name of abolition of caste system, each caste is demanding that it should be given due representation in services. There is Brahmin conference, Mudaliar conference, Yadava conference like that. Thiru K. M. Subramaniam : No Brahmin conference please.) Yes, there has been one. Every day one caste is claiming that it should be given more and more place in services. That is what is happening. You can't destroy caste so easily.

Swami Vivekananda said that caste is not bad because it has saved Hinduism from the onslaught of foreign invasions. (Thiru K. M. Subramaniam : But Swami Vivekananda said 'let us wear loin cloth. Every Indian is my brother be he a brahmin or paraya ' This he uttered in America. I remember that.)

My friend is confusing issues. That is not the point. We are talking about a particular profession. He is talking about idealism. Talking of profession, selection being based on caste, is increasing day by day. This is happening in the name of abolition of caste.

What I say is hereditary system is necessary for preservation of archana based on agama sastra. Son learns from father. By constant practice and rigorous discipline, it comes. It does not come all of a sudden. If that system is destroyed, archana based on agama sastra in our temples, will be destroyed. Therefore I oppose this resolution.



1974 ஏப்ரல் 15]

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, நான் அறநிலையத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை ஆதரித்து எங்கள் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

திராவிடர் கழகத்தைச் சேர்ந்த தொண்டர்கள் அரசியல் சட்டத்தை இந்த அடிப்படையிலே திருத்தவேண்டுமென்று சொல்லி கோரிக்கை வைத்த போது, அவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து நான் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்தபோது, அந்தக் கோரிக்கை நியாயமானது என்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அன்றைக்கு ஒப்புக்கொண்டார்கள். ஆனால் இந்த சபையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள்.

இந்த மாதிரியான தீர்மானம் இந்த அவையில் வந்து, ஒவ்வொரு கட்சியினரும் அதிலே என்ன முடிவு எடுக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதாக அன்று நான் தெளிவாகச் சொன்னேன். எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில் நாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்.

இந்த மாதம் 7-ந்தேதி எங்கள் கட்சியின் சார்பில் நடத்தப்படுகின்ற ஜனசக்தி பத்திரிகையில் ஒரு தலையங்கம் தீட்டியிருக்கிறோம். அதிலே எப்படி இந்த சுப்ரீம் கோர்ட் நிர்ப்பானது இந்த அரசியல் சட்டத்தின் கண்ணோட்டத்திற்கு விரோதமாக இருக்கிறது என்றும், அதைத் தெளிவு படுத்த அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறோம். இப்போது **This House resolves to request the Central Government to bring forward the necessary legislation to amend the Constitution suitably on the lines indicated in the draft Bill enclosed.** என்ற முறையில் திருத்த நாம் மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறோம். அந்த வகையிலே திருத்தச் சட்டம் வரவேண்டும். இதைப் பார்க்கும்போது, இந்த அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டபோது, அரசியல் நிர்ணய சபையில் எந்த மாதிரியான விவாதங்கள் வந்தன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அரசியல் நிர்ணய சபை, திருத்தி அமைக்கப்பட்ட இந்த பிரிவுகள் 25, 26 பற்றி எடுத்துச்சொல்லும்போது, இதன் அடிப்படையில் பல சட்டங்களை மத்திய அரசும் கொண்டு வரலாம்; மாநில அரசும் கொண்டு வரலாம் என்ற

கருத்தைத் தெரிவித்திருக்கிறது. அந்த முறையில் 1955-ம் வருஷம் Untouchability Offences Act கொண்டுவரப்பட்டது. அதன் அடிப்படையில் மூன்றாவது பிரிவைப் பார்த்தால் Whoever on ground of untouchability prevents any person (a) from entering any place of worship or (b) from worshipping will be punishable with imprisonment upto six months or fine of Rs. 500 or both என்று இருக்கிறது. எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், அந்த அரசியல் சட்டத்தினுடைய இந்த 25 வது பிரிவின் நோக்கமே அதை அமல் படுத்துவதற்காகப் பல அடிப்படையான சட்டங்களை மத்திய அரசும், மாநில அரசும் கொண்டுவரலாம் என்றுதான். அரசியல் நிர்ணயசபையிலே அதுபற்றிய விவாதம் வந்தபோது முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் தான் எங்களுக்கு இது பிடிக்கவில்லை என்று அழுத்தமாகச் சொன்னார்கள்.

The Muslim members insisted that personal law was part of Muslim religion and that the Muslims would never submit to any interference with their personal law. The suggestion to guarantee the invicability of personal law was not however accepted. Under the present clause, therefor, the State retains the power to introduce social reform by changing personal laws. இன்றைக்கு பாகிஸ்தானிலே இருக்கக்கூடிய சட்டம் வேறு. அங்கே வெகு தெளிவாக 1956-ம் வருஷம் அரசியல் சட்டத்தின்படி

We are for promotion of Islam. It is the duty of the State and even laws must be in conformity with the injunctions of Islam

என்று பிரிவு 197, 198 இருக்கிறது.

Ours is a Secular State and not a theocratic State அது மதத்தின் அடிப்படையிலே இருக்கக்கூடிய அமைப்பு. இன்றைக்கு பாகிஸ்தானில் இருந்து பிரிந்து பங்களாதேஷ் ஏற்பட்ட பிறகு அதுவும் ஒரு செக்குலர் ஸ்டேட்டாக இருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். இந்த இரண்டுக்கும் இருக்கக்கூடிய வித்தியாசம்—இந்தியாவைப் பொறுத்த வரையில் பல நாடுகளிலே இந்த மாதிரி மதத்தைப் பொறுத்தவரையில் என்ன கருத்தை வைத்திருக்கிறார்கள் என்று குறிப்பிடும்போது சில உதாரணங்களைக் கொடுக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். சோவியத் யூனியனில் 1936-ம் வருஷம்



அவர்கள் அரசியல் சட்டத்தின் விதியின்படி 'Freedom of religious worship and freedom of anti-religious propaganda is recognised for all citizens' ஒன்று சாமியைப் போய் கும்பிடலாம். சாமியைக் கும்பிடக் கூடாது என்று பிரச்சாரம் செய்யலாம். அதைத்தான் சோவியத் உரிமையும் இருக்கிறது. கோயில் போகிறவர்கள் போகலாம். ஆண்டவனை வணங்கலாம். இன்னொரு சாரார் கோவிலுக்குப் போகக் கூடாது. ஆண்டவன் இல்லை என்ற கருத்தினைச் சொல்லுவதற்கு உரிமையிருக்கிறது. அந்த இரண்டு உரிமையும் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய நாடு இந்த நாடு. பிரான்ஸைப் பொறுத்த வரையில் No one cught to be disturbed on account of opinion even religious, provided their manifestation does public order established by Law. not derange the அவர்கள் பூராவுமே நாட்டு மக்களின் நலன் என்று பார்த்தார்களேயொழிய இந்த மதத்தின் அடிப்படை என்பதை பிரான்சு அரசியல் சட்டத்தில் தகர்த்து விட்டார்கள்.

இங்கிலாந்து தேசத்தில் கூட இன்றைக்கு அவர்களுக்கு ஒரு மதம் இருக்கிறது. சர்ச் ஆப் இங்கிலண்ட், பிராடெஸ்டெண்ட் மதம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் இந்த மதம் அரசாங்க மதமாக இருந்தாலும் வேறு மதத்தில் யாரும் இருக்கக் கூடாதென்று அவர்கள் சொல்லுவது கிடையாது. அமெரிக்காவைப் பொறுத்த வரையிலும் அதே நிலைமைதான். இந்த விவரங்களை எதற்காகக் கொடுக்கின்றேனென்றால் இந்த மதத்தைப் பொறுத்த வரையில் எந்த அளவுக்கு அரசியலில் ஈடுபடுத்தப்பட வேண்டுமென்பதைப் பற்றி வந்ததாம் பின்னால் ஒரு சர்ச்சை ஏற்பட்டது. இப்பொழுது இங்கே 25, 26-ஐ வைத்துக் கொண்டு எவ்வளவோ மாறுதல்கள் செய்யலாம். இந்த மாறுதல்கள் செய்கின்றபோது செய்யக்கூடாது என்று ஒரு பிரச்னை எழும்புகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

நம் அரசியல் சட்டத்தைக் கொடுத்த டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இதைப் பற்றி ரொம்ப தெளிவாகச் சொன்னார்கள்.

The conception of religion in this country is so vast as to cover every aspect of life from birth to death. If the State were to accept this concept of religion, the country would come to a stand-

**still in regard to reform . . . . State will touch questionable practices . . . . . . The provision for protection of religion is not an absolute protection to be interpreted and applied independently of other provisions . . .. . .**
ஆகவே மதம் என்று சொன்னவுடன் மதத்தின் அடிப்படையிலே எந்த மாறுதலையும் செய்யக் கூடாது என்று சொல்வது தவறு. இந்த அரசியல் சட்டத்தில் எந்த இடத்தை எடுத்துக் கொண்டாலும்
**These privileges must be reconciled with the right of the State** to employ the sovereign to ensure peace, security orderly living without which constitutional guarantee of civil liberty would be a **mockery** என்று குவாலிபை பண்ணுகிறார்கள். நடைமுறையில் இன்றைக்கு இந்த மத சம்பிரதாயம் எப்படி வந்து விட்டது என்று சொன்னால் மதத்தின் பெயரால் அரசியலை எந்த முறையிலும் செய்யக் கூடாது. மதத்தின் பெயரால் சில தவறுகள், சதி என்ற வழக்கம் ஹிந்து மதத்தில் இருந்தது. இது பொதுவாக எல்லா மதத்திலும் இருக்கிறது. ஹிந்து மதத்தில் மட்டுமல்ல. ஜைன மதம், அல்லது சீக்கியர் கொண்டாடக்கூடிய மதமாகயிருக்கலாம். இஸ்லாமிய மதமாகயிருக்கலாம், கிருஸ்துவ மதமாகயிருக்கலாம். எல்லா மதத்தையும் எடுத்துக் கொண்டுதான் நம் அரசியல் சட்டம் இருக்கிறது. ஏதோ ஹிந்துக்களுக்கு மட்டும் அல்லது முஸ்லீம்களுக்கு மட்டும் என்று பார்ப்பதுகூட குறுகிய பார்வையாக இருக்கும்.

அது விவாதத்தில் வருகின்ற காலத்தில் விரிவாகயிருக்கிறது. மெஜாரிட்டியாக இருக்கின்றவர்கள் ஹிந்துக்களாகயிருக்கலாம். ஆகவே சிலர் மைனாரிட்டியாக இருக்கக் கூடியவர்களை அவர்கள் மதத்தின் பெயரால் தவறுகள் செய்து கொண்டாலும் அல்லது மதத்தின் பெயரால் அரசியல் சட்டத்திற்கு விரோதமாக போய்க் கொண்டிருந்தாலும்கூட தட்டிக் கேட்கலாமென்ற அளவுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மதத்தைத் தாண்டுவதோ, மத வெறி எண்ணங்கள் அரசியல் காரியங்களுக்குக் கண்டிப்பாக இருக்கக் கூடாது என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். பிறகு குறிப்பிட்ட ஒரு விஷயம் வருகிறது.

freedom to manage religious affairs and institutions.
என்பதை வைத்துத்தான் நம்முடைய கோயில்களில் எதையும் செய்வோம்,



நடந்த முறைப்படி செய்ய வேண்டுமென்று வருகிறபோது, அந்த முறையானது நாம் ஏற்கனவே ஒப்புக் கொண்ட முறைக்கு விரோதமாகயிருக்கக் கூடாது. என்ன ஏற்பட்டு விடுமென்று சொன்னால் நான் அன்றைக்குக் கூட சொன்னேன்.

இந்த நாட்டில்தான், தமிழ் நாட்டில்தான், அல்லது இந்தியாவில்தான், ஆஸ்பத்திரிகளில்கூட துப்புரவு வேலைக்கு நியமிக்கக் கூடியவர்கள் அல்லது ரொம்ப கீழான அளவுக்கு நியமிக்கப்படக்கூடியவர்கள், அதைச் செய்பவர்கள் ஒரு ஜாதியைச் சேர்ந்தவர்கள்தான் செய்ய வேண்டும் என்று இருப்பது இந்த நாட்டில்தான். வேறு எந்த நாட்டிலும் இந்த நிலைமை கிடையாது. எந்த நாட்டில் போனாலும், நம்மைவிட முன்னேற்றமான நாடோ, அல்லது பின்தங்கிய நாடானாலும் அந்த முறையில்லாமல் ஆஸ்பத்திரி ஊழியர்கள் என்று வைத்திருக்கிறார்கள். இப்படியிருந்தால் இந்த அரசியல் சட்டப்படி நாளைக்கு எந்த நிலைமை ஏற்பட்டு விடுமென்று சொன்னால் இனிமேல் ஒரு குறிப்பிட்ட வேலையைக் குறிப்பிட்டவர்கள்தான் செய்ய வேண்டுமென்ற அளவுக்குப் போய் விடும். ஆகவேதான் இன்றைக்கு கிறிஸ்துவ மதத்தில் இங்கிலாந்து தேசத்தில் கிறிஸ்துவ மதம் எங்களுடைய தேசத்தின் மதம் என்று ஏற்றுக் கொண்டாலும் கூட, யாரும் இருக்கலாம். அவர் போய் பயிற்சி பெறுவார். பயிற்சி பெற்ற பின் அவர் பாதிரியார் ஆகி விடுவார். அந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கக் கூடிய மதம்.
church of England. . . There are the non-conformists
அவர்கள் கூட யாரும் ஒருவர் பயிற்சி பெற்றவரானால் அவர் செய்ய முடியும் என்ற நிலைமையிருக்கிறது. ஆகவே பயிற்சி என்பது முக்கியமானது.

அதே நேரத்தில் அந்தக் கோவிலுக்குப் போகிற அர்ச்சகர்களாக இருக்கக் கூடியவர்கள் அந்தக் கோவிலின் பேரில் நம்பிக்கையிருக்க வேண்டும். இப்பொழுது கோவில் அர்ச்சகர்களாக இருக்க வேண்டுமென்று என்னையோ, என் கட்சியைச் சார்ந்தவர்களோ வேண்டுமென்றால் நான் வேண்டாம் என்று சொல்லுவேன். எங்களுக்கு அந்த சாமி, கோவில் பேரில் நம்பிக்கை கிடையாது. ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய இந்த அமைப்பில் . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி**: கோவிலைப் பற்றியோ, சாமியைப் பற்றியோ எங்களுக்கு நம்பிக்கையில்லை என்று சொல்லுகிறவர், இந்த தீர்மானத்தில் ஏன் நேரத்தை வீணாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இந்த அரசியல் சட்டத்தில் இன்றைக்கு எனக்குப் பாதுகாப்பு இருக்கிறது. இந்த சாமியை நம்பிக்கொண்டு, கடவுள் தான் நமக்கு வழி காட்டக் கூடியவர் என்று நம்பக் கூடியவர்களுக்கும் பாது காப்பு இருக்கிறது. இன்னும் சுருக்கமாக விஷயம் என்னவென்றால் இந்த அரசியல் சட்டத்தின் குழு ஒரு கோவில், என்ற அமைப்புக்கு காரியங்கள் செய்யக் கூடியவர்கள் எப்படி இருக்க வேண்டுமென்று வருகிறபோது இது

Internal administrative matter

என்ற அளவு போய்விட முடியாது. இது மேற்படி டேபனிஷன் கருத்துப்படி-தான் இருக்க வேண்டும். ஆகவே எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர் எனக்கு உறிந்து மதத்தில் நம்பிக்கையிருக்கிறது என்று சொல்லி விட்டால் அது போதும்.

அதே நேரத்தில் அவர் பயிற்சி பெற்றுக் கொள்ள வேண்டும். நான் சொல்லுவேன் அவர்கள் பயிற்சிக்குச் சில பள்ளிகளை வைத்தால் நல்லது. எப்படி பாதிரியார் ஆவதற்குப் பயிற்சிப் பள்ளி வைத்திருக்கிறார்களோ, அதே மாதிரி இந்த அர்ச்சகர்களாவதற்குப் பயிற்சி பள்ளி வைத்தால் நல்லது. அதில் தேர்ந்தவர்கள் அர்ச்சகர்களாக வரலாம் என்ற அந்த நிலை வந்து, அப்படி நிறைய பேர் வந்து, அவர்களை செலக்ட் பண்ணக்கூடிய ஒரு கடமைகூட நம் அரசாங்கத்திற்கு வரலாம்.

அந்த நிலைமையை வைத்து அந்த இன்ஸ்டிட்யூஷனை பாதுகாக்கலாம். நாம் இன்றைக்கு மதம் என்ற இன்ஸ்டிட்யூஷனை ஒழித்துக் கட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு இல்லை. அதே நேரத்தில் இன்றைக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன். இந்த அரசியல் சட்டத்தை விமர்சனம் செய்யக்கூடிய மத்திய அரசு அல்லது விமர்சனம் செய்வதற்கு இருக்கக்கூடிய கருவிகள் பூராவும் மதப் பிரச்சாரம் செய்யக்கூடிய கருவிகளாக மாறிவிட்டன.

ரேடியாவாகயிருந்தாலும் கூட, மதப் பிரச்சாரம் பண்ணக்கூடியதாக இருக்கிறது. காலையில் ரேடியோவைத் திருப்ப முடியவில்லை. ஒரே மதப் பிரச்சாரம்தான். காலையில் 1 மணி அல்லது 1½ மணி நேரம். சனிக்கிழமை வைத்தால் ஒரு மணி நேரம். ஒரே பிரச்சாரம்தான் கேட்டுக்கொண்டிருக்கிறது, அந்த மாதிரி நிலைமை இல்லாமல் இருக்க வேண்டுமென்றால் சில நல்ல காரியங்களைச் சொல்ல வேண்டும். அப்படி என்று சொன்னால் நம் தமிழ் நாட்டு



தலைவர்கள் விஷயத்தை எடுத்துச் சொல்ல வேண்டுமென்றால் காலம் சென்றவர்கள் விஷயத்தை எடுத்துச் சொல்லலாம். நான் ரொம்பவும் மதிக்கக்கூடிய—இன்றைக்கு உயிரோடு இருக்கக் கூடியவர்கள் அவர்தான் பெரிய மேதையா என்று சொல்லுவார்கள்—காலம் சென்றவர்களாக இருக்கிறார்கள். நான் ரொம்பவும் மதிக்கத் தக்கவர் சிங்காரவேல் வழியில் இருப்பேன். பல அருமையான கருத்துக்கள் இருக்கின்றன. அது அநேகமாக கட்சிக்கு அப்பாற்பட்ட கருத்துக்கள். அந்த கருத்துக்களை இன்றைக்கு எடுத்துச் சொல்லலாம்.

உதாரணமாக தொழிலாளிகளுக்குச் சங்கம் வைக்கின்றபோது, மதத்தையும், ஜாதியையும் கொண்டு வரக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். 1918-ம் வருஷம் மண்ணெண்ணெய் தொழிலாளர்கள் சங்கத்தை ஆரம்பிக்கின்ற பொழுது—அன்றைக்கு தொழிற் சங்க சட்டம் கிடையாது—தாழ்த்தப்பட்டவர்கள் தான் அதிகம் பணியாற்றினார்கள். அது திராவிடர்கள் சங்கம் என்று வைக்க வேண்டும் என்று தொழிலாளிகள் கேட்டுக் கொண்ட போது, அந்த சிங்காரவேல் சொன்னாராம். அது தமிழ் நாட்டிற்கு வழி காட்டி, இனிமேல் தனி திராவிடர் சங்கத்திற்குப் பின்னால் வரக்கூடியவர்கள் திராவிடர்கள் என்று சொல்வார்கள். மேம்பாடு உள்ளவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லுவார்கள். வெறும் தொழிற் சங்கம் என்று வை என்று சொன்னாராம்.

உலகம் பூராவும் மே தினத்தை கொண்டாடுகிறார்கள். இப்போது நாங்கள் சமீபத்தில் கண்டு பிடித்தோம். இந்தியாவில் மே தினத்தைக் கொண்டாடியது முதல் முதல் சென்னையிலே 1921-ம் வருஷம். இந்த மிக உன்னதமான கருத்துக்களைச் சொன்னவர் சிங்காரவேல் போன்றவர்கள். அப்படி சிங்காரவேல் குறிப்பிட்டபடி, பெரியாரின் கருத்துக்கள் பல இருக்கின்றன. பல புஸ்தகம், புஸ்தகங்களாக வெளியிட்டிருக்கிறார்கள். அதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள கூடிய பல அருமையான கருத்துக்கள் வந்திருக்கின்றன.

அதைப்போல அண்ணாவின் கருத்துக்கள். அப்படி கொஞ்சம் செலக்ட் பண்ணி செய்யலாம். பக்திப் பிரச்சாரம் செய்யக் கூடியதை ஒரு மாதத்திற்கு ஒரு தடவை வைத்துக்கொள்ளலாம். மற்ற நாளில் மற்ற மார்க்கம் இருக்கிறது. அந்த முறையில் இருக்க வேண்டும். இன்ஸிடெண்டலாக சொல்ல வேண்டுமென்று சொன்னேன். அரசியல் சட்டத்தில் அந்தப் பாது காப்பு இல்லை.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 ஏப்ரல் 15

அரசியல் நிர்ணயச் சட்ட விவாதத்தைப் பார்த்தோமானால் எப்படி இந்த மத வெறி பிடிக்காமல் இருக்க வேண்டும், இந்த மதப் பிசாசு வரக் கூடாது, ஜாதிப் பிசாசு வரக் கூடாது, அதைப் பாதுகாக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, ஒதுக்கப்பட்டவர்களுக்கு வசதியும், வாய்ப்பும் செய்து கொடுக்க வேண்டுமென்ற முறையில் விவாதம் வந்திருக்கிறது. அந்த அடிப்படையில் வந்த அரசியல் சட்டத்தில் 25, 26 ஆவது பிரிவுப்படி இந்த மாதிரி செய்தது வருந்தத்தக்கது. இன்றைக்கு நம்முடைய தீர்மானம் ரொம்பப் பொருத்தமாக வந்திருக்கிறது. இது முறையானது. இந்த மாதிரி அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று நல்ல முறையில் கேட்டுக்கொள்வதாக அமைந்திருக்கிறது. ஆகவே எங்கள் கட்சியின் சார்பில் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன்.

**திரு. செ. கந்தப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, ஒரு சில கருத்துக்களை நான் இங்கே குறிப்பிடுகிற ஒரு வாய்ப்புப் பெற்றதாலே மகிழ்ச்சி அடைகிறேன்.

திரு. கோதண்டராமையா இங்கே குறிப்பிடுகிறபோது நீதி மன்றத் தீர்ப்பைச் சுட்டிக்காட்டி, அது வாழையடி வாழையாக வந்ததொரு வழக்கம் போல பரிந்துகொண்டு வாதாடினார்கள். வாழையடி வாழையாக வரும் அடிப்படையை ஒத்துக்கொள்வதாக இருந்தால் அல்லது செக்குலர் ஸ்டேட் என்று சொல்லக்கூடிய ஒரு நாட்டில் மதப் பிரச்சினைகளில் நாம் தலையிடக் கூடாது என்ற கருத்துக்கு நாம் உடன்படுவதாக இருந்தால் நர பலிகளைக் கூடத் தடுக்க முடியாமல் போய்விடும்.

India is a secular State. But it should not degenerate into tribal conditions.

இன்றைக்கு இருக்கிற நிலவரங்களில் நாள்தோறும் பத்திரிகையில் பார்க்கிறோம். காளிக்கு தன் மகனையே பலியிட்டு அதனால் புண்ணியம் கிடைக்கும் என்றால் புண்ணியத்தைத் தேடிக்கொள்ள முயற்சிக்கிற தந்தையைப் பார்க்கிறோம். இதைக்கூடத் தடுக்க முடியாது.

இன்னும் சொல்லப்போனால் செக்குலர் ஸ்டேட் என்ற வாதத்தை ஒத்துக் கொள்வதாக இருந்தால் நம் தமிழகத்தில் மதுவிலக்கை அமல்படுத்த முடியாமல் கூடப் போகும். காளிக்கும், துர்க்கைக்கும் வேறுபல தெய்வங்



1974 ஏப்ரல் 15]

களுக்கும் கள்ளை பரம்பரையாக அளித்து உண்டு களிக்கிற பழக்கங்களை மேற்கொள்கிறவர்களும் இருக்கிறார்கள் என்பதை அறிகிறோம். இதை எல்லாம் சுட்டிக்காட்டி—வாதாட முடியும்—இது செக்குலர் ஸ்டேட்—இதில் தலையிடக் கூடாது என்று சொல்ல முடியும்.

திரு. தங்கமணி அவர்கள் மிகப் பொருத்தமாகச் சுட்டிக் காட்டினார்கள். செக்குலர் ஸ்டேட் என்கிறபோது அது ஒரு அளவுக்கு நிறுத்தப்பட வேண்டுமே தவிர அதை விரிவுபடுத்திக்கொண்டே போய்விட முடியாது. இன்னும் சாதிப் பழக்க கொடுமைகள் இருக்கின்றன என்பதை எல்லாம் சுட்டிக் காட்டினார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : The hon. Member Thiru Kandappan said that the meaning of Secular State should be taken in a limited sense. What I say is why should we have a Secular State at all when we are trying to reform Hindu religion. But you are laying stress not on religion but on Archakas and other things. Let us change the secular system of administration. Then we can take up, all these things.

**திரு. செ. கந்தப்பன் :** மற்ற மதங்களைக் குறித்துப் பேசுவதை மற்ற மதக்காரர்களுக்கே விட்டுவிடுவோம். இந்து மதத்தைச் சேர்ந்த நாம் அதைப்பற்றி எல்லாம் பேசப் போவது அவர்களை வம்புக்கு இழுப்பது போல, அவர்கள் மனத்தைப் புண்படுத்துவது போல இருக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மற்ற மதங்களைப் பற்றிப் பேசுவது என்றால் அவர்களைப் புண்படுத்துவதாக இருக்கும். ஆனால் இந்து மதத்தைப்பற்றிப் பேசலாம். கேட்க ஆள் கிடையாது. யாரை வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் புண்படுத்தலாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** முதலில் நம்மை நாமே திருத்திக் கொண்ட பிறகு மற்றவர்களைத் திருத்தலாம் என்பதன்பாற்பட்டதுதான் திரு. கந்தப்பன் பேச்சு.

**திரு. செ. கந்தப்பன் ::** அம்மையார் ஆண்டவன்மீது பாரத்தைப் போட்டு விட்டு, கொஞ்சம் அமைதியோடு நான் சொல்வதைக் கேட்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** என்னால் பாரத்தைத் தாங்க முடியும். ஆண்டவன்மீது பாரத்தைப் போட வேண்டியதில்லை.

**திரு. செ. கந்தப்பன் :** நான் வரலாற்று அடிப்படையில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தத்துவங்களுக்குள் செல்வதாக இருந்தால் அது கடினமாக இருக்கும்.

இந்து மதத்தைப் பற்றி—சைவசித்தாந்த அடிப்படையில் பல விளக்கங்களை அளித்து வருகிற திரு. குன்றக்குடி அடிகளார்கூட தம்மை இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் அல்ல என்று பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள். நான் தத்துவ வாதங்களுக்குள் இறங்கவில்லை. என்னைப் பொறுத்தவரையில் சாதியை வெறுக்கிறேன்—அப்படியே மதத்தை வெறுக்கிறேன்—இந்த நாடு மட்டுமல்ல—உலகம் உருப்பட வேண்டுமானால் மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று இருக்கிறது என்றால் அந்தச் சக்தியை அன்பின் பேராலே, அறிவின் பேராலே பாராட்டிக்கொள்ளலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : The hon. Member said something about 'matham'. I would request the hon. Member to clarify the meaning of 'matham' and let him also clarify the meaning of 'jathi'. All great men have praised our 'matham' Why should the hon. Member confuse 'matham' and 'jathi'. Let him clarify the terms.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னேன். நான் தத்துவ விளக்கங்களுக்குள் சென்று சிக்கிக் கொள்ள விரும்பவில்லை. சரித்திர சம்பந்தமான எடுத்துக் காட்டோடு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன், மார்க்கோபோலோ எழுதிய குறிப்பை அடிப்படையாகக் கொண்டது. அவர் தென்னகக் கோயில் ஒன்றுக்கு வந்திருந்த நேரத்தில் அவரால் ஏற்றுக்கொள்ள முடியாத, அநாகரீகமான பழக்கம் ஒன்றைக் கண்டதாக எழுதி வைத்திருக்கிறார். அதில் ஆண்டவனுக்குப் பூசை செய்கிற நேரத்தில் ஆண்களும், பெண்களும் ஆடைகள் எதுவும் இன்றி ஆடிப் பாடி வழிபட்டதாகவும்—இப்படி ஒரு பழக்கமா, இது விரும்பத்தக்கதா என்று கேட்டபோது—அவருக்குச் சொல்லப்பட்டது—பிறந்த மேனியோடு இப்படி வழிபடுவதால் ஆண்டவனது கோபம் தணிந்து உற்சாகத்திலால் கருணை





பாலிக்கிறார் என்று சொல்லப்பட்டதாக மார்க்கோபோலோ குறிப்பில் தருகிறார். அதுவும் தென்னகத்திலே இந்த வழக்கம் இருந்ததாகக் கூறப்படுகிறது. இன்றைக்குத் திருக்கோயில்களில் இதுபோல நடைபெறுகிறது என்றால் சரியானதா? நான் செக்சி என்கிற அடிப்படையில் கூடப் போகவில்லை. தத்துவ விளக்கத்திற்குள் கூட போக விரும்பவில்லை.

நண்பர் திரு. கே. டி. கே. சொல்வதுபோல செக்குலர் என்ற அளவுகோலை ஒரு குறிப்பிட்ட வரம்போடு வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர அப்படியே விரிவுபடுத்திக்கொண்டு போய்விட முடியாது.

இன்றொன்றைப் பார்க்க வேண்டும். இது தாழ்த்தப்பட்ட சமூகத்தினர்களுக்குப் பயிற்சி கொடுத்து, அர்ச்சகர்கள் பதவிக்கு அவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை வாங்கி, அவர்களை எல்லாம் அந்தப் பதவியில் நிரப்பிவிட வேண்டுமென்ற அடிப்படையில் கூட வந்தது இல்லை. மனிதர்கள் எல்லோரும் சமம் என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு இந்தத் தீர்மானத்தை நாம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கிறோம். நிச்சயமாக இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் இது பெரிதும் விரும்பத்தக்கதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. மத்திய அரசு உடனடியாக இந்தத் தீர்மானத்தை ஏற்று, அரசியல் சட்டத்தைத் திருத்தி இந்திய சமுதாயத்தை நாகரீக வழியில் இட்டுச் செல்ல வேண்டிய தலையாய கடமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது உண்மையில் சட்டச் சிக்கலுள்ள பிரச்சினையும் அல்ல. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே—மனிதயினத்தின் உள்ள ஏற்றத் தாழ்வுகள் அகற்றப்பட வேண்டும் என்கிற அடிப்படையில் தோன்றிவிட்ட எண்ணக் கருத்தின் அடிப்படை தான். அதிலிருந்து சமுதாயம் விடுபட வேண்டுமென்ற முயற்சியின் தொடர்ச்சிதான், தமிழ் நாவலர் சரிதையில்—ஒரு பாட்டு—எனக்குப் பாடத் தெரியாது—பயிற்சி இல்லாத ஒன்றில் சென்று மாட்டிக் கொள்ள மாட்டேன். கருத்தைச் சொல்கிறேன். நாவலர் சரிதையில் அம்மையார் பாடிய வெண்பா ஒன்று இருக்கிறது.

சந்தன மரமும் வேம்பும் தனித்தனி கந்தநாறும்
அந்தணர் தீயில் வீழ்ந்தால் அதுமணம் நாறக்காணேன்
செந்தலைப் புலையனார்க்கும் தீ மணம் அதுவே காணும்
பந்தமும் தீயும் வேறோ பார்ப்பனச் சோமத்தாரே

என்பதாக டாக்டர் கலைஞர் காலத்தில் சொல்லப்பட்ட கருத்து அல்ல— அறிஞர் அண்ணா காலத்தில் சொல்லப்பட்ட கருத்தல்ல—தந்தை பெரியார் காலத்தில் சொல்லப்பட்ட கருத்து அல்ல. பாரதிதாசன் பாடல்கள் எழுத வதற்கு ஒருசில நூறு ஆண்டுகளுக்கு முன்பே சொல்லப்பட்ட கருத்தாகும். சந்தன மரத்தை நெருப்பிலிட்டால் அதிலிருந்து நல்ல மணம் எழுகிறது வேம்பு மரத்தை நெருப்பிலிட்டால் அதிலிருந்து ஒரு நெடி வருகிறது, இதைப் பொறுத்து எந்த மரத்திலிருந்து மணம் வருகின்றதோ அது சந்தண மரம் என்று சொல்லிவிட முடிகிறது, எந்த மரத்திலிருந்து நெடி வருகிறதோ அந்த மரம் வேம்பு மரம் என்று சொல்லிவிட முடிகிறது. ஆகவே மரங்கள் இரண் டாக இருந்தாலும் அவற்றிலே சாதி தெரிகிறது. ஆனால் ஒரு அந்தணனை நெருப்பிலே இட்டாலும் அல்லது தாழ்த்தப்பட்டவரை அல்லது பறையனை நெருப்பிலே இட்டாலும் ஒரே பிண வாடைதானே அடிக்கிறதே தவிர அதிலே எந்தவிதமான சாதி வாடையும் இல்லையே என்று ஒரு பெண்மணி நல்ல முறையிலே பாடியிருக்கிறார்கள் . . .

(நண்பகல் 12-00)

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தாழ்த்தப்பட்டவர் என்று சொன்னார்கள் அதற்குப் பிறகு அவர்கள் சொன்ன ஒரு வார்த்தை இருக்கிறதே அது அவையிலே பேசக்கூடியதல்ல, அவர்கள் சீர்திருத்தவாதி என்று சொல்லிக் கொண்டு அந்த வார்த்தையைச் சொல்வது வருந்தத் தக்கது. ஆகவே அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. கந்தப்பன்:** அம்மையார் அவர்கள் மிக மெலிவான சத்தற் வாதத்தை திசை திருப்புகிற நோக்கத்தோடு தெரிவிக்கிறார்கள். அந் பாடலில் பயன்படுத்தப்பட்ட வாசகத்தின் . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பறையன் என்று சொல்லியிருக்கிறார்கள் அதை நீக்கவேண்டும்.

**திரு. என். இராஜங்கம்:** பறையன் என்ற சொல், பறையை அறிவிப்பவன் என்ற பொருளிலே வந்தது. அரிசனங்களுக்கு என்று லிஸ்டே வைத்திருக் கிறோம். அந்தப் பட்டியலிலேயே அந்தப் பெயர் இருக்கிறது, அந்தப் பெயரையே அதிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று அம்மையார் அவர்கள் கேட்டால் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அகில இந்திய அரசின் சார்பிலே



அதைப் போட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, நாயாடி என்றும் பெயர் போடப்பட்டிருக்கிறது. ஆகவே அம்மையார் அவர்கள் அதையெல்லாம் நீக்க வேண்டுமென்று முதலிலே அகில இந்திய சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டும்.

**திரு. செ. கந்தப்பன்:** பிரச்னை பெயரைப்பற்றி அல்ல. செத்தலைப் புலையனுக்கும் அந்தணருக்கும் ஒரே தன்மைதான் இருக்கிறது என்பதைத் தான் அந்தப் பாடல்மூலம் தெளிவாக்கியிருக்கிறார்கள்.

பூரி சங்கராச்சாரியார் அவர்கள் கொஞ்ச காலத்திற்கு முன்பு ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அப்பொழுது நாடாளுமன்றத்திலே இதைப் பற்றிய பிரச்னைகள் வந்தது எல்லாம் உறுப்பினர்களுக்கு நினைவிருக்கும் என்று நினைக்கிறேன். இந்து மதத்தின் அடிப்படையிலே தீண்டாமை உண்டு என்ற கருத்து அவரால் சொல்லப்பட்டு நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அதற்கு எதிர்ப்புகள் கிளம்பி பிறகு அவர் அதை விளக்குகின்ற நேரத்திலே சாஸ்திரங்களின் அடிப்படையிலே தான் அந்தக் கருத்து இருப்பதாகச் சொன்னேன். ஆனால் அந்தக் கருத்தை ஒத்துக் கொள்ளவில்லை என்று விளக்கம் சொன்னார்கள்.

அந்த நோக்கிலே நாடு பூராவிலும் ஏற்பட்ட நிலைமைகள், நம்முடைய சட்டத்திற்கு உச்ச நீதிமன்றத்திலே ஏற்பட்ட நிலைமைகள் இவைகளை வைத்துப் பார்த்தால் நிச்சயமாக இந்த சமுதாயம் இன்னும் முன்னேற வேண்டிய நிலைமையிலிருக்கிறது என்பதை அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இந்தத் தீர்மானம் அரிய ஒரு தீர்மானம், இதை கட்சிக்கு அப்பாற்பட்டு நின்று அணுகி, இதனால் தமிழகம் மட்டுமல்ல, இந்தியாவிலே இருக்கின்ற மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக ஒரு ஒப்பற்ற சமன்பாட்டை ஏற்படுத்துகின்ற ஒரு தீர்மானமாக இருக்கின்ற காரணத்தினால், காந்தியடிகள் செய்த தீண்டாமைப் பிரச்சாரம் கனலை, எழுச்சியை ஏற்படுத்தியது, பிறகு அப்படிப்பட்ட எழுச்சியை இந்தத் தீர்மானம் தோற்றுவிக்கவல்லது என்ற காரணத்தினால், இப்படிப்பட்ட நல்ல தீர்மானத்தைக் கொண்டுவந்த நம்முடைய அரசை நான் பாராட்டி, இந்தத் தீர்மானத்தை இந்த அவையில் உள்ள அனைவரும் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டு ஆதரித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

## சாதி, பிரிவு, உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையே இருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள், ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்க இயலும் வகையில் அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து

[1974 ஏப்ரல் 15

(திரு. துரைமுருகன் தலைமை)

**திரு. எம். ஆர். கண்ணன் :** இந்து, இந்துஸ்தான் என்றால் என்ன பொருள் என்பதை விளக்க வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) :** இந்து என்றால் என்ன, கிறிஸ்தவர் என்றால் என்ன என்றெல்லாம் விளக்கம் பெற முடியாது, இங்கே இருக்கின்ற தீர்மானம் அர்ச்சகர்கள் நியமனம் பற்றியது, அதைப்பற்றி பேச வேண்டும்.

**திரு. எம். ஆர். கண்ணன் :** நாம் இந்துக்கள் என்று சொல்கிறோம். நான்கு வகை ஜாதிகள் என்று சொல்கிறார்கள் அது என்ன? நாம் எல்லாம் இந்துக்கள்தானா?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** சட்டத்திலேயே இந்துக்கள் என்று இருக்கிறது. தலைவர் அவர்களே, அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பாக ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல முன் வந்துள்ளேன்.

இன்றைக்கு நாட்டிலே இந்து மதத்தின் பெயராலே காலத்திற்கு ஒவ்வாத பல செய்திகள் நடைபெறுகின்றன என்பதை நீண்ட நெடுங்காலமாக பல பெரியவர்கள் சொல்லி வருகிறார்கள். காந்தியடிகள் சுதந்திரப் போராட்டம் ஆரம்பித்த நேரத்திலே இந்து மதத்திலே இருக்கிற தீண்டாமை ஒழிக்கப் பட்டால்தான் இந்த நாட்டிற்கு விமோசனம் ஏற்படும். மதக்கோட்பாடுகளுக்கு ஜாதி உட்பட்டதல்ல.

ஆனால் மதம் என்பது ஒரு மனிதன் தன்னைப்பற்றி, தன்னுடைய ஒழுக்கத்தைப்பற்றிச் சிந்திப்பதற்காக இருக்கின்ற ஒன்று, மதம் என்பது ஜாதிகளைக் கொண்டதாக இருக்கக் கூடாது என்றெல்லாம் சொல்லியிருக் கிறார்கள். அதற்கு முதற்படியாகத்தான் அவர்கள். தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கி வைப்பதுபோன்ற தீமை வேறு கிடையவே கிடையாது என்று சொன்னார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் என்று ஒதுக்கிவைக்க வேண்டுமென்று இந்து மதத்திலே எங்கேயும் சொல்லப்படவில்லை. அதற்கு முந்தைய காலத்திலேயுங்கூட தாழ்த்தப்பட்டவர்கள் என்று இருக்க வேண்டும், ஜாதிய



1974 ஏப்ரல் 15] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

உணர்வுகள் இருக்க வேண்டுமா என்ற நிலைமை ஏற்பட்டபோது அப்போதும் அவையெல்லாம் இருக்கக் கூடாது என்ற கருத்துத்தான் கூறப்பட்டு வந்திருக் கிறது.

பல்வேறு கருத்துக்கள் பல்வேறு அறிஞர்களால் சொல்லப்பட்டு வந்தாலும் கூட தீண்டாமை, உயர்வு தாழ்வு நீடித்து வந்து கொண்டுதான் இருக்கிறதே தவிர அறவே ஒழிந்தபாடில்லை என்ற நிலைமை மிகவும் வருந்தத் தக்கது.

அந்தக் காலத்திலேயே வள்ளுவர் "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்று சொல்லியிருக்கிறார்.

அதற்குப் பிறகு ஔவையார் அவர்கள் ஜாதி இரண்டொழிய வேறில்லை என்று, கொடுக்கிறவன், கொடுக்காதவன், பண்பாடு உள்ளவன், பண்பாடில்லாதவன் என்று இரண்டு ஜாதிகள் தான் உண்டு என்று பாடி யிருக்கிறார்.

அதி வீரராம பாண்டியர் வெற்றி வேற்கையிலே நான்கு வகை வருணங்கள் குலத்தாலே வருவதல்ல, கடமையைச் செய்கின்ற காரணத்தினால் வருகின்றது என்ற முறையிலே நாற்பால் குலத்தில் மேற்பால் ஒருவன் கற்றிலன் ஆயின் கீழ் இருப்பவனே என்று பாடியிருக்கிறார்.

இப்படி ஒவ்வொரு காலக் கட்டத்திலேயும் பார்க்கிறபோது அவ்வப்போது விரிவான முறையிலே ஆராய்ந்து கருத்துக்கள் சொல்லப்படுகின்றன.

இராமலிங்க அடிகள், ஜாதி என்பதே கூடாது. சமுதாயத்தின் தீங்கிற்கு அது காரணம் என்று சொல்லியிருக்கிறார்.

மிக, மிக கடவுள் பக்தியுள்ள இராமானுசர்கூட ஒரு புரட்சி செய்தார், அரிசனங்கள் நெற்றியிலே நாமத்தைப் போட்டு நீ தான் அய்யங்கார், நீ தான் அய்யர் என்று சொன்னார். அவ்வப்பொழுது வந்த மதச்சார்புள்ள பெரியவர்களும், மதச்சார்பற்ற பெரியவர்களும் மனிதனுக்கு மனிதன் வேறுபாடு காட்டுவது தீமையானது, சமுதாய வளர்ச்சிக்குக் கெடுதல் விளைவிக்கக்கூடியது என்று சொல்லியிருக்கிறார்கள் . . .

திரு. எஸ். வடிவேல் : பல பெரியவர்கள் சொல்லியிருக்கலாம் . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : நீங்கள் கேட்பது பாயின்ட் ஆப் ஆர்டரா, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷனா அதை முதலில் சொல்லுங்கள்.

திரு. எஸ். வடிவேல் : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். திரு. மாரிமுத்து அவர்கள் பேசும்பொழுது பல பெரியவர்கள் என்று சொன்னார்கள், காந்தியடிகள் சொன்னதாகச் சொன்னார்கள். காந்தியடிகள் கடவுளின் குழந்தை என்ற முறையிலே அரிஜன் என்று சொன்னார்கள். ஆனால் தந்தை பெரியார் அவர்கள் நீ தாழ்ந்தவன் இல்லை, தாழ்த்தப்பட்டவன் என்று சொல்லியிருக்கிறார். பல பெரியவர்கள் சொன்னதைவிட தந்தை பெரியார் சொன்னது தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சிறந்த கருத்து என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா ?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, எனக்கு ஒன்றும் அதிலே கருத்து வேறுபாடு கிடையாது. இப்போது இருக்கிற நிலையிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்கள் உயர வேண்டும் என்ற கருத்தில் யாருக்கும் வேறுபட்ட கருத்து இருப்பதற்கு இல்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு இருக்கும் நிலையை உயர்த்தி, எல்லோருக்கும் சமமான நிலையில் சமுதாயத்தில் இடம் வழங்குவதற்காக நாம் எத்தனையோ சட்டதிட்டங்களை நிறைவேற்றி வந்தாலும், நான் வருத்தத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அந்தச் சட்டதிட்டங்கள் சரியான முறையில் அமலாக்கப்படவில்லை. அப்படி அமலாக்க முயற்சித்தாலும், கிராம மக்கள் சட்டத்திற்கு மதிப்புக் கொடுத்து அவர்களைச் சமமாக ஏற்றுக்கொள்ளவில்லை என்ற நிலையைப் பார்க்கிறோம். இதில் நாம் தீவிரமாக முயற்சி எடுத்து பாகுபாடு அற்ற நிலையைக் கொண்டு வரவேண்டும். அதை நாம் பல்வேறு நிலைகளில் பார்க்கிறபோது பொருளாதார ஏற்றத்தாழ்வு அற்ற நிலையைப் பார்க்கிறபோது, அது மாறிவிடும் என்று கருதுகிறேன். பொருளாதார ஏற்றத்தாழ்வு குறைந்தால், தாழ்த்தப்பட்டவர்கள் பொருளாதார நிலையில், உயர்ந்தால் ஒரு பெரிய ஏற்றத்தாழ்வு கருத்து இல்லாமல் இருக்கலாம்.





கோவிலுக்குள் நுழைவதற்கு இன்றைக்கு அனுமதி வழங்கி இருக்கிறோம். ஆனால் பல இடங்களில் அரிஜன், தாழ்த்தப்பட்டவன் நுழைய முடியவில்லை. இது எல்லோருக்கும் தெரிந்த பகிரங்க ரகசியம். ஆனால், அமலாக்குவதற்கு நம்மால் இயலாத நிலை என்ன ? அவர்கள் அந்தக் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட நிலையில், பொருளாதார நிலையில், இழிந்த நிலையில் இருப்பதால் அவர்கள் அங்கேயுள்ளோரோடு அண்டி, அணுகி வாழவேண்டியிருக்கிறது. ஆதலால் அரசு எவ்வளவு தான் சட்டத்தைப் போட்டாலும், போலீசை வைத்துக் கோவிலுக்குப் போகின்றவர்களை தடுப்பவர்களைக் கைது செய்து கொண்டிருக்கிற நிலை முடியாது.

அவர்களும் கோவிலுக்குள் சென்று சாமி கும்பிட எங்களுக்கு உரிமை உண்டு, சட்டபூர்வமாக அனுமதி இருக்கிறது என்று சொல்லி ஒருவன் நுழைந்தால் அவர்களை மேல் ஜாதிக்காரர்கள் தடைசெய்வார்கள். அப்படித் தடை செய்கிறபோது அவர்கள் சொல்படி தான் அவன் நடக்க வேண்டியிருக்கிறது. அவனுக்குச் சம்பளம் கொடுப்பது, வேலை கொடுப்பது எல்லாம் அவர்கள் கையில் இருக்கிறது. அவனுடைய பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் நிலையில் அவர்கள் இருப்பதால் அவர்கள் அவர்களை அனுசரித்துப் போக வேண்டியிருக்கிறது. இல்லையென்றால் அவர்கள் பொருளாதாரத்தில் நசுக்கப்படுகிறார்கள். சங்கடப்படுத்தப்படுகிறார்கள். அப்படிச் செய்கிறபோது அவர்களை மீறி வாழ முடியாத நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, கோவிலுள் நுழைந்து கும்பிடுவதற்கு உரிமை என்று சட்டபூர்வமாக நாம் கொடுத்திருக்கும் உரிமையை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்கவேண்டும்.

அடுத்ததாக, இந்த அர்ச்சகராகப் போவது. இந்து மதத்தில் தான் இருக்கிறது, ஒரு ஜாதிக்காரர்கள் தான் போக முடியும் என்று. கிருஸ்துவ மதத்தில், முஸ்லீம் மதத்தில் எடுத்துக் கொண்டால் அவர்களிடத்தில் இந்த மாதிரி ஜாதி பாகுபாடு கிடையாது. யார் பயிற்சி பெறுகிறார்களோ அவர்கள் ப்ரீஸ்ட்டாக வரமுடியும். ஆனால் இந்துக்கள் கோயில்களில் உள்ள முறை நம்நாட்டில் தொன்றுதொட்டு இருந்து கொண்டு வரும் முறை. இதை மாற்றி அமைப்பதில் தவறு கிடையாது.

### சாதி, பிரிவு, உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையே இருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள், ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்க இயலும் வகையில் அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து



செகுலர் ஸ்டேட் என்று சொன்னால் மதத்திற்குள்ளே தலையிடுவது கூடாது என்று வைத்துப் பேசுவது சரியான வாதமாக இருக்காது. முன்னாலே பேசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். மதம் வாழ்க்கையின் எல்லா இடங்களிலும் ஊறிப்போய் இருக்கிறது. மாற்றங்கள் செய்யும்போது மதம் வந்து குறுக்கிடத்தான் செய்யும். எதுவானாலும் வாழ்க்கை மதத்தை ஒட்டியிருப்பதால் அதிலே நுழையாமல் இருக்க முடியாது. மதம் என்பது தனியாக மனிதனின் உரிமை. அவன் சாமி கும்பிடலாம். கும்பிடாமல் இருக்கலாம், அதிலே நாம் தலையிட முடியாது. மதத்தின் பெயரால் . . .

திரு. க. மு. இராஜகோபால்: ஒரு விளக்கம் சார். எந்த மதத்திலும் இன்று இருக்கின்ற மதங்களில், உருவ வழிபாடு கிடையாது. ஆனால் இந்து மதத்தில் உருவ வழிபாடு உண்டு. கடவுளை வணங்குவது மட்டுமல்ல, சிலையை செம்பொன்னில் செய்து அதிலே கணவன் மனைவி உருவம் வைத்து, அதற்கு குளிப்பாட்டுவது, சுத்தம் செய்வது, ஆடை அணிவிப்பது என்று இப்படி ஒரு வினைமான, * * செய்கை இந்த மதத்தில் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் வேறு எந்த நாட்டிலும், வேறு எந்த மதத்திலும் உலகத்தில் எங்கும் நடக்காத ஒரு கோட்பாடு இந்த மதத்தில் நடைபெறுகிறது. அதை ஒரு ஜாதியைச் சேர்ந்த மக்கள் தான் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். இது ஆண்டவனையோ, ஆண்டவன் மனைவியையே கேவலப்படுத்துவது இந்த இந்து மதத்தில் தான் இருக்கிறது. இதற்கு விளக்கம் சொல்லவேண்டும்.

(திரு. கே. எம். சுப்பிரமணியம் குறுக்கீடு.)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அவரவர்கள் எண்ணப்படி உருவ வழிபாடு செய்கிறார்கள் . . .

THIRU K. M. SUBRAMANIAM: * * is not proper; it is an insult to lakhs of people. . . .

ஒருவனுக்கு சாமி நம்பிக்கை இருக்கும். ஒருவன் பக்தி செய்யாமல் இருப்பான். * * என்று சொல்வது சரியல்ல. மூட நம்பிக்கை என்று சொல்லலாம். எது மூட நம்பிக்கை என்று சொல்வது அவரவர்கள் விருப்பம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆண்டவனுக்கோ அல்லது ஆண்டவன் அருகாமையில் இருக்கும் அம்பிகைக்கோ அபிஷேகம் செய்வது சரியா இல்லையா என்பது அல்ல இன்றைய தீர்மானத்தின் நோக்கம். அந்தணருக்குத்தான் பூவெடுத்து பூஜிக்கும் உரிமை என்று இல்லாமல், எல்லோருக்கும் உரிமை உண்டு என்ற அடிப்படையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எல்லோருக்கும் உரிமை அளிக்க வேண்டும். அதற்கு ஏற்ப அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பது நோக்கம். இதை ஆளும் கட்சி உறுப்பினர்களும் புரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: புரிந்து தான் நான் அதை ஆதரித்தேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: உருவ வழிபாடு செய்வது அவரவர்கள் நம்பிக்கையைப் பொறுத்தது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, on a point of order. The Hon. Chief Minister has very clearly stated the purpose of the Resolution today. But other members talk so many things. They have used the word * *
That may be expunged from the proceedings, Sir.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்): திரு. ராஜகோபால் பேசுகிறபோது சொன்ன ** என்ற வார்த்தையை சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். பத்திரிகைகளிலும் பிரசுரிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. மு. இராசகோபால்: நான் ** என்று எதற்காகச் சொன்னேன் என்றால் . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்): தலைவர் தீர்ப்புக்கு எதிராகப் பேசக் கூடாது. உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** Sir, Point of Order. இன்று நம் அவை முன் வைக்கப்பட்டிருக்கும் ரெசல்யூஷன் ஆலயங்களில் அனைவரையும் அர்ச்சகர்களாக நியமிக்க வேண்டும் என்பதைப் பற்றித்தான். அதைத்தான் அவர்கள் பேச வேண்டும். அதைப் பற்றி பேசுவதை விட்டு விட்டு இந்து மதத்தில் உருவ வழிபாடு போன்றவற்றைப் பற்றி பேசுவது சரியல்ல.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்):** முதலமைச்சர் அவர்கள் அதற்கு வேண்டிய அருமையான விளக்கத்தைச் சொல்லிவிட்டார்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அவர் சொல்லி விட்டார். நான் என் கருத்தைச் சொல்கிறேன். இந்து மதத்தை ஆராய்வதற்கு யாருக்கும் இங்கே அருகதை கிடையாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அருகதை கிடையாது என்று சொல்வது அம்மையார் அவர்கள் தன்னைத் தானே தாழ்த்திக் கொள்வது போல் இருக்கிறது. வேண்டுமானால் அவர்களுக்கு அருகதை இல்லாமல் இருக்கலாம். மற்றவர்களை அவர் பட்டியலில் சேர்த்துக் கொள்வதை யாரும் விரும்பமாட்டார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** என்னைப் பொறுத்தவரையில் அருகதை கிடையாது என்பதை திட்டவட்டமாக ஒப்புக்கொள்கிறேன். சட்டசபையில் மத ஆராய்ச்சியில் இறங்குவது என்று சொன்னால், மத நம்பிக்கை உடையவர்கள் மனதைப் புண்படுத்தக்கூடிய முறையில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதைத்தான் ஆளும் கட்சி உறுப்பினர் ராசகோபால் பேசுகிறபோது குறுக்கிட்டுச் சொன்னேன். அவர்களும் சொன்னதாக செய்தித் தாளில் வர வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நீங்களும், உங்களைத் தப்பாக பேசக் கூடாது என்பதற்காக ** நான் பேசினால் என்ன?

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்):** திருமதி அனந்தநாயகி, நீங்கள் ** என்று பேசுவது மன்றத்தின் மரபுக்கு ஒத்து வராது. நீங்கள் கோபப்பட வேண்டிய அவசியம் இல்லை. அரிசன மக்களை அர்ச்சகர்களாக ஆக்கவேண்டுமென்பது பற்றித் தீர்மானம். அது பற்றி மட்டும் பேச வேண்டும், வேறு விவரங்களைப் பேசவேண்டாம் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். நீங்களும் அதே பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்பினீர்கள், என்னுடைய தீர்ப்பையும் சொல்லிவிட்டேன். அதற்குப் பின்னாலே முதலமைச்சரைப் பார்த்து ** என்று சொல்வது இந்த மன்றத்தின் மரபுக்கு உகந்தது அல்ல. ஆகவே, அம்மையார் அவர்கள் ** என்று சொன்ன வார்த்தைகளையெல்லாம் சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். அதைப் பத்திரிகைகளிலும் போட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** என்னுடைய பிரச்னையையும் கவனிக்க வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்):** நான் தீர்ப்புக் கொடுத்தாகிவிட்டது. The hon. Member may resume her seat. நான் தீர்ப்புக் கொடுத்தாகிவிட்டது. அதுகுறித்துப் பேச வேண்டாம். வேறு ஏதாவது இருந்தால் பாயிண்ட் ஆஃப் ஆர்டரில் பேசுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர். நான் தீர்ப்பின்மீது பேசவில்லை. அவர்கள் சொன்னதை எக்ஸ்பஞ்ச் செய்கிறீர்கள். என்றால் செய்திக்காகப் பேசுகிறீர்கள் என்று முதலமைச்சர் சொல்லலாமா? செய்தித் தாள்களுக்காகத்தான் நாங்கள் சட்டசபையில் வேலை செய்கிறோமா?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்):** இந்த அவையில் ** பேசுகிறார்கள் என்று சொல்வதே தவறு. அதற்காக எப்படிச் சொல்வோம் என்றால்—இப்பொழுது நான் சொல்வதைக்கூட எடுத்துவிட வேண்டியதுதான்—உண்மைக்குப் புறம்பாகப் பேசுகிறார்கள் என்று சொல்கிறோம். ஆனால் இரண்டுக்கும் ஒரே அர்த்தம்தான். சொல்லப்படுகின்ற பாணியில்தான் வித்தியாசம் இருக்கிறது. எனவே, ** என்று சொல்வது தவறான விஷயம். நான் இப்பொழுது சொன்னதையும் சேர்த்து எடுத்து விடும்படி தெரிவித்துக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

சாதி, பிரிவு, உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையே இருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள், ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்க இயலும் வகையில் அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து

(மாற்றுத் தலைவர்) [1974 ஏப்ரல் 15

**திருமதி த. ந. அனந்தநாயகி:** உண்மைக்குப் புறம்பானது என்றுகூடச் சொல்லவில்லை. செய்திக்காகப் பேசுகிறீர்கள் என்று சொன்னால் அது கடுமையான விஷயம். செய்திக்காக யாரும் பேசவில்லை. வெளியே இருப்பவர்களுக்கு யார் யார் எப்படி என்பது நன்றாகத் தெரியும். ஆகவே, செய்திக்காகப் பேசுகிறீர்கள் என்று ஒரு சட்டசபை அங்கத்தினரைப் பார்த்து முதலமைச்சரவர்கள் சொன்னது சரியா?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்):** எல்லோரும் சொல்வதுதான்.

**திரு. நா. வீராசாமி:** செய்திக்காகச் சொல்லவில்லை என்றால், முதலமைச்சர் சொன்னதையே இவர்கள் எதற்காகத் திரும்பவும் சொல்ல வேண்டும். முதலமைச்சர் சொன்னதையே, அவசரம் அவசரமாக ஓடிவந்து, முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்களோ அதே வார்த்தைகளை ஏன் சொல்ல வேண்டும்?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்):** எல்லாக் கட்சிக்காரர்களும் அடிக்கடி சொல்வதுதான்.

**திரு. எ. ஆர். மாரிமுத்து:** தலைவரவர்களே, மதச் சார்பற்ற அரசு என்றால் மதத்திலே இருப்பவர்கள் இஷ்டப்படி எப்படி வேண்டுமானாலும் செய்யலாம் என்று விட்டுவிடுவது என்பது அல்ல. கான்ஸ்டிட்யூஷன் அசெம்பிளியில் பேசியதைப்பற்றி மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். ஓர்ஷிப் செய்வதில் தலையிடுவதில்லை. ஆனால் மதத்தின் பெயரால் தவறுகள் நடந்தால் அதிலே தலையிட்டு அந்தத் தவற்றை நிவர்த்திப்பதற்கு அரசாங்கத்திற்கு உரிமை உண்டு. அந்த உரிமையை விட்டுவிட்டதாக மதச் சார்பற்ற தன்மையிலே எடுத்துக் கொள்ள முடியாது. ஆகையால் இந்து மதத்தைப் பொறுத்தவரையில் இந்து மதத்தில்தான் தீண்டாமை இருக்கிறது. வேறு எந்த மதத்திலும் தீண்டாமை இல்லை. இந்து மதத்தில் இருப்பதால் இந்தத் தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமென்று சட்டமியற்றினால் அது அந்த மதத்தில் தலையிடுவதாகப் பொருள் அல்ல. சமுதாயத்திலுள்ள மோசமான நிலைமையைச் சீர்திருத்துவதற்காக எடுக்கும் நடவடிக்கையாகவே அதைக் கருத வேண்டும்.



1974 ஏப்ரல் 15]

சோஷலிச இலட்சியம் என்று வைத்துக் கொள்கிறோம். சோஷலிசம் என்ற இலட்சியத்தை அமலாக்கும்பொழுது மனிதனுக்கு மனிதன் சுரண்டுவதே கூடாது—அதைப்போல மதத்தின் பெயராலும் சுரண்டக் கூடாது. மதத்தின் பெயரால் சுரண்டினால் அதில் தலையிடுவதற்கு அரசுக்கு உரிமை உண்டு. எந்த மதமானாலும் சுரண்டாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்வதற்கு அரசுக்கு உரிமை உண்டு.

நம் நாட்டிலுள்ள நிலைமை என்னவென்றால் மைனாரிட்டி சமுதாயத்தினருக்குச் சில உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, நாம் செய்ய வேண்டாத் தலையிடுவதில் சிரமங்கள் இருக்கின்றன. சோஷலிச அமைப்பிற்கு நாட்டிலே இருக்கின்ற மைனாரிட்டியினரும் நிச்சயமாக ஒத்துழைப்பார்கள் என்று எதிர்பார்க்க வேண்டும். ஆகவே, 'இம்மாதிரி அர்ச்சகர்களாக வரும்பொழுது முன்பே சொன்னார்கள், இருக்கின்ற யாரையும் விலக்கி தாழ்த்தப்பட்டவர்களை உடனடியாக அர்ச்சகராக வைத்துவிட வேண்டுமென்று அல்ல, மனிதனாகப் பிறக்கும் யாருக்கும் அர்ச்சனை செய்ய உரிமை இருக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இஷ்டப்பட்டவர்கள் போகலாம் என்று கருதப்படுகிறதே தவிர வேறு அரிசனங்களை உடனடியாகக் கொண்டு வந்து வைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இல்லை.

கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் மதச் சார்பாக வாதிடுவது என்னவென்றால் அரிசனங்களுக்குப் போதிய பயிற்சி இல்லாமல் எஸ்.எஸ்.எல்.சியோ அல்லது பி.ஏ.வோ படித்தவர்களை இதற்காகப் போட்டுவிடுவார்களோ என்ற அச்சத்தை அவர்கள் தெரிவிக்கிறார்கள். அப்படிப் போட முடியாது. அர்ச்சகராக வருவதற்குள்ள தகுதிகளை ஏற்றுக் கொண்டு, அர்ச்சகராக வருவதற்கு மதத்தில் குறிப்பிட்ட என்னென்ன படிப்பு இருக்க வேண்டுமோ அவைகளைப் படித்தால்தான் போகலாம்.

**திரு. செ. கந்தப்பன்:** I am only passing this informations. ஆங்காங்கு அர்ச்சகர்கள் ஆகம விதிப்படி தொழிலை நடத்துகிறார்களா என்று ஆராய அகில இந்திய அளவிலே அமைக்கப்பட்ட சர். சி. பி. இராமஸ்வாமி,

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 ஏப்ரல் 15

ஐயர் தலைமையிலே அமைக்கப்பட்ட குழு எங்கேயும் அது சரிவர செய்யப்படவில்லை. அம்வர்களுக்குச் சரியாக தகமங்கள் தெரியவில்லை என்ற ஒரு தீர்ப்பைக் கொடுத்திருக்கிறார்களே, அதை ஒத்துக் கொள்கிறார்களா ?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** அது உண்மைதான், அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். பாரம்பரியமாக அப்பா காலத்திலிருந்து, அப்பா கோவிலுக்குப் போகும்பொழுது பையனும் கூடவே சென்று அப்பா செய்வதைப் பார்த்து அப்படியே செய்து வருகிறார்களே தவிர, அவர்களுக்கும் முழுவதும் தெரியாமல் இருக்கலாம் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். அப்பாவுடன் கோயிலுக்குப் போய் அப்பா செய்வதைப் போல் செய்கிறாரே தவிர ஆகமப்படி செய்கிறார் என்று ஏற்றுக் கொள்ள முடியாது. எல்லாயிடத்திலும் இருக்கிறது, இல்லை யென்று சொல்லவில்லை.

ஆகவே, அவர்களுக்கும் இந்தப் பயிற்சியைப் பெற வேண்டுமென்று வலியுறுத்தலாம். அம்மாதிரி இருப்பவர்களும் படித்தவர்கள்தான் பூசை செய்யலாம், படித்துத்தான் பூசை செய்ய வேண்டுமென்று சொல்லலாம். ஆகவே, யாராக இருந்தாலும் விரும்புவார்கள். பயிற்சி பெற்று பூசை செய்யலாம் என்று அரசு கொண்டு வந்திருப்பதை ஆதரிப்பதில் ஒன்றும் தவறில்லை. இதை ஆதரித்து இந்த நாட்டிலே உள்ள ஒரு ஜாதிய எண்ணம், ஏற்றத்தாழ்வு, உயர்வு தாழ்வு நீங்குவதற்கு இது உறுதுணையாக இருக்கும் என்று கருதி இதை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

* **திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, அரசாங்கம் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களையும் கூற விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் திருக்கோவில்களில் அர்ச்சகர்களாக வருவதற்கு இது ஒரு வாய்ப்பை ஏற்படுத்துக் கொடுக்கின்ற ஒன்றாக இருக்கிறது. சதா நாம் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று கூறிக் கொண்டே வருகிறோம், எனக்கும் பெரிய வருத்தமாக இருக்கிறது. பல சூழ்நிலைகளின் காரணமாக குறிப்பிட்ட மக்கள் தாழ்த்தப்பட்டிருக்கிறார்களே யொழிய பிறப்பிலே தாழ்த்தப்ப[illegible]



1974 ஏப்ரல் 15] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

பல தொழில்களின் காரணமாக ஜாதி வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசாங்கம் அவர்கள் கூறியதைப்போல பறை சாற்றுகின்ற ஒரு தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற காரணத்தால் பறையன் என்று வந்திருப்பதாகக் கூறினார்கள். இப்படி ஒவ்வொரு தொழிலையும் அவரவர்கள் அந்தந்த காலத்திலே செய்ததால் ஜாதி பிறந்தது. இன்றைக்கு அந்த ஜாதியின் அடிப்படையிலே மக்கள் படுகின்ற பாட்டைப் பார்க்கின்ற பொழுது என்றைக்குத் தான் இவர்களுக்கு விமோசனம் ஏற்படுமோ என்று கருதுகின்ற நேரத்தில் இப்படியொரு தீர்மானம் வந்திருப்பதை நாம் ஆதரிப்பதோடு இது தாழ்த்தப்பட்ட இனத்தைச் சாராத பலருக்கும் பெரும் குறையாகவும், பொறுமையாகவும் இருக்கும் என்று கூறினாலும்கூட அது மிகையாகாது.

உச்சநீதிமன்றத்திலே ஏற்கனவே இந்தத் தீர்மானத்தைப்பற்றி தமிழ் நாடு அரசு கொண்டுவந்த தீர்மானம் அடிபட்டுப் போய் இருக்கிறது. எந்தக் காரணத்தாலே அப்படி உச்ச நீதிமன்றத்திலே அடிபட்டது என்றால், Agama is an integral part of religion. ஆகையால் தொடர்ந்து பரம்பரையாக வந்த அர்ச்சகர்களைப் பாதிக்கின்ற அளவில் இந்தத் தீர்மானம் இருக்கின்ற காரணத்தினாலே இப்படி எந்தவிதமான சமூக சீர்திருத்தத் திட்டமாக இருந்தாலும்கூட அதை ஏற்றுக் கொள்வதற்கு உச்ச நீதிமன்றம் மறுத்திருக்கிறது. நாம் ஒரு சமூக சீர்திருத்தம் செய்யும் நேரத்திலே ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் ஒரு குறிப்பிட்ட உத்தியோகம் செய்ய முடிவு மென்று நினைப்போமேயானால் நான் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன், தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் மற்றவர்களுக்கு எந்தவிதத்திலேயும் சளைத்தவர்கள் அல்ல. அவர்களுக்குச் சரியான சூழ்நிலையும் சந்தர்ப்பமும் இல்லாத காரணத்தினால், சில முக்கியமான வாய்ப்புகள் அவர்களுக்கு ஏற்படாத காரணத்தினாலேதான் அவர்கள் தாழ்ந்த நிலைமையிலே இருந்து கொண்டிருக்கிறார்களே யல்லாமல் மற்ற இனத்தாரையும் சமுதாயத்தைச் சார்ந்தவர்களையும்விட அவர்கள் எந்தவிதத்திலேயும் தாழ்ந்துவிடவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12 30)

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1974 ஏப்ரல் 15

இவர்களுக்குத் தேர்ச்சி கொடுக்க வேண்டும். கோவில்களிலே அர்ச்சகர்களாக வருபவர்களுக்கு ஆகமத்தில் சாஸ்திர ரீதியாக பாராயணப் பாடசாலைகளும் சமஸ்கிருத பாடசாலைகளும் வைத்து கற்பிப்பது போல் 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு பாராயண பாடசாலைகள் ஏற்படுத்தி அர்ச்சக முறைகளைக் கற்பிக்க வேண்டும். அப்படி தாழ்த்தப்பட்ட மக்கள் அர்ச்சகர்களாக வருவார்களேயானால் அவர்களுடைய நிலை உயர வழி ஏற்படும்.

மதிப்பிற்குரிய திரு. மாரிமுத்து அவர்கள் கூறினார்கள். பரம்பரையாக தகப்பனாரைப் பார்த்து அதே போன்று அவர் செய்கிற முறையைப் பார்த்து பிள்ளைகள் அர்ச்சகர்களாக வந்துவிடுகிறார்கள் என்று கூறினார்கள். அப்படி அல்லாமல் நல்ல முறையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பயிற்சி கொடுத்து அர்ச்சகர்களாக வழி வகுக்க வேண்டும். அந்த வகையில் அரசியல் சட்டத்தின் ஆர்டிகிள்கள் 25, 26 திருத்தப்பட்டாக வேண்டும். நாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று பல துறைகளில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கி வைக்கிறோம். அதை நாம் இன்று கோயில் அர்ச்சகர்களுக்கும் ஒதுக்கப் போகிறோம். இந்தத் திருத்தத்தைக் கண்டிப்பாக மத்திய அரசு செய்ய முன்வர வேண்டும்.

காலம் சென்ற மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் முதல் முதலாக அரிசனங்களின் டெம்பிள் என்ட்ரிக்காகப் பாடுபட்டார்கள். இன்றைக்கும் பல அங்கத்தினர்கள் கூறியது போல் சில கோயில்களில் அரிசனங்கள் செல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அதையும் நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அர்ச்சகர்களாகப் போடும்போது கிராஜுவேட்டுகளைப் போட்டு விடுவார்களோ என்ற பயம் இருப்பதாகச் சொன்னார்கள். இதற்கு கிராஜுவேட்ஸ் தேவையில்லை. சிறு வயதிலேயே 12 வயதிலே இருந்து பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்து இதற்குப் பயிற்சி கொடுத்து அவர்களை அர்ச்சகர்களாகப் போட வேண்டும்.

இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் இந்தச் சலுகைகளை எல்லாம் கொடுப்பதற்கு முன்பு அவர்கள் பட்ட கஷ்டத்தின் காரணமாக சாதி அடிப்படையில் பட்ட துன்பத்தின் காரணமாக முஸ்லிம்களாக மாறியிருக்கிறார்கள். புத்த மதத்திற்கு மாறியிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களாக மாறியிருக்கிறார்கள். பல மதங்களில் மாற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.



1974 ஏப்ரல் 15] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

இன்றைக்கு கான்ஸ்டிடியூஷன் ஆர்டிகிள்ஸ் 26-ஐ மாற்றியமைப்பதோடு செட்யூல்டு காஸ்ட்ஸ் ஆர்டர் 1950-ல் சி.ஓ. 19 என்ற ஒரு பிரிவு இருக்கிறது. அதிலே கிளாஸ் 3-ல் notwithstanding anything contained in paragraph 2, no person who professes a religion different from Hinduism or Sikh religion shall be deemed to be a member of Scheduled Caste.
என்று இருக்கிறது. ஆகவே, கிறிஸ்தவர்களையும் அதிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் ஒரு தீர்மானம் கொண்டு வந்தால் வரவேற்கத் தக்கதாக இருக்கும்.

இந்தத் தீர்மானத்தை வரவேற்று அரசாங்கத்தைப் பாராட்டி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, மிக முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீர்மானத்தை அனைத்துக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் தலைவர்களும் சிறந்த முறையில் ஆதரித்து தீர்மானத்தோடு சிறந்த கருத்துக்களை எல்லாம் இணைத்து ஆதரவு கொடுத்தமைக்காக என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

1971-ம் வருடம் ஜனவரி மாதம் 12 ஆம் நாள் இந்தச் சட்டத் திருத்தத்தை இதே சட்டமன்றத்தில் கொண்டு வந்து ஏகமனதாக நிறைவேற்றி நாம் இந்தச் சட்டத்தைச் செயல்படுத்த முனைந்தோம். பாரம்பரை முறை எல்லா நிலையிலும் ஒழிக்கப்படுகிற நேரத்தில் கோயில்களில் அர்ச்சகர்களாக இருப்பதிலும் பரம்பரை முறை ஒழிக்கப்பட வேண்டும், அனைத்து சாதியினரும் போதுமான தகுதிகள் இருக்குமானால் அர்ச்சகர்களாக வரலாம் என்ற சட்டத்தை 1971-ம் ஆண்டில் உண்டாக்கினோம்.

ஆனால், அப்படிப்பட்ட சட்டத்தின் பேரில் பல உயர்ந்த சாதிக்காரர்கள் ஒன்று சேர்ந்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து இறுதியாக வந்திருக்கிற தீர்ப்பின் விவரத்தை எல்லோர் இந்த மன்றம் நன்றாக அறிந்திருக்கும். பரம்பரை ஒழிக்கப்பட வேண்டுமென்ற சட்டத் திருத்தத்தை ஏற்றுக் கொண்டாலும் அந்தந்தக் கோயில்களின் ஆகம விதி முறைகளுக்கு ஏற்றாற் போல்தான் அர்ச்சகர்களை நியமிக்க முடியும் என்று அவர்களுடைய தீர்ப்பில் ஒரு குறிப்பைச் சொல்லுகிற காரணத்தால் மீண்டும் இந்திய அரசியல் சட்டத்திற்கு உட்பட்ட வகையில் இந்தச் சட்டத்தைச் செல்லுபடியாக்க முடியாது

என்ற காரணத்தால் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று சொல்லி நாம் பல முறை நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் முயற்சிகளை எடுத்துக் கொண்டோம்.

1971-ம் வருடம் ஜனவரி மாதம் 12-ம் தேதி ஏற்படுத்தப்பட்ட இந்தச் சட்டம் உச்ச நீதிமன்றத்தில் 1972-ம் வருடம் மார்ச் மாதம் 24-ம் நாளில் சட்டத்தின் ஒரு பகுதி செல்லுபடியாகும் என்றும் இன்னொரு பகுதி—எல்லா சாதியினரையும் அர்ச்சகர்களாக நியமிக்கலாம் என்ற பகுதி செல்லுபடியாகாது என்றும் தீர்ப்பளித்தார்கள். அப்படித் தீர்ப்பளிக்கப்பட்ட பிறகு நம்முடைய சட்டம் முழுமையாகச் செல்லுபடியாகும் சட்டமாக மாற்றப்பட வேண்டுமென்று, எல்லாச் சாதிகளைச் சேர்ந்தவர்களும் அர்ச்சகர்களாக வரவேண்டுமென்ற தகுதியைப் பெற வேண்டுமென்ற வகையில் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் இந்திய நாட்டுப் பிரதம அமைச்சருக்கு 1972-ம் வருடம் நவம்பர் மாதம் 20-ம் நாளில் ஒரு கடிதம் எழுதினார்கள். அனைத்து சாதியினரும் அர்ச்சகர்களாக வரும் நிலைமை ஏற்பட்டால்தான் இந்த நாட்டில் சாதி ஒழிப்பை நாம் முழுமையாகச் செய்தவர்களாவோம் என்ற வகையில் உடனடியாக அரசியல் சட்டத் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்தை மையமாக வைத்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்திய நாட்டுப் பிரதமருக்கு 20—11—1972-ல் கடிதம் எழுதினார்கள்.

அதற்குப் பிறகு இரண்டு முறை நினைவூட்டுக் கடிதங்கள் எழுதிய பிறகும் கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக அரசியல் சட்டத்தைத் திருத்த எந்தவிதமான முயற்சியும் எடுக்காத காரணத்தாலும், பிரதம அமைச்சரோ மற்ற அமைச்சர்களோ அதற்கான முயற்சியை எடுக்காத காரணத்தாலும், பல்வேறு நேரங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்திப் பேசியும் மத்திய அரசாங்கம் கவனம் செலுத்தாத காரணத்தாலும் இன்றைக்குத் தமிழ்நாட்டு சட்டமன்றத்தில் ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அரசியல் சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வகையில் இன்றைக்கு இந்தத் தீர்மானம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

சட்டமன்றத்தில் இருக்கும் உறுப்பினர்கள் அத்தனை பேரும் சேர்ந்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகிற அதே நேரத்தில் சட்டமன்றத்திற்கு வெளியிலே அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்களாக வரவேண்டுமென்று தமிழ்



நாட்டு மக்களுடைய உள்ளத்தில் நீண்ட நாட்களாக இருந்து வரும் அந்த எண்ணம் இன்றைக்கு வெளிப்படையாக வந்து தமிழ் நாடு பூராவும் கிளர்ச்சி எழுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

சமீபத்தில் திராவிடர் கழகம் சார்பில் நடத்திய போராட்டமாக இருந்தாலும் அந்தப் போராட்டத்தில் குறிப்பிட்ட கட்சிக்காரர்கள் என்று மட்டுமல்ல, கட்சிக்கு அப்பாற்பட்டவர்களும், வேறு பல கட்சிகளைச் சார்ந்தவர்களும் அந்தப் போராட்டத்தை ஆதரித்து அந்தக் கிளர்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல் தமிழ்நாட்டினுடைய மடாலயங்களின் பிரதிநிதியாகவும், இந்து மதத்தின் வளர்ச்சிக்கும் இந்து மதத்தினுடைய தத்துவம் தமிழ் நாடு பூராவும் பரப்பப்பட வேண்டும் என்று சொல்லி மேலவையில் இடம் பெற்றிருக்கிற தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்கூட அந்தக் கிளர்ச்சி மிக, மிக நியாயமான கிளர்ச்சி என்று சொல்லி கிளர்ச்சி நடைபெற்ற நேரத்தில் அந்தக் கிளர்ச்சியை ஆதரித்து பத்திரிகைகள் எல்லாவற்றிற்கும் அவர்கள் அறிக்கை தந்திருக்கிறார்கள்.

அப்படி மக்களுடைய உள்ளத்தில் எல்லாம் இடம் பெற்று நிச்சயமாக ஜாதி ஒழிக்கப்படுவதற்கு இந்த அரசியலமைப்புச் சட்டம் நிச்சயம் திருத்தப்பட்டேயாகவேண்டும் என்று சொல்லி மக்களிடையே அந்த எழுச்சியை உண்டாக்குகிற அந்த நிலைமையை நாம் இன்று கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த நிலைமையில் மத்திய அரசு தாமதிக்காமல் தமிழ்நாட்டு மக்களுடைய நல்லெண்ணத்தைப் புரிந்துகொண்டு வெகு சீக்கிரத்தில் அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்ற கருத்தை மேலும் வலியுறுத்தும் வகையில்தான் இந்தத் தீர்மானத்தை நாம் இங்கு கொண்டு வந்திருக்கிறோம். அனைத்துக் கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களும் இந்தத் தீர்மானத்தை நல்லமுறையில் ஆதரித்து நல்ல கருத்துக்களை எல்லாம் வழங்கியிருக்கிறார்கள்.

அந்தக் கருத்துக்களைக் குறிப்பிடுகிற நேரத்தில் அர்ச்சகர்களாக இருப்பவர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் வந்தாலும் அவர்கள் தேவையான பயிற்சியைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி

ளுர்கள். ஏற்கெனவே இந்தச் சட்டம் செல்லுபடியாகும் என்று நினைத்து சில வசதிகள் உள்ள கோவில்கள் எல்லாம் அர்ச்சகர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் பள்ளிக்கூடங்களைத் திறப்பதற்குக்கூட அறநிலையத் துறை சார்பில் ஏற்பாடுகள் எல்லாம் செய்து வைத்திருக்கிறோம். பயிற்சி கொடுத்து அந்தப் பயிற்சியில் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் மட்டுமே அர்ச்சகர்களாக கோவில்களில் பணியாற்ற வேண்டும் என்ற முறையில் அப் பள்ளிக்கூடங்களை உருவாக்க இருந்த அந்தச் சட்டத்தைச் செயல்முறைக்குக் கொண்டு வர முடியாத ஒரு நிலை ஏற்பட்ட பிறகு அந்தப் பள்ளிக்கூடம் திறப்பது தாற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது.

பயிற்சிப் பள்ளியில் சிறந்தமுறையில் பயிற்சி கொடுத்து ஒவ்வொரு கோவிலிலும் இருக்கிற ஆகம விதிகளுக்குப் புறம்பாகாத வகையில் நிச்சயமாக அர்ச்சகர்களுக்குப் பயிற்சி கொடுத்து நியமிக்க வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் எதிர்காலத்தில் உருவாக்கலாம்.

மதிப்பிற்குரிய ஜோதி அம்மையார் அவர்களும், மதிப்பிற்குரிய மாரிமுத்து அவர்களும், மதிப்பிற்குரிய கே. டி. கே. தங்கமணி அவர்களும் அந்தக் கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்தக் கருத்தை அரசு ஏற்றுக் கொண்டு எதிர்காலத்தில் அர்ச்சகர்களுக்காகப் பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்கும் என்பதை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் இந்தத் தீர்மானத்தை வரவேற்று பல்வேறு நாடுகளில் உள்ள அரசியல் சட்டங்களில் இருக்கிற விதிமுறைகளை எல்லாம் நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே தங்கமணி அவர்கள் விளக்கமாக எடுத்துச் சொல்லி இந்தச் சட்டத்தை முழுமையாக ஆதரித்து தன் கட்சி சார்பில் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் காங்கிரஸ் கட்சி சார்பிலும் பார்வேர்ட் ப்ளாக் சார்பிலும் தலைவர்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வரலாற்றுச் சிறப்பு மிக்க இத் தீர்மானத்தை எல்லாக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் ஆதரித்திருப்பது உள்ளபடியே மத்திய அரசில் இருப்பவர்கள் இதுபற்றி கவனம் செலுத்துவர் என்று நாம் நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறோம்.





இந்தத் தீர்மானத்திற்குத் திருத்தம் ஒன்றை மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் தந்திருக்கிறார்கள். அது போல் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களும் ஒரு திருத்தத்தைத் தந்திருக்கிறார்கள். திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் திருத்தம் பற்றி நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் ஏற்கனவே விளக்கமாக பதில் அளித்திருக்கிறார்கள். திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் கொடுத்திருக்கிற திருத்தம் இன்னும் சிறந்த முறையில் இருக்க வேண்டும் என்பதுதான். அதிலே உள்ளடங்கியிருக்கிற கருத்துக்கள் வெளிப்படையாகத் தெரியவேண்டும் என்ற எண்ணத்தில்தான் சொல்லியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். மத சாஸ்திரங்களைக் கற்றவர்கள் என்ற வார்த்தையை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் கல்வித் தகுதி என்று குறிப்பிடுவதுதான் மத சாஸ்திரங்களைக் கற்று உணர்ந்திருக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் கல்வித் தகுதி என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அதேமாதிரி பாரம்பரியமான முறைகளின் அடிப்படையில் பெரும்பாலான வழிபடுகிறவர்கள் கருத்தில் மனம், மொழி, வாக்கு, காயம் இவற்றில் தூய்மையானவர்கள் என்று கருதப்படுகிறவர்கள்தான் நியமிக்கப்பட வேண்டும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு வழிபடுகிறவர்களின் எண்ணத்தைத் தெரிந்து தேர்ந்தெடுப்பது என்பது இயலாத காரியம்.

ஆனால் கோவில்களில் அர்ச்சகர்களாகப் பணியாற்ற என்னென்ன தகுதிகள் வேண்டுமோ—நல்ல தகுதிகள், குணநலன்கள் இருந்தாலும்—எந்த வழிகளில் எல்லாம் வந்திருக்கிறார்கள் என்பதையெல்லாம், அந்தத் தகுதிகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அதேமாதிரி கோவில்களில் பூசாரிகளாக அல்லது அர்ச்சகர்களாகப் பயிற்சி கொடுக்கும்போது கோவில்களில் பணி புரிய எந்த உணர்வுகள் எல்லாம் இருக்க வேண்டுமென்று மற்றவர்கள் கருதுகிறார்களோ, அந்த அளவிற்குப் பயிற்சி கொடுப்பது எதிர்காலத்தில் செய்யப்படும்.

ஆகவே அவர்கள் வேண்டுமென்று விரும்புகிற அத்தனை கருத்துக்களும் ஏற்கனவே இருக்கிற காரணத்தால், அவர்களும் இந்தத் திருத்தத்தை வலியுறுத்தாமல் ஏகமனதாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்றைக்கு இந்தத் தீர்மானத்தை முழுமனதோடு ஏற்று மத்திய அரசு அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு முன்வருகிறார்களோ, அன்றைக்குத் தான் தமிழ்நாடு மட்டுமல்ல, மகாத்மா காந்தி அடிகள் சொன்ன கொள்கையாக இருந்தாலும், தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் கடந்த நாற்பது ஆண்டுக்காலமாக தமிழ்நாட்டு மக்களின் மறுமலர்ச்சிக்காக மட்டுமல்லாது இந்த நாட்டில் இருக்கிற ஏற்றத்தாழ்வினை ஒழிப்பதற்காகப் பாடுபட்டவர்களோ அந்தக் கொள்கை வெற்றியடைவதற்கு அரசியல் சட்டம் திருத்தப்பட்டு, சாதாரண தாழ்ந்த குடியில் பிறந்த ஒருவராக இருந்தாலும் அல்லது பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி ஜாதி வேற்றுமை இல்லாத வகையில் யார் வேண்டுமானாலும், தகுதி படைத்தவர்கள் யார் வேண்டுமானாலும் கோவிலுக்கு அர்ச்சகர்களாகப் போகலாம் என்ற நிலைமை ஏற்படும்போதுதான் நிச்சயமாக ஜாதி ஏற்றத்தாழ்வுகள் இந்த நாட்டில் இருந்து ஒழிக்கப்பட்ட நாளாகும். ஆக, இந்தத் தீர்மானத்தை இந்த மாமன்றமும் இந்தத் தமிழ் நாட்டு மக்கள் அத்துணை பேர்களும் உளப்பூர்வமாக ஏற்கிறார்கள். மத்திய அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தத் தீர்மானத்தை ஆதரித்து நல்ல கருத்துக்களைக் கூறியுள்ள அத்துணை உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி இந்த அளவோடு அமைகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாகி:** திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களின் திருத்தத்தின்மீது நான் பேச விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லாம் பேசியாகிவிட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நம்முடைய மாமன்றம் நிறைவேற்றுகிற இந்த நாள் ஒரு மகிழ்ச்சிகரமான நாள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடியவர்களில் இந்தியாவில் தலைசிறந்தவர்களாக விளங்கியவர்களில் ஒருவரான டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பிறந்த நாள் நேற்றையதினமாகும். இந்தத் தீர்மானத்தை விவாதித்துக் கொண்டிருக்கிற இந்த நாள் இந்த அவைத் தலைவராகிய தாங்கள்



பிறந்த நாள் என்பதை எண்ணுகிற நேரத்தில் தங்களுக்கு இந்த அவை உறுப்பினர்கள் சார்பாக என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைவரும் மகிழத்தக்க ஒரு தீர்மானத்தை இந்த அவை உறுப்பினர்கள் மிக விளக்கமாக விவாதித்து அதை நிறைவேற்றுகிற கட்டத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட சில கருத்துக்கள் மீது என்னுடைய கருத்துக்களையும் இணைய வைப்பது சாலப் பொருத்தமுடையது என்றே நான் கருதுகிறேன். இந்தச் சட்டத்தை, அனைவரும் அர்ச்சகர்களாக ஆகலாம் என்ற சட்டம் இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பெற்று பின் அந்தச் சட்டத்தை நீதிமன்றத்தினுடைய கூண்டுகளிலே ஏற்றி அது முடக்கபட்டுவிட்ட பிறகு நான் டெல்லிக்குச் சென்றபோது மத்திய அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் அவர்களைக்கூட சந்தித்து இதைப்பற்றி பேசியிருக்கிறேன்.

ஆகவே இன்றைக்கு நாம் நிறைவேற்ற இருக்கிற இந்தத் தீர்மானம் மத்திய அரசில் நல்ல புரட்சிகரமான எண்ணம் கொண்டவர்களால் வரவேற்கப்படும் என்ற நம்பிக்கை எனக்குத் திடமாக இருக்கிறது. பாராளு மன்றத்தில் நம்முடைய தீர்மானத்தினுடைய நல்ல நோக்கத்தை உணர்ந்து அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான வழிவகைகளைச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்த விவாதத்தினிடையே பேசிய நம் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சோவியத் ரஷ்யாவில் எப்படி மத உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அதே நேரத்தில் அதை எதிர்த்துப் பேசுகிற உரிமை எந்த அளவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டினார்கள். இங்கும்கூட கடவுள் நம்பிக்கை பற்றி பேசுகிறவர்களும் அல்லது கடவுள் நம்பிக்கை தவறு என்று பேசுகிறவர்களும் அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதையும், மதச் சார்பற்ற ஒரு சர்க்காரில் இருக்கிற நிறுவனங்கள், வானொலி போன்ற அமைப்புக்கள் முழுக்க முழுக்க மதப் பிரசாரம் செய்துகொண்டு வருகிறது என்கின்ற மிகப் பொருத்தமான ஒரு குற்றச்சாட்டைக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கு எடுத்துச் சொன்னார்கள்.

## சாதி, பிரிவு, உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையே இருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள், ஏனைய உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்க இயலும் வகையில் அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பது குறித்து

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஏப்ரல் 15

நானும் அவர்கள் இங்கே எழுப்பிய அந்தக் குற்றச்சாட்டை வரிக்கு வரி அப்படியே ஒப்புக்கொள்கிறேன். இதே கருத்தை அவர்கள் கடந்த 5, 6 நாட்களுக்கு முன்பு இந்த மன்றத்திலே கொண்டு வந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்போதும் வலியுறுத்தினார்கள். இதனை ஏற்றுச் செயல்படுத்து கின்ற இடத்தில் தமிழக அரசு இல்லாவிட்டாலும் இன்றைக்குச் செயல்படுத்து கின்ற இடத்திலே இருக்கிற மத்திய அரசு வானொலியை இனிமேலாவது நாட்டு மக்களுடைய பல்வேறு பிரச்னைகளை அணுகுகின்ற வகையில் பயன் படுத்துகின்ற முயற்சியிலே ஈடுபடுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

மதப் பிரச்சாரத்திற்கு அவர்கள் அறவே இடம் தரக் கூடாது என்று கூற வில்லை. இந்து மதத்திற்கு, இஸ்லாம் மதத்திற்கு, கிறிஸ்தவ மதத்திற்கு இப்படி பல்வேறு மதங்களுக்கென்று அவர்கள் நேரத்தை ஒதுக்கீடு செய்து இன்றைக்கு அந்தப் பிரச்சாரத்திற்கு வானொலியைப் பயன்படுத்துகிறார்கள்.

அதைப் போலவே பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கென்றும் வானொலியிலே ஒரு குறிப்பிட்ட நேரத்தை அவர்கள் ஒதுக்கிட வேண்டும், அதற்கு ஆவன செய்கின்ற முயற்சியை மத்திய அரசு எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதையும் இங்கே கே. டி. கே. அவர்கள் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்துக்களோடு நான் இணைத்து ஒரு வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல பெரியவர்கள் எடுத்துச்சொன்ன கருத்துக்கள், வாழ்க்கை வரலாறு கள், மறைந்து விட்டவர்களுடைய சிறப்பு இயல்புகள் இவைகளைப் பற்றி யெல்லாம் வானொலியிலே எடுத்துச் சொல்லப்படவில்லை என்கின்ற குறைபாட்டினையும் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்.

பொதுவாக, சீர்திருத்தக் கருத்துக்கள், எல்லோராலும் ஒத்துக்கொள்ளப் படக்கூடிய சீர்திருத்தக் கருத்துக்கள், இவைகளையெல்லாம் இன்றைக்கு இந்த நாட்டில் எடுத்துச் சொன்னால், அந்தக் கருத்துக்கள் ஆழப் பதிந்து, வேரூன்றி விடுமேயானால், நாட்டிலே சில மூட நம்பிக்கைகளின் பின்னால் ஒளிந்து கொண்டு வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறவர்கள், மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றவர்கள், சில சனாதனிகள், இப்படிப்பட்டவர்கள் இங்கே தங்களுடைய நிலை கீழே போய்விடுமோ என்கின்ற பயத்தின் காரண



1974 ஏப்ரல் 15] [டாக்டர் மு. கருணாநிதி]

மாக, புரட்சிகரமான கருத்துக்களை எடுத்துச் சொல்கின்ற நோக்கில், அதை அவர்தான் சொல்ல முடியும், மற்றவர்கள் யாரும் சொல்ல முடியாது என்கின்ற திரையைப் போட்டு அதை மூடிவிடுகிறார்கள்.

உத்தமர் காந்தி அடிகள் அனைவரும் சமம் என்று கூறுகிறார்கள் என்றால், அதைக் காந்தி சொல்லலாம். மற்றவர்கள் சொல்ல முடியுமா என்று கூறி, ஆகவே கடவுளின் அவதாரம் என்று எடுத்துக் காட்டி, கடவுளின் அவதாரங் களால்தான் அப்படிப் பேசமுடியும், சாதாரண மக்களால் அப்படி பேச முடியாது என்று தங்களுடைய கருத்துக்களுக்கு ஆக்கம் தருவதற்குப் புரட்சிகரமான கருத்துக்களை மறைத்து விடுகிறார்கள்.

அதைப் போலத்தான் சித்தர்கள் என்கின்ற பெரும் புலவர்கள் தமிழகத்தில் இருந்தார்கள். மிகப் புரட்சிகரமான கருத்துக்கள், சாதி, சமயங்களைச் சாடுகின்ற அளவுக்கும், ஆயிரக்கணக்கான கடவுள்களை நாம் வணங்கத் தேவை யில்லையென்கின்ற அளவுக்கும் அந்தக் கருத்துக்கள் எடுத்து சொல்லப்பட்டன. அவைகளை அவர்கள் எல்லாம், சிவ வாக்கியர் என்ன, மற்ற சித்தர்கள் என்ன, அவர்களால் அந்தக் கருத்துக்களைச் சொல்லமுடியும்—மற்றவர்களால் சொல்ல முடியுமா என்று அந்தக் கருத்துக்களுக்கும் அணை போட்டு விட்டார்கள்.

கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார் கூடச் சாத்திரங்களைக் கண்டித்தார். சம்பிரதாயங்களைச் சாடினார். சொர்க்கம். நரகம் என்று சொல்லப் படுகின்றவைகளை எல்லாம் ‘ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்’ ! என்றுகூட அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொன்னார். ஆனால் என்னவாயிற்று ? அவர் மறைவுக்குப் பிறகு அந்தப் பாடல்கள் எல்லாம் முன்னுக்குத் தள்ளப்பட்டு, அவர்கள் மறுபக்கத்திலே பாடிய பாடல்கள் எல்லாம் பின்னால் வைக்கப்பட்டு, முதலிலே இதைப் பாடினார் என்று பின்னால் வைக்கப்பட்டு, திருந்திய பிறகு பாடினார் என்று அப்பாடல்கள் முன்னால் வைக்கப்பட்டு, அவருடைய எண்ணங்களையும் கருத்துக்களையும் நாட்டிலே மறைத்து விட்டார்கள்.

தந்தை பெரியார் அவர்கள் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தார்கள். அவர் வழி வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தார்கள். தந்தை பெரியார் அவர்கள் வழியில் வாழ்ந்து மறைந்த ஜீவா, சமதர்ம

பிரச்சாரம் செய்தார். கே. வி. அழகர்சாமி போன்றவர்கள் நடத்திய பிரச்
சாரம் பாரதிதாசன் போன்றவர்கள் நடத்திய பிரச்சாரம்—அவர்கள் சொல்
கின்றார்கள் என்றால், அவர்கள் எப்படிப்பட்டவர்கள் தெரியுமா? என்று
எடுத்துச் சொல்லப்பட்டக் கொள்கைகளுக்கு, கருத்துக்களுக்கு விமர்சனங்கள்
செய்யப்படாமல், எடுத்துச் சொல்லப்பட்ட ஆட்களின்மீது மக்களுக்கு
வெறுப்பை உண்டாக்கி, அதன் காரணமாக, நல்ல கருத்துக்கள் நாட்டிலே
திரை போடப்பட்டன.

இன்று அந்தத் திரை விலகி, எல்லா கட்சிகளும் ஒத்துக் கொள்ளக்கூடிய
ஒரு சமதர்ம நோக்கோடு செயல்படுகின்ற இந்த அரசு இந்த அவையிலே
கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர்கள்
அனைவரும், அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்களும், அனைத்துக் கட்சி உறுப்
பினர்களும் வரவேற்றிருப்பது நான் மிகுந்த மகிழ்ச்சியோடு பாராட்டு
கின்றேன்.

இது நம்முடைய நண்பர் மாரிமுத்து அவர்கள் எடுத்துச் சொன்னதைப்
போலவும், திரு. கந்தப்பன் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போலவும்,
அம்மையார் அவர்கள் பேசிய நேரத்திலே குறிப்பிட்டதைப் போலவும் யாரோ
சிலரை அர்ச்சகர்களாக ஆக்கிவிட வேண்டும். அதுதான் பெரிய உத்தியோகம்,
அந்த உத்தியோகத்திற்குச் செல்ல முடியாமல் தாழ்த்தப்பட்ட மக்கள், பின்
தங்கிய மக்கள் தவிக்கின்றார்கள். ஆகவே, அவர்களை உச்சாணிக் கொம்பிலே
ஏற்றி வைத்திட வேண்டுமென்பதல்ல. உச்சாணிக் கொம்பிலே அவர்களை ஏற்ற
விடாமல் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தச் சமுதாயத்தைச் செல்ல
ரித்து வருகின்ற மூடப் பழக்க வழக்கங்களின் தலைமீது போடுகின்ற சம்மட்டி
அதுதான் என்று இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு, அனைவரும் அர்ச்ச
கர்களாக ஆகலாம் என்று கூறுகிறோம்.

இங்கே நம்முடைய கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும்பொழுது,
கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் ஒன்றை அழகாகச் சொன்
னார்கள். அர்ச்சகர்கள் கடவுள் நம்பிக்கை படைத்தவர்களாக இருக்க
வேண்டும் கோயில் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று
சொன்னார்கள். நான் அதை ஏற்றுக்கொள்கிறேன்.



அந்தக் கடவுளைப் பற்றியெல்லாம் நம்பிக்கையில்லாமல், அந்தக் கடவுள்
மீது விஸ்வாசம் இல்லாமல், இந்தத் துளசியையும் வில்வத்தையும் எடுத்துக்
கொண்டு அர்ச்சனை செய்து கொண்டிருப்பார்களானால், அவர்களுடைய உதடு
ஒன்றை உச்சரிக்கும், உள்ளம் ஒன்றை எண்ணிக்கொண்டிருக்கும். ஆகவே,
உதட்டிலே ஒன்றையும் உள்ளத்திலே ஒன்றையும் வைத்துக்கொண்டிருப்பதை
யாரும் பார்த்துக் கொள்ள மாட்டார்கள். கடவுள் நம்பிக்கை அறங்காவலர்
களுக்கும் வேண்டாமா என்று பார்த்தால், நிர்வாகம் வேறு, தோத்திரம் வேறு.
தோத்திரம் ஆண்டவனோடு இரண்டறக் கலப்பது என்று இன்றைக்குப் பொருள்
கொள்ளப்படுகின்றது.

ஆகவே இந்தத் தோத்திரங்கள் ஆண்டவனிடத்திலே நம்பிக்கை உள்ளவர்
களால்தான் செய்யப்படும் என்று இங்கே நம்முடைய மாண்புமிகு கண்ணப்பன்
அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல் அர்ச்சனைப் பயிற்சியில் தேர்ச்சி
பெறுகின்றவர்கள், ஓரளவு கல்விப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.
அந்தப் பயிற்சிக்குப் பின்னால், அவர்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படும்
என்று கோடிட்டுக் காட்டியதையும் இந்த அவையினுடைய கவனத்திற்குக்
கொண்டு வந்து இந்தத் தீர்மானத்தை ஒருமித்த அளவில் நிறைவேற்ற
ஆதரவு அளித்தமைக்கு அனைவரையும் பாராட்டி இந்த அளவில்
அமைகின்றேன்.

Thiru K. M. SUBRAMANIAM: Sir, after the explanations given by the Hon. Minister for Hindu Religious and Charitable Endowments and the Hon. Chief Minister, I do not press my amendment. However, I would like to press one idea. So far as the Archakas are concerned, it is not a profession, it is a service, it is not a department, it is a service. It is just like the Educational Service or the Medical Service not like the Public Works Department.

I would therefore like to have a further assurance from the Government that the men usually selected for the purpose irrespective of caste creed or sect whatever it is would be men who would keep to certain practices. For example, in certain temples, the Archaka should live away from his family, be a Brahamachari for six months and such things are there. Will the Government

give the assurance that such practices would be kept in fact and the purity and sanctity of temples would be kept up? I withdraw my amendment, if such an assurance I have.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே நம்முடைய தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளதைப் போலவும் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்திலேயும் அதைத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். எந்த ஜாதியினைச் சேர்ந்தவராக இருந்தாலும் தேவையான கல்வித் தகுதிகள் முதலியவற்றையும் பெற்றிருப்பாரானால், அவர்களை அர்ச்சகராகப் பயிற்சி கொடுத்து, நியமிக்கலாம் என்று ஏற்கனவே சொல்லியிருக்கின்றோம். நிச்சயமாக அந்தத் தகுதியிலிருந்து மாறாமல் இருக்க அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும்.

திரு. கே. எம். சுப்பிரமணியம், திரு. பெ. சௌந்தரபாண்டியன் ஆகியோருடைய திருத்தங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :—

"சாதி, பிரிவு, உட்பிரிவு ஆகியவற்றின் அடிப்படையில், இந்து சமய நிறுவனங்களில் அர்ச்சகர்களையும், பூசாரிகளையும் ஏனைய உள்துறை ஊழியர்களையும் பரம்பரை முறையில் நியமனம் செய்யும் நடைமுறை பற்றி பொது மக்கள் பரவலாகக் குறைபாடு கூறுதல் இருப்பதாலும் ;

இந்து சமூகத்தில் நிலவும் பரம்பரை முறையில் சமயப் பூசாரிகளை நியமிக்கும் முறை நீக்கப்பட வேண்டுமென்றும், இதற்குப் பதிலாக சமய சார்புள்ள நிறுவனம் ஒன்று அமைக்கப்படவேண்டுமென்றும், தேவையான கல்வித் தகுதிகள் உள்ளவர்கள், ஏற்பளிக்கப்பட்ட நிறுவனங்களில் பூசாரிக்குரிய பணிகளில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்றும், சாதி, இனம் அல்லது வகுப்பு வேறுபாடின்றி அனைவருக்கும் பூசாரிகளாக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்றும் "தீண்டாமை, அரிசனங்களின் பொருளாதார, கல்வி வளர்ச்சி குறித்த குழு" கருத்தைத் தெரிவித்துள்ளதாலும் ;



உச்ச நீதி மன்றத்தால் பொருள் விளக்கம் கூறப்பட்டுள்ளவாறு, அரசியலமைப்பில் தற்போதுள்ள விதித்துறைகளின் கீழ், கோயில்களுக்குப் பொருந்துகிற ஆகமங்களில் குறிப்பிட்டுள்ள கட்டளைகளையொட்டி குறிப்பிட்ட பிரிவு அல்லது உட்பிரிவுகளிலிருந்து அர்ச்சகர்களையும், பூசாரிகளையும் நியமிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் சமயக் கோட்பாடுகளில் தலையிடுவதாகுமென்பதாலும் ;

சமூக சீர்திருத்த நடவடிக்கையாக, சாதி, பிரிவு அல்லது உட்பிரிவு வேறுபாடின்றி இந்து சமயத்தைச் சேர்ந்த தகுதியுள்ளவர்களிடையேயிருந்து அர்ச்சகர்கள், பூசாரிகள் அல்லது ஏனைய உள்துறை ஊழியர்கள், இந்து சமய நிறுவனங்களில் நியமிக்கப்படவேண்டுமென்று இந்த அவை கருதுவதாலும் ;

மேற்சொன்ன நோக்கத்துக்காக இம்மாநில சட்டமன்றம் சட்டமியற்ற இயலும் வகையில் அரசியலமைப்பு தக்கவாறு திருத்தப்பட வேண்டுமென்பதாலும் ;

'சட்ட வரைவில் குறிப்பிட்டுள்ளபடி அரசியலமைப்பைத் தக்கவாறு திருத்துவதற்குத் தேவையான சட்டமொன்றை இயற்றுமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்வதென இப்பேரவை தீர்மானிக்கிறது".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 1-00)

## 5. அரசினர் தீர்மானம்.

### நொடிந்த பஞ்சாலைகளை மாநில அரசு நிர்வாகம் செய்வது குறித்த பரிவுரைகள் பற்றி.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே,**

"1951-ம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி முறைப்படுத்தல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 65/1951) கீழும் 1972-ம் ஆண்டு நொடித்த பஞ்சாலைகள் (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) சட்டத்தின் கீழும் (மத்தியச் சட்டம் 72/1972) இம்மாநிலத்தில் உள்ள நொடித்த தனியார் துறை பஞ்சாலைகள் சிலவற்றை மேற்கொள்ள மத்திய அரசு ஆணையிட்டுள்ளதாலும் ;

அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பஞ்சாலைகளின் நிர்வாகத்தை மத்திய அரசு தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளதாலும் ;

[திரு. செ. மாதவன்] [1974 ஏப்ரல் 15

ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்
துடன் இந்த ஆலைகளை மீண்டும் செயல்படச் செய்ய இந்த ஆலைகளில் மாநில
அரசும் மத்திய அரசும் கணிசமான நிதிகளை முதலீடு செய்துள்ளதாலும்;

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை கீழ்க்கண்டவாறு பரிவுரை செய்கிறது :—

(1) மேற்கொள்ளப்பட்ட ஆலைகள் தாமதமின்றி நாட்டுடைமையாக்கப்பட
வேண்டும்;

(2) நாட்டுடைமையாக்கும் பணி மாநில அரசினால் செய்யப்பட வேண்டும்;

(3) இந்தப் பஞ்சாலைகளைத் திறம்பட நிர்வகித்து வரும் தமிழ்நாடு
பஞ்சாலைக் கழகம் இந்த ஆலைகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பின்னரும் இந்த
ஆலைகளைத் தொடர்ந்து நிர்வகித்து வரவேண்டும்;

(4) அரசின் உதவியுடனும் ஏனைய பொது நிதிகளின் உதவியுடனும்
இந்த ஆலைகளில் செய்யப்படும் மேம்பாடுகளினால் கிடைக்கும் நன்மை மூந்திய
நிர்வாகத்திற்குக் கிடைக்காத வகையில் இழப்பீட்டுத் தொகை முடிவு செய்யப்
படவேண்டும்;

(5) இது குறித்து அவசியமான சட்டமியற்றும் அதிகாரம் மாநில
அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டும்."

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : என் பெயரால் கொடுத்திருக்கும் இந்தத்
திருத்தத்தை நான் பிரேரேபிக்கிறேன்.

"மேற்படி அரசினர் தீர்மானத்தில் கண்ட பரிவுரைகளில் இனங்கள் (2)
மற்றும் (5)-ஐ நீக்கவும்"

அதாவது அதிலுள்ள ஐட்டம் இரண்டு, நாட்டுடைமையாக்கும் பணி மாநில
அரசினால் செய்யப்பட வேண்டும் என்பதையும், ஐட்டம் ஐந்து—இது குறித்து
அவசியமான சட்டமியற்றும் அதிகாரம் மாநில அரசுக்குக் கொடுக்கப்பட
வேண்டும் என்பதையும் நீக்கவேண்டும் என்பதுதான்.

திரு. கே. என். குமாரசாமி : நான் இந்தத் திருத்தத்தை வழிமொழி
கிறேன்.

THIRU N. K. PALANISWAMY : Sir I move—

'Delete item (4) of the recommendations".

The amendment was duly seconded.



1974 ஏப்ரல் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்திற்கு எவ்வளவு
நேரம் எடுத்துக்கொள்ளலாம்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கட்சித் தலைவர்களெல்லாம் கலந்து
ஆலோசிக்கப்பட்டு கொண்டுவரப்பட்ட தீர்மானம்தான் இது. ஆகவே,
சுருக்கமாக விவாதித்து முடித்துவிடலாம் என்று நான் கருதுகிறேன்.

*திரு. என். கே. பழனிசாமி : இந்தத் தீர்மானத்தை நான் ஆதரித்த
போதிலும் அதில் இருக்கக்கூடிய ஸ்பிரிட் சரியாக இல்லை என்பதைச் சொல்ல
கடமைப் பட்டிருக்கிறேன்.

காரணம், 204 மில்கள் இருக்கின்றன. இதில் 13 மில்களை மட்டும் எடுத்துக்
கொள்வதாக இருக்கிறது. இந்திய சர்க்கார் எடுத்துக்கொள்வதாக இருக்
கிறது, ஆகவே அதை எங்களிடம் கொடு என்று மத்திய சர்க்காரை எதிர்க்கக்
கூடிய ஒரு முறையிலேதான் இந்தத் தீர்மானம் இருக்கிறதே தவிர, இங்கு
இருக்கக்கூடிய எல்லா மில்களையும் சர்க்காரே அந்தக் கார்ப்பரேஷன் மூலமாக
எடுத்து நடத்துவதற்கான தீர்மானமாக இல்லை இது. தமிழ் மாநிலத்தில்
மட்டுமில்லை, இந்தியா பூராவும். நாட்டு மக்கள் பூராவும் பஞ்சாலைகளையும்,
சர்க்கரை ஆலைகளையும் தேசியமயமாக்கவேண்டும் என்று கருதுகிறார்கள்.
நாட்டில் இருக்கக்கூடிய சுரண்டல் வர்க்கம், புதிய ஏகபோக முதலாளித்துவ
வர்க்கம் பஞ்சாலை, சர்க்கரை ஆலை முதலாளிகள், விவசாய மக்களிடம்
குறைந்த விலைக்கு வாங்கி அதிகமான விலைக்கு விற்று, ஏராளமாகக் கொள்ளை
லாபம் அடிப்பதன் காரணமாக விலைவாசி ஏறுவதற்கும், கள்ள மார்க்கெட் ஏற்
படுத்துவதற்கும் ஏதாக மனிக்கும் இவர்கள்தான் காரணம்.

ஆகவே, இவைகளை எப்படியாவது தேசியமயமாக்கவேண்டும் என்பது
தான் நாடு பூராவும் உள்ள மக்களுடைய கருத்து. 13 மில்களை மட்டும்
நாங்கள் ஏற்று நடத்துகிறோம், அதற்கு எங்களுக்கு அனுமதி வேண்டும்,
அதற்குச் சட்டம் வேண்டும் என்று சொல்வது சரியாகாது. நான் நான்காவது
ஐட்டத்தை நீக்கவேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். சாதாரண
மாக 2 குவிண்டல் பஞ்சு ரூபாய் 1,200 விலை ஆகிறது. மூன்றில் ஒரு பங்கு
பஞ்சு நூலாக நூற்கப்படுகிறது. பருத்திக்கொட்டை மற்ற பொருள்கள்
போனாலும் 100 கிலோ நூலாக ஆகிறது நூற்றால். 100 கிலோ நூல் விலை
ரூபாய் 3,400, விவசாயிகளிடமிருந்து வாங்கியது ரூபாய் 1 200 இரண்டு
குவிண்டால் பருத்திக்கு.

கணக்குப் போட்டால் அவர்களுக்கு இரண்டு குவிண்டால் பருத்திக்கு
அவர்கள் கொடுப்பது ரூ. 1,200. அவர்களுக்கு அதில் வரக்கூடிய லாபம்
ரூபாய் 2,200. அதற்கு உண்மையான தேய்மானம், மற்ற செலவுகள் எல்லா

வற்றையும் கணக்குப் போட்டாலுங்கூட, பருத்திக் கொட்டை விற்பதை எடுத்துக்கொண்டாலும் அதிக லாபம் வருகிறது. அப்படி கொள்ளை லாபம் அடிக்கின்ற ஒரு கூட்டம் இந்த நாட்டில் இருக்கிறது என்று சொன்னால், அவைகளைத் தேசியமயமாக்கவேண்டும்.

ஜனங்களுக்குக் குறைந்த விலைக்கு துணிகள் கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருந்தால், மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்கும். அதற்குப் பதிலாக 13 மில்களை மட்டும் எடுத்துக்கொள்வது என்று சொல்வது எனக்குப் புரியவில்லை.

ஏராளமான கூட்டுறவுத் துறையில் பல மில்கள் இருக்கின்றன. இரண்டு வருடங்களுக்கு முன்னாலே ஒவ்வொரு மில்லையும் எடுத்துக்கொண்டால், எல்லாம் நஷ்டத்தில் ஓடுகின்றன. காரணம், [illegible] ஆட்களையே போடுவது, நிர்வாகத்திற்கு ஒரு ஆள், பஞ்சு வாங்குவதற்கு ஒரு ஆள், அதை விற்பதற்கு ஒரு ஆள், கணக்கு ஒன்றும் சரியாக கிடையாது இப்படி. எந்த மில்லைப் பார்த்தாலும் நஷ்டம். அப்படிப்பட்ட நிலை இருக்கும்பொழுது சர்க்கார் மேலும் மில்களை எடுத்துக்கொள்வதில் என்ன பிரயோசனம்?

நிர்வாகம் சரியான முறையில் இருக்கவேண்டுமென்றால், நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கு பார்ட்டிசிபேஷன் வேண்டும். நிர்வாகத்தில் தொழிலாளர்களுடைய பிரதிநிதி இருந்தால்தான் மற்றவர்கள் செய்வதை ஓரளவுக்கு தடுக்க முடியும். குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்பதைக் கண்காணித்து தடுக்க முடியும். அது மட்டுமல்ல. மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் பணம் போட்டு இந்த மில்களை நடத்துவதற்கு உதவி புரிந்தார்கள். நல்ல முறையில் அவைகளில் லாபம் வந்த பிறகு, அதே முறையில் அதை நடத்துவதற்கு, நிர்வாகத்தை திருப்பி பழைய முதலாளியிடம் கொடுத்துவிடவேண்டும் என்று முன்பு சர்க்கார் ஒரு சட்டம் கொண்டுவந்தது. இப்பொழுது அப்படித் திருப்பிக் கொடுப்பதில்லை, எப்படியோ அந்த பழைய முதலாளிகளிடம் கொடுப்பதில்லை என்றால், சர்க்காரே எடுத்துக்கொள்வது என்றால், எதற்காக இப்படி வைத்திருக்கிறீர்கள்? அதற்காகத்தான் நான் நான்காவது ஐடத்தை நீக்கிவிடவேண்டும் என்று திருத்தம் கொண்டுவந்திருக்கிறேன். சர்க்காருக்கே கொடுப்பது என்று இந்தத் தீர்மானத்தில் அந்த நிலையை மாற்றிக்கொண்டுவருவதற்கு அவசியம் இல்லை. ஆகவே, சர்க்கார் இந்தத் தீர்மானத்திற்குப் பதிலாக, எல்லா பஞ்சாலைகளையும் தேசியமயமாக்கவேண்டும் என்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அந்த முறையிலே இந்தத் தீர்மானத்தை மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. ஏ. சுப்பிரமணியம்:** அரசு கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தத்திற்கு உட்பட்டு ஆதரித்து, சில கருத்துக்களை இங்கே சொல்ல நான் விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் அடிக்கடி பேசும்பொழுது சொல்வார்கள், நாட்டுடைமையாக்குவது என்பது தவறானது என்ற அடிப்படையில் பேசுவார்கள். அண்மையிலே கூட சில மாதங்களுக்கு முன்னால் எனக்கு நினைவு இருக்கிறது. ஒரு கூட்டத்தில் . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்படி ஒரு பயங்கரமான உண்மைக்கு மாறான செய்தியைச் சொல்லவேண்டாம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** பத்திரிகைக்காரர்கள் கூட்டத்தில் என்று நினைக்கிறேன். ஒரு பத்திரிகை நிருபர் கேட்டார். மால்கோவை மட்டும் நாட்டுடைமையாக்கி மேற்கொள்வது ஏன் என்று கேட்டபொழுது, அதற்குத் தனிக் காரணம் உண்டு என்று பதில் சொன்னார். எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. அப்படிப்பட்ட அமைச்சர் அவர்கள் இப்பொழுது இந்த 13 பஞ்சாலைகளையும் நாட்டுடைமையாக்கவேண்டும் என்று . . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்படி ஒரு தவறான கருத்தை இங்கே கூறுவது பொருத்தமல்ல. வெளியே கூறி ஏதாவது தேடிக்கொள்ள விரும்பினால் அப்பொழுது இல்லை. நான் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். நாட்டுடைமையாக்கும் கொள்கையை தீவிர வாதமாக ஆதரிக்கின்ற ஒரு கட்சி, அந்தக் கட்சியை நம்பி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போய் சேர்ந்திருக்கிற நிலைமை இதையெல்லாம் குறிப்பிட்டுவிட்டு, மால்கோவைப் பொறுத்த அளவில், நாட்டுடைமையாக்கும் கொள்கை என்ற அடிப்படையோடு கூட சில காரணங்கள் உண்டு என்று காரணங்களையும் சொன்னேன். நாம் பணம் கொடுத்திருக்கிறோம். நாம் ஆண்டுதோறும் சப்சிடி கொடுக்கிறோம் ஒரு கோடி அளவுக்கு, அதையும் சேர்த்துச் சொன்னேன். முழுமையாக மறைத்து பேசுவது சரியல்ல. அதுவும் இந்த மன்றத்தில் பேசுவது சரியல்ல. வெளியே பேசுவதற்கு உரிமை உண்டு.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** பத்திரிகையிலே வந்ததை வைத்துச் சொன்னேன். அதற்கு அமைச்சர் அவர்களின் மறுப்பு வரவில்லை. இப்பொழுது அமைச்சர் அவர்கள் நாட்டுடைமையாக்குவதை ஆதரிப்பதாகச் சொல்கிறார்கள். வரவேற்கிறேன். இந்தத் தீர்மானம் எந்த சந்தர்ப்பத்தில் வருகிறது? ஏனென்றால் அப்படித்தான் மால்கோவை நாட்டுடைமையாக்கும் தீர்மானம் ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் வந்தது. ஏற்கனவே வந்த நிர்வாகத்தோடு அங்கே தொழில் தகராறு வந்தபொழுது, இந்த அரசு நிர்வாகத்

தோடு எப்படி தொடர்பு வைத்திருந்தது, திடீரென்று என்ன காரணம், விசேஷ காரணம் என்ன என்று எனக்குத் தெரியாது—அது வந்தது. திண்டுக்கல் இடைத்தேர்தல் வருகிற நேரத்தில், அந்தத் தீர்மானம் இங்கே வந்தது. அதில் ஒரு நோக்கம் இருந்தது. அரசியல் நோக்கம் இருந்தது. நாங்கள் தீர்மானத்தை இங்கே இயற்றிவிட்டோம், மத்திய அரசு ஒத்துக் கொள்ளவில்லை என்று மத்திய அரசு மீது, குறிப்பாக மோகன் மீது ஒரு பழியைச் சுமத்துவதற்கு அது பயன்பட்டிருக்கக்கூடும்.

இப்பொழுதும் இந்த தீர்மானம் எப்போது வருகிறது என்று பார்த்தால், மத்திய அரசாங்கம் இந்த ஆலைகளை தேசியமயமாக்கப் போகிறது என்ற நோக்கம் தெரிந்த பிறகுதான் இந்தத் தீர்மானம் வருகிறது. எனக்கு முன்னால் பேசிய என்.கே.பி. அவர்கள் சொன்னதைப்போல் மத்திய அரசாங் கத்தோடு 'கான்பிரன்டேஷன் பாலிசியை' இந்த அரசாங்கம் எடுத்திருப்ப தால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என்ன குற்றச்சாட்டைச் சாட்டலாம் என்ற நோக்கத்தின் காரணமாகவே இந்தத் தீர்மானம் வந்திருக்கலாம். அல்லது எப்படியும் மத்திய அரசாங்கம் தேசியமயமாக்கிவிடுவது என்று முடிவு செய்யும் அப்படிச் செய்யும்போது அது நம்மிடமே இருக்கட்டும் என்ற நோக்கத்தோடு வந்திருக்கலாம் என்பதுதான் என்னுடைய கருத்து.

இதில் இரண்டு திருத்தங்களை நாங்கள் கொடுத்திருக்கிறோம். முதலாவ தாக இந்த அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்கான பல காரணங்களைச் சொல்ல முடியும். ஏற் கனவே இந்த ஆலைகள் பஞ்சாலை கார்ப்பரேஷன் நிறுவனத்திடம் இருக்கின் றன. அப்படி இருக்கும்போது, தொழில் உறவுப் பிரச்சனைகள், மற்றப் பிரச்சனைகள் எல்லாம் இன்னும் சரியான முறையில் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கான சான்றுகளை எல்லாம் சொல்லியிருக்கிறோம். நாங்கள் அப்படிச் சொன்னாலும் நீங்கள் இல்லை என்று மறுக்கலாம். தொழில் உறவுப் பிரச்சினையைப் பார்க்கும்பொழுது, சுயேட்சையாக கார்ப்பரேஷன் நிர்வாகத்தை நடத்த அவர்களால் முடியவில்லை.

இந்தக் கார்ப்பரேஷன் நிர்வாகம் திறம்பட நடந்தது என்று பட்ஜெட்டிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள் மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது திடீரென்று நிர்வாகத்தில் ஒரு மாறுதல் வந்திருக்கிறது. நிர்வாகத்தில் மாறுதல் செய்வது அரசாங்கத்தின் அன்றாட நிகழ்ச்சிகளை ஒட்டியது என்று சொல்லி விடலாம். ஆனால் நான் கேள்விப்படுவது வேறு. கோவையில் நான் கேள்விப்பட்டது, ஒரு கார்ப்பரேஷன் நிர்வாகத்திலுள்ள ஆலையின் ஜெனரல்





மானேஜரை மாற்றினார்கள்; பின்னால் ஸ்டோர் கீப்பரை அதிலிருந்து மாற்றி னார்கள் என்று. அதற்கு பல காரணங்கள் இருக்கலாம். அவர்கள் மீது புகார்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. ஏதோ சில தவறுகள் நடந்தன. அதனால் மாற்றலாகி இருக்கிறார்கள் என்ற தகவல் எனக்கு வந்திருக் கிறது. நிர்வாகத்தில் மாறுதல் செய்வதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்குமென்று செய்தி வந்திருக்கிறது. அது சரியா இல்லையா என்று அமைச்சரவர்கள் சொல்ல வேண்டும். இப்படி நாளைக்கொரு விதமாக நிர் வாகத்தில் மாறுதல் செய்கிறார்கள். இதன் நோக்கம் என்ன என்பது எனக்கு சரியாக புரியவில்லை.

முன்னால் இருந்த அரசு கூட்டுறவு ஆலைகளைத் தொடங்கிற்று. ஆலைகளைத் திறம்பட நடத்துவதற்கு தனி அனுபவம், திறன் பயிற்சி வேண்டும். அதற்கு மானேஜ்மென்ட் காடர் தேவைப்படுகிறது. அந்த மானேஜ்மென்ட் காடரை உருவாக்குவதற்கு முன்பு இருந்த அரசு முயற்சி செய்தது. லேபர் டிப்பார்ட் மென்ட் மற்றும் பல டிப்பார்ட்மென்டுகளிலுள்ள அரசாங்க அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்து மானேஜிங் டைரக்டர்களாகப் போட்டார்கள்.

இப்போது பஞ்சாலைக் கார்ப்பரேஷன் வந்து பல ஆண்டுகள் ஆகின்றன. கூட்டுறவு ஆலைகள் போக இந்தக் கார்ப்பரேஷனில் 13 ஆலைகள் இருக்கின்றன. அந்த ஆலைகளை திறமையாக நிர்வகிக்க மானேஜ்மென்ட் காடரை உருவாக்க இந்த அரசாங்கம் எந்தவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. தொழில் அனுபவம் இல்லாதவர்கள், தொழில் உறவு பற்றிய அனுபவம் இல்லாதவர்கள் டெக்னிகல் அனுபவம் இல்லாதவர்கள், பிஸினெஸ் அனுபவம் இல்லாதவர்கள், இவர்களை எல்லாம் ஆலைகளில் அமர்த்துகிறார்கள். ஆலைகளின் நிர்வாகத்தில் பங்கு கொள்கிறவர்களுக்கு இந்த அனுபவங்கள் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அனுபவம் திடீரென்று வந்துவிடாது. அதை உருவாக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு எந்த ஏற்பாடும் செய்யாமல் அரசாங்கத் துறைகளிலுள்ள அதிகாரிகளைப் போடு கிறார்கள். அவர்களுக்குப் போதுமான அனுபவம் கிடையாது. அவர்கள் 'பியூரோகிரட்டிக் மனப்பான்மை'யிலேயே இருக்கிறார்கள். அப்படிப்பட்ட வர்கள் இப்படிப்பட்ட இடங்களில் பணியாற்ற வந்தால் என்ன செய்வார்கள்? அரசாங்கத் துறைகளில் பணியாற்றும்போது எப்படி நடந்துகொண்டார்களோ அதே மாதிரிதான் இங்கும் நடந்து கொள்வார்கள்.

அங்கே ஒரு முக்கியமான 'பைல்' வருகிறது என்றால் அதை கீழே இருந்து மேலே அனுப்புவார்கள். மேலே இருந்து கீழே அனுப்புவார்கள்; ஒரு தெளிவான முடிவை எடுக்கமாட்டார்கள்; பொறுப்புக்களைத் தட்டிக்

[திரு. எ. சுப்பிரமணியம்] [1974 எப்ரல் 15

தோடு எப்படி தொடர்பு வைத்திருந்தது, திடீரென்று என்ன காரணம், விசேஷ காரணம் என்ன என்று எனக்குத் தெரியாது—அது வந்தது. திண்டுக்கல் இடைத்தேர்தல் வருகிற நேரத்தில், அந்தத் தீர்மானம் இங்கே வந்தது. அதில் ஒரு நோக்கம் இருந்தது. அரசியல் நோக்கம் இருந்தது. நாங்கள் தீர்மானத்தை இங்கே இயற்றிவிட்டோம், மத்திய அரசு ஒத்துக்கொள்ளவில்லை என்று மத்திய அரசு மீது, குறிப்பாக மோகன் மீது ஒரு பழியைச் சுமத்துவதற்கு அது பயன்பட்டிருக்கக்கூடும்.

இப்பொழுதும் இந்த தீர்மானம் எப்போது வருகிறது என்று பார்த்தால், மத்திய அரசாங்கம் இந்த ஆலைகளை தேசியமயமாக்கப் போகிறது என்ற நோக்கம் தெரிந்த பிறகுதான் இந்தத் தீர்மானம் வருகிறது. எனக்கு முன்னால் பேசிய என்.கே.பி. அவர்கள் சொன்னதைப்போல் மத்திய அரசாங்கத்தோடு 'கான்பிரன்டேஷன் பாலிசியை' இந்த அரசாங்கம் எடுத்திருப்பதால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என்ன குற்றச்சாட்டைச் சாட்டலாம் என்ற நோக்கத்தின் காரணமாகவே இந்தத் தீர்மானம் வந்திருக்கலாம். அல்லது எப்படியும் மத்திய அரசாங்கம் தேசியமயமாக்கிவிடுவது என்று முடிவு செய்யும் அப்படிச் செய்யும்போது அது நம்மிடமே இருக்கட்டும் என்ற நோக்கத்தோடு வந்திருக்கலாம் என்பதுதான் என்னுடைய கருத்து.

இதில் இரண்டு திருத்தங்களை நாங்கள் கொடுத்திருக்கிறோம். முதலாவதாக இந்த அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்கான பல காரணங்களைச் சொல்ல முடியும். ஏற்கனவே இந்த ஆலைகள் பஞ்சாலை கார்ப்பரேஷன் நிறுவனத்திடம் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது, தொழில் உறவுப் பிரச்சனைகள், மற்றப் பிரச்சனைகள் எல்லாம் இன்னும் சரியான முறையில் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கான சான்றுகளை எல்லாம் சொல்லியிருக்கிறோம். நாங்கள் அப்படிச் சொன்னாலும் நீங்கள் இல்லை என்று மறுக்கலாம். தொழில் உறவுப் பிரச்சினையைப் பார்க்கும்பொழுது, சுயேட்சையாக கார்ப்பரேஷன் நிர்வாகத்தை நடத்த அவர்களால் முடியவில்லை.

இந்தக் கார்ப்பரேஷன் நிர்வாகம் திறம்பட நடந்தது என்று பட்ஜெட்டிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள் மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது திடீரென்று நிர்வாகத்தில் ஒரு மாறுதல் வந்திருக்கிறது. நிர்வாகத்தில் மாறுதல் செய்வது அரசாங்கத்தின் அன்றாட நிகழ்ச்சிகளை ஒட்டியது என்று சொல்லி விடலாம். ஆனால் நான் கேள்விப்படுவது வேறு. கோவையில் நான் கேள்விப்பட்டது. ஒரு கார்ப்பரேஷன் நிர்வாகத்திலுள்ள ஆலையின் ஜெனரல்



1974 எப்ரல் 15] [திரு. எ. சுப்பிரமணியம்]

மானேஜரை மாற்றினார்கள்; பின்னால் ஸ்டோர் கீப்பரை அதிலிருந்து மாற்றி
னார்கள் என்று. அதற்கு பல காரணங்கள் இருக்கலாம். அவர்கள் மீது
புகார்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. ஏதோ சில தவறுகள்
நடந்தன. அதனால் மாற்றலாகி இருக்கிறார்கள் என்ற தகவல் எனக்கு வந்திருக்
கிறது. நிர்வாகத்தில் மாறுதல் செய்வதற்கு இதுவும் ஒரு காரணமாக
இருக்குமென்று செய்தி வந்திருக்கிறது. அது சரியா இல்லையா என்று
அமைச்சரவர்கள் சொல்ல வேண்டும். இப்படி நாளைக்கொரு விதமாக நிர்
வாகத்தில் மாறுதல் செய்கிறார்கள். இதன் நோக்கம் என்ன என்பது எனக்கு
சரியாக புரியவில்லை.

முன்னால் இருந்த அரசு கூட்டுறவு ஆலைகளைத் தொடங்கிற்று. ஆலைகளைத் திறம்பட நடத்துவதற்கு தனி அனுபவம், திறன் பயிற்சி வேண்டும். அதற்கு மானேஜ்மெண்ட் காடர் தேவைப்படுகிறது. அந்த மானேஜ்மெண்ட் காடரை உருவாக்குவதற்கு முன்பு இருந்த அரசு முயற்சி செய்தது. லேபர் டிப்பார்ட்மெண்ட் மற்றும் பல டிப்பார்ட்மெண்டுகளிலுள்ள அரசாங்க அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்து மானேஜிங் டைரக்டர்களாகப் போட்டார்கள்.

இப்போது பஞ்சாலைக் கார்ப்பரேஷன் வந்து பல ஆண்டுகள் ஆகின்றன. கூட்டுறவு ஆலைகள் போக இந்தக் கார்ப்பரேஷனில் 13 ஆலைகள் இருக்கின்றன. அந்த ஆலைகளை திறமையாக நிர்வகிக்க மானேஜ்மெண்ட் காடரை உருவாக்க இந்த அரசாங்கம் எந்தவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. தொழில் அனுபவம் இல்லாதவர்கள், தொழில் உறவு பற்றிய அனுபவம் இல்லாதவர்கள், டெக்னிகல் அனுபவம் இல்லாதவர்கள், பிஸினஸ் அனுபவம் இல்லாதவர்கள், இவர்களை எல்லாம் ஆலைகளில் அமர்த்துகிறார்கள். ஆலைகளின் நிர்வாகத்தில் பங்கு கொள்கிறவர்களுக்கு இந்த அனுபவங்கள் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அனுபவம் திடீரென்று வந்துவிடாது. அதை உருவாக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு எந்த ஏற்பாடும் செய்யாமல் அரசாங்கத் துறைகளிலுள்ள அதிகாரிகளைப் போடுகிறார்கள். அவர்களுக்குப் போதுமான அனுபவம் கிடையாது. அவர்கள் 'பியூரோகிரட்டிக் மனப்பான்மை'யிலேயே இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இப்படிப்பட்ட இடங்களில் பணியாற்ற வந்தால் என்ன செய்வார்கள்? அரசாங்கத் துறைகளில் பணியாற்றும்போது எப்படி நடந்துகொண்டார்களோ அதே பாணியில்தான் இங்கும் நடந்து கொள்வார்கள்.

அங்கே ஒரு முக்கியமான 'பைல்' வருகிறது என்றால் அதை கீழே இருந்து மேலே அனுப்புவார்கள். மேலே இருந்து கீழே அனுப்புவார்கள்; ஒரு தெளிவான முடிவை எடுக்கமாட்டார்கள்; பொறுப்புக்களைத் தட்டிக்

கழிப்பார்கள். அதைப்போலத்தான் இங்கேயும் பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்கிறார்கள். பல தொழில் தகராறுகளை நான் நடத்தியிருக்கிறேன். அந்த நேரங்களில் எல்லாம் அதிகாரிகளின் இப்படிப்பட்ட போக்கைப் பற்றி நான் அமைச்சர்களிடத்தில் தெரிவித்திருக்கிறேன்.

அதனால் ஒரு சிலரிடம் மட்டிலே பொறுப்புகள் இருக்கக்கூடாது; பொறுப்புக்களை 'டி-சென்ட்ரலைசேஷன்' செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அமைச்சர்களிடம் நாங்கள் சொல்லும்போது சரி, சரி என்கிறார்கள். பின்னால் இருக்கின்ற நிலைமையைப் பார்த்தால் பழையபடி சென்ட்ரலைசேஷன் தான். அப்படி இருந்தால்தான் அரசின் தலையீடுகள் இல்லாமல் முடியும் என்று நினைத்து இப்படிச் செய்கிறார்களோ என்று நான் நினைக்கிறேன்.

தொழில் நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்று சொன்னால், இந்த மாதிரி செய்ய வேண்டிய அவசியமில்லை. இதனால் தொழில் கெடுகிறது. தொழிலைப் பற்றி—ஸ்பின்னிங் ரோலிங் பற்றி தெரிந்துகொள்ள பல ஆண்டுகள் ஆகும். தக்க முறையில் பயிற்சி பெற்றால்தான் அதைப்பற்றி அறிந்து கொள்ள முடியும். அந்த வகையிலே பயிற்சி அளிக்காமல் திடீர் திடீரென்று யார், யாரையோ போடுகிறார்கள். அவர்கள் வருகிறார்கள்; கொஞ்ச நாள் அங்கே இருந்து விட்டு போகிறார்கள். இப்படி ஆட்களை மாற்றிக்கொண்டிருந்தால் தொழிலை எப்படி சீரமைக்க முடியும்; தொழில் உறவு எப்படி அமைய முடியும்? இப்படி குளறுபடிகள் செய்கின்ற ஒரு அரசிடம் இந்த நிர்வாகத்தைக் கொடுப்பது சரியல்ல என்பது என்னுடைய கருத்து.

இந்தக் கார்ப்பரேஷனை அமைத்த உடனே ஒரு அட்வைசரி கமிட்டி போட்டார்கள். அதில் கார்ப்பரேஷன் அதிகாரிகள் இருந்தார்கள்; தொழிற் சங்கப் பிரதிநிதிகள் இருந்தார்கள்; தொழிலதிபர் பிரதிநிதிகள் இருந்தார்கள். ஒரே ஒரு தடவை அந்தக் கமிட்டி கூடியது. ஏற்கெனவே இன்வெஸ்டிகேஷன் கமிட்டியை மத்திய அரசாங்கம் போட்டபோது, அரசு எடுத்து நடத்துகின்ற ஆலைகளில் அரசின் தலையீடு, அரசியல் தலையீடுகள் இருக்கக் கூடாது என்ற முறையிலே பல கருத்துக்களை பலரும் சொல்லியிருந்தார்கள். தேசியமயமாக்கப்பட்ட டிரான்ஸ்போர்ட்டிலே டிபெஞ்சர் கொடுப்பதாக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அப்படி இருக்கும்போது, இந்த பஞ்சாலைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு பங்கு என்ன, ஒவ்வொருவரும் அந்தக் கார்ப்பரேஷன் இன்னின்ன மாதிரி நடக்க வேண்டும்; தவறு நடந்தால் திருத்தப்பட



வேண்டும்; என்னென்ன முறைகளைக் கையாண்டால் லாபம் கிடைக்கும் என்ற ஆலோசனைகளைச் சொல்வதற்கு சில வாய்ப்புகள் இருக்க வேண்டுமென்று சொல்லி ஒரு அட்வைசரி கமிட்டியைப் போட்டார்கள். அந்தக் கமிட்டி ஒரு தடவைக் கூடியதோடு சரி. அப்புறம் அது 'லிக்விடேட்' ஆகிவிட்டது. பல மாதங்கள் ஆகியும் கூட்டம் கூடவில்லை. அந்தக் கமிட்டி என்ன ஆனது என்று கேட்டோம். கொஞ்ச நாள் வரைக்கும் பதில் இல்லை. அதன் பிறகு அந்தக் கமிட்டி தானாகவே லிக்விடேட் ஆகிவிட்டது என்று சொன்னார்கள்.

அப்படிப்பட்ட உங்களிடம் இந்த நிர்வாகத்தை எப்படி ஒப்படைக்க முடியும்? ஏற்கெனவே ஒரு கார்ப்பரேஷன் இருக்கும்போது, மத்திய அரசு எடுத்துக்கொள்ள முடிவு செய்திருக்கின்ற இந்த நேரத்தில் நிர்வாகத்தை எங்களிடம் கொடுங்கள் என்று ஏன் நீங்கள் கேட்க வேண்டும்? இப்போதே தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன்தான் நேஷனல் கார்ப்பரேஷனின் ஆதரைஸ்டு ஏஜண்ட் இந்த மாகாணத்தில். அதனால் இந்த டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷனே நிர்வாகத்தை நடத்திக்கொள்ளட்டும். உங்களுடைய தலையீடு அதிலே இருக்க வேண்டாம்.

மாநில அரசின் நிர்வாகத்தில் குளறுபடிகள் நடைபெற வாய்ப்புகள் ஏற்படும். தத்துவரீதியாகப் பார்த்தால் வேறு. ஆனால் உங்களுடைய நடைமுறைகளைப் பார்த்தால், உங்களுடைய கடந்த கால அனுபவங்களைப் பார்த்தால் நிர்வாகம் செம்மையாக நடைபெறும் என்பதற்கான சாத்தியக்கூறுகள் தென்படவில்லை. ஆகவே, இந்த விஷயங்களை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதனால் இந்தப் பிரிவுகளை நீக்கிவிட்டு, மற்றவைகளை முழுமையாக எங்கள் கட்சியின் சார்பில் ஆதரிக்கிறேன் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்த தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பில் முழுமையாக வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொல்லும்போது, அனுபவம் இல்லாத அதிகாரிகளை நியமித்து குளறுபடிகள் செய்கின்ற காரணத்தால் எதிர்க்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் உண்மை நிலைமை என்னவென்றால், பல நூற்பாலைகள் தங்களுடைய சொந்த சக்தியால் இயங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, தொழிலாளர்கள் வேலையிழந்து திண்டாடிக்கொண்டிருந்த அவல நிலை ஏற்பட்டது. அந்த நேரத்தில் இந்த அரசாங்கம் கருணையோடு முன்வந்து, அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஈட்டித்தந்து, அவர்

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1974 ஏப்ரல் 15

கருடைய பிள்ளைக் குட்டிகள் பட்டினி கிடக்கக் கூடாது என்ற கருணை உள்ளத்தோடு மாநில அரசு பெரும் நிதி உதவி செய்து, அந்த ஆலைகளை இயங்கச் செய்தது. அது மாத்திரமல்ல. இந்த 4, 5 ஆண்டுகளில் இந்த பஞ்சாலை நிர்வாகக் குழு அதன் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு நொடித்துப் போன ஆலைகள் வளர்ச்சியுற்று இருக்கின்றனவா, முன்பிருந்த நிலையிலிருந்து வளர்ந்திருக்கின்றனவா என்று நண்பரைக் கேட்கின்றேன். ஆலைகள் வளர்ச்சியுற்று, இன்று தன் சொந்தக் காலில் நிற்கின்ற அளவுக்கு தகுதி பெற்று லாபம் தேடிப் பெறுகிறது என்று சொல்லும்போது, அதன் நிர்வாகம் ஒழுங்காக, சீராக முறைப்பட்டு நடந்திருக்கிறது என்பது உண்மையாகின்றது. நிரூபிக்கப் பட்டிருக்கின்றது. அதற்கு மாறாக நஷ்டமடைந்து, மீண்டும் நொடித்த நிலையிருக்குமானால் இந்த நிர்வாகம் சரியாகவில்லை. மாநில அரசு சரியாக நிர்வகிக்கவில்லை என்ற கூற்று உண்மையாக இருக்கும்.

ஆலைகள் அந்த விதத்தில் செயல்படவில்லை என்பதை இந்தச் சபையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல. இன்னொரு பிரச்னையிருக்கிறது. இதை மாநில அரசு ஏன் எடுத்துக் கொள்ள வேண்டும், மத்திய அரசு ஏன் அதன் சொந்தக்காரர்களாக இருக்கக்கூடாது என்ற வாதத்தைக் கேட்டு உண்மையில் வேதனைபபடுகிறேன். நம்முடைய உறுப்பினர்கள் நம்முடைய மாநிலத்தின் நன்மைக்கு பாடுபட்டது என்ற சொத்து மாநில அரசுக்கு சொந்தமாக இருக்க வேண்டும் என்ற விருப்பம். அதன் வருவாய் மக்களுக்குக் கிடைக்கும்படியாக வரும்போது, மாநில அரசுக்கு அத்தனையும் இருக்க வேண்டும் அல்லாது இந்த நாட்டின் சொத்துக்கள் இந்த நாட்டிலுள்ள ஆலைகள், சுரங்கங்களெல்லாம், வசதிகள், சாதனைகள், பொருளாதாரம் அத்தனையுமே மத்தியாசில் இருக்க வேண்டும், குவிக்கப்பட வேண்டுமென்ற வாதம் மீண்டும், மீண்டும் எடுத்துச் சொல்லப்படுவது உண்மையில் வேதனைக்குரியதாக இருக்கிறது.

நண்பர் பழனிசாமி சொன்னார். இந்த நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்று. அந்தக் கருத்துக்கு எனக்கு மாறுபட்ட அபிப்பிராயமில்லை என்று அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

உண்மையில் பெரிய கோடிக்கணக்கான ரூபாய்கள் மூலதனம் வைத்து தொழிற்சாலைகள் இந்த நாட்டின் தேசியப் பொருட்களாக்கப்பட வேண்டும், இந்த நாட்டில் ஒவ்வொரு குடிமகனுக்கும் சொந்தமாக்கப்பட வேண்டுமென்பதில் மாறுபட்ட கருத்தில்லை.



1974 ஏப்ரல் 15] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

அதே நேரத்தில் எந்தெந்த மாநிலத்தில் எந்தெந்த தொழிற்சாலைகள் வளர்ச்சியுற்றிருக்கின்றனவோ, அந்தத் தொழிற்சாலைகள் அந்த மாநில நிர்வாகத்திற்கும், அந்த மாநில மக்களுக்குச் சொந்தமாகயிருக்க வேண்டுமென்பதை நான் வலியுறுத்தி சொல்ல ஆசைப்படுகிறேன். அந்த அடிப்படையிலே இந்த நொடித்துப் போன இந்த 13 மில்களை மீண்டும் சீர்படுத்தி, வளர்ச்சியுறச் செய்த இந்த அரசு முழு உரிமை கோரிப் பெறுவது நியாயமுடையது.

ஆகவே இது தொழிற்சாலைகளுக்கு நன்மை தாக்கூடிய திட்டம். அதனால் வரவேற்கிறேன்.

அத்துடன் அண்மைக் காலத்தில் நூல் பற்றுக்குறை ஏற்பட்டு, இந்த ஆலைக்காரர்கள அதில் குறைந்த விலையில் பஞ்சை வாங்கி மிகக் கடுமையான, கூடு லான விலைக்கு துணி விற்று, அதிகமான லாபம் தேடிக் கொள்வதை தடுக்க முடியாத அளவுக்கு நம் அரசு மத்திய அரசுக்கு உட்பட்டதாகயிருந்தாலும் அதைச் செய்ய முடியாத நிலையிலிருந்தது. இதை மாநிலப் பொறுப்பிலும், மத்திய அரசுக்கு சொந்தமாகயிருந்தாலும், இருந்தால் தான் இந்த மாதிரி எதிர்காலத்தில் நெசவாளர்கள் இந்த நூல் பற்றுக்குறையால் அவதிக்குள்ளாவதை தடுப்பதற்கு இந்த நூற்பு ஆலைகளை பயன்படுத்திக் கொள்ள முடியும். எல்லா வகையிலும் அணுகிப் பார்ப்போமானல் இது மாநில அரசு பொறுப் பேற்றுக் கொள்வது தான் மிக மிகச் சிறப்பானதாக இருப்பதால் என் கட்சி சார்பாக இதை முழுமையாக இந்த தீர்மானத்தை ஆதரித்து அமைகின்றேன்.

DR. H. V. HANDE : Are we meeting in the afternoon? If it is so, I may say that our party members may not be able to come in the evening. I would like to be given a chance to speak even now.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலையிலே வந்தவுடனே முடிவெடுத்தோம். இங்கே அவையில் வந்து எல்லாத் தலைவர்களும் பேசி, சேர்ந்து முடிவு பண்ணினது தான்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : என்னைப் பொறுத்த வரையில் நான் மாலையில் வர முடியாது. இப்பொழுது பிக்ஸ் பண்ணினல் பேசுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுங்கள்.

DR. H. V. HANDE : I want to say a few words before we adjourn. This particular resolution is perfectly all right. But if only the Hon. Minister had brought this resolution after some discussion with the persons connected with the industry or M.L.As, he could have brought a more comprehensive resolution in this House.

[Dr. H. V. Hande]



He says prior consent of different parties had been taken. But the Ruling Congress Party is opposing this. That means there has been no consensus. This unfortunate situation could have been avoided if the Hon. Minister had discussion with all party members because the problem before the House is whether it is to be nationalised at all. Even on that there is no consensus.

The Hon. Minister has not spelt out correctly why it should be nationalised when already there is our Textile Corporation. On whom is he going to entrust it ? He has not explained it. What is it we stand to gain by nationalisation, he has not explained. If only consensus had been obtained and discussion with party leaders taken place, this situation could have been avoided. Then proceedings in this House would have been more meaningful. That is my feeling.

The Hon. Minister has failed in his duty to explain the benefits that would accrue from nationalisation of these textile companies. He has also failed to give us the detailed working of these different textile units. He has also begun with a preamble of praising the good and efficient work of our Textile Corporation. Why should he praise it ? That could have been avoided.

If it had been working all right, why this nationalisation? It must not have been working all right, really. What I say is, why this contradiction? If it had been working efficiently, why this nationalisation? It must have been working inefficiently. There is this contradiction. Apart from that, a number of persons have been thrown out of employment because of nationalisation. In the Accountancy department so many had been sacked. I have received a number of complaints. I want a categorical statement from the Hon. Minister that all these persons will be taken back. I beg to differ from the Congress Party on one thing. If at all there should be nationalisation, it is better our Government nationalises it and not anybody coming from the Centre, who has no idea of the conditions in Madurai, Coimbatore. Even to study the geography it will take a few days for him.

THIRU A. SUBRAMANIAM : I am afraid DR. Hande is confusing the issue. I never said a man from Delhi can come and take charge. Tamil Nadu Textile Corporation can continue. What I said was that over-all control should not be with the State Government.





DR. H. V. HANDE : Why should a Delhi man come and take charge? Why should we hand over nationalisation to Delhi ? (interruption) I am not yielding I shall finish in a minute. What I want is that there should not be any ambiguity. Congress members need not get excited.

நீங்கள் தேசியமயமாகக் கூடிய கொள்கையை வரவேற்றுப் பேசினீர்கள். Let there be no ambiguity. அதை வரவேற்றுப் பேசுங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் முடித்து விடுகிறேன். மத்திய அரசு ஏற்றுக்கொண்டால் என்ன லாபம் என்று நான் கேட்கிறேன். மத்திய அரசை விட நம் நாட்டில் திறமை கிடையாதா, தமிழ் நாட்டில் திறமை கிடையாதா? அரசாங்கம் நமக்குப் பிடிக்காமலிருக்கலாம். அது தனி விஷயம். நம் மாநிலத்தை ஏன் குறைத்துப் பேச வேண்டும்? நமக்குத் திறமை கிடையாதா, நாம் நிர்வாகத்தை நடத்த முடியாதா? மத்திய அரசாங்கம் என்ன ஆகாயத்திலிருந்து வருகிறதா? நம் மாநில அரசாங்கம் ஏற்று நடத்தி, அதில் குறைகள் இருந்தால், தப்பு நடந்தால் சட்ட மன்றத்தில் கேட்போம். மத்திய அரசு எடுத்துக் கொண்டால் என்ன லாபம்? அதைக் கேட்கிறேன். இல்லையென்றால் தேசியமயமாக்குவதை எதிர்க்கின்றேன். இந்தத் தீர்மானத்தை எதிர்த்து பேசியதில் ஆட்சேபணையில்லை.

டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் செம்மையாக நடக்கும்போது, நீங்கள் தேசியமயமாக்க வேண்டுமென்பது ஏன் என்று கேட்கிறேன். நமது மதிப்பிற்குரிய நண்பர் திரு. ஏ. சுப்ரமணியம் கோயம்புத்தூர் பக்கத்தில் இருப்பதால் இதில் என்ன தவறு நடந்திருக்கிறது என்பதைச் சொல்லலாம். அவர்களை விட திறமைசாலி யார் இருக்க முடியும் என்று சொன்னால் இதுதான் முரண்பாடாக இருக்கிறது என்று சொன்னேன். திட்டவட்டமாக—முரண்பாடு

(பிற்பகல் 1-30)

இல்லாது இந்தக் கொள்கையை வரையறுத்திருக்கலாம்—இந்தக் குழப்பங்களை எல்லாம் தவிர்த்திருக்கலாம். அமைச்சர் அவர்கள் தம் கடமையில் இருந்து தவறிவிட்டார்கள். ஒழுங்காக உட்கார்ந்து எல்லோரையும் கலந்து ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரலாம். மசோதா ரீதியாகக் கொண்டுவரலாம். எந்த விதமான விளக்கமும் இல்லாது, மொட்டையாகக் கொண்டு வந்து ஆதரியுங்கள் என்று சொல்லும்போதுதான் இந்த கன்ப்யூஷன் எல்லாம் வருகிறது என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

(திரு. ஏ. சுப்பிரமணியம் எழுந்திருந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதே மணி 1-30-க்கு மேலாகி விட்டது. மாலையில் வேறு கூட்டம் இருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : மாலையில் கூட்டம் என்பது முடியாத காரியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது காலையிலேயே முடிவாகிவிட்டது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாலையில் மதிப்பீட்டுக் குழு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. மாலை 4.00 மணி அளவில் மீண்டும் பேரவை கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

இடைவேளைக்குப்பின் பேரவை மாலை 4.00 மணி அளவில் பேரவைத் தலைவர் தலைமையில் கூடியது.

* திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, இன்று நமது அரசாங்கம் 13 மில்களை தேசியமயமாக்குவதற்கான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

மத்திய அரசாங்கமும் தேசியமயமாக்கக்கூடிய சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. ஆக, மத்திய சர்க்காராய் இருந்தாலும், மாநில சர்க்காராய் இருந்தாலும், இந்த மில்களைத் தேசியமயமாக்குவதிலே ரொம்ப நீண்ட நெடுங்காலமாக அகில இந்தியத் தொழில் சங்கம் ஏ.டி.யு.சி; கோரிக்கையை வலியுறுத்திக்கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே இந்த மில்கள் தேசியமயமாக்கப்பட்டிருக்கின்றன.

அதோடு கூட, கோயம்புத்தூரிலே கார்ப்பரேஷன் மூலமாக 4, 5 மில்களை அரசாங்கம் எடுத்து நடத்துகிறது. முன்பே மில் முதலாளிகள் நடத்தும் போது நஷ்டம் ஏற்பட்ட அந்த மில்களை கார்ப்பரேஷன் எடுத்து நடத்தும் போது லாபம் கிடைக்காது. தனியார் மில்களை நடத்தும்போது லாபத்தைக் காட்டாமல் நஷ்டத்தைத்தான் காட்டினார்கள்.

இப்பொழுது கார்ப்பரேஷன் நடத்தும்போது லாபத்தைக் காட்டுகிறது.

அதே மாதிரியாக பல மில்கள் நின்றுகிடக்கின்றன. அவற்றையும் அரசாங்கமே எடுத்து நடத்த முயற்சிக்க வேண்டும். அதே மாதிரி சித்திரை வாலாஜாப்பேட் மில்ஸ், மதுரை கோதண்டராமன் மில்ஸ் நின்று கிடக்கின்றன. அந்த இரண்டு மில்களையும் அரசாங்கமே எடுத்து நடத்துவதில் எந்தவித ஆட்சேபமும் இருக்கமுடியாது என்று கருதுகிறேன்.



ஆகவே, மில்களை எடுத்து நடத்தும்போது மில் முதலாளிகளுக்கு நஷ்டஈடு கொடுக்கக்கூடாது. காரணம் என்னவென்று பார்த்தால், அதன் முதலாளிகள் மூலதனம் போட்டதிலிருந்து இதுவரையிலும் அதிகப்படியான லாபம், மூலதனம் போட்டதற்கு மேல் அதிக லாபம் எடுத்தாகிவிட்டது. ஆகவே, நஷ்டஈடு கொடுக்காமல் மில்களை எல்லாம் அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற தீர்மானத்தை ஆதரித்து எனது கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று நம்முடைய தமிழ் நாட்டு அரசாங்கம் இங்கே இருக்கிற பஞ்சாலைத் தொழில்களை, நொடிந்த அந்த 13 தொழிற்சாலைகளை எடுத்து வேலைவாய்ப்பு கொடுக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது. அகில இந்தியாவிலே தமிழ் நாட்டு முயற்சியைப் பாராட்டுவதைப் பார்க்கிறோம். நான் தெரிவிக்க விரும்புவது இந்திய நாடு முழுவதும் ஏறத்தாழ 104 பஞ்சாலைகள் நொடிந்த பஞ்சாலைகளாக அமைந்திருந்தன. தமிழ் நாட்டினைப் பொறுத்தவரையில் 13 பஞ்சாலைகளை ஏற்று இன்றைக்கு பஞ்சாலைக் கழகத்தின் சார்பாக அப் பஞ்சாலைகளை நடத்தி வருகிறோம். அகில இந்தியாவோடு நமது மாநில அரசாங்கத்தை நாம் ஒப்பிட்டுப் பார்த்தால், எதற்காக தமிழ்நாட்டுப் பஞ்சாலைத் கழகத்தின் நிர்வாகத்தின்கீழ் அந்தப் பஞ்சாலைகளைக் கொண்டுவர வேண்டுமென்று நாம் தீர்மானத்திலே சொல்லியிருக்கிறோம்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள், தமிழ் நாட்டு அரசாங்கம் நாட்டுடைமையாக்கக்கூடாது, தமிழ் நாட்டு நிர்வாகப் பொறுப்பின் கீழ் வரக் கூடாது என்ற அளவில் இரண்டு திருத்தங்களைக் கொண்டு வந்திருப்பதைப் பார்க்கிறோம். ஆனால், தமிழக சர்க்காரால் எடுக்கப்பட்டு, பஞ்சாலைக் கார்ப்பரேஷன் நடத்துகிற பஞ்சாலைகள் தான் லாபகரமாக நடந்து வருகின்றன. அகில இந்தியாவிலுள்ள 104 பஞ்சாலைகளில், அந்த 13 பஞ்சாலைகளும் தேசியக் கார்ப்பரேஷன் கீழ் போகுமானால், இங்கிருக்கிற தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படும் என்பதை நாம் யாரும் மறந்துவிடக் கூடாது.

இங்கே காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் யாரும் மன்றத்தில் இல்லை. இருந்தாலும் பரவாயில்லை. தங்கள் வாயிலாக இந்த நாட்டு மக்களுக்கு மாநில அரசாங்கம் தீர்மானித்ததற்கு விரோதமாகக்கூட, மத்திய அரசாங்கம் தனக்கு இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தப் பஞ்சாலைகளை ஏற்றுக் கொள்கின்ற நிலை ஏற்படுமானால், ஏறத்தாழ 10,000 தொழிலாளர்கள் இதன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது காலையிலேயே முடிவாகிவிட்டது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாலையில் மதிப்பீட்டுக் குழு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. மாலை 4.00 மணி அளவில் மீண்டும் பேரவை கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

இடைவேளைக்குப்பின் பேரவை மாலை 4.00 மணி அளவில் பேரவைத் தலைவர் தலைமையில் கூடியது.

*** திரு. என். மருதாசலம் :** தலைவரவர்களே, இன்று நமது அரசாங்கம் 13 மில்களை தேசியமயமாக்குவதற்கான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

மத்திய அரசாங்கமும் தேசியமயமாக்கக்கூடிய சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. ஆக, மத்திய சர்க்காராய் இருந்தாலும், மாநில சர்க்காராய் இருந்தாலும், இந்த மில்களைத் தேசியமயமாக்குவதிலே ரொம்ப நீண்ட நெடுங்காலமாக அகில இந்தியத் தொழில் சங்கம் ஏ.டி.யு.சி; கோரிக்கையை வருத்துக்கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே இந்த மில்கள் தேசியமயமாக்கப்பட்டிருக்கின்றன.

அதோடு கூட, கோயம்புத்தூரிலே கார்ப்பரேஷன் மூலமாக 4, 5 மில்களை அரசாங்கம் எடுத்து நடத்துகிறது. முன்பே மில் முதலாளிகள் நடத்தும் போது நஷ்டம் ஏற்பட்ட அந்த மில்களை கார்ப்பரேஷன் எடுத்து நடத்தும் போது லாபம் கிடைக்காது. தனியார் மில்களை நடத்தும்போது லாபத்தைக் காட்டாமல் நஷ்டத்தைத்தான் காட்டினார்கள்.

இப்பொழுது கார்ப்பரேஷன் நடத்தும்போது லாபத்தைக் காட்டுகிறது.

அதே மாதிரியாக பல மில்கள் நின்று கிடக்கின்றன. அவற்றையும் அரசாங்கமே எடுத்து நடத்த முயற்சிக்க வேண்டும். அதே மாதிரி சித்திரை வாலாஜாப்பேட்டை மில்ஸ், மதுரை கோதண்டராமன் மில்ஸ் நின்று கிடக்கின்றன. அந்த இரண்டு மில்களையும் அரசாங்கமே எடுத்து நடத்துவதில் எந்தவித ஆட்சேபமும் இருக்கமுடியாது என்று கருதுகிறேன்.



ஆகவே, மில்களை எடுத்து நடத்தும்போது மில் முதலாளிகளுக்கு நஷ்டஈடு கொடுக்கக்கூடாது. காரணம் என்னவென்று பார்த்தால், அதன் முதலாளிகள் மூலதனம் போட்டதிலிருந்து இதுவரையிலும் அதிகப்படியான லாபம், மூலதனம் போட்டதற்கு மேல் அதிக லாபம் எடுத்தாகிவிட்டது. ஆகவே, நஷ்டஈடு கொடுக்காமல் மில்களை எல்லாம் அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*** திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற தீர்மானத்தை ஆதரித்து எனது கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று நம்முடைய தமிழ் நாட்டு அரசாங்கம் இங்கே இருக்கிற பஞ்சாலைத் தொழில்களை, நொடிந்த அந்த 13 தொழிற்சாலைகளை எடுத்து வேலைவாய்ப்பு கொடுக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது. அகில இந்தியாவிலே தமிழ் நாட்டு முயற்சியைப் பாராட்டுவதைப் பார்க்கிறோம். நான் தெரிவிக்க விரும்புவது இந்திய நாடு முழுவதும் ஏறத்தாழ 104 பஞ்சாலைகள் நொடிந்த பஞ்சாலைகளாக அமைந்திருந்தன. தமிழ் நாட்டினைப் பொறுத்தவரையில் 13 பஞ்சாலைகளை ஏற்று இன்றைக்கு பஞ்சாலைக் கழகத்தின் சார்பாக அப் பஞ்சாலைகளை நடத்தி வருகிறோம். அகில இந்தியாவோடு நமது மாநில அரசாங்கத்தை நாம் ஒப்பிட்டுப் பார்த்தால், எதற்காக தமிழ்நாட்டுப் பஞ்சாலைக் கழகத்தின் நிர்வாகத்தின்கீழ் அந்தப் பஞ்சாலைகளைக் கொண்டுவர வேண்டுமென்று நாம் தீர்மானத்திலே சொல்லியிருக்கிறோம்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள், தமிழ் நாட்டு அரசாங்கம் நாட்டுடைமையாக்கக்கூடாது, தமிழ் நாட்டு நிர்வாகப் பொறுப்பின் கீழ் வரக் கூடாது என்ற அளவில் இரண்டு திருத்தங்களைக் கொண்டு வந்திருப்பதைப் பார்க்கிறோம். ஆனால், தமிழக சர்க்காரால் எடுக்கப்பட்டு, பஞ்சாலைக் கார்ப்பரேஷன் நடத்துகிற பஞ்சாலைகள் தான் லாபகரமாக நடந்து வருகின்றன. அகில இந்தியாவிலுள்ள 104 பஞ்சாலைகளில், அந்த 13 பஞ்சாலைகளும் தேசியக் கார்ப்பரேஷன் கீழ் போகுமானால், இங்கிருக்கிற தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படும் என்பதை நாம் யாரும் மறந்துவிடக் கூடாது.

இங்கே காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் யாரும் மன்றத்தில் இல்லை. இருந்தாலும் பரவாயில்லை. தங்கள் வாயிலாக இந்த நாட்டு மக்களுக்கு மாநில அரசாங்கம் தீர்மானித்ததற்கு விரோதமாகக்கூட, மத்திய அரசாங்கம் தனக்கு இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தப் பஞ்சாலைகளை ஏற்றுக் கொள்கின்ற நிலை ஏற்படுமானால், ஏறத்தாழ 10,000 தொழிலாளர்கள் இதன்

[திரு. சு. துரைசாமி] [1974 ஏப்ரல் 15

காரணமாக பாதிக்கப்படுவார்கள். இந்தியா முழுவதும் உள்ள 104 மில்களில்
இந்த மில்கள் தவிர, மற்றவை நஷ்டத்திலே ஓடிக் கொண்டிருக்கின்றன. அந்த
மில்களில் உள்ள தொழிலாளர்களுக்கு தமிழ்நாட்டுப் பஞ்சாலைத் தொழி
லாளரைப் போல் நியாயமான சம்பளம் கிடையாது. இந்தத் தமிழ் நாட்டு
கார்ப்பரேஷன் எடுத்துள்ள ஆலைகளைப் போல் அங்கிருக்கிற ஆலைகளில்
போனஸ் கிடைக்கவில்லை. நம்முடைய அரசாங்கம்தான், பஞ்சாலைக் கார்ப்ப
ரேஷன் மூலமாக, 22 சதவிகிதம் போனஸ் கொடுத்திருக்கிறது. போனஸ்
சட்டத்திற்கு மேல் 4 சதவிகிதம் 8 சதவிகிதம் கொடுத்திருக்கிறோம்.
பஞ்சாலைக் கார்ப்பரேஷன் நடத்துகிற இந்த மாநிலத்தில் இதைப்போல்
உயர்ந்த போனஸ் கொடுக்கப்படவில்லை.

மத்திய சர்க்கார் தனக்கிருக்கின்ற அதிகாரங்களைப் பயன்படுத்தி அதிகம்
செலுத்தக் கூடிய நிலை ஏற்படுமானால் தமிழ்நாட்டுப் பஞ்சாலைகளுக்குத்தான்
பாதிப்பு ஏற்படும் என்பதை இங்கே எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.
இந்தப் பஞ்சாலைகளை எல்லாம் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டும்.
அதற்கு ஒரு சட்டம் கொண்டு வாருங்கள் என்றெல்லாம் சொன்னார்கள்.
அதைச் சொல்லக்கூடிய அவர்கள் கேரளத்தில் ஆளுகின்ற பொறுப்பை ஏற்றி
ருப்பதைப பார்க்கிறோம்.

அங்கேயும் பஞ்சாலைகள் இருக்கின்றன. அங்கே இருக்கின்ற கம்யூனிஸ்ட்
கட்சி அரசாங்கத்தால் அங்கேயிருக்கின்ற பஞ்சாலைகள் எடுத்துக்கொள்ளப்
பட்டு நடத்தினால் ஒரு நல்ல முன்மாதிரியாக அவர்கள் சொல்லலாம். ஆனால்
கேரளத்திலே என்ன நிலைமை? இங்கே சட்ட மன்றத்திலே சொல்லி
வருகிறார்கள். அவர்கள் சார்பில் ஆளுகின்ற கேரள மாநிலத்திலே
பஞ்சாலைகள் தனியார் வசமேதான் இருக்கின்றன. இந்த அரசாங்கத்
தினுடைய கொள்கை சமதர்ம கொள்கைதான், எந்த ஒரு பெரிய தொழிலாக
இருந்தாலும் நாட்டுடைமையாக்க வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு
கிடையாது.

ஆனால் அகில இந்தியாவிலே தொழில் நிலைமை பாதிக்காத அளவிற்கு நாம்
பார்த்துக்கொள்ளவேண்டும். அண்மையிலே நூல் கிடைக்காமல் நெசவாளர்
களுக்கு ஒரு நெருக்கடி நிலைமை ஏற்பட்டது. மத்திய அரசாங்கம் நமக்கு
ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை. நம்முடைய அரசாங்கம் நடத்துகின்ற 12
ஆலைகள், கூட்டுறவுத் துறையிலே நடத்தப்படுகின்ற ஆலைகள் இவைகளி
லிருந்து கிடைத்த நூலை நெசவாளர்களுக்குக் கொடுத்தோம். அரசாங்க பஞ்
சாலைக் கார்ப்பரேஷன் எந்த அளவிற்கு சிறப்பாக அமைந்து இருக்கிறது
என்பதைப் பார்க்கிறோம். பல லட்சக்கணக்கான நெசவாளர்களுக்குக்



1974 ஏப்ரல் 15] [திரு. சு. துரைசாமி]

குறைந்த விலையிலே நாம் நூலைக் கொடுத்தோம். அந்த நூலை நாம் வெளி
மார்க்கட்டிலே விற்றிருந்தால் லாபம் எவ்வளவோ கிடைத்திருக்கும். ஆனால்
நெசவாளர்களின் துயரைப் போக்குவதற்காக லாபத்தைக் குறைத்துக்
கொண்டு அவர்களுக்குக் கொடுத்தோம்.

ஆகவே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை
முழு மனதோடு வரவேற்றால்தான் நெசவாளர்களுக்கு நாம் தொடர்ந்து பாது
காப்பு கொடுக்க முடியும். அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத்
தீர்மானத்தை நான் ஆதரித்து உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம்
தமிழக மக்களுக்குப் பயனுள்ள ஒரு தீர்மானம் என்ற அடிப்படையிலே எதிர்க்
கட்சித் தலைவர்களும் கலக்கப்பட்டு அவர்களிடத்திலேயும் தீர்மானத்தினுடைய
வாசகம் காண்பிக்கப்பட்டு அதற்குப் பிறகுதான் கொண்டுவரப்பட்டிருக்
கிறது.

இங்கே ஒரு எதிர்க்கட்சி நண்பர் கலக்கவே இல்லை என்று சொன்னார்கள்.
அப்படிச் சொன்னது எனக்கு வருத்தமாக இருக்கிறது. அந்த மாண்புமிகு
உறுப்பினர் படித்துப் பார்த்தது எனக்கு நினைவுக்கு வருகிறது. அரசியல்
ரீதியாக அப்படிச் சொல்லியிருக்கக்கூடும். இந்த பதின்மூன்று ஆலைகளைப்
பயன்படுத்தி நாம் நெசவாளர்களுடைய பிரச்னையைத் தீர்த்திருக்கிறோம்.
இப்போதுள்ள பிரச்னை இந்த 12 மில்களையும் தனியாருக்குத் திருப்பிக்
கொடுக்கிற பிரச்னை இல்லை. அரசாங்கம் எடுக்கவேண்டும் என்பதுநான்
முடிவு. மத்திய அரசாங்கம் ஒரு கொள்கையை அறிவித்தது.

இந்தத் தீர்மானத்தையொட்டிய கருத்துக்கள் ஏற்கனவே சட்ட மன்றத்
திலே முதலமைச்சர் அவர்கள் பேசும்பொழுது நிதிநிலை அறிக்கை விவாதத்
தின்போது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்துக்களையும் இந்தத்
தீர்மானத்தையும் இணைத்துப் பார்த்தால் உண்மையைப் புரிந்துகொள்ளலாம்.
நாம் இன்றைக்கு நடத்தி வருகின்ற ஆலைகளுக்கு மத்திய அரசாங்கம் 51
சதவீதம் பணம் கொடுக்கிறது, நாம் 49 சதவீதம் பணம் கொடுக்கிறோம், அந்த
அடிப்படையிலேதான் நிர்வாகம் நடத்தப்பட்டு வருகிறது. அதே நிலைமை
தொடரவேண்டுமென்பதுதான் முக்கியமாகும்.

மத்திய அரசாங்கம் தாங்களே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று ஆசைப்
படுகிறார்கள். அவர்கள் ஏற்றுக்கொண்டால் நிர்வாகம் நம்மிடத்திலிருந்து
எடுக்கப்படுமா என்பது கேள்வி. மத்திய அரசாங்கம் எடுத்து நடத்துமானால்
இதுபோன்று அவர்கள் ஏற்கனவே எடுத்து நடத்துகின்ற மில்கள் எல்லாம்

நஷ்டத்திலேதான் நடக்கின்றன, அதைப்போன்று அதோடு சேர்ந்து இதுவும் சீரழிவதற்கான வாய்ப்பு ஏற்படும். ஏற்கனவே மத்திய அரசாங்கம் ஒப்புக் கொண்டதைப்போல ஆலை உரிமையைப் பொறுத்தவரையில், மத்திய அரசாங்கமும் இருக்கலாம், நாமும் இருக்கலாம். இப்போது அப்படித்தான் இருக்கிறது, அது தொடரவேண்டுமென்பதுதான் நம்முடைய கொள்கை.

அந்த அடிப்படையிலேதான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மோசமாக இருந்த ஆலைகளை நாம் ஏற்று நடத்தி இப்பொழுது கிட்டத்தட்ட 1 கோடியே 38 லட்சம் ரூபாய் அளவிற்கு லாபம் சம்பாதித்து இருக்கிறோம். சிறப்பாக நடைபெறுகின்றன என்பதை நாம் எடுத்துக் காட்டியிருக்கிறோம். நிர்வாகத்திலே சில மாற்றங்கள் செய்யலாம் அல்லது அரசியல் தலையீடு இருக்குமானால் அதைத் தடுக்கலாம். இது சாதாரணமான பிரச்னை. எப்போதும் எந்தப் பிரச்னையையும் பேசித் தீர்த்துக்கொள்வதில் இந்த அரசாங்கம் கொள்கையளவில் தயாராக இருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்கள் நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலே சில குறைகளைச் சொன்னார்கள். அதை பேசி தீர்த்துக் கொள்வதிலே சங்கடம் இல்லை.

ஆலைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது கொள்கைப் பிரச்னை. அவ்வாறு செய்வதற்கு இந்த அரசாங்கம் யாருக்கும் சளைத்ததல்ல. அப்பொழுது வரும்பொழுது பார்த்துக்கொள்ளலாம். அகில இந்திய ரீதியிலே மத்திய அரசாங்கம் முடிவு எடுக்காமல் இருக்கும்பொழுது நாமே முடிவு எடுப்பதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. தொழில் துறையைப் பொறுத்தவரையில் வேறு கருத்து வேறுபாடு கம்யூனிஸ்ட் கட்சிக்கும் எங்களுக்கும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நஷ்டம் வருகிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். கூட்டுறவு ஆலைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். என்னைப் பொறுத்தவரையிலே நாட்டுடைமையாக்கப்பட்ட ஆலைகளிலே நஷ்டம் என்ற பிரச்னையை வைத்து கொள்கையை அணுகக்கூடாது. இந்த ஆலைகளைப் பொறுத்தவரையில் நஷ்டம் இல்லை. கூட்டுறவு ஆலைகளில் நஷ்டம் இருக்கிறது, நஷ்டம் வருகிறது என்பதற்காக கொள்கையை விட்டுவிடக்கூடாது.

அவர்கள் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதனுடைய உண்மையான நோக்கம் என்னவென்று புரியவில்லை. அவர்களுடைய கட்சித் தலைவரை தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டேன். நாம் கொண்டுவந்திருக்கின்ற தீர்மானத்திலே இருக்கின்ற நான்காவது பாராவை எடுத்துவிடவேண்டுமென்று திருத்தம் கொடுத்து இருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்ட கருத்துக்களை ஒப்பிட்டுப் பார்த்தால் புரிந்துகொள்வார்கள்.





அவர்கள் சொல்வது, மத்திய அரசாங்கம் இந்த ஆலைகளையெல்லாம் அவர்களே எடுத்துக்கொள்ளவேண்டும், அந்த ஆலைகளுக்கு இழப்புத் தொகை கொடுக்கவேண்டும். நட்ட ஈட்டுத் தொகை கொடுக்கும்போது சில ஆண்டுகளாக நாமும், மத்திய அரசாங்கமும், நிதிநிறுவனங்களும் ஏராளமான பணத்தைக் கொடுத்து 1 கோடியே 38 லட்சம் ரூபாய் அளவிற்கு லாபம் சம்பாதித்துக்கொண்டு இருக்கின்ற நிலையிலே நாம் ஏற்படுத்தியிருக்கிற முன்னேற்றத்தை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு இழப்புத் தொகை கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதை நாம் ஆட்சேபித்து இருக்கிறோம்.

நம்முடைய கொள்கை அன்றைக்கு 'சிக்' மில்களாக இருக்கின்றபொழுது என்ன நிலைமை இருந்ததோ அந்த நிலைமையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்தத் தேதியில் உள்ள நிலைமையைக் கொண்டு நட்ட ஈடு கணக்கில் கொள்ள வேண்டும் என்று சொல்கிறோம். ஆனால் அவர்கள் அந்தக் கொள்கையை டெலிட் செய்ய வேண்டுமென்ற முறையிலே டெலிட் [illegible] செய்யக் கூடிய முறையிலே முதலாளிகளுக்குச் சாதகமாகப் போகக்கூடிய நிலைமையிலே திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது நாங்கள் எடுப்பதை கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்பதாகத்தான் அர்த்தம். அத்தியாவசியமான நஷ்ட ஈடுமே கொடுக்காமல் அடிக்க வேண்டுமென்று சொன்னால் எங்களுக்கு ஆட்சேபணையில்லை, சட்டப்படி அது முடியாதானால். அவர்கள் இப்போது கொடுக்கிறபடி முதலாளிகளுக்கு மத்திய அரசாங்கம் ஆதரவு கொடுப்பதை ஆதரிப்பதாக இருக்கிறது என்று சுட்டிக்காட்டினேன். இந்த மூலத் தீர்மானத்தையும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரிடத்திலே காட்டினேன் முன்மொழிவதற்கு முன்னால், இந்த மன்றத்திற்குக் கொண்டுவருவதற்கு முன்னால், எனவே, அது தவறான திருத்தம் என்பதை எடுத்துக்கூறி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: சார், மத்திய சர்க்காருக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்பது அல்ல. முதலில் சிக் மில்களை சர்க்காரே எடுத்து பணம் போட்டு லாபம் வருகின்ற நேரத்தில் தனிப்பட்ட முதலாளிகளுக்கு விட்டுக்கொண்டிருந்தார்கள். அதை மாற்றுவதற்காகத்தான் சர்க்கார் ஒரு சட்டம் போட்டதாகவும், அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே ஏற்கனவே நல்ல முறையில் ஓடும் மில்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்காமல் மத்திய சர்க்காரே எடுத்து நடத்தலாம் என்ற ஒரு உத்தரவு போடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியதில்லை என்று சொல்லும் நேரத்தில் இம்மாதிரி நஷ்ட ஈடு தனிப்பட்ட முதலாளிகளுக்குப் போகக்கூடாது என்று சொல்வதற்கு காண்ட்ராடிக்டரியாக இருக்கிறது.

திரு. வ. ஆர். மாரிமுத்து அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய திருத்தம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

திரு. என். கே. பழனிசாமி அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி

"1951-ம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி முறைப்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 65/1951) கீழும் 1972-ம் ஆண்டு நொடித்த பஞ்சாலைகள் (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) சட்டத்தின் கீழும் (மத்தியச் சட்டம் 72/1972) இம் மாநிலத்தில் உள்ள நொடித்த தனியார் துறை பஞ்சாலைகள் சிலவற்றை மேற்கொள்ள மத்திய அரசு ஆணையிட்டுள்ளதாலும்;

அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பஞ்சாலைகளின் நிர்வாகத்தை மத்திய அரசு தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளதாலும்;

ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் இந்த ஆலைகளை மீண்டும் செயல்படச் செய்ய இந்த ஆலைகளில் மாநில அரசும் மத்திய அரசும் கணிசமான நிதிகளை முதலீடு செய்துள்ளதாலும்;

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை கீழ்க்கண்டவாறு பரிவுரை செய்கிறது:—

(1) மேற்கொள்ளப்பட்ட ஆலைகள் தாமதமின்றி நாட்டுடைமையாக்கப்பட வேண்டும்;

(2) நாட்டுடைமையாக்கும் பணி மாநில அரசினால் செய்யப்பட வேண்டும்;

(3) இந்த பஞ்சாலைகளைத் திறம்பட நிர்வகித்து வரும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் இந்த ஆலைகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பின்னரும் இந்த ஆலைகளைத் தொடர்ந்து நிர்வகித்து வர வேண்டும்;

(4) அரசின் உதவியுடனும் ஏனைய பொது நிதிகளின் உதவியுடனும் இந்த ஆலைகளில் செய்யப்படும் மேம்பாடுகளினால் கிடைக்கும் நன்மை முந்திய நிர்வாகத்திற்குக் கிடைக்காத வகையில் இழப்பீட்டுத் தொகை முடிவு செய்யப்பட வேண்டும்;

(5) இது குறித்து அவசியமான சட்டமியற்றும் அதிகாரம் மாநில அரசுக்குக் கொடுக்கப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.





## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு கைத்தறித் துணிகள் (உற்பத்தி, பகிர்ந்து அளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 19/1974).*

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே,

தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு கைத்தறித் துணிகள் (உற்பத்தி, பகிர்ந்து எண் 19/1974) ஆய்வு செய்வதற்காக 30 உறுப்பினர்கள் அடங்கிய (20 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 10 சட்ட மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன் கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்:

1. திரு. ச. சங்குமுத்து தேவர்.
2. திரு. பூவை ஆதி.
3. திரு. செனாடி எஸ். சுந்தரபாரதி.
4. திரு. வா. மை. அப்துல் ஜப்பார்.
5. திரு. நா. வெ. குருசாமி.
6. திரு. ஏ. சுப்பிரமணியம்.
7. திரு. கே. டி. கே. தங்கமணி.
8. திரு. ஆ. கு. சுப்பையா.
9. திரு. இ. எஸ். தியாகராசன்.
10. திரு. எ. க. துரைசாமி.
11. திரு. க. மு. இராசகோபால்.
12. திரு. என். கணபதி.
13. திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்.
14. திரு. கி. ஜெயராமன்.
15. திரு. சு. துரைசாமி.
16. திரு. எஸ். முருகையன்.
17. திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்.
18. திரு. கே. எம். சுப்பிரமணியம்.

* 9—4—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. செ. மாதவன்] [1974 ஏப்ரல் 15

19. திரு. மா. சுப்பிரமணியன் (ஈரோடு).

**20. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.**

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(ஆ) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1974).**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேரவைத் தலைவர் அவர்களே: தமிழ் நாடு* 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1974) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன் மொழிகிறேன்.

சிறு வணிகர்களுக்கு சலுகை அளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959), 3 (1) 7 —(1) பிரிவுகளின்கீழ் வரி செலுத்துவதினின்றும் விலக்களிப்பதற்கான ஆண்டு மொத்த வியாபாரத் தொகை வரம்பை 25,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்த அரசு முடிவு செய்தது. அதற்கு நிகராக, வணிகராகப் பதிவு செய்து கொள்வதிலிருந்து விலக்களிப்பதற்கான மொத்த வியாபாரத் தொகையின் வரம்பை 15,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாக உயர்த்தவும் கருதப்பட்டுள்ளது. 50,000 ரூபாய்க்குக் குறையாமலும் ஆனால் ஐம்பத்தையாயிரம் ரூபாய்க்குக் குறைவாகவும் மொத்த வியாபாரத் தொகை உடைய வணிகர் ஒருவருக்கான வரி இணக்க வீதத்தையும் வரி விதிப்பு வீதத்தையும் ரூபாய் 876 லிருந்து ரூபாய் 840 ஆகக் குறைக்கவும் அரசு முடிவு செய்தது. அப்போதுதான் வரி இணக்க வீதத்தின் ஏதாவது இரண்டு நிலைகளுக்கிடையே உள்ள வேறுபாடு ரூபாய் 240 ஆக இருக்கும்.

வரி செலுத்துவதினின்றும் விலக்கு அளிக்கப்பட்ட ஆண்டு மொத்த வியாபாரத் தொகை வரம்பு ரூபாய் 50,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளதால், ரூபாய் 35,000 க்கு மேற்படாத மொத்த வியாபாரத் தொகை உள்ள சிலவகை வணிகர்களுக்கு வரி செலுத்துவதினின்றும் விலக்களித்து மேற்சொன்ன சட்டத்தின் 3 (1) பிரிவின் வரம்பு நிபந்தனையைச் சேர்ந்த ( ) உட்பகுதியில் உள்ள விதித் துறையைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது.

---

* 9—4—1974-ம் மத்திய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.



1974 ஏப்ரல் 15] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

கையால் தயாரிக்கப்படும் சோப்புகளுக்கு வழங்கப்பட்ட வரி விலக்கினை அரசு ஆணையில் நீக்கியுள்ளது. இப்பொழுது 20—2—1974-லிருந்து 2 சதவீத குறைந்த வீதத்தில் பலமுனை வரி விதிக்கப்பட்டுள்ளது. முதலாவது விவர அட்டவணையில் 37-வது இனத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வகை சோப்புகளும் ஒரு முனை வரி விதிக்கப்படுவதற்குட்பட்டதாகும். குறிப்பாக, கையால் தயாரிக்கப்படும் சோப்புகளுக்கு 20—2—1974 முதல் இந்த 37-வது இனத்திலிருந்து விலக்களிக்கும் வகையில் வேறாக இனம் திருத்தப் பட்டுள்ளது.

வணிக வரிகள் குறித்த சட்டங்களையும் விதிகளையும் சீரமைப்பதற்கும் எளிதாக்குவதற்கும் சிறப்புப் பணியில் நியமிக்கப்பட்ட அதிகாரி தெரிவித்த பரிவுரையின் அடிப்படையில், மேலும் 59 பொருள்கள் 4—3—1974 முதல் பலமுனை வரி விதிப்பிலிருந்து ஒரு முனை வரி விதிப்பின் கீழ் கொண்டுவரப் பட்டன. 1974–75-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையின்போது முதலமைச்சர் இதை அறிவித்தார்.

• தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது விவர அட்டவணையைச் சேர்ந்த 70 (a), 70 (b) இனங்களின் கீழ் வரும் எல்லாவகை வெளிநாட்டு மது, வெறியம் சேர்ந்த மது ஆகியவற்றின்மீது விதிக்கப்படும் வரி வீதத்தை முறையே 24 சதவீதத்திலிருந்தும் 12 சதவீதத்திலிருந்தும் 25 சதவீதமாக உயர்த்தவும் அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 59 (1) பிரிவின்கீழ் 4—3—1974 அன்று அறிவிப்பு ஒன்றை வெளியிட்டதன் மூலம் இம்முடிவுகளுக்கு செயல் வடிவம் கொடுக்கப்பட்டது.

4—3—1974 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு, பெரும்பாலான பொருள் விளக்கங்கள் அப்படியே சட்ட வரைவில் எடுத்தாளப் பட்டுள்ளன. ஆயினும், அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடும் நோக்கத்திற்காக கீழ்க்காணும் இனங்கள் குறித்து சரக்குகள் பற்றிய பொருள் விளக்கத்தைப் பொறுத்த மட்டில் சில சொற்ப மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. அவையாவன :—

**ஆயத்த உடைகள் :** மேற்படி அறிவிப்பில், ஆயத்த உடைகள் அனைத்தையும் பலமுனை வரி விதிப்பிலிருந்து ஒருமுனை வரி விதிப்புக்கு மாற்றக் கருதப் பட்டது. ஆனால், இப்போது இந்தச் சட்ட வரைவில், குறிப்பிட்ட தயாரிப்புப் பெயரின்கீழ் விற்பனை செய்யப்படும் ஆய்த்த உடைகளுக்கு மட்டுமே ஒருமுனை

வரி விதிக்கக் கருதப்பட்டுள்ளது. தயாரிப்புப் பெயர் எதுவுமில்லாத ஆயத்த உடைகள் தொடர்ந்து பலமுனை வரி விதிப்புக்குட்பட்டதாகும். அது போலவே பாக்கு, சீவல் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், வாசனைப் பாக்குத் தூளுக்கு உயர்ந்த வீதத்தில் வரி விதிக்கப்படலாமென கருதப்பட்டது. அவ்வாறே, பாக்கு, வெற்றிலைப் பாக்கு, சீவல் ஆகியவற்றிற்கு 5 சதவீத வரியும், வாசனைப் பாக்குத் தூளுக்கு 7 சதவீத வரியும் விதிப்பதென்று தற்போது கருதப்பட்டுள்ளது.

பிரெஞ்சு காப்பி பொறுத்தவரையில், காப்பி தயாரிப்பதற்குப் பயன்படும் காப்பிப் பொடியும், சிக்கரித் தூளும் சேர்ந்ததாகும். இந்த இரண்டு பொருள்களுக்கு வரி 5½ சதவீதமே ஆகும். ஆகவே, பிரெஞ்சு காப்பிக்குப் போடப்படும் வரி விகிதத்தை 5½ சதவீதமாகக் குறைக்கக் கருதப்பட்டுள்ளது.

4—3—1974 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பில், மிட்டாய் பொருட்களும், ரொட்டிப் பொருட்களும் ஒருமுனை வரிக்கு உள்ளாக்கப்பட்டது. இந்த ரொட்டிப் பொருட்கள் மட்டும் முன்பிருந்தது போலவே பலமுனை வரி விதிப்புக்கு மாற்றுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. அப்போதுதான் ரொட்டி, பன்-ரொட்டி தயாரிக்கும் சிறு வியாபாரிகள் 50,000 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கும் வரி விலக்குச் சலுகையை முழுமையாக எய்த இயலும்.

சரக்குகள் விவரம் குறித்தும் ஒரு சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. மேற்சொன்ன சட்டத்தின் 59 (2) பிரிவைச் சேர்ந்த முதல் வரம்பு நிபந்தனையின் கீழ், மேற்சொன்ன அறிவிப்பிற்குப் பதிலாக சட்ட வரைவு ஒன்று தற்போதைய சட்டமன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்பட வேண்டும்.

4—3—1974 முதல் பலமுனை வரி விதிப்பிலிருந்து ஒருமுனை வரி விதிப்பின் கீழ் தற்போது கொண்டுவரப்பட்டுள்ள 59 பொருள்களைப் பொறுத்தவரை, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 60-வது பிரிவில் உள்ள விதித் துறையைப் போலவே தற்காலிக விதித் துறை ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. 4—3—1974 அன்று அல்லது அதற்குப் பின்னர் விற்பனை செய்யப்பட்ட அல்லது வாங்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் இத்திருத்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக முதல் தடவை விற்பனை செய்யப்பட்டதாக அல்லது வாங்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டுமென்பதே இதன் நோக்கமாகும்.





மேற்சொன்ன செயற்குறிப்பிற்குச் செயல் வடிவம் கொடுக்கும்பொருட்டு, தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1974) கொண்டுவரப்பட்டு பரிசீலனைக்காக அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

இச்சட்ட முன்வடிவை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

THIRU N. K. PALANISAMY : Sir, I move—

'That the Tamil Nadu General Sales Tax (Amendment) Bill 1974 (L.A. Bill No. 20 of 1974) be referred to a Select Committee of the House consisting of ........ Members (Names to be furnished later)'

The motion was duly seconded.

திரு. என். கே. பழனிசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். 25,000 ரூபாய்க்கு வருமானம் வரக்கூடிய டர்ன் ஓவரை 50,000 ரூபாய்க்கு உயர்த்தியதையும், பலமுனை வரிகளிலிருந்து ஒருமுனை வரியாகக் கொண்டு வந்ததைப் பற்றியும்—10, 15 வருஷ காலமாக வியாபாரிகள் மத்தியிலே இப்படிப்பட்ட ஒரு மசோதா கொண்டுவரப்பட வேண்டுமென்ற ஒரு பெரிய முயற்சியிருந்தது.

அந்த அடிப்படையிலே ‘ஒன் மேன் கமிட்டி’ போட்டு அதற்குமேலே இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்த ஒன்மேன் கமிட்டியின் சிபாரிசுகள் என்ன என்று எங்களுக்குத் தெரியவில்லை. இதை மட்டும்தான் அதில் சொல்லியிருக்கிறதா அல்லது 59 பொருள்களுக்கு மட்டும் சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் கொண்டு வரவேண்டும் மற்றப் பொருள்களின் மீது கொண்டு வரக் கூடாது என்று சொல்லியிருக்கிறதா. என்ன, என்ன சிபாரிசுகளைச் சொல்லியிருக்கிறார்கள் என்று எங்களுக்குக் கொடுத்திருந்தால் அதை நாங்கள் பரிசீலித்துப் பேசுவதற்கு முடியும். ‘சாவகாசமெல்லாம்’ இல்லை.

(மாலை 4.30)

அந்த அடிப்படையில் சொட்டை சொட்டையாக இருக்கிறது. இதையும் சரி பண்ணிக் கொண்டு வந்திருந்தால் நல்ல முறையில் இருந்திருக்கும். ஒரு நாளைக்கு 140 ரூபாய் வியாபாரம் செய்தால் 50,000 ரூபாய் டர்ன் ஓவர் வருகிறது. பருப்பு போன்றவற்றுக்கு 5 பாயிண்ட் டாக்ஸ் இருக்கிறது. சிலவற்றுக்கு 7 பாயிண்ட் டாக்ஸ் இருக்கிறது. இதற்கெல்லாம் கணக்கு வைக்க

[திரு. என். கே. பழனிசாமி] [1974 ஏப்ரல் 15

வேண்டும். பர்ச்சேஸ் பில் மட்டும் இருந்தால் போதும் என்ற முறையில் இருந்தால் போதும். கணக்கு வைக்கவேண்டுமென்று சொன்னால் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான வரியாக இருப்பதால் சிரமம் இருக்கிறது. ஒரு நாளைக்கு 140 ரூபாய்க்கு வியாபாரம் செய்கிறவன் சம்பளம் கொடுத்து ஆள் வைத்து கணக்கு வைப்பது என்பது கஷ்டமாக இருக்கும். ஆகவே, பர்ச்சேஸ் பில் மட்டும் வைத்திருந்தால் போதும் என்று செய்யவேண்டும்.

25,000 ரூபாயை 50,000 ரூபாய் என்று உயர்த்தியதால் ஒரு லட்சம் இரண்டு லட்சம் வியாபாரம் செய்கிறவர்களும் போய்க் கணக்கு எழுதிக் காண்பிப்பார்கள். அதிலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். போன மாதத்தில் 2000 சர்க்கரை மூட்டை ஈரோடு ரயில்வே பிளாட்பாரத்தில் கிடந்தது. ஆறு, ஏழு லட்சம் ரூபாய் அளவுக்கு விற்பனை வரி வசூலாகி யிருக்கவேண்டும். இரண்டு லட்சம் ரூபாய் அளவுக்குத்தான் ஆகியிருப்பதாகத் தெரிகிறது.

லாரியில் ஏராளமான சர்க்கரை போகிறது, மற்றப் பொருள்களும் போகின்றன. அவர்கள் சரியானபடி கணக்குக் கொடுக்கிறார்களா என்றால் இல்லை. திருப்பூரை எடுத்துக்கொண்டால் 2 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனை வரி வரும். அங்கு 9 ஆபிசர்கள்தான் இருக்கிறார்கள். இப்போது அதிகப் படியான ஆபிசர்கள் இல்லாததால் கணக்கு எழுத வேண்டிய வேலைதான் இருக்கிறது. செக் பண்ணும் நிலைமை இல்லை. ஸ்டாஃப் இன்க்ரீஸ் பண்ணி அதிகப்படி செக் பண்ணும் முறையை ஏற்படுத்த வேண்டும். பில் கொடுத்தால் 157 ரூபாய் என்பதைப் பில் இல்லாமல் 150 ரூபாய். விட்டுக்கூட பில் இல்லாமல் வாங்குவதுதானே என்று கேட்கும் நிலைமை பரவலாகப் போகிறது. இந்த வரி ஏய்ப்பைத் தடுக்க வேண்டும். ஏராளமான வரி ஏய்ப்பு இருக் கிறது. ஆந்திராவில் தீவிரமாக ஒவ்வொரு கடைக்கும் போய் காலையில் ஸ்டாக் எடுக்கிறார்கள். எது எவ்வளவு விற்பனையாகிறது என்று கணக்குப் பார்த்து தீவிரமாக வரி ஏய்ப்பைத் தடுக்கிறார்கள். அந்த விதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ப்ரோக்கர்களால், தரகர்களுக்கெல்லாம் வரி போட்டிருப்பது சரியல்ல. அது வேலை செய்யக்கூடியவர்கள் எடுத்துக் கொண்டு போவது.

டைனிங் டேபிள் போட்டுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டு இன்று சேர்க்கப் பட்டிருக்கிறது.

சில்க்குக்கு சிங்கிள் பாயின்ட், டெரிலினுக்கு வரியே இல்லை. சில்க்கை விட டெரிலின் விலை அதிகம்.



1974 ஏப்ரல் 15] [திரு. என். கே. பழனிசாமி]

நூலுக்கு வரி, துணிக்கு வரி இல்லை.

திருப்பூரில் 200 பனியன் மெஷின்கள், 300 பனியன் மெஷின்கள் வைத்திருக் கிறார்கள். நூலாக அனுப்பினால் வரி கட்ட வேண்டும். துணியாக அனுப்பினால் வரி இல்லை. ஆகவே, நூலுக்கு வரி ஏமாற்றுகிறார்கள். துணிக்கு வரி விலக்கு. சர்க்கார் ஏன் துணிக்கு வரி விலக்கு கொடுத்தது? 3 பர்சன்ட் இருந்தால் 'சி' பார்ம் வாங்க வேண்டும், கொஞ்சம் குறைந்திருந்தாலும் வாங்க வேண்டிய தில்லை. மூன்று பர்சன்ட் போட்டால் தொழில் பாதிக்கும்.

விஜிடபிள் மேல் வரி எடுத்தார்கள். ஆனால் பல மடங்கு விலை ஏறியிருக் கிறது. வரி இருந்தபோது 60 காசு; வரி எடுத்தவுடன் 1½ ரூபாய். கிறகு 45 மடங்கு விலை ஏறியிருக்கிறது. வரியை எடுத்ததால் என்ன பயன்? சர்க் கார் தலையிட்டு பிரஷர் கொடுத்து விலையைக் குறைக்க ஏற்பாடு செய்யக் கூடாதா?

பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட் என்பதிலே வியாபாரிகள் மத்தியிலே பயம். இருக்கிறது. ஒரு நாளைக்கு 1½ டின் எண்ணெய் விற்றதைப் பார்த்துவிட்டு 1½ டின் வீதம் வருஷம் பூராவும் எத்தனை டின் விற்றிருக்கும் என்று கணக் குப் போடுகிறார்கள். சிலர் வருஷம் பூராவுமே 1½ டின்தான் விற்கிறார்கள். பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மென்ட் சரியான முறையில் இருக்க வேண்டும். எ.சி.டி.ஓ., டி.சி.டி.ஓ. நிர்ணயித்தது அப்பெலட் ட்ரிப்யூனலுக்கு வந்தாலும் அப்படியே நிலைக்கிறது. அப்பெலெட் ட்ரிப்யூனலும் டிப்பார்ட்மென்ட் ஆளாக இருக்கிறார்கள். நடுநிலைமை ஜட்ஜாக இருக்க வேண்டும்.

சிட்டி அர்பன் லான்ட் டாக்ஸ் ட்ரிப்யூனல் மாதிரி இருக்க வேண்டும். அந்த மாதிரி எல்லாம் திருத்துவதற்கு இதை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Hon. Speaker, Sir, I move the following amendments to Clause 8. In Clause 8, exclude items 77 and 82, oil cakes . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் கிளாஸ் வரும்பொழுது மூவ் பண்ணலாம்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I welcome the change of procedure in the collection of sales tax from multi-point to single-point for which the traders have been fighting for many years. While speaking on this, I have to point out certain lacunae.

[Thiru K. M. Subramaniam] [1974 ஏப்ரல் 15

For example, the Government has been kind enough to exempt animal fodder from sales-tax but they have not considered oil cakes. The oil cake is also animal fodder. Oil cake is not only animal fodder but also plant fodder. It is mainly used for fields as manure and also as animal fodder. My request is that this oil cake must also be exempted from this sales tax which is after all $3\frac{1}{2}$ per cent.

So far as the second item is concerned, I find charcoal and Leco manufactured by the Neyveli Corporation of India has been included. What I would like to say is this. The poorest class of people generally use firewood and charcoal if there is shortage of kerosene. I therefore request that charcoal can also be exempted and other things can be there, if necessary.

Then I would like to refer to the third item, namely, medicines. Under medicines, we find a number of items. It is unfortunate in this country in spite of twenty years of independence, more than 60 per cent of medicines are manufactured by foreign firms. Unfortunately, the prices of medicines are going up like anything. Therefore, I earnestly request the Government to see that instead of 7 per cent on drugs the sales tax be reduced at least to $3\frac{1}{2}$ per cent. That will help the middle class people to a considerable extent.

I have already pointed out that sales tax on arishtams which are used as medicines should be reduced. Now the tax levied on arishtams is very high. The Government could reduce it to 7 per cent or $5\frac{1}{2}$ per cent as in the case of other medicines. If arishtams are used as Liquor or for liquor purposes, I do not mind it being charged at 20 or 30 or even cent per cent. For some medicines, arishtams are used in Adayar by a druggist and also by other medicine manufacturers. I think the Government can charge $3\frac{1}{2}$ per cent sales tax on such arishtams.

I therefore request that sales tax on these four items, oil cakes, charcoal, medicines and arishtams should be exempted from sales tax. I am sure the Government will not find it difficult to grant my requests and see that these items are exempted from sales tax. They are all very desirable exemptions.

Thank you, Sir.



1974 ஏப்ரல் 15]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்று சில காரணங்களைச் சொன்னார்கள். அதற்குப் பதில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேஸ்ட் ஆப் அஸ்ஸெஸ்மென்ட் என்பது ஒரு அதிகாரி முடிவு செய்துவிட்டால் கடைசிவரையில் அப்படியே இருக்கிறது என்று சொன்னார்கள். குறிப்பாக, ட்ரிப்யூனலில் இருக்கிற அதிகாரி டெப்யூட்டி கமிஷனர் அளவில் உள்ள அதிகாரி ஒருவர்தான் நியமிக்கப்படுகிறார்கள். ஆகவே இந்தக் குறைபாடு இல்லை. ஆந்திராவில் இருப்பதுபோல் நாமும் நினைத்தாலும் கடைகளுக்குச் சென்று விற்பனை வரி அதிகாரிகள் வருகிற பொருள்களைக் கணக்கிட்டுப் பார்க்கலாம் என்று சொன்னார்கள்.

திருச்சி, சேலம் போன்ற இடங்களில் அதிகாரிகள் போடப்பட்டு அன்றாடம் மார்க்கெட்டுக்கு வந்து சென்று வருகிற பொருள்களை கணக்கிட்டு வரி விதிப்புக்கு அனுப்பிக் கொடுக்கிறார்கள். எந்த அளவிற்கு முடிகிறதோ அந்த அளவிற்கு உண்மையாக கணித்து வரியை வசூலிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்கிறார்கள். வரி ஏய்ப்பில்லாமல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். அது சுலபமல்லவென்றாலும்தான். அடிக்கடி அதிகாரிகள் சென்று வியாபாரிகளுக்கு தொல்லை ஏற்பட்டுவிடக்கூடாது என்ற கருத்தும் இருக்கிறது. இருந்தாலும் கொஞ்சம் கடுமையான முறையில் அரசுக்கு வரவேண்டிய வரி வரவில்லையென்ற அளவிற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

திருப்பூர் பனியனுக்கு வரி போடப்பட்டிருக்கிறது, துணிக்கு வரி போடவில்லை என்று சொன்னார்கள். அதைப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். பரிசீலித்த பொழுதான், பட்டியலில் இடம் இருந்தால் துணிக்குக்கூட வரி விதிக்கலாம் என்ற எண்ணம் இருக்கிறது.

திருப்பூர் பனியன் பற்றிச் சொன்னார்கள். 'ஸி' பார்ம் வாங்குவதில் உள்ள கஷ்டம் பற்றிச் சொன்னார்கள். மூன்று சதவிகிதம் என்பதை குறைக்கவேண்டுமென்று சொன்னார்கள். அரசாங்கம் பரிசீலித்து வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிற பனியன்களுக்கு ஏற்கனவே போடப்பட்டிருக்கிற வரியைக் குறைத்து $2\frac{1}{2}$ சதவிகிதம் இப்போது விதிக்கப்பட்டிருக்கிறது. திருப்பூர் வியாபாரிகளுக்கு அது ஒரு நல்ல முடிவாக இருக்கும். உள்நாட்டில் விற்பனை செய்வதற்கு சட்டத்தில் போடப்பட்டிருக்கிற வரியைத்தான் பெற்றுக்கொண்டிருக்கிறோம். வியாபாரிகளும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, ஹாண்ட்மேட் ஸோப் பற்றிச் சொன்னார்கள். ஹாண்ட் மேட் ஸோப்-க்கு பலமுனை விற்பனை வரி விதிக்கப்பட்டது. இதில் அது ஒருமுனை விற்பனை வரிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. அப்படி உள்ளாக்கப்பட்டால் அதைத் தயாரிப்பவர்களுக்கு கஷ்டம் ஏற்படும் என்று சொன்னார்கள். அது மல்டி பாயிண்ட் டாக்ஸ்க்கு உட்பட்டிருக்கிறது. ரூ. 50,000 வரையில் டேர்ன் ஓவர் இருந்தால் விதிவிலக்கு உண்டு. இந்த வரி விதிப்பில் இருந்த சலுகை அளிக்கும் விதத்தில் பலமுனை விற்பனை வரிக்கு உள்ளாக்கப்பட்டு 50,000 வரையில் டேர்ன் ஓவர் இருந்தால் வரி விதிப்பு இல்லை என்ற நிலைமைதான் இருக்கிறது.

அடுத்தபடியாக தேங்காய்க்கு வரி போடப்பட்டு நீக்கப்பட்ட பிறகுகூட விலை குறையவில்லை என்று திரு. பழனிசாமி அவர்கள் கூறினார்கள். ஒன் மான் கமிஷன் ரிப்போர்ட் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். முக்கியமான சிபார்சுகளை இந்த அரசு சட்டம் மூலம் நிறைவேற்ற முன்வந்திருக்கிறது.

அடுத்து, திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் அரிஷ்டம் பற்றி மிக அக்கறை எடுத்துச் சொன்னார்கள். என்னிடம் சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்களிடம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கான நிலையைப் பரிசீலித்து ஜென்யூயின் ப்ரொட்யூசர்களுக்கு, மருத்துவ நிலையங்களுக்கு சப்ளை செய்வதற்கு சலுகை கொடுக்கலாமா என்பதைப்பற்றி குறிப்பிட்டார்கள். மருத்துவத் துறை அதிகாரிகளும் வணிக வரித் துறை அதிகாரிகளும் கொண்டு பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. விரைவில் முடிவு செய்யப்படும்.

மருந்து வகைகளுக்கு எல்லாம் போடப்பட்டிருக்கும் வரி அதிகம் என்று சொன்னார்கள். அதிகம் இல்லை. மொத்த வியாபாரிகளுக்கு 3½ சதவிகிதம் என்றும் சில்லறை வியாபாரிகளுக்கு 3½ சதவிகிதம், ஆக 7 சதவிகிதம் என்றிருக்கிறது. ஒருமுனை வரிவிதிப்பதால் அதிகக் கஷ்டம் ஏற்படும் என்று கருதவில்லை.

ஆயில் கேக் பற்றி பரிசீலிக்கப் பார்க்கிறோம். எந்தவிதமான சலுகையும் கொடுப்பதற்கு முடியவில்லையென்று கூறி இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. எம். சுப்பிரமணியம் :** சரி.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இப்போது விறகுக்கு மட்டும்தான் சலுகை இருக்கிறது. கரிக்கு கொடுப்பதற்கு முடியவில்லை.





**திரு. பெ. சீனிவாசன் :** அரிஷ்டம் என்ற பெயரால் மார்க்கெட்டில் விற்பது எதுவும் ஜென்யூயின் சரக்கல்ல. எழுத்தாழ மது வகைகளாகத்தான் விற்கப்படுகிறது. அதற்கு க்வாலிட்டி கண்ட்ரோல் வருகிற வரையில் அதைத் தடை செய்ய உத்தேசித்தால் நலம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்த அரிஷ்டங்கள் எல்லாம் இந்த வரி செலுத்தினால்தான் விற்கப்படமுடியும். சரியான இடத்தில் தயாரிக்கப்படுகிற அரிஷ்டங்கள். அரசாங்கத்தின் சார்பில் உள்ள சில நிலையங்கள் அல்லது கூட்டுறவு முறையில் உள்ள நிலையங்கள், மருத்துவ மனைகளுக்கு வழங்கப்படுகிற அரிஷ்டங்கள் என்று இப்படி எவை எவை பாதுகாப்பு பெறவேண்டுமோ அவைகளுக்கு மட்டும் இந்த உயர்ந்த வரியிலிருந்து குறைவாக வரி விதிக்கும் பழைய முறைப்படி அந்தப் பாதுகாப்பு கிடைக்கும். மட்டமான சரக்குகளுக்கு அதிகமான வரி நிச்சயமாக இருக்கும்.

திரு. என். கே. பழனிசாமி அவர்களால் முன்மொழியப்பட்ட திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

*Clause 8.*

MR. SPEAKER : The question is—

"That Clause 8 do stand part of the Bill".

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir, I move the following amendment—

In Clause 8 (iv) of the Bill, *for* items 88 and 89, *substitute* the following items, namely :—

| | | | |
|---|---|---|---|
| '88 | **Cashewnut and kernel.** | **At the point of first purchase in the State.** | 5 |
| 89 | **Sewing machines and embroidery machines and parts and accessories thereof,** | **At the point of first sale in the State,** | 5' |

THIRU N. K. PALANISAMY: Sir, I move the following amendment—

"(i) In clause 8 (iv) in item 80 (b), delete the words " their brokens and flour.

(ii) Delete item 135."

The amendment was duly seconded.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, பிளேக்கன் பாலுக்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டும்.

[illegible] 15 சதவிகிதம் போட்டிருக்கிறீர்கள். முதலில் 7½ சதவிகிதம் என்றிருந்தது. இப்போது 15 சதவிகிதம் என்றிருக்கிறது. அது பணக்காரர்கள் உபயோகிப்பது. இதை ஏன் அதிகப்படுத்தக்கூடாது? வெளி நாடுகளில் இருந்து வந்துதான் விற்கவேண்டும். ஆகவே அதற்கு அதிக வரி போடுவதில் ஆட்சேபணை என்ன இருக்கிறது? பெரிய மனிதர்கள் உபயோகிப்பது அது.

பின்னர், இந்த பிளேக்கன் பால், குருணை, பாசிப்பயிறு குருணை, பருப்புக் குருணை இவற்றிற்கு எல்லாம் வரிபோடுவது சரியல்ல.

அரிஷ்டம் பெரிய கம்பெனிகளில் இருந்து வாங்கும்போது குறைத்து வரி போடலாம். முப்பது சதவிகிதம் என்பதை வேண்டுமானால் குறைக்கலாம். சாராயம் கலந்து விற்பதற்கு அதை வேறுவிதமாக மேல் செய்யவேண்டும். ஒழுங்காக இருக்கிற கம்பெனிகளுக்கு லைசென்ஸ் கொடுத்து அவர்களுக்கு வேண்டுமானால் சிங்கிள் பாயிண்ட் வரி போடலாம். முப்பது சதவிகிதம் என்பது ஜாஸ்தி.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மேல்நாட்டு ஒயினுக்கு அதிகம் போட வேண்டுமென்று சொன்னார்கள். இந்த மசோதாவிலேயே அதிகப் படுத்தப்பட்டு இருக்கிறது.

இன்னொரு முக்கியமான பிரச்னையையும் இந்த சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நம்முடைய அரசு இப்போது ஆகாய விமானத்திற்குப் போடப்படும் எரி எண்ணெய்க்கு வரி 12 பைசா என்று இருப்பதை 15 பைசா என்று அதிகப்படுத்துகிறோம். அப்படி அதிகப்படுத்தி யிருப்பது அதிகம் என்று உலக நாடுகளின் விமானப் போக்குவரத்துக்கழகம் சொல்கிறதாம். மத்திய அரசாங்கம் இதைக் குறைக்கவேண்டும். பழையபடி



செய்யவேண்டுமென்று கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். மற்ற மாநிலங்கள் எப்படி நடந்து கொள்கிறார்களோ அப்படி நடந்து கொள்வதாக மத்திய அரசுக்குத் தெரிவிப்பதாக இருக்கிறோம். இந்த வரியை விட்டுக்கொடுத்தால் 54 லட்சம் ரூபாய் நஷ்டமாகும் என்று கணக்கு இருக்கிறது. ஆகவே, இந்த விஷயத்தை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி அவர்கள் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 8, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டது.

பிரிவு 9 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1974) திருத்தப் பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று கேட்டுக்கொள்கிறேன்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (இ) தமிழ் நாடு, 1974-ம ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1974).

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

* 5—4—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

[திரு. மு. கண்ணப்பன்] [1974 ஏப்ரல் 15

1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 22/1959) 116-வது பிரிவு, இச்சட்டத்தின் செயல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு விதிகளை இயற்றும் அதிகாரத்தை அரசுக்கு அளிக்கிறது. மேற்சொன்ன பிரிவின் (2) உட்பிரிவு, அரசு விதிகள் இயற்ற வேண்டிய குறிப்பிட்ட வகைகளைச் சேர்ந்த நேர்வுகளைக் குறிப்பிடுகிறது. சமய நிறுவனங்களில் காணிக்கைகளாகச் செலுத்தப்படும் முடி, ஏனைய பொருட்கள் உட்பட இயங்கும் சொத்துக்கள் (அரசு வணிகக் கழகம் உட்பட) எந்த நபர்களுக்கு, எந்த முறையில், எந்த நிபந்தனைகளுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டு சமய நிறுவனங்களால் விற்பனை செய்யப்படலாம் அல்லது வேறு வகையில் ஒழுங்கை செய்யப்படலாம் என்பது குறித்து விதிகளில் வகை செய்வது அவசியம் எனக் கருதப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இம்மாமன்றத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, பழனியில் இருக்கும் முடிகளையெல்லாம் தனிப்பட்ட கான்டிராக்டர்கள், எடுத்து நேரடியாக வெளிநாட்டிற்கு அனுப்பி வியாபாரம் செய்து வந்தார்கள். இரண்டு வருஷத்திற்கு முன்பு எந்தக் காரணத்தினால் அந்த வியாபாரத்தை நிறுத்தினார்கள்? இரண்டு வருஷ காலமாக எந்த அளவுக்கு நமக்கு லாபம் குறைகிறது? சர்க்காரே அந்த விற்பனையை எடுத்துக்கொள்வதால் அதிக லாபம் வருமா? அதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, கோவில்களுக்கு இருக்கும் மற்றச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கு ஆணையருக்கு ஏற்கனவே அதிகாரம் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் காணிக்கையாக வரும் தலைமுடியைப் பற்றி குறிப்பிடாததால் சில கோவில்களில் விற்பனை செய்யும்போது ஆணையரின் விற்பனை அங்கீகாரம் பெறாமல் அந்தக் காரியத்தைச் செய்து விட்டார்கள். ஆகவே, ஆணையருக்கு அந்த முழு அதிகாரம், தலைமுடி காணிக்கையையும் விற்பனை செய்யும் அதிகாரம் கொடுக்கவேண்டுமென்ற வகையில் இந்தத் திருத்தத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம்.

பழனி கோவிலைப் பொறுத்தவரையில் 4-5 ஆண்டுகள் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் விற்பனை செய்து வந்தார்கள். ஆனால் இயற்கை தலைமுடியை விட செயற்கை தலைமுடிக்கு வெளி நாட்டில் கிராக்கி ஏற்பட்டதால் ஸ்டேட்



1974 ஏப்ரல் 15] [திரு. மு. கண்ணப்பன்]

டிரேடிங் கார்ப்பரேஷன் நம்முடைய தலைமுடியை வாங்குவதை நிறுத்தி விட்டார்கள். இரண்டு மூன்று ஆண்டுகளாக தலைமுடி விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடந்தது. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னால் அதை ஒட்டு மொத்தமாக சில நபர்களுக்கு ஏலத்தில் விடப்பட்டு, விற்பனை செய்யப்பட்டது. அந்த விற்பனை குறைவாக இருக்கிறது என்றாலும், அந்த விற்பனையை முறைப் படுத்தவேண்டுமென்பதற்காக திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, இந்தத் திருத்தத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1974) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முனவடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஈ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1974.)

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** பேரவைத் தலைவரவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

* 9—4—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

[திரு. மு. கண்ணப்பன்] [1974 ஏப்ரல் 15

சம்பந்தப்பட்ட சமய நிறுவனங்களில் அறங்காவலர்கள் அந்த நிறுவனங்களின் கணக்குகள் தணிக்கை செய்யப்படுவதற்காக அவற்றைக் கொணர வேண்டுமென்று தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 22/1959) 87-வது பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவு வகை செய்கிறது. ஆயினும், கணக்குகளைத் தணிக்கை செய்வதற்குக் கொண்டு வந்து காட்டுவதற்கு காலவரையறை எதுவும் நிச்சயிக்கப்படவில்லை.

கணக்குகளைக் கொண்டு வந்து காண்பிப்பதற்கு சட்டப்படி காலவரையறை எதுவும் நிச்சயிக்கப்படாததை ஒரு சில அறங்காவலர்கள் பயன்படுத்திக் கொண்டு கணக்குகளைக் கொண்டு வந்து காட்டக் காலதாமதம் செய்யலாம் அல்லது கொண்டு வந்து காட்டாமல் வைக்கலாம் எனறும், எனவே கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காகக் கொண்டு வந்து காட்டுவதற்கு காலவரையறை நிச்சயிப்பது மிகவும் அவசியம் என்றும் கருதப்படுகிறது.

எனவே, கணக்குகள், பதிவேடுகள முதலியவற்றை தணிக்கைக்காக தணிக்கையாளர்களுக்கு சமய நிறுவனத்தின் அறங்காவலர்கள் அனுப்புவதற்கான காலவரையறையை நிச்சயிப்பதற்காக விதிகள் இயற்ற அதிகாரம் மேற்கொள்ளும் பொருட்டு, மேற்படி சட்டத்தின் 87-வது பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவைத் திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பிரேரணையை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, "தமிழ் நாடு 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1974) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.



1974 ஏப்ரல் 15]

## 7. அறிவிப்பு.

### தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு.

(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1974)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1974) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (உ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு 22/1974).

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பேரவைத் தலைவரவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன் மொழிகிறேன்

தமிழ்நாடு (மாற்றப்பட்ட பகுதி) 1959-ம் ஆண்டு இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத தேவஸ்வங்கள் சட்டத்தினையொட்டி (தமிழ் நாடு சட்டம் 30/1959) மாற்றப்பட்ட பகுதியிலுள்ள, அதாவது திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் உள்ள இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத தேவஸ்வங்களையும், அவற்றின் சொத்துக்கள், நிதிகள் ஆகியவற்றையும் நிர்வகிக்க, மேற்பார்வையிட அவற்றின் மீது கட்டுப்பாடு செலுத்துவதற்காக, மாநிலங்கள் சீரமைக்கப்பட்ட பின்னர், கன்னியாகுமரி தேவஸ்வக் குழு அமைக்கப்பட்டது. மாற்றப்பட்ட பகுதிகளில் 458 இணைக்கப்பட்ட தேவஸ்வங்களும், 32 இணைக்கப்படாத தேவஸ்வங்களும் உள்ளன. தேவஸ்வக் குழுவின் உறுப்பினர்களிடையே ஒத்துழைப்பு இல்லை என்று இந்து சமய அறநிலைய ஆணையாளர் தெரிவித்துள்ளார். இதன் விளைவாக, தேவஸ்வங்களின் நிர்வாகம் பாதிக்கப்பட்டுள்ளது.

---

* 9—4—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, மாற்றப்பட்ட பகுதியிலுள்ள தேவஸ்வங்களையும், அவற்றின் சொத்துக்களையும் நிதிகளையும் நிர்வகிப்பதற்காக 5 பேருக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டு ஒரு குழுவை நியமிப்பதற்கான ஏற்பாட்டுடன், தமிழ் நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 22/1959) மாற்றப்பட்ட பகுதிக்கும் நீட்டிக்கப்பட வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது.

அறநிலையத்துறை சட்டத்தின் 36-வது பிரிவில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுடன், ஏழையாக உள்ள போதிய பண வசதியற்ற இந்துக்களுக்கு திருமணங்கள் நடத்துவதற்காகவும் சமய நிறுவனங்களின் உபரி நிதிகளிலிருந்து நிதி ஒதுக்கம் செய்வதற்கு சட்டத்தில் விதித்துறை செய்யக் கருதப்பட்டுள்ளது.

மடங்களில் நிர்வாகத்தின்கீழுள்ள கோயில்களுக்கு நிர்வாக அதிகாரிகளை நியமிக்கவும் அரசு முடிவு எடுத்துள்ளது. அந்த நிர்வாக அதிகாரிகள் மடங்களைச் சேர்ந்த அறங்காவலர்களின் நிர்வாகத்தின் கீழ் பணியாற்றுவர்.

மேற்சொன்ன நோக்கங்களை எய்த இச்சட்ட முன்வடிவு விழைகிறது.

இச்சட்ட முன்வடிவினை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5.00)

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் கூறியதுபோல நமது நாட்டில் மொழிவழி மாகாணங்கள் அமைக்கப்பட்டதன் காரணமாக கன்னியாகுமரி மாவட்டமும், திருநெல்வேலி ஜில்லாவில் செங்கோட்டை தாலுகாவின் ஒரு பகுதியும் தமிழகத்தோடு சேர்க்கப்பட்டது. ஆனால் அந்தப் பகுதிகள் திரு-கொச்சியின் ஒரு பகுதியாக இருந்த காலத்தில் அந்த அரசின் கீழ் இருந்த சட்டதிட்டப்படி தேவஸ்வம் போர்டு செயல்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால் தமிழகத்தோடு சேர்த்துக்கொள்ளப்பட்டும்கூட தமிழகத்தில் உள்ள அற நிலைய சட்டத்தின்படி தேவஸ்வம்கள் செயல்படுவதற்குள்ள வழிவகை இல்லாத காரணத்தினால், ஸ்டேட் ரீ ஆர்கனைசேஷன் ஆக்டில் கூட அந்த தேவஸ்வம்களை பராமரிப்பது, நடத்திச் செல்வதற்கான வழி வகைகள் பிரத்யேகமாக செய்யப்பட்டிருந்த காரணத்தினால், தமிழ் நாடு அறநிலைய சட்டம் அந்தப் பகுதிகளுக்கு



விஸ்தரிக்கப்படாமல் இதுவரையில் இருக்க வேண்டியிருந்தது. அந்தப் பகுதியிலுள்ள தேவஸ்வம்கள் அதிக சிறப்பாக செயல்படுவதற்கு வழி இல்லாமல் சிக்கலான சூழ்நிலை இருந்ததை நாங்கள் அறிவோம்.

ஆகவேதான், இந்த தேவஸ்வம் போர்டை கலைத்துவிட்டு, தமிழ் நாடு அறநிலைய சட்டத்தின்படி போர்டு அமைக்கவேண்டும், அந்த தேவஸ்வம்களை இந்த ஆட்சிக்கு உட்படுத்தவேண்டும் என்று பல தருணங்களில் இந்தச் சட்டமன்றத்தில் எங்கள் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ராஜமான்யம் ஒழிக்கப்பட்டதை ஒட்டி அன்றையதினம் செயல்பட்டுக் கொண்டிருந்த அறநிலையக் குழுவுக்கு ஒரு உறுப்பினரை நியமிக்கும் உரிமையை திருவாங்கூர் ராஜபிரமுகர் இழந்துவிட்ட காரணத்தினால், அந்த நிலையில் சற்று மாறுதல் ஏற்பட்டது.

ஆக, இந்த அவையில் வைக்கப்பட்டிருக்கிற இந்த மசோதாவின் அடிப்படையில் புதிய குழுவை அமைக்க இருக்கிறோம். அப்படி அமைக்கின்ற பொழுது அரசு இந்தக் குழுவுக்கு அங்கே இருக்கிற தேவஸ்வம்கள் சிறந்த முறையில் செயல்படுவதற்குரிய தகுதி வாய்ந்த உறுப்பினர்களை நியமிக்க வேண்டும். வேறு நோக்கத்தில், தேவஸ்வம் நோக்கம் அல்லாது, அரசியல் நோக்கம் கொண்டு அதிலே உறுப்பினர்களை ஈடுபடுத்தக்கூடாது என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்பொழுது செயல்பட்டுக்கொண்டிருக்கிற குழுவானது அமைச்சர் அவர்கள் கூறியதுபோல தமிழ் நாட்டு அறநிலையத் துறையோடு ஒத்துழைக்காத காரணத்தினால் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என்பதனையும் நாங்கள் ஒத்துக் கொண்டிருக்கிறோம். ஆக, அதன் காரணமாக என்னவென்று சொன்னால், நியமிக்கப்பட்ட அங்கத்தினர்கள் தேவஸ்வங்களில் நம்பிக்கை உள்ளவர்களாக இல்லாத காரணத்தினால், அரசியல் அடிப்படையில் இருப்பவர்களை நியமித்த காரணத்தினால், அவர்கள் எந்த அளவுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமோ அந்த அளவுக்கு தராத சூழ்நிலையில் தேவஸ்வம்கள் செயல்பட்டுக்கொண்டிருந்தன என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆக, இனி நியமிக்க இருக்கின்ற குழு, தேவஸ்வம் நல்ல முறையில் செயல்படக் கூடிய முறையில் அமைய வேண்டும் என்பதை இந்தத் தருணத்தில் கூறிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்பொழுது தேவஸ்வம் எந்த நோக்கத்தோடு செயல்படுகிறதோ அதோடுகூட, தேவஸ்வத்தில் வருகிற வருவாயில் ஒரு பகுதியை ஏழைகளுக்குக் கலியாணம் செய்விப்பதில் செலவழிக்கவேண்டும் என்று சொல்லி அதற்கு வழிவகை இந்த

மசோதாவில் செய்யப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத்தக்க அம்சம்தான். ஆனால், இப்பொழுது அந்தப் பகுதிகளில் இருக்கிற தேவஸ்வங்களிலிருந்து கிடைக்கின்ற வருவாயைக் கொண்டு சில கல்லூரிகளை நடத்துவது, மருந்தகங்களை நடத்துவது போன்ற பணிகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இப்பொழுது தேவஸ்வம் நடத்திக்கொண்டிருக்கிற கல்லூரியினுடைய நிலைமையைப்பற்றி நாங்கள் இதற்கு முன்னதாக எடுத்துக் கூறியிருக்கிறோம். கல்வி அமைச்சர் அவர்கள்கூட இது சம்பந்தமாக அறநிலைய அமைச்சர் அவர்களுடன் கலந்து ஆலோசித்து ஆவன செய்யலாம் என்ற வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்.

தேவஸ்வத்திற்கு எவ்வளவு பண வசதி இருந்தாலும் கூட, அந்த தேவிகுமாரி கல்லூரி, தேவஸ்வத்தால் நடத்தப்படுகிற கல்லூரி சிறந்த முறையில் நடத்தப்படவில்லை. கல்குளம், விளவங்கோடு பகுதியில் ஏறத்தாழ 8 லட்சம் ஜனத்தொகை இருக்கிறது. அங்கே தேவஸ்வம் நடத்துகிற ஒரு மகளிர் கல்லூரி இருக்கிறது. ஏறத்தாழ 600, 700 மாணவியர்கள் படிக்க வாய்ப்பு இருக்கிற கல்லூரியில் இட வசதி குறைவினாலும். நிர்வாகக் கோளாறினால் இப்பொழுது ஏறத்தாழ 300 மாணவியர்களைக் கொண்டுதான் அது செயல்படுகிறது. ஆக, அறநிலைய அமைச்சர் அவர்களை இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன். இந்த தேவஸ்வம் போர்டு நடத்துகின்ற தேவிகுமாரி கல்லூரியை சிறந்த முறையில் நடத்துவதற்கு தகுதியுள்ள தேவஸ்வம் போர்டு அமைக்கப்பட வேண்டும், அதற்கு ஆவன செய்யப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த மசோதாவில் அங்கு இருக்கிற ஊழியர்களைப்பற்றி ஒரு கிளாஸ் இருக்கிறது. அதாவது கிளாஸ் 15,

Sub-clause (i) of Clause 15 states—

" Government shall have the power to terminate the services of such person after giving him one calender month's notice or paying him one month's pav in lieu of such notice ".

நீண்ட நாட்களாக தேவஸ்வத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கிற ஊழியர்களை ஏன் டெர்மினேட் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்பது எனக்குப் புரியவில்லை. ஒருவேளை இதுவரையிலும் அங்கிருந்த சூழ்நிலையின் காரணமாக சீர்கேடுகள் இருந்திருக்கலாம். ஆனால் புதியதாக அமைய இருக்கிற அமைப்பில் நிச்சயம் ஊழியர்கள் சிறந்த முறையில் சேவை செய்ய தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு மாத நோட்டீஸ் கொடுத்து வீட்டிற்கு அனுப்புவது என்று சொன்னால் நிச்சயம் விரும்பத்தக்கது அல்ல. அவர்களுடைய நீண்ட கால சேவையை எண்ணிப் பார்க்க வேண்டும்.



அதுமட்டுமல்ல. அவர்கள் தேவஸ்வம் ஊழியர்கள் என்று சொன்னால் சாதாரண அரசாங்க ஊழியர்கள் போன்று அதிக வருவாயோடு சேவை செய்யவில்லை, அதிக ஊதியம் பெற்று உழைக்கவில்லை. குறைந்த ஊதியத்தைப் பெற்றுக்கொண்டுதான் அந்தப் பணிகளை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எஞ்சியிருக்கிற சிறிய கால சர்வீசில் அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து அவர்களை வீட்டுக்கு அனுப்பாமல் பாதுகாக்க வேண்டிய கடமை இந்த அரசுக்கு இருக்கிறது.

அதுமட்டுமல்ல. இந்தத் தருணத்தில் இன்னொன்றையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒருவேளை அவர்களுடைய பணி பாதுகாப்பு எஸ்.ஆர்.வி. ஆக்டிங் கூட ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஆக, அவர்களை வீட்டிற்கு அனுப்புவது என்று சொன்னால் அது எளிதான காரியம் அல்ல. அவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போனால்கூட அவர்களுக்கு பாதுகாப்பு கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த கிளாஸ் தேவையற்றது. ஒரு வேளை இந்த மசோதாவில் இந்த கிளாஸ் இடம் பெற்றாலும், அதை அமல்படுத்தாமல் ஊழியர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அளவோடு இந்த மசோதாவை வரவேற்று அமர்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன்.

இந்த மசோதாவிலே அங்கே தனியாக ஒரு தேவஸ்வம் போர்டு ஏற்படுத்தப் படவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய போர்டினுடைய அதிகாரத்தை அங்கே எக்ஸ்டெண்டு பண்ணுவதற்குப் பதிலாக அங்கே தனியாக போர்டைப் போடவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கேரள அரசாங்கத்திலிருந்து ரூ. 40 லட்சம் வருகிறது. நாம் கிட்டத்தட்ட 13 லட்சம் ரூபாய் கொடுக்கிறோம் என்று நினைக்கிறேன்.

இவ்வளவு பணத்தையும் அவர்கள் எப்படி செலவு செய்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். இரண்டு, மூன்று இடங்களில் பள்ளி, கல்லூரிகளை நடத்தி வைத்து அவர்கள் பணத்தைச் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். நிர்வாகம் ரொம்ப மோசம். இந்த மசோதா கொண்டுவரப்படுவதற்கான காரணங்கள் சிலவற்றைப்பற்றி வெளிப்படையாகச் சொன்னால் நலமாக இருக்கும். ரொம்ப மோசமான நிர்வாகம். வெகு நாட்களுக்கு முன்னால் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு, நம்முடைய போர்டின் மூலமாக நிர்வாகம் நடத்தப்பட்டிருக்கவேண்டும்.

அவர்கள் கொடுக்கக்கூடிய பணத்தை முழுவதையும் நிறுத்திவிடுவார்களோ என்னவோ தெரியாது. அவர்கள் பணத்தை சாப்பிடுகிறார்கள். அந்த நிலைமையில் சத்திரம் வைத்து அவர்களுக்கு சும்மாக பணத்தைக் கொடுத்து விடலாம். இந்த மசோதாவைக் கொண்டு வருவது நல்லது. எந்தவிதமான ஊழல்கள் நடைபெறுகின்றன என்பது ஜனங்களுக்குத் தெரிய வேண்டியது அவசியம். அந்த மாதிரி ஊழல்கள் மறுபடியும் நடக்காமல் தகுந்த ஏற்பாடாக இருக்க வேண்டும். அதற்கென்று தனியாக ஒரு தேவஸ்வம் போர்டு ஏற்படுத்தாமல், நம்முடைய போர்டே நேரடியாக அந்த நிர்வாகத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: I agree with the first two parts that Government have decided to appoint executive officers for controlling maths and that such executing officer so appointed would be under the control of trustees of the maths. There is no doubt about it. For the question of discipline, according to this Act, they are to be under the control of trustees of maths.

In the event of any dispute between the Executive Officer and the Math Trustees what will happen? If all the maths are managed well, it is alright. But there are many maths which are not managed well. What will happen if there is any dispute between the executive officer and the trustees of the math? That I would like to know. That is all.

THIRU P. SEENIVASAN: Sir, the amendment to section 43-A—Appointment and duties of executive officers in temples under maths— . . . .the Commissioner may appoint. . an executive officer for any temple under the control of maths. என்று இருக்கிறது. கமிஷனர்தான் அதாரிட்டி. ஆனால் எக்சிகியூட்டிவ் ஆபீசர்கள் மடாதிபதிகள் அல்லது கோவில் டிரஸ்டிகள் கட்டளைப்படிதான் நடக்க வேண்டுமென்றிருக்கிறது. அதனால் பல தவறுகள் நடைபெற இடமுண்டாகும். ஆகவே, நிர்வாக அதிகாரிகள் முழுக்க முழுக்க கமிஷனர் கன்ட்ரோலில் இருப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பரம்பரை அறங்காவலர்களாக இருக்கின்ற மடாதிபதிகள் சில கோவில்களில் இருக்கிறார்கள். அவர்கள் மடத்திற்கு தலைவர்களாக மட்டுமல்லாது, அங்கே நிர்வாகம் செம்மையாக நடைபெறுவதையும் பார்த்துக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட பரம்பரை அறங்காவலர்



களாக இருக்கின்ற மடாதிபதிகளுக்கு கீழே நிர்வாக அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று இந்த திருத்தத்திலே கொண்டுவந்திருக்கிறோம். அவர்கள் முழுக்க முழுக்க அரசாங்க அதிகாரிகள்.

அந்த கோவில்களில் அவர்கள் நிர்வாக அதிகாரிகளாகப் பணியாற்றினாலும் அந்த கோவில்களின் அறங்காவலர்களுக்குக் கட்டுப்பட்டுத்தான் பணியாற்று கிறார்கள். மற்ற கோவில்களில் இருக்கின்ற அறங்காவலர்களுக்கும் நிர்வாக அதிகாரிகளுக்கும் எந்த அளவுக்கு அறநிலையத் துறையின் சட்டங்கள் வழி வகைச் செய்கின்றனவோ அதே அடிப்படையில்தான் மடத்திற்கும் இருக்கின்றன. இதில் வேறுபாடு இல்லை. அந்த வகையிலேதான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. பெ. சீனிவாசன்: நான் குறிப்பிடுவது, இந்தத் திருத்தத்தினால் அவர்களுடைய வேலைக்கு பாதகம் ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. நிர்வாக அதிகாரிகள் முழுக்க முழுக்க அரசாங்க அதிகாரிகள். அவர்கள் மடாதிபதிகளின் கட்டுப்பாட்டில் இருப்பது பொருத்தமுடையதல்ல. சப்-கிளாஸ் 2-ல் "The executive officer shall be subject to the control of the trustee of the math and shall exercise such powers and discharge such duties as may be prescribed" என்று இருக்கிறது. ஆக, அவர்களுடைய முழு கன்ட்ரோலில் இருக்கிறார்கள்.

அவர்கள் நிர்வாக அதிகாரிகள்மீது ரிப்போர்ட் செய்தால் அவர்களை வேலையிலிருந்து கமிஷனர் நீக்கிவிடலாம். நிர்வாக அதிகாரிகளை ஆடிட்டர்கள் என்ற முறையில்தான் நியமிக்கிறார்கள். அதனால் அவர்கள் பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதை நிவர்த்திப்பதற்கு வழி செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: அந்தத் தவறு நேராமல் பார்த்துக் கொள்ளலாம். இப்போது நம்முடைய தமிழ்நாட்டில் சுமார் 8 கோவில்களில் நிர்வாக அதிகாரிகளை நியமித்திருக்கிறோம். இன்னும் சில கோவில்களில்—அதாவது மடாதிபதிகள் பரம்பரை அறங்காவலர்களாக இருக்கின்ற இரண்டு அல்லது மூன்று கோவில்களில் மானேஜர் என்ற முறையில் நிர்வாக அதிகாரிகளை நியமித்திருக்கிறோம். அதைப்பற்றித்தான் மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் மடாதிபதிகளுக்கு கட்டுப்பட்டு காரியங்களைச் செய்யவேண்டுமென்று விதித்துறைகளில் சொல்லியிருக்கிறோம். அதுவும் மற்ற கோவில்களில் நடைபெறுகின்ற முறைபோல்தான் இங்கும் நடைபெறுகிறது. அதே முறைதான் இங்கும் பொருந்தும். நிர்வாக அதிகாரிகளுக்கு ஏதாவது இடையூறுகள் இருக்குமானால், சங்கடங்கள் இருக்குமானால் அறநிலையத் துறையின்

ஆணையாளர் அல்லது துணை ஆணையாளர் பரிசிலனை செய்து, சட்டப்படி தேவையான நடவடிக்கைகளை எடுக்க சட்டத்தில் இடம் இருக்கிறது. அதனால் பாதிப்பு எதுவும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் நிர்வாக அதிகாரிகளைப் போட்டதை வரவேற்றிருக்கிறார்கள். அதே நேரத்தில் அவர்களுக்கும் அறங்காவலர்களுக்கும் தகராறு வந்தால் என்ன செய்வது என்று சொன்னார்கள். அதற்கு சட்டம் இருக்கிறது. ஆணையாளர், துணை ஆணையாளர், உதவி ஆணையாளர்கள் விசாரணை செய்து முடிவு செய்ய எல்லாவிதமான அதிகாரங்களும் இருக்கின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்த தேவஸ்வம் வாரியத்தைக் கலைத்துவிட்டு, தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளில் நடைமுறையிலிருக்கும் அறநிலையத் துறையின் விதிமுறைகளை அங்கும் நீட்டித்திருக்கிறோம். ஏற்கெனவே கன்னியாகுமரி, கேரளத்திலிருந்து பிரிந்தபோது, அந்த தேவஸ்வம் வாரியத்தில் திருவாங்கூர் மகாராஜாவுக்கு சில சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அதன்படி ஒரு அறங்காவலரை அந்த தேவஸ்வம் வாரியத்தில் நியமிக்கும் அதிகாரம் அவருக்கு இருந்தது. எனவே, அவரால் நியமிக்கப்பட்ட ஒரு அறங்காவலர், தமிழ்நாட்டிலிருந்து நியமிக்கப்பட்ட இரண்டு அறங்காவலர்கள் ஆகிய மூவரும் அந்த தேவஸ்வம் வாரியத்தில் இடம் பெற்றிருந்தார்கள். நாம் நியமிக்கின்ற அறங்காவலர்களைவிட அவர்கள் நியமிக்கின்ற அறங்காவலருக்கு அதிகமான அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருந்தது.

அந்த வாரியம் திறமையாகச் செயல்படாததாலும், திருவாங்கூர் மகாராஜாவுக்கு கொடுக்கப்பட்டிருந்த சலுகைகள் அரசியல் சட்டத் திருத்தத்தினால் ரத்து செய்யப்பட்டதாலும், அதனால் அவருக்கு அறங்காவலரை நியமிக்கும் அதிகாரம் இல்லாததனாலும், அந்த வாரியத்தை கலைத்துவிட்டு தமிழ்நாட்டில் நடைமுறையில் இருந்துவரும் அறநிலையத் துறைச் சட்டங்களையே நிர்வாக வசதிக்காக கன்னியாகுமரி மாவட்டம் முழுவதற்கும் விஸ்தரித்து, 5 பேர்கள் கொண்ட ஒரு அறங்காவலர் குழுவை நாம் இப்போது ஏற்படுத்தியிருக்கிறோம்.

ஏன் இவ்வளவு தாமதமாக அந்த வாரியம் கலைக்கப்பட்டது என்று திரு. ஏன். கே. பழனிசாமி அவர்கள் கேட்டார்கள். கடந்த 9 ஆண்டுகளுக்கு முன்பே அதைக் கலைத்துவிட வேண்டுமென்று இந்த மன்றத்தில் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் மற்றவர்களும் கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத்தான் அதைச் செய்யமுடியும். சட்டம் கொண்டு வர வேண்டும். அவர்களிடமிருந்து ஒப்புதல் வராததால்தான் இதுவரையில் காலதாமதம் ஏற்பட்டது. கடந்த வாரத்தில் ஒப்புதல் கிடைத்தது. உடனடியாக அதற்கான சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம்.



இனி அங்கே இருக்கின்ற குறைபாடுகள் நிச்சயமாக போக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. ஜேம்ஸ் அவர்களும் இந்தக் கருத்தைச் சொல்லி, வரவேற்றிருக்கிறார்கள்.

அங்கே தேவஸ்வம் வாரியத்தின் மூலம் நடத்துகின்ற தேவிகுமாரி கல்லூரி நல்ல முறையில் நடைபெறவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். எதிர் காலத்திலே அந்தக் கல்லூரி சிறந்த முறையிலே நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்படும் என்று நிதிக் கோரிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தின்போதே நான் தெரிவித்திருக்கிறேன். ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள் என்றும் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே அதிகமான பேர்களை நியமித்திருக்கிறார்கள். ஆண்டுதோறும் அரசாங்கத்திலிருந்து 13½ லட்சம் ரூபாய்க்குமேல் கோவில் நிர்வாகத்திற்கு என்று கொடுக்கிறோம். அதில் பெரும்பகுதி கோவில் ஊழியர்களுக்கே போய்விடுகிறது. அதனால் கடந்த 9 ஆண்டுகளுக்கு முன்னால், இப்போது இருக்கின்ற ஊழியர்களுக்கு மேல் புதிதாக யாரையும் நியமிக்கக்கூடாது என்று அறநிலையத் துறை ஆணையர் ஒரு உத்தரவை அனுப்பினார்கள். ஆனால் ஏற்கெனவே இருக்கின்ற ஊழியர்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படமாட்டார்கள்; வீட்டுக்குத் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை நான் அவர்களுக்கு அளிக்கிறேன்.

சட்டத்திலே இருக்கின்ற வழிவகைகள், ஏதோ ஒரு வகையில் அதிகாரம் வேண்டுமென்று சொன்னால் அன்றைக்கு உடனடியாக சட்டத்தைக் கொண்டு வருவது கஷ்டம். ஆகையால் இந்தத் துறையிலே அந்த விதிகள் இருக்க வேண்டுமென்ற அளவில் வைத்திருக்கிறோம். அது அல்லாமல் வேறு யாரையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று சொல்லவில்லை. கன்னியாகுமரி மாவட்டம், செங்கோட்டைப் பகுதிக்கும் அறநிலையத் துறையின் விதிமுறைகள் விரிவுபடுத்தப்படுவதால் அங்கே இருக்கின்ற கோவில்கள் புனர் வாழ்வு பெறுவதற்கும் விரைந்து புத்துயிர் பெற்று விளங்கவும் வழிவகை ஏற்படும் என்று இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதனை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை, சட்ட முன்வடிவு எண் 22/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

[1974 ஏப்ரல் 15

பிரிவுகள் 2 முதல் 19 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் ர்பரவை சட்ட முன்வடிவு எண் 22/1974) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(ஊ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, இந்து சமய-அறக்கட்டளைகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1974.)**

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப்பேரவை) சட்ட முன்வடிவு எண் 23/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 22/1959) 23-வது பிரிவு, சமயக் கட்டளைகள் சம்பந்தமாக, பொதுவாக மேற்பார்வையிட்டு நிர்வகிக்கும் அதிகாரத்தையும், சமயக் கட்டளைகளின் சீரான நிர்வாகத்திற்கு அவசியமெனக் கருதக்கூடிய ஆணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரத்தையும் இந்து சமய அறக்கட்டளை ஆணையருக்கு வழங்குகிறது.

மேற்சொன்ன சட்டத்தின் 23-வது பிரிவின்படி, கோயில்கள் இணைப்பு குறித்து ஆணையர் பிறப்பித்த ஆணைகளின் செல்திறன் சம்பந்தமாக, 3212, 3213/1972-ம் எண் ரிட் மனுக்களில் உயர்நீதி மன்றம், பிறவற்றிற்கிடையே மேற்சொன்ன பிரிவு, அறக்கட்டளைகளுக்கு மட்டுமே பொருந்துமே தவிர

---

* 9—4—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1974 ஏப்ரல் 15] [திரு. மு. கண்ணப்பன்]

சமய நிறுவனங்களுக்குப் பொருந்தாது என்று தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆகவே, மேற்சொன்ன பிரிவின் வரம்பிற்குள் கோயில்களையும் அவற்றைச் சேர்ந்த குறிப்பிட்ட கட்டளைகளையும் சேர்த்துக்கொள்ளும் வகையில், 23-வது பிரிவைத் திருத்துவது அவசியமெனக் கருதப்படுகிறது. மேற்சொன்ன நோக்கத்தை அடைய இந்தச் சட்ட வரைவு விழைகிறது. இம் மாமன்றம் இதனை ஏற்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பேரவையில் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே,

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, இந்து சமய-அறக்கட்டளைகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1974) நிறைவேற்றப்பட வேண்டும்".
என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 5-23 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

## 8. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

239. Notification issued with G.O. Ms. No. 2797, Rural Development and Local Administration, dated the 18th December 1973, in regard to variation to the list of open spaces and parks in the area within the jurisdiction of the Thanjavur Municipality. [(Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959)].

**240. Notification issued with G.O. Ms. No. 5435, Revenue**, dated the 4th September 1973, in regard to an amendment to the Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Rules,

1972. [(Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Act, 1972 (Tamil Nadu Act 21 of 1971).]

241. Notification issued with G.O.R. No. 93, Revenue, dated the 24th January 1974, in regard to exemption from liability to Entertainments tax, show tax and additional surcharge for the benefit film show organised by Athletic Association of the Kilpauk Medical College, Madras to raise funds for the Association at Uma Talkies on 26th January 1974. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939)].

242. Notification issued with G.O. Ms. No. 47, Rural Development and Local Administration, dated the 8th January 1974 in regard to preliminary notification for declaration of the Regional Planning areas under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972). [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

### B. Reports Notifications and other Papers.

@ 179. The Tamil Nadu Handlooms Textiles (Production, Distribution and Sales) Bill, 1974 (L.A. Bill No. 19 of 1974).

% 180. The Tamil Nadu General Sales Tax Amendment Bill 1974 (L.A Bill No. 20 of 1974), with Annexure.

@ 181. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Second Amentment) Bill, 1974 (L.A. Bill No. 21 of 1974).

@ 182. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Third Amendment) Bill, 1974 (L.A. Bill No. 22 of 1974).

@ 183. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Fourth Amendment) Bill, 1974 (L.A. Bill No. 23 of 1974).

% 184. Annexure to L.A. Bill Nos. 21, 22 and 23 of 1974.

£ 185. Tamil Nadu Government views on State Autonomy and the Rajamannar Committee Report (English and Tamil).

---

% Despatched to Members on 10th April 1974.
@ Laid on the table of the House on 11th April 1974.
£ Circulattd to Members on 14th April 1974.



## இணைப்பு

(457-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

*English version of the Resolutions.*—

"WHEREAS there has been widespread public criticism against the system of hereditary appointment of Archakas, Pujaries and other Ulthurai servants in Hindu Religious institutions on the ground that the system of appointment is on the basis of caste. sect or group;

AND WHEREAS the Committee on Untouchability, Economic and Educational Development of the Scheduled Castes has in its report suggested that hereditary priesthood in Hindu society should be abolished and that the system should be replaced by an ecclesiastical organisation of men possessing requisite educational qualifications who might be trained in recognised institutions in priesthood and that the line should be open to all candidates irrespective of caste, creed or race;

AND WHEREAS under the existing provisions of the Constitution as interpreted by the Supreme Court, the appointment of Archakas and Pujaries has to be made from a specified sect or group in accordance with the directions of Agammas governing the temples and that failure to do so would interfere with the religious practice;

AND WHEREAS this House is of opinion that as a measure of social reform, appointment of Archakas, Pujaries or other Ulthurai servants in Hindu religious institutions should be made from among qualified persons professing Hindu religion irrespective of caste, sect or gruop of such persons;

AND WHEREAS, to enable the State Legislature to enact a law for the above purpose, the Constitution has to be suitably amended;

THIS HOUSE resolves to request the Central Government to bring forward the necessary legislation to amend the Constitution suitably on the lines indicated in the draft Bill enclosed".

ANNEXURE TO THE RESOLUTION.

*A Bill further to amend the Constitution of India.*

Be it enacted by Parliament in the Twenty-fifth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Constitution Amendment) Act, 1974.

2. *Insertion of new article 26-A.*—After article 26 of the Constitution, the following article shall be inserted, namely :—

"26-A. *Archakas and other office holders and servants in Hindu religious institutions to be appointed irrespective of caste.*—(1) Notwithstanding anything contained in article 13, the State Legislature may, by law, provide that vacancies, whether permanent or temporary, among the office holders or servants (including archakas and pujaries) of any Hindu religious institution may be filled by a person professing Hindu religion and possesing such qualifications as may be specified in such law, irrespective of the caste, sect or group of such person.

(2) If anything contained in any agamas or sastras or any text, rule or interruptation of Hindu Law or any custom or usage or part of that law is repugnant to any of the matters for which provision is made in the law referred to in clause 1), then the law referred to in clause (1) shall prevail and such agamas or sastras or any text, rule or interpretation, custom or usage or part shall to the extent of repugnancy, be void.

(3) No such law as is referred to in clause (1) shall be deemed to be void on the ground that it is inconsistent with or takes away or abridges any of the rights conferred by articles 25 and 26, notwithstanding anything contained in articles 14, 15, 25 and 26".

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

TENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

(*9th, 10th, 11th and* 15 *April* 1974.)

VOLUME LV—Nos. 1 to 4.

A

PAGES

ABDUL JABBAR, Thiru V. M.—

Administration of taken-over sick Textile Mills (M). 537—539

Appropriation (No. 2) Bill, 1974 ... ... 77—82

Girls' School, opening in Pallapatti ... ... 1—2

ABUSALI, Thiru M. A.—

Additional Sales Tax (Amendment) Bill, 1974 ... 366—368

AGRICULTURE—

Agro-Economic research ... ... ... 317—320

Small Farmers' Development Agencies, setting up. 321—324

ALAGARSAMY, Thiru S.—

Non-availability of electricity to pumpsets in Chingleput district making ryots unable to raise crops and the necessity to postpone loan collection (C.A.) ... ... ... ... ... ... 38, 39

Vadakarai Village, cutting of trees ... ... 16—18

ANANDANAYAKI, Thirumathi T. N.—

Additional Sales Tax (Amendment) Bill, 1974 ... 362—364

A—*cont.*

NANDANAYAKI, Thirumathi T. N.—*cont.*

PAGES

Amendment of Constitution to enable appointment of archakas, pujaries and other Ulthurai servants in Hindu Religious Institutions from among qualified persons professing Hindu religion irrespective of caste, creed or race (R) ... ... ... 495, 499, 500, 502, 510—512

Constitutional propriety of bringing the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill and bringing three amendments to the Bill together (Point of order) 50—51

Death of persons engaged in excavation of gypsum due to land slide (A.M.) ... ... ... ...... 199—200

District Municipalities (Amendment) Bill, 1974. 375—377

Indian Stamp Tamil Nadu (Amendment) Bill 1974. 232—234, 241—242, 243—244

Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1974 ... ... ... 267, 268, 271, 273, 274

Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1974 ... ... ... 283—284, 286—287, 288, 289, 290, 291, 292—294

Propriety of consideration of the Tamil Nadu Handlooms Textiles (Production Distribution and Sale) Bill, 1974, as it contravened the provisions of the Constitution and the connected Central Act (Point of order) ... ... ... ... 44, 45

Registration (Tamil Nadu Amendment) Bill, 1974. 220—221, 222



A—*cont.*

PAGES

ANBAZHAGAN, THIRU K.—

Deteriorating position of drinking water in Madras city (C.A. St.) ... ... ... ... ... 209—213

Drinking water scarcity in Sankari and the need to take action to provide drinking water (C.A.St.) ... 451—452

Drinking water scarcity in Uthankarai, Dharmapuri district (C.A.St.) ... ... ... . 339—340, 340—341

Failure to arrest spread of Cholera in City (A.M.) 33—35

General Sales Tax (Amendment) Bill, 1974 . 559

ARANGANNAL, Thiru Rama—

Amendment of Constitution to enable appointment of archakas, pujaries and other Ulthurai servants in Hindu Religious Institutions from among qualified persons professing Hindu religion irrespective of caste, creed or race (R) ... ... ... 472—477

B

BALASUNDARAM, THIRU V.—

Amendment of Constitution to enable appointment of archakas, pujaries and other Ultharai servants in Hindu Religious Institutions from among qualified persons professing Hindu religion irrespective of caste, creed or race (R) ... ... ... 479—483

BILL(S)—

Additional Sales Tax (Amendment) Bill, 1974

Consid. ... ... ... ... ... 361—373

Consid. Cl. ... ... ... ... ...
Motion to pass ... ... ... ...
Passed } 373

Appropriation (No. 2) Bill, 1974—

Consid. ... ... ... ... ... ... 53, 54—144

Passed ... ... ... ... ... 144

PAGES

BILL(S)—*cont.*

District Municipalities (Amendment) Bill, 1974—
Consid. ... ... ... ... ... 374—383
Consid. Cl. ... ... ... ... ... 383—384
Motion to pass ... ... ... ... } 384
Passed ... ... ... ... ... }

General Sales Tax (Amendment) Bill, 1974—
Message from Governor ... ... ... } 47
Int. }
Consid. .. ... ... ... ... 550—559
Consid. Cl. ... ... ... ... ... 559—561
Passed ... ... ... ... ... 561

Handloom Textiles (Production-Distribution and Sale) Bill, 1974—
Int. ... ... ... ... ... 46—47
Consid. ... ... ... ... ... 549—550

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1974—
Consid. ... ... ... ... ... 561—563
Motion to pass ... ... ... ... } 563
Passed ... ... ... ... ... }

Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill, 1974—
Consid ... ... ... ... ... 563—564
Int. ... ... ... ... ... 52
Motion to pass ... ... ... ... } 564
Passed ... ... ... ... ... }





PAGES

BILL(S)—*cont.*

Hindu Religious and Charitable Endowments (Third Amendment) Bill, 1974—
Int. ... ... ... ... ... 52—53
Message from Governor ... ... ... 565
Consid. Cl. ... ... ... ... ... 565—573
Motion to pass ... ... ... ... } 574
Passed ... ... ... ... ... }

Hindu Religious and Charitable Endowments (Fourth Amendment) Bill, 1974—
Int. ... ... ... ... ... 53
Consid. ... ... ... ... ... 574—575
Consid. Cl. ... ... ... ... }
Motion to pass ... .. ... ... } 575
Passed ... ... ... ... ... }

Indian Stamp Tamil Nadu (Amendment) Bill, 1974—
Consid. and passed ... ... ... ... ...230—245

Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1974—
Message from Governor ... ... ... 245—246
Consid. ... ... ... ... ... 246—276
Passed ... ... ... ... ... 276

Land Reforms (Fixation of Ceiling on Land), Third Amendment Bill, 1974—
Consid. ... ... ... ... ... 276—296
350—358
Consid. Cl. ... ... ... ... 358—359
Motion to pass ... ... ... ... 359

PAGES

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

*Adjournment Motions*—cont.

*Failure to arrest the spread of cholera in and around Madras City*—

Consent was withheld as in the light of the explanation given by the Minister, there was no need to adjourn the other business of the House to discuss the subject ... 32—35

*Lock-out of the Neyveli Ceramics and Refractories at Vadalur and the plight of workers*—

Consent was withheld as, in the light of the explanation given by the Minister, there was no need to adjourn the other business of the House to discuss the matter ... 336—339

*Loss of jobs to workers of Salem Steel Plant consequent on the strike by contractors*—

Consent was withheld as, in the light of the Minister's explanation. there was no need to adjourn the other business of the House to discuss it ... ... ... ... 333—336

*Plight of handloom weavers in Coimbatore District on account of the non-availability of yarn of 100 counts*—

Consent was withheld as, in the light of the explanation given by the Minister, there was no need to adjourn the other business of the House to discuss the matter ... ... 35—36

*Bills*—

*Amending Bills, scope of discussion*—

*While amending Bills are under discussion,* Members should confine their speeches only to the amendments before the House and not speak about the Bill in general ... 346—347





CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

*Bills*—cont.

*Appropriation Bill.*

A member rising on a point of order pointed out that the Appropriation (No. 4) Bill to be brought before the House included an amount which had already been voted as an interim measure and asked whether it would not have been proper to bring the present Appropriation Bill deducting that amount for granting which another Appropriation Bill had already been passed in the House.

The Speaker observed that it had been specified in the Bill that the amount for which Appropriation Bill had already been passed had also been included in the present Bill and ruled that there was no point of order. 53—54

*Bringing forward three amending Bills to the same Bill*

On 9th April 1974, as soon as the Minister moved for leave to introduce the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill, 1974, a Member rose on a point of order and stated that there had not been any precedent for bringing in three amending Bills to the same Bill during the same session and said that it would have been better if a single comprehensive amending Bill had been brought forward.

The Minister for Law, explaining the circumstances under which the amending Bills had to be brought before the House, said that though there was no irregularity in bringing different amending Bills to the same Bill, he accepted in principle that a single comprehensive amending Bill could have been brought forward and said that that principle would be followed in future.

PAGES

C.—*cont.*

CHAIR—*cont.*

*Ruling and Observations*—cont.

*Bills*—cont.

*Bringing forward three amending Bills to the same Bill*—cont.

The Speaker observed that, in view of the explanation given by the Minister that in future a comprehensive amending Bill would be brought forward, there was no point of order. 48—52

*Propriety of considering Bills.*

On 9th April 1974, just before the Minister moved for leave to introduce the Tamil Nadu Handloom Textiles (Production, Distribution and Sales) Bill, 1974, a Member rising on a a point of order asked whether it was in order for the State Assembly to discuss the Bill as, in his opinion, it contravened the provisions of the Central Act and was repugnant to the Constitution. He contended that the proposed Bill sought to replace the Central Act in force. He said that where there was inconsistency between the Parliament law and the State law, if any provision of the law made by the State was repugnant to the law made by Parliament, then the law of Parliament shall prevail and the law made by the State shall, to the extent of repugnancy, but so long only as the law made by Parliament continued to have effect, be inoperative.

The Law Minister stated that with regard to the items in the Concurrent List, though the Central Acts bound the States, if the State enacted legislation subsequent to the Central Act, then the State Act alone would bind the State in its jurisdiction, provided the legislation got the assent of the President.

The Chair holding that there was no point of of order, observed that it had been the accepted practice that the Chair did not give any ruling on whether a Bill was constitutionally within the legislative competence of the House or not.



PAGES

C.—*cont.*

CHAIR—*cont.*

*Ruling and Observations*—cont.

*Bills*—cont.

*Propriety of considering Bills*—cont.

In that connection, the Chair quoted the ruling given by the Lok Sabha and also in the Tamil Nadu Assembly on previous occasions when similar points of order were raised. ... 41—46

When the Member raised a similar point of order with reference to another Bill, the Chair held that the ruling given by him earlier as to whether a particular Bill was *ultra vires* of the Constitution or not, would apply in that case also ... ... ... 48—49

Calling Attention.

*Clarification*

After the Minister had read the statement in reply to a Call Attention Notice, a Member who had not called the attention of the Minister rose on a point of order and wanted to seek some clarification. The Speaker observed that if the Member also gave a separate Call Attention Notice, the Minister might make a statement. He ruled that there was no point of order in the matter. 455

Two questions could be asked for seeking clarification from the Minister after he had made his statement. That occasion should not be utilised for any other discussion or for raising new points ... ... ... ... 343

Debate

A Lawyer member should speak in the Assembly as a member and not as a lawyer ... ... 264

*Appropriation Bill—Opportunity for taking part in the discussion*

A point of order was raised by a member that inasmuch as there was no rule laying down

C.—*cont.*

CHAIR—*cont.*

*Ruling and Observations*—cont.

*Bills*—cont.

*Appropriation Bill—Opportunity for taking part in the discussion.*—cont.

that during the discussion on the Appropriation Bill only leaders of parties should take part, the other members should also be given opportunity to speak about a number of important subjects.

The Speaker observed that it was a matter for the leaders of parties and their members and the House would not be able to find a solution for that ... ... ... ... 54—55

EXPRESSIONS USED IN THE HOUSE.

செய்தித்தாளில் வரவேண்டும் (Speaking for the sake of gaining publicity in the Press) —Held to be no objectionable, as such usage was in vogue and members of all parties used that expression ... ... ... 511—512

*Languages of the House*

When a Member began to quote in Hindi, during his speech, points of order were raised as to whether one could read in Hindi, as the State Government had not accepted it, and further, the State Government had opposed the three-language formula and was following only the two-language formula, and especially when even Telugu speeches were not allowed in the House.

The Chair observed that there was provision in the Rules to speak in Hindi also in the Assembly. The Government might have their own language policy, but the House had its own rules with regard to the languages of the House. Point of order could not be raised on the ground that the languages of the House differed from the language policy of the Government.

As for Telugu speeches, the Chair observed that a Member had been allowed to speak in Telugu in the past.





C.—*cont.*

CHAIR—*cont.*

*Ruling and Observations*—cont.

Languages of the House—*cont.*

The Chair quoting the relevant Rule observed that, apart from Hindi, if a member wanted to speak in any other language he could permit him in his discretion to speak in that language. He ruled that there was no point of order ... 401—402

*Point of clarification*

When a Member asked as to when the Adjournment Motion given notice of by him relating to a Member of the Cambinet would be taken up, the Chair observed that such references in the House would actually amount to raising the matter in the House before the Chair had decided about it. Also, it was not proper to ask in the House as to what happened to the Adjournment Motion given notice of by the Member ... ... 449

*Scope and provision of the rules*

When the Speaker disallowed a Member to raise an issue under a point of order about a Member of the Cabinet as there was no provision to raise such matters as a point of order, another Member suggested that, though there might not be provision in the rules at the moment, some provision must be made in the rules to enable a Member to seek clarification at any time on any point.

The Speaker observed that at present there was no provision for it in the rules ; but it could be considered later when the rules were amended. ... ... ... 449—450

Point of order

*Delay in circulation of Bills to Members*

With reference to point of order raised by a Member about the delay in circulation of Bills, the Speaker stated that such delay had occurred because the departments concerned

CHAIR—*cont.*

*Ruling and Observations*—cont.

Point of order—*cont.*

*Delay in circulation of Bills to Members*—cont.

with the Bills had not sent Bills to the Legislature Department well in advance taking into account the decision of the Business Advisory Committee to take those Bills for consideration. He observed that the Departments and the Ministers concerned should take care to see that such lapses did not recur. 348

Questions and Answers

*Furnishing of an answer by a department other than the one to which a question was addressed*

With reference to a point of order that while a question was addressed to a particular department, the actual reply was given by some other department, the Speaker observed that it might be that Members might unknowingly have addressed a question to a department, but the department, after scrutiny, might and hence there was no point of order ... ... ... ... 332

*Supplementary Questions.*

Members should observe the rule that there could be no debate during the question hour. Questions could be put to elicit information 323—323

Questions could be put only to elicit information and not for the purpose of making allegations or raising other matters ... ... 326

Supplementary questions should not contain suggestions ... ... ... ...

With reference to a point of order raised that opportunity was not given to put a supplementary on an important question, the Deputy Speaker observed that as the Member who had given notice of the question was absent when it was called, it was







CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Questions and Answers—*cont.*

*Supplementary Questions*—cont.

taken that no supplementaries were put on it and the other questions had been taken up. As a lot of time had elapsed since then, that question would not be taken up again and hence there was no point of order. 14

*Relevancy*

Supplementaries should be relevant to the main question ; it was not in order to put supplementaries beyond the scope of the main question ... ... ... ... ... 319

*Scope*

Arising from the main answer given by the Minister, one or two supplementaries could be put to seek clarification ; but, it should not be made a debatable matter ... ... 437, 438

Questions disallowed will not form part of the proceedings ... ... ... ... 439

Question hour should not be utilised for levelling charges ; some other occasion might be utilised for that purpose ... ... 438

*Ruling*

It was not in order to speak against the ruling of the Chair ... ... ... ... ... 509

*Speeches*

*Publication in the Press*

With reference to a point of order raised by a member that same dailies did not publish the speeches made by the members in the House, the Chair observed that the Press could not be compelled to publish the

PAGES

C.—*cont.*

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.
*Speeches*—cont.
*Publication in the Press*—cont.

speeches of members nor could they be punished if they did not publish them. The Press had the freedom to publish or not to publish the speeches of Members in their dailies ... ... ... ... ... 368

CHEMICALS—

Nitric Acid Production in Ambattur ... ... 443—444

COLLEGE(S)—

Agricultural—Admission ... ... ... 324—327

Arts College for Women, Mayuram, History lecturers 299—301

Devikumari College, Kuzhithurai, new courses ... 301—302

COMMITTEE(S)—

Assurances Committee, nomination of members (Ann) ... ... ... ... 345

Business Advisory Committee, nomination of members (Ann) ... ... ... ... ... 40—41

Rules Committee, nomination of members (Ann) 216

CONFERENCES—

Southern Ministers' Conference, decisions .. 26—31

COUNCIL(S)—

State Dental Council, grant ... ... ... 9—10



D.

PAGES

DAMS—

Nanguneri taluk, construction ... ... ... 315—316

DENNIS, Thiru N.—

Bookmakers, Madras Race Course ... ... 166—174

Coffee Plantations, raising by Government ... ... 309—313

Devikumari College, Kuzhithurai, new courses ... 301—302

Education, Linguistic minorities in Kanyakumari district ... ... ... ... ... 426

Groundnut procurement ... ... ... ... 18—22

Medicines in Hospitals, purchase ... ... ... 430

Slum Clearance Board, Vigilance Cell ... ... 189—194

S.S.L.C. examination, private appearance ... ... 5—7

State Dental Council, grants ... ... ... 9—10

Tourist Homes, foreign exchange earning ... ... 303—308

Work centres, training out-of-School Youths ... 185—186

Yarn, Distribution in Chinnalapatti ... ... ... 439

DEVENDIRAN, Thiru A.—

Horse-gram, cultivation ... ... ... ... 327

DHARMALINGAM, THIRU A. P.—

District Municipalities (Amendment) Bill, 1974. 374—375, 381—383, 384

DHARMALINGAM, THIRU N.—

Pennayaru, Bridge across ... ... ... 15

DURAI GOVINDARAJAN, Thiru—

Rengasamudri Tank ... ... ... ... 14

Pages.

D—cont

DURAISAMI, THIRU S.—

Administration of taken-over sick Textile Mills, (M) 543—545

Dispensaries under Tiruppur union ... ... 176

Municipal High Schools, Tiruppur ... ... 425

Working Women's Hostels, Coimbatore district ... 308—309

E

EDMUND, THIRU G. R.—

Co-operative Rural Dispensaries ... ... ... 176—177

Deteriorating position of drinking water in Madras City (C.A.) ... ... ... ... ... 209

Fire in Port Blair, assistance to victims ... ... 174—176

Irrigation from Kadampakkulam tank ... ... 186—187

Nitric Acid, production in Ambathur ... 443

EDUCATION—

Linguistic minorities in Kanyakumari district ... 426—430

EXAMINATION—

Private appearance for S.S.L.C. ... ... ... 5—7

F

FACTORY—

Co-operative Sugar Factory, Kodumudi ... 441—443

FAMINE—

Failure of monsoon and postponement of kist and loans collections in Chingleput district (C.A.) ... 452—456

PAGES

G

GANAPATHY, THIRU T.—

Irrigation, Manimuthar system ... ... ... 187—188

GANAPATHY, THIRU T.—

Local Body surcharge, Radhapuram canal system ... 330—331

New dams in Nanguneri taluk ... ... ... 315—316

GROUNDNUTS—

Procurement ... ... ... ... ... 18—22

GURUSAMY, THIUR N. V.—

Bus service, Theni-Suppulapuram route ... 448

Indian Systems of Medicines, Hospitals ... ... 178—185

H

HARBOUR—

Madras, development ... ... ... ... 15

HANDE, Dr. H. V.—

Additional Sales Tax (Amendment) Bill, 1974 ... 368—369

Administration of taken-over sick Textile Mills (M) 539—541

Appropriation (No. 2) Bill, 1974 ... ... 55—65, 140, 141

Communal clash in Denkanikottah (A.M.) ... 206—207

Constitution (Thirty-second Amendment) Bill, 1973, ratification (R) ... ... ... ... 404—408

Constitutional propriety of bringing the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill, 1974 and bringing three Amendments to the Bill together (Point of order) ... ... ... ... ... 48—49

PAGES

H—*cont.*

HANDE, Dr. H. V.—*cont.*

Damage to "Kullacor" in Sirkali taluk due to water scarcity (C.A.) ... ... ... ... 36—38

District Municipalities (Amendment) Bill, 1974 ... 379—381

Failure to arrest spread of Cholera in city (A.M.) ... 32—33

Indian Stamp (Tamil Nadu Amendment), Bill, 1974 236—237, 240—241, 244

Land Reforms (Fixation of Ceiling on Land), Second Amendment Bill, 1974 .. ... ... 273, 274

Non-supply of copies of Bills to members in advance (Point of order) ... ... ... 348, 349

Propriety of consideration of the Tamil Nadu Handloom Textiles (Production, Distribution and Sale) Bill, 1974 (Point of order) ... ... ... ... 41—42

Registration (Tamil Nadu Amendment) Bill, 1974 219—220

Strike by contractors in Salem Steel Plant and its consequences (A.M.) ... ... ... 333—334

HORSE-GRAM—

Cultivation ... ... ... ... ... 327

HOSPITALS AND DISPENSARIES—

Co-operative Rural Dispensaries ... ... 176—177

Dispensary, Saidapet, expansion ... ... ... 10

Indian systems of Medicines ... ... ... 178—185



PAGES

H—*cont.*

HOSPITALS AND DISPENSARIES—*cont.*

Kidney bank, General Hospital, Madras ... ... 10

Medicines in Hospitals, purchase .. ... 430—431

Primary Health Centre, Krishnarayapuram ... 432

Tiruppur union ... ... ... ... 176

HOSTEL(S)—

Working Women's Hostels, Coimbatore District ... 308—309

HOUSING—

House-sites for fishermen in Karaiyur ... ... 309

House-sites for Rural landless ... ... 195—198

Schemes, Mettupalayam ... ... ... 194—195

I

IRRIGATION—

Kadampankulam tank ... ... ... ... 186—187

Manimuthar system ... ... ... ... 187—188

Melnattar Channel repairs ... ... ... 313—314

J

JAMES, THIRU J.—

Hindu Religious and Charitable Endowments (Third Amendment) Bill, 1974 ... ... ... 566—569

JOTHI VENKATACHELLUM, THIRUMATHI—

Amendment of Constitution to enable appointment of archakas, pujaries and other Ulthurai servants in Hindu religious institutions from among qualified persons professing Hindu religion irrespective of caste, creed or race (R) ... ... ... 514—517

PAGES

## K

KANDAPPAN, THIRU S.—

Amendment of Constitution to enable appointment of archakas, pujaries and other Ulthurai servants in Hindu Religious Institutions from among qualified persons professing Hindu religion irrespective of caste, creed or race (R) ... ... ... 498—503

KANDASAMY, THIRU K.—

Agricultural Colleges, admission ... ... 324—327

Amendment of Constitution to enable appointment of archakas, pujaries and other Ulthurai servants in Hindu religious institutions from among qualified persons professing Hindu religion irrespective of caste, creed or race (R) ... ... 476—479

KANDASAMI MANALI, Thiru C.—

Appropriation No. (2) Bill, 1974 ... ... 109—114

KANNAPPAN, THIRU M.—

Amendment of Constitution to enable appointment of archakas, pujaries and other Ulthurai servants in Hindu religious institutions from among qualified persons professing Hindu religion irrespective of caste, creed or race (R) ... ... ... 517—522, 528

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1974 ... ... ... 561—563

Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill, 1974 ... ... 52

Hindu Religious and Charitable Endowments (Third Amendment) Bill, 1974 ... ... 564, 565—566, 570—573, 574



PAGES

K—*cont.*

Hindu Religious and Charitable Endowments (Fourth Amendment) Bill, 1974 ... ... 574—575

KARUNANIDHI, Dr. M.—

Amendment of Constitution to enable appointment of archakas, pujaries and other Ulthurai servants in Hindu Religious Institutions from among qualified persons professing Hindu religion irrespective of caste, creed or race (R) ... ... 488, 522—527

Appropriation (No. 2) Bill, 1974 ... ... 54, 61—62, 125—140, 141, 142, 143, 144

Communal clash in Denkanikotta (A.M.) ... 207—208

Death of persons engaged in excavation of gypsum due to land slide (A.M.) ... ... ... 200—203

Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1974 ... ... 254, 255, 256, 257

Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1974 ... ... ... 821—822, 823

KATHIRAVAN, THIRU K. M.—

Appropriation (No. 2) Bill, 1974 .. .. .. 82—85

KITTAPPA, Thiru N.—

Bridge across Ayyavayyanaru ... ... ... 445

Mayuram Maraiyur road, repairs ... ... ... 18

Murugamangalam Thirumangalam road, development 18

Nurse-patient ratio .. .. .. .. .. 436

PAGES

K—*cont.*

Prizes to schools, award ... ... ... ... 421

Road, Mannipalam—Anandhathandavapuram ... 444

KOVAI CHEZHIYAN, THIRU—

Clarification from the Minitry ... ... ... 449

Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1974 .. .. .. .. 252—254, 255, 269

KOTHANDARAMIAH, Thiru K. S.—

Amendment of Constitution to enable appointment of archakas, pujaries and other Ulthurai servants in Hindu religious institutions from among qualified persons professing Hindu religion irrespective of caste, creed or race (R) ... ... ... 488—490

KRISHNAN, THIRU K. R.—

Drinking water scarcity in Uthankarai, Dharmapuri District (C. A.) .. .. .. .. .. 339, 340

KUMARASAMY, THIRU K. N.—

Strike in Lakshmi Mills, Palladam (C. A.) .. .. 341, 342, 343

L

LANDS

Assignment in Tiruttani taluk .. .. .. 15

LATHEEF, Thiru M. A.—

Additional Sales Tax (Amendment) Bill, 1974 ... 370—371

Communial Clash in Denkanikotta (A.M.) ... 204—206

Constitution (Thirty-second Amendment) Bill, 1973 ratification (R) ... ... ... ... 397—404



PAGES

L—*cont.*

LATHEEF, Thiru M. A.—cont.

Constitutional propriety of brining the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments three amendments to the Bill together (Point of Order) ... ... ... ... ... 51

Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1974 .. .. .. .. 260—264, 269—270, 271, 272, 273, 274

Strike notice given by Six Labour Unions of Neyveli Lignite Corporation (C. A.) .. .. .. 213

LOCAL BODIES

Surcharge, Radhapuram Canal System ... ... 330—331

M

MADHAVAN, Thiru S.—

Administration of taken-over sick Textiles Mills ... 529—530, 533, 545—547

Amendment of Constitution to enable appointment of archakas, pujaries and other Ulthurai servants, Hindu Religious institutions from among qualified persons professing Hindu religion irrespective of caste, creed or race (R) ... ... 466, 467—468, 490

Constitutional propriety of bringing the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill, 1974 and bringing three amendments to the Bill together (Point of Order). 51—52

PAGES

M—*cont.*

MADHAVAN, THIRU S.—*cont.*

Handloom Textiles (Production-Distribution and Sale) Bill, 1974 ... ... ... ... 46—47, 549—550

Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1974 .. .. .. .. 352—353, 354, 360

Non-availability of 100 count yarn and consequent suffering of weavers in Coimbatore (A.M.) ... 36

Propriety of consideration of the Tamil Nadu Handloom Textiles (Production, Distribution and Sale) Bill, 1974 ... ... ... ... ... 42—43, 45—46

MARIMUTHU, THIRU A. R.—

Administration of taken-over (sick) Textiles Mills (M) 530

Amendment of Constitution to enable appointment of archakas, pujaries and other Ulthurai servants in Hindu Religious Institutions from among qualified persons professing Hindu religion irrespective of caste, creed or race (R) ... ... ... 504—509 512, 514

Appropriation (No. 2) Bill, 1974 .. .. 85—91

Constitution (Thirty-second Amendment) Bill, 1973, ratification (R) .. .. .. .. 386—390

Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1974. .. .. .. 249—251

Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1974. .. .. .. 353—354

Lock-out in Ceramic and Refractories Factory at Vadalur (A.M.) .. .. .. .. 337



PAGES

M—*cont.*

MARIMUTHU, Thiru A. R.—*cont.*

Propriety of including in the Appropriation (No. 2) Bill, 1974, the amount already voted by the House (Point of Order) ... ... ... ... 53—54

Registration (Tamil Nadu Amendment) Bill, 1974. 222—223

MARUDHACHALAM, THIRU N.—

Administration of taken-over (sick) Textile Mills (M) 542—543

MALAIKANNAN, Thiru V.—

Melnattar Channel, repairs .. .. .. 313—314

MOTIONS—

Administration of taken-over (sick) Textile Mills ... 529—548

Adjournment Motions—

Communal clash in Denkanikotta ... ... ... 203—209

Death of workers engaged in the excavation of Gypsum due to landslide .. .. .. 198—203

Failure to arrest the spread Cholera in City ... 32—35

Lock-out in Ceramic and Refractories Factory at Vadalur .. .. .. .. .. 336—339

Non-availability of 100 count yarn and consequent suffering of weavers in Coimbatore .. .. 35—36

Strike by contractors in Salem Steel Plant and its consequences .. .. .. .. 333—336

MUNUSAMY, THIRU R. R.—

Agro-Economic Research, .. .. .. .. 317—320

MOIDEEN, TIRUPPUR A. M.—

Appropriation (No. 2) Bill, 1974 ... ... 99—102

PAGES

M—*cont.*

MUNU ADHI, THIRU—

Strike notice given by six Labour Unions of Neyveli Lignite Corporation (C.A.) .. .. .. 213, 215

N

NACHIAPPAN, THIRU A. M. T.—

Madras-Cumbum express bus .. .. .. 446

NARASIMHAN, THIRU A. C.—

Appropriation (No. 2) Bill, 1974 ... ... 97—99

NATARAJAN, THIRU N. V.—

Registration (Tamil Nadu Amendment) Bill, 1974. 217—218, 223—224

NEDUNCHEZHIYAN, DR. V. R.—

Constitution (Thirty Second Amendment) Bill, 1973, ratification (R) .. .. .. .. 384—386, 412—417

NURSES—

Employment. .. .. .. .. .. 432—436

Nurses—Patient ratio ... ... ... ... 436—439

P

PALANISAMY, PULAVAR C.—

Shanmuga river, bridge .. .. .. 314—315

PALANISAMY, Thiru N. K.—

Additional Sales Tax (Amendment) Bill, 1974. .. 364—365

Administration of taken-over (sick) Textile Mills, (M) 530, 531, 532, 547



PAGES

P—*cont.*

PALANISAMY, Thiru N. K.—*cont.*

Failure to arrest spread of Cholera in City (A.M.) 32

General Sales Tax (Amendment) Bill, 1974 ... 553—555, 560

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1974 .. .. .. .. .. 562

Hindu Religious and Charitable Endowments (Third Amendment) Bill, 1974 .. .. .. 569—570

House sites for rural landless ... ... 195—198

Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1974. 234—235, 247

Indian Systems of Medicine, Practitioners ... ... 178

Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1974 ... ... ... ... 251—252

Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1974 ... ... ... 294—295, 356—359

Non-availability of 100 count yarn and consequent suffering of weavers in Coimbatore (A.M.) ... 35

Non-supply of copies of Bills to members in advance (Point of Order) .. .. .. .. 348

Schools, difference in number of holidays for Elementary and High Schools ... ... ... ... 3—5

Small Farmers' Development Agencies, setting up .. 321—324

PAPERS LAID ON THE TABLE—

Additional Sales Tax (Amendment) Bill, 1974 ... 418

Annexure to L.A. Bill Nos. 21, 22 and 23 of 1974 — 576

Appropriation Accounts, 1971-72 .. .. .. 145

Co-operative Societies Act, 1961, Notification .. 417

P—*cont.*

APER LAID ON THE TABLE—*cont.*

Cultivating Tenants Arrears of Rent (Relief) Rules, 1972, Notification .. .. .. .. 575—576

Entertainments Tax Act, 1939, Notifications ... 418, 576

Finance Accounts for 1971-72, Government of Tamil Nadu .. .. .. .. .. .. 145

General Sales Tax Act, 1959, Notification ... ... 145

General Sales Tax Amenment Bill, 1974 with Annexure ... ... ... ... ... 576

Government views on State Autonomy and the Rajamannar Committee Report (English and Tamil) .. 576

Handlooms Textiles (Production, Distribution and Sales) Bill, 1974 .. .. .. .. .. 576

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1974, with Annexure ... ... 418

Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill, 1974 .. .. .. .. 576

Hindu Religious and Charitable Endowments (Third Amendment) Bill, 1974 ... ... ... 576

Hindu Religious and Charitable Endowments (Fourth Amendment) Bill, 1974 .. .. .. .. 576

Inam Estates (Abolition and conversion into Ryotwari) Act, 1963, Notification .. .. 145

Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1974, with Annexure ... ... 145

Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1974, with Annexure ... ... 418

Parks, Play fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959, Notification ... ... 575

Report of Comptroller and Auditor General of India for 1971-72 ... ... ... ... ... 145



P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Revenue Department Notification II—1 No. 1884 of 1960, Notification rescinding .. .. 418

Town and Country Planning Act, 1971, Notification .. 576

PARANDHAMAN, THIRU A.—

Drinking Water Supplly Scheme, Tiruvellore area .. 10—14

Kidney Bank, General Hospital, Madras ... ... 10

Lands, assignment in Tiruttani taluk .. .. .. 15

Madras Harbour, development .. .. .. 15

PLANTATION (S)—

Coffee—, raising by Government .. .. .. 309—313

POINT OF ORDER—

Clarification from the Ministry ... ... ... 449

Constitutional propriety of bringing the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill, 1974 and bringing three amendments to the Bill together ... ... ... 48—52

Non-Supply of Copies of Bills to members in advance .. .. .. .. .. .. 348—350

Propriety of consideration of the Tamil Nadu Handloom Textiles (Production, Distribution and Sale) Bill, 1974 ... ... ... ... ... 41—46

Propriety of including in the Appropriation (No. 2) Bill 1974, the amount already voted by the House. 53—54

Questions addressed to one department and replies from another department and discrepancy between a Minister's and a Member's statement ... ... 332

PAGES

P—*cont.*

PONNAPPA NADAR, Thiru R.—

Additional Sales Tax (Amendment) Bill, 1974 .. 365—366

Appropriation (No. 2) Bill, 1974 .. .. .. 117—120, 121—125

Constitutional propriety of bringing the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill, 1974 and bringing three amendments to the Bill together (Point of order) ... ... ... ... ... ... 49

Constitution (Thirty Second Amendment) Bill, 1973, ratification (R) ... ... ... ... ... 409—412

Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1974. 237—239

Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1974 ... ... ... ... 254, 257—260

Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1974 .. .. .. .. 350—351, 355—356, 360

Non-Supply of copies of Bills to Members in advance (Point of order) ... ... ... ... ... 348—349

Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Second Amendment Bill, 1974 .. .. 227—228

Registration (Tamil Nadu Amendment) Bill, 1974 .. 218—219

PORTS—

Fire in Port Blair, assistance to victims ... ... 174—176

R

RACE(S)—

Bookmaker in Race Course, Madras ... ... 165—174

RADAKRISHNAN, THIRU M. S.—

Thiruvannamalai-Salem bus route .. .. .. 25—26



PAGES

R—*cont.*

RAJA, THIRU A. M.—

Appropriation (No. 2) Bill, 1974 ... ... ... 66—71, 72

Co-operative Sugar Factory, Kodumudi .. .. 441

Transport Ministers' Conference, decisions ... ... 26—31

RAJAGOPAL, THIRU K. M.—

Amendment of Constitution to enable appointment of archakas, pujaries and other Ulthurai servants in Hindu Religious Institutions from among qualified persons professing Hindu religion irrespective of caste, creed or race (R) .. .. .. .. 508

RAJANGAM, THIRU N.—

Amendment of Constitution to enable appointment of archakas, pujaries and other Ulthurai servants in Hindu Religious Institutions from among qualified persons professing Hindu religion irrespective of caste, creed or race (R) .. .. .. .. 484—488

RAJARAM, THIRU K.—

Lock-out in Ceramic and Refractories Factory at Vadalur (A.M.) ... ... ... ... ... 338—339

Strike by Contractors in Salem Steel Plant and its consequences (A. M.) .. .. .. .. 335—336

Strike in Lakshmi Mills, Palladam (C.A. St.) ... 341—342, 343—344

Strike notice given by six Labour Unions of Neyveli Lignite Corporation (C. A St.) .. .. .. 213—214, 215, 216

RAMACHANDRAN, Thiru S.—

Appropriation (No. 2) Bill, 1974 .. .. .. 120—121

PAGES

R—*cont.*

RESOLUTION(S)—

Amendment of Constitution to enable appointment of archakas, pujaries and other Ulthurai servants in Hindu Religious Institutions from among qualified persons professing Hindu Religion irrespective of caste, creed or race ... ... ... ... 456—529

Constitution (Thirty Second Amendment) Bill, 1973, Ratification .. .. .. .. .. 384—417

ROADS—

Mannipalam Anandhathandavapuram ... ... 444—445

Mayuram-Maraiyur road, repairs .. .. .. 18

Murugamangalam-Thirumangalam road, development 18

S

SADIQ PASHA, THIRU S. J.—

Additional Sales Tax (Amendment) Bill, 1974 .. 361—362, 371—373

Failure of monsoon and postponement of Kist and Loans Collections in Chingleput district ... ... 452—456

General Sales Tax (Amendment) Bill, 1974 ... 47, 550—553, 557—558, 559, 560—561

Indian Stamp Tamil Nadu (Amendment) Bill, 1974 230—232, 239—240, 242—243, 244—245

Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1974 .. .. .. .. 246—248, 264—266, 268, 269, 270, 271, 274—276



PAGES

S—*cont.*

SADIQ PASHA, THIRU S. J.—*cont.*

Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1974 .. .. .. .. 276, 279—280, 357—358, 359

Non-availability of electricity to pumpsets in Chingleput district making ryots unable to raise crops and the necessity to postpone loan collection (C.A. St.) 38—39

Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Second Amendment Bill, 1974 .. .. .. 224—225, 229—230

SANGUMUTHU THEVAR, THIRU S.—

Tiruppapuliyur Pataleeswarar Devasthanam, theft from gold Kalasam .. .. .. .. .. 448—449

SCHOOLS—

Award of prizes .. .. .. .. .. 421—424

Elementary and High Schools, difference in number of holidays ... ... ... ... ... ... 3—5

Girls High School, opening in Pallapatti .. .. 1—2

Municipal High Schools, Tiruppur ... ... ... 425—426

School Complex Scheme .. .. .. .. 8—9

SEENIVASAN, THIRU P.—

Appropriation (No. 2) Bill, 1974 .. .. .. 92—97

General Sales Tax (Amendment) Bill, 1974 ... 559

Hindu Religious and Charitable Endowments (Third Amendment) Bill, 1974 ... ... ... ... 570, 571

SHANMUGAM, THIRU P. U.—

Damage to "Kullacor" in Sirkali taluk due to water Scarcity (C. A. St.) ... ... ... ... 36—3[illegible]

PAGES

S.—*cont.*

SHANMUGAM, THIRU P. U.—*cont.*

Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1974 .. .. .. .. 284—285 289, 290, 291

SLUM CLEARANCE BOARD—

Vigilance cell .. .. .. .. .. .. 189—194

SIVAPRAKASAM, THIRU D. S. A.—

School Complex Scheme ... ... ... ... 8—9

SONIAH, THIRU T.—

Madurai-Thiruppuvanam bus, extension .. .. 23—25

SUBBIAH, THIRU A. K.—

Amendment of Constitution to enable appointment of archakas, pujaries and other Ulthurai servants in Hindu Religious Institutions from among qualified persons professing Hindu religion irrespective of caste, creed or race (R) .. .. .. .. 469—472

SUBRAMANIAN, THIRU A.—

Administration of taken-over (sick) Textile Mills (M) ... ... ... ... ... 533—537

Strike in Lakshmi Mills, Palladam (C. A) ... ... 341, 344

SUBRAMANIAN, THIRU K. M.—

Amendment of Constitution to enable appointment of archakas, pujaries and other Ulthurai servants in Hindu Religious Institutions from among qualified persons professing Hindu religion irrespective of caste, creed or race (R) .. .. .. .. 457—45[illegible] 460—46[illegible] 527—52[illegible]

SUBRAMANIAM, Thiru K. M.—*cont.*

Deteriorating position of drinking water in Madras City (C.A.) ... ... ... 20[illegible]

Dispensary, Saidapet, expansion ... ... ... 1[illegible]



PAGES

S—*cont.*

SUBRAMANIAM, THIRU K. M.—*cont.*

District Municipalities (Amendment) Bill, 1974 ... 375

General Sales Tax (Amendment) Bill, 1974 ... 555—556

Hindu Religious and Charitable Endowments (Third Amendment) Bill, 1974 ... ... ... ... 570

Indian Stamp (Tamil Nadu Amendment) Bill, 1974 235—236 244

Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1974 ... ... ... ... 295—296

SOUNDARAPANDIAN, THIRU P.—

Amendment of Constitution to enable appointment of archakas, Pujaries and other Ulthurai servants in Hindu Religious institutions from among qualified persons professing Hindu religion irrespective of caste, creed of race (R) ... ... ... ... 458 462—466, 467—469

Arts College for Women, Mayuram, History lecturers 299—301

Drinking Water scarcity in Sankari town and action to be taken (C.A.) ... ... ... ... 451, 452

Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1974 ... ... ... 277—279, 280—281 282—283

Primary Health Centre, Krishnarayapuram ... 432

Nurses, employment ... ... ... ... ... 432—433

STRIKE(S)—

Strike in Lakshmi Mills, Palladam (C.A.) ... 341—344

Strike notice by Six Labour Unions of Neyveli Lignite Corporation (C.A.) ... ... ... ... 213—216

SUGAR—

Co-operative Factory, Kodumudi ... ... ... 441—443

PAGES

V—*cont.*

VENKATASWAMY, THIRU B.—

Amendment of Constitution to enable appointment of archakas, pujaries and other Ulthurai servants in Hindu Religious Institutions from among qualified persons professing Hindu Religion irrespective of caste, creed, or race (R) ... ... ... 484

Appropriation (No. 2) Bill, 1974 ... ... ... 114—117

VEZHAVENDAN, THIRU K.—

Failure of monsoon of postponement of kist and loans collections in Chingleput district (C.A.) ... 452—455

W

WAHAB, Th[illegible]—

Bridges (New) in Arcot union, construction ... 327—330

District Municipalities (Amendment) Bill, 1974 ... 377—379

61662

WATER-SUPPLY—

Deteriorating position of drinking water in Madras City (C.A.) ... ... ... ... ... 209—213

Drinking water scarcity in Uthankarai, Dharmapuri District (C.A.) ... ... ... ... ... 339—341

Scarcity in Sankari town and action to be taken (C.A.) ... ... ... ... ... 451—452

Scheme [illegible]ore area ... ... ... 10—14

WORK CENTRES—

Out-of School Youths, training ... ... ... 185—186

Y

YARN—

Distribution in Chinnalapatti ... ... ... 439—441